# மனித உரிமையிலிருந்து விடுதலையை நோக்கி...



# சமர்ப்பணம்

சிறைத் துன்பம் அனுபவிக்கின்ற
தெருக்களில் கொல்லப்படுகின்ற
மனித குல விடுதலைக்காக
தம் உயிரைக் கொடுத்த அனைத்துப்
போராளிகளுக்கும்!
மக்களுக்கும்!
மூலவர்களுக்கும்!
இது சமர்ப்பணம்.

''மார்க்சின் தத்துவத்தை நாங்கள் முற்றும் முடிவான ஒன்றாய் மீறவொண்ணாத ஒன்றாய்க் கருதவில்லை. மாறாக, அது சோசலிஸ்டுகளுக்குரிய விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே கொடுத்திருக்கிறது. சோசலிஸ்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால் இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசையிலும் வளர்த்துச் செல்வது **அவசியம்** என்பதை நாம் ஐயமற அறிவோம். மார்க்ஸின் தத்துவத்தை **தன்னிச்சையான முறையில்** அவை விரிவுபட வளர்த்திடுவது முக்கியமாய் ருஷ்ய சோஷலிஸ்டுகளுக்கு மிக்கதொரு தேவையாகுமெனக் கருதுகின்றோம். ஏனெனில் இந்தத் தத்துவம் பொதுவான **வழிகாட்டும்** கோட்பாடுகளையே அளித்திருக்கிறது, **தனிப்பட்ட முறையில்** அவை பிரான்சிலிருந்து வேறு விதமாய் இங்கிலாந்திலும், ஜெர்மனியிலிருந்து வேறு விதமாய் பிரான்சிலும், ருஷ்யாவிலிருந்து வேறு விதமாய் ஜெர்மனியிலும் கையாளப்படுகிறவை.''
(பக்54 லெனின் நூல் திரட்டு!)

# மனிதகுல அழிவிலிருந்து விடுதலை நோக்கி.......

வாசகர்களே ஒரு நிமிடம்!

*ஆய்வுமுடிவுகள், தீர்வுகள், கொள்கை வரையறுப்புக்கள் எல்லாம் தனிநபர் மட்டத்தில் அல்லாமல் அமைப்பு மட்டத்திலேயே அமையப் பெற வேண்டும். கடந்த கால விவாதங்களில் பல, கட்சியை மையப்படுத்தி வராமல் தனிநபர்கள் (பிரமுகர்கள்) சில சிறு பத்திரிகைகளை மையமாகக் கொண்டு இடம்பெற்றிருந்தது. கருத்தைக் கருத்தாக பார்க்காமல் ஆக்கதாரருக்கு எதிரான விமர்சனப் போக்காக அமைந்தது. இது தன்னியல்பிற்கு உட்பட்ட செயற்பாடாக அமைந்ததே இதற்குக் காரணமாகும். இந்நிலையானது ஆக்கத்தின் நோக்கத்தை திசை திருப்பியதன் மூலம் ஆளும் வர்க்க நலனுக்கு, செயற்பாட்டிற்கு சேவை செய்ததே ஒழிய பாட்டாளி வர்க்கத்திற்கு அல்ல. தனிநபர் கருத்து, தனிநபர் விமர்சனப் போக்கானது நீண்ட காலப் போக்கில் எவ்வித பிரயோசனமும் இல்லை. அப்படிச் செய்வதன் மூலம் ஏற்கனவே பிளவுபட்டுப் போயுள்ள சமுதாய நிலையில் அதிகம் மிஞ்சிப் போனால் யார் உண்மையான தத்துவவாதி, கோட்பாட்டாளர் என்ற போலிப் பெருமைக்கும், அரசியல் கருத்தானது வளர்ச்சியடைவதை விட்டு அகவுணர்வின் விருப்பை, போலிக் கௌரவத்தை பாதுகாக்கும் முயற்சியாகவே வெளியீடுகள் உதவ முடியும். ஏனெனில் எமது சமுதாயத்தில் ஒரு மனிதர் செயலை செய்து முடித்த பின்னர், பரவசமடைதலும், அந்தச் செயற்பாடு ஒரு சடங்கு, ஆச்சாரத்திற்கு உரியதாக மாறுகின்றது. இதனால் ஆக்கங்கள் அனைத்தும் எம்மால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சம்பிரதாய, சடங்கு என்பவற்றிற்குள் அடங்குவதால் இதற்கு அப்பால் எதுவும் செல்வதில்லை.*

*எந்தச் சக்தியும் தனது பழைய அல்லது சமகால நிலையில் இருந்து அடுத்த கட்டத்திற்கு நகர சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறான விமர்சனப் போக்கே ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும். அகவிருப்பத்தில் அமைந்த விமர்சனப் போக்கானது, ஆத்திர அவசரத்திற்கும், எதிர்ப்புவாதத்திற்கும் உட்படுகின்றது. இவ்வாறாக இருந்தமையினால் வெறும் புலி எதிர்ப்புத் தன்மையைக் கொண்ட விமர்சனத்தை பரவலாகக் காணக்கிடக்கிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். விமர்சனப் போக்கின் மூலமாக உண்மையான விடுதலைக்கு வழியமைப்பவர்களை உருவாக்கலாம்.*

**- மா. நந்தன் -**

புதுக்குரல் வெளியீட்டகம்

இலங்கை – 2001

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | மனிதகுல அழிவிலிருந்து விடுதலை நோக்கி... |
| ஆசிரியர் | : | மா. நந்தன் |
| முதல் பதிப்பு | : | ஆடி, 2001 |
| ஒளியச்சு | : | புதுக்குரல் அச்சகம் |
| வெளியீடு | : | புதுக்குரல் வெளியீட்டகம், யாழ்ப்பாணம் - இலங்கை. |
| மின் அஞ்சல் | : | anto6@redittmail.com |
| விலை | : | இந்தியா, இலங்கை } ரூபா. 100.00 |
| | : | வெளிநாடு US $ -5 |

| | | |
|---|---|---|
| Title | : | MANITHAGULA AZHIVILIRUNDHU VIDHUTHALAI NOKKI |
| Author | : | M. Nandan |
| First Edition | : | July 2001 |
| Typesettings Printing | : | Puthukkural Press |
| Publishers | : | Puthukkural Veleyettagam JAFFNA - SRILANKA |
| E.Mail | : | anto6@redittmail.com |
| Price | : | India, Sri Lanka } Rs. 100.00 |
| | : | Other Countries US $ 5.00 |

# என்னுரை

கடந்த பத்து ஆண்டுகளில் பல மாற்றங்களை உலகம் அடைந்துள்ளது. உலகின் சமவுடமைக் குடியரசு மலர்ந்து 80 வருட பூர்த்தியை அடைந்துள்ளது. அத்துடன் பொதுவுடமைக் கட்சி அறிக்கை வெளியாகி 150 வருடங்கள் ஆகிவிட்டன. முதன் முதலாக மார்க்ஸ் எழுதிய மூலதனம் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இன்றைய காலத்தில் மூலதனத்தை படித்து அறிந்து கொள்ளும் ஆரம்ப முயற்சி ஊடாக மார்க்சியப் புரிதலை உழைக்கும் வர்க்கத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதற்கு ஏற்றவாறாக கல்வி வட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். சோசலிசம் தோல்வி அடைந்து விட்டது என்ற கூக்குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்ற இக் காலத்தில், புரட்சியின் அவசியத்தின் காரணமாக மார்க்சியத்தைப் புரிந்து கொள்ளல் பற்றிய பிரச்சினையும் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்த முக்கியத்துவத்தில் இந்த முயற்சியானது சிறு பங்களிப்பை செய்யும் என்பது ஒரு நம்பிக்கை. அந்த வகையிலேயே எடுத்துக் கொண்ட கருப் பொருளிற்கு ஏற்றவாறாக ஆக்கம் படைக்க முற்படுகின்றது.

இங்கு தனியே தேசியத்தை மாத்திரம் அன்றி வர்க்க சமுதாயத்தில் இருக்கின்ற பல பிரச்சினைகளை ஒன்றை விட்டு ஒன்றை தனிமைப்படுத்தாமல் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தங்கி நிற்பது மாத்திரம் அல்லாமல் ஒன்றை ஒன்று எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகின்றது எனப் பார்க்கப்படுகின்றது. எடுத்துக் கொண்ட விடயம் பலதரப்பட்ட அம்சங்களை குறித்து நிற்கின்றது. ஒரு விடயத்தை விளங்க முற்படும் போது அனைத்து விதமாகவும் புரிந்து கொள்ள முயற்சி எடுக்கப்பட வேண்டும். அதுவே சரியான முடிவை வந்தடைய உதவிபுரியும். இதன் மூலம் ஒரு முழுமையான கண்ணோட்டத்தையும் கொடுக்க முற்படுகின்றது. இவ்வாக்கம் எவ்வகையிலும் முழுமையானதாக மாட்டாது.

இவ்வாறான ஆக்கங்களை குட்டிப் பூர்சுவா வர்க்கத்தினரால் படைக்க முடிகின்றது. அதேவேளை குட்டிப் பூர்சுவா வர்க்க அறிவுஜீவிகளுக்கும் கட்சிக்கும் என்ன உறவு என்பது பற்றியும், மார்க்சிம் கோர்க்கி உட்பட பலர் பற்றியும், லெனின் காலத்தில் இருந்து இன்று வரை விவாதிக்கவும், வர்க்க பண்பு பற்றியும் ஆய்வு இடம் பெற்றே வந்துள்ளது. ஆனால் குட்டிப்பூர்சுவா (கட்டுரையாளர் உட்பட) வர்க்கத்தினர் குறிப்பிட்ட வரையறையில் தான் புரட்சிக்கு கடமையாற்றுவர். குட்டிப் பூர்சுவா வர்க்கம் எப்பவும் புரட்சிக்கு விசுவாசமாக இருக்கும் என்றில்லை. ஊசலாடும் பிரிவினரான குட்டிப் பூர்சுவா வர்க்கத்தின் சக்தியை ஒருமைப்படுத்தி பாட்டாளி வர்க்கத்தினரின் விடுதலைக்காக சக்திகள் அனைத்தையும் வழிநடத்தும் பொறுப்பும் ஒரு பாட்டாளி வர்க்க கட்சிக்கு உண்டு. குட்டிப் பூர்சுவா வர்க்கத்தினர் தமது அறிவுப் புலமையினால் கட்சியைத் தீர்மானிக்கும் நிலைக்கு இச்சக்திகள்

வரமுடியும். இவர்களை இனம் கண்டு விழிப்பாக இருக்க வேண்டியது கட்சியின் கடமையாகும். எந்தப் பிரிவினரானாலும் அவர்கள் கட்சிக்குக் கீழ்பட்டவர்களே.

தீர்வுகள், ஆய்வுமுடிவுகள், கொள்கை வரையறுப்புக்கள் எல்லாம் தனிநபர் மட்டத்தில் அல்லாமல் அமைப்பு மட்டத்திலேயே அமையப் பெற வேண்டும். கடந்த கால விவாதங்களில் பல கட்சியை மையப்படுத்தி வராமல் தனிநபர்கள் (பிரமுகர்கள்) சில சிறு பத்திரிகைகளை மையமாகக் கொண்டு இடம்பெற்றிருந்தது. கருத்தைக் கருத்தாக பார்க்காமல் ஆக்கதாரருக்கு எதிரான விமர்சனப் போக்காக அமைந்தது. இது தன்னியல்பிற்கு உட்பட்ட செயற்பாடாக அமைந்ததே இதற்கு காரணமாகும். இந்நிலையானது ஆக்கத்தின் நோக்கத்தை திசை திருப்பியதன் மூலம் ஆளும் வர்க்க நலனுக்கு, செயற்பாட்டிற்கு சேவை செய்ததே ஒழிய பாட்டாளி வர்க்கத்திற்கு அல்ல. தனிநபர் கருத்து, தனிநபர் விமர்சனப் போக்கானது நீண்ட காலப் போக்கில் எவ்வித பிரயோசனமும் இல்லை. அப்படிச் செய்வதன் மூலம் ஏற்கனவே பிளவுபட்டுப் போயுள்ள சமுதாய நிலையில் அதிகம் மிஞ்சிப் போனால் யார் உண்மையான தத்துவவாதி, கோட்பாட்டாளர் என்ற போலிப் பெருமைக்கும், அரசியல் கருத்தானது வளர்ச்சியடைவதை விட்டு அகவுணர்வின் விருப்பை, போலி கௌரவத்தை பாதுகாக்கும் முயற்சியாகவே வெளியீடுகள் உதவ முடியும். ஏனெனில் எமது சமுதாயத்தில் ஒரு மனிதர் செயலை செய்து முடித்த பின்னர், பரவசமடைதலும், அந்தச் செயற்பாடு ஒரு சடங்கு, ஆச்சாரத்திற்கு உரியதாக மாறுகின்றது. இதனால் ஆக்கங்கள் அனைத்தும் எம்மால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சம்பிரதாய, சடங்கு என்பவற்றிற்குள் அடங்குவதால் இதற்கு அப்பால் எதுவும் செல்வதில்லை.

எந்தச் சக்தியும் தனது பழைய நிலையில் இருந்து அடுத்த கட்டத்திற்கு நகர சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறான விமர்சனப் போக்கே ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும். அகவிருப்பத்தில் அமைந்த விமர்சனப் போக்கானது. ஆத்திர அவசரத்திற்கும், எதிர்ப்புவாதத்திற்கும் உட்படுகின்றது. இவ்வாறாக இருந்தமையினால் வெறும் புலி எதிர்ப்புத் தன்மையைக் கொண்ட விமர்சனத்தை பரவலாகக் காணக்கிடந்தது, இந்நிலை மாற்றப்பட வேண்டும். விமர்சனப் போக்கின் மூலமாக உண்மையான விடுதலைக்கு வழியமைப்பவர்களை உருவாக்கலாம்.

இந்தப் பகுதியில் எந்தப் பகுதியினரையும் ஆத்திரத்தை உண்டாக்கும் போக்கில் அல்லாமல் எல்லாப் பிரிவினர்களும் ஒரு படி கீழ் இறங்கி பிரச்சினையை விளங்கிக் கொள்ளும் வழிமுறையை இங்கு கடைப்பிடிக்கப் படுகின்றது. நிச்சயம் இது சந்தர்ப்பவாத நிலைப்பாடல்ல. இது ஒரு கட்சிக்கு வெளியில் இருக்கும் ஒருவரின் ஆய்வு முறை. இதற்கு அப்பால் செல்லவும் முடியாது. கட்சிநிலை தவிர்ந்த எந்தச் செயற்பாடும் தன்னியல்பிற்கு உட்பட்டதே. அப்படி தனிநபர்களை, அமைப்புக்களை தனிநபராக இருந்து கொண்டு ஆத்திரப்படுத்துவதன் மூலம் பரந்துபட்ட மக்களுக்கு எந்தவித நன்மையையும்

ஏற்படுத்த முடியாது. இதன் காரணமாக ஆத்திரப்படுத்தல், முத்திரை குத்தல் தேவையில்லாத விடயமாகும்.

கடந்த கால விவாதங்கள் பலவற்றை வாசித்த பொழுது ஐக்கிய இலங்கையை வலியுறுத்தும் ஆக்கங்கள் ஆங்காங்கே வந்தாலும், ஆழந்த ஆய்வுகள் எதனையும் செய்யாமல் ஐக்கியத்தை வலியுறுத்தும் கட்டுரைகள் வாசித்த பொழுது, ஐக்கிய இலங்கை அவசியம் பற்றியம் விவாதம் இனத்துவ தன்னுணர்ச்சி கருத்திலும் பார்க்க பலவீனமாகவே இருந்தது. ஐக்கிய இலங்கையை வலியுறுத்தும் விவாதம் அவசியம் குறித்து எழுத வேண்டும் என எண்ணியதால் எழுந்ததே இந்த ஆக்கம். ஆனாலும் எழுதக் தொடங்கிய காலத்தில் இருந்து இன்று பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கான விமர்சனத்தை ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது. விமர்சனங்கள் வளர்ச்சியைக் கொள்ளக் கூடியவகையில் அமைதல் வேண்டும். ஆக்க பூர்வமான விமர்சனமே மக்களுக்கு உபயோகமாக இருக்கும். போராட்டப் பாதையை செமுமைப்படுத்த விமர்சனங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன.

இந்த முயற்சி எடுக்கப்பட்டு பல வருடங்களாகி விட்டன. காலத் தடைக்கு பல காரணங்கள் இருக்கின்றது. கால இடைவெளியில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அறிவு ரீதியான மாற்றத்தை இவ்வாக்கத்தில் கவனிக்க கூடியதாக இருக்கும். முதல் முயற்சி என்பதினால் பக்குவமின்மை காணப்படத் தான் செய்யும். இதற்கு முன்மையான காரணம் வழி நடத்தல் இன்மையே. வழிநடத்தல் கிடைத்திருக்கும் பட்சத்தில் விரைவாகவே திருத்தம் செய்து இதனை வெளிக் கொண்டு வந்திருக்க முடியும். இதற்கு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட நிலையில் தான் கருத்துக்களும் வந்து சேர்ந்தன. முன்னர் எடுக்கப்பட்ட முயற்சி சோம்பேறித்தனத்தால் கிடப்பில் கிடந்த போது அதற்கு உற்சாகத்தை கொடுத்து எழுத ஊக்குவித்த நண்பர்களை இவ்வேளையில் குறிப்பிட்டாக வேண்டும். இவ்வாக்கம் வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக!

– ம.நந்தன் –



# ★ உள்ளடக்கம் ★

## பகுதி ஒன்று


1.1. அறிமுகம்

1.1.2 கருப்பொருள் பற்றி

1.1.3.1 அணுகுமுறை பற்றி

1.1.3.2 புரிந்து கொள்ளல் பற்றிய பிரச்சினை

1.2. பொருளாதார அமைப்பும் அதில் ஏற்படும் மாற்றங்களும்

1.2.1.1 நான்கு உற்பத்தி முறை

1..2.1.2 குலச்சமுதாயம்

1.2.1.3 குலச்சின்னம்

1.2.2.1 வேலைப்பிரிவினை

1.2.2.2 குடும்ப அமைப்பு

1.2.2.3 சாதியமும் வேலைப் பிரிவினையும்

1.2.2.4 நிலப்பிரபுத்துவத்தின் காலகட்டம்

1.2.2.5.1 உபரி மதிப்பு

1.2.2.5.2 பொருளாதார வாதம்

1.2.2.5.3 பயன்பாட்டுபெறுமானம்

1.2.2.6.1 முதலாளித்துவக் கட்டம்

1.2.2.6.2 சர்வதேச வேலைப்பிரிவினை

1.2.2.6.3 குழந்தை உழைப்பு

1.2.2.6.4 வேலையில்லாத் திண்டாட்டம்

1.2.2.6.5 சுற்றாடல் மாசுபடல்

1.2.2.6.6 நகர்ப்புறமயமாதல்

1.2.2.6.7 கலாச்சார வேறுபாடுகள்

1.2.2.6.8 நிதி மூலதனமும் விளையாட்டும்

1.2.2.6.9 பிறநாடுகளில் உழைப்பாளிகள்

1.2.2.6.10 தனிநபர்களின் பாத்திரம்

1.2.2.6.10.1 தனிநபர்கள் உருவாக்கம்

1.2.2.6.10.2 தனித்துவவாதம்
1.3. சாதியம்
1.3.1 சாதியத்தை புரியும் போக்கு
1.3.2 ஆரியரின் வருகைக் காலம்
1.3.3 பொருளாதாரமும் நிர்வாகத்தில் உரிமையும்
1.3.4 பறையர் குலத்தவர்
1.3.5 பள்ளர் குலத்தவர்
1.3.6 சமஸ்கிருதமயமாதல்
1.3.7 தீண்டாமை
1.3.8 கொலனித்துவ காலம்
1.3.9 சாதியம் முன்பிருந்த நிலையை விட மாற்றமடையும்
1.3.10 சாதிப் பெருமைகள்
1.3.11 சாதிய விடுதலைப் போராட்டம்
1.4. போலி உணர்வுகள் பற்றி
1.4.1 சமயங்கள்
1.4.2 சிந்தனையின் தோற்றுவாய்
1.4.3 தமிழ் மக்களின் கடவுள்கள்
1.4.4 கோயில்களின் உருவாக்கம்
1.4.5 எந்த மதம் உண்மையானது
1.4.6 கீழைத்தேசம்
1.4.7 மதச் சண்டைகள்
1.4.8 பொருளாதார நலனுக்கு காவடி தூக்குதல்
1.5. அரசு என்றால் என்ன?
1.5.1 நிர்வாக அலகுகள்
1.5.2 சனநாயகம் பற்றி
1.5.3 முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு மாற்றம் பெறுதல்
1.5.4 முதலாளித்துவ சனநாயகம்
1.5.5 நிறுவனமயப்பட்ட உரிமைகள் – சட்டம்
1.5.6 நிர்வாகிகள் உருவாக்கம்
1.5.7 சட்டங்களை வகுப்பவர்கள் யார்?
1.5.8 பாட்டாளி வர்க்க சனநாயகம்



## ★ பகுதி இரண்டு ★


2.1. மேற்கு நாடுகளின் ஆதிக்கம்
2.1.1 கொலனியாதிக்கம்
2.1.2 ஏகாதிபத்தியக் கட்டம்
2.1.3 பொருளாதார ஒப்பந்தங்கள்
2.1.4 ஆயுத ஒப்பந்தங்கள்
2.1.5 நவகொலனித்துவம்
2.1.6 நேட்டோ ஒப்பந்த நாடுகள்
2.1.7 தொலைத் தொடர்பு
2.1.8 அமைதிப்படை
2.1.9 தன்னார்வக் குழுக்கள்
2.1.10 அமெரிக்கக் கனவு
2.1.11 சர்வதேச சமூகம்?
2.1.12 தாக்குதல் நடத்தப்படும் இலக்குகள்
2.1.13 தாக்குதலின் நோக்கங்கள்
2.1.14 ஏகாதிபத்திய தந்திரத்திற்கு பலியாகல்
2.1.15 ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள்
2.2. போராட்ட ஆரம்பம்
2.2.1 தொழிற்சங்கம்
2.2.2 இனத்துவேசம் அற்ற ஒற்றுமை
2.2.3 சிங்கள – தமிழ் பூர்சுவாக்களிடையே போட்டி
2.2.4 உயர்கல்விக்கான சந்தர்ப்பம்
2.2.5 பண்பாட்டுத் தளத்தின் மீது தாக்குதல்
2.2.6 தேசிய கோரிக்கை முன்வருதல்
2.2.7 குட்டிப் பூர்சுவா வர்க்க இளைஞரின் எழுச்சி
2.2.8 போராட்டங்களை அங்கீகரிக்கும் போக்கு
2.2.9 போராட்ட அமைப்புக்கள்
2.3. இனவாதத்தை விதைத்தல்
2.3.1 வரலாறுகள் திரியும் போக்கு
2.3.2 கதாநாயகர் பற்றிய மாயை
2.3.3 ஆரியர் என்ற மாயை
2.3.4 மொழிவரலாறு பற்றி




உ.4. தேசியப் போராட்டம் என்றால் என்ன?

உ.4.1 தேசிய இனப் பிரச்சினையின் வகைகள்

உ.4.உ தேசியம் இனம் என்றால் என்ன?

உ.4.3 சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?

உ.4.4.1 முசுலீம் மக்கள் என்பர் யார்?

உ.4.4.உ முசுலீம் மக்கள் ஒரு தேசிய இனமா?

உ.4.5 மலையக மக்கள்।

உ.4.6 பிரதேச வாதம்

உ.5. சர்வதேச அனுபவங்கள்

உ.5.1 போலந்துப் பிரச்சினை

உ.5.உ பிரான்ஸ் உள்நாட்டுப் போர்

உ.5.3 நோர்வே

உ.5.4 ஏகாதிபத்திய நாடுகளில் தேசியப் போராட்டம்

உ.5.4.1 ஐரோப்பிய ஒன்றியம்

உ.5.4.உ இத்தாலி பிரிவினை பற்றி

உ.5.5 நாசிசமும் – தேசியமும்

உ.5.6 உதாரணங்கள் காட்டுவது என்ன?

உ.6.1 இனப்பிரச்சினை தீர்க்க முடியுமா?

உ.6.உ இடைக்காலத் தீர்வு பற்றி

உ.6.3 தப்பியோடுதல்

உ.6.4 மூலவர்களின் தேசிய உணர்வு பற்றி

உ.6.5 தனியான அமைப்பு அவசியமா?

உ.7. விசுவாசமாக நடந்து கொள்ளும் வர்க்கம் எது?

உ.7.1 கருத்தமைவிற்குள்ளேயே சமாதியாதல்

உ.7.உ மத்தியதர வர்க்கம்

உ.7.3 தேசிய முதலாளித்துவம் விசுவாசமாக இருக்குமா?

உ.7.4 சமூக சனநாயகப் போக்குப் பற்றி

உ.7.5 புதிய வழிகாட்டுவதாக பிதற்றல்

உ.7.6 வன்முறை எதிர்ப்பு

உ.8. பிரச்சினைக்குத் தீர்வு?


உ.8.1 புதிய சனநாயக புரட்சி பற்றி

உ.8.உ கலாச்சாரப் புரட்சி

## 3 முடிவுரை

## 4 உசாத்துணை

# 1.1. அறிமுகம்



இன்று உலகில் பற்பல பிரச்சினைகள் இருக்கின்றன, எனினும் தேசிய இனப் பிரச்சினையானது உலக மக்களின் கவனத்தில் முக்கிய இடம் பிடித்துள்ளது. இனப் பிரச்சினையை முன்னுக்கு தள்ளுவதன் மூலமாக பல அடிப்படைப் பிரச்சினைகளை ஆளும் வர்க்கமானது தனது பிரச்சாரத் திறமையூடாக பின்னுக்குத் தள்ளி, மக்களை ஏமாற்றுவதன் மூலம் பிரச்சினைகளை திசை திருப்புகின்றன. இந்நிலையானது புதிய நிலவரத்தை தோற்றம் பெற வைத்துள்ளது. புதிய தோற்றத்தில் ஏற்பட்ட தீயில் குளிர்காயும் ஏகாதிபத்தியமும், அவற்றை பேச்சுவார்த்தை, சமாதானப்படை போன்றவற்றால் தீர்க்கலாம் என்ற மாயையில் உருவாக்கப்பட்டுள்ள மக்களும், இவற்றை எவ்வாறு தீர்க்கலாம், இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென ஆராய முற்படும் சமூகத்தின் ஒரு பிரிவினர்களும் உள்ளனர். ஆராய முற்படும் சக்திகளிடையே பல விதமான கருத்து பேதங்கள், வழிமுறைகள் தென்படுகின்றன. இவைகள் தொடரப்பட வேண்டும். இதன் மூலமே சரியான கருத்தை வந்தடைய முடியும். இந்த வரலாற்றுக் கடமையின் தொடர்ச்சியே இவ்வாக்கமாகும். இங்கு தனியே தேசிய இனப் பிரச்சினையை பற்றி வெளிச்சத்தை கொண்டு வரும் நோக்கில் எழுதப்பட்டாலும் இங்கே இனப் பிரச்சினையுடன் மாத்திரம் சுருக்கிவிடவில்லை. பல விடயங்கள் இங்கு அலசி ஆராயப்படுகின்றது. பிரச்சினைகள் ஒன்றை ஒன்று உருவாக்குவதன் காரணமாக பல சமூகத் தன்மைகளும் ஆய்வுப் பொருளாக இங்கு இடம் பெறுகின்றது.

## 1.1.2 கருப்பொருள் பற்றி

இன்றைய ஆய்வாளர்களும், அரசியல்வாதிகளும், மார்க்சிய மூலவர்கள் மீது சேற்றைவாரி வீசுகின்றவேளை. ஏகாதிபத்தியங்கள், பூர்சுவா ஆய்வாளர்கள் இனப் பிரச்சனைக்கான காரணங்களாக கம்யூனிச (கிழக்கு ஐரோப்பியாவில் நிகழ்கின்ற

இனமோதல்கள்) ஆட்சியின் விளைவே எனவும் இது ஒரு அபூர்வமான தோற்றக் காரணி, தேசியம் புனிதமானது எனவும் பிரச்சாரம் செய்கின்றனர்.

தேசியப் போராட்டத்தில் இடதுசாரிக் கருத்தை முன்வைத்தவர்கள் இலங்கையின் இடதுசாரி அரசியலில் ஏதோ ஒருகாலத்தில் பங்கு பற்றியவர்களே பின்புலமாக இருந்திருக்கின்றனர். இவர்களின் மார்க்சீயப் புரிதல் பற்றியும் கேள்விகள் எழுப்ப வேண்டியுள்ளது. (பழைய இடதுகள் பற்றி மட்டும் தான் இவ்வாக்கம் மையமாகக் கொண்டு இருக்கவில்லை.) தேசிய இனப்பிரச்சினை உக்கிரம் அடைந்துள்ளது, இந்நிலையில் வர்க்கப் புரட்சி சாத்தியம் இல்லை. தேசிய விடுதலை அடைந்த பிற்பாடே வர்க்கப் புரட்சி சாத்தியம், தேசிய இனப் பிரச்சனை பற்றி மார்க்சியம் மலட்டுத் தன்மையைக் கொண்டுள்ளது. பொருளாதார வாதத்திற்கு அடிமையாகி விட்டார்கள் என்று கூக்குரல் ஒலித்துக் கொண்டேயுள்ளது. இக்கூக்குரல் தம்மை மார்க்சிஸ்டுக்கள் (இங்கு பகை முரண்பாடாக கருதவில்லை) என்று சொல்லிக் கொள்பவர்கள் இடத்திலிருந்தும், முதலாளித்துவ முகாமிலிருந்தும் ஒலிக்கின்றது. இவர்களின் கருத்துரைகள் எல்லாம் ஒரு வெற்றுக் கூச்சலா அல்லது அவர்களின் வாதம் சரியானதா என்பதை இக்கட்டுரை மூலமாக ஆய்வு செய்யப்படுகின்றது.

மார்க்சியவாதிகள் எவ்வாறு தேசிய இனப்பிரச்சினையைக் கையாளுகின்றனர்? தேசிய விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே இனங்களுக்கிடையான பகைமை உணர்ச்சிக்கு உட்பட்ட போராட்டமா அல்லது வர்க்கங்களுக்கு இடையே நடைபெறும் வர்க்கப் போராட்டமா? இங்கு பல முரண்பாடுகள் காணப்படுகிறது. மார்க்சிய வழியில் நின்று தீர்வினைக் கொடுக்க வேண்டுமானால், இந்த ஊனமுற்ற சமூக அமைப்பை மாற்றுவதற்கான ஒரு கருவியாக தேசிய இனப்பிரச்சினையை பயன்படுத்த வேண்டுமே ஒழிய, ஒரு தேசிய இனம் என்றால் கட்டாயம் ஒரு நாடு இருக்க வேண்டும், என்ற நோக்கத்தின் அடிப்படையில் இருந்து அக்கோரிக்கையை எழுதுவது ஆதரிக்க முடியாது என்றும் மார்க்சீயம் வலியுறுத்துகின்றது.

தேசியத்திற்கான தீர்வினை உள்நாட்டு சர்வதேச பிராந்திய அரசியல் சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டே பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்வைக்க வேண்டும். ஏனெனில் எமது வாழ்நிலையினை இந்த சமூகப் பொருளாதாரத்தின் அடித்தளத்தில் இருந்தே தீர்மானிக்கப்படுகிறது. அதாவது எம்முடைய அகவுணர்வுகள் தீர்மானிப்பதில்லை மாறாக இச் சமுதாயத்தில் இருக்கின்ற உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான முரண்பாடுகளே எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றன.

கீழ் வரும் அம்சங்களைப் பற்றிய விரிந்த பார்வை இந்த ஆக்கத்தில் ஆராயப்படவுள்ளது. மனிதன் இயற்கையுடன் போராடி தமக்கு தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டான் இங்கு எல்லோரும் தமக்கு தேவையானவற்றை பெறுவதற்கு எவரிடமும் தட்டிப் பறிக்கவில்லை. மனிதர்கல்

அல்லது மரத்தினால் செய்யப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடினார்கள். தாம் விலங்குகளிடம் இருந்து தப்புவதற்காக ஒருவர் ஒருவருக்கு உதவி செய்ய வேண்டிய தேவை இருந்தது. எல்லோரும் கூட்டமாக வாழ்ந்தனர். கூட்டமாக வேட்டையாடி தமக்குத் தேவையான உணவுக்குரிய பழங்கள், இறைச்சிகளை சேகரித்தனர். அவர்கள் சிறு சிறு குழுக்களாக வாழ்ந்தனர்.

இவர்களின் தேவைகளின் அடிப்படையிலும், அவர்களின் வளர்ச்சியின் அடிப்படையிலும் அதாவது அவர்களின் தேடலின் அடிப்படையில் மூளை வளர்ச்சி அடைகின்றது. புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தமது தேவைகளை தீர்க்க முனைந்தனர். இவர்களின் இம்முயற்சி கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபடவைத்தது. இரண்டாவது. அடிமை உடமைச் சமுதாயம் ஆதிச்சமுதாய உற்பத்தி சாதனங்களை (நிலம், விவசாயம் கைத்தொழில், கால்நடை) உடமையாக வைத்திருப்பவர்களின் வர்க்கம் தோற்றம் பெற்றனர். இவர்களே அடிமை உரிமையாளர்களாவர். அடிமைகள் எசமானின் சுரண்டலுக்கு ஆளாகினர். உற்பத்திக் கருவிகள் வளர்ச்சி அடையாத காலம் (உபரியினை அதிகரிப்பதற்கு) உபரி உற்பத்திப் பொருட்களை மேற்கொள்வதற்காக மிருகத்தனமாக சுரண்டப்பட்டனர். அதேபோல் சுதந்திரமான அடிமைகளிடம் இருந்து சுரண்டலாக பெறப்பட்டவைகளும் கூட அடிமையாளர்களின் அதிகளவான சொத்துரிமைக்கு வழிவகுத்தது.

இது நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைக்கு வழிவகுத்தது. தொழிலாளர்கள் விவசாயிகள் நிலத்துடன் பிணைக்கப்பட்டு இருந்தனர். இவர்கள் நிலவுடமையாளர்களுக்காக உழைக்க வேண்டும். இதன் மூலம் அன்றாடத் தேவை பூர்த்தி செய்யப்பட்டன. விவசாயிகள் தமக்குத் தேவையான அனைத்தையும் தாமே உற்பத்தி செய்தனர். விவசாயி வர்க்கத்தினர் தமது மூலதனத்தின் அளவைக் கொண்டு மாறுபடுகின்றனர். விவசாய முயற்சியில் ஈடுபடுகின்றவர்கள் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், நடுத்தர, ஏழை விவசாயிகள் என உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இவர்கள் ஒருவரை ஒருவர் விழுங்கிக் கொள்கின்றனர். விழுங்குவதன் மூலம் மூலதனத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். உதாரணமாக சுதந்திரமான விவசாயிகள் குத்தகைக்கு எடுத்தும் பயிர் செய்தனர். குத்தகைப் பணமாக விவசாயிகளிடம் இருந்து அதிகமாக சாகுபடி செய்தவற்றை அபகரித்தனர். நிலப்பிரபுக்களால் அபகரிக்கப்பட்ட சொத்துக்கள் மூலதனத் திரட்சியாகி முதலாளித்துவ உற்பத்திக்கு வழிவகுத்தது. தொழிற்புரட்சிக் கட்டம் மூலம் தமது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்ட பல முதலாளிகள் பெருகினர்.

முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் கூலியடிமைகள் ஆக்கப்பட்டனர். இவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய கூலியினை கொடுக்காமல் அவற்றை உபரியாக்கி தமது (நலனுக்கு) இருப்பைப் பாதுகாக்கப்

பாவிக்கப்படுகின்றது. முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தின் போது மக்கள் தமது சீவனோபாயத்துக்காக நகரங்களுக்கு இடம் பெயர்ந்து கூலிகளாக மாறுகின்ற நிகழ்ச்சி விரைவு படுத்தப்படுகின்றது. ஏனெனில் இவர்கள் வசம் இருந்த பெரும் சொத்துப் படைத்தவர்களிடம் தமது சொத்தைப் பறிகொடுத்தனர். அடுத்த கட்டம் விஞ்ஞான தொழில் நுட்பம். லெனின் ஏகாதிபத்தியமாக வரையறுக்கின்றார். அதாவது ஏகபோக முதலாளித்துவக் கட்டம். இன்று ராட்சத தொழில் நிறுவனங்கள் உலகின் பல உற்பத்தி சாதனங்களையும் கொள்ளையிடுகின்றனர்.

1500களில் ஏற்பட்ட கொலனித்துவ நலனின் மீது அமைந்த பொருளாதாரத்தின் விழைவாக தன்னிறைவுப் பொருளாதாரத்தில் சிதைவை ஏற்படுத்தியது. பாரம்பரிய பொருளாதார முறையில் ஏற்பட்ட சிதைவு தன்னிறைவை தடுத்து நிறுத்தியது. கூலியுழைப்பை தொழிற்சாலையில் விற்பனைக்கு இட்டுச் சென்றது. இதனால் தமது பாரம்பரிய பொருளாதாரத்தின் மீது இருந்த அடிப்படையானது இல்லாது போனதினால் நிர்க்கதியாக்கப்பட்டனர். இவ்வாறு அகற்றப்பட்டவர்கள் தமது உழைப்பை விற்பனைக்கு விட்டனர். இதில் பலியாகியவர்கள் தமது உழைப்பை விற்க, கொலனித்துவவாதிகளிற்கு பின்னர் உள்நாட்டைச் சேர்ந்தவர்களும், மூலதனத்தை கொண்டவர்களும் பணப் பயிரை மேற்கொள்ள செய்தனர். பணப் பயிரில் அதிக நாட்டம் கொள்ளும் பொழுது உணவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைக்கு கொடுக்கும் செலவு என்பது அதிகமாகும். இதனால் உள்நாட்டில் பொருளிற்கான விலை அதிகரிக்கும். காரணம் அந்தப் பொருளை இறக்குமதி செய்யும் கூலி, வரி இவைகளை மக்களிடம் இருந்தே பெறப்படுவதினால் முன்பு வாங்கிய விலையில் இருந்து அதிகமாக இருக்கும். முன்னர் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்த போது நிலத்தில் இருந்து அன்றாட உணவுத் தேவை என்பது கிடைக்காமல் போனதும் தாமே உற்பத்தி செய்யாது, அனைத்துப் பண்டங்களையும் வியாபார நிறுவனங்களில் கொள்வனவு செய்யும் முறையும் அறிமுகமாகியது.

கொலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமக்கு தேவையான உத்தியோகஸ்தர்களை இங்கிலாந்தில் இருந்து தருவிக்கும் போது பலமடங்கு செலவினை செலுத்த வேண்டும். அவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும், அவர்களுக்கான ஊதியம், அவர்கள் வீட்டிற்கு வேலைக்காரர்கள், அவர்களுக்குரிய பாதுகாப்பு இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம், இவற்றை விட தமக்குத் தேவையான ஊழியர்களை, இராணுவத்தை குறைந்த செலவிலேயே ஏற்படுத்திக் கொள்ள முடியும். வெள்ளையர்கள் பிரித்தாளும் தந்திரத் திறமையுடையவர்கள். எனவே தமக்குத் தேவையான காரியத்தை மேற்கூறிய நல்ல விசுவாசிகளுக்கு எலும்புத் துண்டைப் போடும் போது தாம் எண்ணும் காரியத்தை இலகுவில் செயற்படுத்த முடியும் என்பதை அறிந்து சுதேசிகளை பயிற்றுவித்து பதவிகளில் அமர்த்தி தமது தேவைகளை

நிறைவேறிக் கொண்டனர். ஆளும்வர்க்கம் எம்மிடம் இருந்து பெற்ற மூலதனத்தைக் கொண்டே தமக்குத் தேவையான உத்தியோகஸ்தர்களை உருவாக்குவதற்காகப் பயன்படுத்துகின்றனர். இதில் தோட்ட தொழிலில் ஈடுபட்டு தமது வருமானத்தைப் பெருக்கிக் கொண்ட வெள்ளையர்கள், உள்ளூர்வாசிகளும் சந்தர்ப்பம் பெற்றனர்.

இந்தியாவில் பிரித்தானியர் உருவாக்கிய ஜமிந்தார் (வி. பி. சிந்தன் – தெலுங்கானாப் போராட்டம்) கூட்டம் இவர்கள் தான் நிலவரியினை வசூலித்துக் கொடுப்பவர்கள். ஜமின்தார்களுக்கு என்று ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை கொடுப்பது. இவர்கள் தாம் ஒருபகுதியை எடுத்துக் கொண்டு ஒரு பகுதியை தமது முதலாளிகளுக்கு கொடுத்தனர். இவ்ஜமீன்தார்கள் இந்தியாவில் கொடுங் கோலாட்சி செய்தவர்களில் பேர்போனவர்கள். இலங்கையை எடுத்து நோக்குவோமாயின் தாழ்த்தப்பட்ட மக்களை தமது தேவைக்காக அதிகமாக பயன்படுத்தினர். தாழ்ந்த (வர்க்கத்தினரிடம்) சாதியினரிடம் இருந்து உபரியைப் பெற்று வளர்ச்சியடைந்திருந்த சைவ வேளாள பெருங்குடிகள், நுகர்வின் தேவைக்காக உபரி வருவாயைப் பயன்படுத்தினர்.

உயர் குலத்தவரிடையே ஆரம்பம் முதலே சுரண்டல் மூலதனம் இருந்தினால் அதனைப் பயன்படுத்திக் கொண்டு அந்நியர்கள் உருவாக்கிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளைக் கற்பித்தனர். வெள்ளைச் சீமான்களின் காலில் வீழுந்து தமது பிள்ளைகளை சீமைக்கும் (வெளிநாடுகளுக்கு) அனுப்பி படிப்பித்தனர். அவர்கள் உயர்ந்த பதவி வகித்தனர். இவர்களைக் கொண்டு (சிங்களவரும் உண்டு) சிங்கள மக்களையும் பரிபாலிக்க வைத்தனர். இவர்கள் அதிகாரத்தினால் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களும் சைவ வேளாள பாரம்பரியத்தினால் பாதிக்கப்பட்டனர். இந்தப் பாதிப்பானது தேசிய உணர்வு என்ற வகையாக மாறி சிங்கள தேசிய வெறியினை முதலாளித்துவ தேசியவாதிகளால் வளர்க்கப்பட்டது. அந்நிய முதலாளித்துவத்தை ஈடாட்டம் கொள்ள எவ்விதத்திலும் அனுமதிக்கவில்லை.

தமது சுரண்டலை நிலைநிறுத்திக் கொள்ள உள்நாட்டுக் குடிகளை வைத்தே அனைத்துவித தந்திரோ பாயங்களையும் பாவித்தனர். சிங்கள தேசிய வாதமானது தமிழ், முஸ்லீம்களுக்கும் எதிராகத் திருப்பப்பட்டது. ஏனெனில் உண்மையான ஒடுக்கு முறையாளர்கள் யார் என மக்கள் அடையாளம் கண்டு கொண்டார்களானால் தமது ஆதிக்கத்துக்கு அனைத்து இனமக்களும் விடுதலைப் போராட்டத்தில் ஐக்கியப்பட்டு ஈடுபடுவார்களானால் தமது இருப்புக்கு இடைஞ்சல் ஏற்படும் என்ற காரணத்தினால் பிரித்தானியர்கள் கவனமாக ஒருவரை ஒருவர் மூட்டிவிட்டனர்.

இத்துடன் தமது வர்க்க நலனை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பிரதேசங்களை இணைத்து கொள்ளும் நோக்கம் கருதி புகையிரதப் பாதை, பெருந்தெருக்கள் திறக்கப்பட்டு உட்கட்டுமானம் இணைக்கப்பட்டது. இத்துடன் அதிகாரத்தை மத்தியப்படுத்தும் நோக்கம் கருதி உள்ளூர் நிர்வாக

அலகுகள் மற்றும் தபால், வங்கி, இன்னும் பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றை உருவாக்கிப் பாதுகாப்பதற்கு அரசும் உறுதுணையாகவுள்ளது. அரசு எனப்படும் போது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை பாதுகாக்கும் நிறுவனமாகும். அந்த வர்க்கத்தின் பாதுகாவலனாக துணைநின்று செயற்படுவது சட்டம், நீதிமன்றம், பொலீஸ், இராணுவம், அரசாங்கம் ஆகியவை ஆகும். இன்றைய நிலையில் இலங்கையானது ஒரு முதலாளித்துவ பொருளாதாரத்தை நோக்கி மாற்றமடையும் நாடு. முதலாளித்துவ (நவகொலனித்துவ, நாடாகும்.) நலனைப் பாதுகாக்கின்ற அரசேயாகும். இவைகளே இன்றைய சமூக அமைப்பின் இரகசியமாகும்.

இந்த வேளையில் தனியே பெரும்பான்மையான இனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கம் மட்டும் தான் சிறிய இனங்களையும், தொழிலாளர் வர்க்கதினரையும் ஒடுக்க முடியும் என்றில்லை. மாறாக சந்தையைக் கைப்பற்றும் பொருட்டு சிறுபான்மை தேசிய இனமானது தன்னிலும் விட சிறிய, பெரிய தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கவும் தயங்காது என்பதை மறுத்துவிட முடியாது. சிறுபான்மை தேசிய இனம் பெரும்பான்மையை அடக்கியாளும் என்பதையும் ஏற்காது விட முடியாது அல்லது மறுக்க முடியாது. அரச யந்திரத்தில் எந்தத் தேசிய இனத்தின் பலம் கூடுதலாக உள்ளதோ அந்த வர்க்க இன நலனை பாதுகாக்கும் பொருட்டே ராணுவமும் செயற்படுகிறது. அரசு என்பது வர்க்கத்தைப் பாதுகாக்கும் இயந்திரம் அதற்குள்ள உபகரணமாகிய இராணுவத்தைக் கொண்டு வர்க்கத்தைப் பாதுகாக்கின்றது

தேசியவாதம் பற்பல உருவில், வெளித் தோற்றத்தில் உலாவமுடியும். தேசியவாதத்தின் அதியுச்ச வடிவம் நாசிசமாகும். நாசிசம் எவ்வாறு ஆரிய இனம் என்ற கோசத்தின் கீழ் மக்களை தன்னுள் உள்வாங்கியதுடன் இனத்தை தூய்மை செய்வதில் இறங்கியதையும் மறுத்துவிட முடியாது. அரசின் அவசியமோ, தேசியவாதத்தின் அவசியமோ மேற்கூறியவற்றை அடிப்படையாக் கொண்டு பார்த்தால் இலகுவாக புரிந்து கொள்ளமுடியும். இவற்றை வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறை மூலமாக தெளிவு பெறமுடியும்.

## 1.1.3.1 அணுகுமுறை பற்றி

பொருள் முதல்வாதமென்பது தனியே யேர்மன் தத்துவம் என்ற பார்வை இருக்கின்றது, அல்லது இது பற்றி ஒரு தெளிவற்ற பார்வை இருக்கின்றது. மார்க்சிய கருத்தை எதிர்ப்பவர்கள் தமது கருத்தை நிரூபிக்கும் பொருட்டு சுதேசிய கருத்தை விட்டுவிட்டு இரவல் கருத்தை முன்வைப்பதாக கருத்தை முன்வைப்பர். ஆனால் இயங்கியல் பொருள்முதல்வாதம் என்பது மார்க்ஸ் தான் கண்டு பிடித்தார் என்ற கருத்தும் இருக்கின்றது. பொருளுக்கு முதன்மை கொடுக்கின்ற நிலை தமிழ் நாட்டுத் தத்துவங்களில் இருக்கின்றன. ஆனால் தலைசிறந்த அறிஞரான மார்க்ஸ் அவற்றை எல்லோரும் விளங்கும் வகையில்

உலகத்திற்கு தொகுத்து அளித்தார். மனிதர்களுடைய தோற்ற வரலாறு என்பது பற்பல போராட்டங்களூடே வளர்ந்து வந்திருக்கின்றது. இங்கு மார்க்ஸ் பல சமூகத்தின் வளர்ச்சி விதியினை தனது மேதமை மூலமாக உலகிற்குத் தந்துள்ளார். இவர் கூறிய அனைத்திற்கும் எல்லோரும் உடன்பாடு கொண்டவர்கள் எனக் கொள்ள முடியாது.

மார்க்சியம் என்பது எல்லாவிதமான சமூகப் பிரச்சினைகளையும் பார்க்கும் தகுதியற்றது என்ற நிலை இருக்கின்றது. இதற்கு தகுந்த முறையில் பதில் கொடுப்பதற்கு ஒரு சரியான அணுகுமுறை அவசியமானதாகும். மார்க்சியம் செயலுக்கான வழிகாட்டியாக அமைகின்றது. அணுகுமுறை எல்லா வகையான சமூகத்தின் நடவடிக்கைகளுக்கும், புத்தகம் எழுதுவதற்குக் கூட அவசியமானதாகும். அணுகுமுறை பற்றி மாவோ அக்கறை கொண்டுள்ளார். கெரில்லாப் போராட்டத்தில் எவ்வாறு நடைமுறையில் செயற்பட வேண்டும் என கூறியுள்ளார். மக்கள் மத்தியில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். இன்னும் பல முறைகளை அவர் எழுதியிருக்கின்றார். அணுகுமுறை தொடர்பான அவசியம் பற்றி ராணுவ, வெகுசன நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமாகின்றது. எவ்வகையான உடுப்பு அணிதல் வேண்டும், எவ்வாறாக பேசுதல் வேண்டும், இவை போன்ற அணுகுமுறை பற்றி எல்லாப் போராளிகளும் அறிந்திருக்க வேண்டும். இதன் மூலமே மக்களிடம் சொல்வதை ஆழமாகவும், எந்த மண்ணைச் சார்ந்த மக்கள் எவ்வாறு கருத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதை புரிந்து கொண்டு பின்னர் கற்றவற்றைக் கொண்டு, திரும்பவும் மக்களுக்கு கற்பிக்க முடியும்.

மார்க்சியம் மனிதர் தன்னிலையை அறிந்து கொள்ளவும், இந்தச் சமூகத்தை எவ்வாறு மாற்ற முடியும் என்பதையும் கற்பிக்கின்றது. ஒவ்வொருவரையும் உறுதியான சமூக முதுகெலும்பைக் கொண்ட மக்களாக உருவாக்கின்றது. மற்றைய தத்துவங்கள் மனிதர்களின் மேல் ஏறி சவாரி செய்ய நித்தம் முயற்சிக்கின்றன. இதுவே மற்றைய தத்துவங்களுக்கும் மார்க்சியத்திற்கும் உள்ள வித்தியாசமாகும். "மார்க்ஸ் – ஏங்கெல்ஸ் ஆகியோர் தொழிலாளர்களுக்கு ஆற்றிய சேவையைப் பின்வரும் சொற்களில் கூறலாம். உழைக்கும் வர்க்கம் தங்களை அறிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் கற்றுக் கொடுத்தனர். மேலும் அவர்கள் கனவுகளுக்குப் பதிலாக அறிவியலை வைத்தனர். (லெனின் – பக்.15 கோ. கேசவன் – இலக்கிய விமர்சனம் – ஒரு மார்க்சியப் பார்வை) முதுகெலும்பைக் கொடுக்கின்ற தத்துவத்திற்கு எல்லோரையும் விட பகைவர்கள் அதிகம். மற்றைய தத்துவங்கள் இந்தச் சமூகத்தைப் பாதுகாத்து இருப்பதினால் மற்றைய தத்துவங்களை மார்க்சியம் எதிர்க்கும் போது சனநாயகம் மீறப்படுவதாக கூக்குரல் இடப்படுகின்றது.

நாம் ஒரு பிரச்சினைக்கான ஒரு தீர்வை முன்வைக்கும் போது அப்பிரச்சினை எங்கிருந்து தொடங்குகின்றது, அதன் தோற்றத்தின் மூலகாரணங்கள் என்ன என்பதை ஆய்வு செய்து அறிந்து, அப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கும்

போது தான் அப்பிரச்சினையை சரியாகக் கையாள முடியும். அதனை விடுத்து மேல் எழுந்த வாரியாக சமூகத்தின் மேற்கட்டுமானத்தில் ஏற்படுகின்ற நிகழ்வுகளைக் கொண்டு ஆத்திர, அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவது என்பது விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையாகாது. அணுகுமுறை வெறும் உணர்வுக்கு அடிமைப்பட்ட, கதம்பமான நிலையினைத் தான் தோற்றுவிக்கும்.

மனித வாழ்க்கையில் காணப்படுகின்ற பிரச்சினையை பல கோணங்களில் பார்க்க முடியும். எனினும் இரண்டு பெரும் பிரிவாக பிரித்துப் பார்க்க முடியும். அன்றாட வாழ்வியலில் காணப்படும் சிந்தனையைக் கொண்டு அதாவது எமது சமூக அமைப்பில் காணப்படுகின்ற தன்மைகளைக் கொண்டு அவற்றிற்கு விளக்கம் கொடுக்க முடியும். விஞ்ஞான ரீதியாக சிந்திக்கின்ற வழிமுறைகள் அறிவுப் பார்வை என்பதாகும். இந்தப் பார்வை என்பது அறிவு வளர்ச்சியின் மையப் புள்ளியாகும். புறநிலை சார்ந்த சிந்தனைப் போக்கில் அமைந்த சமூகப் பார்வையே இங்கே கூறப்படுகின்றது.

இரண்டு விதமான சிந்தனையோட்டத்தைக் கொண்ட பதில்களுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்த வித்தியாசங்களை இலகுவில் தீர்ப்பதோ அல்லது ஒன்றை ஒன்று மேவுவதோ இலகுவானது அல்ல. ஆனால் முதலில் குறிப்பிடப்படும் சிந்தனையானது பரந்த ஆதிக்கத்தில் இருக்கின்றது. அகநிலை சார்ந்த சிந்தனை ஆதிக்கத்தில் இருப்பதனால் பல பிரச்சினைகளை இலகுவாக தீர்க்க முடிவதில்லை. மாறாக பிரச்சினையானது வளர்ந்து பேரளிவிற்கே சென்று விடுகின்றது. இதுவே சமூகத்தின் அனைத்து அலகுகளிலும் காணப்படும் முக்கிய பிரச்சினையாகும்.

ஆனால் விஞ்ஞான் பூர்வமான ரீதியில் அதாவது வர்க்க ரீதியாக எல்லாவற்றையும் அணுகி ஆராய்கின்ற போது பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியும். அவற்றை விடுத்து வெறும் இனவாத கோசத்தினுள்ளும், போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது என்ற சமூக அடக்கத்திலும். தாம் தமது உறவு அல்லது சாதி என்ற வகுப்புவாதச் சகதிக்குள் எல்லா பிரச்சினைகளையும் அடக்கிவிடுவதனால் எந்தப் பிரச்சினைகளும் மறைந்து விடுவதில்லை ஏனெனில் இவை அவிஞ்ஞானப் போக்காகும். இந்தப் போக்கை பரந்துபட்ட மக்களிடத்தில் எதிர்பார்ப்பது சிரமமானதே.

ஒரு பிரச்சனைக்கான தீர்வினை முன்வைக்கும் போது, காரணத்தை ஆய்வு செய்யும் போது மார்க்சியர்களிடம் இருந்த, இருக்கின்ற மிகப் பெரிய கடமையை வரலாறு எதிர்பார்க்கின்றது. மார்க்சியர்களின் ஆய்வு முறை எப்பொழுதும் முதலாளி வர்க்க ஆய்வாளர்களிடம் இருந்து வேறுபட வேண்டும். மாறாக அப்பொறுப்பில் இருந்து சிறிதும் விலகினால் கூட முதலாளித்துவ ஆய்வாளர்களுக்கும், மார்க்சிய ஆய்வாளர்களுக்கும் இடையேயான வேறுபாடு இல்லாமல் போய்விடும். வரலாறு மிகப்பெரிய பொறுப்பை மார்க்சியவாதிகளிடம் ஒப்படைத்துள்ளது. அந்தப் பொறுப்பை மார்க்சியர்கள் செவ்வையாக நிறைவேற்ற வேண்டிய வரலாற்றுக்

கட்டாயம் உடையவர்கள் என்பதை எவரும் மறுதலிக்கவோ மறுக்கவோ முடியாது.

பல ஆய்வு முறைகள் இருக்கின்றன, அவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு சித்தாந்தத்திற்கு சேவகம் செய்கின்றன. அதேபோல் மார்க்சியத்திற்கு ஆய்வுமுறை என்பது இருக்கின்றது. இதுவே **இயங்கியல்-வரலாற்றுப் பொருள்முதல் வாதம்** ஆகும். இதற்குள் எவ்வகையான உள்ளடக்கக் கூறுகள் உள்ளடங்கி இருக்கின்றது என்பதைப் பார்ப்போம். இவற்றின் மூலமாக சமூகப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கும் சரியான பாதைக்கு வரவும் இவைகள் துணை செய்கின்றன. சமூகத்தின் பிரச்சினைகளை பொருளாதார உற்பத்தி முறைகளில் இருந்து தான் பிரச்சினைகளை புரிந்து கொள்ளும் படி வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு தனிமனிதர்களையும் சமூக அமைப்பிலிருந்து தான் பார்க்கக் கோருகின்றது. ஒரு குறிப்பிட்ட முடிவிலிருந்து அதனை பொதுமைப்படுத்துதலும் முடியாததாகும். நகர்ப்புறத்தைச் சேர்ந்தவர் உற்பத்தி முனைப்பில், வியாபார நோக்கில் கிராமத்தை நோக்கி செல்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தேசிய இனத்தின் பிரதிநிதியாக, சாதியின் பிரதிநிதியாக, தனிநபர் என்ற ரீதியில் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இலங்கையின் பல பாகங்களுக்கும் முசுலீம் தமிழ் வர்த்தகர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகம் பார்ப்பவர்கள் என இடம் பெயர்ந்து சென்றனர். இவர்கள் மக்களின் இயலாமையை, வறுமையைப் பயன்படுத்தி அதில் லாபம் கண்டனர். உத்தியோகம் பார்ப்பவர்களில் மலையகப் பகுதிகளுக்குச் சென்றவர்கள் வேலையற்றவர்களை தமது வயல் வெளியில் வேலைசெய்யவும், சிறுவர்களை வீட்டு வேலைக்கும் என மலையகத்தவர்களின் உழைப்பைச் சுரண்டினர். வியாபாரிகளும் தமது பங்கிங்கு சுரண்டலில் ஈடுபட்டனர்.

இவர்களின் முக்கிய நோக்கம் அதியுயர் லாபமே அப்படியாக இருக்கின்ற போது அவர்கள் ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டுத்தான் லாபத்தைப் பெறமுடியும். அப்படி இவ்வியாபாரிகள் பெற்றாலும் அவ்வியாபாரிகளை விட பெரும் வியாபாரிகளினால் சிறுவியாபாரிகள் விழுங்கப்படுகின்றனர். இவை ஒருபுறமிருக்க, இவ்வியபாரிகள் வாங்கிய இடத்தில் இருந்து சில யார்கள் கடந்த பின்னர் வாங்கியவரிடமே அதிக விலை வைத்து விற்பனை செய்வர். இந்நிலையானது அந்தச் சமூகம் கொண்ட நீதி முறைக்கு அப்பாற்பட்டதாகும். நீதிமுறை தவறுபவர்களை மக்கள் இழிநிலை கொண்டு அழைப்பர். அவ்வியாபாரியின் பெயரானது சாதியின் பெயர், தேசிய இனத்தின் பெயர் கொண்டே அழைக்கப்பட்டது. தனிநபர் தனது சொந்தக் கிராமத்திற்கு சென்று வியாபாரம் செய்கையில் அவரது குடும்பத்தின் குண நலன் பற்றிய பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது.

முன்னர் அதேநபர் தவறுவிடுவாரானால் தகப்பனாரின் பெயர் சொல்லியே சுட்டிக்காட்டப்பட்டது. **ஒரு இயக்கத்தின் போராளி தவறுகள் விடுகின்றபோது அந்த இயக்கத்தின் பெயர் சொல்லியே**

அழைக்கப்பட்டது, சுட்டிக் காட்டப்பட்டது. தனிநபர்களின் தவறுகள் மூலமாக முழு இயக்கத்தின் செயற்பாட்டையும் பாதிக்கும் படியான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதே போல தான் சிறு தொகையினரான சுரண்டலாளர்களைக் கொண்ட முசுலிம், தமிழ் (யாழ்) வியாபாரிகளின் வர்க்கச் சுரண்டலை கவனிக்காது முழுஇனமும் ஒரே குணாம்சம் கொண்டதாக முத்திரை குத்தப்பட்டனர். தேசிய இனத்தின், சாதியை, குடும்பத்தின் பிரதிநிதி என்பதால் முழு அங்கத்தவர்களையும் பகைமைக்குரியதாக ஆக்கி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பகைமையின் விளைவை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த மாதிரியான பார்வைகள் மாற்றப்படவேண்டும். ஏனெனில் இவை இயங்கியலுக்கு உட்பட்டதாக இல்லை என்பதே. ஒரு குறிப்பிட்ட பிரிவினர், தனிநபர் முழுச் சமூகத்தை பிரதிபலிக்க முடியாது.

இவ்வாறான விமர்சனத்தை டானியலின் நாவல் மீதான விமர்சனத்தின் மீது வைக்கப்படுவதை காணமுடிகின்றது. "டானியலின் அணுகுமுறையில் சாதி முரண்பாட்டை அவர் வலியுறுத்திய விதம் மாக்ஸியத்துக்கு உடன்பாடற்றது" (பக்.12 விமர்சனங்கள் சி. சிவசேகரம்) என சிவசேகரம் கருதுகின்றார். இந்தக் கூற்றிற்கு காரணம் டானியல் சாதிக் கொடுமையை விபரிக்கும் பொருட்டு அதில் கொள்ளும் பாத்திரம் முழுச்சாதியையும் அடக்கி விடுவதாக கருதப்படுகின்றது. பெண்கள் எல்லோரும் ஒழுக்கம் கெட்டவர்கள் என்ற கருத்து நிலவ இது உதவுவதாக கூறப்படுகின்றது. இந்த விமர்சனம் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அதாவது அவர் வடிக்கும் பாத்திரத்தில் இருந்து முழு வேளாள பெண்கள் நடத்தை கெட்டவர்கள் எனக் கருதிக் கொள்ள முடியாது. சமூக நிகழ்வுகள் ஒரு சமூகத்தில் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குறிப்பிட்ட மக்கள் பிரிவினரிடையே வர்க்க நிலை மாறுபட்டு இருக்கின்றது. இதனால் அந்த மக்கள் பிரிவினர் பற்றிய நிலைப்பாட்டை பொதுமைப்படுத்த முடியாது. இந்த அணுகுமுறைக் குறைப்பாட்டை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் கதாபாத்திரங்கள் அமைக்கப்படுகின்ற போது புதிய அணுகுமுறையை பின்பற்றுதல் வேண்டும்.

பிரசித்தி பெற்ற தாய் நாவலில் கதாநாயகியாக வரும் தாய் போல, நெஞ்சில் காயம் பட்டு போர்க்களத்தில் இறந்த தாய் போல எல்லாத் தாய்மாரும் தன்மகன் சான்றோன் என்று அழுவதில்லை. அதேபோல உலகத்தில் இருக்கின்ற தாய்கள் எல்லோரும் மார்க்சிம் கோர்கியின் தாய் போல இருப்பதில்லை. ஆனால் வர்க்க உணர்வு பெற்ற பின்னர் ஒவ்வொரு சமூக உறுப்பினர்களுக்கும் ஏற்படுகின்ற வர்க்க உணர்வு இருக்கின்ற போது ஏற்படுகின்ற எழுச்சி வேறானதாகும். ஆனால் தாய் நாவலில் இருக்கின்ற **'தாய்'** மாதிரித் தான் எல்லாத் தாயும் இருப்பதாக கூறுவதில்லை. அதே போல் தான் டானியலின் நாவல்களின் பாத்திரப் படைப்பாகும். டானியலின் கதைகளின் உள்ளடக்கமிருந்தது. அது இந்தச் சமுதாயத்தின் ஒடுக்கும் சித்தாந்தத்தை அம்பலப்படுத்துகின்றது. இலங்கையில் இருக்கின்ற மேல்சாதிகள், அல்லது இந்தியாவில் இருக்கின்ற மேல்சாதிகளுக்கு இருக்கின்ற திமிரை, சமூக அமைப்பை அம்பலப்படுத்துகின்றது.

முன்னர் கூறியது போல் பாத்திரப் படைப்புக்களை வேண்டுமானால் இனி வருங்காலத்தில் தனி "ஒரு ஊரில் ராசாவும், ராணியும் இருந்தார்கள்" எனத் தொடங்காமல் வேறு பாத்திரப் படைப்பை மேற் கொள்ளட்டும். டானியலின் படைப்பு "மானிடவியல் ரீதியிலே திரு டானியலுடைய நாவல்கள் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தினை விவரணஞ் செய்யும் ஒழுங்கான இனச்சரிதைகள் (ethnographies) எனக் கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமுமில்லை." (பக். 5 யசுமச செக்கினெ, தண்ணீர் கே. டானியல்) இலங்கைச் சாதிகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு டானியலின் பங்களிப்பு முக்கியமானதாகும். டானியலின் பாத்திரங்களில் இருந்து வேளாள உழைக்கும் வர்க்கமும் தன்னுடைய சாதியைச் சேர்ந்த உயர் வர்க்கத்தினரின் தந்திரங்களையும் அறிந்து கொள்ள முடியும். டானியலை முழு வேளாா சமூகத்தின் எதிரியாகக் கொள்ள முடியாது. அவர் மாத்திரம் அல்ல, புரட்சிவாதிகளான மார்க்சிய லெனினிய வாதிகள் சாதிக் கொடுமைகளை எதிர்க்கின்றனர். அவர்கள் மேல்சாதிகளின் ஒடுக்கும் தந்திரோபாயங்கள் அனைத்தையும் எதிர்க்கின்றனர். எதிர்ப்புப் போராட்டம் நடத்தும் போது சாதியத்தின் ஒடுக்குமுறைச் சிந்தனையைத் தான் எல்லோரும் எதிர்க்கின்றனர் என புரிய வைப்பது சவாலுக்குரிய அணுகுமுறைப் பிரச்சினையே.

இதற்கு நம்மூர் பழமொழியை இங்கு பார்ப்பது பொருந்தும். '**ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்**' என்பது எவ்வகையிலும் பொருந்தாது. இது ஒரு குறிப்பிட்ட ஒரு தேற்றத்தில் இருந்து ஒரு கணக்கை தீர்ப்பதைப் போன்றதாகும். ஆனால் ஒரு தேற்றத்திலிருந்து ஒரு விடை பெற முயல்வது சமூக விஞ்ஞானத்திற்கு பொருந்தாது. புறத்திலிருந்து அகத்தை நோக்கிச் செல்லல் வேண்டும் மாறாக அகத்திலிருந்து புறத்தை நோக்கியல்ல மார்க்ஸ் கூறுகின்றார் சமூகம் எவ்வாறு உள்ளதோ, அதற்கு ஏற்றவாறாகவே தனிமனிதர்களும் படைக்கப்படுகின்றார்கள். மார்க்சிய ஆய்வாளர்களின் அணுகுமுறையானது புறவயத்தை அடிப்படையாகக் கொண்டே ஆய்வினை மேற்கொள்வதாகும், அதாவது பொதுமையான –பொருளில் இருந்து ஆகும்.

மார்க்சியத்தினை அறிமுகம் செய்தவர்களில் முதன்மை வகிப்பவர்கள் இலங்கையில் மேட்டுக் குடியினரும், இந்தியாவில் மேட்டுக் குடியினரும், பாப்பனர்களும் ஆவார்கள். இவர்கள் வெளிநாட்டில் படித்த போது இவர்களை ஒதுக்காமல் அணைத்துக் கொண்டவர்கள், அந்நாட்டு இடதுசாரிகளாகும். இவர்கள் மேற்கு நாடுகளில் ஏற்பட்ட தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சியின் பால் ஈர்க்கப்பட்டு தமது நாட்டிலும் சுதந்திரப் போராட்டங்களையும், வர்க்கப் புரட்சியையும் ஏற்படுத்தும் பொருட்டு வெளிநாட்டில் இருந்து தாயகம் வந்த பிற்பாடு ஈடுபட்டனர். இவர்கள் வழியாகவே மார்க்சியம் எமது நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டது.

இவர்கள் தம் நலனை எவ்விதத்திலும் பாதிக்காத வகையில் மார்க்சியத்தை பிரதியீடு செய்தனர். ஏனெனில் இவர்களுக்கே முன்நோக்கிச் செல்லும் வசதி இருந்தது. அவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கு இலகுவாக இருந்த பொழுது தமது வரையறுக்கப்பட்ட வரம்பிக்கு உள்ளேயே செயற்பாட்டினை, புரிதலைக் கொண்டிருப்பதுடன் மாற்றத்தையும் மேற்கொள்ள முயற்சி எடுப்பர் என்பதை ஒடுக்கப்படும் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் எப்பொழுதும் கவனத்தில் கொள்ள வேண்டும். லெனின் கூறுவது போல் "குட்டி பூர்சுவா வர்க்கமானது என்றும் புரட்சிக்கு விசுவாசமாக இருக்கும் என்றில்லை." எந்த வர்க்கச் சிந்தனை எம்மை ஆளுமை கொண்டிருக்கின்றதோ அந்த வர்க்க சிந்தனையே எம்மை ஆட்கொள்ளும். நிகழ்வில் இருக்கும் சிந்தனை என்பது அந்த ஆளும் வர்க்கத்திற்கு சேவகம் செய்து கொண்டேயுள்ளது.

அத்துடன் அச்சமூக அமைப்பை பாதுகார்த்து வருவதுடன் சமூக உறுப்பினர்களை அதன் வழியில் இருந்தே உருவாக்குகின்றது. ஆளும்வர்க்க சிந்தனைக்கு உட்பட்டிருப்பதால் அதனுள் இருந்து செயற்படும் படைப்பாளிகள் அல்லது முற்போக்குச் சக்திகள் எனப்படுபவர்கள் தம்முடைய புரிதலை, படைப்பை கருத்தியலுக்கு உள்ளேயே அடக்கிவிடுகின்றனர். இதன் காரணமாக ஒரு படைப்பு அல்லது புரிதலைப் பிரதியிடும் போது அதுமுழுமையடையாது போவதுடன், அவை கருத்தியலுக்கு உட்பட்டவையாகவே போகின்றது. இந்தப் பிரச்சினை என்பது அனைத்து தளங்களிலும் காணப்படுகின்றது. இது போலவே தான் தேசிய முதலாளித்துவமும் தனக்குச் சார்பான நிலைப்பாடுகளை எடுக்கும் படியான ஆய்வு முடிவுகளை எடுக்கும் படியாக நிர்ப்பந்திக்கின்றது.

கல்வி அறிவுவட்டத்தினுள் இருந்து கொண்டு சமூகத்தினிடையே காணப்படும் பிரச்சினைகளை ஆராய்கின்ற போது, விளக்கம் கொடுக்கும் போது அவை அந்த வரையறைக்கு உட்பட்டதாவே அமைந்து விடுகிறது. இவை மனோதத்துவவியல், சமூகவியல், மானிடவியல் அல்லது இதர கல்விசார் வட்டத்தினுள் இருந்து பிரச்சினைகளை பார்க்கின்றனர். இதன் மூலம் அந்தப் பிரச்சினையின் புரிதலை குறுக்கி விடுகின்றனர். இது ஒரு அணுகுமுறைப் பிரச்சினையாகவுள்ளது. இதனால் வெளிப்படுகின்ற கருத்துக்கள் புரிதலில் சிக்கல்களை ஏற்படுத்துவது மாத்திரம் அல்லாமல் கருத்துக்களில் திரிபுக்கும் இடமளிக்கின்றது. மாவோ பின்வருமாறு உரைக்கின்றார். "**நாம் மார்க்சிய வாதிகள். நாம் ஒரு பிரச்சினைகளை அணுகும் போது, யதார்த்த உண்மையிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமேயன்றி, வெறும் வரைவிலக்கணங்களிலிருந்து அல்ல என்னும், இந்த உண்மைகளை ஆராய்வதன் மூலம் நமது வழிகாட்டும் கோட்பாடுகள், கொள்கைகள், வழிமுறைகள் ஆகியவற்றை வகுக்கவேண்டும் என்றும் மார்க்சியம் போதிக்கின்றது.**" (மாவோ — ப 30) மாவோ மேற்கோள்கள்) மார்க்சியம் மற்றைய கோட்பாடுகளில் இருந்து மாறுபடுகின்றது.

பொருளாதார உறவுகளிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள், வர்க்க மோதல்கள் என்பவற்றை விளக்குகின்றது. கலாசாலைகளில் நடைமுறைவாதம் அல்லது செயற்பாட்டியல்வாதம் (Functionalism) அமைப்பியல்வாதம் (Structuralism), அமைப்பியல் நடைமுறைவாதம் (Structural functionalism). போன்றவற்றுடன் தனிநபரை முன்நிறுத்துகின்ற கோட்பாடுகள் கற்பிற்கின்றது. தனிநபர்கள் எவ்வாறு (Inter actionalism) அகநிலையில் இருந்து செயற்படுகின்றனர் என ஆய்வு செய்யும் அணுகுமுறை கொண்ட கோட்பாடுகள் என பல வகையாக (உதாரணம் சமூகவியல் பிரிவு, மானிடவியல் பிரிவு என) பிரிவுகளுக்கும் என் பல கோட்பாடுகள் கற்பிக்கப்படுகின்றன.

இந்த கோட்பாட்டு நிலையில் இருந்து, பலபடித்த பள்ளியில் இருந்து கற்ற அறிவைக் கொண்டு பத்திரிகையில் எழுதி தமது கருத்தைத் தெரிவிக்கின்றனர். இவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளை மாத்திரம் சொல்வதில் பல்வேறு அணுகுமுறைகளை கொண்டு தமது கருத்தைச் சொல்லி வீடுகின்றனர். இவர்கள் செய்ய முயற்சிப்பது புரட்சியை வழிநடத்திச் செல்வது அல்ல. இன்றைய கலாசாலைகளில் பட்டம் பெறும் பொருட்டு மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோட்பாட்டை நிலைநிறுத்தும் பொருட்டு (Treatise, Thesis) ஆராய்ச்சி நூல் எழுதுவர். அவ்வாறு எழுதப்படுவது ஆராய்ச்சி நூல் என்ற முயற்சிக்கு அப்பால் வெகுதூரம் செல்ல முடியாது.

ஒரு செயற்பாடு ஒன்று நிகழுமாகின் அதற்கு நீண்ட வரலாறு அதற்குப் பின்னால் இருக்கின்றது. அதேபோல் ஒரு செயற்பாட்டின் தாக்கம் என்பது பலமுனைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அத்தாக்கம் என்பது காலப் போக்கில் சமூகத்தின் பல முனைகளிலும் வெளிப்படுகின்றன. இதற்கு உதாரணங்கள் அதிகம் தேவையில்லை எமது தேசத்தின் அவலங்களே போதுமாகும். இலங்கையில் உக்கிரமடைந்த நிலையில் பிரச்சினைக்குப் பின்னால் மிகச்சிக்கலான வரலாறு மறைந்திருக்கும் என்பதேயாகும். (பொருளாதார அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றம் எவ்வாறு சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளையும் தாக்குகின்றது. அத்துடன் ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் என்பது எமது சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் தாக்குதலுக்கு உள்ளாக்கும் என்பது முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டும். மார்க்ஸ் **பட்டத்துவீரருக்கும், மருத்துவருக்கும்** இடையிலான உரையாடலில் எவ்வாறு பணவீக்கம் ஏற்படும் போது எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை இதன் மூலம் வெளிப்படுத்துகின்றார்.) முரண்பாடுகள் என்பது புதிய முரண்பாட்டை ஏற்படுத்துகின்றன. அதாவது ஒரு முரண்பாட்டின் உதைப்பு இன்னொரு முரண்பாட்டை உருவாக்குகின்றது. ஒவ்வொரு முரண்பாடுகளும் சிக்கலுடையவைகளாக இருக்கின்ற வேளை புதிதாக உருவாகும் முரண்பாடுகள் முன்பிருந்த முரண்பாட்டை விட சிக்கல் உடையதாகின்றது. அத்துடன் பழைய முரண்பாடுகள் பகையற்றதாகவும் மாறுகின்றது.

கடந்த காலத்தில் ஆய்வாளர்கள் அகவுணர்விற்கு முக்கியத்துவம் கொடுத்து சமூகத் தன்மைகளை தமக்கு ஏற்றாற் போல் மார்க்சியப் புரிதலைக் கொண்டு, அச் சமூகத் தன்மைகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாதவாறு தமது அறிவினை பயன்படுத்தி, சமூக விஞ்ஞானத்தை பிரதியிட்டனர். **இந்நிலை தொடர்வதை அனுமதிக்க முடியாது** இவைகள் தனியே விமர்சிப்பது மாத்திரமே தொழிலாகக் கொண்டவர்களின் செயற்பாடுகளே இவர்கள் நடைமுறையை விட்டு தனியே விமர்சிப்பது மாத்திரம் தொழிலாக கொள்கின்ற போது முன்னேற்றம் எதுவும் இல்லாமல் பலவீனப்படும் நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால், ஆய்வு முயற்சிகள் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின் தலைமையின்கீழ் நடைபெற வேண்டும். இல்லாவிடின் அனைத்தும் தன்னியல்பிற்கு உட்பட்டதாகவே அமைந்து விடுவதால், தீங்காகி விடுகின்றது. அத்துடன் முரண்பாட்டை சரியாகக் கணித்துக் கொண்டு ஒடுக்கப்பட்ட வர்க்கம் தன்னுடைய விடுதலைக்காக அந்த முரண்பாட்டை தீர்ப்பதற்காக வழிகாட்டும் தத்துவமாகிய மார்க்சியத்தை கையில் எடுத்து, அதனை நடைமுறைப்படுத்தும் போதே, அது திரிபுக்குள்ளாகாமல் சரியான முறையில் பாதுகாக்கவும், வெற்றி பெறவும் முடியும்.

மனிதனுடைய தேவைகளில் அதிகமானவைகள் இந்தச் சமுதாயத்தின் நிலை காரணமாக அந்நியப்பட்டுள்ளது. இந்த நிலை காரணமாக உணர்வுகளுக்கு முக்கித்துவம் கொடுத்து முடிவெடுப்பது இன்றைய உலகில் சாத்தியமானதாக இருக்க முடியாது. உணர்வுகளை முக்கியப்படுத்தி அவற்றை அனுமதிக்க இச்சமூக அமைப்புக்கு முடியுமாயின் இச்சமூகத்தின் சுரண்டலுக்கு அத்திவாரமாக இயங்குகின்ற சமூக அமைப்புகள் மாற்றமடைந்து, சுரண்டும் வர்க்கம் இல்லாது ஒழிந்திருக்க வேண்டும். இப்படி இருக்கையில் இது தனிநபர் மட்டத்திலோ அல்லது தேசியங்கருதிய மட்டத்திலேயான எண்ணப்பாட்டிலோ சாத்தியமாகாது. இங்கு கருதுவது என்னவெனில் எமது விருப்பங்களின் அடிப்படையில் அமைந்த தேவைகள் என்பன பூர்த்தி செய்ய இந்தச் சமூக அமைப்பு இடம் தரமாட்டாது. அப்படியான நிலையில் எதனை அடிப்படையாகக் கொண்டு எமது செயற்பாடுகள் இடம் பெறவேண்டும் என்பது நடைமுறைப் பிரச்சினையாகும்.

ஆக இந்த பிரச்சினையை புரிந்து நடந்து கொள்கின்ற போது அவற்றின் அடிப்படைக் காரணம் அகத்தில் தான் இருக்கின்றது. ஏனெனில் புறத்தின் தாக்கம் காரணமாக அகத்தில் தோன்றுவது இந்தச் சமுதாயத்தின் பிரதிபலிப்பானவைகளாகவே இருக்கும். இதன் காரணமாக அகத்தின் வெளிப்பாடு இந்தச் சமுதாயக் கட்டமைப்பிற்கு உட்பட்டதாகவே இருக்கும். அகத்தின் வெளிப்பாடு இருக்கின்ற சமுதாயத்தின் வெளிப்பாடான கருத்தியல் கொண்டதாகவே இருக்கும். புறநிலையைக் கவனித்தால் மாத்திரம் போதாது எவ்வாறு மாற்றுவது என்பது முக்கிய பிரச்சினையாகின்றது.

## 1.1.3.2 புரிந்து கொள்ளல் பற்றிய பிரச்சினை

மார்க்சியத்தை புரிந்து கொள்வதில் பல சிரமங்களைக் கொள்ள வேண்டியிருக்கின்றது. மூலவர்களின் கருத்துக்களை மொழிபெயர்த்து விட்டவர்களில் ரஷ்யா மொழிபெயர்ப்புச் சேவை முக்கிய பாத்திரம் வகித்திருக்கின்றது. இவர்கள் மொழி பெயர்க்கும் போது ரஷ்யா மொழிப் பரிட்சத்தின் காரணமாக அந்த மொழியின் சொல் அமைப்பின் தாக்கம் மொழி பெயர்ப்பில் ஆழுமை செய்வதனால் மொழி பெயர்ப்பின் வசன அமைப்பு ரஷ்யா மொழி எச்சத்தைக் கொண்டிருக்கின்றது. இதனால் அவ்வாறான மொழி பெயர்ப்புப் புத்தகங்களை படிப்பதில் சிரமங்கள் இருக்கின்றன.

அடுத்து மேற்கு ஐரோப்பாவின் சிந்தனை வளர்ச்சியின் வரலாற்றுப் போக்கினையும், வரலாற்றையும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. ஏனெனில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் போன்றோர் ஐரோப்பாவை மையமாகக் கொண்டே அவர்களின் ஆய்வுகள் அமைந்திருக்கின்றது. வரலாற்று பற்றி குறைந்த பட்ச முன்னறிவு இல்லாமல் மூலவர்களின் நூல்களைப் படிப்பதில் சிரமம் இருக்கின்றது.

சாதாரணமாக சோசலிசம் பற்றி விவாதம் மேற்கொள்ள முயற்சி எடுக்கும் போது ரஷ்யாவில் இப்படி நடந்தது, இது சரியா பிழையா இதற்கு என்ன பதில் என்ற கேள்விகள் எழும்பி விடுகின்றது. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. சோசலிசம் பற்றி பல எதிர்ப்பிரச்சாரம் இருக்கின்றன. இந்தப் பிரச்சாரங்கள் பல முனைகளில் செய்யப்பட்டன. கிருத்தவ மத பீடத்தை எடுத்துக் கொண்டால் கோவிலில் கடவுளிடம் இரந்திக் கேட்கும் மன்றாட்டு வகையில், ரஷ்யா மனம் திரும்பும்படி மன்றாடப்பட்டது. சோசலிசம் என்றால் சொத்துக்கள் இருக்காது இப்படி பல்வேறு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பிரச்சாரங்கள் ஒடுக்கும் வர்க்க இயந்திரங்கள் தான் மேற்கொண்டன. பல சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு நிகழ்வுகளை பற்றியே பதில் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

வெளிநாட்டு நிகழ்வுகள் பற்றி பதில் கொடுக்க வேண்டிய தேவை மற்றைய சித்தாந்தங்களை விட மார்க்சியத்திற்குத் தான் இந்த நிலை எற்பட்டது. இதற்கு கவனம் செலுத்திய மார்க்சியர்கள் பல குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாக வேண்டியிருந்தது. ரஷ்யாவில் மழை பெய்தால் நமது நாட்டில் குடை பிடிப்பார்கள் என்று பழமொழியாகவே சொல்லப்பட்டது. தற்பொழுதைய பொதுவுடமை வாதிகள் பற்றி தற்காலத்து ஒருவரின் கருத்தைப் பார்ப்போம். "20 வருடங்களுக்கு முன் இருந்த கம்யூனிஸ்டுகளின் நடைமுறை மாறிவிட்டது. இப்போ தான் மக்களை அவர்கள் நெருங்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே அவர்களை நோக்கி மக்களும் செல்கிறார்கள். முன்பு கம்யூனிஸ்ட் மேடைகள்

கணக்கீ குத் தீர்ப்பவையாக இருக்கும். வேறு நாடுகள் பற்றியே பேசுவார்கள். நம் பிரச்சினைகள் குறித்துப் பேசாததால் இவர்கள் வெளிநாட்டு ஆசாமிகள் என்பது போல் இருந்தது. மக்கள் மிகவும் ரசனையானவர்கள். இசை, பாட்டு எல்லாம் அவன் உணர்வோடு கலந்தது. கம்யூனிஸ்ட்கள் இப்போது தான் உணர்ந்திருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் நிச்சயம் வெல்வார்கள் என்று நம்புகின்றேன்." (பக் 14. மணிவண்ணன், தமிழர் கண்ணோட்டம் July/Aug. 1996) என தமிழக நடிகர் கூறுகின்றார்.

மக்களை சகதியிலேயே கிடக்கவும், பகுத்தறிவைக் கூட வளர்க்க இடைஞ்சலாக, அவரின் பட உலகமும் ஒரு காரணம் என்பதை அவர் அறியாதது, துரதிர்ஸ்டம். எனினும் கடந்த காலத்தில் மார்க்சியர்கள் பற்றி எவ்வாறு கருத்து இருந்தது என்பதை கவனித்தல் அவசியமாகும். விவாதங்கள் பதில் கொடுப்பது என்ற நிலையில் இருந்து மார்க்சிய விளக்கம் கொடுக்க முனைவதால் பிரச்சினையில் இருந்து விவாதம் ஆரம்பிக்கப்படாமல் விளக்கம் மேற்கொள்வதால் மார்க்ஸ் என்ன கருதினார் என்பதைக் கூட விளக்கப் படுத்த முடியாத இக்கட்டான நிலை ஏற்படுகின்றது. மக்களின் தாழ்ந்த நிலைக்கு என்ன காரணம் என்பது பற்றி அறிந்து கொள்ள சோசலிசம் பற்றிய போதனை அவசியமாகும். வெளிநாடு பற்றி பதில் கொடுக்கும் நிலையில் இருந்து தொடங்குவதன் காரணமாக உள்நாடு பற்றி போதிய கவனம் செலுத்தப் படவில்லை என்ற குற்றச் சாட்டு நிலைக்க காரணமாகியது.

இன்றைய நிலையில் குறைந்த பட்சம் மார்க்சியப் போதனையை போதிக்கும் முகமாக எமது மண்ணின் நிலை ஆய்வுக்குள்ளாக்கப்பட வேண்டும். உள்ளாக்கப்படுவதன் மூலமாக மார்க்சியம் புரிந்து கொள்வதில் இலகுவாக்கபடும் முயற்சி ஆரம்பமாகின்றது. ''மார்க்சின் தத்துவத்தை நாங்கள் முற்றும் முடிவான ஒன்றாய் மீறவொண்ணாத ஒன்றாய்க் கருதவில்லை. மாறாக, அது சோசலிஸ்டுகளுக்குரிய விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே கொடுத்திருக்கிறது. சோசலிஸ்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால் இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசையிலும் வளர்த்துச் செல்வது **அவசியம்** என்பதை நாம் ஐயமற அறிவோம். மார்க்ஸின் தத்துவத்தை **தன்னிச்சையாக முறையில்** அவை விரிவுபட வளர்த்திடுவது முக்கியமாய் ருஷ்யா சோஷலிஸ்டுகளுக்கு மிக்கதொரு தேவையாகுமெனக் கருதுகின்றோம். ஏனெனில் இந்தத் தத்துவம் பொதுவான **வழிகாட்டும்** கோட்பாடுகளையே அளித்திருக்கிறது, **தனிப்பட்ட முறையில்** அவை பிரான்சிலிருந்து வேறு விதமாய் இங்கிலாந்திலும், ஜேர்மனியிலிருந்து வேறு விதமாய் பிரான்சிலும், ருஷ்யாவிலிருந்து வேறு விதமாய் ஜேர்மனியிலும் கையாயளப்படுகிறவை.'' (பக் 54 லெனின் நூல் திரட்டு1) இங்கு மார்க்சியத்தை விரிவுபடுத்துவது எமது மண்ணில் தன்மைகளை ஆய்வு செய்வதும் அவற்றைக் கொண்டு மார்க்சியத்தினால் விளக்கம் கொடுப்பதுமாகும்.

தன்னிச்சையாக விரிவு படுத்துவது என்பது மேலை நாட்டுச் சரக்குகளை இறக்குமதி செய்வது என்பதல்ல. அவை அந்தந்த நாட்டின் நிலமைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப் பட்ட ஆய்வில் இருந்து பெறப்பட்ட ஆய்வாகும். விரிவுபடுத்துதல் என்பதன் பேரில் மார்க்சியத்தை தமக்கு சாதகமாக திரித்தலும் நடைபெறுகின்றது. எனவே மார்க்சியத்தை திரித்துக் கூறுவதற்கும், லெனின் கூறுகின்ற தன்னிச்சையான முறையில் விரிவுபடுத்துவதற்கும் மாறுபாடுகள் உண்டு. தன்னிச்சையாக முறையில், எமது மண்ணுக்கு ஏற்ற வகையில் பிரதியிடுதல் என்பது எமது சமூகத்தை ஆய்வு செய்வதன் மூலமே நிறைவேற்ற முடியும்.

# 1.2 பொருளாதார அமைப்பும் அதில் ஏற்படும் மாற்றங்களும்



இந்தப் பகுதியில் கையாளப்படும் மேற்கோள்கள் ஏங்கெல்ஸ் எழுதிய 'குடும்பம் தனிச்சொத்து அரசு' (கு.த.அ) ஆகியவற்றின் தோற்றம் என்ற புத்தகத்தில் இருந்து கையாளப்படுகின்றது. அதேவேளை இப்புத்தகமானது எமக்கு முற்பட்ட சமுதாயத்தைப் பற்றியதே. இது இந்தச் சமூகத்தில் எவ்வாறு பிரதியிட முடியும் அல்லது மேற்கோள்கள் பொருத்தமுடையதா என கேள்வி எழுப்பும் என்பது இயல்பானது. ஆனால் மேற்கோள்களை கையாளும் போது அவை இயங்கியல் ரீதியில் பிரதிபலிக்கின்றதா எனப் பார்த்தே பாவிக்க முற்படுகிறேன்.

ஒவ்வொரு சமுதாயங்களும் மாற்றம் அடையும் போது முன்பிருந்த நிலையானது மாறி புதிய நிலை ஏற்படும் போது ஏற்படும் மாற்றங்களிடையே ஒரு படிமுறை வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கும். ஒரு கட்டத்தில் இருக்கும் சுதந்திரமும் உரிமைகளும் மாற்றம் பெறும், இழக்கப்படும். இன்னும் மேலே கூறப்போனால் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கியாளும் சமூகத்திலே சமூக உறுப்பினர்களுக்கு இருந்த நிலை என்பது மாற்றமடையும். அதேபோல் வர்க்க ஒடுக்குமுறை, சமூக படிமுறை, புதிய வர்க்கம் தோன்றுதல், பெண்களுக்கு இருந்த இடம் என்பது மாற்றமடைகிறது. ஒடுக்கு முறை எவ்வாறு இந்த சமூக உற்பத்தி முறை அமைப்பில் உள்ளதோ அதற்கேற்றாற் போல் ஒடுக்கு முறையும் அச்சமுதாயத்தில் இருக்கும். ஆகவே ஒடுக்கு முறை என்பது எல்லா காலத்திலும் ஒரே அளவில், பருமனில் இருக்கமுடியாது. இது வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் சிந்திக்கும் போது புலப்படும். இங்கே குலச் சமுதாயத்துடனேயே ஆரம்பிக்கப்படுகின்றது. குலச்சமுதாயத்திலிருந்து தொடங்குவதன் மூலம் வர்க்கங்களின் உருவாக்கம், வேலைப் பிரிவினை, இன்னும் பல உள்ளடக்கக் கூறுகளை புரிந்துகொள்ள இலகுவாக இருக்கும்.

## 1.2.1.1 நான்கு உற்பத்தி முறை

இந்த உலகவரலாறு (புராதன கம்யூனிச சமூதாயம் தவிர) வர்க்கப் போராட்டங்களின் வரலாறு. இவ்வகையில் மார்க்ஸ் நான்கு வகையான உற்பத்தி முறைகளை விபரிக்கின்றார்.

ஆதிப் பொதுவுடமை சமுதாயம் அல்லது ஆசிய உற்பத்தி முறை,

அடிமைச் சமுதாய உற்பத்தி முறை,

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை,

முதலாளித்துவ உற்பத்தி முறை

இச்சமூக உற்பத்தி முறையினூடே பார்ப்போமாயின் புராதன கம்யூனிச சமுதாயத்தில் இயற்கைக்கும் மனிதனுக்கு இடையேயான போராட்டமும், அடிமையுடமை சமுதாயத்தில் அடிமைகளுக்கும் அடிமை உடமையாளனுக்கும் இடையேயான போராட்டமும், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் நிலப் பிரபுக்களுக்கும், பண்ணை அடிமைகளுக்கும் இடையேயான போராட்டமும், முதலாளித்துவத்தில் பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயான போராட்டமும் காணப்பட்டன.

உற்பத்தி முறை பற்றிய கருத்தில் எப்பொழுதும் அவர்கள் தொங்கிக் கொண்டிருக்கவில்லை என அறியமுடிகிறது. "மார்க்ஸ் உடைமையின் முதல் வடிவம் பூர்வகுடி (stammeigentum) உடமையாகும். உற்பத்தியின்

வளர்ச்சியற்ற கட்டத்துக்கு இது பொருத்தமானது, இந்த கட்டத்தில் மக்கள் வேட்டையாடுதல் மீன்பிடித்தல் மூலமும், விலங்குகளை வளர்த்தல் அல்லது ஆக உயர்ந்த கட்டத்தில் விவசாயம் மூலமும் வாழ்ந்து வந்தனர்.'' (பக்.23 தேர்வு நூல்கள் 1) ஏங்கெல்ஸ் பின்வருமாறு கூறுகிறார். "அதாவது வரலாறு அனைத்தும். வரலாற்றுக்கு முற்பட்ட சமுதாயம் குறித்து, எழுத்தில் பதிவாகியுள்ள வரலாற்றிற்கு முன்பு நிலவிய **சமூக** ஒழுங்கமைப்புக் குறித்து, 1847 இல் அனேகமாய் ஏதும் அறியப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பிற்பாடு ஹாக்ஸ்த் ஹாவுசன் ருஸ்சியாவில் நிலம் பொதுவுடமையாய் இருந்தது என்று கண்டு பிடித்தார், டியூட்டானிய இனங்கள் யாவுமே நிலத்திலான பொதுவுடமையாகிய இந்தச் சமூக அடித்தளத்தில் இருந்து தான் வரலாற்றை ஆரம்பித்தனர் என்று மௌரர் நிருபித்துக் காட்டினார், இந்தியாவில் இருந்து அயர்லாந்து வரை எங்குமே நிலத்தைப் பொதுவுடமையாகக் கொண்ட கிராம சமுதாயங்கள் தான் சமுதாயத்தின் புராதன ஆதி வடிவமாய் இருக்கிறது அல்லது இருந்திருக்கிறது என்பது நாளாந்த வட்டத்தில் தெரியலாயிற்று. இவற்றிற்கு எல்லாம் மணிமுடி வைத்தாற் போல், **கணம்** என்பதன் மென்மையான தன்மையையும் அதற்கும் **பூர்வீகக்** குடிக்குமுள்ள உறவையும் மார்கன் கண்டுபிடித்தார்.'' (ப 41 – க. கட்சி அறிக்கை) கம்யூனிச அறிக்கையின் திருத்திய பதிப்பில் கூறுகிறார்.

அன்றைய காலத்தில் அரசியல் பொருளாதார அறிவியலில் நிபுணர்களாய் இருந்து ஆசான்களுக்கு அவர்களின் கருத்தை மேலும் உறுதி செய்து கொள்ள மற்றைய அறிஞர்களின் கண்டுபிடிப்பு உதவியாக இருந்தது. கணம் பற்றிய அறிவு என்பது சமூகத்தை நுண்ணியல் ரீதியாக ஆய்வு செய்யும் பொருட்டு துணைபுரிகின்றது.

இன்று உள்ளது போல் குடும்பம் என்பது முன்பு இருக்கவில்லை இன்று ஒருவீட்டில் தாய் தகப்பன் பிள்ளைகள் வாழ்கின்றனர். ஆனால் அன்று இவர்களை விட குடும்ப அங்கத்தவர்கள் பலர் கூடி வாழ்ந்தனர். குலச் சமுதாயமானது உருவாக முன்பாக சிறுசிறு குழுக்களாக கூடி வாழ்ந்து தமது தேவைகளை பூர்த்தி செய்து வந்தனர். அவ்வாறு கூடி வாழ்கின்ற போது தான் அந்தச் சமுதாயத்தில் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். இவை எந்த அலகை (scale) மையமாகக் கொண்டு உற்பத்தி முறையில் ஈடுபடுகின்றது என்பதை வைத்தே நிர்ணயம் செய்யப்படுகின்றது. "வீட்டுச்சமூகம் தான் ஆதியில் இருந்தது. அதில் சில தலைமுறைகள் அல்லது தனித்தனி குடும்பங்கள் அடங்கும். அநேகமாக சுதந்திரமில்லாத பலரும் இருந்தார்கள்.'' (பக் 98. கு.த.அ.ஆ.தோற்றம்) கூடி வாழ்கின்ற மக்களுக்கு கூட்டுறவுச் சிந்தனை முக்கிய நிபந்தனையாக அமைகின்றது. இன்றைய காலத்தில் சிந்திப்பது போல் தனித்து வாழலாம் என்ற சிந்தனை தோன்ற இடம் இருந்திருக்காது ஆனால் சுயநலம் இருந்திருக்கும். பல உறவுமுறையைச் சேர்ந்த மனித கூட்டத்தின் தொகுதியே குலமாகும். குலம் எனும் போது சில சமூக, உலகக் கண்ணோட்டம் மூலம் ஒன்றாக இணைக்கப்பட்ட அலகாகும்.

மார்க்ஸ் வகைப்படுத்தும் உற்பத்தி முறைகளில் இருந்து சமூகத்தை ஆய்வு செய்ய முடியாது என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சமூகத்தை முழுமையாகவும், நுண்ணியல் ரீதியாகவும் ஆய்வினை மேற்கொள்ள முடியும். கணம் கொண்டுள்ள உற்பத்தி உறவுகளை ஆய்வு செய்வதன் மூலம் சமூகத்தின் சிறிய அலகுகளை விளங்கிக் கொள்ள உதவியாக இருக்கின்றன. பண்டைய சமுதாயம் பற்றிய அறியும் நோக்கோடு விபரமாக ஏங்கெல்ஸ் இனால் எழுதப்பட்ட கு.த.அ.ஆ.தோற்றம் என்ற மானிடவியல் அணுகுமுறையைக் கையாளுகின்ற படைப்பாகும். இந்தப் படைப்பு எல்லாக் காலத்து சமுதாயங்களை விளங்கிக் கொள்ள துணைபுரிகின்றது.

## 1.2.1.2 குலச் சமுதாயம்

குலச் சமுதாயத்திற்கு அடிப்படையானது உறவு முறையாகும். இந்த உறவு முறையை மையமாகக் கொண்ட சமூக அமைப்பானது ஏடறிந்த வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே எற்பட்டது எனலாம். இன்றைக்கும் பல இனக்குழுக்கள், குலங்களாக வாழ்கின்றன. இந்த வாழ்க்கைக்கு அடிப்படையே உறவு முறையாகும். இந்தக் குலங்கள் இன்றைய எமது பார்வையில் நாகரீக மற்றவர்களாக இருக்கலாம். ஆனால் அதுவே அவர்களுக்குரிய நாகரீகமாகும். இன்றைக்கும் வேட்டையாடத் தெரியாத இனக்குழுக்கள் இருக்கின்றன. பளியர் என்ற இனக்குழுவினருக்கு வேட்டையாடத் தெரியாது. "காட்டிலுள்ள செந்நாய்கள், மான் போன்ற விலங்குகளை வேட்டையாடித் தின்று கொண்டிருக்கும் போது அவற்றை விரட்டிவிட்டு எடுத்துக் கொள்வார்கள்'' (பக் 84. பதிப்பாசிரியர் வானமாமலை மக்களும் மரபுகளும்) இன்றும் இலங்கையிலும் வேடர்கள் இருக்கின்றனர். இவர்களும் இன்றைய யுத்த சூழ்நிலை, சனப்பெருக்கம், தமிழ், சிங்கள மக்களின் காணி ஆக்கிரமிப்பு போன்றவற்றால் அவர்கள் வாழ்க்கை முறை மாறப்பட்டிருக்கும். இவர்கள் வாழ்க்கையும் உறவை அடிப்படையாக கொண்டது தான்.

உறவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடமைகளையும் பொறுப்புக்களையும் விலக்களிக்கப்பட்ட நியதிகளையும் கொண்டு வந்துள்ளது. தன்னியல்பிற்குரிய அமைப்புருவமாகவே இருக்கின்றன. சகோதரி சகோதரர்களுக்குமிடையேயான பொறுப்புக்கள். மற்றும் எவருடன் உடலுறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வரையறை, சகலனுக்கம், சகலிக்குமிடையேயான உறவு, என்பது விசேடமானதாகும். அதாவது சகலனும் சகலியும் சகோதரர்கள் என்ற கருத்தமைவுக்குட்பட்டு சமூக உறவுகளில் ஈடுபடுகின்றன.

தவறு எனப்படும், தவறுகள் ஏற்படும், ஆனால் எல்லாக் கால கட்டத்திலும் தூய்மையாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. அதேவேளை மனித வரலாற்றில் விரும்பியோ விரும்பாமலோ குறிப்பிட்ட சமூக உறவுகளில்

அனைவரும் ஈடுபட்டே ஆகவேண்டும். அதேவேளை இன்றைக்குள்ள சமூக உறவுகளை வைத்துக் கொண்டு அன்றைய சமூக நிலையில் மிகவும் பின் தங்கியும், உரிமை இல்லாதிருந்தனர் எனவும் வாதிட முடியாது. "**குடும்பம் என்பது இயக்கமுள்ள கோட்பாட்டைக் குறிக்கிறது. அது ஒரு போதும் இயங்காதிருப்பதில்லை. சமூகம் கீழ் நிலையில் இருந்து மேல் நிலைக்கு முன்னேறுகின்ற பொழுது அதுவும் கீழான வடிவத்தி லிருந்து மேலான வடிவத்திற்கு முன்னேறுகிறது. அதற்கு மாறாக, இரத்த உறவு முறைகள் இயக்கமற்றவை. அவை குடும்பம் அடைகின்ற முன்னேற்றத்தை நீண்ட இடைவெளி விட்டு குறித்து வைக்கின்றனர். குடும்பம் தீவிரமாக மாற்றம் அடைந்து விட்ட பொழுது மட்டுமே அவையும் தீவிரமாக மாறுகின்றன**'' என்று மார்கன் கூறுகின்றார். **இது அரசியல், சட்ட, சமய, தத்துவஞான அமைப்புக் களுக்கும் பொதுவாகவே பொருந்தும்.** என்று மார்க்ஸ் இத்துடன் சேர்த்துக் கொள்கின்றார். குடும்பம் தொடர்ந்து வளர்ந்து வரும் பொழுது இரத்த உறவு முறை கட்டிதட்டிப் போகிறது'' (பக்கம் 50 கு.த.அ ஆகியவற்றின் தோற்றம் – ஏங்கெல்ஸ்)

குலச் சமுதாயத்திற்கு இரத்த உறவில் அமைந்த நிறுவனம் என்பது அந்த சமுதாயத்தைக் காத்து வந்தது. அதாவது இரத்த உறவை அடிப்படையாகக் கொண்ட குறுக்கு நெடுக்கு (cross/ multiplex relation) உறவுமுறை ஒத்துழைத்தது. இக்குலங்கள் என்பது ஒரு இனக் குழுவிற்குள் அடங்கப்பட்டதே, எனவே ஒரு இனக்குழுவிற்குள் பல குலங்கள் இருக்க முடியும். ஒரு குலம் மற்றைய குலங்களுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தி பரிமாற்றத்தை மேற்கொள்கின்றன. அதேபோல் ஒரு இனக் குழு மற்றைய இனக்குழுவுடன் பரிமாற்றத்தில் ஈடுபடுகின்ற பொழுது மற்றைய இனக்குழுக்களின் கலாச்சாரங்கள், மொழி, பண்பாடு ஆகியவற்றை உள்வாங்கிக் கொண்டு விடுகின்றன. இந்நிலை என்பது தனிப்பட்ட குடும்பங்கள் தாமே பொருளாதார அலகுகளாக செயற்படும் போது ஏற்படுவதில்லை. மாறாக பொருளாதார பரிவர்த்தனையில் ஈடுபடுகின்ற போதே இது சாத்தியமாகின்றது. ஏனெனில் பரிவர்த்தனை என்பது அச்சமூகத்தில் வரையறுக்கப்பட்டதே.

## 1.2.1.3 குலச் சின்னம்

ஒவ்வொரு குலங்களும் தம்மகத்தே ஒவ்வொரு சின்னங்களையும், அடையாளங்களையும் கொண்டுள்ளன. அந்தச் குலச்சின்னங்களின் பெயர்கள் என்பது அதன் புவியியல் இருப்பில் இருந்து வேறுபடுகின்றன. குலங்களை அப்பெயர் கொண்டு அழைப்பது இன்று வரைக்கும் வரலாற்றில் காணப்படுகின்றன. அன்றைய காலத்தில் தமிழ் மக்கள் மரங்கள், (நாவல் மரம்) புலி, கயல், மலைகள், கல், மீன், கலப்பை போன்றவற்றை தமது குலச்சின்னமாக கொண்டுள்ளனர். அத்துடன் ஒவ்வொரு குழுக்களும்

மணமுறைகளை வரையறுத்துக் கொள்கின்றன. குலங்களில் அக – புற மணமுறையைக் கொண்டுள்ளன. ஆனால் இந்த மணமுறைகள் காலத்துக்கு காலம் மாறுபட்டு வந்துள்ளது.

அதேபோல் மற்றைய குலங்களை வடுச்சொல்லி அழைப்பதையும் காணமுடிகின்றது. குலங்களாக இருக்கின்ற போதும், அதன் பின்னர் இனக் குழுவாக வளர்ச்சிடைந்த பின்னர் குலங்களில் முன்னர் இருந்த பழக்கவழக்கங்கள் விசித்திரமானதாகவும் தவிர்க்கப்பட்டதாகவும் ஆகின்றது. அப்போது தவிர்க்கப்படுபவை குலங்களின் நல்லொழுக்கத்தின் வெளிப்பாடாக உருவாகின்றது. வளர்ச்சிப் போக்கில் குலங்களால் தவிர்க்கப்படுபவைகளை, குல உறுப்பினர்கள் பின்பற்றுகின்ற வேளையில் அவற்றை இழி செயல் செய்யும் பரம்பரை என்ற வடுச்சொல்லை, அந்த குறிப்பிட்ட தனிநபர் அல்லது அவர் சந்ததி பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை என்பது தொன்மையான காலங்களின் இருந்து நிகழ்ந்து கொண்டிருக் கின்றது. (வளர்ச்சிடைந்த இன்றைய சமுகத்தில் சாதிகளையும், மலையக மக்களை, சிங்கள, முசுலீம் மக்களை வடுச்சொல் மூலம் இன்றும் அழைப்பதைக் காணலாம்) குலங்களில் இருந்து நேரிடையாகவே சாதி என கொள்ளப்பட்டவைக்கும், வேலைப் பிரிவுகளினால் அமைந்து கொண்டு சாதிகளிடையேயும் குலச் சமூதாயத்தின் அனைத்து சமூகக் கூறுகளிலும் எச்சங்களாக இவற்றை இன்றைய சாதியத்தில் இன்னும் காணலாம்.

## 1.2.2.1 வேலைப்பிரிவினை

வேலைப்பிரிவினை ஒவ்வொரு உற்பத்தி முறைகளுகளைத் தங்கியிருக்கின்றது. உற்பத்தி முறைகள் என்றின்ற போது நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகிய இரண்டு பொருளாதார உற்பத்தி முறைகளுக்கும் இடையேயான வேலைப் பிரிவினை மாற்றம் உடையதாக இருக்கும். சமூக உற்பத்தியில் மேற்கொள்ளும் உற்பத்தி முயற்சியில் எவ்வகையான நபர்கள் பங்களிப்பினை வழங்கி உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள் என்பதைக் குறிக்கின்றது. வேலைப்பிரிவினை என்பது எந்த எந்த சமூக அமைப்பைக் கொண்டதாக இருக்கின்றதோ அதன்படியே இருக்கும். ஆரம்பத்தில் இருந்த வேலைப்பிரிவினை என்பது பால், வயது என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இருந்தது. ஏனெனில் இது சிறிய அலகைக் கொண்ட சமுதாயம் இங்கு வேலைப் பிரிவினை என்பது வளர்ச்சி அடையவில்லை. மாறாக **“மார்க்ஸ் கூறுவது போல் குழந்தை பெறுவதற்காக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேலைப் பிரிவினைதான் முதல் வேலைப் பிரிவினையாகும். இத்துடன் நான் பின்வருமாறு சேர்த்துக் கூறுவேன், வரலாற்றில் தோன்றிய முதல் வர்க்கப்பகைமை ஒரு தார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பகைமை வளர்வதுடன் பொருந்துகிறது, முதல் வர்க்க ஒடுக்கு முறை பெண்பாலை ஆண்பால் ஒடுக்குகின்ற ஒடுக்குமுறையுடன் பொருந்துகிறது. ஒரு தார மணமுறை வரலாற்று ரீதியில் மகத்தான முன்னேற்றமாகும். ஆனால் அதே**

**சமயத்தில் அது அடிமை முறையுடனும் தனிச் சொத்துடனும் சேர்ந்தாற் போலவே இன்றளவும் நீடிக்கின்ற ஒரு யுகத்தைத் தொடங்கியது. அந்த யுகத்தில் ஒவ்வொரு முன்னேற்றமும் அதேபோல் சார்பு நிலையில் ஒரு பின்னடைவாகவும் இருக்கின்றது. அதில் ஒரு குழுவின் துன்பத்தையும் ஒடுக்கப்படுதலையும் ஆதாரமாகக் கொண்டு மற்றொரு குழு நல்வாழ்கையும் வளர்ச்சியும் அடைகிறது. அது நாகரீக சமுதாயத்தின் உயிரணு வடிவமாகும். அதன் மூலமாக, அந்தச் சமுதாயத்தில் முழுவளர்ச்சி அடைகின்ற பகைமைகளின், முரண்பாடுகளின் தன்மையை நாம் ஏற்கனவே ஆராய முடியும்.**'' (ஏங்கல்ஸ் ப.108 கு.அ.த.தோ)

நாடோடி வாழ்க்கை முறையைக் கொண்டு வாழ்ந்தவர்கள், தமது கால்நடைகளின் மூலமாகப்பெற்ற உபரியைக் கொண்டு நிரந்தர குடியிருப்பை நோக்கிசென்று தம்மை நிலை நிறுத்திக் கொண்டார்கள். அதேவேளை பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் போது போட்டி ஏற்படுகிறது. அதாவது நாடோடி வாழ்கையில் ஈடுபட்ட பின்னர் நிரந்தர குடியிருப்பை அடைந்தனர். அடுத்து குடியிருப்பை அமைத்து இவர்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகருகின்றனர். நகருகின்ற பொழுது மற்றைய குழுக்களுடன் மோதலுக்கும் இடமுண்டாகின்றது. இக்கட்டத்திலே தான் விவசாயத்தை நோக்கி வளர்கின்றனர். விவசாய வளர்ச்சிக் கால கட்டத்தில் தான் மனித குலத்தின் உயர்ந்த கலாச்சாரக் கட்டத்தை நோக்கி காலடி வைத்தனர். "இரண்டாவது மாபெரும் உழைப்புப்பிரிவினை ஏற்பட்டது. விவசாயத்திலிருந்து கைத்தொழில்கள் பிரிந்தன. உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்தது, அதனுடன் உழைப்புச் சக்தியின் மதிப்பு உயர்ந்தது. முந்திய காலகட்டத்தில் ஆரம்ப நிலையிலும் அங்குமிங்குமாகவும் இருந்த அடிமை முறை இப்பொழுது சமூக அமைப்பின் ஒரு முக்கியமான பகுதியாகிவிட்டது. அடிமைகள் வெறும் உதவியாளர்களாக இருந்த நிலைமை மாறிவிட்டது அவர்கள் பட்டறைகளிலும் வேலை செய்வதற்குக் கூட்டம் கூட்டமாக அனுப்பப்பட்டார்கள். உற்பத்தி. விவசாயம், கைத்தொழில் என்னும் இரண்டு மாபெரும் கிளைகளாக பிரிந்ததிலிருந்து பரிவர்த்தனைக்கு உற்பத்தி செய்யும் முறை, அதாவது பண்ட உற்பத்தி முறை பிறந்தது. அத்துடன் வர்த்தகமும் வந்து சேர்ந்தது. அது இனக்குழுவுக்குள் மட்டுமல்ல, இனக்குழுவின் எல்லையோரங்களில் மட்டுமல்ல கடல்கடந்த நாடுகளுடனும் நடைபெற்றது. இவையெல்லாம் இன்னும் மிகவும் வளர்ச்சி குன்றிய நிலையில்தான் இருந்தன. சர்வப்பொதுவான பணப்பண்டம் என்ற முறையில் தங்கமும் வெள்ளியும் முதன்மை அடைந்தன. எனினும் நாணயங்கள் இன்னும் அச்சிடப்படவில்லை. எடையைக் கொண்டுதான் அவை பரிவர்த்தனை செய்யப்பட்டன.

சுதந்திரமான மனிதன், அடிமை என்ற வேறுபாட்டுடன் பணக்காரன், ஏழை என்ற வேறுபாடும் சேர்ந்து கொண்டது புதிய உழைப்புப் பிரிவினையுடன் சேர்ந்து வர்க்கங்களின் அடிப்படையில் சமுதாயத்தில் புதிய பிரிவினை ஏற்பட்டது. பல்வேறு குடும்பத் தலைவர்களின் செல்வத்தில் ஏற்பட்ட வேறுபாடுகள் பொதுவுடைமை வீட்டுச் சமூகங்களை – அவை எங்கெல்லாம் இனியும் இருந்தனவோ அங்கே – அழிந்துபோகச் செய்தன. இது சமூகத்தின்

சாதனங்களின் அடிப்படையில் நிலத்தைப் பொதுவில் பயிரிடுவதை முடிவுக்குக் கொண்டுவந்தது. விளை நிலம் தனிப்பட்ட குடும்பங்களின் உபயோகத்திற்கென்று, முதலில் ஒருகுறிப்பிட்ட காலத்திற்கும் பின்னர் சாசுவதமாகவும் கொடுக்கப்பட்டது இணை மணமுறையிலிருந்து ஒருதார மணமுறைக்கு மாறுவதுடன் சேர்ந்து முழுமையான தனியுடமைக்கு மாறுவதும் படிப்படியாகவும் அதேசமயத்திலும் நடைபெற்றது. தனிப்பட்ட குடும்பம் சமுதாயத்தின் பொருளாதார அலகு ஆயிற்று.'' (ப 267. கு.அ.த.தோ) இந்தியாவைப் பொறுத்தவரை நிலங்கள் பொதுமையாகவே இருந்தன. இவை காலப் போக்கில் நிலப்பிரபுத்துவம் வளர்ச்சி பெறவே நிலங்கள் தனியுடமையாகியது. ஆனால் முழுமையாக தனியுடமையாகவில்லை. உற்பத்தி சாதன வளர்ச்சி காரணமாக உற்பத்தி உறவுகளிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இந்த வளர்ச்சிக் கட்டத்தைப் போல் குடும்ப அமைப்பு முறையும் மாறுபடுகின்றது. குடும்ப அமைப்பானது வெவ்வேறுகால கட்டத்தில் வெவ்வேறு வடிவமாக இருக்கின்றது. பொருளாதார அலகிற்கு சேவகம் செய்கின்றது.

குடும்ப அமைப்பு முறையில் வேலைப்பிரிவினை எவ்வாறு இன்றைய சமூக அமைப்பில் உள்வாங்கியிருக்கின்றது எனப்பார்ப்போம். வளர்ந்து வரும் சமுதாயத்தில் பொருளாதார சுதந்திரத்தில் அவன் அல்லது அவள் ஒடுக்குமுறையைச் சகிக்க வேண்டி உள்ளது.

## 1.2.2.2 குடும்ப அமைப்பு

குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து வாழ்வது குடும்பமாக கருதப்பட்டது. இந்தக் குடும்பத்தில் பலர் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். இது அவர்களுடைய பரம்பரையை வளர்ப்பது கடமையாகவும், கட்டாயமாகவும் இருந்தது. ஆனால் தனியுடமைச் சமுதாயத்தின் உருவாக்கமானது கூட்டுச் சமுதாயத்தின் தேவையை இல்லாமல் செய்கின்றது. ஆனால் குடுப்பத்தில் முதல் உடைவினை ஏங்கெல்ஸ் கூறுகின்றார் அதாவது பெண்களே ஒரு தார மணத்திற்கு முயற்சி எடுப்பவர்களாக இருந்திருக்கின்றனர். பெண்கள் தாமிருந்த நிலையில் இருந்து அடுத்த கட்டத்திற்கு மாற முற்படுவது இயல்பானதாகவே காணப்படுகிறது.

இன்றைய உலகில் இதனைக் காணமுடியும் அதாவது எகாதிபத்திய சமூகத்தில் வாழும் பெண்கள் தமது சுமைகளில் இருந்து மீள்வதற்காக கருக்கலைக்கும் உரிமைக்காகப் போராடுகின்றனர். அதேவேளை அப்போராட்டத்திற்கு முன்னணியும் வகிக்கின்றனர். இந்தப் போக்கில் இருந்து அவதானிப்போமானால் ஒரு தார மணத்திற்கு முற்பட்ட சமுதாயத்தில் ஏற்பட்ட நெருக்கடியும், தமது சுமைகளில் இருந்து மீளும் பொருட்டும் போராட்டம் இடம்பெற்றுள்ளது. "**பொருளாதார நிலைமை களின் வளர்ச்சியின் விளைவாக, அதாவது பழைய சம்பிரதாய பாலியல் உணர்வுகள் தமது வெகுளித்தளமான, ப' ர்விகக் காட்டுத்**

**தன்மையை இழந்து வர வர அந்த உறவுகள் மேன்மேலும் தரக்குறை வாக, ஒடுக்குபவையாகப் பெண்களுக்கு தோன்றியிருக்க வேண்டும். அவர்கள் கற்புரிமைக்கு விடுதலை என்ற முறையில் ஒரு குறிப்பிட்ட ஒரு நபரைத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக திருமணம் செய்து கொள்வதில் வேட்கை கொண்டிருக்க வேண்டும். இந்த முன்னேற்றம் ஆண்களிடம் இருந்து தோன்றியிருக்க முடியாது. அவர்கள் நடைமுறைக் குழுமணத்தின் இன்பங்களைக் கைவிடுவதற்கு ஒருபோதும் - இன்றைய நாள் வரையிலுங் கூட- கனவுகூடக் கண்டதில்லை என்ற காரணமே இதற்குப் போதும். பெண்கள் முயன்று மணமுறையை நோக்கி மாற்றம் கண்ட பிறகு தான் ஆண்கள் கண்டிப்பான ஒரு தார மணத்தை - அது பெண்களுக்கு மட்டுமே என்பதை சொல்ல வேண்டியதில்லை- புகுத்த முடிந்தது.''** (ஏங்கெலஸ் கு.அ.த.தோ) இவ்வாறாக தோன்றி வளர்ந்த பண்பாட்டு மாற்றம் நிச்சயம் பொருளாதார நலனைக் கொண்டே அமைந்து விடுகின்றது. குடும்பம் என்கின்ற போது ஒரு பெண் பல கணவனை (Polyandry) மணந்து கொள்ளுதல், ஆண் பல பெண்களை மணந்து கொள்ளல் போன்ற குடும்ப நிலையும் இருந்து வந்துள்ளது. குடும்பம் பல வளர்ச்சிக் கட்டத்தை அடைந்துள்ளது. இது ஒவ்வொரு சமுதாயத்திலும் இருந்து மாறுபடுகின்றது.

குலச் சமுதாயத்தில் இருந்த போது நாடோடி வாழ்க்கை, வேட்டையாடி வாழ்பவர்கள் குழுக்களாக இருந்த போது பல பரம்பரையை கொண்ட உறுப்பினர்களை கொண்டது.

எமது சமுதாயத்தில் இருப்பதைப் போன்று தார்மீகக் கடமை, கூட்டுக் குடும்ப உறவுக்கு முக்கியத்துவம். இங்கு ஒரு பேரன் பேத்தியுடன் வாழும் பரம்பரை, அல்லது கணவனை இழந்த, திருமணம் செய்து கொள்ளாத சகோதரம் இவர்களுடன் வாழலாம்.

நகரங்களில் தொழில் முயற்சி காரணமாக செல்லும் போது தனியே நெருங்கிய உறுப்பினர்கள் மாத்திரம் ஒரு குடியில் வாழ்தல்

மேலை நாடுகளை எடுத்துக் கொண்டால் மணம் செய்யாது கூடி வாழ்கின்ற வாழ்க்கை முறை உள்ளது. அதேபோல் வெட்டக்காட இருளர் என்ற இனக் குழுவினர்களிடையே கூடி வாழும் பழக்கம் இருக்கின்றன. (130 பதிப்பாசிரியர் நா. வானமாமலை மக்களும் மரபுகளும்) ஆனாலும் மணமுடிக்காமல் இருத்தலாகாது. கூடி வாழ்வது இங்கே பிள்ளைகள் இருக்க வேண்டும் என்ற அத்தியாவசியம் இல்லை. இங்கே தனித்துவவாதம் முக்கிய நிபந்தனையாக அமைந்து விடுகின்றது. இவர்களிடம் குடும்ப உறுப்பினர்கள் எவரையும் பராமரிக் வேண்டிய தேவையில்லை.

தனியே பெற்றோர் பிள்ளை ஒரு வீட்டில் இருந்தாலும் வயோதிபர்களை கவனிக்கும் பண்பை தொடர்ந்தும் பேணுகின்ற குடும்ப முறை இது எமது நாடுகளில் உள்ளது போன்ற நகர்ப்புற வாழ்க்கை முறையுடன் நெருங்கிய ஒற்றுமை இருப்பதாக கொள்ளலாம்.

குடும்ப உறவு முறை பொருளாதர உற்பத்திக்குத் தேவையான உற்பத்தி சக்தியின் தேவை கருதி நிர்ணயம் செய்யப்படுகின்றது. இன்றைய மேற்கு நாடுகளில் முழுமையாக, எமது நாட்டில் வளர்ச்சி அடையாது விட்டாலும் வயோதிபர்களை, சிறுவர்களைப் பராமரிப்பதற்கு (institutions) ஸ்தாபனங்கள் இருக்கின்றன. நவீன காலத்தில் இவர்கள் தேவையான உற்பத்தி திறனை வளர்த்துக் கொள்ள முடியாது செய்கின்றவர்கள். உற்பத்தி திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றால், உழைப்பாளிகள் அனைத்து விதமான தார்மீகக் கடமைகளில் இருந்தும் விடுதலை பெறவேண்டும்.

இன்றைக்கு நவகொலனிய நாடுகளான தேசங்களில் இது மறுஉற்பத்த 'யுடன் மாத்திரம் சம்பந்தப்படவில்லை, இது பயன்பாட்டு (விபரமாக பயன்பாட்டுப் பெறுமானத்தின் கீழ் பார்ப்போம்) பெறுமானத்துடனும் சம்பந்தப்பட்டுள்ளது. இது பெண்களை வீட்டில் வைத்திருப்பதன் மூலம் கூடுதல் லாபம் – உபரி பெறமுடியும். சமூகத்தினை உடைய விடாது பாதுகாப்பதில் அதாவது ஆதிக்க வர்க்கத்திற்கு விசுவாசமான சமூக அமைப்பை பாதுகாப்பதற்கு மிக முக்கியமாக உதவுகின்றது. பிள்ளைவளர்ப்பு முறை, நிச்சயமற்ற பொருளாதார அமைப்பு என்பது மனிதரின் மனோநிலையை பாதிக்க வைக்கக் கூடியதாகும். மனிதர்கள் சமூகத்தின் உறுப்பினராகையால் சமுதாயமேயே ஒவ்வொரு மனிதருடைய மனோநிலையை தீர்மானிக்கின்றது. சமுதாயத்தின் தாக்கம் என்பது குடும்பத்தை தாக்குகின்றது. இத்தாக்குதல் ஆனது குழந்தைப் பருவத்தை எதிர்காலச் சமுதாயத்தின் பிரதிநிதிக்குரிய, இந்தச் சமூதாயத்தைப் பாதுகாக்கக் கூடிய பிரசையாக உருவாக்குகின்றது.

இந்த சமூகத்தை கட்டிக்காப்பதற்குரிய நிறுவனமாக குடும்பம் திகழ்கின்றது. இவ்வடிப்படையில் முதலாளித்துவம் தனது சுரண்டலை தொடர்வதற்காக நிறுவனத்தை பாதுகாக்க முற்படுகின்றது. அதேவேளை **கருக்கலைப்பிற்கு எதிராக** ஏகாதிபத்திய நிறுவனங்கள் பிரச்சாரம் செய்வதுடன் மிகக்கடுமையாக எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துகின்றது, ஆனால் எமது நாடுகளில் பசி, பட்டினிக்கு, வேலையில்லாத் திண்டாட்டம், சமசீரான பொருளாதார வளர்ச்சியின்மை ஆகியவற்றிற்கு **சனத்தொகைப் பெருக்கம் தான் காரணம் (நவீன மல்தூசரிசம்)** என ஏகாதிபத்தியங்கள் மறைமுகமாக பிரச்சாரம் செய்கின்றன. இதற்கு உடந்தையாக **தன்னார்வக் குழுக்கள்** (தன்னியல்பைக் கொண்ட) செயற்படுகின்றன.

எமது சமூகத்தில் இருக்கின்ற சில பொருளாதார சிந்தனையோட்டத்தை இங்கு கவனிப்பது நல்லது தனிமனிதத்துவ சொத்து சேகரிப்புச் சிந்தனையில் இருந்து மாறுபட்டதாகும். அதாவது ஒருவர் அல்லது ஒரு குடும்பம் தமது உழைப்பை **இனாமாக** கொடுப்பது ஆகும். உதாரணமாக ஒரு வீட்டு வளவில் பல வீட்டுத் தேவையை நோக்கமாக கொண்டு மரக்கறிச் செய்கை செய்பவர்கள் அல்லது தென்னை மரங்கள் இருக்கின்றது என வைத்துக் கொள்வோம் அல்லது ஒரு கடல் தொழிலாளி மற்றவர்களிலும்

பார்க்க நல்ல மீன் பிடிக்கப்படுமாயின் உறவினர், பங்காளிகள் அல்லது உற்ற நண்பர்கள் அன்றைய தினம் பசியாக இருக்க நேரிடுமானால் பார்த்துப் பாராமல் தன்னிடம் இருப்பதை கொடுத்து விடுவார். இதனை ஒரு கடனாக கொள்வதில்லை. மாறாக இதனை வாங்கிக் கொள்பவரும் அதனை ஒரு செய்கடனாக கொள்வதில்லை. (சிந்தனை காலத்துக்கு காலம் மாறுவதையும் கவனிக்க வேண்டும்.) ஆனால் எப்பவாவது தன்னிடம் இருக்கின்ற போது அதேவேளை இன்னொரு அயலார், பங்காளிகள் தேவை ஏற்படும் போது தனது உழைப்பை இனமாக கொடுத்து விடுவார். கொடுக்கின்ற போது பலமடங்காக கொடுக்க வேண்டும் என்றோ அல்லது வாங்கப்பட்ட அளவே தான் கொடுக்க வேண்டும் என்பதல்ல. மாறான தன்னுடைய வசதிக்கு ஏற்ப கொடுக்க முடியும். இங்கு கொடுக்கல் வாங்கல் உறவில் மற்றைய மனிதர்களின் உழைப்பை சுரண்டப்படுவதில்லை. மாறாக இது ஒரு சமூகத்திற்கான பொருள் விநியோகம், மறுவிநியோக நீதி முறை சம்பந்தப்பட்டதாகும்.

இந்தச் சிந்தனையானது சுரண்டல் பொருளாதார சிந்தனை ஆழமாக பதிகின்ற போது இவ்வாறான சிந்தனைகளும் இல்லாது போகின்றது. மேலே குறிப்பிட்ட இனாமாக வளங்கும் நிகழ்வானது எதிர்பார்ப்பு இல்லாமல் நடைபெறுவதில்லை. முன்னே குறிப்பிட்டது போல பட்டினியைப் போக்க ஒருவருக்கொருவர் உதவும் நிகழ்வாகும். இவ்வாறன கொடுக்கல் வாங்கல்களை குறிப்பாக அந்தச் சமூகத்தின் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் தமக்கு அணிசேர்ப்பதற்கும் பாவிக்கும் நிலையும் தோன்றாமல் இல்லை. சமூகத்தில் எதிர்ப்பலனை எதிர்பார்த்து செயற்படும் போது அவர்களை பின்புறமாக கதை கூறுவதையும் கவனிக்க முடியும். இவ்வாறான நீதி முறையை உறவினர்களோ அல்லது பங்காளிகளே விமர்சிப்பர்.

மேலே குறிப்பிட்டது போன்ற பழக்க வழக்கங்கள் எமது சமூகத்தில் இருந்து இல்லாமல் போகவில்லை. இதில் எச்சங்கள் இருந்து கொண்டு தான் இருக்கின்றது. அவ்வாறான வேளையில் இன்றைய யுத்தநிலை, வெளிநாட்டுத் தொடர்புகள் அத்துடன் உலகமயமாதலுக்கு ஆளாகியிருக்கும் சமூகம் பழைய பொருள்உற்பத்தி, மறுபங்கீட்டு முறைகள், சமூக உறவில் ஏற்படும் மாற்றம் உட்பட பல சமூகத்தில் புதிய நீதி முறைகள் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப மக்கள் பின்பற்றிக் கொள்கின்றனர். இவ்வேளையில் புதிய பொருளாதார சமூக உறவிற்கும், பழைய பொருளாதார சமூக உறவிற்கும் இடையில் அன்னியப்பட்ட மக்கள் கூட்டம் இருக்கத்தான் செய்யும் அவ்வாறான போது ஏற்படும் சமூக முரண்பாடுகளை எவ்வாறு தீர்க்கப் போகின்றனர் என்பது பற்றியும் சமூக அக்கறை கொண்டவர்கள் புரிதல் கொள்ள வேண்டும்.



# 1.2.2.3 சாதியமும் வேலைப் பிரிவினையும்

சாதியமும் வேலைப் பிரிவினை பற்றி உரையாடுகின்ற போது அதன் கொடுமைகள் வார்த்தையில் சொல்லி அடங்கா. வேலைப் பிரிவினை மூலமாக உபரியை உருவாக்கின்றபோது அதன் கோரமான சுரண்டல் இடம் பெற்றிருக்கின்றன. சாதியமானது தனது கோரமுகத்தை பல வழிகளிலும் காட்டிடுவதில் முனைப்பாக இருந்து வந்துள்ளது. அச்சாதியின் கோரமுகமானது பொருளாதார நீதி முறை என்பது சாதிய நலனுக்கு உட்பட்டதாகவே இருந்து வந்துள்ளது. சாதியக் கொடுமையை தமக்குச் சாதகமாக பயன்படுத்தி பயன் பெற்ற வெள்ளை ஆதிக்கவாதிகளையும் எம்மூர் சாதிவெறியர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

இந்த மக்கள் காலம் காலமாக நசுக்கப்பட்டு வந்துள்ளதை கொலனித்துவ வாதிகளின் நடவடிக்கை என்பது சான்று பகர்கின்றது. யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிய மு. இராசநாயகம் '**ஊன்கடைகள் திறப்பதற்கு சனங்கள் மாறாயிருந்த படியால், கிறிஸ்தவராகிய சில நெடுத்தீவு பறையரைக் கொணர்ந்து கோட்டைக்குள்ளே ஊன்கடை திறந்து, தங்களுக்குரிய மாடுகளையே கொன்று தின்றனர்** (பக். 226 இராசநாயகம்') இந்த விதமாக உருவாக்கப்பட்ட நிலையை மக்கள் புரிந்து கொள்ளாமல் சாதி முறையில் அமைந்த வேலைப்பிரிவினைகள் எல்லாம் சதாகாலத்திலும் இருந்ததாக கொள்கின்றனர்.

ஒவ்வொரு சாதிகளும் ஒவ்வொரு தொழில்களின் ஈடுபட்டனர் எனக் கூற முடியாது. ஆனால் முடிசிகை செய்தல், துணிதுவைத்தல், போன்ற சில தொழில்களை ஒரு சாதியினர் மாத்திரமே தற்பொழுது செய்கின்றனர். இந்தச் சாதியப் பிரிவினையில் கீழ் அமைந்த வேலைப் பிரிவினை என்பது மற்றைய நாடுகளில் காணப்படும் வேலைப் பிரிவினை போல் அல்லாமல் இது மனுநீதியின் மூலமாக நியாயப்படுத்தப்படுகின்றது.

ஏங்கெல்ஸ் இந்திய சாதியத்தைப் பற்றிக் குறிப்பீடுகையில் பின்வருமாறு எழுதுகின்றார். "இந்திய குலச் சமூகங்களைச் சேர்ந்த நிரந்தரக் கைவினைஞர்கள் இன்னும் இப்படி வேலை செய்கிறார்கள். எப்படி இருப்பினும், அந்தக் கட்டத்தில் இனக்குழுவுக்குள் நடைபெற்ற பண்டப் பரிவர்த்தனையைத் தவிர வேறுவிதமான பண்டப்பரிவர்த்தனை தோன்றியிருக்க முடியாது, இனக்குழுவுக்குள் நடைபெற்ற பண்டப் பரிவர்த்தனையும் கூடவிதிவிலக்கான விடயமே.'' (259 கு.த.அ.தோ. ஏங்கெல்ஸ்) வேலைப்பிரிவினையானது ராசகாரியம் என்ற பெயரின் கீழ் மன்னர் காலத்தில் நடைமுறையில் இருந்தது. இதன் மூலமாக அரசர்கள் தமது தேவைகளை தீர்த்து வந்ததன் மூலமாக சமூகத்தை பிரித்து வைத்து ஆட்சி செய்தனர். இதன் மூலமாக சமூகத்தை மனுநீதியைக் கொண்டு இறைவனின்

பெயரால் நியாயப்பட்ட சாதியமானது. சாதாரண மக்களிடையேயும் பரவியிருந்ததால் ஒவ்வொரு சாதியினரும் தமக்கு கீழ் இருந்த சாதியினரை வைத்து தமது பொருளாதார நலனைப் பாதுகார்த்து வந்தனர். பிராமனிய சிந்தனையான மனுதர்மம், மனுநீதி ஆகியவற்றை பிற்கால நிலப்பிரபுத்துவ சமூகமானது தன்னகத்தே உள்வாங்கி தமது நலனுக்கு ஏற்றதாக பயனபடுததிக் கொண்டனர். எனினும் இலங்கையில் பிராமனிகளின் ஆதிக்கம் என்பது தலைகீழாகவே உள்ளது. சைவ வேளாளம் என்பது அந்த இடத்தை நிரப்பிக் கொண்டது.

சாதிகளைப் பார்க்கின்ற போது தொழில் வழியில் அமைந்த பெயர்களைக் கொண்ட சாதிகள், பழைய இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்ற குலங்களின் பெயர்களில் அமைந்த சாதிகள் இன்றைக்கும் இருக்கின்றன. இத்துடன் புற உலகத்துடன் பிற்பட்ட காலங்களில் தொடர்பு இனக்குழுக்களும் இருக்கின்றன. குலச்சமுதாயங்கள் தாம் முன்பிருந்த நிலையை விட்டு புதியநிலைக்கு மாற்றமும் கொண்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குலங்களாக இருந்த சமூகங்கள் பரஸ்பர தொடர்புகளின் மூலமாக மற்றைய சமூகத்துடன் இணைந்து கொண்டு புதிய சமூகமாக, அதாவது புதிய இனமாக உருவாகின்றது. ஆனால் இந்தியா, இலங்கை, போன்ற நாடுகளிலும் அதனைச் சுற்றிய அண்டைய நாடுகளில் மாத்திரம் தான் (Tribes) இனக் குழுவானது சாதிய வட்டத்திலுள் அடக்கப்படுகின்றது. இந்தச் சாதியத்தின் வேலைப்பிரிவினை என்பது நிலப்பிரபுத்துவத்தின் பின்னர் தான் எற்பட்டிருக்கும் இதனை பின்னால் வருகின்ற சாதியம் பகுதிகளில் பார்ப்போம்.

## 1.2.2.4 நிலப்பிரபுத்துவத்தின் காலகட்டம்

நிலப்பிரபுத்துவத்தில் அரசர்கள் ஆட்சியதிகாரத்தில் அமர்த்தப படுகின்றனர். குலத்தின் தலைவர்கள், பூசாரிகள், மந்திரவாதிகள் எழுதாத சட்டங்களைக் கொண்டு தமது குலத்தை வழிநடத்திக் கொண்டு வந்தனர். குலஅமைப்பு நிலப்பிரபுத்துவத்தால் விழுங்கப்பட்டாலும் அந்தச் சமுதாயத்திற்குரிய பழக்க வழக்கங்கள், பண்பாடுகளின் எச்சங்கள் நிலப்பிரபுத்துவத்தில் மாத்திரம் அல்ல, இன்றைய சமுதாயத்திலும் தொடர்ந்தும் வழக்கத்தில் இருந்து வருகின்றது. இவர்கள் கடந்த காலத்தின் மேன்மையை வைத்து மக்களை ஏமாற்றிக் கொண்டு தமது ஆட்சியை தொடர்கின்றனர். மக்கள் ஆண்டாண்டு காலமாக தம் முன்னோர்கள் தொடர்ந்து வந்த பழக்க வழக்கங்களை இந்தக் காலத்தில் தமது சட்டத்திற்கு முரணானது என பிரகடனம் செய்ய முடிந்தது. இந்தக் காலம் மன்னர்கள் தமது ஆட்சியுரிமைக்காக, தமது பதவியை நிலை கொள்ள வைப்பதற்காக யுத்தங்களை நடத்தி பழைய சமுதாயத்தின் பெருமைகளை அழித்தே வந்துள்ளனர். ஒவ்வொரு சமுதாயத்தின் மாற்றத்தின் போதும் பழைய

போக்கிற்கும் புதிய போக்கிற்கும் அனைத்து தளங்களிலும் மோதல்கள் இடம் பெற்றுத் தான் வந்திருக்கின்றது.

இன்னும் கூடுதலான விளக்கம் பெறும் பொருட்டு இன்னுமொரு உதாரணத்தையும் கீழே பார்ப்போம். வர்க்க சமூதாயம் தோற்றமுறும் போதே வேலைப் பிரிவினையின் பருமன் மாறுபடுகின்றன. வர்க்கங்களின் வளர்ச்சி சமூகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்த மாற்றத்தை அடைகின்ற இறுதி நிலையில் ஒவ்வொரு வர்க்கமும் தன்கைகளில் இரத்தத்தை பார்க்க வேண்டியது கட்டாயமாகும். நாம் உதாரணத்தில் புதிய வர்க்கம் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது எனப்பார்ப்போம். புதிய வர்க்கத்தின் தோற்றத்துடன் சமூதாயத்தில் இருக்கின்ற வேலைப் பிரிவினை அதிகரிக்கின்றன.

சிலப்பதிகாரத்திலே வர்த்தக குலத்தைச் சேர்ந்த கோவலனின் கொலைக்குப் பழிவாங்க அரச குலத்தை விட பலம் பொருந்திய நிலையில் இருந்த வர்த்தக குலத்தைச் சேர்ந்த கண்ணகி அரசனைப் பழிவாங்கினாள். அரசனைப் பழிவாங்க வேண்டுமானால் அதனைவிட பலம் பொருந்திய வர்க்கம் இருந்திருக்க வேண்டும். (இக்கருத்தை முன்னர் பல மார்க்சியர்கள் கூறியுள்ளனர்.) அதேபோல் பலம் பொருந்திய வர்க்கத்தைச் சேர்ந்த கண்ணகி மதுரையை எரித்தாள் எனலாம். மேற்கூறியவற்றைப் பார்த்தால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பது என்னவெனில் ஒரு வர்க்கமானது இன்னொரு வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுத்து அழிக்க முற்படுகிறது. இந்த அழிப்பானது பலாத்காரத்தினாலேயே நடைபெறுகிறது. அந்தப் பலாத்காரமானது மிகவும் கொடூரமானதாகவும் காட்டுமிராண்டித் தனமாகவும் இடம்பெற்றுள்ளது. இதே போலத்தான் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த அல்லது ஒரு வர்க்கத்தை பிரதிபலிக்கின்ற வர்க்கமானது செயல்படும். "இது நம்மை நாகரீக நிலையின் வாயிலுக்குக் கொண்டு வந்துது விடுகின்றது. உழைப்புப் பிரிவினையில் ஏற்பட்ட கூடுதலான முன்னேற்றம் இதைத் துவக்கி வைத்தது. கடைக் கட்டத்தில் மனிதர்கள் தமது நேரடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே உற்பத்தி செய்து வந்தனர், தற்செயலாகத் தேவைக்கு அதிகமாக ஏதாவது மிஞ்சினால் அவர்கள் எப்போதாவது அதைப் பரிவர்த்தனை செய்தார்கள். அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தில் கால்நடை வளர்க்கும் மக்களினங்கள் தம் கால்நடைகளின் மூலம் ஒருசொத்து வடிவத்தைப் பெற்றனர், போதுமான கால்நடை மந்தைகள் இருக்கும் பொழுது இந்தச் சொத்து அவர்களுடைய தேவைகளுக்கு அதிகமான உபரியை முறையாகக் கொடுத்து வந்தது என்பதைப் பார்க்கிறோம். மேலும், கால்நடை வளர்க்கும் மக்களினங்களுக்கும், மந்தைகள் இல்லாத பின்தங்கிய இனக்குழுக்களுக்கும் இடையில் உழைப்புப் பிரிவினை இருந்ததையும் பார்க்கிறோம். ஆக, உற்பத்தியில் இரண்டு கட்டங்கள் அடுத்தடுத்து இருந்தன, இவை முறையான பரிவர்த்தனைக்குரிய நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தன. அநாகரிக நிலையின் தலைக்கட்டம் விவசாயத்துக்கும் கைத்தொழில்களுக்கும் இடையில் மேலும்

உழைப்புப் பிரிவினையை உருவாக்கியது. குறிப்பாகப் பரிவர்த்தனைக்கு என்றே விளைபொருட்களில் மென்மேலும் அதிமான பகுதி உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் தனித்தனி உற்பத்தியாளர்களுக்கு இடையில் பரிவர்த்தனை நடைபெறுதல் சமுதாயத்துக்கு இன்றியமையாத தேவையாகி விட்டது. நிலைத்துவிட்ட இந்த உழைப்புப் பிரிவினைகளை எல்லாம் நாகரிக நிலை வலுப்படுத்தி அதிகப்படுத்தி விட்டது, குறிப்பாக, நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வேறுபாட்டைத் தீவிரப்படுத்தி (பண்டைக்காலத்தில் நாட்டுப்புறத்தின் மீது நகரம் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் வகித்த மாதிரி அல்லது மத்திய காலத்தில் நகரத்தின் மீது நாட்டுப்புறம் ஆதிக்கம் செலுத்திய மாதிரியில்) இந்த உழைப்புப் பிரிவினைகளை வலுப்படுத்தி அதிகப்படுத்தியது. அத்துடன், அது தனக்குப் பிரத்தியேகமான, தீர்மானகரமான முக்கியத்துவம். வாய்ந்த மூன்றாவது உழைப்புப் பிரிவினையையும் கூடச் சேர்த்து விட்டது. உற்பத்தியில் பங்கெடுக்காமல், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பரிவர்த்தனை செய்வதில் மட்டும் ஈடுபடுகின்ற ஒரு வர்க்கத்தை, **வர்த்தகர்களை** அது படைத்தது. வர்க்கங்கள் தோன்றுவதற்குரிய முந்திய போக்குகள் எல்லாம் உற்பத்தியுடன் மட்டுமே முழுக்கத் தொடர்பு கொண்டிருந்தன. அவை உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்களை நிர்வாகிகள், வேலை செய்பவர்கள் என்று அல்லது பெரிய அளவு உற்பத்தியாளர்கள், சிறிய அளவு உற்பத்தியாளர்கள் என்று பிரித்தன. இங்கே முதல் தடவையாக வர்க்கம் தோன்றுகின்றது, அது உற்பத்தியில் எந்தப் பங்கும் கொள்ளாமலே உற்பத்தி நிர்வாகம் முழுவதையும் கைப்பற்றுகிறது, பொருளாதார ரீதியில் தன் ஆட்சிக்கு உற்பத்தியாளர்களைப் பணியவைக்கவும் செய்கிறது, சமுதாயத்தின் எந்த இரண்டு உற்பத்தியாளர்களுக்கும் இடையில் தன்னை இன்றியமையாத இடைத தரகனாக்கிக் கொண்டு இருவரையும் சுரண்டுகிறது. பரிவர்த்தனையில் உள்ள கஷ்டமும் ஆபத்தும் உற்பத்தியாளனுக்கு ஏற்படாமல் பாதுகாப்பதாக் கூறியும் அவர்களுடைய விளை பொருட்களுக்குத் தொலைதூரச் சந்தைகளைப் பிடித்துத் தருவதாக சாக்குச் கூறியும் புல்லுருவிகளைக் கொண்டு ஒரு வர்க்கம் தோன்றுகிறது. இவ்வர்க்கத்தினர் உண்மையில் சமுதாயத்தின் சோம்பேறிகள்.

அவர்கள் மிகவும் அற்பமான சேவைகளுக்கு வெகுமதியாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உற்பத்தியின் சிறந்த பகுதியை எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள், பேரளவில் செல்வத்தையும் அதற்குத் தகுந்த சமூகச் செல்வாக்கையும் விரைவாகக் குவிக்கின்றார்கள். அதே காரணத்துக்காக நாகரிக நிலையின் காலகட்டத்தில் அவர்கள் புதிதுபுதிதாக கௌரவங்களைப் பெற்றுக் கொண்டே இருக்கவும் உற்பத்தி மீது மென்மேலும் அதிகமான பிடிப்பைப் பெறுவதற்கும் வசதியைப் பெற்றுள்ளனர். அவர்கள் கடைசியில் சொந்தமாக ஒரு பொருளைப் படைத்துவிடுகிறார்கள், அதுதான் திரும்பத் திரும்பத் நடைபெறுகின்ற வர்த்தக நெருக்கடிகள் என்பதாகும். (266 – 9 கு.த.அ. தோ – ஏங்கெல்ஸ்) இந்த வர்க்கங்கள் தமது சுரண்டலை

அதிகாரிகப்பதன் மூலம் உபரியையும் அதன் மூலம் தமது சொத்தை பெருக்கிக் கொள்கின்றனர். நிலப்பிரபுத்துவத்திற்கு மாற்றம் அடைந்த போது மன்னர்கள் ஆளும் பொறுப்பை வகித்துக் கொள்கின்றனர். இந்தியா போன்ற நாடுகளில் நிலப்பிரபுத்துவம் என்பது அடுத்த கட்டத்திற்கு நகரவில்லை. மாறாக பொருளாதார வளர்ச்சி என்பது மந்தம் அடைந்த நிலையியே இருந்துள்ளது எனலாம். ஆபிரிக்க மக்களைப் போல் அவுஸ்ரேலிய பழங்குடிகள் போல் இந்தியாவில் திராவிட மக்களும் பழங்குடிகளே என 1900 பிந்திய ஆய்வுகளின் மூலம் ஆய்வாளர்கள் முடிவிற்கு வந்திருக்கின்றனர். இப்படியாக இருக்கின்ற போது உற்பத்தி உறவுகள் பற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் தனியே ஆய்விற்கு உரிய கருப் பொருளாகின்றது.

பொருளாதார அமைப்பானது எல்லையைக் குறுக்கிக் கொண்டது மாத்திரம் அல்லாது பழைய உற்பத்தி முறைகளையும் தொடர்ச்சியான பழைமை பேனிய உற்பத்தி முறை நீடித்தது. இனால் தேவைக்கு எற்ற முறையிலும், உற்பத்தி சக்தியையும், உற்பத்தி சாதனத்தையும் வளர்க்க முடியாது போய்விட்டது. பரிவர்த்தனைக்கு தேவையான பொருட்களின் உற்பத்தியில் செலுத்திய கவனத்துடன், உற்பத்தி பொருட்களும் அவசியமாகின்றது. இதுபற்றி மார்க்ஸ் எவ்வாறு இந்தியாவை புரிந்து வைத்துள்ளார் எனப்பார்ப்போம். “உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு பொருட்களை ஓரிடத்தில் இருந்து இன்னெரு இடத்திற்கு கொண்டு செல்லவும், பரிவர்த்தனை செய்வதற்குமான சாதனங்கள் அறவே இல்லாத காரணத்தால், இந்தியாவின் உற்பத்தி சக்திகள் ஸ்தம்பித்துக் கிடப்பது நாடறிந்த அவலமாகும். பரிவர்த்தனைச் சாதனங்கள் இன்மையால், ஏராளமான இயற்கைச் செல்வத்தின் மத்தியில் சமுதாயம் தேவைக்குத் திண்டாடும் வறிய நிலையில் இருக்கும் காட்சியை வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவில் தான் அதிகமாகக் காணலாம். (208 மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி, தொகுதி 3) உற்பத்தி சாதனங்களின் வளர்ச்சியடையாத நிலை மாத்திரம் அன்று அந்தக் காலச் சமுதாயம் என்பது நிலப்பிரபுத்துவ நிலையில் இருந்து மாற்றம் பெறக் கூடிய வகையில் இடம் பெற வேண்டியது அவசியமாகும். மார்க்ஸ் கொலனித்துவ இந்தியாவைப் பற்றிக் கூறுகின்ற போது கொலனித்துவத்தினால் ஏற்படுகின்ற மாற்றம் என்பது மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தி விடாது மாறாக “இந்த சாதனைகள் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மட்டும் அன்றி அவற்றை மக்கள் தமக்கெனச் சுவீகரித்துக் கொள்வதையும் சார்ந்திருக்கின்றன. (212 மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்) முதலாளித்துவ சிந்தனையும் இந்திய மக்கள் உள்வாங்கின் கொண்டு அதன்படி நடக்கவும் வேண்டும். அதாவது முதலாளித்துவ வர்க்கமாகக் கொள்வதற்கு அந்த வர்க்கம் முதலாளித்துவ உற்பத்தி முறையில் கவனம் செலுத்த வேண்டும்.

பண்டைய சமுதாயத்தில் மக்கள் பல்வேறு வகையான நிதிகளையும், பல்வேறு பொருட்களையும் செலுத்த வேண்டும். என்பது பற்றி மன்னனே

கட்டளையிட்டதை காண முடியும். இதே மன்னர் பணத்தை வட்டிக்கு விட்டு அந்த வட்டியை கோவிலுக்கு செலுத்துமாறு கட்டளையிட்டான். "கல்வெட்டிற் குறிக்கப்பட்டுள்ள ஊரார், சபையார், நகரத்தார் என்போர் காசில் ஒவ்வொரு பகுதி பெற்றுக் கொண்டு ஒரு காசுக்கு ஓராண்டுக்கு இரண்டு கல்நெல் வீதம் வட்டி செலுத்த உடன்படுகின்றனர்" (169 வேலுப்பிள்ளையின் தமிழர் சமய வரலாறு) இதனை பொருளாதார முனைப்பில் மூலதனமிடும் தற்கால முதலாளித்துவச் சிந்தனை அன்று அவர்கட்டு இல்லை. ஆனால் வட்டியை கோவிலுக்கு கொடுப்பது நீதிமுறைக்கு தவறானதாக அன்று இருக்கவில்லை என்பதையும் காட்டுகின்றது. நகைகளில் மோகம் கொண்டுளள் இந்தியர்களைப் பற்றி மார்க்ஸ் கூறுகின்றார். ஒல்லாந்தர்கள் நகைகளுக்கு வரிஅறவிட்டாதாக யாழ்ப்பாண சரித்திரம் என்ற வரலாற்று நூல்களின் மூலமும், நகைகள் செய்வதிலும், கோவில், சிலைகள் வடிக்கப்பட்டன என்பதை வரலாற்றில் இருந்து பெறும் தரவுகளில் இருந்து நிலப்பிரபுத்துவ வர்க்கம் பணக்கார வர்க்கமாக வளராத நிலையில் முதலாளித்துவத்திற்கு மாற்றம் பெற முடியாது. பணக்கார விவசாயிகள், பண்ணை முதலாளிகள் பெருக்கிய மூலதனத்தின் மூலம் சந்தையைப் பிடித்து ஆதிக்கத்தை பெருக்காமலும், முதலிடு செய்வதில் கவனம் செலுத்தாமல் விட்டதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நிலப்பிரபுத்துவமும் தனது மூலதனத்தை மூலதனமிடுவதன் மூலமும் புதிய தொழில் துறைகளை வளர்ச்சியடையச் செய்யமுடியும். ஆனால் நிலப்பிரபுத்துவ வர்க்கமானது பாரம்பரியமாக சொத்தை முடக்கி வைப்பதிலும், பொன்மணி சேர்ப்பதிலும் செலவிடுவதன் மூலம் முதலீடை செய்யாது விட்ட நிலையானது எமது தேசங்களின் வளர்ச்சி நிலை காலம் தாழ்ந்தப்பட்டது எனலாம். "அந்த உற்பத்திமுறை மூலதனத்தின் தலைமையான ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மூலதனம் ஒரு சுயேச்சையான சக்தியாகத் திகழ வேண்டுமானால் மூலதனம் மையப்படுத்துவது அத்தியாவசியமாகும்." (214 மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்) இன்றைய பொருளாதார அமைப்பு என்பது குறுகிய கிராம, நகர எல்லைக்குள் தன்னை அடக்கிக் கொள்ளாமல் அது தனது எல்லை கடந்துள்ளது. ஆனால் மேற்கு ஐரோப்பாவில் உருவாகிய மூலதனம் போல் எமது தேசங்களில் உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்..

## 1.2.2.5.1 உபரி மதிப்பு

உபரிக் கோட்பாடு மார்க்சின் கண்டுபிடிப்பாகும். உபரி அளவின் வீதம் என்பது பொருளாதார அமைப்புத் தான் நிர்ணயம் செய்கின்றது. இந்த உபரி உழைப்பு குலச் சமுதாயத்தில் ஏற்பட்டிருந்தாலும், அதன் வளர்ச்சி நீதி நெறி என்பது வளர்ச்சியடையாமலும், சுரண்டும் பொருளாதார அமைப்பு என்றால் என்ன என தெரியாத சமூகத்தில் வளர்ச்சியும் மட்டுப்படுத்தப்பட்டதே. இந்த வளர்ச்சிக்கு உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள் அடிப்படையாகின்றது.

உற்பத்தி சக்தி எனும் போது எல்லாவற்றையும் ஆக்கவல்லதும் அழிக்க வல்லதும் மனித சக்தியாகும். அதாவது தொழிலாளியின் சக்தி. உற்பத்தி உறவு எனும் போது உழைப்பை வழங்குபவனுக்கும், உழைப்பை வாங்குபவனுக்கும் இடையேயான உறவாகும். முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தி சாதனத்தை தன்கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொண்டு உற்பத்தியை மேற்கொள்வதற்காக மற்றவர்களுடைய (தொழிலாளி) உழைப்பை வாங்குபவர்.

உற்பத்தி சக்தி என்பது உற்பத்திச் சந்தை (நிலம், தொழில் நுட்பம்) தன்னுடைய வல்லமையினால் பயன்படுத்தி பொருளாதாரத்தை உற்பத்தி செய்யும் மனிதன். மனிதன் இல்லாவிடின் எந்தவிதமான முயற்சியும் செய்துவிட முடியாது. இவர்களே எல்லாவற்றிற்கும் எஜமானர்கள். இவர்களின் உழைப்பு என்பது நெருப்பைக் கண்டு பிடித்ததில் இருந்து இன்று விண்வெளிக்கு சென்றது வரைக்கும், அணுவைக் கொண்டு உலகை ஆட்டிப்படைக்கவும் இவர்களின் சக்தியே காரணமாகும்.

எவ்விதமான பொருளாதார அமைப்பு இருந்து கொண்டிருக்கின்றதோ அந்த அமைப்பிற்கேற்ப உறவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஏனெனில் ஒவ்வொரு பொருளாதார அமைப்புக்களும் தமது இருப்பை உறுதிப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. இருந்து கொண்டிருக்கும் அமைப்பின் இருப்பை உறுதிசெய்யும் பொருட்டு எமது வாழ்க்கை முறையை அதற்கு ஏற்றாற் போல் வளர்க்கப்படுகின்றது.

மாக்ஸ் பின்வருமாறு கூறுகின்றார். "மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டமான உறவுகளில் தவிர்க்கமுடியாத வகையில் ஈடுபடுகின்றார்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும் அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொருளாயத சக்திகளின் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும். இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டம் எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன.

பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கின்றது. மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை, அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கின்றது.

வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கு இருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு – அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு – இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின்

வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறி விடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது.

பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டடம் முழுவதையுமே சீக்கிரமாகவே அல்லது சற்றுத் தாமதமாகவோ மாற்றியமைக்கின்றன. இப்படிப்பட்ட மாற்றங்களை ஆராய்கின்ற பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகின்ற பொருள்வகை மாற்றங்களுக்கும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல இதைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியும்) சட்டம், அரசியல், கலைத்துறை அல்லது தத்துவஞானத் துறைகளில் – சுருக்கமாகச் சொல்வதென்றால் சித்தாந்தத்துறைகளில் – இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக்காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறுபாட்டைக் காண்பது எப்பொழுதுமே அவசியமாகும்.

ஒரு தனிநபர் தன்னைப் பற்றிஎன்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி முடிவு செய்வதில்லை. அது போலவே இப்படி மாறிக் கொண்டிருக்கும் காலகட்டத்தை அதன் உணர்வைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. அதற்கு மாறாக, இந்த உணர்வைப் பொருளாயத வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாகவே விளக்க முடியும்.

எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்பட வில்லை, புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக்கூடிய பொருளாயத நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. எனவே மனித குலம் தன்னால் சாதிக்ககூடிய கடமைகளையே தனக்குத் தவிர்க்க முடியாதபடி விதித்துக் கொள்கிறது. ஏனென்றால் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய பொருளாயத நிலைமைகள் முன்பே இடம் பெற்ற பிறகு அல்லது குறைந்த பட்சம் உருவாகிக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்தப் பிரச்சினையே தோன்றுகின்றது என்பது அதிக நுணுக்கமாக ஆராயும் பொழுது புலப்படும்.

வரிவான உருவரையில் ஆசிய, பண்டைக்கால, நிலப்பிரபுத்துவ, நவீன முதலாளித்துவ உற்பத்தி முறைகளை சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்தைக் குறிக்கின்ற சகாப்தங்கள் என்று குறிப்பிடலாம். முதலாளித்துவ உற்பத்தி முறைதான் உற்பத்தியின் சமூக நிகழ்வில் கடைசி முரணியல் வடிவம் – முரணியல் என்பது தனிப்பட்ட முரணியல் என்ற பொருளில் அல்ல, தனிநபர்களின் ஜீவனோபாயத்தின் சமூக நிலைமைகளிலிருந்து தோன்றும் முரணியலே, ஆனால் முதலாளித்துவ சமூகத்தின் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் இந்த முரணைத் திர்ப்பதற்குரிய பொருளாயத நிலைகளையும் உருவாக்குகின்றன. எனவே இந்த சமூக அமைப்போடு மனித சமூகத்தின் வரலாற்றுக்கு முந்திய காலம் முடிவடைகிறது." (ப10 – 11 அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு

முன்னுரை – மார்க்ஸ்) இதுவே பொருள்முதல்வாதமாகும். பொருள் முதல்வாதத்தினை சரியாகப் புரிதல் அவசியமாகும். இந்தப் பந்தி பல விவாதங்களுக்கு காரணமாகியது. இது பற்றி தனிநபர்கள் பங்கு பற்றிய பகுதியில் இது பற்றிப் பார்ப்போம்.

எப்பவும் மேற்கட்டுமானத்தில் நிகழும் செயல்களைக் கொண்டு அவற்றிற்கான அடிப்படைக் காரணத்தை கண்டறிய முற்படாது. பொருளாதார அமைப்பினால் ஏற்படும் இன்னல்களை மாத்திரம் கூறி மக்களை அணிதிரட்டுவது பூர்சுவா வர்க்கத்தினருக்கு மிகவும் சாத்தியமானது ஒன்றே. இந்தப் போக்கு முதலாளித்துவவாதிகளின் நலனை அடித்தளமாகக் கொண்டு, வர்க்க நலனை மறைத்துக் கொண்டு தேசிய வாத கருத்துக்களை தூக்கிக் கொண்டு மக்களிடையே இலகுவாகப் புகுந்து மக்களை உள்வாங்கி சுரண்டும் சமுகத்தைப் பாதுகாப்பதேயாகும். இதனை பிளெஹனவ் *பின்வருமாறு விபரிக்கின்றார்.* "இப்போ புகழ்பெற்ற **அடித்தளத்திற்கும்** அதை விடக்குறையாத புகழ்பெற்ற **மேல்கட்டுக்கோப்பிற்கும்** இடையிலான உறவைக்குறித்து மார்க்சும் ஏங்கெஸ்சும் கொண்டிருந்த கருத்தைச் சுருக்கமாக வெளிப்படுத்த நாம் விரும்பினால் அது பின்வரும் விதத்திலிருக்கும்.

**1. உற்பத்திசக்திகளின் நிலை**

2. அது நிர்ணயிக்கும் **பொருளாதார உறவுகள்**

3. குறிப்பிட்ட பொருளாதார ஷஅடித்தளத்தில்' வளர்ச்சியுற்றிருக்கும்

சமூக – **அரசியல் அமைப்பு**

4. ஓரளவிற்கு நேரடியாகப் பொருளாதாரத்தாலும் ஓரளவிற்கு அதன் அடிப்படையில் எழுந்திருக்கும் சமூக – அரசியல் முறையாலும் நிர்ணயிக்கப்படும் **சமூக மனிதனின் மனப்பாங்கு,** அந்த மனப்பாங்கின் தன்மைகளைப் பிரதிபலிக்கும் **பலவிதமான சித்தாந்தங்கள்.**

(தடித்த எழுத்து அவருடையதே பிளெஹனவ், பக். 109 மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்) இவ்வுறவு நிலையானது ஆதிப் பொதுவுடமைச் சமுதாயத்திலிருந்து அடிமை உடமைச் சமுதாயம் வேறாகவும், இதிலிருந்து நிலவுடமைச் சமுதாயம் வேறாகவும், இவற்றிலிருந்து முதலாளித்துவ சமுதாயம் வேறாகவும் இருக்கும். நிலப்பிரபுத்துவத்தில் நிலமே உற்பத்திச் சாதனமாக இருக்கின்றது. மேற்கூறிய உற்பத்தி சக்திகளினதும் உற்பத்தி உறவின் மீதுதான் பொருளாதார அடித்தளம் கட்டமைக்கப்படுகின்றது. இதன்மீதுதான் மேற்கட்டுமானங்களான சமயம் (மதங்கள்) குடும்பம், அரசு, சட்டம், அரசியல், இதுவே பொருளாதாரவாதம், நிர்ணயவாதம் எனப்படுகிறது.

உபரி உருவாக்கமானது பின்வருமாறு உருவாக்கம் பெறுகின்றது. ஒரு தொழிலாளி தன்னுடைய உற்பத்தி சக்தியினை விற்கின்றார். (யார் உற்பத்தி சாதனங்களை வைத்துக் கொள்வார்களோ அவர்களிடம்) தொழிலாளி குறிப்பிட்ட மணித்தியால உழைப்பை தன்னுடையதும், தனது

குடும்பத்திற்கான பரிபாலனச் செலவிற்குப் பாவிக்கின்றார்கள். மீதி நேரத்தை கூலியில்லாமல் தொழிலாளிகள் உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள். தொழிலாளியினால் மேலதிக உழைப்புப் பெறப்பட்டதே உபரியாகும். இதனை மிகைவருமானம் என்றும் கூறலாம். இவ் உபரி மூலமாக தொழிற்சாலையின் ஒருபகுதி ஊழியர்களைத் தன்பக்கம் இழுக்கின்றது. மேலதிக வரும்படி அளித்தல் இதன் மூலம் தொழிற்சாலையின் நிர்வாகம், தொழிற்சங்கத் தலைமையை தன்னகத்தே உள்வாங்கிக் கொள்கிறது. இவர்களே மேட்டுக் குடியினராக உருவாக்கப்படுகின்றனர். உபரியின் வளர்ச்சியினால் ஏற்படுவதே வர்க்க பேதங்களாகும். லெனின் வர்க்கங்களைப் பற்றிக் கூறும் போது வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் வகிக்கும் இடத்தாலும் உற்பத்தி சாதனங்களுடன் அவற்றிற்குள்ள உறவாலும் (மிகப்பெரும்பாலும் இது சட்டத்தால் நிலை நிறுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது) உழைப்பின் சமூக ஒருங்கமைப்பில் அவற்றிற்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தின் அவற்றின் செயலாட்சிக்கு உட்பட்ட பங்கின் பரிமாணங்களாலும் இந்தப்பங்கை அவை சுவீகரித்துக் கொள்ளும் முறையிலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் போது மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களானவை சமூகப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட ஓர் அமைப்பில் தாம் வகிக்கும் வெவ்வேறு இடங்களின் காரணியாய் ஒன்று மற்றொன்றின் உழைப்பைக் கைப்பற்றிக் கொள்ள முடியும் படியான மக்கள் பகுதிகளாகும்" உபரியின் இன்னெரு பகுதி மூலதனத் திரட்சியாகின்றது. மூலதனத் திரட்சியானது உற்பத்தி சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்படுகிறது. இன்றைய நவீன உலகிலே மனித வலுவிற்குப் பதிலாக இயந்திரங்களை கொள்வனவு செய்யப்படுகின்றது. உபரியை உரிமையாகக் கொள்கின்ற வர்க்கமானது இன்னும் இன்னும் தனது சொத்தைத் திரட்டுகின்றது. இதன் காரணமாக சிறுவுடமையாளர்கள் பெரும் மூலதனத்திற்கு இரையாகின்றனர். ஆளும் வர்க்கமானது தன்னைப் பாதுகாக்கும் பொருட்டு வேலையில்லா இளைஞர்களை திரட்டி தன்பாதுகாப்பிற்காக இராணுவத்தை உருவாக்கின்றது. அத்துடன் தொழிலாளர் வர்க்கத்தினை சிதைக்கும் பொருட்டு கருத்தியலை உருவாக்கின்றனர்.

உபரியின் விளைவாகத் தோன்றியதே வர்க்க பேதங்கள். வர்க்கத்திற்கு அடி அத்திவாரம் சொத்தாகும், சொத்து இல்லையெனில் வர்க்கம் இல்லை. வரலாறுகளும் வர்க்கத்தினால் உருவாகின்றதேயன்றி தனிமனிதர்களால் அல்ல. இதையே கம்யூனிசக் கட்சி அறிக்கையில் "**இதுநாள் வரையிலான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறேயாகும்**'' என கூறினார்கள். பழையவை அழிதலும் புதியவை உருவாகலும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்திலும் ஒவ்வொரு வர்க்கத்துக்கு எதிர் வர்க்கம் இருந்து கொண்டே தான் வருகின்றது.

## 2.2.5.2 பொருளாதார வாதம்

மேலேகட்டமைப்புப் பற்றிப் பார்த்தோம், இதில் இருந்து மாறுபட்டு சமூகத்தைப் பார்க்கின்ற நவீன பார்வைகளில் இருக்கின்ற குறைபாடுகள் பற்றிப் பார்க்கின்ற போது மார்க்சிய முகாம்களில் இருந்து பல்வேறு புதிய கோட்பாடுகளை முன்வைக்கின்றனர். இவர்களில் யோமனி பிராங்பேட், நடைமுறைக் கொள்கையாளர் கருத்தோட்டம் என இருபகுதியினரை வகைப்படுத்துகின்றார் கோ. கேசவன். இவர்கள் எந்தவகையான குறைபாடுகளைக் கொண்டுள்ளனர் என்பதைப் பார்ப்போம்.



• சமூக நிகழ்வுப் போக்கை விளங்கிக் கொள்வதில் அகநிலைவாதத்தை அதிகம் வலியுறுத்தல்.

• சமூக நடைமுறையில், அகநிலை மனோபாவக் கூறுகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்தல்.

• இதனால் கலாச்சார மேல்தளத்தின் ஒப்பீட்டுத் தன்மையின் முக்கியத்துவத்தைப் பெரிதுபடுத்தல்.

• விஞ்ஞானத்தையும் தத்தவஞானத்தையும் இணைப்பதற்குப் பதில், தத்துவத்திலிருந்து முற்றாக விஞ்ஞானத்தைப் பிரித்தெடுத்தல்.

• பாட்டாளி வர்க்கம் புரட்சிகரத் தன்மையை இழந்துவிட்டதெனக் கருதி, அதன் தலைமையை மறுத்துரைத்தல்."இந்தப் பிராங்பேட் வகையினர் "மார்க்சியத்தின் இரண்டு அடிப்படைக் கூறுகளை – பொருளியல் முக்கியத்துவத்தையும் (the importance and principle nature of material conditions.- Tom Bottom) அதன் முதன்மையையும் பாட்டாளி வர்க்க புரட்சியை மறுத்துவிட்டனர்" என்கின்றார் ரொம்.

மார்க்சிய நடைமுறைக் கொள்கையாளர் பிரிவு (Theorists of Marxian praxis) என்ற பகுதியினர் பின்வருமாறு மாறுபடுகின்றனர்.

• சமூகத்தில் இயக்கவியல் விதிகள் செயல்படுகின்றனவெனினும் மனிதன் தனக்கு இருக்கும் சுதந்திரமான படைப்பாக்கல் திறனால் தன் விருப்பத்திற்கு ஏற்ப நடைமுறையின் மூலம் இயற்கையை மாற்றியமைக்க முடியும்.

• ஏங்கெல்ஸ், மார்க்சிய இயங்கியலைச் சரியாக உள்வாங்கிக் கொள்ளாது, இயற்கைக்கு அதை இயந்திரமயமாகப் பொருத்தினர். ( ஜோர்ஜ் லூக்காஸ்)

• இயக்கவியல் விதிகளை மனிதனுக்கும் சமூகத்திற்கும் மட்டுமே பொருத்த வேண்டும், இந்த வரையறையைத் தாண்டினால் மார்க்சியம் 'சித்த பிரமையாளனின் கனவாகும்.'( சாத்ரே)

• இருத்தலுக்கும் (Being) சிந்தனைக்கும் இடையிலான இயங்கியல் உறவை மறுத்து அதில் இருத்தலின் முதன்மைத் தன்மையை மறுத்து, அத்தகைய போக்கு மனித உணர்வின் ஆக்கபூர்வமான பங்களிப்பை மறுக்கிறது. (ஜோர்ஜ் லூக்காஸ்)

• பிரதிபலிப்புக் கொள்கை என்பது பதினெட்டாம் நூற்றாண்டு இயந்திரவியல் பொருள் முதல் வாதத்தின் மறுபதிப்பு.

• பொருளியல் முரண்பாடு மட்டும் அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக (Determining Factor) இல்லை, அதுவும் பல மேல்தள அம்சங்களால் தீர்மானிக்கப்படுகின்றன." (பக்.197 – 198 கோ. கேசவன், இலக்கிய விமர்சனம் – ஒரு மார்க்சியப் பார்வை)

நடைமுறை வாழ்க்கையில் பிரச்சினை தோன்றுகின்றது. அந்தப் பிரச்சினையின் அடிப்படையானது மறைக்கப்பட்டு பின்னர் அதன் விளைவுகள் முன்னுக்கு வருவது போல் அடிப்படையானது மறைக்கப்படுகின்றது. எந்த வகையான போராட்டங்களை எடுத்துக் கொண்டால் என்ன, ஏன் அரசியல் போராட்டத்திற்கும் அதன் பொருளாதார அடிப்படைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய உணர்வு மங்கி விடுகிறது. பொருளாதாரவாதம் என்ற அரசியல் சொற்பதத்திற்கு உள்ள மயக்கத்தைப் போக்குதல் அவசியமாகின்றது. இந்தச் சொற்பதம் வெவ்வேறு கட்டத்தில் வெவ்வேறு விதமாக கருத்துக் கொடுத்துப் பாவிக்கப்படுகின்றது. முதலில் ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் சொல் பாவனை பற்றிப் பார்ப்போம். "பொருளாதாரப் போராட்டம் என்று சொல்லும் போது (நம்மிடையே ஏற்கப்பட்டுள்ள வழக்காற்றில் உள்ளபடி) நடைமுறை வழிப்பட்ட பொருளாதாரப் போராட்டத்தை நாம் குறிப்பிடுகிறோம். () முதலாளிகளுக்கு எதிர்ப்பு என்று ஏங்கெல்ஸ் வர்ணித்தார். சுதந்திர நாடுகளில் இது தொழில் வாரியாக ஒழுங்கமைக்கப் பெற்ற தொழிலாளர்களின் போராட்டம் சின்டிக்கேட்டு வழிப்பட்ட போராட்டம் அல்லது தொழிற்சங்கப் போராட்டம் என்று பெயர்பெற்றது." (ப.84 என்ன செய்யவேண்டும்) லெனின் பொருளாதாரம் பற்றிய விவாதத்தை' பொருளாதார ஆதரவாளர்களுடன் உரையாடல்' (நூல் திரட்டு 1) என்ற கட்டுரையில் விரிவாகவே விவாதத்தை மேற்கொள்ளுகின்றார்.

அவரின் கருத்தானது கூலிஉயர்வு சலுகைகள் போன்றவற்றை மையமாக வைத்து தொழிற்சங்கப் போராட்டம் நடத்துபவர்களை பொருளாதார வாதிகள் என அழைத்தார். இப்படியான போராட்டத்தை தன்னியல்பானது என லெனின் கூறினார். **"தன்னியல்பான அம்சம் என்பது கருவடிவத்திலே இருக்கும் உணர்வைத் தவிர வேறில்லை."** (ப 47 என்ன செய்யவேண்டும் – லெனின்) எமது உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளைச் செயற்படுத்தும் செயல்

வடிவமாகும். இது சமூகத்தின் கட்டுமானம் எதையும் அசைக்காது. (கட்டுமானம் என்றால் என்ன) மாறாக வெறும் சீர்திருத்தத்தைக் கோருவதாகத் தான் இருக்கும். இதற்கு மாறாக தன்னியல்பைத் தவிர்த்த சரியான அரசியல் வழியில் இந்த போலிச் சமூகத்தை ஈடாட்டம் கொள்ள வைக்கக்கூடிய அனைத்து மக்கள் போராட்டங்களையும் தலைமைப் பாத்திரம் எடுத்து நடத்துவதும், தன்னியல்பாக எழுகின்ற போராட்ட வடிவங்களுக்கு சரியான அரசியல் வழிகாட்டியாக வேண்டியதுடன் அதனை புரட்சிகர அமைப்பிற்குள் உள்வாங்குவதும் ஆகும். அதேவேளை எமது எதிரியை அரசியல் ரீதியாக எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் ஈடாட்டம் கொள் வைக்க முடியுமோ அந்த அனைத்து சந்தர்ப்பங்களையும் அமைப்புப் பயன்படுத்தும் பிரச்சாரம் கிளர்ச்சி நடத்துவது முதன்மையான விடையமாகும். எப்போது ஒரு நடவடிக்கை ஒரு புரட்சிகர ஸ்தாபனக் கோட்பாட்டைக் கொண்டு, மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு நடைபெறாவிடின் தன்னியல்பாகவே இருக்கும். அதே வேளை ஒரு ஸ்தாபனம் புரட்சிகரக் கோட்பாட்டில் அமைந்து தனது இறுதி நோக்கை அடிப்படையாகக் கொண்டு தனது செயற்பாட்டினை செய்யும் போது அது சரியான வடிவத்தைப் பெறுகிறது.

அடுத்தது உற்பத்தி சக்திகளினதும் உற்பத்தி உறவின் மீதுதான் பொருளாதார அடித்தளம் கட்டமைக்கப்படுகின்றது. இதன் மீது தான் மேற்கட்டுமானங்களான சமயம் (மதங்கள்) குடும்பம், அரசு, சட்டம், அரசியல், இதுவே பொருளாதாரவாதம், நிர்ணயவாதம் என்ப்படுகிறது. இவை இரண்டிற்கும் வித்தியாசமான பொருளடக்கம் இருக்கின்றது. (உபரியின் கீழ்பார்க்க) இதில் எவ்வித குழப்பங்களும் தேவையில்லை. "ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஓர் அரசியல் போராட்டமாகும். விடுதலைக்காக நடக்கும் எல்லா வர்க்கப் போராட்டங்களும், அவசியமாகவே அரசியல் வடிவம் பெற்றிருந்த போதிலும்– ஏனெனில் அவை அரசியல் போராட்டங்களே– இறுதியில் இப்போராட்டங் –களெல்லாம் பொருளாதார விடுதலையையே நோக்கமாகக் கொண்டவை என்று குறைந்த பட்சம் நவீன காலவரலாறு நிரூபிக்கின்றது. எனவே குறைந்தபட்சம் இங்கேயாயினும், அரசானது– அரசியல் ஆட்சி முறை– கீழ்ப்பட்ட அம்சமாய், குடிமக்கள் சமுதாயம், அதாவது பொருளாதார உறவுகள், நிர்ணயமான அம்சமாய் உள்ளது.''(ப 79 லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜேர்மன் தத்துவஞானத்தின் முடிவும்) இன்று எமக்கு இருந்ததைவிட அன்று மாமேதைக்கு வேறு நிலமை ஏற்பட்டிருந்தது. "**தற்போது நடைபெறும் வர்க்கப் போராட்டங்களுக்கும் தேசியப் போராட்டங்களுக்கும் பொருளாயத அடிப்படையாய் இருக்கும் பொருளாதார உறவுகளை நாம் எடுத்துரைக்கவில்லை என்பதாய்ப் பல்வேறு தரப்புக்களிலிருந்தும் நம்மைப் பற்றி குறை கூறியுள்ளனர்.**''(23 மார்க்ஸ் –கூலியுழைப்பும் மூலதனமும்)

பொருளாதாரவாதத்திற்கு பலியாகிவிட்டதாக பரவலாக மார்க்சியத்தின் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. முன்னர் பார்த்தது போல் பொருளாதாரம்

எனப்படுவது கட்டுமானம் பற்றியதே. ஆனால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாவிக்கப்படும் சூழ்நிலையில் சொல்லுக்குச் சொல்லு மாறுதல் அடையும். அதேவேளை ஒடுக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தமது வர்க்க நலனைப் பேணுவதற்கு, அல்லது திசைதிருப்புவதற்கு எப்பவும் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பார்கள். "இந்த அரசியல் போராட்டத்திற்கும் அதன் பொருளாதார அடிப்படைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய உணர்வு மங்கி விடுகிறது. இது முற்றாக மறைந்து விடவும் முடியும். இப்போராட்டத்தில் பங்கெடுக்கிறவர்களின் விஷயத்தில் முற்றாக இப்படி நடக்கின்ற தில்லையாயினும், வரலாற்று ஆசிரியர்கள் விஷயத்தில் அப்படித்தான் அனேகமாக எப்போதும் நடக்கிறது." (ப 82 லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜேர்மன் தத்துவஞானத்தின் முடிவும்) ஒன்றை விட்டு ஒன்றை தனிமைப்படுத்தும் போக்கு என்பது தப்பியோடும் நிலைமைக்கு அப்பால் எவ்விதத்திலும் புதுமையாகாது.

பிரச்சார யுக்தியானது கால வரலாற்றில் பூர்சுவா வர்க்கமானது தமக்கு ஏற்றவாறாக பாவிப்பதில் பிரசித்தி பெற்றவர்கள் என்பதைத் தான் இந்தப் பிரச்சினை பற்றிப் பார்க்கின்ற போது முக்கிய விடத்தையும் கவனித்தாக வேண்டும். ஒடுக்கும் வர்க்கம் தனது சுரண்டலை விஸ்தரித்துக் கொள்ளவும், தனது இருப்பை பாதுகாத்துக் கொள்ளவும் ஏற்றவாறாக கல்வித் திட்டத்தை முன்வைக்கின்றது. இதன் பால் இந்தச் சமுதாயத்தின் அவலத்தால் சிதைந்த உள்ளத்திற்கு மருந்து போடவும், இழந்த மானிடத்தை தனது பிரசைகளுக்கு கற்பிக்கவும், பொருளாதார நலனை காக்க தொழிற் நுட்பம் உட்பட பல கல்வித் திட்டங்களை வகுத்துக் கொள்கின்றது. இந்த சமூகம் பற்றிய கல்வித் திட்டத்தில் பல கோட்பாடுகளையும் கொண்டுள்ளன. இந்த கோட்பாடுகளைக் கொண்டு கற்கின்ற உறுப்பினர்கள் காலப் போக்கில் இந்த வர்க்கத்தில் சுழரக்கூடிய நிலையில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக மாற்றம் பெறுகின்றது. இந்த நிறுவனங்களில் கற்று வெளியேறுபவர்கள் இந்தச் சமூகத்தை பாதுகாக்கக் கூடிய பிரதிநிதிகளாகவே வெளியேறுகின்றனர். இந்தப் பிரச்சினைகள் அமைப்பு வடிவம் எடுக்கின்ற போது, அமைப்பிற்கு வெளியில் இருக்கின்ற புத்தியீவிகள், வரலாற்றாசிரியர்கள் போக்கில் இந்தப் பிரச்சினை இருக்கத் தான் செய்யும். பொருளாதாரப் போராட்டம் இடம் பெறும் போது தன்னியல்பாகவே எழுச்சிக் காலங்களில் தொடங்கப்பட சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறன போராட்டங்களை கட்சியானது. இணைத்துக் கொள்ளல் வேண்டும். அமைப்பினில் தன்னியல்பு என்பது ஆபத்தானதாக அமைந்து விடும்.



## 1.2.2.5.3 பயன்பாட்டு பெறுமானம்

மனிதருடைய உழைப்பின் பெறுமானம் வெவ்வேறு வடிவங்களில் மறைக்கப்பட்டு வருகின்றது. அந்த உழைப்பிற்கு பெறுமானம் கொடுபடாத நிலையானது பல தளங்களில் காணப்படுகின்றது. இந்த உழைப்பின் பலனாக உருவாக்கப்படும் பண்டத்திற்கு பெறுமானம் கொடுக்காத நிலை என்பது முதலாளித்துவ பொருளாதார உற்பத்தியில் ஒன்றும் புதினம் அல்ல. குடும்ப வட்டத்தின் வாழ்பவர்களின் உழைப்பு எவ்வாறு கணிப்பீடப்படுகின்றது எனப் பார்ப்போம்.

குடும்ப உழைப்பையே மையமாகக் கொண்ட சிறு உற்பத்தியில் ஈடுபட்ட குடும்பத்தில் பெண்களின் உழைப்பு தியாகமாகவே இருந்தது, இருக்கின்றது. இவர்கள் காலையில் கோழி கூவும்போது எழுந்து வீட்டு வேலை செய்வதும் வயது வந்தோரைப் பாதுகாப்பதும் அதேவேளை குடும்பம் மேற்கொள்ளும் வீட்டுத் தோட்டம் அல்லது சிறு உற்பத்தியில் தமக்கு தேவையானவற்றை தாமே உற்பத்தி செய்கின்றனர். இவர்கள் ஒருபுறமிருக்க இவர்களை விட கூலி உழைப்பில் கணவனும் ஈடுபடும்போது மனைவி வீட்டில் இருக்கிறாள். ஆனால் இவள் உற்பத்தி உறவுகளுடன் சம்பந்தப்பட்டு உற்பத்தியில் ஈடுபடவில்லை. அவள் (பயன் மதிப்பினை) பயன்பாட்டுத் துறையில் ஈடுபட்டு பயன்பாட்டுப் பெறுமானத்தை அதிகரிக்கிறாள். உழைப்பு என்பது பண்டமாற்றிற்கு உள்ளாக்கப்படுகின்ற போது அனைத்துவகை உழைப்புக்களும் பெறுமானம் உடையதாகின்றது. அதேபோல மூலதனத்தின் உருவாக்கமானது எல்லாவற்றிற்கும் பெறுமானத்தையும், அனைத்திற்கும் பொதுவாக உழைப்பு அனைத்தையும் மூலதனமாக்கின்றது. "உண்மையில், சிறு விவசாயிகளைக் கூலித் தொழிலாளர்களாகவும், அவர்களது சீவனோபாயங்களையும் உழைப்புச் சாதனங்களையும் மூலதனத்தின் பொருளியல் மூலங்களாகவும் மாற்றிய நிகழ்ச்சிகள் அதேநேரத்தில் மூலதனத்துக் கென்றே ஓர் உள்நாட்டுச் சந்தையையும் சிருஸ்டித்தன. முன்னதாக, விவசாயக் குடும்பம் சீவனோபாயங்ளையும் கச்சாப் பொருட்களையும் உற்பத்தி செய்து அவற்றில் பெரும் பகுதியைத் தானே நுகர்ந்தது. இந்தக் கச்சாப் பொருட்களும் சீவனோபாயங்களும் இப்போது பண்டங்களாகி விட்டன." (ப. 79 – மார்க்ஸ் – மூ.தோற்றம்)

மனிதனுடைய உழைப்பு என்பது காலத்துக்கு காலம் மாறுபட்டே வந்தேயுள்ளது. பொருளாதார அமைப்பு முறைக்கு ஏற்றவாறாக மாற்றமடைகின்றது. ஏகாதிபத்தியத்தின் அழுத்தம் காரணமாக, அவர்கள் விதிக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டே கொள்ள வேண்டியுள்ளது. மனிதர் குலம் மேற்கத்தைய சந்தைக்கு ஏற்ற படியான பொருளாதார அமைப்பிற்கு தன்னுடைய உழைப்பை விற்கத் தொடங்கினார்கள். இவற்றிற்கு அடிப்படையாக மேற்கத்தைய தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு அவர்களின் கல்வித் திட்டத்திற்கு அமைய கல்வி கற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

சொத்துடமையின் தோற்றம் அவர்களுக்கிருந்த உரிமையைப் பறிக்கின்றது. அதேவேளை அவர்களின் பொருளாதாரச் சுதந்திரம் தன்னிறைவு என்பது பறிக்கப்பட்டதால் கணவனை தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருந்த அவள், நவீன சமுதாயத்தில் என்ன நடைபெறுகின்றது என்றால் நிலத்தினை பெரு மூலதனம் என்பது கைப்பற்றிக் கொள்கிறது. இவ்வேளை இவர்களுக்கு செல்ல வேண்டிய சொத்து என்பது பகிர்ந்தளிக்கப்படாமல் அவளுக்கு குறிப்பிட்ட பணத்தை (நிலப்பிரபுத்துவத்தில்) சீதனமாகக் கொடுப்பதன் மூலம் திருப்திப்படுத்த நிர்பந்திக்கப்படுகிறாள். அதே வேளை இன்றைய நிலையில் பூர்சுவா வர்க்கம் என்ன செய்கிறது என்றால் அவளுக்கு கல்வி கொடுப்பதன் மூலம் அந்த சொத்தின் உரிமையை மறுக்கின்றது. கல்விக்கு எதிரானது எனப் பார்க்க வேண்டாம். இவ்வாறே படித்த வர்க்கமானது விடுதலையின் பிந்திய இந்திய அரசில் இடம் பெற மாற்றீடாக உருவாக்கப் பட்டது. இந்த படித்த வர்க்கம் குறிப்பாக வங்காளி அறிவு இயக்கமாக வளர்ந்தது இது ஒடுக்கப்பட்ட, சரணடைப்படும் தேசிய இனத்தின் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியே.

ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாறுகின்ற போது முன்பிருந்த நிலை என்பது மாறுபடுவதன் காரணத்தால் சுயாதிபத்தியம் இழக்கப்படுகின்றது. மார்க்ஸ் எவ்வாறு இதனைப் பார்க்கின்றார் எனப்பார்ப்போம். இந்த மாற்றம் மனித இனத்தின் அனைத்துப் பகுதியினரையும் பாதிக்கின்றன. இவ்வாறான வர்க்க மாற்றம் என்பது தொழிலாளர்களை பழைய நிலமைகளில் இருந்து மாற்றம் கொள்ள வைக்கின்றது. "உடனடி உற்பத்தியாளனான உழைப்பாளி, நிலத்தோடுள்ள பிணைப்பு முடிந்த பின்னர் - மற்றொருவனின் பண்ணையடிமை அல்லது கொத்தடிமையாக இருப்பது முடிந்த பின்னர் - தன் சொந்த உருவத்தை மட்டுமே விற்க முடிந்தது. சந்தை காணுமிடமெல்லாம் தன் பண்டத்தை எடுத்துச் செல்லுகின்ற ஒரு சுதந்திர உழைப்புச் சக்தி விற்பனையாளனாக ஆவதற்கு, அவன் மேலும், கில்டுகளின் ராஜ்யத்திலிருந்தும் பழகுத் தொழிலாளர்கள் மற்றும் தகுதித் தொழிலாளர்களுக்கான அவற்றின் விதிகளிலிருந்தும் அவற்றின் உழைப்பு விதிமுறைகளின் இதர தங்குதடைகளிலிருந்தும் தப்பிக்கவேண்டும்.

இதனால் தான் உற்பத்தியாளர்களைக் கூலித் தொழிலாளர்களாக மாற்றுகின்ற வரலாற்று இயக்கம், ஒரு புறம் பண்ணையடிமைத் தனத்திலிருந்தும் கில்டுகளின் தளைகளிலிருந்தும் அவர்கள் அடைகின்ற விடுதலையாகத் தோன்றுகின்றது. நமது பூர்சுவா வரலாற்றாசிரியர்களுக்கு இந்த அம்சம் இருப்பது மட்டுமே தெரிகிறது. ஆனால் மறுபுறம், இந்தப் புதிய சுதந்திர மாந்தர்கள் சொந்த உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும், பழைய நிலப்பிரபுத்துவ ஏற்பாடுகளால் கிடைத்த வாழ்க்கை உத்தரவாதங்கள் அனைத்தையும் பறிகொடுத்த பின்னரே தம்மைத் தாமே விற்பவர்களாயினர். அவர்கள் பறிமுதலுக்காளான இந்த வரலாறு மனித இனத்தின் சரித்திர

ஏடுகளில் இரத்தத்தாலும் நெருப்பாலும் எழுதப்பட்டுள்ளது.'' (11 – 12 மார்க்ஸ், மூலதனத்தின் மூலத்தோற்றம்)

விவசாயமானது கூலிமுறையைக் கொண்ட அமைப்பாக மாற்றமடைய மூலதனத்தை ஆதிக்கம் கொள்ளும் சக்திகளில் கைக்கு எட்டியது என்பதைப் பார்த்தோம். பெண்களுக்கான சொத்துப் பரிமாற்றத்தில் ஏற்பட்ட மாற்றம், பூர்சுவா வர்க்க பெண்கள் நிலையில் பெரிய மாற்றம் ஏற்படமாட்டாது. வர்க்க பேதம் காலப் போக்கில் மாறும் இது எல்லாவற்றிக்கும் பொருந்தும். பூர்சுவா வர்க்க பெண்களின் கல்வி அறிவு மாற்றாது. ஆனால் இவர்கள் நவகொலனிய காலத்தில் தமது வர்க்கத்தவருக்கு எதிர்காலத் துணைவியராக அமையும் வகையில் இவர்கள் தயாரிக்கப்படுகிறார்கள் என்பதே சரியானதாகும்..

ஆனால் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் இருக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் உறவுகள் அடங்கிய உற்பத்தியில் ஈடுபட்ட பொழுது அல்லது பிற்பாடு வந்த நிலப்பிரபுத்துவ அமைப்பில் வேவ்வேறு அளவில் சுதந்திரமாக இருந்து வந்தனர் அல்லது இவர்கள் கூடுதலாக சுதந்திரத்தைப் பெற்றிருந்தனர். வர்க்க பேதம் காரணமாக வறுமை நிலையையும் சமூகத்தில் இரண்டாம் நிலையையும் அடைந்திருந்தனர். சொத்துக்கள் பங்கிடும் நிலையில் பெண்கள் இருந்த நிலை மாறுவது போல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள், விவசாயக் குடும்பங்கள் என்பவற்றின் நிலையும் மாறுகின்றது.

தன்னாதிக்கம், சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருந்த பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபடும் உரிமையை இழந்து விடுகிறார்கள். முன்பு கணவனிடம் முரண்பட்டுக் கொண்டாள். அதில் இருந்து விடுபட அதிக சாத்தியம் இருந்தது. அத்துடன் அவர்களுக்கு இருக்கும் சமூகப் பாத்திரம் என்பது முன்பிருந்ததைவிட தரம் தாழ்த்தப்படுகிறது முன்பு பொருளாதாரத்தில் குறைந்த பட்சமாவது சுயாதிபத்தியமும் கட்டுப்பாட்டையும் கொண்டிருந்தனர்.

ஏனெனில் இவர்கள் சமூக உற்பத்தியில் மதிப்புக் குறைந்ததனால், அதாவது நிகழ் காலச் சமுதாய அமைப்பில் குடும்ப அலகைக் கொண்ட உற்பத்தி முறை என்பது தவிர்க்கப்பட்டு வியாபார நிறுவனங்களை நோக்கிய உற்பத்தியானது உள்ளதே காரணமாகும். வேலையற்றோர் நிலைக்கு தள்ளப்பட்டனர். இவர்களை உபரியான (மிகையான) தொழிலாளர்கள் என்ற அந்தஸ்தை அடைந்தனர். ''**முதலாளித்துவ உற்பத்தியின் பேரழகு எதில் அடங்கியுள்ளதென்றால், அது கூலித் தொழிலாளியைக் கூலித் தொழிலாளியாகவே இடையறாத புனருத்பத்தி செய்வது மட்டு மல்லாமல், எப்பொழுதும் மூலதனத் திரட்சிக் கேற்ற வீதாசாரத்தில் கூலித் தொழிலாளர்களின் ஒப்பீட்டு உபரி சனத்தொகை ஒன்றையும் உற்பத்தி செய்கிறது என்பதிலேயே. இவ்வாறு உழைப்பின் சப்பிளை-கிராக்கி, விதி தடம் புரளாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது,**'' (பக் 120 மார்க்ஸ், மூ தோற்றம்)

இவர்களின் நிலையானது தற்பொழுதுள்ள தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி காரணமாக உல்லாச பயணத்துறைக்கு இவர்களின் உடல் என்பது நுகர்வுப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது. இன்றைய முதலாளித்துவ ஏகாதிபத்திய சமுதாய அமைப்பின் சீரழிவினால் மனிதனுடைய பூரண தேவையை நிவர்த்தி செய்ய முடியாமல் அன்னிப்படுத்தப்பட்ட மனிதனுக்கு, ஏகாதிபத்தியங்கள் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காக புதிய ஊடகங்களை (புதிய சமூக அலகாக) ஏற்படுத்திக் கொடுக்கின்றன. அதாவது சமூக ஸ்தாபனமாக இயங்கும் பொருட்டு பல அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகளின் வளர்ச்சி என்பது முன்பிருந்ததை விட இப்போது வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த வடிவத்தில் ஒரு வளர்ச்சிக் கட்டமே நவீன உல்லாசப் பயண நிறுவனங்களும் அதன் செயற்பாடுகளாகும். உல்லாசப் பயணிகளுக்கு என எல்லாவிதமான வசதிகளுடன் தயார்படுத்திக் கொடுப்பதற்கு என உலாசப் பயண நிறுவனங்கள், முகவர்கள் தயாராக இருக்கின்றனர். இவ் நிறுவனங்கள் முகவர்கள் பல கோடிக்கணக்கான டொலரை தமது வருமானமாகப் பெறுகின்றனர். இவர்களுக்கு ஏகாதிபத்திய நாடுகள் தமது பிரசைகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கின்றது. இதன் பொருட்டான கொள்கைகளையும் வெளிநாட்டு கொள்கைகளை திட்டமிடுகின்றன. இந்த விதமான திட்டத்தை நிறைவேற்ற தரகு முதலாளித்துவ அரசுகள் துணைபோகின்றன.

ஏற்கனவே ஆணாதிக்கச் சிந்தனையில் உள்ள சமுதாயத்தினுள் வளர்ந்தவர்கள் – உருவாக்கப்பட்டவர்கள் இந்த ஊடகத்தின் மூலமாக தமது தேவையை பூர்த்தி செய்வதற்காக அவற்றிற்கு விலை கொடுக்கவும் தயாராக உள்ளனர். இந்த தொழிற்சாலையில் உடலை விற்பதற்காக எத்தனையோ லட்சக்கணக்கான பெண்கள் நகரத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். உற்பத்தியில் ஈடுபடவேண்டிய பெண்களின் சக்தி, ஏகாதிபத்தியத்தில் லாபத்தைப் பெருக்கும் பொருட்டு செயல்படுத்தப்படும் பொருளாதார அரசியல் திட்டத்திற்கு பலியாகின்றனர். திட்டமிடப்பட்ட விபச்சார முயற்சி என்பது சர்வதேசம் என்ற அலகின் தேவை கருதி தேவையைப் பூர்த்தி செய்யும் தொழிற்சாலையாக வளர்ந்துள்ளது. முன்பு விபச்சாரம் என்பது நகர நாட்டு எல்லைக்குள் தான் இருந்து வந்தது. அதனை விலைகொடுத்து வாங்குபவர்களும் அதே எல்லைக்குள் தான் இருந்தனர். இன்று அந்த நிலை மாறி பூகோளமயமாதலின் ஒரு பகுதியாக அமைந்து விட்டது.

பெண் விடுதலை பற்றி ஏங்கெல்ஸ் பின்வருமாறு கருத்துரைக்கின்றார். ''ஜீவனோபாயத்துக்காக ஆணுடைய உழைப்புடன் ஒப்பீடுகின்ற பொழுது பெண் செய்த வீட்டுவேலை அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. ஆணின் உழைப்புத்தான் எல்லாம் பெண்ணின் வேலை ஒரு அற்பமான பங்குதான். சமூக ரீதியில் பயனுள்ள உழைப்பிலிருந்து பெண்கள் விலக்கப்பட்டு, வீட்டு வேலையைச் செய்வதுடன் நிறுத்தப்படுகின்ற வரை பெண்கள் விடுதலை அடைவதோ, ஆண்களுடன் சமமாக இருப்பதோ சாத்தியமில்லை என்பதை ஏற்கனவே இங்கு காண்கின்றோம். பெண்கள் பெரிய சமூகஅளவில் உற்பத்தியில் பங்கு கொள்வதற்கு வசதியளிக்கின்ற

பொழுதுதான், வீட்டு வேலைகளை சொற்ப அளவில் செய்தால் போதும் என்ற நிலை ஏற்படுகின்ற பொழுதுதான் பெண்விடுதலை சாத்தியமாகும். இது நவீனகாலப் பெரிய அளவுத்தொழில்துறையின் விளைவாகவே சாத்தியமாயிற்று. இந்தப் பெரிய அளவுத்தொழில்துறை பெண்கள் அதிகஅளவில் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு வசதியளிக்கின்றது. அது மட்டுமல்ல. இவ்வாறு பெண்கள் ஈடுபடுதல் அதற்கு அவசியமாகவும் இருக்கின்றது. மேலும், அது தனிப்பட்ட வீட்டு வேலையைக் கூட ஒரு சமூக உற்பத்தியுடன் இணைக்க முயல்கிறது.'' (ப 263 கு.அ.த.தோ)

பெண் உழைப்பாளிகளுக்கு உரிமையையும், வளர்ச்சியையும் முதலாளித்துவத்தில் பெறமுடியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்களை வகுக்க பாட்டாளி வர்க்கத்துடனேயே இணைந்து போராடவேண்டும். பெண்விடுதலையும் மூலதனத்துடன் சம்பந்தப்பட்டது என ஏங்கெல்சின் விளக்கத்தில் இருந்து வரலாம். இன்று எழுகின்ற பெண்விடுதலைக் கோரிக்கைகள் என்பது முன்னைய சமுதாயத்தில் இருந்து மாறுபடுகின்றது. இவைகள் தேசியத்தைப் போலவே சுயநிர்ணத்தைக் கோருகின்ற நிலையை காணமுடிகிறது. இந்தக் கோரிக்கைகளை முதலாளித்துவ வட்டத்துடன் மாத்திரம் நின்றுவிடாமல் பாட்டாளி வர்க்க விடுதலைக் காண பாதையை வகுத்திட தொழிலாளர் வர்க்கத்துடன் அணிசேர்தல் வேண்டும். ஏனெனில் வர்க்கப் போராட்டத்தினுள் உள்ளடங்கியதே அனைத்துப் போராட்டங்களுமாகும்.

# 2.2.6.1 முதலாளித்துவக் கட்டம்

முதலாளித்துவக் கட்டத்தில் வேலைப் பிரிவினை என்பது முன்னைய சமுதாயத்தில் இருந்து மாறுபடுகின்றது. வேலைப் பிரிவினையானது சமூகத்தின் உற்பத்தி முறையின் வளர்ச்சியை காட்டவும் அளவு கோலாகின்றது. இதனை தீர்மானிப்பது நடைமுறை அனுபவம், உலகப்பார்வை, கற்றாடல் என்பன தீர்மானிக்கின்றன. வேலைப் பிரிவினையானது உடலுழைப்பு, மூளையுழைப்பு என பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. உடலுழைப்பு என்பது கடல்தொழில், விவசாயம், பாரியகைத் தொழில்கள் எனவும் மூளையுழைப்பு என்பது அலுவலகங்களிலும், அதிகார வர்க்க மட்டத்திலும் விஞ்ஞானம், மற்றும் சமூக கல்வி வட்டத்திலும் காணப்படுகின்றன. தொழில் நுட்ப, கணணியின் வளர்ச்சி இன்றைய காலத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. இதன் காரணமாக முதலாளித்துவமானது அந்த அறிவுத் துறையினரை தமது மூலதன வல்லமையினால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். இந்த தொழில் நுட்ப வளர்ச்சியானது கடந்த பத்து வருடங்களில் பல மடங்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இதன் காரணமாக தொழிற்துறையில் அதிகளவு அறிவுசார்ந்த தொழிலாளர்களின் சக்தி என்பது அவசியமாகின்றது. அந்த நிலையை பூர்த்தி

செய்ய முடியாத. அந்த நிலையை அடையமுடியாத தொழிலாளர்கள் வர்க்கத்தின் ஒரு பகுதியினர் சமூகத்தின் கீழ்மட்டத்திற்கு மென்மேலும் பின் தள்ளப்படுகின்றனர்.

தொழிலாளர்களைக் கொண்டு அதியுயர் லாபத்தைப் பெறும் நோக்குடன் செயற்படுத்தப்படும் நிலையின் காரணமாக அறிவை மூலதனமாக கொண்டவர்கள் தீர்மானிக்கும் சக்தியைக் கொண்டிருப்பர் அல்ல. ஆனால் நிதி மூலதனம் அவர்களை விலை கொடுத்து வாங்கிவிடுகின்றது. இதனால் தனது எசமானருக்கு விசுவாசமாகத்தான் இருக்க முடியும். இந்த அறிவு மூலதனத்தை கைப்பற்றுவது இலகுவல்ல. அதனை பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவதால் மாத்திரம் பாட்டாளி வர்க்கம் வெற்றி கொள்ள முடியாது. மாறாக அனைத்து உற்பத்தி சாதனங்களும் பாட்டாளி வர்க்கத்தால் தீர்மானிக்கக் கூடிய அதிகாரத்தைப் பெறும் போதே ஆகும்.

உலகில் உடலுழைப்பின் பெறுமானம் என்பது மிகக் குறைவாக மதிக்கப்படுகின்றது. அதற்கு பெறுமதிப்பான ஊதியம் என்பது வழங்கப்படுவதில்லை. மாறாக மூளையுழைப்பில் வாழ்பவர்களுக்கு அதிக சம்பளம் வளங்கப்படுகின்றது. இதில் அதிக ஊதியத்தைப் பெறுபவர்கள் பூர்சுவா வர்க்கத்தினரே. இந்த ஆதிக்க வர்க்கத்தினர் ஆதிக்கம் செலுத்தும் தளங்களை பின்வருமாறு குறிப்பிடலாம். தொடர்பு சாதனங்கள், கல்விக்கூடங்கள், அரச திட்டமிடல் – நிர்மாணத்துறைகள், (சர்வதேச அரசியல் அதிகாரிகள் தூதுவர்களாகவும்) இவர்கள் சமூகத்தை பாதுகாக்கின்ற முக்கிய பொறுப்புக்களில் பதவி வகிக்கின்றனர்.

குறிப்பிட்ட தொழிற்துறைகள் பெண், ஆண், ஒவ்வொரு சாதியினருக்கெனவும் சமூகத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிர்ணயத்தின் பின்னால் நீண்ட பொருளாதார நலன்கள் அடங்கியுள்ளன. இந்தப் பகுதியினரிடையே சமூகக் கட்டுமானம் கொடுக்கும் தாக்குதல் என்பது பொருளாதாரத்தையும், அதிகார வர்க்க சமூகத்தையும் பாதுகாக்கக்கூடிய நலனை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின்றது. எமது சமூகத்தை ஆய்வு செய்கின்ற போது சாதி என்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன் பெண் உழைப்பாளிகளின் தொகை என்பது மற்றைய நாடுகளைப் பார்க்கிலும் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கின்றது. ஏனெனில் தொழிற் சந்தை என்பது அதிகம் வளர்ச்சியடையாத நிலையே காரணமாகும். வேலைப்பிரிவினையில் பின்வரும் தன்மை காணப்படுகின்றது.

1. சமூக எதிர்பார்ப்பைக் கொண்டது. அதாவது சமூகமானது குறிப்பிட்ட சில எதிர்பார்ப்புக்களை பின்வரும் தளங்களில் காணப்படுகின்றது. இவைகள் வயோதிபர்களைப் பராமரித்தல், குழந்தைகளை பராமரிப்பது, வீட்டுவேலைகளில் ஈடுபடல்.

௨. உயர்கல்வி (கலாசாலை) மூலம் உருவாக்கப்படுகின்றவர்கள் அதிகமாக ஆண்களே காணப்படுகின்றனர்.

3. தொழில் முயற்சியின் அடிப்படையில் அமைந்த கல்வி அமைப்பில் உருவாக்கப்படும் தொழில்களில் பல தொழில்கள் பெண் தொழிலாளர்களே அதற்கு தகுந்தவர்கள் என முத்திரை குத்தல். (சாதியினர் உட்பட) அத்துடன் அதனையே தேர்ந்தெடுக்க தூண்டும் நிலை.

4. சிறுவர். பெண் தொழிலாளர்களின் உழைப்பின் தேவை முதலாளித்துவத்துடன் தொழிற்சாலையில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

நிலப்பிரபுத்துவ அமைப்பை போல் அல்லாமல், ஒவ்வொருவரும் முன்னைய பொருளாதார முறைகளின் போது மேற்கொள்ளப்பட்ட முறைகளில் அல்லாமல் புதிய பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றவாறாக மாறாகவேண்டி இருக்கிறது. நவகொலனியல் நிலையில் இருக்கின்ற தொழிலாளர்கள் மழை வருகின்ற போது தொழில்களுக்கு செல்லாமல் இழுத்து மூடிக் கொண்டு உறங்குவதோ அல்லது 'சாக்கை தலையில் மூடி, குந்தி' இருந்து கொண்டு தேனீரை குடித்துக் பொழுதைப் போக்க முடியாது. உறவுமுறைகளில் பிடிப்பு உள்ளதினால் மாமன் மச்சான் என சலுகைகள் வழங்கவும் முடியாது.

இங்கு உறவு முறை தெரிந்தவர் பழகியவர் என்ற பேதம் இல்லாது நெஞ்சிலே கல்லைத் தூக்கிப் போடவும் தயங்காது. இவ்வாறான நீதி முறையையே முதலாளித்துவப் பொருளாதாரமானது கொண்டுள்ளது. இந்தக் கட்டத்தில் எவ்விதமான உற்பத்தி சாதனங்களையும் சொந்தமாகக் கொள்ளாது உழைப்பை மாத்திரம் விற்பனை செய்யும் காலகட்டம். இக்காலகட்டத்தில் பலதரப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்தியது. வியாபார நிறுவனங்கள் வளர்ச்சி பெற்றது, உள்கட்டுமானம் வளர்க்கப்பட்டு கிராமங்கள் நகரங்களுடன் இணைக்கப்பட்டது. இதனால் தொடர்புகள் அதிகரிக்க முன்னைய சமுதாய நிலை மெதுமெதுவாக அருகியது. மனிதர்களின் உரிமைகள் சட்ட ரீதியாக உறுதி செய்யப்படலாயிற்று, இயற்கைவளங்கள் எல்லாம் தாராளமாக சந்தை நிமிர்த்தம் சுரண்டப்பட்டது.

வேலைப்பிரிவினை, பயன்பாட்டுப் பெறுமானம் ஆகிய பகுதிகளில் ஆண், பெண் உழைப்புப் பற்றிப் பார்த்தோம். இவைகள் மாற்றம் பெறுகின்றது என்பது முக்கியமானதாகும். கடல்தொழிலைக் கொண்ட மக்கள் தமது கணவர்மார் கடலுக்குச் செல்ல தாய்மார், பெண்பிள்ளைகள் வீட்டைக் கவனிக்கின்றனர். அத்துடன் தாய்மார் கடல் கரையில் இருந்து சோகி விளையாடுவதும், அரட்டை அடிப்பதும் இவர்களின் கவலைகளைப் போக்க இருந்த சந்தர்ப்பம். அவர்களின் வாழ்க்கை வட்டத்தின் ஒரு பகுதியாகும். இவற்றுடன் நின்றுவிடுவதில்லை, மீன்தெரிவதுமாக இருப்பர். மீன் தெரிகின்ற பெண்கள் அவர்களின் மேலதிகமான வீட்டுத் தேவையை நிறைவேற்ற பாவிக்க முடிகின்றது. இவர்கள் மீன் கூவி விற்கும் முயற்சியிலும், சந்தைக்குச் சென்று விற்பதிலும், மீன் வெட்டும் பகுதித் தொழிலிலும் ஈடுபடுகின்றன. சொத்துடமையைக் கொண்ட இவர்கள் நவீன இயந்திர படகுகளை சொத்துடமையாகக் கொண்டனர். சிறு தோணி வைத்திருந்த தொழிலாளர்கள் இயந்திரப் படகுகளின் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டனர். ஆள்கடலில்

மாத்திரம் தொழிற் செய்யாது உள்கடல்களிலும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டதினால் பல இடங்களில் மோதல்கள் இரத்தினால் குளிப்பாட்டப்பட்டது.

பருவத்திற்கு தொழிற்செய்யும் முறைகள் முன்பு இருந்தன இப்பொழுதும் இருக்கின்றது. பருவத்தில் தொழிற் செய்வதினை தமிழர்களும் சிங்களவர்களும் மேற் கொள்கின்றனர். (மு. இராசநாயகத்தின் கருத்துப்படி) இன்றும் தமிழ் பிரதேசங்களுக்கு வந்து தொழிற் செய்தவகை முல்லைத்தீவு, சிலாபம், குதிரைமலை போன்ற இடங்களில் வந்து இரண்டு இனத்தவரும் பருவத்தில் தொழிற் செய்கின்றனர். இவ்வாறான மாற்றங்களினால் கடல் பிரதேச தொழிலாளர்களுக்கும், உள்ளூர் தொழிலாளர்களுக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டன. இவைகள் நிரந்தர முரண்பாடுகளாக பலவருடங்களுக்கு தொடர்ந்து நிலைத்து நின்றது..

உள்நாட்டில் பருவகாலத்தில் தொழில் செய்ய முரண்பட்டு சண்டை பிடிக்கும் தொழிலாளர் வர்க்கம் இவர்களை விட பல மடங்கு பலமிக்க பிறநாட்டுநிதி மூலதனத்தில் பலம் படைத்த கடல் தொழிலில் ஈடுபடுபவர்கள் தற்பொழுது தமது நாட்டு எல்லையை விட்டு மற்றைய நாடுகளின் கடல் எல்லைகளில் வந்து மீன் பிடிக்கின்றனர். இந்தப் பிரச்சினைகள் வெளிப்படையாக தற்பொழுது அதிகரித்துள்ளது.

விவசாயத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இதேநிலைதான் ஏற்படுகின்றது. தமது நிலங்களிலும், பண்ணையார் நிலங்களிலும் வேலை செய்து கொண்டு தமது தேவைக்கான சிறு உற்பத்தியிலும் ஈடுபட்ட சந்தர்ப்பம் என்பது முதலாளித்துவத்துடன் முடிவுறுகின்றது. தமது நுகர்வுப் பண்டங்களை பெரும் சந்தைகளில் இருந்து வாங்க வேண்டியுள்ளது. முன்னர் போல தமது வீட்டு உற்பத்தியை நம்பியிருக்க வேண்டியது இல்லை. மாறாக தமது நுகர்வுப் பொருட்களை தாமே உற்பத்தி செய்து நுகர்கின்ற நிலை உருவாகுவதால் அதிலிருந்தும அன்னியப்படுகின்றார்கள். சிறுஅப்பக் கடைகள், தேனீர் கடைகள் மூடப்படுகின்றன. சத்திரங்களுக்குப் மாற்றாக ஒய்வு விடுதிகள் ஐந்து நட்சத்திர விடுதிகள் திறக்கப்படுகின்றன. இவை வசதி படைத்த வர்க்கத்தினருக்கு மாத்திரம் கையில் கிடைக்கின்றன. விவசாயம், மீன்பிடி வகைகளை உள்நாட்டு தேவையை கருத்தில் கொள்ளாமல் வெளிநாட்டு ஏற்றுமதியை பிரதான நோக்கமாக கொண்டு திட்டமிடப்படும் பொருளாதார திட்டத்தினால் அந்நாட்டு மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் வாடவேண்டிய நிலை தான் ஏற்படும். இதுவேதான் எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில் நடைபெறுகின்றது.. இவற்றிற்கு மாறாக சொந்த நாட்டின் தேவையை முதலில்கவனத்தில் கொண்டே ஒரு நாட்டின உற்பத்தி திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும். இவை மாத்திரம் அல்ல மிகுதி இருப்பின் அன்னிய செலாவணி வருவாயை கவனத்தில் கொள்ள முடியும். வருகின்ற வருமானமும் விவசாய, மீன்பிடி வளர்ச்சிக்கும். ஆய்வுக்கும், அவர்களின் பாதுகாப்புக்கும் செலவிடப்பட வேண்டும். எமது நாடுகளைப்

பொறுத்த வரை கடல் தொழிலாளர்கள் கடலுக்கு சென்றவர்களை காணவில்லை என்றால் உறவினர்கள், நண்பர் தமது சக்தியைப் பாவித்து அவர்களை தேடுவர். இதற்கு மாற்றீடாக தேசிய கடல் பாதுகாப்பு படை உருவாக்கி அவர்களை கண்காணிக்க வேண்டும்.

விவசாயிகளை எடுத்துக் கொண்டால் கிருமிநாசினி, விசத்தாக்கு வெள்ளப் பெருக்கு போன்றவற்றின் தாக்குதலுக்கு உள்ளாகின்ற போது உடனடி நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும்.

## 1.2.2.6.2 சர்வதேச வேலைப்பிரிவினை

கைத்தொழிற் புரட்சியின் வளர்ச்சியானது கொலனித்துவத்திற்கு வழிவகுத்ததுடன், சர்வதேச வேலைப் பிரிவிற்கும் வழிவகுத்தது. இது ஒன்றும் சுதந்திரமான வளர்ச்சியல்ல. இவை சுரண்டலை விஸ்தரிக்கும் போக்காகும். சர்வதேச வேலைப் பிரிவினை என்பது ஒருநாட்டிற்கு தேவையான உற்பத்தி அல்லது நுகர்வு பொருட்களை மற்றைய நாடுகளிடம் இருந்து தருவிப்பதுடன் தனது தேவைகளை பூர்த்தி செய்கின்ற நிலையாகும். சில நாடுகள் உற்பத்தி செய்யாததினால் மற்றைய நாடுகளை தங்கி நிற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. இன்று ஒவ்வொரு நாடுகளும் தமக்கென உள்ளூர் சட்ட திட்டங்கள், வரி அறவிடல் போன்றவைகளைக் கொண்டு இருக்கின்றன. அப்படியான போது பொருளின் தரத்தைப் பொறுத்தும், அதன் கேள்வியைப் பொறுத்தும் அப்பொருளுக்கான வரி, உற்பத்தி செலவு என்பது மாறுபடுகின்றது. மாறுகின்ற போது இவற்றின் மூலமாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்வது லாபகரமானதாகும். சர்வதேச வேலைப் பிரிவினை கொலனித்துவ காலத்தின் போது ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இன்று சர்வதேச வேலைப்பிரிவினையை ஆராயும் இடத்து விளைவுகள் முதன்மையானதாகவும் முக்கியமான விரைவான லாபம் நோக்கம் கருதியும் அதி உச்ச லாபம் கருதியும் தமது ஈடுபாட்டை விஸ்தரிக்கின்றனர். ஒவ்வொரு நாடும் இன்று மற்றைய நாடுகளிற் தங்கியிருக்கின்றன. ஒரு நாட்டில் ஒரு போராட்டம் நடைபெறுமானால் மற்றைய நாடுகளின் உற்பத்தி இதன் மூலம் தடைப்படுகின்றது. இதிலிருந்து உலகம் என்பது எவ்வளவு சுருங்கியுள்ளதை அறிந்து கொள்ள முடியும்.

மலிந்த கூலி, தொழிலாள அமைப்புக்களில் தொல்லை குறைவு. மேலைநாடுகளில் இருக்கின்ற சட்ட ரீதியான பாதுகாப்பு என்பது இங்கில்லை. இதன் காரணமாக சட்டத்திடம் இருந்து பிரச்சினைகள் தொல்லைகளை நிறுவனங்கள் எதிர்க்கொள்ள வேண்டியதில்லை. அப்படி தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்வார்களாயின் ஆளும் வர்க்கத்தின் பாதுகாவலனான இராணுவம், பொலிஸ் ஆகியவை மேற்கத்தைய நிறுவனங்களையும் உள்ளூர் தரகர்களையும் பாதுகாக்கின்றது.

ஏகாதிபத்தியங்கள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF, WB) போன்றவற்றால் மாத்திரம் உலக நாடுகளை தமது சித்தத்திற்கு படி நடப்பிக்கவில்லை. மாறாக பற்பல சர்வதேச ஒப்பந்தங்களின் மூலமாக பொருளாதார வர்த்தக நலனைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். இந்த ஒப்பந்தங்களின் விளைவாகவும், மேற்கு நாடுகளின் அழுத்தத்தில் இருந்து சற்று விலகுவதற்காக பிராந்திய வாதம் உருவாகியது. இந்தப் பிராந்திய வாதமானது மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களுக்கு சவாலாகவும் அமைந்தது என்பதை வரலாற்றில் காணக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக (அணிசேரா நாடுகளின் ஒன்றியம்) ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தினைப் பார்க்க வேண்டும். மேற்கு நாடுகள் பற்பல ஒப்பந்தங்கள் மூலமாக தமது பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கிறது. மேற்குலக நாடுகள் தமது நாடுகளில் கிளர்ச்சி ஏற்படாதவாறு அவற்றைத் தணிப்பதை மையமாகக் கொண்டே செயற்படுகின்றன. உலக வர்த்தக நிறுவனத்தின் மூலம் எமது நாடுகள் ஒப்பந்தம் செய்து கொள்கின்றன. ஒப்பந்தத்தின் மூலமாக கனிப் பொருளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்கின்றன. அக்கனிப் பொருளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலை மலிவானதாகும். இதன் மூலம் பொருட்களின் விலையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் (மேற்கு நாட்டு) நுகர்வோர் திருப்தி அடைகின்றனர். குறைந்த விலையில் கனிப்பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் பெறப்படும் மேலதிக லாபமானது முதலாளித்துவ அரசினைப் பாதுகாக்க உதவுகின்றது.

முதலாளித்துவ அரசினைப் பேணுவது என்றால் அதற்கான மூலதனமானது மேற்கூறிய (இவை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது இதன் அர்த்தம் இவை இரண்டு முறைகள் மாத்திரம் என்றாகாது) வற்றின் மூலமாக பெறப்படுகின்றது. பெறப்பட்ட மூலதனத்தை ஆதாரமாகக் கொண்டு வேலையற்றோர், சுகயீனமுற்றோர் இப்படியான சமூக நலத் திட்டங்களுக்கு செலவிடுகின்றனர். இதன் மூலமாக சமூகக் கொந்தளிப்பினை (இதனை மீறி இடம்பெறுகிறது) தணிக்க முயற்சி செய்கின்றனர். இவ்வாறான அரசியல் மூலம் தனது நாட்டு மக்களிடையே நுகர்வின் அளவை அதிகரிக்கின்றனர். ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவும் ஏதுவாக உள்ளது. இவ்வாறான தொழிற்பாட்டின் காரணமாக குட்டிப் பூர்சுவாத் தன்மையை உருவாக்க முடிகின்றது.

ஆனால் இதற்கு மாறாக நவகொலனிய நாடுகளில் நடைபெறுவது என்னவோ தலை கீழாகத்தான். இந்நாடுகளானது கடன் சுமையைச் சுமப்பதுடன் சமூகநல சேவைகளுக்காக பயன்படுத்த நிதியில்லாமல் இருப்பதனால் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுக்க முடியாது போவதினால் மக்களிடையே மனக்கசப்புக்களும் விரக்தியும் ஏற்படுகின்றன. இந்நிலையில் ஒரு தேசிய இனத்தின் மீது

இன்னொரு தேசிய இனத்தையும், ஒருகிராமம் மீது ஒரு நகரத்தின் மீதும், ஒரு சாதியினர், மறுசாதியினர் மீது மோதும் காட்சியைக் காணக் கூடியதாகவுள்ளது. ஒரு நாட்டு எல்லைக்குள் பல தேசிய இனங்கள் இருக்குமானால் நேரடியாகவே மற்றைய தேசிய இனங்கள் சுரண்டப் படுகின்றன. அதாவது முழு இலங்கையானது சர்வதேச ஏகபோக நிறுவனங்களின் சுரண்டலுக்கு ஆளாகின்றது.

அதேவேளை சுரண்டலின் தன்மைக்கு எதிராக அனைத்து தேசிய இனங்களும் போராடாமல் தமக்குள்ளேயே மோதுகின்ற நிலைதான் தற்பொழுது பெரும்பான்மையான நாடுகளில் இடம்பெறுகிறது. மேற்கு அரசுக்கு எதிராக இல்லாமல் நவகொலனிய நாடுகளின் (தரகு முதலாளித்துவ) அரசுகளானது மேற்கு நாடுகளுக்கு, எமது கதவைத் திறந்து விடுவதன் மூலம் மேற்கத்தைய ஏகபோக நிறுவனங்கள் கட்டற்ற சுரண்டலில் ஈடுபடுகின்றன. இந்தக் கட்டற்ற சுரண்டலை போக்குவதற்கு மேற்கத்தைய தொழிலாளர் வர்க்கத்தின் உதவி இல்லாமல் வெற்றி பெறமுடியாது.

## 1.2.2.6.3 குழந்தை உழைப்பு

சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுவது நிலப்பிரபுத்துவத் சமுதாயத்திற்கு முன்னராக இருந்த சமுதாயங்களிலும் காணப்படுகின்றன. எனினும் அந்த விதமான சமூகத்தை கொண்ட அமைப்பானது தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதை மாத்திரம் கொண்ட சிறிய அலகைக் கொண்டதாக இருந்தது. இந்த சமூமானது மாற்றத்திற்கு உள்ளான போது, உழைப்பை வழங்க போதுமானதாக இல்லாத போது சிறுவர்கள் உழைப்பை பெறும் நிலை திணிக்கப்பட்டது. இந்தச் சிறுவர்கள் தேனீர் கடைகளிலும், தொழிற்சாலைகளிலும் முதலாளித்துவத்துடன் அறிமுகம் செய்யப்பட்டனர். தமிழ் நாட்டில் தீப்பெட்டித் தொழிற்சாலை, நிலவிரிப்பு (Carpet) செய்யும் தொழில் முயற்சியிலும் இந்தியா, பாக்கிஸ்தான் போன்ற நாடுகளிலும் பயன்படுத்துவது பிரபல்லமாகும்.

கறையான் எவ்வாறு புற்றினைக் கட்டி பாம்பிடம் பறி கொடுக்கப்படுவது போலவே, சிறு கைகளால் சிறுகச் சிறுக செய்யப்பட்ட பொருட்கள் என்பது விற்பனைச் சந்தையில் வருகின்ற போது அந்தச் சிறுவர்கள் கொடுக்கின்ற உழைப்பு நேரமும், உழைப்புச் சக்தியும் கவனிக்காமல் விடப்படுகின்றது. (இந்த முறையான உற்பத்திப் போக்கான வறிய நாடுகளைப் பொறுத்தவரையில் எல்லா உற்பத்தி, மறுஉற்பத்தி முறைகளிலும் நிகழ்கின்றது.) இந்த பொருட்களின் மூலமாக பெறப்படுகின்ற லாபம் என்பது தேசிய அரசுகள் பெற்றுக் கொள்வதில்லை. மாறாக லாபம் என்பது சர்வதேச நிறுவனங்களிடத்தில் அடைகின்றது. இதன் மூலம் பெரும் லாபத்தை அடைகின்றனர். சிறுவர்களுக்கு கொடுக்கப்படும் கூலியைக் கணிக்கின்ற

போது ஒப்பிட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற நாட்டின் கூலியிலும் பார்க்க அதிகமாகத் தான் இருக்கும். ஆனால் விற்பனை செய்யப்படுகின்ற உள்நாட்டின் பொருளின் விற்பனை செய்யப்பட வேண்டிய விலை, கூலி ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது பல பத்துமடங்கு மலிவானதாகும்.

மலிவான கூலியைக் ஒப்பிட்டு அளவில் கொண்டதாக இருப்பினும் அவை அந்த நாட்டிற்குரிய நிலையாகும். ஆனால் மலிந்த கூலியில் இருக்கின்ற போது அந்தக் கூலியின் நிலையில் இருந்து தொழில் நிறுவனங்கள் கூலியைக் கொடுக்கின்றன. ஆனால் அடிப்படை கூலியை நிர்ணயித்து கொள்ள தேசிய அரசாங்கங்கள் முடிகின்ற போதும், இந்த விதமான பொருட்களின் உற்பத்திக்கும், ஏற்றுமதிக்கும் மேற்கு நாட்டுச் சந்தையில் விற்கப்படும் விலையில் இருந்து கணிக்கப்பட்டு அதற்கு ஏற்றவாறாக விலையை தீர்மானிக்கவும், அதற்கு ஏற்றவாறு தேசிய அரசுக்கள் திருப்பதி கொள்ளும் வகையில் வரியை அறவிடவும் முடியாத நிலை இருக்கின்றது. இவை உலக வர்த்தக நிறுவனம் ''பின்தங்கிய நாடுகளின் விவகாரங்களில் இது தலையிட்டு அதிகாரம் செலுத்தும், அந்தந்த நாட்டு குடிமக்களுக்கு உலக வர்த்தக நிறுவனம் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு கிடையாது. ஜெனிவாவில் உள்ள முகம் தெரியாத அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் உலக வர்த்தக நிறுவனம் எனப்படும் இந்த சூப்பர் அரசாங்கம் மாற்றப்பட முடியாததாகும். (பக். 9 காட் – டாட்சி புதியசனநாயகம் வெளியீடு) இந்த நிலை என்பது சர்வதேச ஒப்பந்தங்கள் மூலமாக முதலீட்டு நிறுவனங்களுக்கு சலுகை கொடுக்கின்றது. இதனால் சிறுவர்கள் உழைப்பை தடுத்து நிறுத்துவது முடியாத காரியம் இது வர்க்கப் புரட்சியின் மூலமாக மாத்திரமே தடுக்கக் கூடியதாகும்.

வறிய சிறுவர்கள் பாடசாலைக்கு செல்ல முற்படுகையில் பலவகையான இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. வறிய நிலை காரணமாகவும், சில வேளைகளில் தாழ்த்தப்பட்ட சாதி காரணமாகவும் ஆசிரியர்கள் பாகுபாடாக மாணவர்களை நடத்தும் நிலை இடம்பெறுகின்றது. இவை மாத்திரம் அல்ல இன்றைய காலத்தில் நுகர்வுப் பொருட்கள் மீதான நாட்டத்தினால் அணிந்து கொள்ளும் ஆடையின் ஏற்படும் வித்தியாசத் தன்மை காரணமாக பாகுபாடு எற்படுகின்றது. அதாவது பிள்ளைகளுக்கு (adidas, nike McDonald உணவுவகை) அடிடாஸ், நைக்கி போன்ற சின்ன உடுப்புக்களும், அமெரிக்க உடனடி உணவுகளும் இவர்களுக்கு தேவையானதாகும். ஓய்வு நேரத்தில் மாணவர்கள் பங்குபற்றக் கூடிய பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு அணிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பம், நண்பர்கள் வட்டம் குறிகிவிடுகின்றது.

மேலை நாடுகளை எடுத்துக் கொண்டால் மேற்குறிப்பிட்ட பிரச்சனைகள் இருக்கும். தமது தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு சிறுவயதிலேயே

வேலை தேடி அலைகின்றனர். இவர்களை குறிப்பாக அமெரிக்க உடனடி உணவுவகை சிற்றுண்டி கடைகளில் வேலைக்கு அமர்கின்றனர். அதேவேளை சிறுவர்கள் பிச்சை எடுப்பது, நிலத்தில் கிடக்கும் சில்லறைக் காசை எடுப்பது, களவும் எடுக்கின்றனர். பொழுது போக்கு வசதி, சிறுவர்களுக்கு இடையிலான வித்தியாசங்கள் சிறுவர்களை வளர்ச்சியை தடுக்கின்றது. பாதிக்கப்படும் சிறுவர்கள் ஏற்கனவே பெற்றோர்கள் தனித்துவ வாத சிந்தனையின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட நண்பர்கள், உறவு வட்டத்தைக் கொண்டு இருக்கின்றனர். நேரத்துடன் போராடிக் கொண்டிருப்பதன் காரணமாக சிறுவர்கள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் சரணடைகின்றனர். இதனால் இச்சிறுவர்கள் புற உலகத்துடனான தொடர்புகள் குறைந்து விடுகின்றது. இதனால் இச்சிறுவர்களின் சமூக உறவென்பது மேற்குல தனித்துவவாத சிந்தனைக்கு இணையாக உருவாக்கப்படுகின்றது. அத்துடன் இச்சிறுவர்களின் வாழும் உலகம் என்பது சிறுக்கின்றதுடன் மற்றைய சக சிறுவர்களுடன், பெரியவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் போது பல இடைஞ்சல்களை எதிர்நோக்கவும் வேண்டியிருக்கின்றது.

வளர்ந்து வரும் பொருளாதார மாற்றத்தின் மூலம் தமது இருப்பை இழக்கின்ற போது உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு கூலி வேலைகளில் ஈடுபடுகின்றனர். ஆத்துடன் இன்று மேற்கு நாடுகளின் கொடுமையினால் ஈராக் சிறுவர்கள் தமது எதிர்காலத்தை இழந்து நடுத்தெருவில் நிற்கின்றனர். இது நேரடி தலையீட்டின் காரணமாக ஏற்பட்ட மாற்றத்தை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றன. ஆனால் எமது நாடுகளில் யுத்தத்திற்கு முன்னர் சிறுவர்கள் எவ்வாறு தொழிற் சந்தைக்கு வருகின்றனர் என்பதை அறிந்து கொள்ள பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வதன் மூலமே சாத்தியமானதாகும்.

## 2.2.6.4 வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத்திண்டாட்டம் இன்று உலகம் பூராகவும் பெருகியுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் எனபது சர்வதேசத்திற்கும் பொதுவான நிலையாகும். வேலையில்லாத் திண்டாட்டம் வெவ்வேறு அளவில் பொருளாதார அமைப்புகளுக்கு ஏற்றவாறாக ஏற்படுகின்றது. அதாவது குலச் சமுதாயத்திலும், நிலப்பிரபுத்துவத்திலும், முதலாளித்துவத்திலும் வெவ்வேறாக மக்கள் வேலை இல்லாதவர்களாகின்றனர். இருப்பினும் எல்லா பொருளாதார அமைப்பிலும் நிர்க்கதியாக்கப்பட்ட மக்கள் தமது உழைப்பை

விற்பனை செய்தே தமது தேவைகளை தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்ட இவர்கள் தொழில் வாய்ப்பு இல்லாமல் முதலாளித்துவ பொருளாதார உற்பத்தி முறையினால் நடுத் தெருவில் விடப்பட்டனர். பணத்தை பெருக்குவதை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்ட நிதிமுறையின் ஊடாக செயற்படுத்தப்படும் பொருளாதார முறையானது வளர்ந்த தொழிற் நுட்பமானது வேலையில்லாதவர்களின் தொகையை அதிகரிக்கின்றது.

வேலையில்லாப் பிரச்சினைகள் இருக்கின்ற போதும் அதற்கான மூலகாரணத்தை அறிந்து கொள்ளாததினால் வேலையில்லாப் பிரச்சினை பற்றி சரியான கருத்தை தொழிலாளர் வர்க்கம் பெற்றுக் கொள்ளாத நிலை இருந்து கொண்டிருக்கின்றது. இன்று படித்தவர்கள் இருக்கின்ற போதிலும் படித்ததற்கு ஏற்ப பலர் வேலை கிடைக்காமல் இருக்கின்றனர். ஆனால் கல்வி முறை என்பது மேற்கத்தை பாணியை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் அவர்களின் அறிவிற்கேற்ப வேலைகள் இடைப்பதில்லை. ஆனால் நாட்டின் தேவை கருதி மேற்கொள்ளப்படும் கல்வித் திட்டத்தின் மூலமாக ஒரு நாட்டின் தேவையில் பொருட்டு தொழிலாளர்களை உருவாக்க வேண்டும். ஆனால் இதற்குக் கூட நாடு தனது திட்டத்தை செயற்படுத்த முடியாதுள்ளது. இன்று எத்தனையே படித்தவர்கள் கனடாவிற்கும். அமெரிக்காவிற்கும் செல்கின்றனர். இவர்களின் திறமை என்பது சொந்த நாட்டில் பயன்படாது போகின்றது. இதனால் நாடு நவீன தொழில் நுட்பத்தில் வளர்ச்சியடையாத போக்கை காணமுடிகின்றது.

இன்று மேற்கு நாட்டு நிறுவனங்கள் தொழிற்சாலைகளை ஆசிய நாடுகளுக்கு நகர்த்துவதனால் மேலைநாட்டு தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். ஆனால் இந்தத் தொழிலாளர்கள் இவர்கள் வறிய நாடுகள் மீது பகைமை பாராட்டுகின்றனர். ஆனால் நடப்பது என்னவென்றால் மலிந்த கூலியின் காரணமாக நகர்த்தப்படுவதால் வறிய நாட்டு தொழிலாளர் வர்க்கத்தின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பயன்படுத்தி அவர்களை சுரண்டுகின்றனர். இந்த தொழிலாளர் வர்க்கத்தினர் முன்னர் குறிப்பிட்டது போன்று எந்தவித சட்ட பாதுகாப்பு இல்லாமல் செயற்படுகின்றனர். இவர்கள் எந்த நேரத்திலும் வேலையிலிருந்து அகற்றப்படலாம். அத்துடன் இவர்களின் சக்தியை உறுஞ்சிய பின்னர் இவர்களை நிர்க்கதியாக விட்டுச் செல்ல முடியும். மேற்கு நாட்டு தொழிற்சாலைகள் இதனையே செய்கின்றன.

உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மேலைதேசங்களில் அவர்கள் செய்யும் வேலை நேரத்தை கணிப்பிடும் பொழுது, உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் அதன் விற்பனை விலை பல மடங்காகும். இதனால் மேற்கு தேசங்கள் சிலவற்றில் தமது தேச விவசாய உற்பத்தியை தொடர்ந்தும் செயற்படுத்த

சலுகைகள் வழங்குகின்றது. இது உலக வங்கி, சர்வதேச நாயண நிதியம் ஆகியவற்றிற்கு முரணானதாகும். இவ்வாறான கொள்கை போக்கை ஐரோப்பிய ஒன்றியமும் எதிர்க்கின்றது. மேற்கு தேசங்கள் தமது உற்பத்தியில் இருந்து பெறப்படும் லாபத்தை அதிகரித்துக் கொள்ள தொழிலாளர்களை இறக்குமதியும் செய்கின்றது. தற்காலத்தில் வறிய நாடுகளில் இருந்து வரும் அகதிகளை தமது நோக்கத்திற்காக பாவிக்கின்றனர். கழுவுதல், துப்பரவு செய்தல், மற்றும் தோட்ட வேலைகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள், வெளிநாட்டவர்கள், அகதிகள் என குறைந்த கல்வித் தரத்தை கொண்டவர்களை வெள்ளையர்கள் செய்ய முடியாததை வறுமையில் வாடும் நிலையை பயன்படுத்தி செய்கின்றனர்.

அமெரிக்காவில் கலிபோனியா மாநிலத்தில் முந்திரிகை தோட்டத்தில் குறைந்த ஊதியத்தில் வேலை செய்கின்றனர். இவர்கள் தொழிற்சங்கத்தில் இணைந்தால், எதிர்த்துப் போராட்டம் நடத்தினால் குடிவரவு அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டு அவஸ்தைக்கு உள்ளாவர்.

ஸ்பானியா நாட்டில் (30000) தொழிலாளர்கள் வதிவிட அந்தஸ்து கிடைக்காமல் இருக்கின்றனர். இவர்களை அரசாங்கம் திருப்பி அனுப்ப போவதாக முடிவெடுத்துள்ளது. இதற்கு பெரும், சிறு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலை தேசங்களில் அகதிகளாக இருப்பவர்களைக் கொண்டு குறைந்த கூலி கொடுத்தும், நேர அளவை மீறி வேலை வாங்குகின்றனர். இவை ஆட்சியாளர்களுக்கு தெரிந்தாலும் அகதிகள் அந்தஸ்து விண்ணப்பம் பரிசீலிக்கும் காலம் வரையில் அகதிகள் வாழ உதவி புரிய வேண்டிய கடமையில் இருந்து தாம் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டும், வர்க்க (முதலாளித்துவ) விசுவாசத்தின் பொருட்டும் கண்டும் காணாதவர்கள் போல் இருக்கின்றனர். இவை மாத்திரம் அல்ல கணணியில் பயிற்சி பெற்ற திறமையான தொழிச் சக்தியை இறக்குமதியும் செய்கின்றனர். இவர்களின் தேவையான (தொழிற்) உற்பத்திசக்தியை உருவாக்கும் பண்ணைகளாக வறிய தேசங்கள் நவகொலனிகள் இருக்கின்றன.

மனித வளம் பெருகியுள்ள நிலையில் அதன் சக்தியை விரையமாக்குவதும், மீதமாக சனத்தொகையை வைத்திருப்பதுமே முதலாளித்துவத்தின் இருப்பு அடங்கியுள்ளது. மனித வளம், அதன் தேவை ஆகியவற்றை கணிப்பில் கொண்டு தொழில் நுட்பம் பயன்படுத்தாத வரை வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க முடியாது..

★

## 1.2.2.6.5 சுற்றாடல் மாசுபடல்

பூகோளத்தில் பல மாற்றங்கள் இடம் பெறுகின்றதினால் வெப்பம் அதிகரிக்கின்றது. கடல் நீர்மட்டம் அதிகரிக்கின்றது. வாயு மண்டலத்தில் சேதம் ஏற்படுகின்றது. இதனால் வெப்பம் அதிகரிக்கின்றது, மழை வீழ்ச்சியில் மாற்றம் ஏற்படுகின்றது. நீர்மட்டம் உயர்வதினால் இருக்கின்ற நிலப்பரப்பு இல்லாமல் போகின்றது. சிறிய தீவுகள் இல்லாமல் போகின்றது. பங்களாதேசமே இல்லாது போகும் எனவும் கணிக்கப்படுகின்றது. இன்றைய உலகில் பலவிதமான வாயுக்கள், பயன்படுத்தப்படும் எரிபொருள் சக்திகள் உற்பத்தியின் நோக்கம் கொண்டு பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் லாபம் கொடுக்கக் கூடியது எதுவோ அதுவே தெரிவு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றது.

இன்றைய உலகின் காலநிலையானது கடந்த 500 வருடங்களுக்கு பின்பாடு தான் இவ்வளவு பெரிய மாற்றங்கள் ஏற்பட்டது. ஆனால் கடந்த 150 வருடத்தில் 0.3 இருந்து 0.6 செல்சியஸ் ($C^{O}$) வெப்பமும், 10 – 25 (Centimeter) சென்ரிமீற்றர் கடல் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. இந்தப் போக்கில் சூழல் மாற்றமடைந்து செல்லுமாக இருந்தால் 2030களில் இரண்டு மடங்காகவும், 2100 களில் கைத் தொழில் புரட்சிக்கு முந்திய 3 மடங்காகவும் கைத் தொழில் புரட்சிக்கு முந்திய காலத்தை விட காலநிலையில் மாற்றம் ஏற்படும் எனவும், வெப்பநிலை 1 – 3.5 $C^{O}$, 15 – 95 வரையிலான கடல் நீர்மட்டமும் ஒப்பீட்டு ரீதியில் உயரக் கூடும் என ஐ. நா ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

முதலாளித்துவ நாடுகள் தமது நிலம் வெளிகளை தரிசாக விட்டுவிட்டு எமது தேசங்களில் இருந்து உணவுப் பொருட்களை, மூலப்பொருட்களை வரவழைக்கின்றனர். இதனால் எமது தேசங்களின் காடு இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் கால்நடை வளர்ப்பை, வேட்டையாடுதல் போன்றவற்றின் மூலமாக பிழைப்பை நடத்தும் மக்களும், பழங்குடி மக்களும் தொல்லைக்கு உள்ளாகின்றனர்.

வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தினால் உலகின் அனைத்துப் பிரதேசங்களிலும் தொழிற்சாலைகள் நகர்த்தப்படுகின்றன. எந்தெந்தப் பிரதேசம் உற்பத்தி செய்யப்படும் பண்டத்திற்கு லாபகரமானதோ அந்தப் பிரதேசங்களை நோக்கி தொழிற்சாலைகள் நகர்த்தப் படுகின்றன. தொழிற்சாலைகள் அமைக்கும் பொருட்டு செழிப்பான நிலங்கள் அழிக்கப்பட்டன. இதனால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டன. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறப்படும் கழிவுகள் பற்றி அறிவு

பற்றாக்குறை, அரசின் கண்காணிப்பு இல்லாமை என்பன சுற்றாடல் மாசுபடுவதை தவிர்க்க முடியாது உள்ளது. அரசு தொழிற்சாலைகளின் மீது கண்டிப்பாக நடந்து கொள்வதில்லை. ஊழலில் நனைந்திருப்பதினால் அரசு முயற்சி எடுப்பதில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது. மேற்கு நாடுகளும் இந்நிலையை நன்றாகவே பயன்படுத்திக் கொள்கின்றன. மேற்கு நாட்டு நிறுவனங்கள் எமது நாடுகளில் நகர்த்தப்படுகின்றபோது கண்டிப்பான கட்டமைப்பாட்டை முன் வைப்பதில்லை. இதனைப் பயன்படுத்திக் கொண்டு இவ்நிறுவனங்கள் லாபம் சம்பாதிக்கின்றன.

மேற்கு நாடுகளில் தடைசெய்யப்பட்ட கிருமிநாசினிகள் எமது நாடுகளில் பாவிக்கப்படுவதினால் அதன் விழைவு பற்றிய அறிவு என்பது எமது விவசாயிகளுக்கு இல்லாமையினால் சூழல் மாசுபடலைத் தவிர்க்கவும் முடியாதுள்ளது. அரசாங்கங்கள் இவ்வகையான மருந்துவகை இறக்குமதி தொடர்பாக கண்டிப்பாக நடந்து கொள்வதும் இல்லை. இவ்வகையான சூழல் மாசுபடுதலுக்கு மக்களை குறைகூறவும் முடியாது. பணத்தை மாத்திரம் சம்பாதிப்பதை மாத்திரமே நோக்கமாகக் கொண்ட நீதிமுறையே இதற்கு காரணமாகின்றது. அத்துடன் டி.டி.ரி (DDT) யானது 1970 களில் தடைசெய்யப்பட்டிருந்தாலும் அதனை இன்றும் பாவிக்கப்படுகின்றது. இது உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் உறைகின்ற காரணத்தினால் மனிதரின் உடலில் செல்கின்றது. இதனால் பிறக்கும் பிள்ளைகள் ஞாபக சக்தி குறைந்தவர்களாகவும், படிப்பில் கவனம் செலுத்துவது குறைந்து விடுகின்றது என பல எதிர்விழைவுகளை கொடுக்கின்றது. குறைந்த காலத்தில் பயன் பெறும் நோக்கில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறைகளாலும், மீன்வகைகள், மரக்கறிவகைகள் என்பவற்றை புதிதாக (Gene manipulate) சிருஷ்டித்து அமைப்பதினாலும் அதன் இயற்கைத் தன்மையில் இருந்து மாறுபடுகின்றன.

வாகனங்களின் பாவிப்பு என்பது அதிகரித்துள்ளது, விறகிற்குப் பதிலாக வாயுக்கள் பாவிக்கப்படுகின்றது. யுத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது (தற்பொழுது யூக்கோ, ஈராக் மீதான ஏகாதிபத்திய எதேர்ச்சாதிகாரத்தின் பின்னர் யூரோனியத்தினால் ஏற்படும் எதிர்விழைவுகள் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கின்றது. யூரோனியம் அணுஆயுத, அணு மின்ஆலை போன்றவற்றினால் எற்படும் கழிவாகும் Depleted uranium (DU) என அழைக்கப்படுகின்றது.) அதில் பலவாயுக்கள் பாவிக்கப்படுகின்றது, அணு மின்சாரம் பயன் படுத்தப்படுகின்றது, அணு ஆயுதங்கள் மற்றும் விமான போக்குவரத்து, நிலக்கரியின் பாவனை அதிகரிப்பு இவற்றால் பூகோளத்தில் மாற்றம் என்பது அதிகரிக்கின்றது. யுத்தங்களின் காரணமாக எண்ணைக் குதங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் தீவைக்கப்படுகின்றது, தைக்கீஸ் நதி உட்பட நாடுகளின் இயற்கை மாசுபடுகின்றது.

1992 இல் பிரேசிலில் 150 நாடுகள் கலந்து கொண்ட சுற்றுச் சூழல் பாதுகாப்பு மாநாட்டினைத் தொடர்ந்து மீண்டும் ஒரு மாநாடு கூட்டப்பட்டுள்ளது. சூழல் மாசுபடுதலைத் தடுக்கும் முகமாக மார்கழி மாதம் பத்தாம் திகதி யப்பானில் கெயோரோ (Kyoto) நகரில் 170 நாடுகளில் இருந்து பல அரச அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் பங்கு பற்றுகின்றன. இந்த மாநாட்டில் $Co_2$ உட்பட ஏனைய பிரான வாயுக்களின் வெளியேற்றத்தை குறைப்பது, எரிபொருட்கள் சக்தியின் பாவனையை மட்டுப்படுத்துவதும் தொடர்பாக இம்மாநாட்டில் கலந்து உரையாடப்படுகின்றது. சூழலைப் பாதுகார்க்க ஏதுவான மாற்றுச் சக்தியை தேடிக் கொள்ள முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சுற்றுப் புறப்பாதுகாப்புப் பற்றியும் பல விவாதங்கள் ஒவ்வொரு வரும் தமது வர்க்க நலனில் அடிப்படையில் இருந்து செயற்படுகின்றனர்.

இந்த மாநாட்டின் பின்னர் நாடுகள் ஒவ்வொன்றும் சுற்றாடல் சம்பந்தமான கடமைப்பாட்டில் இருந்து செயற்படுமா இல்லையா? என்பது பற்றிய ஊகங்கள் எழுப்புவது எந்தவித பலனையும் தர முடியாது எனெனில் அது உற்பத்தி பற்றிய கோட்பாட்டு நிலையில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும். சில அமெரிக்க தொழிற் சங்கங்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றாது தடுக்க கடுமையாக உழைக்கின்றனர். ஆளும் வர்க்கத்துடன் சேர்ந்து தொழிற்சாலைகளில் இருந்து பெறப்படும் லாபத்தில் அதிகம் பலன் இன்மை ஏற்படும் என்பதால் இதனை எதிர்க்கின்றனர். இந்த ஒப்பந்தம் அறைகுறையாக இருப்பினும் ஒவ்வொரு படியையும் மக்களின் இயற்கையை பாதுகாக்க பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை. ஆனால் அமெரிக்க தொழிலாளர்களும் லாபத்தில் துண்டு விழுகின்றது என்பதற்காக முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து போராடுகின்றனர். என்பது தான் இங்கு விவாதத்துக்கு உரிய விடயமாகின்றது.

இன்றைய உலகில் மாற்றத்தை உண்டுபடுத்தக் கூடிய செயற்பாட்டில் முன்னணி வகிப்பவர்கள். உலகில் தமது தேவைகளுக்காக இயற்கையை சுரண்டி வாழ்பவர்கள் நிச்சயம் பஞ்சப்பராரிகள் இல்லை. ஏனெனில் இவர்கள் தமது அன்றாடச் சாப்பாட்டிற்கே அல்லல்படுபவர்கள். லாபத்தை பெருக்கும் பொருட்டு தமது உற்பத்தி யுத்திகளை கவனத்தில் கொள்கின்றனர். இன்று சீனாவில் வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரத்தை தொடர்ந்து பல வெளிநாட்டு நிறுவனங்கள் குடும்பங்களுக்கு தகுந்த வகையாக கார்களை உற்பத்தி செய்யும் முகமாக ஆலோசனை நடத்தப்பட்டுள்ளன. உற்பத்தியானது மக்களின் தேவையை முன்வைத்து இடம் பெறுவதில்லை மாறாக லாபகரமாதாக, கவர்ச்சிகரமான, ஆடம்பரமானதாக இருக்கின்றதா என்பனவற்றை முதன்மையாகக் கொண்டே பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது. வளர்ச்சியின் தன்மை அளவுகோல், சந்தோசத்தின் அளவுகோல், தேவையின் அளவுகோல், விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்பதில் உள்ள கருதுகோல் மாற்றம் கொண்டதாகவே இன்றைய சமுகம் இருக்கின்றது. பொருளின் நுகர்வின் மீதான நாட்டம், ஐரோப்பா,

அமெரிக்கா என்றதும் அந்த நாடுகளில் தேனும் பாலும் சுரக்கின்றது என்னும் விதமான கருத்தோட்டத்தையும், மாயையுடன் வளர்ந்த சமுதாயத்தில் இருக்கின்ற நுகர்வின் ரசனை என்பது மிகவும் சிக்கலாத்தான் இருக்கின்றது.

அத்துடன் மாற்றுச் சமுதாயம் என்பது ஒவ்வொரு சிந்தாந்தத்திற்கு மற்றைய சித்தாந்தத்தில் இருந்து மாறுபடும். அதற்கேற்றால் போல்தான் அவை பிரச்சாரங்களை மேற்கொள்ளும். அதேபோல் எதிர்ப் பிரச்சாரத்தையும் மேற்கொள்ளும், எமது நாட்டில் சோசலிசம் என்றால் தனிமனிதனுடைய ஆவல்களை பூர்த்தி செய்யமுடியாத, தனிமனிதர்கள் தமது தேவைகளுக்காக எந்த உபயோகப் பொருட்களையும் வைத்திருக்க முடியாத ஒரு சமூக அமைப்பு என பிரச்சாரம் செய்யப்பட்டது. இதில் முக்கியமாக தனிநபர்கள் எந்த சொத்தையும் வைத்திருக்க முடியாத என்ற பிரச்சாரம் மக்களிடையே பதிந்துள்ளது. எமது சமூகத்தின் தன்மையில் இருந்து உதாரணத்தை எடுத்து விளக்கப்படுத்தும் போது இலகுவாக பரிந்து கொள்ள முடியும். நாம் கார் வைத்திருக்க முடியாது, விரும்பிய உடுபிடவை தேர்வு செய்து அணிய முடியாது என்று பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

சோசலிசத்தில் மனிதனுடைய தேவையை முதன்மைப்படுத்துதலும், அவர்களின் தேவைக் கேற்ப உற்பத்தி செய்வதுமாகும். சோசலிச பொருளாதார அமைப்பிற்கு எதிராக பிரச்சாரம் செய்த பணம் படைத்தவர்களின் அதிகாரத்தில் இருக்கும் சக்திகள், இன்று அழிவில் இருந்து காப்பாற்ற மாநாடு கூட்டுகின்றன. முன்னர் நுகர்விற்கு அடிமையாகாமல் இருப்பதற்கும் பெரும்பான்மையான மக்களின் விமோசத்திற்கும் ஆதரவாக சித்தாந்தத்தின் வழியில் இருந்து கருத்துக் கூறியபோது இழிந்து கூறிய அதே சக்திகள், அழிவில் இருந்து பாதுகாக்க இன்று மாநாடு கூடினாலும், இவர்களால் அழிவில் இருந்து இந்தச் சமூகத்தைக் காப்பாற்ற முடியாது. இவர்கள் தமது உற்பத்தியை மக்களின் தேவையை கணக்கில் எடுக்காது கவர்ச்சிகரமான பொருட்கள் ஆடம்பரப் பொருட்கள் என்ற பெயரிலும் சுதந்திரம் ஜனநாயகம் என்ற பெயரிலும் இயற்கை வளங்களை சூறையாடுபவர்கள் பணம் படைத்த நிறுவனங்கள். இந்த நிறுவனங்கள் தமது இலக்கை அடைவதற்காக அனைத்துத் தந்திரோபாயத்தையும் செலவளிக்கின்றனர்.

இன்றைய உலகம் என்பது நுகர்வைத் தான் முன்னுக்கு நிறுத்துகின்றது. அதனால் நுகர்வைப் பாதுகாப்பது முக்கியமாகின்றது. நுகர்வின் அதிகரிப்பை கூட்டுவதற்கு என்றே விளம்பரங்கள் இருக்கின்றன. இந்த விளம்பரங்கள் மனிதரிடையே பலத்த இடத்தைப் பிடித்துள்ளது. இதனால் அதன் பிடியில் இருந்து மீள்வது இலகுவானதாக இருப்பதில்லை. விளம்பரத்துக்கு என்றே எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாக்களை, டொலர்களை பெரும் பணம் படைத்த உள்நாட்டு, சர்வதேச நிதிநிறுவனங்கள் செலவளிக்கின்றன. இந்த விளம்பரங்கள் குழந்தைகளையும், மத்திய தர வர்க்க குடும்பங்களை முதலில்

கவருகின்றன. இந்த நிறுவனங்கள் செய்கின்ற பிரச்சார யுக்தியினால் பலியாகின்ற மக்கள். உழைப்பின் பலனாக பெற்ற பணத்தை மறுபடியும், அந்த நிறுவனங்களின் லாச்சிப் பெட்டிக்குள் தான் செல்கின்றது. இந்தப் பெரிய பகாசுர நிறுவனங்கள் அரசியல் திட்டங்களை தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதனால் இயற்கையைப் பாதுகாக்கவும், பாட்டாளி வர்க்க நலனைப் பாதுகாக்க முடியாது உள்ளது. ஏனெனில் நுகர்வைக் கொள்வது வசதிபடைத்த மக்கள் கூட்டம் பாட்டாளி வர்க்கமோ ஒரு நேரச் சோற்றிற்கு அவதிப்படுகின்றனர். சிறுபான்மை மக்களின் நலனைப் பாதுகாத்துக் கொள்ள தேவைபைப் பூர்த்தி செய்ய இயற்கையின் பெரும் பகுதி பாவாக்கப்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட விகித சனக் கூட்டத்தின் தேவைக்ககாக பெரும்பான்மை மக்களின் நலன் பாதிப்படைகின்றது.

நுகர்வின் மோகத்தை வளர்ப்பதும், ஆடம்பரச் சிந்தனையோட்டத்தையும் அதன் மீதான மாயையை வளர்ப்பது பணம் படைத்தவர்களின் சித்தாந்தமே. இந்த சிந்தாந்தத்தின் தாக்கம் ஆளப்பதிந்துள்ளது. இயற்கையை பாதுகாக்கும் முழுச் திறமையும், சக்தியும் பாட்டாளி வர்க்க சிந்தாந்தத்திற்கு உண்டு. அதற்கே இயற்கையை பாதுகாக்கக் கூடிய வல்லமையும் இருக்கின்றது. எமது நுகர்வுத் தேவைகளின் பால் எமது நாட்டத்தை வைத்து அல்ல. எங்கே இயற்கையை பாதுகாக்க எமது கருத்தைச் செலவளித்துக் கொண்டால், அல்லது அதற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டால், எமது வாழ்க்கையில் மண்வீழுந்து விடும் என்ற நிலையில் இருந்து கொண்டு முடிவெடுத்தல் ஆகாது. இயற்கையின் அழிவைத் தடுப்பதற்கு இயற்கையின் விதியின், எது மக்களுக்குத் தேவை என்ற நிலையின் கீழ் இருந்து தான் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

## 1.2.2.6.6 நகர்ப்புறமயமாதல்

நகர்ப்புறமயமாதல் எமது தேசங்களிலே கொலனியாதிக்கவாதிகளினால் நகரின் உருவ அமைப்பை மாற்றும் படியான நிலை உருவாக்கப்பட்டது. அதேவேளை இந்நிகழ்ச்சியானது கடந்த சில பத்தாண்டுகளாக விரைவாகவே நடைபெற்று வருகின்றது. நகர்ப்புறத்தை நோக்கி நகர்கின்ற இவர்களுக்கு சமூகப் பாதுகாப்பென்பது அறவே கிடையாது. முன்பு எந்த நிலத்தையும் ஆக்கிரமித்து அதில் சிறுகுடிசையைப் போட்டு வாழ்க்கையை நடத்தக் கூடியதாக இருந்து. நிலங்கள் தனியார் மயமாகிய காலத்தில் நிலங்கள் தனிமனிதர்களின் சொத்தாகியது. விவசாயத்தில் ஏற்பட்ட மாறுதல் ஆனது பல மாற்றங்களை உருவாக்கியது. தம்மிடம் நிலம் இல்லாத விவசாயிகள் நிலப்பிரபுவிடம் குத்தகைக்கு எடுத்து பயிர் செய்தனர். இவர்களிடம் தமது பிழைப்பை பறிகொடுத்து விட்டு நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்த விவசாயிகள், மக்கள் இவர்களின் கூலிகளாக மாறினர். தமது சுயசார்பு உற்பத்தி

முறையினை கைவிட்டனர். அத்துடன் பெரும் மூலதனத்துடன் போட்டி போட முடியாத மக்கள் தமது நிலத்தைவிட்டு வெளியேறி கூலி உழைப்பாளிகளாக மாறினர். இவர்கள் தொழிற்சாலைகளில் தமது உழைப்பை வழங்குகின்றனர். கொலனித்துவத்தின் ஆரம்பத்தில் பணப்பயிரையும், பிற்பட்ட காலங்களில் பொதுச் சேவை அலுவலகங்களிலும் வேலை செய்யும் நோக்கில், பட்டாளத்திலும் சேவை செய்பவர்கள் நகர்ப்புறத்தை நோக்கி வந்தனர்.

அத்துடன் பாரம்பரியமாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்தவர்களின் நிலங்கள் பணப்பயிர் செய்வதற்காக மாத்திரம் ஒதுக்குப்படவில்லை மாறாக உல்லாசப் பயணத் துறைக்கும், லாபகரமான தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும் பறிக்கப்படுகின்றது. (மட்டக்களப்பு பகுதியில், தமிழ்நாட்டிலே சில வருடங்களுக்கு முன்னர் றால் வளர்க்கும் பொருட்டு நல்நிலங்கள் பறிக்கப்பட்டு றால் வளர்ப்புக்காகவே பயன்படுத்தப் படுகின்றது.) கால்நடை மேய்க்கும் நிலப்பகுதியை உல்லாசப் பயணத்துறைக்கு கொடுக்கும் முன்னுரிமை காரணமாக கெடுபிடிகளுக்கு ஆளாகியுள்ளது. நகர்ப்புறமயமாதல் சந்தையை நோக்கிய உற்பத்தி முறை அறிமுகப்படுத்தின் காரணமாகவே விரைவுபடுத்தல் இடம்பெற்றது எனலாம்.

தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் ஆதலால் இவர்கள் இன்று நிலங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கு வாழ்ந்தவர்கள், தமது உழைப்பை விற்பவர்கள் நிர்க்கதியாயினர் இனனெரு பகுதியினர் நகர்ப்புறத்தை நோக்கி இடம்பெயர்ந்தனர். இவ்வாறாகவே நகர்ப்புறமாதல் இடம் பெறுகிறது. கைத்தொழில் புரட்சியின் காரணமாக, முதலாளித்துவமாக வளர்ச்சி அடைந்த நாடுகள் சந்தையை மையமாக வைத்து தமது விஸ்தரிப்பை மேற்கொண்டனர். முதலாளித்துவத்தின் உருவாக்கமானது குழந்தை உழைப்பை சந்தைக்கு வரவழைத்தது. இரவு வேலையை, பழகு தொழிலாளர்களை (மார்க்ஸ்) அறிமுகம் செய்தது.

இவ்வாறு நகரங்களை நோக்கி வருகின்ற குடும்ப உறுப்பினர்கள் ஆண் தொழிலாளியை நம்பியே இருக்க வேண்டியுள்ளது. ஆணின் உழைப்பு என்பது முழுக் குடும்பத்தையும் சமாளிக்க முடியாது குடும்ப உறுப்பினர்களும் தமக்கு கிடைக்கின்ற பிழைப்புக்களில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் வறுமைக்கும், சுரண்டலாளர்களிடமும் எதிர்த்து போராடவேண்டியுள்ளது. ''தற்போதைய தொழிலாளி வர்க்கத்தின் தந்தைமார்கள் கட்டாயத்தின் பேரில் நாடோடிகளாகவும் வக்கத்றோர் ஆகவும் மாறியதற்காக தண்டிக்கப்பட்டார்கள்'' (மார்க்ஸ் ப52 – மூ. தோற்றம்) ஏனெனில் இவர்களே எல்லாவற்றையும் இழந்த சுதந்திர தொழிலாளர்களாக முதலில் மாற்றப்பட்டார்கள்.

தமது வாழ்வியலை மேற்கொள்ளும் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்துறையில் அல்லாமல் சில்லறை வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

இவர்களே கூலிவேலை செய்பவர்களாக இருக்கின்றனர். அதாவது மூட்டை தூக்குவது, பொதிசுமப்பது, துப்பரவு வேலை செய்வது உட்பட தொழிற்சாலையில் வேலை பார்ப்பது இவர்களே.

இவர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் வெகு குறைவாகும் இவர்களை எப்பொழுதும் அடுத்த நேரச் சோற்றுக்குத் தவிக்க வேண்டியது தான். இவர்கள் குடியிருக்கும் பகுதிகள் வெகுபின் தங்கிய நிலையில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். வருமானமானது நிரந்தரம் அற்றதாக இருப்பதினால் இவர்கள் சிலர் சிறு சிறு களவு ஏமாற்று வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். இவர்களே உதிரிப் பாட்டாளிகளாவார். இந்தத் தன்மைகளை கொழும்பில், தமிழ்நாட்டில் அகதிகளாகச் சென்ற மக்களிடம் உதிரிப் பாட்டாளிகள் தமது கைவரிசையை காட்டுகின்றனர். ஏமாற்றி பறித்தல் பொலிசில் காட்டிக் கொடுக்கப்படும் என்ற மனப்பயத்தில் வாடகையின் தொகையைக் கூட்டல், பொருட்களுக்கான விலைகளையும் கூட்டல் என்பன முதலான வகைகளிலும் ஏமாற்றப்படுகின்றனர். இந்த உதிரிப் பாட்டாளிகளின் உருவாக்கமானது நிலப் பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவ கட்டத்தை அடைகின்ற போது தொடங்குகின்றது.

## 2.2.6.7 கலாச்சார வேறுபாடுகள்

கலாச்சாரம் என்கின்றபோது மனித கூட்டம் தமது வாழ்கையில் கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் என்பனவற்றை குறிப்பிட்ட வரம்புமுறைகளுக்குள் கடைப்பிடித்து வருவதாகும். ஒவ்வொரு சமுதாயத்திலும் அதன் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவாறான பண்பாட்டு உருவாக்கங்கள் நடைபெறுகின்றன. இவைகள் புவியியல் ரீதியிலும் மாறுபட்டிருக்கின்றன. இந்த சாத்திர சம்பிரதாயங்கள் ஒவ்வொரு வர்க்கத்திற்கு துணைபுரிவதாக எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. இவைகளை நாடு நகரம் எனப் பிரிக்கின்றபோது முற்போக்கு, பிற்போக்குக் கலாச்சாரம் என பிரித்துக் கொள்ளலாம். இவைகளை இன்னும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பழமை, புதுமை என. நவீனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது புதுமையானது முற்போக்குத் தன்மை அடங்கியுள்ளது. எனினும் புதுமையானது ஒடுக்கும் வர்க்கத்திற்கு துணைபோகின்றது. இவற்றில் இருந்து அடுத்த கட்டத்தை நகர்த்துவது முக்கிய பிரச்சினையாகவுள்ளது. அடுத்த கட்டம் என்னும் போது பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை எவ்வாறு நிலைநிறுத்துவது.

கிராமத்திற்கும், நகரத்திற்கும் இடையேயான கலாச்சார, சிந்தனை வேறுபாடு என்பது இருக்கவே செய்கின்றது. வேலைப் பிரிவினை என்பது மாற்றம் இருப்பது போல் இதுவும் இருக்கின்றது. கிராமங்களில் பெரும் பாலும் கடவுள் பக்தி அதிகம் உள்ளதால் விரதம், உபாசம், நித்தம் கோயில் என கிராம

மக்கள் இருக்கின்றனர். தமது பிள்ளைகளும் அவ்வாறே இருக்க வேண்டும் என பெற்றோர்கள் விரும்புகின்றனர். அதற்கு ஏற்றுவாறாகவே வளர்க்கப்படுகின்றனர். நகரங்களை எடுத்துக் கொண்டால் பெரிய வித்தியாசம் இல்லாடினும் நெகிழ்வுத் தன்மை இருக்கத்தான் செய்கின்றது. நகர்ப்புறத்தை அண்டிய பகுதிகளில் தொழிலாளர் வர்க்கப் பிரிவினர்கள் கிராமத்து மக்கள் போல் மதப் பிடிப்பில் வாழ்கின்றனர். ஆனால் நகரத்துப் பூர்சுவா வர்க்கத்தினரின் மதப் பிடிப்பு என்பது தொழிலாளர் வர்க்கத்தினரின் வழிபாட்டுத் தன்மையில் இருந்து மாறுபடுகின்றது.

இவ்வாறான சிந்தனைப் போக்கைக் கொண்ட மக்களிடத்தில் மத அனுசரணைகள் அதிகம் இருப்பதால் மாறுபட்ட சிந்தனையை உடனடியாக எதிர்பார்ப்பது சிரமம். இவ்வாறு மதப்பிடிப்புள்ள மக்களிடத்தில் மதஉணர்ச்சியை விதைப்பது இலகுவானதாகும். இந்தச் நிலையைப் பயன்படுத்தி பூர்சுவா வர்க்கத்தினர் மத உணர்ச்சினை கிளறிவிட்டு தமது காரியத்தைச் சாதிக்கின்றது. இவ்வாறான கீழ்மட்டத்தைச் சேர்ந்த மக்களே மதத்திற்கு ஆதரவான போராட்டங்ளில் முன்னணி வகிக்கின்றனர். படித்த, வசதிபடைத்த சீமான்கள் வீட்டில் ஓய்வெடுக்க, வயிற்றை நிரப்ப வழியில்லாத வறுமைப்பட்ட மக்கள் இரவுபகலாக உழைக்கவும், வதைபடவும் செய்கின்றனர்.

நகருக்கும் நாட்டுப்புறத்துக்குமான கலாச்சார பேதங்கள் பொருளாதார முனைகளில் தென்படுகின்றன. ஏங்கெல்ஸ் தனது அயர்லாந்துப் (மூலவர்களின் தேசிய உணர்வு பற்றிய விடயத்தின் கீழ் பார்க்க) பயணத்தின் போது கண்டதை விவரிக்கும் பொழுது சிந்தனைத் தளத்தில் மாற்றம் இருந்ததை குறிப்பிடுகின்றார். சிங்கள நாட்டில் இதே மாதிரியான சிந்தனை போக்கு இருந்திருக்கின்றது. அவர்கள் தமது உழைப்பை விற்பனை செய்வதை கௌரவ குறைவாக கருதியிருக்கின்றனர். "பிறருக்கு வேலை செய்து கை நீட்டி ஊதியம் வாங்குவது கேவலம் அதனைவிடச் சொந்த நிலத்தில் பாடுபடுவது சுதந்திரமானது, தன்மானம்மிக்கது" (பக். 12 மோகன்ராஜ் – இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்) என்ற சிந்தனைப் போக்கு நிலப்பிரபுத்துவ காலத்தைச் சேர்ந்ததாகும். அந்தச் சமுதாயத்தின் நீதிமுறை என்பது அந்தச் சமுதாயத்துக்குரிய உற்பத்தி முறைக்கு இசைவாகவே இருக்கின்றது.

விவசாய வர்க்கம் புரட்சிக் காலத்தில் இணைந்துக் கொள்ளக் கூடிய சக்தியாக அமைவர் எனினும் இவர்கள் எந்தக் காலத்திலும் மாறும் சமுதாயத்திற்கு சுயேட்சையாக மாற்றம் கொள்ளக் கூடியவர்கள் அல்ல. இந்த விதமான சிந்தனை மாற்றம் நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடையே வேறுபாடு இருந்து கொண்டே இருக்கின்றது. எப்பவும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் பூர்சுவா வர்க்க கலாச்சாரங்கள் இருப்பது போலவே இந்தச் சிந்தனை மாற்றம் வர்க்கத்துடன் சேர்ந்ததாகும்.

இவற்றை நோக்குகின்றபோது நகர்ப்புறத்தைச் சேர்ந்தவர் உற்பத்தி முனைப்பில், வியாபார நோக்கில் கிராமத்தை நோக்கி செல்கின்ற போது அந்தச் சமூகம் கொண்ட நீதி முறைக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்ற போது இரண்டு நலன்களுக்கும் இடையே மாறுபாடு உண்டு. இந்த நிலையில் நீதிமுறை தவறுபவர்களை மக்கள் இழிநிலை கொண்டு அழைப்பர்.

இவ்வாறான சிந்தனை மாற்றம் என்பது பலதளத்திலும் காணப்படுகின்றன. அவைகளை இங்கு நோக்குவோம். நகர்புறத்தே வாழ்பவர்கள் புறஉலகத்துடன் மேற்கொள்ளும் தொடர்பு அதிகமானதாகும். சர்வதேச மயப்பட்ட வர்த்தகமும், நாடுகளுக்கு இடையேயான பரிமாற்றமும், எப்பொழுதும் இல்லாதவாறு இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அதிகரித்துள்ளது. அதிகரித்துள்ள தொடர்புகள் புதிய புதிய பிரதேசங்களை விரைவில் தொடர்பு கொள்ளுக்கூடிய வகையில் அமைத்துள்ளது. அவற்றினூடே ஏகாதிபத்தியங்கள் தமது ஆதிக்கத்தை கொண்டுள்ளதுடன் புதிய தொலைத் தொடர்புச் சாதனங்களின் மூலமாக நகர்புறத்திலே இலகுவாக தமது கலாச்சாரத்தை விதைக்கக்கூடியதாக இருப்பதுடன் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளனர்.

தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி காரணமாக சிலநாட்களில் ஏன் சில மணித்தியாலங்களில் உலகத்தை சுற்றிவரமுடியும் தொலைத்தொடர்பு சாதனங்களின் ஊடாக எவருடனும் எப்பவும் தொடர்பு கொள்ளமுடியும். தொலைக்காட்சிப் பெட்டியின் பயனாக சீரழிவுக் கலாச்சாரத்தை விதைக்கவும் முடியும். மேற்குலகில் வெளிவருகின்ற நிகழ்வுகளை எம்மவர்கள் எவ்வகையாக (Interpretation) புரிந்து கொள்கின்றனர் என்பதில் மாறுபாடாக போக்கைக் காணமுடியும்.

அவ்வாறான பண்பாட்டு உருவாக்கங்கள் தற்காலத்தில் வளர்ச்சியடைந்த தொழில் நுட்பம் காரணமாக தொலைத் தொடர்பு சாதனம், திரைப்படங்கள் மூலமாக விரைவாக பழக்க வழங்கங்கள் பண்பாடுகள் மீது மக்களை கவர்ந்து கொள்ளவும், அதனை பார்த்து ஒழுகவும் நிர்ப்பந்தம் உளவியல் ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றது. இன்றைய நவகொலனிய பொருளாதார பண்பாட்டில் இருந்து ஏகாதிபத்திய கலாச்சார ஒழுக்கத்திற்கு மாற்றம் பெறுகின்ற போது, அதனை பிற்பற்றுகின்ற ஒவ்வொருவருக்கும் பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய விளக்கம் இருக்கும் என்று சொல்ல முடியாது.

உதாரணத்திற்கு ஏகாதிபத்திய பொருளாதார பண்பாடு போதிக்கும் உடை, ஆடம்பர நுகர்வுப் பொருட்கள், தனித்துவவாத சிந்தனையோட்டம் என்பனவற்றை எம்மவர்கள் கற்றுக் கொள்கின்ற போது அவற்றின் பால் ஒரு தெளிவான கருத்தை பெற்றிருக்க முடியுமா என்பதில் கேள்விக் குறியாகும்.

ஒரு பொருளை தேவைக்குப் பாவிப்பது எமது தேசத்தில் என்ன உபயோகத்திற்கு பயன்படுகின்றது என்பதில் மாறுபாடு உண்டு. ஆனால் எமது தேசத்தை பொறுத்தவரை ஒரு ஆடம்பரப் பொருளாக காட்சியளிக்கின்ற போதிலும், உயர் வர்க்கத்தவருக்கோ உயர்வினை வெளிப்படுத்தும் பொருளாக காட்சியளிக்கின்றது. இவற்றின் புரிதலில் வர்க்க நிலையின் மூலமே மாறுதல் அடைகின்றது என்பது முக்கியமானதாகும். மேற்குறிப்பிட்ட பண்பாட்டுப் போக்கை பற்றிய ஆய்வை இங்கு செய்யாத காரணத்தினால் பரந்த வர்க்கப் பிரிவு பற்றிப் இங்கு பார்ப்போம். பெரும் போக்குப் பற்றி இங்கு பார்ப்போம்.

சமூகத்தின் மேல்மட்டத்தில் இருக்கின்றவர்கள் அதனை பின்பற்றி அப்படியே செய்ய முற்படுகின்றனர். இது இவர்களுக்கு சாத்தியமானது ஒன்றே. ஆனால் மேல்தட்டில் உள்ளவர்களைப் பார்த்து கீழ்வகுப்பினர் பார்த்து ஒழுகும் நிலை தோன்றுகின்றது. சமூகத்தில் மேல்தட்டில் உள்ளவர்களுக்கு மேலை நாட்டு உற்பத்தி பண்டங்களை பார்த்தொழுகுவதற்கு பொருளாதார ரீதியான எந்தவொரு பிரச்சனைகளும் இருக்கப்போவதில்லை. மேல்தட்டில் உள்ளவர்கள் மேலை தேச பழக்கத்தை பின்பற்றுவதன் மூலம் மேலைநாட்டு வளர்ச்சிக்கு ஈடாக தாமும் வளர்ந்திருக்கின்றனர் என பாவனை காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. அத்துடன் மேலைதேசத்தின் தேவைகளை இந்த வர்க்கம் நிறைவேற்ற தகுந்தவர்கள் என எண்ணப்பாட்டை ஏற்படுத்தி சேவகம் செய்ய தம்மை தயாபடுத்திக் கொள்கின்றனர். இந்த வர்க்கத்தை பூகோல (உலக) மயமாதல் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கட்டத்தில் மேற்கு தேசத்தவர்களுடன் ஏற்படும் போட்டியில் பாதிக்கப்படும் வர்க்கமாக தோற்றம் பெறுபவர்கள் ஆவர். இவர்கள் மேலை தேசத்தவர்களுகுக்கு நிகரானவர்களாகவும், மேலைநாட்டு மூலதனத்தின் எசமானர்களின் முகவர்களாக (agents) இவர்கள் செயற்படுவர்.

இவர்களுக்கு அடுத்த நிலையில் இருக்கும் வர்க்கத்தினர் மேல் தட்டு வர்க்கத்தைப் பார்த்து செயற்பட முயற்சிப்பர். இந்த வர்க்கத்தவர்களுக்கும் மேலை தேசத்தின் சூழ்நிலை அறிந்து கொள்ள முடியாமலே மேலை தேச பண்பாட்டை ஒழுக வேண்டும் என தூண்டப்படுகின்றனர். இந்தப் பகுதியினரும், அன்றாடங்காச்சிகளும் திரைப்பட மூலமாக தூண்டப்பெறுகின்றனர். திரைப்படங்கள் அறிமுகப்படுத்தும் (Computer) கணணி மூலக் காதல், திடீர் (fast food) உணவு, உடை, ஆடம்பர நுகர்வுப் பொருட்கள் மாத்திரம் அல்ல தனித்துவவாத சிந்தனையோட்டமும் சமூகத்தில் புகுத்தப்படுகின்றது.

குறிப்பாக உலகமயமாதல் மூலம் பெறப்படும் சிந்தனையானது இயற்கையை அழிப்பதில் இருக்கின்ற இறுமாப்பு, நாம் மற்றவர்களிலும் பார்க்க திறமென இன்னொருவர் அழிவில் முன்னேறுகின்ற இறுமாப்பு இவைகள் முன்னரைவிட வேகமாக சமூகத்தவர்களிடையே பரவுகின்றது.

இதனால் பல உறவு முறைகளை தொடர்வதிலும், மாற்ற காலத்தில ஏற்படும் பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பது என்ற பிரச்சனைகளில் தெளிவில்லாமல் பிரச்சனை தொடர்கின்றது.

வெள்ளையர்களிடம் இருந்து பெறப்படும் பண்பாட்டுச் ஏற்றுமதியினை எம்மவர்கள் எவற்றிற்கு பாவிப்பது என்ற ஒரு தெளிந்த கருத்து இல்லாமல் அதனை எம்மவர்களும் பின்பற்றுகின்றனர். இந்தநிலை குறிப்பாக தமிழ் திரைப்படத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. மேலை நாட்டின் இறக்குமதிகளை எவ்வாறு பின்பற்றுவது என்பது பற்றிய பிரச்சினை இருந்து கொண்டேதான் இருக்கின்றது. ஏனெனில் நவீன கால பொருளாதார அமைப்பின் மாற்றம் முதலாளித்துவமாக மேலைநாடுகளில் தான் ஏற்பட்டது. அதுவே முடிந்த முடிவாக மாற்றுத் தீர்வாக முன்னிறுத்தப்படுதல் இதற்கு காரணமாகின்றது.

நகர்ப்புறமானது சர்வதேசத்துடன் தொடர்புகளை எற்படுத்தக் கூடிய நிலையில் இருப்பதால், சர்வதேசத்தின் அழுத்தங்கள் நகர்ப்புறத்தை தாக்குகின்றன. இதனால் சர்வதேசத்தில் ஏற்படும் கலாச்சார பாதிப்புகள் நகரத்திலும் ஏற்படுகின்றது. இந்தக் கலாச்சார வடிவம் உதிரிக் கலாச்சாரமாகவே தென்படுகின்றன. இந்த உதிரிக் கலாச்சாரத்தினை கிராமத்தவர்கள் பார்க்கின்ற போது இது என்ன கலிகாலமடா? என மனதில் முணுமுணுப்பர். ஆனால் நகர்ப்புற மாந்தருக்கோ கிராமத்தில் தென்படுகின்ற பழைமையானது காட்டு மிராண்டித்தனமாக காட்சியளிக்கும். இருவேறு பார்வைகளும் தொடர்ந்து கொண்டிருக்கும். இந்த இரண்டு வகைக் கலாச்சாரங்களிலும் பிற்போக்குத் தனமான கலாச்சார தன்மைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். இந்த இரண்டும் வெவ்வேறு உற்பத்தி உறவுகளைக் கொண்ட கலாச்சார எச்சங்களாக இருக்கின்றது.

கிராமமானது நிலப் பிரபுத்துவத்தின், நகர்ப்புறமானது முதலாளித்துவ உற்பத்தியுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. நகர்ப்புறத்தில் எமது கலாச்சாரத்தில் (ஆடல் கலையானது தமிழ் கலாச்சாரத்தில் இருக்கின்றது.) இல்லாது ஆடல் (Discotec) அரங்குக் கலாச்சாரம் என்பது-அறிமுகம் செய்ப்படுகின்றது. ஆடல் பாடல் கலாச்சாரத்தை ஓய்வு நேரத்தில் மேற்கொண்ட மக்கள் கூட்டத்தில் ஒருபகுதி தொலைக் காட்சிப் பெட்டியின் ரசிகர்களாக மாற, இன்னொரு பகுதியினர் சினிமாவிற்கும், சினிமா நடிகர்களுக்கும் ரசிகர்களாகவும், ரசிகர் மன்றம் அமைத்து அதிலேயே மூழ்கி தமது வாழ்க்கையை அநியாயமாக்கின்றனர். இந்த ரசிகர் மன்ற செயற்பாடுகள் வர்க்க உணர்வை மழுங்கடிக்கின்றது. கற்பனை உலகத்தைக் உருவாக்கிக் கொள்கின்ற சினிமா உலகத்தையே நம்பியிருக்கின்ற ரசிகர்கள் தாம் நடிகருக்கு காட்டுகின்ற ரசிகருக்குரிய அன்புடன் தனது சடங்கு தீர்ந்துவிட்டது எனஉள்ளார்ந்த திருப்தி கொள்கின்றார்கள். இது அந்த ரசிகனுக்குரிய சடங்காகின்றது. ஐரோப்பாவிலோ நிதிமூலதனத்தின்

ஆதிக்கத்தில் சரணடைத்துள்ள உதைப் பந்தாட்ட கழகங்கள் தனக்கு ஆதரவு மன்றங்களை அமைத்துள்ளது. இந்த ரசிகர்களுக்கு நடிகர்களின், அல்லது உதைப்பந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம் பார்ப்பது ஒரு நாளாந்த சடங்கை பின்பற்றிக் கொள்வதற்கு சமானமாகும். இந்தச் சடங்குடன் திருப்தி அடைந்து கொள்கின்றனர்.

இத்துடன் உடுபுடவைகளில் மாற்றத்தையும் கொண்டு வருகின்றது. முதலில் உடுபுடவைகளின் அமைப்பு வடிவம் காலநிலையை அண்டியதாகவே தெரிவுகள் இருந்தது. ஆனால் இன்று பொருளாதார வளர்ச்சியை நிர்ணயம் செய்யும் வகையில் உடுபுடவைகள் மாற்றப்படுகின்றன. உடுபுடவைகள் காலப்போக்கில் விசேட நிகழ்ச்சிகளுக்கு உடுத்துவதையும் காணலாம். இவ்வாறாக பின்னர் உடுபுடவைகளின் நிலையில் மாற்றம் ஏற்படுகின்றபோது பழைய உடுபுடவைகள் நினைவுப் பொருட்களாகவும் மாறிவிடுகின்றன.

முன்பு வீட்டுச் சாப்பாட்டை நம்பியிருக்க வேண்டியிருந்தது. இப்போ சாப்பிடும் சாப்பாடுகள், மரக்கறி, இறைச்சி வகைகள் எல்லாம் உலர்கலன் களில் அடைக்கப்பட்டு விற்பனை நிலையங்களில் விற்கப்படுகின்றன. இதே போல உடனடிச் (Pizza, Hamburger போன்ற Fast food- Mc Donald, Burger King முதலியன) சாப்பாட்டு நிலையங்கள் சந்தி எங்கும் முளைத்துள்ளன. எமது நாடுகளில் இருக்கின்ற சிறு சிறு உணவுக் கடைகளுக்குப் போட்டியாக சர்வதேச நிதிமூலதனத்தின் ஆதரவில் இயங்குகின்ற உணவுக் கடைகள் திறப்பதற்கு நவகொலனிய நாடுகளின் அரசாங்கங்கள் உத்தரவினைக் கொடுத்துள்ளன. இதனால் சிறு முயற்சியாளர்கள் தமது பிழைப்பை பெரும் மூலதனத்திடம் விட்டுவிட்டு நிர்க்கதியாக வேண்டிய நிலையானது நவீனம் என்ற பெயரில் இடம் பெறுகின்றது.

நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்திற்குப் பதிலாக மேற்கு நாடுகளில் நிலவுகின்ற கலாச்சாரத்தை மாற்றீடாக முன்வைக்கின்ற நிலமை தான் இன்று இருக்கின்றது. இந்த வகையான சிந்தனை பகுத்தறிவுத் தந்தை பெரியாரிடம் இருந்தது. (அவர் வாழ்ந்த காலம், உலகப் பார்வை என்பவற்றைக் கொண்டே அவரின் பார்வை அணுகப்பட வேண்டும்.) இவ்வாறான கலாச்சாரம் என்பது இருக்கின்ற விடைத்தாளைக் கொண்டு பிரச்சினைகளை தீர்க்க முயற்சிப்பதாகும். இவற்றிற்கு மாற்றீடாக புரட்சிகர கலாச்சாரத்தை முன்வைக்க வேண்டும். அந்தக் கலாச்சாரம் எந்த வித பாகுபாடுகளையும் காட்டாத கலாச்சாரமாக இருக்கவேண்டும். ஒருமனிதன் சாறம் (லுங்கி) (இவ்வாறான நிலையை வலியுறுத்திய கதை மனஓசை அல்லது புதிய கலாச்சாரத்தில் என்ற இதழில் 1986 படிக்க முடிந்தது.) உடுத்திக் கொண்டு தன்னுடைய தொழிற்சாலைக்கோ அல்லது நிகழ்ச்சிகளுக்கோ செல்லக் கூடி வகையில் கலாச்சாரம் உருவாக்கப்பட வேண்டும்.

புதுமை என்பதற்காக முற்போக்காகிவிடவும் மாட்டாது, பழமை என்பதற்காக பிற்போக்கு என்றாகியும் விடமாட்டாது. எந்தக் கலாச்சாரத்தை

எடுத்துக் கொண்டாலும் முற்போக்கு பிற்போக்கு தன்மை கொண்டதாகவே அனைத்தும் இருக்கின்றன. இவைகள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். ஆனால் புதுமை முதலாளித்துவ சிந்தனைப் புரட்சியில் இருப்பதால் சீர்திருத்தத்திற்கு உரியதாகிவிடுகின்றது. இதன் காரணமாக புதியதை வரவேற்க வேண்டும். ஆனால் அதுவே தீர்க்கமான முடிவிற்குரியதாக என்ற கருத்தை விதைப்பதற்கு எதிராக போராட வேண்டும். முதலாளித்துவத்தின் வெற்றியுடன் முதலாளித்துவ சக்திகள் திருப்தி அடைந்து விடுவர். இந்த நிலைப்பாட்டை மாற்றியமைத்து போராட்டத்தை முன்னெடுக்கும் வல்லமை பாட்டாளி வர்க்க தலைமைக்கே உண்டு.

நகர்ப்புற மக்களுக்கும், கிராமப் புறமக்களுக்கும் வேறுபாடு காணப்படுகின்றது. இந்த இரண்டு வகையான கலாச்சார முரண்பாடுகள் இருந்தும் இவை தேசிய போராட்ட காலத்தில் கவனத்தில் கொள்வதில்லை எனலாம். இந்த இரண்டு கலாச்சாரங்களின் விளைவாக இருவரது தேவைகளும் வேறுபட்டே இருக்கும். நகர்புறத்தே வாழ்பவர்களிடையே இரண்டு நிலமைகள் காணப்படுகின்றது. அதாவது பூர்சுவா ஜனநாயகத்தை அனுபவிப்பதுடன், கலாச்சாரத்தை அனுபவிக்கும் தன்மையாகும். சிந்தனைப் பாட்டில் வித்தியாசத்தை அவதானிக்க வேண்டியுள்ளது. இவை புரட்சிக்கு பிந்திய காலத்திலும் இவ்வகையான வேறுபாடுகள் தொடரவே செய்யும் நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடையேயான இடைவெளியை குறைக்க இடையறாது போராட வேண்டியுள்ளது.

## 1.2.2.6.8 நிதி மூலதனமும் விளையாட்டும்

விளையாட்டுக்கள் சிறுவர்களாக இருக்கின்ற போதே அந்த நாட்டு ஆட்சியாளர்கள் அச்சிறுவர்களுக்கு ஒழுங்கு செய்து கொடுக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளனர். இந்த நிலை என்பது பல நாடுகளில் அவ்வாறு இல்லை. எமது தேசத்தில் விளையாட்டை அரசியல் நலனுக்காக பாவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து துடுப்பெடுத்தாட்ட விளையாட்டு வீரர்களை தென் பகுதிகளுக்கு கொண்டு வந்து விளையாடுவதன் மூலம், தேசிய ரீதியில் பாகுபாடு காட்டப்படவில்லை என்ற போக்கை உருவாக்குவதும், அதாவது இவர்களுக்கு தேசிய ரீதியில் அனுபவம் கிடைக்கின்ற போது இவர்கள் தமது திறமையை வெளிக்கொணர சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டதாக காட்டிக் கொள்கின்றனர். இந்த வீரர்கள் அடிப்படை வசதியில்லாத நிலையில் சாதாரண நிலையில் பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் தமது திறமையை தேசிய ரீதியில் வளர்ச்சி பெற முடியாது. உதைப் பந்தாட்டமும் நலிந்த நிலையில் தான் இருக்கின்றது.

இன்றைய உலகில் விளையாட்டுக்கள் அனைத்தும் பணத்தினை சம்பாதிப்பதை மையமாக வைத்தே இயங்குகின்றன. எமது நாடுகளில் நடிகர்களுக்கு சங்கம் இருப்பது போல், ஒவ்வொரு உதைப் பந்தாட்டக் கழகங்களுக்கும் ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. இந்த கழகத்தின் மூலமாக மக்களை மயக்க நிலையில் வைத்திருக்க உதவுகின்றது. இவை எமது தேசங்களில் இருக்கின்ற நடிகர் சங்கங்களுக்கு இணையானதாகும். உதைப்பந்தாட்டத்தின் மூலமாக போராட்டம் நடை பெறுகின்ற நாடுகளில் உள்ள சிறுவர்களை திசை திருப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் போக்கு எவ்வளவு நடைமுறைச் சாத்தியம் என்பது பற்றி முடிவுகள் எதுவும் இதுவரை வரவில்லை. ஆனால் இவர்கள் எவ்வாறாக நடைமுறைப்படுத்தப் முயல்கின்றனர் என்பதைப் பார்ப்போம். பலஸ்தீனத்தில் உதைப்பந்தாட்டம் மற்றும் ஓய்வு நேர பொழுது போக்கு திட்டங்களை மேற் கொள்கின்றனர். இவர்கள் இந்த திட்டத்தில் ஆரம்பிக்கும் போது கூறிய தமது நோக்கமாக பலஸ்தீன சிறுவர்களை தெருக்களில் இஸ்ரேலிய ராணுவத்துடன் தெருக்களில் சட்டையிடாமல் அவர்களை இவ்வகையான பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு சிறுவர்களின் கவனத்தை திசை திருப்புவதாகும்.

இந்த மன்றங்களுக்குப் பின்னால் மக்கள் திரள்வது ஒருபுறமிருக்க கழகங்கள் மீது மூலதனத்தை அதிகமாகக் கொண்ட சக்திகள் உதைப்பந்தாட்டக் கழகங்களை வாங்குவதிலும் அவற்றில் முதலிடுவதிலும் முனைகின்றன. (A.C. Milan) மிலான் இத்தாலிய உதைப்பந்தாட்டக் கழகமான (Silvio Berlusconi) பலஸ்கோனிக்குச் சொந்தமானதாகும். பணம் என்பது முக்கிய பகுதியாகும் விளையாட்டு வீரர்களை பல மில்லியன் பவுண் கொடுத்து விலைக்கு வாங்குகின்ற நிலை என்பது தற்பொழுது உள்ளது. இதிலும் குறிப்பாக உதைப்பந்தாட்டமே முக்கிய அங்கம் வகிக்கின்றது. இன்று விலை கூடிய வீரர்களாக பிரேசில் நாட்டு வீரர்களே முன்னணியில் நிற்கின்றனர். ஆனால் பெண் வீரர்களுக்கு இவ்வாறான பெறுமதி என்பது விளையாட்டுச் சந்தையில் இல்லை. இது கைப்பந்தாட்டப் போட்டியாக இருந்தால் என்ன அல்லது உதைப்பந்தாட்டப் போட்டியாக இருந்தால் என்ன ஆண்களிலும் பார்க்க மாறுபடுகின்றது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக உதைப்பந்தாட்டம் நல்ல பணத்தை இலகுவில் பெறக் கூடிய ஒரு ஊடகமாக இருப்பதே முக்கியமானதாகும். கிரிக்கெட் விளையாட்டின் மூலமாக குறிப்பிட்ட சில நாட்டு வீரர்களே பணத்தைச் சம்பாதிக்கின்றனர். பணம் படைத்த கழகங்கள் சிறந்த வீரர்களை வாங்க முடிகின்றது. இவர்கள் இதன் மூலம் தமது தரத்தை காப்பாற்றக் கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக பல வெற்றிக் கிண்ணங்களை தமதாக்கிக் கொள்கின்றனர். இதனால் பார்வையாளர்களும் கூடுகின்றது, வெகுமதிப் பணமும் கூடுகின்றது. இவர்கள் தமது பணத்தை பங்குச் சந்தையில் முதலிடுகின்றனர்.

இன்று இந்தக் கழகங்களிடம் மூலதனம் அதிகமாக இருப்பதினால் சிறந்த உதைப்பந்தாட்ட வீரர்களை எந்த விலை கொடுத்தும் வாங்கக் கூடிய நிலையில் இருக்கின்றன. பலநாடுகள் தமது சிறந்த வீரர்களை இழந்து விட்டிருப்பதினால் தமது நாட்டு கழகங்கள் நலிவடைந்து செல்வதை தடுக்க முடியாது இருக்கின்றனர். இந்த பணம் படைத்த நாடுகள் தமது மூலதனத்தின் பலம் காரணமாக ஐரோப்பிய உதைப்பந்தாட்டக் கழகங்களை உருவாக்கவும் முயற்சி செய்யக் கூடும் அதில் நிதி மூலதனத்தில் பலம் படைத்த சக்திகள் மாத்திரம் இந்த லீக்கில் (super premier League) வசதிபடைக்காத கழகங்கள் நலிவடையவும், மூலதனத்தில் பலம் படைத்த சக்திகள் தமது பலத்தை பெருக்கிக் கொள்ளவும் முடிகின்றது. புதிய லீக்கினை உருவாக்கும் முயற்சி தொடர்பாக முன்னணி நாடுகளுடன் ஐரோப்பிய உதைப்பந்தாட்டச் சம்மேளனம் சமரசத்திற்கு வந்துள்ளனர்.

தென் ஆசிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளில் உதைப்பந்தாட்டம் தொழில் முறைக்கு உட்பட்டதாக வளர்ந்துள்ளது. எமது நாடுகள் இந்த நிலைக்கு வளராமலும் அதனை வளர்த்தெடுக்க சரியான அடிப்படை இல்லாத நிலை இருக்கின்றன. ஒரு நாட்டின் அரசியல் சட்ட உருவாக்கத்தில் தலையிட முடியும், இந்தப் போக்கு பீரேசிலில் விளையாட்டுக் கழகம் தொடர்பான சட்ட உருவாக்கத்தில் உலக உதைப்பந்தாட்ட சம்மேளனம் தலையிட்டுக் கொண்டது. உலக உதைப்பந்தாட்ட சம்மேளனம் (FIFA) போட்டியில் இருந்து விலத்தி வைக்க முடிவு எடுக்கலாம். இந்த நிலையில் உதைப்பந்தாட்ட அமைப்பே ஒரு நாட்டின் இறைமையை பாதிக்கின்ற நிலையில் அச்சுறுத்தல் விடலாம்.

விளம்பர நிறுவனங்கள் தற்பொழுது போட்டி போட்டுக் கொண்டு வளர்கின்றது. முன்பு வியாபார நிறுவனங்கள் சுதந்திரமாக போட்டி நடக்கின்ற போது மைதானத்தில் விளம்பர தட்டிகளை வைத்துக் கொள்ள முடியும். இப்போ அப்படியல்ல, இதற்கென முகவர் நிறுவனங்கள் உருவாக்கம் பெற்றுள்ளன. இதன் காரணமாக விளம்பரத்தில் ஏகபோகம் கொண்டுள்ளது. இந்த முகவர்களின் ஊடாகவே விளம்பரங்கள் செய்யப்பட வேண்டும். இதனால் இந்த முகவர்கள் அதிகளவு லாபத்தை இதனால் சம்பாதிக்கின்றனர். இவ்வாறே Nike, Adidas, Reebok போன்றவைகள் காலணி நிறுவனங்கள் தமது காலணிக்காக விளம்பரம் செய்யத் தயாராக இருக்கின்ற நாட்டு அணிகளுக்கும் கழகங்களுக்கும், வீரர்களுக்கும் மில்லியன் டொலர்களை வழங்க தயாராக இருக்கின்றன.

எமது நாடுகள் பின்தங்கிய நிலையில் இருந்து வெளியே வரவேண்டுமென்றால் நிச்சயம் இந்தச் சமூக அமைப்பின் கீழ் சாத்தியம் அல்ல. இன்று பணம் படைத்த கனவான்களால் பரந்து பட்ட மக்களின் திறமை, விளையாட்டு என்பது அனைத்து மக்களும் பங்கு பற்றி புரிந்து உணர்வை வளர்க்கின்ற நிலையை உருவாக்கக் கூடிய நிலையில்

விளையாட்டுக்கள் இருக்க வேண்டும். அதனை விடுத்து பணம் சம்பாதிக்கின்ற நிலையும், வசதிபடைத்த கனவான்கள் கழகங்களை உரிமை கொள்வதன் மூலம் உள்நாட்டில் விளையாட்டு கழகங்கள் நலிவடைகின்ற நிலையும், ரசிகர் கழகங்களை நிறுவி கழகங்களுக்குப் பின்னால் சென்று பணம் படைத்த கனவான்களை மென்மேலும் வளர்த்து எடுக்காத நிலையை உருவாக்க வேண்டும்.

## 1.2.2.6.9 பிறநாடுகளில் உழைப்பாளிகள்

எமது நாடுகளில் இருந்து பல லட்சக் கணக்கானவர்கள் மேற்கு நாடுகளுக்கு செல்கின்றனர். இவர்களில் வேலை தேடிச் செல்பவர்களாகவும், (பலர் ஏதிலிகளாகவும்,) குடிபெயர்ந்தும் செல்கின்றனர். பின்வரும் நாடுகளுக்கு செல்கின்றனர்.

1. மத்திய கிழக்கு நாடுகள்

2. சிங்கப்பூர் போன்ற நிதி மூலதனத்தைக் கொண்ட சந்தை நாடுகள்.

3. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள்.

ஐரோப்பிய நாடுகளுக்கு இரண்டாம் உலக யுத்தத்தின் மூலம் ஏற்பட்ட தொழிலாளர்களின் பற்றாக் குறையினை தீர்க்கும் பொருட்டு தொழிலாளர்கள் அந்நாடுகளுக்கு வரவழைக்கப்பட்டனர். இவர்கள் கலாசாலையில் கல்வி கற்றவர்களாவும், உடலுழைப்பை மாத்திரம் வழங்குபவர்களாகவும் இருந்தனர். வெளிநாட்டுத் தொழிலாளர்கள் ஒப்பீட்டு ரீதியில் உடலுழைப்பை வழங்குபவர்களாக அதிகம் இருந்தனர். ஜேர்மனியை எடுத்துக் கொண்டால் துருக்கி தேசத்தில் இருந்து தருவிக்கப்பட்டவர்களாவே இருக்கின்றனர். இவர்களே ஜேர்மன் தேசத்தை மீளவும் கட்டி எழுப்பியவர்கள். வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மலிந்த நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்து தமது வாழ்க்கையைப் போக்காட்டுபவர்களாக இருக்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்களுக்கு தகுந்த கூலி என்பது கிடைப்பதில்லை. தொழிற் சங்கம் அமைத்துப் போராடும் உரிமை மறுக்கப்படுவது மட்டுமல்ல, சட்ட ரீதியான பாதுகாப்பும் ஒப்பீட்டளவில் கிடைப்பதில்லை.

இவர்கள் எமது நாடுகளிலிலே எமது தாய் தகப்பன் கஸ்டப்பட்டு வளர்த்து அதாவது வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி படிப்பித்து பெரியவர்களாகி எமது வரிப்பணத்தில் உயர் கல்விகற்று வெளிநாடு சென்று தமது உழைப்பைச் செலுத்துகின்றனர். இவர்கள் வெளிநாடு செல்வதற்கு முன்பு விசா எடுப்பதற்கு என நாயாப் பேயா அலைகின்றனர். சென்னை மவுண் ரோட்டில்

பார்த்தால் இவர்களை அடையாளம் காணலாம். உலகப் பொலிஸ் எனப் பெயரெடுத்துள்ள இந்த அமெரிக்க நாய்களின் விசாவிற்கு விண்ணப்பிப் பதற்காக இரவிரவாக உதவித் தூதரகத்தின் முன்னால் காத்து நிற்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஒரு நிழல் தட்டி கூட அமைத்துக் கொடுக்க வக்கில்லாத நிலையில் இருக்கின்றனர். (இதிலிருந்தே இவர்கள் எம்மை எப்படி நடத்துகின்றனர் என்று நம்மவர்கள் புரிந்து கொள்ளவில்லை) எம்மவர்களின் மனநிலையை நோக்கும் போது எப்படியாவது கஸ்டப்பட்டு மேற்கு நாடுகளுக்கு செல்ல வேண்டும் சென்ற பின் எமது கஸ்டங்கள் எல்லாம் போய்விடும் வசந்தம் நமது வாழ்வில் வீசும் என்ற நிலப்பிரபுத்துவக் காலச் சிந்தனையே எனலாம்.

அப்படியே இவர்கள் மேற்கு நாடுகளுக்குச் சென்றாலும், குடிபெயர்ந்தவர் கள் அனைவரும் மூலவளம் என அந்நாடுகள் கணிப்பிடுவதில்லை. இப்படி இருக்கையில் மேற்குலக நிறுவனங்கள் எமது நாடுகளில் நகர்த்தப்படுகின்ற போது அங்கே எம்மவர் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இவர்களின் உழைப்பினால் அதிக லாபத்தை மேற்கு நாடுகள் உபரியாக கொண்டு செல்கின்றன. கொலனித்துவ காலத்தில் இடம்பெற்றதை மார்க்ஸ் பின்வருமாறு வர்ணிக்கின்றார். "**இந்த சந்தேகத்திற்கு இடமற்ற சார்பு உறவைத்தான் வாங்குவோனுக்கும் விற்போனுக்கும் இடையிலான மூலதனம் என்ற பண்டத்தின் சொந்தக்காரன், உழைப்பென்ற பண்டத்தின் சொந்தக்காரன் ஆகிய சம அளவு சுதந்திரமான இருபண்டச் சொந்தக்காரர்களுக்கு இடையிலான சுதந்திர ஒப்பந்த உறவாக உருமாற்றம் செய்ய முடிகிறது ஆனால் கொலனிகளில் இந்த அழகான கற்பனை சிதறடிக்கப்படுகிறது. அறுதியான சனத்தொகை தாய்நாட்டை விட இங்கே வெகுதுரிதமாகப் பெருகுகிறது, ஏனெனில் பல உழைப் பாளிகள் ரெடிமேடு வயது வந்ததோராக இவ்வுலகில் நுழைகின்றனர், எனின் உழைப்புச் சந்தை எப்போழுமே இருப்புக்குன்றியுள்ளது. உழைப்பின் சப்ளை-கிராக்கி விதி பொடிப் பொடியாக நொறுங்கி விழுகிறது. ஒரு புறம், பழைய உலகம் சுரண்டல் மற்றும் 'துறவின்' தாகமெடுத்து மூலதனத்தை இடையறாது உள்ளே போடுகிறது.**" (ப 121 –மூ.தோற்றம்) இவ்வாறு அந்நாடுகளுக்கு இடம் பெயர்ந்தவர்கள் மூலமாகப் பெறும் நன்மைகளை மறந்து சுமையாகக் கருதுகின்றனர். அத்துடன் இன்று படித்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் கனடா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று பணக்கார நாடுகளையே வளம்படுத்துகின்றனர். பணக்கார நாடுகளோ முன்னேறுகின்றன. எமது நாடுகளோ உழைப்பாளிகளை, அறிஞர்களை இழந்துவிட்டு தவிக்கின்றது. எமது நாடுகளிலோ ஒருவருக்கிடையில் சண்டையிட்டு மடிகின்றனர்.

குடிபெயர்ந்தவர்களிடையே பல சமூகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவைகள் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் சமூக உறவானது படிப்படியாக மாற்றம் அடையாது, பொருளாதார நலனின்

அடிப்படையில் அமைந்த சமூக உறவின் காரண்மாக பலாத்காரமாக சிதைவிற்கு உள்ளாவது காரணமாகும். மேற்கில் குடி பெயர்ந்தவர்களிடையே பல மாற்றங்கள், பிரச்சினைகள் எழுகின்றன. இந்த மாற்றம் என்பது பொருளாதார நலனும், இந்தச் சமுதாயத்தின் தாக்கமும் காரணமாகின்றது. மேற்குச் சமுதாயம் என்பது எமது நாட்டுச் சமுதாயத்தைப் போல் அல்லாது சிந்தனைப் போக்கில் மாறுபட்ட போக்கைக் கொண்டதாகும். இந்தச் சமுதாயம் எவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகின்றது என்பதைப் பார்ப்போம்.

உதிர்ந்த நிலையில் இருக்கின்ற சமூகத்தின் தன்மையானது நீண்ட பொருளாதார நலனில் அமைந்த சித்தாந்தத்தினால் வளர்க்கப்பட்ட சமுதாயத்தின் விளைச்சலில் அறுவடை செய்யப்பட்ட சமுதாயமே மேற்கில் இருக்கின்றது. இந்தப் போக்கானது பொருளாதாரத்தின் அடித்தளத்தின் மீது கட்டப்படுகின்றது. இந்த சிந்தாந்தத்தின் அடிப்படையில் அமைந்த வாழ்க்கை முறை என்பதே வாழ்கின்ற குடிகளின் வாழ்க்கைப் பொறிமுறையாகின்றது.

முதலாம் நிலை → → இரண்டாம் நிலை

பொருளாதார அமைப்பு → → மனிதனை தாக்குகின்றது

அதாவது அவர்களின் சித்தம் என்பது அவர்களின் உணர்வுநிலை தீர்மானிக்கவில்லை மாறாக பொருளாதார உற்பத்தி முறைதான் தீர்மானிக்கின்றது. இதன் காரணமாக மனிதர்கள் தமக்கு தேவையான முறைகளை தெரிவு செய்து கொள்ள சந்தர்ப்பம் உள்ளது என அரச அமைப்பு முறை தனது பிரச்சார வல்லமை ஊடாக தமது பிரசைகளை உள்வாங்குகின்றது. இது அரசின் தொழிற்பாட்டில் ஒரு பகுதியாகும். தனித்துவபடுத்தும் போக்கு எல்லாத் துறைகளிலும் ஏற்படுத்தப்படுகின்றன. இந்த நிலைக்கு அனைத்து பிரிவினரும் இசைவாக்கம் அடைகின்றனர் அல்லது இதுதான் அமைப்பு என தனது பிரசைகளுக்கு திணிக்கின்றது. இந்தப் போக்கு திடீரென நடந்து முடிவதில்லை. இது நீண்ட காலப் போக்கில் நடைபெறுகின்றது. இந்தப் போக்கு தொடங்கப்பட்டு அது உச்சிலைக்கு வளர்ந்திருக்கின்ற நிலையியே எம்மவர்கள் புதிய கட்டத்திற்கு காலடி வைக்கின்றார். எமது நாடுகளில் படிமுறை வளர்ச்சியின் ஊடாக பொருளாதார மாற்றத்தினாலும் அதன் பாலான சமூக உறவைக் கொண்டு வளர்ச்சிடையாமலும் இருந்த நிலையியே. இந்த நாடுகளில் வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். இரண்டு விதமான சமூக அமைப்புக்களையும் இங்கு பார்ப்போம்.

ஒருவருக்கு மேற்பட்டோர் மையப்பட்ட நலன் அடிப்படையில் முடிவெடுத்துச் செயற்படும் சமூக அமைப்பில் பின்வருவனவற்றை காணமுடியும்.

- பெரியவர்களுக்கு மரியாதை கொடுத்தல்
- சிக்கலான (Multiplex சமூக உறவு) குறுக்கு நெடுக்கு உறவுமுறை அமைப்பு நட்பு, உறவுகளிடையே நெருக்கம்.
- தார்மீகக் கடமை (அன்புத் தொல்லை)
- நிலப்பிரபுத்துவக் கலாச்சார எச்சங்கள்
- பெண்கள் அதிகமாக வீட்டில் இருப்பவர்கள்
- கோயில் வழிபாடுகளில் அதிகநாட்டம் திருவிழாக்கள் கொண்டாட்டங்களில் அதிகம் ஈடுபாடு கொண்ட நிலை.
- தமது குடும்ப பொருளாதார நிலையை மேம்படுத்துவதில் கடமையுணர்ச்சி.
- முடிவுகள் சமூக அமைப்பில் கவனத்தில் கொள்கின்ற நிலையில் இருந்து எடுக்கப்படுகின்ற சமூக அமைப்பு.

தனித்துவவாத சிந்தனையில் அமைந்து முடிவெடுக்கும் சமூக அமைப்பில் பின்வருவனவற்றை காணமுடியும்.

- மதப் பற்றில் இருந்து அதிகம் விடுதலை பெற்ற தன்மை.
- பழக்க வழக்கங்கள் வெறும் சம்பிரதாயத்துடன் முடிந்து விடுகின்ற தன்மை.
- நிறுவனமயப்பட்ட சமூக அலகுகள்
- தனித்துவப்படுத்தப்பட்ட நிலை.
- தார்மீகக் கடமை உதிர்ந்த நிலை, தனித்துவமான சமூக உறவுகள்.
- ஒடும் புளியம் பழம் போல் உறவுகள் இருப்பதுடன் ஒருவரை ஒருவர் பாவித்த பின்னர் தூக்கி எறியும் போக்கு.
- சமூக அமைப்பின் அழுத்தம் (Stress) காரணமாக அவஸ்தைப்படுகின்ற நிலை.
- மாட்டின் கன்றை வைத்து தாயின் பால் குடிக்க விடாமல் வேறுஇடம் மாற்றப்படுவது போல் மனித உறவுகள் சிதைந்த நிலை.

எனினும் இங்கு மேற்கத்தைய நிலையை புரிந்து கொள்வதற்கு உதவியாக இங்கு சிலகுறிப்பு அடிப்படையில் இங்கு பார்க்கப்படுகின்றது. இவற்றை

மனதில் வைத்துக் கொண்டு தனிமனித அலகுகளிடையே எவ்வாறு தாக்கம் இடம் பெறுகின்றது எனப் பார்ப்போம்.

ஒவ்வொரு தனிமனிதர்களும் தனித்தனியே இருந்த நிலையில் நண்பர்கள் பலர் இருந்தனர். பின்னர் அவர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொள்ளும் செயற்பாட்டிற்கு இறங்குகின்றனர். அத்துடன் அவர்களுக்கென குடும்பம் என்ற நிலை வந்தபோது முன்பிருந்த அதே நிலையைக் கொண்ட தொடர்புகளை மற்றைய சமூக உறுப்பினர்களுடன் வைத்துக் கொள்ள முடியாத நிலை தோன்றுகின்றது. இதன் காரணமாக இவர்களின் தொடர்பு உலகம் என்பது சுருங்கிக் கொண்டு செல்கின்றது. சுருங்கிக் கொண்டு செல்வதினால் முன்பிருந்த தொடர்புகள் அறுந்து போகின்றது. இதன் காரணமாக ஓய்வு நேரம் என்பது தொலைக் காட்சிக்கு முன்னால் செலவளிக்கும் நிலையைத் தோற்றுவிக்கின்றது. இந்தப் பழக்கமானது தொடர்ந்தும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களையும் தாக்குகின்றது.

ஏனெனில் அந்தச் சமூகத்தின் பொறிமுறை என்பது நியதியாக இருப்பதனால் அதன் ஒவ்வொரு உறுப்பினர்களும் அந்தத் தாக்கத்தில் இருந்து தப்ப முடியாது.இந்நிலை காரணமாக அவர்களின் குழந்தைகளும் குறிப்பிட்ட வரையறையைக் கொண்ட வட்டத்தினுள்ளே பழக வெளிக்கிடுகின்றது. குழந்தைகளுக்கும் தொலைக் காட்சி பெட்டியே தொடர்பு உலகமாகின்றது. இதனால் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமான தொடர்பு கூட குறைந்து போகின்றது. இதன் காரணமாக குழந்தைகளுக்கும் தொடர்புகள் இன்றி பற்றாக்குறை ஏற்படுகின்றது. இந்த இடைவெளி குழந்தைகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்தக் குழந்தைகள் பின்னர் தாம் வளர்ந்து பெரியவர்கள் ஆனபின்பும் அதிகமாக சனத் தொகை உள்ள சமூகத்தில் வாழ்கின்ற போது அவர்களுக்கு உளத்தாக்கம் ஏற்படுகின்றது. இதனால் அவர்களுக்கு மற்றவர்கள் அன்புத் தொல்லையை தாங்காது தவிக்கின்ற நிலை ஏற்படுகின்றது.

எமது சமூகம் என்பது அன்புத் தொல்லை உள்ள சமூகம் இவற்றை விரிவாகப் பார்ப்போம். சிறுவர்கள் புகைப்பிடிப்பது, மதுபாவிப்பது மற்றும் எமது சமூகம் தவறு என வரையறுத்த விடயங்களை சிறுவர்கள் செய்தால் எவர் என்றாலும் அதனைத் தட்டி உறுத்துவர். இதனால் சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் எமது தேசங்களில் இருந்து வந்திருக்ன்றது. இவ்வாறான பழக்கத்தில் வாழ்ந்து வந்த புலம் பெயர்ந்த மக்கள் தமது பிள்ளைகளும் தமது பழக்க வழக்கத்திற்கு அப்பால் நடந்து கொள்கின்றது என அறிகின்ற போது அவற்றைத் தடுக்க முனைகின்றனர். தமது கலாச்சாரம் பாளாகப் போகின்றது என பெற்றோர்கள் பாதுகாக்க பரிதவிக்கின்ற நிலை ஒருபுறமிருக்க, இவர்களின் பழகுகின்ற வட்டம் என்பது உப–உதிரிக் கலாச்சாரங்களையும் உருவாக்கின்றது. இவர்கள்

இளைஞர்களாக இருப்பதினால் தமது வாலிபப் பருவத்தில் அவ்வாறான நிலைகளுக்கு தாவுகின்ற இளைஞர்களையும் இச்சமூகம் உருவாக்கின்றது.

''**எந்தளவுக்கு மனிதர்கள் புறநிகழ்வுகளை உருவாக்குகிறார்களோ அதே அளவுக்குப் புற நிகழ்வுகள் மனிதர்களை உருவாக்குகின்றன என்பதை இது புலப்படுத்துகிறது.** (பக் 65 மார்க்ஸ் –ஃபாயபர்க் பொருள் முதல்வாத எதிர்ப்பு, திரட்டு 1)

இந்த நிலையில் தமது தேவைகளை தாமே தனித்து நின்று செய்யக் கூடிய நிலையை இந்த பொருளாதார அமைப்பு உத்தரவாதம் செய்வதினால் தமது தேவைகளுக்கும் மற்றவர்களை தங்கியிருக்க வேண்டிய நிலையை இவ்பொருளாதார அமைப்பு தனித்துவ மயப்படுத்தல் என்ற செயற்பாட்டின் காரணமாக கொண்டு வரப்பட்ட அமைப்பு முறை இவ்வளர்ச்சிப் போக்கிற்கு உந்துதலாக இருக்கின்றது. எனினும் இவர்களிடையே தூய்மையான தனித்துவவாதச் சிந்தனையில் அமைந்த சமூக உறவுத் தன்மையைக் காணமுடியாது. ஆனால் சமூக உறுப்பினர்களை தமது தேவைகளுக்கு மட்டும் பாவித்துவிட்டுப் போகின்ற சமூக பொறிமுறையை (mechanism) உள்ளிட்டதாக மாறுகின்றனர்.

போட்டிக்கு ஈடுகொடுக்க வேண்டும் என்றால் தன்னுடைய வேலையைப் பார்க்க வேண்டிய நிலமை மற்றவர்களின் சோலிகளில் இறங்க முடியாது. ஏன் ஓய்வு நேரத்தில் பக்கத்து வீட்டு பெண்கள் கூடிக்கதைப்பதும், பேன் பார்ப்பதும், நல்ல நாள் பார்த்து வேலைக்குச் செல்லும் பழக்கம், ஆண்கள் சீட்டு ஆடுவதும் மரத்தின் கீழ் இருந்து அரட்டை, அடிப்பது போல் மேற்குத் தேசங்களில் செய்ய முடியாது. தனிமனிதர்களாக இருந்த போது நிறைய நேரம் இருந்த குறுக்கு நெடுக்கு உறவுமுறை அமைப்பு இருந்தது. தொழிற்துறை முனைப்பு, வேலை வாய்ப்பு, கல்வி நிலை காரணமாக ஒவ்வொரு தொழிலாளர்களும், மக்களும் பொது உலகில் போட்டி போட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இதன் காரணமாக அதற்கு ஏற்றவாறாக உயர் கல்வி, சுகஉடல் (stress –உளத்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பிரச்சினைகள் முரண்பாடுகள் தவிர்ந்த) அமைப்பு அவசியமாகின்றது. இந்த நிலையை நோக்கி சமூக உறுப்பினர்களை அதன் பால் நடக்க உந்துகின்றது. இந்த வேறுபாடு நாட்டுக்கு நாடு. கல்வி தகமைகள், வாழ்கின்ற நாட்டில் குடும்ப உறுப்பினர்களின் தொகை, தொழில் வாய்ப்பு, நட்புவட்டம் ஆகியவைகளைக் கொண்டு மாறுபடுகின்றது. இந்த சமூக நிலையை புரிந்து கொள்வதற்கு இந்த வரையறையை நினைவில் வைத்துக் கொள்வது அவசியமாகின்றது.

பொருளாதாரத்தில் அமைப்பானது தனிநபர்களிடையே பொருளாதார நிலையில் தங்கியிருக்க வேண்டிய நிலையை தவிர்க்கின்றது. ஆனாலும் குடும்ப உடைவைப் பார்த்துக் கொண்டிருக்க அனுமதிக்க பழைய

அமைப்பினுள் வாழ்ந்தவர்கள், வளர்க்கப்பட்டவர்கள் இடம் கொடுப்பதில்லை எத்தனை பத்தாண்டுகள் வெள்ளையர் தேசங்களில் இருந்தாலும் வெள்ளையராகாமல் இருக்க முடியும். அதே போல் அவர்களின் பிள்ளைகளும் 100 வீதமான வெள்ளையர் போல் ஆகமுடியாது. (Gipsies) நாடோடிகள் எனப்படுபவர்கள் ஐரோப்பாவின் பல தேசங்களில் வாழ்கின்றனர். இவர்கள் தொடர்ந்தும் தமது பண்பாட்டைக் காப்பாற்றிக் கொண்டு வருகின்றனர், யூதர்களும் எவ்வாறான மக்களிடத்தில் வாழ்ந்தாலும் தமது அடையாளத்தை பாதுகாத்தே வருகின்றனர். இவ்வாறு பலநூற்றாண்டுகள் பலதரப்பட்ட மக்களடையே வாழ்கின்ற போதும், ஒரு சமுதாயம் தனது பண்பாட்டை பாதுகார்த்து வர முடிகின்றது எனின் சில பத்தாண்டுகளில் புலம் பெயர்ந்தவர்கள் இடையேயும் பெரும் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. ஆனால் மாற்றங்கள் ஏற்படத்தான் செய்கின்றது. பொருளாதாரத்தில் வெற்றி கொள்ளும் பொருட்டும், ஏகாதிபத்திய பொருளாதாரதிற்கு சமூக உறுப்பினர்கள் அனைவரும் உதிர்ந்த நிலையில் இருப்பது அவசியமாகின்றது.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பு உறவுகளை சிதைவடையச் செய்கின்றது என்பதைப் பார்த்தோம். ஆனால் குடிபெயர்ந்தர்களிடையே இடம் பெறும் சமூக உறவுகளின் சிதைவானது பொருளாதார நலனின் பொருட்டே உடைகின்றது. எனினும் இது மெதுவாக சுதந்திர வளர்ச்சியின் ஊடாக இடம் பெறவில்லை. மாறாக சில வருட வாழ்க்கையில் திடீரென சில வருட வாழ்க்கையில் பின்னராக உடைவுகள் ஏற்படுகின்ற போது, அந்த தாக்கம் ஏன் நடைபெறுகின்றது என்று, சமூக உறுப்பினர்களிடையே புரிந்து கொள்ளப்படாது போவதால், தனிநபர்கிடையே, குடும்ப உறுப்பினர்களிடையே பகைமை வளர்கின்றது ஒருபக்கம் இருக்க, சமூகச் சிதைவுகளுக்கு பொருளாதார அமைப்புத் தான் காரணம் என்பது புலம்பெயர்ந்த மக்களாலும், மேற்கத்தைய தொடர்பு சாதனங்களாலும் புரிந்து கொள்ளப்படுவதில்லை.

இந்த சமூகச் சிதைவை தடுக்க முன்வருபவர்கள் பழமைவாத சிந்தனை கொண்டவர்களும் களத்திற்கு வருகின்றனர். இந்த வகையானவர்கள் மதத்தினை முன்வைத்து செயற்படுகின்ற போது இயல்பிலேயே போலியுணர்விற்கு உள்ளான மக்கள் அதற்கு பலியாகின்றனர். இந்தப் போக்கை நாசிச, முதலாளித்துவ தேசிய, மத அடிப்படைவாத நிலைப்பாட்டில் தோன்றுபவர்களுக்கு இந்த மாதிரியான நிலையே இருப்பிற்கு பாய்விரித்துக் கொடுகின்றது. இலங்கை வரலாற்றில் கலாச்சார மாற்றத்தை தடுத்து நிறுத்தும் முயற்சியானது தர்மபாலாவினாலும், ஆறுமுகநாவலராலும் ஆரம்பிக்கப்பட்டது. தர்மபாலாவினால் சிங்களப் பகுதிகளிலும் ஆறுமுகநாவலரால் ஆரம்பிக்கப்பட்ட பாதுகாப்புப் போராட்டம் யாழ் சைவ வேளாளம் என்ற வடிவத்தினுள்ளும் அமைந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் சமூகத்தின் சிதைவை தடுப்பதற்காக பல முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

1. மதத்தில் சரணாகதி அடைதல்.

2. ஒன்று கூடல் நிகழ்ச்சிகள், ஆடல்பாடல், நடன நிகழ்ச்சிகள், மொழிக் கல்வி.

3. புலம் பெயர்ந்த கலாச்சார முயற்சி, விடுதலை இயக்கத்தினை நோக்கிய செயற்பாடுகள்.

என்பன நடைமுறையில் இருக்கின்றபோது தமிழ் சமுதாயத்தை விட மற்றைய சமுதாயங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் இதில் இருந்து மாறுபடுகின்றன.

## 1.2.2.6.10 தனிநபர்களின் பாத்திரம்

ஒரு சமூகத்தில் தனிமனிதர்களின் பாத்திரம் எவ்வகைஎளானது என அறிதல் முக்கியமாகின்றது. இந்த அறிதல் பல பிரச்சினைகளை தீர்க்கவும், தனிமனிதர்கள் தமது சமூகப் பாத்திரம் என்னவென அறிந்து அந்தச் சமூத்தின் அவலத்திற்கு எதிராக போராடவும், அமைப்புக்களில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கவும் முடியும். தனிநபர் பற்றிய போக்கில் பின்வருவனவற்றிற்கு தெளிவு தேவை.

1. தனிநபர்கள் தமது திறமையை வளர்த்தெடுக்க சந்தர்ப்பம் கொடுக்கும் தத்துவம்.

2. முதலாளிய சித்தாந்தத்தில் அமைந்த தனிநபர் முயற்சியாளர், தனிநபர் முயற்சி மூலமாக செயற்பாட்டை செய்வதும், அதுவே சாத்தியமானது எனக் கருதும் சித்தாந்தப் போக்கு.

அ. பூகோள ரீதியில்

ஆ. நகர, தேசிய மட்டத்தில்

இ. அமைப்பு மட்டத்தில்

ஈ. பொருளாதார துறைகளில் தென்படுகின்றன.


3. தனித்துவவாதம்.

முதலாளித்துவ வளர்ச்சியானது சமூகத்தில் இருக்கின்ற ஒரு மனிதர் இன்னொரு மனிதர் மீது கொள்ளும் தார்மீகக் கடமையை இல்லாது போக்குகின்றது. பழைய சமூக உறவுகள் என்பன உடைகின்றது. அதற்குப் பதிலாக புதிய பொருளாதார உற்பத்தி முறைக்கு ஏற்ப புதிய சமூக உறவுகளை

அறிமுகப் படுத்துகின்றது. இந்த அறிமுகப்படுத்தல் என்பது தமது பொருளாதார கொள்கையை செயற்படுத்த ஊடகமாக இருக்கின்ற அனைத்துத் துறைகள் மூலமாக ஒவ்வொரு தனிநபர்களும் அந்த பொருளாதார அமைப்பிற்கு இசைவாக நடந்து கொள்ளும் படி திணிக்கின்றது. இந்த வகையில் மேற்குலகில் இருக்கின்ற சமூக உறவு என்பது தனித்துவவாதச் சித்தாந்தத்தின் அடிப்படையில் அமைந்ததே. இந்தச் சிந்தனையை அனைத்து சமூகப் பிரிவினரிடையே புகுத்துவது அவசியமாகின்றது.

இந்த நிலை பொருளாதார முனைப்புடன் சம்பந்தப் பட்டதாகும். தனிமனிதர்கள் பொருளாதார முனைப்பில் ஈடுபட்ட போது இருந்த உறவானது கூட்டுச் சிந்தனையைக் கொண்டதாக இருந்தது. ஆனால் இது உழைப்பாளிகள் சந்தையில் உழைப்பை விற்கின்ற நிலமை தோன்றுகின்ற போது மற்றைய சமூக உறுப்பினரை கவனிக்கத் தேவையில்லை. இவ்வாறே சாதியில் இருந்து உழைப்பாளிகளை விடுதலை செய்ய வேண்டிய நிலை கொலனித்துவவாதிகளுக்கு தேவை இருந்தது. இதிலிருந்து உடைந்த உறவைக் கொண்ட சமூகச் சிந்தனையைக் கொண்டது தனித்துவவாதமாகும். தனித்துவவாதம் என்பது ஒரு சித்தாந்தப் போக்கு, தனித்துவம் என்பது தானே மையமெனக் கொண்டு இயங்க வேண்டும் என்கிறது. தனிமனிதர் தனது தேவையை பூர்த்தி செய்ய முற்படுகின்ற போது எப்படி அவனால் மற்றைய சகமனிதருக்கு, மனிதத்துவத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு செயற்பட முடியாது.

தனித்துவவாதம் உட்நாட்டுச் சரக்கா? அல்லது மேலை சரக்கா என்பதில் கருத்து மோதல்களும் இடம் பெறலாம் ஆனால் இந்தச் சிந்தாந்தம் குறிப்பிட்ட பொருளாதார நலனைக் கொண்ட போக்காகும். இங்கு ஆண், பெண் இருபாலரும் சுயநிர்ணயத்தைக் கோருகின்ற நிலைதான் இங்கு இடம் பெறுகின்றது. இங்கு நடைபெறுவது வடிவத்தில் மாறுபாடு இருந்தாலும், தனிநபர்கள் சுயநிர்ணயம் கோருவது நடைபெறுகின்றது. எந்த வித தார்மீகக் கடமையில் இருந்தும், எந்தச் சச்சரவில் இருந்தும் தனிநபர்கள் விடுதலை கோருவதாகும். இதனை சரியாக புரிந்து கொள்ள முடியாது. அவற்றிற்கு வெவ்வேறு கோசங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இந்தத் தனிநபர்கள் மீதான உரிமை நிலை இந்தச் சமுதாயத்தில் முழுமையாக கிடைக்கக் கூடியதொன்றா என்பதில் முதலாளித்துவ, பாட்டாளி வர்க்கச் சிந்தனையின் இடையே பெரிய வேறுபாடு இருக்கின்றன.



# 1.2.2.6.10.1 தனிநபர்கள் உருவாக்கம்


பாட்டாளி வர்க்கப் போராட்ட வரலாற்றில் தனிமனிதர்களின் பங்கு அவர்களின் சாதனைகளும் முன்னிற்கின்றது. எனினும் இச்சாதனைகளும் மக்களுடையை உணர்வு பூர்வமான பங்களிப்புடன் அவர்களின் சித்தாந்த தெளிவுடன் அமைந்த வழிகாட்டல் என்பது புரட்சியில் வெற்றி கண்டனர். இந்த வெற்றியின் பின்னாலேயே தனிமனிதர்களின் பெயர்கள் நிலைத்து நிற்கின்றன. இதன் காரணமாகவே வரலாற்றில் அழிக்கப்பட முடியாதவாறு தனிநபர்கள் சிறப்பிடம் வகிக்கின்றனர். ஆனால் பூர்சுவா வர்க்க பிரமுகர்கள் போல் தனிநபர் (லாபம்) நலன், அதியுயர் நுகர்வு, சுயநலப் போக்கு இல்லாமல் பாட்டாளி வர்க்கப் புரட்சி. மத்தியப்படுத்தப்பட்ட நிறுவன அமைப்பைக் கொண்ட போராட்ட வழிமுறை கொண்டு மானிட விடுதலைக்காக போராடினர். மக்களின் ஆதரவு இல்லாமல் தாமே சமூகத்தை மீட்கக் கூடிய ஆபர்த்தாண்டவர்களாக அல்ல.

முதலாளித்துவமானது திட்டமிட்டு சில பிரமுகர்களை வளர்க்கின்றது. உருவாக்கப்படுகின்ற பிரமுகர்களை மக்களின் ஆபர்த்தாண்டவர்களாக காட்டுகின்றது. இவர்களைப் போன்று போராட்டப் பாதையை தெரிவு செய்து (சனநாயக வழிப் போராட்டங்கள்) போராடுவதன் மூலமே வெற்றி கொள்ள முடியும் என்ற கருத்தை விதைக்கின்றது. இந்தத் தனிநபர்களின் அளப்பரிய செயற்பாட்டின் மூலமே வெற்றி கிடைத்தது என. ஒடுக்கு முறையாளர்களுக்கு துணைபோகின்ற தொடர்புச் சாதனங்கள் இவர்கள் மாத்திரமே சமூதாயத்தில் இருக்கின்ற அவலங்களை போக்குவதற்கு போராடுபவர்களாவும். மக்கள் தமது சமுதாயத்தில் இருக்கின்ற அவலங்களை எதிர்க்க முடியாத கபோதிகள் என்ற கருத்தை திட்டமிட்டு விதைக்கின்றது.

இந்தப் பிரமுகர்களுக்கு ஏகாதிபத்தியங்களின் பின்புலனாக இயங்கும் நிறுவனங்கள் நோபல் சமாதானப் பரிசு, மனித உரிமைக்கான பரிசு என அந்நபர்களுக்கு கொடுத்து பிரபல்யப்படுத்துகின்றன. இந்தப் பிரமுகர்கள் சமூகத்தை மாற்றக்கூடியவர்கள், மீட்பர்கள் என்ற நிலையை தோற்றுவித்து இவர்களை விட்டால் வேறு சிறந்த தலைவர், பிரதிநிதி இல்லை என்ற மாயை ஏற்படுத்துகின்றது. டயானா இறந்த பிற்பாடு எடுத்துக் கொண்ட ஒரு கணிப்பீட்டில் விரக்தி. (stress) – உளத்தாக்கம் ஆகியவை பல மடங்கு குறையப்பட்டதாக வெளிவந்தது. இந்த நிலைக்கு தொலைக்காட்சி ஊடகமும் துணைபுரிந்துள்ளது. டயானா போன்ற தனிநபர்களை சிறந்த பிரசைக்கு உரிய சின்னமாக முன்வைக்கின்றது.

இந்த தனிநபர்கள் அந்தந்த நாட்டு சூழ்நிலைக்கேற்ப மாறுபடுகின்றனர். இத்தனிநபர்களின் உரிமையே முக்கியமான வேலைப்பாடாக பூர்சுவா மனித உரிமைவாதிகளுக்கு தெரிகின்றது. எல்லாத் தேசங்களிலும் மக்கள் மொத்தமாக வதைபடுவது இவர்கள் கண்களுக்கு தெரியவில்லை. இவர்கள் தனிநபர்கள் பற்றி குரல் கொடுப்பது மனித உரிமைக்காக குரல் கொடுப்பவர் என்றசமூக மரியாதை. இதனையே திட்டமிட்டும் விதைக்கின்றது. அதாவது தனிமனிதருக்காக குரல் கொடுப்பவர்களை ஏகாதிபத்தியமும் வளரவிடுகின்றன. ஏனெனில் எப்பவும் கூட்டுப் பிரச்சினையைப் பற்றி பேசுவதை விட தனிமனிதர்களைப் பற்றிப் பேசி காலம் கழிக்க இலகுவாக இருப்பதால் ஆகும்.

பாட்டாளி வர்க்கத் தத்துவம் ஒன்றே தனிமனிதர்களின் திறமையை முழுமையாக வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கின்றது. ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில் ஒரு பகுதினரின் நலனைப் பாதுகாக்கவும். வளர்ச்சிக்கும் உதவுகின்றது. ஆனால் பெரும் பான்மையானவர்கள் சம சந்தர்ப்பம் கிடையாது ஒதுக்கப்படுகின்றனர் இதன் மூலமாக பெரும்பான்மையானவர்களின் உரிமை மறுக்கப்படுகின்றது. **''தத்துவ ஞானியின் ஆளுமைக்கும் பொதுவான மனித வரலாற்றில் முத்திரையைப் பதித்த எந்த நபருக்கும் மார்க்ஸ், ஏங்கல்ஸ் தத்துவத்தில் இடமில்லை. என்று கற்பனை செய்பவர்கள் அந்தத் தத்துவம் இடம் அளிக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பொருளாதார அவசியத்தால் தீர்மானிக்கப்படும் நிகழ்ச்சிகளின் போக்கிற்கு எதிராக தனிநபரின் நடவடிக்கைகளை அனுமதிக்கப்பட முடியாதவாறு வைப்பதைத் தடுக்க அதனால் முடிந்தது. இத்தகைய எதிர் நிலையிடம் தஞ்சம் அடைபவர் வரலாற்றுப் பொருள் முதல்வாத விளக்கத்தை அனேகமாக புரிந்து கொள்ள வில்லை என்பதை அவர் அதன் மூலம் நிருபிக்கிறார். நாம் ஏற்கனவே பன்முறை கூறியதைப் போல் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் அடிப்படைக் கருத்து வரலாறு மனிதர்களால் படைக்கப்படு கிறது என்பதாகும்.''** (பக். 111 பிளெஹானவ் – மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்) மார்க்சிய ஆனது தனிமனிதர்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கவில்லை என்ற போக்கை பரவலாகக் காணமுடியும். கட்டமைப்பில் கவனம் செலுத்துவதில் மாத்திரம் மார்க்சியம் தன்னைக் குறுக்கிக் கொண்டதன் காரணமாக தனிநபர் சுதந்திரம் மறுக்கப்படுவதால் பாட்டாளி வர்க்கக் கட்சியானது தனது உறுப்பினருக்கு சனநாயகத்தை வழங்குவதில் பற்றாக்குறை இருப்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது. இவை மாத்திரமல்ல கட்டமைப்பிற்குப் பலியாகி விட்டார்கள் அல்லது மார்க்சியம் தன்னைக் குறுக்கி விட்டது எனப்பரவலாக கருத்து இருக்கின்றது.



## 1.2.2.6.10.2 தனித்துவவாதம்

உணர்வுகளுக்கு முக்கித்துவம் கொடுத்து முடிவெடுப்பது என்பது இன்றைய உலகில் சாத்தியமானதாக இருக்க முடியாது. எமது விருப்பங்களின் அடிப்படையில் அமைந்த தேவைகள் என்பன பூர்த்தி செய்ய இந்தச் சமூக அமைப்பு இடம் தருவதில்லை. மனிதரின் உணர்வுகள் எதனையும் தீர்மானிப்ப தில்லை மாறாக பொருளாதார அமைப்பின் அமைந்த சித்தாந்தப் போக்கே தீர்மானிக்கின்றது. மனிதர்கள் அவற்றின் விழைபொருள் மாத்திரம் அல்ல. **''இப்பொழுது மனிதன் கூட ஒரு பண்டம்தான், மனிதனை அடிமையாக்கு வதன் மூலம் மனிதச் சக்தியையும் பரிவர்த்தனை செய்யலாம், உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்ற 'பேருண்மை' சீக்கிரத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டது. மனிதர்களே பரிவர்தனையில் இறங்கினார்களோ இல்லையோ மனிதர்களே பரிவர்த்தனை செய்யப்பட்டார்கள். இயக்கியவனே இப்பொழுது இயக்குவிக்கப்பட்டான். மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது நடைபெற்றது.''** (286 ஏங்கல்ஸ் – கு.த.அ.தோ.) பாட்டாளி வர்க்கப் போராட்ட வரலாற்றில் தனிமனிதர்களின் பங்கு அவர்களின் சாதனைகளும் முன்னிற்கின்றது. எனினும் இச்சாதனைகளும் மக்களுடையை உணர்வு பூர்வமான பங்களிப்புடன் அவர்களின் சித்தாந்த தெளிவுடன் அமைந்த வழிகாட்டல் என்பது புரட்சியின் வெற்றியில் கண்டனர் எனக் கண்டோம்.

மனிதன் தனித்தே செயல்படுத்த வேண்டும் என்ற கட்டுக் கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும். இவர்களுக்கு எதிரான வாதத்திற்கு மார்க்ஸ் ரொபின்சன் குருசோ என்ற கற்பனைக் கதையை உதாரணங்காட்டி தனிமனிதர்கள் தனித்து வாழமுடியாது என்றும், தனிமனிதனின் செயற்பாட்டினால் மொழி உருவாக முடியாது எனவும் கூறுகின்றார். ''வரலாற்றுப் போக்கை நாம் எவ்வளவு பின்னே சென்று ஆராய்ந்தாலும் தனிநபர், அதிலும் உற்பத்தியாளரான தனிநபர் அந்த அளவுக்கு அதிகமான பெருங்குழு ஒன்றைச் சேர்ந்தவராகவும் அதை நம்பியிருப்பவராகவும் இருப்பதைப் பார்க்கிறோம். முதலில் தனிநபர் இன்னும் இயற்கையான வகையில் குடும்பத்தின் ஒரு பகுதியாகவும் அந்தக் குடும்பத்திலிருந்து பரிணமித்த இனக்குழுவின் ஒரு பகுதியாகவும் இருக்கிறார். பிறகு அவர் சமூகத்தின் ஒரு பகுதியாகிறார் – இனக்குழுக்களின் மோதல்களிலும் இணைப்பிலும் உருவாகிய சமூகத்தின் பல்வேறு வடிவங்களில் ஒன்றில் ஒரு பகுதியாகின்றார். சிவில் சமூகத்தில் சமூக இழையமைப்பின் பல்வேறு வடிவங்களும் ஒரு தனிநபருக்கு முன்பு அவருடைய தனிப்பட்ட நோக்கங் களை நிறைவேற்றக் கொள்ளும் சாதனங்களாக, அந்நியத் தேவையாக எதிர்ப்படுவதென்பது பதினெட்டாம் நூற்றாண்டில்லேயே ஏற்படுகின்றது. ஆனால் இந்தக் கருத்து நிலையை, அதாவது தன்னந் தனியான நபர் என்ற

கருத்து நிலையை ஏற்படுத்தும் சகாப்தம் உண்மையில் மிக அதிகமான (அதுவரை) வளர்ச்சி அடைந்து சமூக (இந்தக் கருத்து நிலைப்படி பொது) பொது உறவுகளின் சகாப்தமாகும். மனிதன் சமூகப் பிராணி (zoon politikon அரிஸ்ரோட்டில்) என்பது அதிகமான அளவிற்கு செல்லிற்குச் சொல் சரியானதாகும்.

அவன் சமூகப் பிராணி என்பது மட்டும் அல்ல, சமூகத்துக்குள்ளாக மட்டுமே தனிநபராக்கப் படக் கூடிய பிராணியாகும். சமூகத்திற்கு வெளியே தன்னந் தனியான தனிநபர் உற்பத்தி செய்வது – சுறுசுறுப்பான சமூகச் சக்திகளைப் புரிந்து கொண்ட ஒரு நாகரீகமடைந்த மனிதன் தற்செயலாக ஒரு பாலைவனத்திலே விழுந்து விடுகின்ற பொழுது இந்த அபூர்வமான சம்பவம் நடைபெறலாம் – **சேர்ந்து** வாழ்ந்து கூடிப்பேசும் தனிநபர்கள் இல்லாமல் பேச்சு வளர்ச்சி அடையும் என்பதைப் போலவே அபத்தமானதாகும். இந்தக் கருத்தை மேலும் விரித்துரைப்பது அவசியமற்றதாகும்.'' (மார்க்ஸ் 288 அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை) இந்தப் பகுதியில் தனிமனிதர்கள் சமூகத்தின் ஒரு பகுதியாகவும், பொருளாதார முனைப்புக்கள் பற்றியும் இங்கே காணமுடிகின்றது.

தத்துவவாதத்தைக் கோருவது, தனிமனித விருப்பத்தை முன்நிறுத்துவது விடுதலைப் போராட்ட அமைப்பிடையே காணப்படுகின்றது. கட்சியில் பணிந்து நடப்பதையும் சனநாயக– மத்தியத்துவத்தை மறுப்பவர் களாகின்றனர். இந்தப் போக்கானது அமைப்பிடையே அராஜகத்தை வளர்த்து விடுகிறது. அராஜகவாதமானது (Anarchism) மத்தியப்படுத்தப்பட்ட நிறுவன அமைப்பை கொண்ட தலைமையை, அரச அதிகாரத்தை எதிர்க்கின்றது. அதற்கு மாறாகஒழுக்கமைக்கப்படாத தன்னிச்சைப் போக்கை பாதையை முன்வைக்கின்றது. அதேவேளை அமைப்பிடையே தாராளவாதம் என்பது எவ்வகையான பாதிப்பை கொண்டுவருகிறது எனப்பார்ப்போம். ''ஒரு **புரட்சிகரக் கூட்டுறவில் தாராளவாதம் என்பது தீங்கு விளைவிக்கும் ஒன்று அது ஐக்கியத்தை அரித்துத் தின்னுகின்ற ஒன்றினைப்பினைச் சீர்குலைக்கின்ற, வேலையில் பாராமுகத்தை உண்டாக்கின்ற, வேற்றமையை விதைக்கின்ற ஒரு நச்சுத்திரவம். அது புரட்சிகர அணிகளில் உள்ள கட்டுக் கோப்பான ஸ்தாபன அமைப்பையும், கண்டிப்பான கட்டுப்பாட்டையும் அழித்து விடுகின்றது. கொள்கைகள் பூரணமாய் அமுல் நடத்தப்படுவதை அது தடுக்கிறது. கட்சியின் தலைமையில் உள்ள மக்களிடம் இருந்து கட்சி ஸ்தாபனங்களைப் பிரித்து விடுகிறது. இது மிகத்தீய்மையான ஒரு போக்காகும்.**

**தாராளவாதிகள் மார்க்சிசக் கோட்பாடுகளை வெறும் வரட்டுத் தத்துவமாகக் கருதுகின்றனர். அவர்கள் மார்க்சியத்தை அங்கீகரிக் கின்றனர், ஆனால் அதை அனுஸ்டிக்க அல்லது பூரணமாக அனுஸ்டிக்ககத் தயாராக இல்லை. தமது தாராளவாதத்துக்குப் பதிலாக, அதன் இடத்தில் மார்க்சியத்தை வைக்கவும் அவர்கள் தயாராக இல்லை.**

**இந்த நபர்களிடம் மார்க்சிசம் இருக்கும் அதேவேளையில், தாராளவாதமும் இருக்கிறது. அவர்கள் மார்க்சிசம் பேசுகின்றனர். ஆனால் தாராளவாதத்தை அனுஸ்டிக்கின்றனர் . பிறருக்கு மார்க்சிசத்தையும் தமக்குத் தாராளவாத்தையும் பிரயோகிக்கின்றனர். அவர்கள் இரண்டு விதமான சரக்குகளையும் இருப்பில் வைத்து, இரண்டுக்கும் உபயோகம் காண்கின்றனர். இப்படித் தான் சில நபர்களின் மூளை வேலை செய்கின்றன.''** (மாவோ – ப 354 – 5 மாவோ மேற்கோள்கள்) தாராளவாதச் சிந்தனையை தாம் கொண்டுள்ளதாக தனித்துவவாதத்தை கோருபவர்கள் சில வேளைகளில் உணர்வதில்லை. மாறாக புறச்சூழலின் தாக்குதலானது இவர்களிடத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இது முதலில் கேள்வி ஞானத்தின் அடிப்படையில் எமது தேசங்களில் நுழைக்கின்றது. பின்னரே இது பொருளாதார வளர்ச்சியை எட்டியவுடன் கருத்துருவமும், அமைப்புருவமும் பெறுகின்றது. எமது தேசங்களில் தனித்துவவாதச் சிந்தனை முற்று முழுதாக சென்றடையவில்லை. ஆனால் எமது தேசங்களில் தாராளவாதச் சிந்தனையின் பாதிப்பு இருக்கத்தான் செய்கின்றது. அது முதலாளித்துவ சித்தாந்த நீரோட்டத்தின் தாக்குதல் என்ற நிலையில் அனைத்துச் சமூகப் பிரிவுகளிடையே ஏற்படும் தாக்குதல் என்ற நிலையில் உள்ளது. ஆனால் இது முற்று முழுதாக பொருளாதார வளர்ச்சி அடைந்து, அந்த பொருளாதார நலனுக்கு ஏற்றவாறான வீச்சு இதனிடம் இருக்கவில்லை. ஆனால் கலாசாலையை பின்புலமாக கொண்டவர்கள் மத்தியில் இச் சிந்தனை உள்ளது. இவர்களிடத்தில் இருந்து தாராளவாதச் சிந்தனை •வெளிப்படுவதைக் காணமுடியும். எமது தேசங்களிலே படித்தவரிடையே தனித்துவவாதச் சிந்தனை தோன்ற இடமிருக்கின்றது. ஆனால் இவர்கள் கடமையுணர்ச்சி முதன்மையாகக் கொண்டு வளர்க்கப்பட்டவர்கள் என்ற காரணத்தால் மேற்கு தேசங்களில் இருக்கின்ற நிலை போன்று தனித்துவவாதிகளாக இவர்களால் இருக்க முடியாது.

இவர்கள் தமது அறிவை சக்தியாக மாறுகின்றனர். இவர்கள் சாதாரணமாக அமைப்புக்களில் இருந்து செயற்பட தயங்குவார்கள். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கின்ற போது அவற்றை பாவிக்க முனைவர். அறிவை வரையறுத்துக் கொள்ளவும் வேண்டியிருக்கின்றது. அறிவினை எல்லா மக்களும் கொண்டுள்ளனர், ஒவ்வொருவரும் அவரவர் வட்டத்தினுள் திறமையுடையவர்கள் அறிவு பற்றிய அளவுகோளில் பட்டப்படிப்பினால் பெறும் அறிவினைக் கொண்டு அளவிடக் கூடாது. ஆனால் இங்கு குறிப்பிடுவது படித்தவர்கள் தாம் கொண்ட அறிவைக் கொண்டு மற்றைய மனிதர்களை தமது தேவைகளுக்காக பயன்படுத்துவதும், அதன் பின்னர் தூக்கி எறியும் நிலையைப் பற்றியே குறிப்பிடப்படுகிறது. இந்தப் பிரிவினர் தமது மேதாவிலாசத்தைக் கொண்டு மக்களை, சக உறுப்பினர்களை தமது விருப்பத்திற்கு அமைய கொண்டு வரமுயற்சிக்கின்றனர். குட்டிப் பூர்சுவா

அறிவுஜீவிகள் அங்கம் வகிக்கும் அமைப்புக்களில் தன்னாதிக்கத்தை மேற்கொள்கின்றனர். அமைப்பிற்கு வெளியே இருப்பவர்கள் புத்தகங்களை எழுதிவிடுவதன் மூலம் தமது கடமை முடிந்து விட்டதாக நினைத்துக் கொள்வதும், படித்துப் பெற்ற அறிவைக் கொண்ட விமர்சன முறைகள் கொண்டு இயங்கின்ற நபர்கள் அமைப்பு வடிவம் எடுப்பதில் பின்வாங்குகின்றனர். இவர்களே அமைப்பில் சனநாயகம் மறுக்கப்படுவதாகவும், தனிமனிதனின் வளர்ச்சியை மார்க்சியம் அக்கறை கொள்ளவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

பொருளாதார அமைப்பின் அழுத்தம் (தேவை) காரணமாக சமூக உறவை சிதைய வைக்கின்றது. ஏனெனில் உதிர்ந்த நிலையில் இருக்கின்ற (உறவுகளின் மீது அதிகம் பிடிப்பு இல்லாத) தொழிலாளர்களை சந்தைக்கு வரநிர்ப்பந்திக்கின்றது. சமூக அமைப்புக் காரணமாக மனித சமுதாயத்தின் மீது திணிக்கப்படும் சமூக உறவானது. பின்னர் அந்த போக்கிற்கு அமையவே சமூக உறவுகளிலும் ஈடுபடுகின்றனர். இந்தப் பொருளாதார அமைப்பினால் உருவாக்கப்படும் சமூக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அறிந்தோ அறியாமலோ அந்தச் சிந்தாந்தத்தின் போக்கின் படியே நடக்கின்றனர். இந்த போக்கானது தனிநபரிடையே அதியுயர் நுகர்வின் தாகத்தை வளர்க்கின்றது.

மேலைத் தேசங்களில் உருவாக்கப்படும் தனிநபர்கள் அதியுயர் நுகர்வு சித்தாந்தப் போக்கினுள் வளர்வதால் இவர்களுடைய மார்க்சிய புரிதல் என்பது அந்தச் தாராளவாதச் சித்தாந்தத்திற்குள் உட்பட்டதாவே இருக்கின்றது. இந்த சமூகத்தின் உறுப்பினரிடையே முழுமையான மார்க்சியப் புரிதலை உடனடியாக எதிர்பார்ப்பது முடியாது. இதே போலவே எம்மவர்களின் மார்க்சியப் புரிதலும் எமது உழுத்துப் போன சமூக எச்சத்தின் சிந்தனையில் இருந்து கொண்ட புரிதலே.

இவர்கள் தமது விருப்பு வெறுப்புக்கு முதலில் முதன்மை கொடுப்பவர்களாகவும், புற உலகத்தின் நிலையை அறிய விருப்பம் கொள்பவர்களாவும், தமது அலுவல்கள் முடிந்த பின்னரே பொது விடயங்கள் என்ற நிலையை உருவாக்குவர். இந்தப் பிரிவினர் அமைப்புக்களிடையே அதீத சனநாயகத்தைக் கோருவர். இச்சிந்தனையின் விழைவாக இவர்களிடத்தில் கூட்டுச் சிந்தனையை எதிர்பார்ப்பதும், இந்தச் தனித்துவவாத சிந்தனையின் கீழ் செயற்படுபவர்கள் மனிதரைப் பாவிப்பதும் விடுவதுமாக உள்ள நிலையினால் இவர்கள் மத்தியில் இருந்து தோழமை உறவை எதிர்பார்ப்பது சிரமாகின்றது.

உபரி மதிப்பு பற்றிய பகுதியில் அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரையில் இருந்து குறிப்பிட்ட பந்தியானது பலவிவாதங்களுக்கு காரணமாகின்றது. ஏனெனில் இது மார்க்சியத்தின் அடிப்படையை தாங்கி நிற்பதினால் ஆகும். அவற்றை பிழையாக நிருபிக்க வேண்டுமானால்

மார்க்சியத்துக்கு மாறாக புதிய தத்துவத்தை புதிதாக உருவாக்க வேண்டும். ஏனெனில் இது தத்துவம் சார்ந்த பிரச்சினையேயாகும் அவற்றை உருவாக்க முயன்றவர்கள் இடம் தெரியாமலே மறைந்து விட்டார்கள். அத்துடன் கட்டமைப்பில் கவனம் செலுத்துவதில் மாத்திரம் மார்க்சியம் தன்னைக் குறுக்கிக் கொண்டதன் காரணமாக தனிநபர் சுதந்திரம் மறுக்கப்படுவதால் பாட்டாளி வர்க்கக் கட்சியானது தனது உறுப்பினருக்கு சனநாயகத்தை வழங்குவதில் பற்றாக்குறை இருப்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது. இவை மாத்திரமல்ல கட்டமைப்பிற்குப் பலியாகி விட்டார்கள் அல்லது மார்க்சியம் தன்னைக் குறுக்கி விட்டது எனப்பரவலாக கருத்து இருக்கின்றது. ஏனெனில் மார்க்சியமானது ஒரு தனிநபர் தன்னைப் என்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி முடிவு செய்வதில்லை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி தனது உறுப்பினர்களை அதன் படி நடக்க கோருவதும் முக்கிய காரணமாகும்.

மனிதர் தன்னால் படைக்கப்பட்டதற்கே அவர்களே அடிமையாகிப் போனார்கள் அவர்கள் மீது சமூக் கட்டுமானம் எவ்வாறு அழுத்தத்தைக் கொடுக்கின்றது என்பதை இங்கே பல இடங்களில் பார்க்கமுடியும். (பொருளாதாரவாதம், சனநாயகத்தின் கீழ்) இன்றைய ஆய்வாளர்கள் பலரும் உணர்வின் அடிப்படையில் தேசியவாதத்தை உயர்த்திப்பிடிக்கும் தேசியவாதிகள் இன்றைய தேசிய இனத்தின் விருப்பு வெறுப்பையும் தேசங்களின் இறைமையைத் தீர்மானிப்பது ஏகாதிபத்தியங்களே என்பதை மறந்து விடுகின்றனர். இவர்கள் பாட்டாளி வர்க்க நலனில் (அடிப்படையில்) நிபந்தனையின் அடிப்படையில் செயற்படாமல் உள்ளவர்களே.

இன்றைய காலகட்டத்தில் இடம்பெறுவது என்னவெனில் மேற்குலகத்தில் நடைமுறைப் படுத்தப்படும் பாணியிலான கலாச்சாரங்கள், சனநாயக உரிமையை வேண்டி நிற்பதோடு நிறுத்துவது மாத்திரம் அல்ல. அதனை அப்படியே பிரதியிடும் போக்கைக் காணக் கூடியதாக உள்ளது. இப்போக்கானது உலகத்தின் அனைத்தும் பகுதிகளையும் ஒரே குடையின் கொண்டுவரும் போக்கிலான ஏகாதிபத்தியங்களின் செயற்பாடுகளுக்கும், சுரண்டலை (உபரியை அதிகரிக்கும் வகையில்) விஸ்தரிப்பதற்கான செயற்பாடுகளுக்கு சுரண்டப்படும் தேசங்கள் தம்மை இசைவுபடுத்தும் போக்கே நிகழ்வதைத் தவிர எவ்விதமாறுதலும் இதன் காரணமாக ஏற்படலில்லை. ஆனால் முதலாளித்துவ போக்கிலான மாற்றுத் தீர்வானது பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சியின் மூலம் ஏற்படுத்தப்படும் மாற்றுக் கலாச்சாரம், சனநாயகமாகத் தான் இருக்க வேண்டும். தனித்துவத்தின் சிந்தனையின் அடிப்படையில் தனித்துவத்தைக் கோருகின்ற போக்கு அடிப்படையில் இரண்டு வித சமுதாயத்திலும் மாறுபாடு இருக்கின்றது.

இரண்டு தேசங்களின் பொருளாதார வளர்ச்சியில் இருந்து மாறுபட்ட சிந்தனைப் போக்கில் வெளிப்படுகின்றது. வெளிநாட்டில் வாழ்பவர்களிடையே எவ்வகையாக மாற்றம் இடம்பெறுகின்றது எனப்பார்த்தோம். இவற்றை சுருக்கமாக சிந்தனையின் தோற்றத்தைப் பார்ப்போம். மனிதரை சமூகம் படைகின்றது. முன்பிருந்த கடமைப்பாடுகள் முற்றாக அழிந்து போவதில்லை (முதலாளித்துவ சமுதாயத்தில்) அவைகள் அற்றுப் போக வேண்டிய தேவையுள்ளது. முன்பிருந்த கடமை உணர்ச்சிகள், பொறுப்புகள், உதறித் தள்ள வேண்டியது முக்கியமாகின்றது. இந்நிலையில் தனிநபர்கள் தம்மீது செலுத்தப் படுகின்ற சமூகக் கோட்பாடுகளை, சாத்திர சம்பிரதாயங்களை உதறித் தள்ள வேண்டிய நிலையில் அதற்கு எதிராக குரல் கொடுக்கின்றனர். இந்த சமூக எச்சங்களில் இருந்து விடுதலை கோரிப் போராடுகின்றனர். ஆண், பெண் என்ற தனிநபர்களுக்கான சனநாயகக் கோரிக்கைகள் என்ற நிலையை அடைகின்றது. ஆண், பெண்ணிற்கான தனிமனிதர்களின் உரிமைக் கோரிக்கைகளை அங்கீகரிக்க வேண்டும். தனித்துவத்தை கோருகின்றதிற்கு காரணமானவற்றைப் சுருக்கமாக இங்கு கூறுவோம்.

- சமூகத்தின் தன்மைகள்

- தனித்துவமாகவே வாழப்பழகிக் கொண்ட இரண்டு நபர்கள் சேர்ந்து வாழ்கின்ற போது ஏற்படுகின்ற மனவுழைச்சல். இங்கு ஆணாகவும் இருக்கலாம் பெண்ணாகவும் இருக்கலாம்.

- மனிதர் பொருளாதார முனைப்புக்களில் ஈடுபடுகின்ற போது ஏற்படுகின்ற மனவுழைச்சல். வேலைப் பிரிவினையில் ஏற்படுகின்ற பாகுபாடுகள்.



# 3.1 சாதியம்

சாதியம் எமது தேசத்தில் பல நூற்றாண்டுகளாக இருந்து கொண்டிருக்கின்றது. சாதியத்தின் கொடுமை எல்லையற்ற கொடுமைகளை உழைக்கும் மக்கள் மீது ஏற்படுத்தியிருக்கின்றது. சாதியச் சிந்தனை என்பது ஒடுக்கும் வர்க்கச் சிந்தனையாக இருக்கின்றது. சுரண்டும் வர்க்கத்திற்கு எவ்வாறு உதவிபுரிகின்றது என்பதை புரிந்து கொள்ள பாதை அமைக்க முயற்சிக்கப்படுகிறது. சாதியத்தைப் பற்றி எழுதுகின்ற போது பழைய குப்பையை கிளறுகின்றதா என்ற மனப்பயம் தொற்றி விட்டது. இந்தப் பகுதி பழைய குப்பைகள் கிளறும் போது பழைய மாயையை தகர்க்க உதவும் என்ற நம்பிக்கை இருக்கின்ற வேளை வகுப்புவாதக் குழுக்கள் இவற்றை பாவித்து தமது நோக்கத்திற்காக பயன்படுத்துவர் என்ற பயமும் தோன்றுகின்றது. சாதியைப் பற்றி பலர் எழுதியிருக்கின்றார்கள் 1872 குடிசன மதிப்பு எடுத்த போது சூத்திரர் என்ற வரையறைக்குள் தம்மை அடக்கிவிட்டதால் சாதியைப் பற்றிய பல வெளியீடுகள் வெளிவந்தன. இவற்றிற்கப்பால் மனித குல விடுதலையையே இலக்காகக் கொண்ட சாதியத்தைப் பற்றிய ஆய்வுகளும் மற்றும் வெளிநாட்டு மனிவியலாளர்களின் வெளியீடுகளும் வெளிவந்துதான் இருக்கின்றன.

வரலாறுகள் என்கின்ற போது தனியே அரச பரம்பரை பற்றிய வரலாறுதான் ஒரு இனத்தின் வரலாறு எனக் கொள்வோமானால் வரலாற்றை எழுதும் போது ஒரு தெளிவான ஏன் உண்மையான வரலாற்றை எழுதமுடியாது. அதே போல் சாதி என்ற வரவிலக்கணத்தில் இருந்து சாதியத்தை ஆராயத் தொடங்கினால் ஒரு நேர்மையான ஆய்வை மேற்கொள்ள முடியாது. எமது சமுதாயத்தில் ஆராயும் பொழுது மனுதர்மம் கற்பிக்கின்ற சாதி வரவிலக்கணத்தில் இருந்து தொடங்கின் எப்படியாவது அந்த வரவிலக்கணத்திற்குள் ஆய்வின் முடிவை கொண்டு வரவேண்டும் என்ற நிலைப்பாடும் ஆபத்தானதாகும். இலங்கையில் சாதியைப் பற்றி நோக்குவோமானால் வேளாளரின் மேலான்மையே ஒங்கிற்கின்றது. இவர்களின் மேலான்மை என்பது மற்றைய வர்க்கங்கள் வலிமை குன்றிய பின்னர் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இவர்கள் ஆதிக்கம் மேலோங்கியது எனலாம். (கால வரையறை என்பது நிச்சயமாக சொல்ல முடியாது உள்ளது) குறிப்பாக தமிழ் சமுதாயத்தில் பல குலங்கள்

இருந்திருக்க முடியும் என்ற எடுகோளின் அடிப்படையில் இருந்து பார்க்க முயற்சிக்கப்படுகின்றது. இத்துடன் வருண சிந்தனையை பெற்றும் கொண்டு சுரண்டும் பொருளாதார சிந்தனையை மேலும் ஆளப்படுத்திய ஒடுக்குமுறை சமுதாயம் உருவாகியது எனலாம்.

சாதியத்தின் கொடுமைகள் பற்றி இங்கு எழுதுவது என்றால் பக்கம் போதாது எனலாம். ஆனால் இதன் வரலாற்றை பார்ப்பதன் ஊடாக சாதியம் என்றால் என்னவென அறியமுடியும். அத்துடன் எந்த பொருளாதார நலனை பாதுகாக்கின்றது எனப்பார்ப்போம். சாதியம் என்பது பிராமனியத்தின் (ஆரியவேத – வர்ணம்) இரட்டைக் குழந்தையில் ஒன்றே. அதாவது (சைவ – வைணவம்) இந்து சமயமும் சாதியுமாகும். சாதியம் என்பது இந்துசமயத்தின் நிறுவனமேயாகும். சாதியம் எமது சமுதாயத்தில் பல ஆண்டுகளாக எம்மிடையே உயிர்வாழ்ந்து கொண்டு இருக்கின்றது.

சாதியம் என்பது எமது சமுதாயத்தில் பலவிடயங்களை தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. சாதி பற்றி வரலாற்று அறிவின்மை காரணமாக பல சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பது சிரமமாக உள்ளது. சாதியச் சிந்தனையில் வாழ்ந்து வருகின்ற சமூக உறுப்பினர்கள் தமது செயற்பாட்டை சாதியத்தை பாதுகாக்கும் நோக்கிலும், வரட்டுக் கௌரவத்தை தொடர்ந்து பாதுகார்க்கவும் முனைகின்றனர். சாதியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என எண்ணுபவர்கள் சாதியச் சக்திக்குள்ளேயே மீளவும் சமாதியாவதும் வரலாற்றில் இடம் பெற்று வந்துள்ளது. பொருளாதார நிலையில் ஏற்படுகின்ற நிச்சயமின்மையை காரணம் காட்டி சாதிய அமைப்பை பாதுகாத்து வந்துள்ளனர். இந்நிலையைப் போக்க வேண்டும் இதனை எழுத்தில் எழுதிவிடுவதால் மறைந்து விடுவதில்லை. இதற்கு எதிராக நீண்ட நெடிய போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலமே இல்லாது போக்குவது சாத்தியமாகும்.

## 3.1 சாதியத்தை புரியும் போக்கு

சாதியத்தை அறிந்து ஆராய பல அணுகுமுறைகளை பாவிக்கின்றனர். சாதியினை வர்க்க நிலையில் இருந்து பார்க்கின்ற பார்வை எனவும். சாதிகளில் இருந்து சாதிய தோற்றத்தைப் பார்த்தல். இத்துடன் பொருளாதார நலனுக்கு ஏற்ப உறுதுணையாக இருக்கும் பொருளாதார சிந்தனையாகும். சாதியம் திராவிடர்களிடம் இருந்து உருவாகிய சிந்தனையா? அல்லது ஆரியர்களிடம் இருந்து பெற்ற சிந்தனையா என்பதில் கருத்தில் வேறுபாடுகள் உண்டு.

இதேபோல் வர்க்கத்தை முதன்மை கொண்டு அந்த வர்க்கங்களின் செயற்பாட்டுத் தன்மைகளில் இருந்தா அல்லது சாதியில் இருந்தும் அதன் செயற்பாடுகளில் இருந்து சாதியத்தை விளங்கிக் கொள்வதா என்பதில் நிறையவே மாறுபாடுகள் இருக்கின்றது. சாதியை முதன்மை கொண்டு

பார்க்கின்ற சமூகப் பார்வையானது மதத்தின், சமூகத்தின் பிற்போக்கு கருத்தியலையும், அது கற்பிக்கின்ற சுரண்டும் பொருளாதார வர்க்க நலனையும் பாதுகாத்து நிற்பதாகும். வர்க்க நிலையில் இருந்து பார்க்கின்ற பார்வை சாதியம் போதிக்கின்ற சுரண்டும் வர்க்கத்தின் சிந்தாந்தத்தினை அம்பலப்படுத்துகின்றது. இந்த அணுகுமுறையூடாக சமூகத்தை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது. வர்க்க ரீதியாக அணுகுகின்ற போது சாதியத்தின் பண்பாட்டுக் கொடுமைகளை வெளிப்படாமல் விடுகின்ற போக்கை காணமுடிகின்றது. இதன் காரணமாக வர்க்கப் பார்வை முழுமை அற்றதாகவுள்ளதாக கருதப்படுகின்றது. இந்தப் போக்கு என்பது ஒன்றை ஒன்றைத் தனிமைப்படுத்திப் பார்க்கின்ற பார்வை காரணமாக இந்தக் குறை என்பது ஏற்படுகின்றது.

சுரண்டும் வர்க்கத்தின் சிந்தனை என்பது எங்கிருந்து வந்தது என்ற கோட்பாட்டுப் பிரச்சினை பற்றி ஒரு பொதுக் கருத்தை வந்து அடையவில்லை எனலாம். இவற்றில் குணா போன்றவர்கள் திராவிடர்களில் இருந்து உருவாகியதே சாதியச் சிந்தாந்தம் என்கின்றனர். குறிப்பாக திராவிட மக்களின் தொண்மையையே வாதத்தின் ஆதாரமாகக் கொள்கின்றார். ஆரியரின் வருகையின் பின்னர் தான் சாதி உருவாகியது தான் சாதியப் பிரிவினைகள். இரண்டு பெரும் கருத்துக்கும் வித்தியாசம் இருக்கின்றது. இவற்றில் ஆரியத்தின் படைப்புத் தான் சாதி என்பது பற்றி நோக்குகின்ற போது இதே மாதிரியான கருத்துச் சிந்தனை வேறு எங்கும் உள்ளதா என ஆராய்ந்து நோக்குதல் வேண்டும். மேற்கு ஐரோப்பா நோக்கி குடிபெயர்ந்த ஆரியர்களிடையே வர்ணப் பாகு கொண்ட கடவுள்கள் இருந்ததாக ஜோர்ச் (George Dumezil) என்ற பிரான்ஸ் ஆய்வாளர் இந்தோ – ஐரோப்பிய கடவுள்களின் தொழிற்பாடுகளின் ஒற்றுமையைப் பற்றிய கருத்தை முன்வைத்துள்ளார். இந்தப் பார்வை என்பது முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம். ஜோர்ச் என்பவருடைய ஆய்வு முடிவுகள் என்பது உடன் பெறுவது பொருள்படாததுடன், முழுமையான விமர்சனப் போக்காகவும் இங்கு அமையப் போவதில்லை. ஜோசப் இடமருகுவின் பிராமண மதம் ஆரியர்களின் கடவுள்கள் பற்றியும், கணபதிப்பிள்ளை, வேலுப்பிள்ளை ஆகியோர் இலங்கையில் உள்ள தனித்துவமான தன்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இவைகள் எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளத் தக்கதாகும்.

இன்றைக்கு சாதிகள் எனப்படுகின்ற குலங்கள் வரலாற்றில் ஒரே மாதிரியாக எப்பொழுதும் இருந்ததில்லை. இவைகள் காலத்திற்கு காலம் மாறுபட்டு வந்துள்ளதைக் காணமுடியும். சாதி என்பது நெகிழ்ச்சி தன்மை உடையதாக இருந்திருக்கின்றது. பழைய குலங்கள் தமது தொன்மைப் பண்பாட்டைக் கொண்டுள்ளதான சாதிகள் தொழில் ரீதியாக அமைந்த சாதியப் பெயர்கள் என்பன முக்கிய பிரிவுகளாகும். சாதிகளின் பெயர்கள் தமிழ் தேசிய இனத்தின் உருவாக்கத்தின் ஊடாகவே சமூகத்தில் பதிய இடமிருக்கின்றது. குலங்களின் பெயர்களும், தொழிற் முயற்சிகளின்

விழைவாக தொழில் வகைச் சாதிகளின் பெயர்களும் உருவாக்கப்படுகின்றது. இந்தச் சாதிகள் மன்னர்களின் வலியுறுத்தலுக்கும், பழைய முறையில் தாம் வாழமுடியாது அல்லது எழிச்சி கொள்ள முடியாது என்று கருதி வேறு வாழ்க்கை முறையை பின்பற்றி இருக்கின்றனர். பொருளாதார சுரண்டல்கள் அவர்களை மீளவிடாது தடுத்திருக்கின்றன. பொருளாதார நிலை, பழைய சமூக அந்தஸ்து குறைவும், பழைய நீதிமுறைகளுக்கும், பழைய பழக்க வழக்கங்களுக்கும் முரணாக நடக்க ஒரு சமூகம் வரும், அந்தச் சமூகத்தவரிடையே உதிரிப் பாட்டாளி வர்க்கக் குணாம்சம் என்பது தோற்றம் பெறுகின்றது.

இந்தப் பாமர, அடிமைக் குலங்களின் நீதி நெறி என்பது அவர்களை ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக போராட்ட நடவடிக்கையில் ஈடுபடாமல் (போராட்டங்கள் நடைபெறவில்லை என இங்கு கருதவில்லை நீதி நெறி பற்றி இங்கு கவனிக்கப்படுகின்றது) தடுக்கும் குடும்ப உறவையும், நீதிநெறியைக் கொண்ட சமூக அமைப்பும், இதற்கு உலகக் கண்ணோட்டம் என்பது சாதியப் பரம்பலுக்கு கருத்தியல் காரணமாக அமைந்துள்ளது. இதற்கு சுரண்டும் வர்க்கச் சிந்தனை கொண்ட, சொகுசு வாழ்க்கைக்கு பழக்கிக் கொண்ட பிராமண குலத்தவர் கல்விக் கழகங்களை கைப்பற்றிக் கொண்டு சாத்திரங்களையும், புராணங்களையும் எழுதி வைத்து விட்டனர். வரலாற்றில் வடமொழி வளர்ச்சிச் சேவை செய்த மன்னர்களே அதிகமாக இருந்திருக்கின்றன.

வரலாறுகள் இலக்கியங்கள் எல்லாம் வடமொழியில் எழுதிவைத்து விட்டனர். வடமொழி தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் சாதாரண மக்களும், தேவ மொழி என்ற நிலையில் உள்ள சமசுக்கிருதத்தை மற்றவர்கள் படிக்கமுடியாத நிலையும். தேவபாசை (Max Müller காலம் வரை ஏன் இன்று வரை இதே நிலை எனலாம்.) என்ற காரணத்தால் எழுத்து வடிவம் பெறாமையால் சாதாரண மக்களின் வரலாறு மூடிமறைக்கப்பட்டது. அறிவார்ந்த மக்களிடையே பாமரமக்கள் ஏமாந்த நிலையை காலம் காலமாக நடந்துள்ளது தவிர்க்க முடியாத நிகழ்வுகளே ஏனெனில் அறிவு என்பது சக்தியாகவும், மூலதனமாகவும் அமைகின்றது. அறிவு மூலதனம் என்பது சமூகத்தில் ஆளுமை செலுத்துகின்ற சக்தியாக இன்றைய சமூகத்தில் மத்தியில் மாத்திரம் அன்று அன்றைய சமூகத்திலும் மிகவும் வலிமையான பங்கு வகித்திருக்கும். இதன் மூலமாக ஒடுக்கும் வர்க்கச் சிந்தாந்தத்தை சமூகத்தில் அனைத்து தளத்திலும் பரப்ப நியாயம் கற்பிக்க இலகுவாக இருந்திருக்கும். இதற்கு உதாரணமாக உயர்ந்த சாதிகள் எனப்படுபவைகள் கீழாக மற்றைய சாதிகள் இருக்கவேண்டும் என எண்ணுகின்ற கருத்துருவத்தை கொள்ள எந்தச் சான்றை முன்வைக்கின்றனர் என்பது முக்கியமானதாகும்.

## 1.3.2 ஆரியரின் வருகைக் காலம்

சாதியமானது எப்போது ஆரியரின் வருகையானது வடக்கு நோக்கி அமைந்ததோ அதன் மூலம் அறிமுகமானதே சாதியமாகும். (இங்கே வேலைப் பிரிவினையையும், சாதியத்தை நியாயப்படுத்தும் கருத்தியலையும் போட்டுக் குழப்பக்கூடாது – அதாவது இங்கு குறிப்பிடுவது தர்மசாத்திரங்கள் கற்பிப்பதையே) ஆரியர்கள் (வள்ளுவருக்கு முன்னர்) வ.மு 1500 களில் மத்திய ஐரோப்பாவில் இருந்து சிந்து நதி பக்கம் முன்னேறி வந்த பொழுது அங்கு வாழ்ந்திருந்த திராவிட மக்கள் மற்றைய கலாச்சார மையங்களைப் போல் இவர்களும் பல துறைகளில் வளர்ச்சியடைந்து இருந்தனர். இவர்கள் செங்கல்லினால் கட்டப்பட்ட வீடுகள், தனிக் குழியல் அறை, வடிகால் அமைத்து கழிவுகளை அகற்றவும் கழிவுகள் சென்று நிலத்தின் கீழ் தாழிவைத்து கழிவு நீரை அகற்றிச் சுத்தமாக வைத்திருந்தனர்.

இவர்கள் தமது முன்னோர்களின் ஆவியானது (Animism நடுகல் வணக்கம்) மரங்களிலும், மலை போன்றவற்றில் உலாவுவதாக என்னிய இவர்கள் இதற்கு உருவமும் கொடுத்தனர். அது மீன், . மலை போன்ற நம்பிக்கை இருந்திருக்கலாம் என பெரும்பான்மையாக கருதுகின்றனர். எனினும் அதனை விடவளர்ச்சி பெற்றி நிலையையும் காணமுடிகின்றது. பல சிந்துவெளி எழுத்துக்கள் படித்து முடிக்கப்படவில்லை. அத்துடன் வேல் உருவ எழுத்திற்கு சரியான விளக்கம் இன்னும் கொடுக்கப் படவில்லை என கமில் வி. சுவலபில் கருதுகின்றார். (வெ. கிருஷ்ணமூர்த்தி – ஆய்வு வட்டக் கட்டுரைகள் (பாகம் 1) இது மாத்திரம் அல்ல குண்டலினி, லிங்க உருவம் சேர்ந்த உருவங்கள் சிந்து வெளியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை கல் நடப்படும் முறையிலும் பார்க்க வளர்ச்சியடைந்த நிலையே உள்ளது. பொதுவாகவே இந்திய மதத்தை தாய்வழி வழிபாடுகள் என்றுதான் வரையறுத்துக் கொள்கின்றனர்.

சிந்துவெளியில் கண்டு எடுக்கப்பட்ட யோகநிலையில் இருந்து கொண்ட சிலையை எடுத்துள்ளனர். இதனிடத்தில் இருந்து யோகப்பயிற்சி முதலிய அப்பியாச முறைகளும், மனோநிலை ஒன்றுபடுத்தும் சிந்தனையும் இவர்களிடத்தில் இருந்து தோன்றியதாக கொள்ளப்படுகின்றது. சிந்து வெளியில் கண்டு பிடிக்கப்பட்ட தடயங்களில் இருந்து அங்கு வாழ்ந்த மக்களின் கடவுள் நம்பிக்கை கடவுள்களுக்கும் தென் இந்தியாவில் வாழ்ந்த மக்கள் வணங்கிய கடவுள்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றன எனக் கொள்ள வேண்டியுள்ளது. இவைபற்றி சமயத்தின் கீழ்பார்ப்போம். ''தொல்லிந்திய முத்திரைகளில் விலங்குகளால் சூழப்பட்ட பன்முகக் கடவுள் உருவம் காணப்படுகின்றது. கால்களை யோக நிலையில் பரப்பி அரியணையில் அவ்வுருவம் அமர்ந்துள்ளது. இதிலிருந்தும் சிவவழிபாட்டினர் யோகிகளின் தலைவன் யோகேஸ்வரன் என்னும் சிவன் என்று வழங்குவதனாலும் யோக

தரிசனத்துக்குப் பிதாவென்ற ழைக்கப்படும் பதஞ்சலிக்கும் முற்பட்டது. தொன்மையானது யோகம் என்பது தெளிவு.'' (பக். 112 அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ் – இந்துமாக்கடல் மர்மங்கள்) இப்படியாக வாழ்ந்து கொண்டிருந்த சமுதாயம் என்பது 3500 வருடங்களுக்கு முன்னர் அழிவுற்றுப் போய்விட்டது. சிந்து வெளி நாகரீகத்தின் அழிவிற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனாலும் ஒருமித்த கருத்து உருவாக்கப்படவில்லை. இதற்கு நிலவியலாளரான கோந்த்ரதோவ் பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றார். இயற்கை சீற்றம், ஆரியரின் படைஎடுப்பு, அடிமைச் சமுதாயச் சிந்தனை என்பனவாகும்.

குறிப்பாக இந்திய வரலாற்றை பார்க்கின்ற போது சிந்துவெளி வளர்ச்சிக்கும், அதே இனமாகிய தென்னிந்திய வரலாற்றிற்கும் இடை வெளியைக் காணலாம். இந்த வரலாறு என்பது மத்திய இந்தியாவை விடுத்து, குறுக்கி வருகின்றது இவற்றை இணைத்து கூறுகின்ற வரலாறுகள் பற்றாக்குறை காணப்படுகின்றது. இவற்றிற்கு காரணம் மற்றைய பிராந்திய மக்கள் வேறு மொழி பேசுவதால் இவர்கள் திராவிட வரலாற்றில் இடம் பெறவில்லையா எனவும் தோன்றுகின்றது. தற்பொழுது மத்திய இந்திய மொழியில் திராவிட இலக்கண விதி அதிகமாக இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மொழியை வைத்து இனத்தை கண்டுபிடிக்க முடியாது மொழி என்பது மாற்றமடையப்படும். மொழி என்பது பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆட்சியாளர்கள் வகுப்பதுதான் மொழி என்ற வரலாற்றை காணமுடிகின்றது. சிங்கள மன்னர்கள் தமிழையும், பாலியையும் போற்றி வளர்த்தனர். ஆனால் தமிழ் மன்னர்கள் வடமொழியை, தமிழையும் வளர்த்தனர். மொழி என்பது கால மாற்றத்தில் மக்களாலும் மன்னராலும் வெவ்வேறு மொழி பாவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேபோல் தென்திராவிட மக்களிடத்தில் கட்டிடக் கலை வடதிராவிடத்தை விட பின்தங்கியே இருந்திருக்கின்றது. இந்நிலை இருப்பதினால் தென்திராவிடம் வளர்ச்சிபெறவில்லை என கருதிக் கொள்வதுடன் இதற்கு காரணம் குமரிக்கண்டம் கடல் கொண்டு விட்டது என்றும், இந்த அழிவினால் விரக்தியுற்ற மக்கள் பிற்பாடு கட்டிடக் கலையில் ஆர்வம் அற்றிருக்கலாம் என்ற வாதத்தையும் முன்வைக்கின்றனர். ஆனால் தமிழ் மக்களிடையே குலம் அமைப்பு முறையில் அமைந்த சமூக அமைப்பு, இவர்களிலும் வளர்ச்சியடைந்த சிற்றரசர், இவர்களை எல்லாம் ஆட்சி செய்த பெரும் மன்னர்கள் இருந்திருக்கின்றார். ஆனால் குலங்கள் பெரும் மன்னனுக்கு. அல்லது சிற்றரசனுக்கு கீழ் இருந்திருக்க வேண்டியது இல்லை. ஆனால் மன்னன் என்ற நிலையில் அன்பளிப்புக்களும், மணப் பெண் கொடுத்தலும் இருந்திருக்கும். இவைகள் ஒரு குலத்தின் மேன்மையை வெளிப்படுத்துகின்ற அடையாளச் (symbols) சின்னங்கள். இப்படியான அடையாள கொடுக்கல் வாங்கல்கள் இருந்திருக்கும்.

குலங்களாக இருந்தபோது குலத்தலைவர்களும் அவர்கள் குலத்தாரும் அழகான களிமண்ணால் மெழுகிய அழகிய குடிசையும், துப்பரவாக அரித்து துடைப்பத்தால் (விளக்கமாறு) கூட்டிய முற்றமும் இருந்திருக்கும். அங்கே அமைந்த சிறு குடிசையில் அழகான பந்தம் போட்ட சிறு பந்தல் இவற்றில் இளைப்பாறவும் பொது விடயம் பேசுவதற்கும் பயன்படும் இடமாகிய மன்றமும் இருந்திருக்கலாம். கா. சுப்பிரமணியன் பின்வருமாறு விபரிக்கின்றார். ''சீறூர்த் தலைவனது முற்றம் கூளம் நிறைந்து , துடைக்காதது. (புறம்316) அது சிறிய வீட்டின் முற்றம். (புறம்319) முஞ்ஞைக் கீரையும், முசுண்டைக் கொடியும் பம்பி வளர்ந்தன. நிழல் தருவதால், பந்தல் போடாமலேயே பலரும் தூங்கக் கூடியவை (புறம்320) வயிரம் பாய்ந்து மரக்கால்களை நாட்டிப் பந்தல் போடப் பெற்ற முற்றம் (புறம்325) அறுகம் புல்லையும் முஞ்ஞைக் கொடியையும் முயல், மான் வந்து கறிக்கும் முற்றம். (புறம்3197,328) கூத்தாளிப் பூவும், காட்டு மல்லிகையும் வளர்ந்த முற்றம். (புறம்168)'' (பக்.62 கா. சுப்பிரமணியன் – சங்க காலச் சமுதாயம் ) மன்றம் பற்றிய பகுதியையும் இங்கு பார்ப்போம், ''மக்களும் மாவும் செய்யும் ஆரவாரம் இல்லையாய்ப் பகைவரால் அழிந்து போன ஊர் மன்றம்(பதிற்று 13) உனது காலாட்படைகள் நின்று பொருந்த ஊர் மன்றங்கள் கழுதையேர் பூட்டிப் பாழ் செய்யப்பட்டன. (பதிற்று 25) இவ்விருபாடல் வரிகளும், பகை மன்னரின் முதல் தாக்குதலுக்கு மன்றம் இடமாதலைக் காட்டுகின்றன. இதற்கு உரையாசிரியர், படைவீரர் ஊரிடத்தே மன்றங்களிற் சென்று தங்கி, ஆண்டுத் தம்மை எதிர்த்த படை வீரரை வென்று, அம்மன்றங்களையும் கழுதையேர் பூட்டிப் பாழ் செய்து விட்டனர் என விளக்கம் தருகின்றார். (பக். 52 கா. சுப்பிரமணியன் – சங்க காலச் சமுதாயம்) இதில் விபரிக்கப்படும் மன்றம் என்பது வளர்ச்சியடைந்த நிலையில் உள்ள சமூகத்திற்கு உரியதாகும். இதன் ஆரம்ப நிலை என்பது சாதாரணமாகவும் சிக்கலற்ற வளர்ச்சியைக் கொண்டிருக்கும்.

ஆரம்ப வளர்ச்சி நிலை என்பது தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதும், அதற்கு பிந்திய நிலை உருவாக்கப்படும் பொருட்கள் என்பது தம்மிலும் பார்க்க அப்பாற்பட்ட சக்திக்கு பயத்தின் நிமித்தம் கொடுக்கப்படுகின்ற பொருட்களாக இருக்கும். இவை புனிதத் தன்மை கொண்டதாக இருக்கும். முதலில் தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் புனிதத் தன்மை கொண்டதாக இருப்பதாக கருதுவது அன்றையச் சமூக நிலையில் புத்தி கூர்மையான என்ற வளர்ச்சிக் கட்டம் எனக் கொள்ள வைக்கின்றது. இந்தக் கட்டத்தை விட்டு நகர்கின்ற போது புதிய சாதனை கொண்ட நிகழ்ச்சிகளை கையாளத் தொடங்குகின்ற கட்டம் வளர்கின்றது. தமது (அநாகரீகத் தன்மை) முரண்டுத்தனமான சிந்தனையில் வெளிவருகின்ற கற்பனையை நிறைவு செய்ய முற்படுகின்றார்கள். இதன் மூலமாக கட்டிடக் கலைகளும், கோவில்கள், மாளிகைகள் கட்டப்படுகின்றன. இவ்வாறான கட்டிட கலைகள் எல்லாம் பிற்பட்ட காலத்திலேயே தென் இந்தியாவில், இலங்கையில் பார்க்க முடிகின்றது. ''பௌத்த மதம் இலங்கைக்கு வரும் முன் இலங்கையில் உள்ள எல்லா வீடுகளும் ஓலைகளால், மரத்தினால், மண்ணால்

கட்டப்பட்டிருந்தன. அசோகப் பேரரசில் செங்கற் கட்டிடங்கள் கட்டி எழுப்பப்பட்டன. (இலங்கை வரலாறு – பக்.243 க.ப. அறவாணன், தமிழ்ச் சமுதாய வரலாறு) இவ்வாறான வேறுபாடுகள் வடக்கிற்கும் தெற்கிற்கும் இருக்கின்றது. தெற்கின் கலாச்சார வளர்ச்சியை வெறுமனே கட்டிட அமைப்பை, எழுத்து வடிவத்தை மாத்திரம் கொண்டும் கணித்துக் கொள்ள முடியாது.

நாடோடிகளான ஆரியர்கள் அக்கினி வளர்த்து யாகம் செய்வதில் அதிகம் முக்கியத்துவம் கொடுத்தனர். அக்கினி மூலமாக உடலை ஆன்மாவில் இருந்து பிரித்து கொள்ள அக்கினி உதவுவதாகவும், அவற்றை பிரிப்பதற்கு இறந்தபின்னர் உடலை எரிக்கும் பழக்கத்தை கொண்டனர். பழைய காலத்தில் ஜெர்மானியர்கள் சதிக்கு நிகரான பழக்கத்தைக் கொண்டிருந்திருக்கின்றனர். குலத்தின் தலைவர் இறந்த பின்னர் இறந்த சடலத்துடன் பெண்ணையும் சேர்ந்து எரிக்கும் பழக்கம் இருந்திருக்கின்றது. இவ்வாறான வேறுபாடுகள் உடைய வடக்கு, தெற்கு திராவிட தேசங்களில் ஆரிய நாடோடிகளின் வருகையின் போது தமது வழிகாட்டிகளாக தமது கடவுள்களை கொண்டு வந்திருந்தனர். தமது அறிவுத் தேவையையும், விவேகத்தையும், சக்தியையும் கொண்ட கடவுளையும், அத்துடன் அந்தக் கடவுளுக்கு இல்லாத சக்தியை மற்றைய கடவுளிடம் பெற்று தமக்கு வழங்குதாக கொண்ட ஐதிகங்களையும் கொண்ட பிரிவையும், கால்நடையாக சுற்றித்திருந்து கொண்டிருந்த வேளையில் மாத்திரம் அல்ல தமது எல்லா காலங்களிலும் வழிநடத்தும் தலைவனையும் கொண்ட பிரிவும், அத்துடன் தமது வேளாண்மை, உற்பத்தி தேவையை பூர்த்தி செய்யவும், வளம்பெருக்கம் வணிகம் ஆகியவற்றை பாதுகாத்து வழிநடத்தவும் கடவுள்கள் என பிரித்து மூன்று பிரிவுகள் இருந்திருக்கின்றன. இந்தப் பிரிவுகள் ஐரோப்பிய மக்களிடையே காணப்படும் ஒற்றுமை இருந்திருப்பதை காணமுடிகின்றது, இவற்றை கீழே பார்ப்போம்.

| வர்ணங்கள் | கடவுள்கள் | தொழிற்பாடுகள் |
|---|---|---|
| பிராமணர் | வருணன்,மித்திரன் | முத்திரம், அறிவு |
| சத்திரியர் | இந்திரன் | பாதுகாப்பு |
| வைசியர் | நாஸ்திகா | வணிகம், வளம்பெருக்கம் |

உலகை வழிநடத்துபவன், உலகை கட்டுப்படுத்துபவன், என்ற பிரிவுகள் இந்தோ ஐரோப்பியர்களிடம் இருந்த பிரிவினையை மகாபாரதத்தில் பின்வரும் பிரிவுகளை பார்க்கலாம்.

| வர்ணங்கள் | தொழிற்பாடுகள் | கடவுள்கள் |
|---|---|---|
| பூசாரி (பிராமணர்) | தர்மன் | தர்மா |
| அரசர் (சத்திரியர்) | அர்ச்சுனன், வீமன் | இந்திரன், வாயு |
| வளம்பெருக்கம்(வைசியர்) | நகுலன், சகாதேவன் | அஸ்வினி |

இவற்றுடன் பிளேட்டோவினுடைய பிரிவுகளையும் இங்கே பார்ப்போம்.

| | |
|---|---|
| அறிஞர்கள் | அரசாட்சி |
| படைவீரர்கள் | பாதுகாப்பு |
| வணிகர்கள், உற்பத்தியாளர் | பொருளாதாரம் |

இந்த விதமான பிரிவினைகளைக் கொண்ட சமுதாயம் மற்றைய தேசங்களில் இல்லை. இவ்வாறான பிரிவினைகள் தொன்மையான வரலாற்றைக் கொண்ட ஆபிரிக்க இனக்குழுக்களிடம், அவுஸ்ரேலிய இனக் குழுக்களிடம் இருந்ததில்லை. ஆனால் அவர்களிடம் இருப்பது எல்லாம் தொன்மையான நாகரீகத்தை கொண்ட மனித கூட்டத்திடம் இருக்க வேண்டிய தொன்மைக் கால பழக்க வழக்கங்களே இருக்கின்றன. அண்மைக் காலத்தில் மெலினேசியாவில் (துலாம்பியர்) புற உலகத்துடன் தொடர்பு கொண்ட சமூகத்தவர், கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் நிலையை காட்டி நிற்கின்றனர். இவ்வாறாக தொன்மையைக் கொண்ட மக்களிடத்தில் சாதாரணமாக புதிய சிந்தனை பரவியிருக்க முடியாது. சாதியம் என்பது இனவாதச் சிந்தனை, இது தற்கால நிறவெறிக்குச் சமனாகும். இந்தச் நிறவாதச் சிந்தனை உடனடியாக திராவிட இனக் குழுக்களிடையே பரவியிருக்க முடியாது நீண்டகால வரலாறு இவற்றிற்கு தேவையானதாகும். காரணம் இன்றைய உலகைப் போல் தொடர்புகளும், கலாச்சார மொழி பரிவர்த்தனைகளும் விரைவாக நடைபெற சாத்தியம் என்பது இல்லை. எனினும் தொல்காப்பிய காலத்தில் (சுமார் வள்ளுவர் முன் 600களில்) தமிழ் சமுதாயத்திடம் பரவியிருக்க முடியும் என்பது ஆய்வாளர்களின் கணிப்பாகும். எவை எப்படி இருப்பினும் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் உதயத்துடனே தான் சாதிய வரையறை கொண்ட வேலைப் பிரிவினை ஏற்பட்டிருக்க முடியும்.

அன்றைய்ச் சமூகத்தில் நிலப்பிரபுத்துவ, அரச ஆட்சிமுறை ஏற்பட்ட பிற்பாடே சாதியம் என்பது நிறுவனமயப் பட்டிருக்கும். நிலப்பிரபுத்துவம் வர்ணச் சிந்தனையை தாவிப்பிடித்துக் கொண்டு அவற்றை மிக உக்கிரமான சுரண்டலை மேற்கொண்டிருக்கும். ஏனெனில் குறிப்பாக அன்றைய திராவிடச் சமூகமானது குலச் சமுதாயத்தில் பல ஆயிரக் கணக்கான வருடங்கள் வாழ்க்கை வட்டத்தை அமைத்துக் கொண்டது என்ற முடிவிற்கு தற்கால ஆய்வுகளைக் கொண்டு வரமுடியும். நாகரீகத்தில் வளர்ச்சியடைந்திருந்த திராவிட இனங்கள் மத்தியில் ஆரிய நாடோடி மேய்பர்கள் கூட்டம் கொண்டு வந்திருந்த விசித்திரமான புதிய சிந்தனையானது அன்றைய சமூகத்தில் அவை சிறப்புத் தன்மை கொண்டதாக இருந்திருக்கும்

என்பதில் சந்தேகமில்லை. ஆளும் வர்க்கம் இப்புதிய சிந்தனையை பரீட்சித்துப் பார்க்க எண்ணியிருக்கும் இது தொன்மைத் திராவிடத்தின் (அநாகரீகத் தன்மை) முரண்டுத்தனமான சிந்தனையில் வெளிவருகின்ற கற்பனையை நிறைவு செய்ய முற்பட்டிருப்பர்.

இவ்வாறு வரும் போது வளர்ச்சிடைந்த சமுகம் புதிய சிந்தாந்தத்தை தமக்கு ஏற்றது அதிக உபரியைக் கொடுக்கும் என அன்றைய சமூகம் நம்பியிருக்கும். அன்றைய சமூகத்தின் வாழ்நிலை என்பது உபரி உற்பத்தி பொருட்களின் பலாபலன்கள், பாவனைத் பொருட்களின் உபரித்தன்மை ஆகியவை முக்கியமான பொருளாதார காரணியாகும்.

## 1.3.3 பொருளாதாரமும் நிர்வாகத்தில் உரிமையும்

இனக்குழுக்கள் ஒவ்வொன்றும் நிர்வாக முறைகளைக் கொண்டு இருந்திருக்கின்றது. நிர்வாக அலகுகள் என்ற பகுதியில் பற்பல சாதிகள் மையப்படுத்தப்படாத அரசாட்சி காலங்களில் அதாவது முதலாளித்துவ அரச எல்லைகள் ஏற்படுவதற்கு முன்னராக கிராமிய அதிகாரங்களில் இருந்திருக்கின்றனர். ''அவர்கள் கொடுத்த பரதவச்சேனையுடனுஞ் சிலபோத்துக்கேயருடனும் அவ்வன்னியன் திருக்கோணமலைக்கு வந்து, தான் எண்ணியவாறு முடியான்மைகண்டு, பரதவச்சேனையுடன் வன்னியகுமாரனைக் கோடிக்கரைக்குப் போத்துகேயரிட மனுப்பினான். ''(பக். 99, இராசநாயகம், யாழ்ப்பாணச் சரித்திரம்) இந்தப் பகுதி இரண்டு நிலையை உணர்ந்துகின்றது சில வேளைகளில் மதம் மாறிய பரதவர்களாகவும் இருக்கலாம். இத்துடன் இவர்கள் (1551 காலப்பகுதியில் இடம் பெற்றது) 2000 வருடத்திற்கு முன்னர் இருந்தது போலவே வர்த்தகத்திற்கு பக்க பலமாக இருந்த கப்பல் ஓட்டும் மாலுமிகளைக் கொண்டும் இருந்திருக்க முடியும். தமிழரசர் காலத்தில் கப்பற் படைக்கு அதிபதிகளாக கரையாரத் தலைவர்கள் இருந்திருக்கின்றார்.

இனக்குழுக்களான பரதவர்களின் உள்கிளையாகிய கரையார், முக்குவர், திமிலர், முக்குலத்தவர் எனப்படும் மறவர், கள்ளர், தேவர் மற்றும் வேளார்களுடன் அரச எல்லைக்குள் அதிகாரம் பெற்று கிராம எல்லைக்குள் அதிகாரம் செலுத்தி வந்துள்ளதை வரலாற்றில் காணக் கிடக்கின்றது. இவற்றை இன்னும் விரிவாக **நிர்வாக அலகுகள்** என்ற பகுதியில் பார்ப்போம். ''வேளாளர், அதிகாரி வரியினை அறவிடுதல் வேளாளர், சாணார்,தனக்காரரிம் அறவிடப்பட்டது. (பக். 218 யாழ்ப்பாணச் சரித்திரம்) இதன் மூலம் தாங்களே பழைய சாதி எனப் பெருமை கொண்டனர்.

இந்தப் போக்கானது ஆய்விற்கு உரிய தாகும் முன்பு கள்ளுச் சீவும் தொழிலை மேற்கொண்ட சாணார் பின்னர் அதனை விடுத்து எண்ணை வடிக்கும் தொழிலை மேற்கொண்டனர். இவர்கள் காலப் போக்கில் வேறு தொழில் செய்திருந்தாலும் தாம் பழைய சாதி என்கின்ற மனோபாவம் இருந்துள்ளதை இங்கு பார்க்க கூடியதாக உள்ளது. இவற்றில் இருந்து இன்றைக்கு கள்ளுச் சீவும் தொழிலை செய்பவர்கள் தாழ்த்தப்பட்டதற்கு

கொடுக்கப்படும் காரணம் அவர்கள் சிங்கள இனக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதாக இருக்கலாம். ஏனெனில் கள்ளுச் சிவல் தொழில் தரக் குறைவானது என்பது தொழில் திரியான வேலைப் பிரிவினையில் அமைந்த பாகுபாடும் அவற்றின் காரணமாக நளவர் தாழ்ந்தவர் எனக் கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாது உள்ளது.

கள்ளைப் பற்றிய சிறப்பும், பனையின் பலன் பற்றி அறிவும் எமது சமுதாயத்தில் இருந்திருக்கின்றது. இவை இப்படி இருக்க, கள்ளுச் சீவுகின்ற மக்களை கேரளத்தில் ஈழவர் என்றும், தமிழ்நாட்டில் சாமுண்டிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இலங்கையில் கள்ளுச் சீவிய மக்கள் சாணார் என அழைக்கப்பட்டனர். இருப்பினும் இந்த விதமான பாகுபாடுகள் இருக்கின்றதைப் பார்க்கின்ற போது ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குலங்களே, அல்லது பக்கம் பக்கமாக வேறு குலங்களே இருத்திருக்கலாம், மன்னர்களின் மையப்பட்ட அதிகாரத்தை தவிர கிராமிய சுயாட்சி இருந்திருப்பதை அவதானிக்கின்ற போது ஒவ்வொன்றும் சுதந்திரமாக தமது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வாழ்ந்திருக்க முடியும். ஆனால் குறிப்பிட்ட அதிகார வரம்பைக் கொண்ட மன்னர்கள் ஆட்சி செய்திருக்கின்றனர் எனலாம். பஞ்சாயத்து- என்பது கிராமிய சுயாதிபத்தியத்தை வலியுறுத்த கருவியாக இருந்து தமது நலன்களை பாதுகாத்துக் கொண்டு இருந்ததுடன் மன்னருடன் முரண்பட்டுக் கொள்ளாமல் கிராமங்கள் தமது நலனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற போது அதிகாரம் என்பது சமப்படுத்தப் படுகின்றது.

இந்த அதிகாரச் சமப்படுத்தல் பொருளாதார முனைப்பிற்கு பாதகம் ஏற்படுகின்ற போது போராட்டங்களும் எழுகின்றது. கண்ணகி கோவலனின் கதையில் வணிகர் குலத்தவர் தமக்கு பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை போக்க ஏற்பட்ட போராட்டமாக இருந்ததாக ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகின்றனர். அத்துடன் வணிக வர்க்கத்தின் சுரண்டல் என்பது அதிகரித்திருந்தினால் ஏற்பட்ட முரண்பாடுகளை பக்தி இயக்கத்தை பயன்படுத்திக் கொண்டு உழவர் இயக்கம் வெற்றி கண்டதாக கருதப்படுகின்றது. ஆனால் இது ஒடுக்கப்படும் வர்க்கத்தைச் பொறுத்தவரை எதிர்ப்பு என்பது அதிகார வர்க்கத்தை தகர்க்கும் வகையில் இடம் பெறவில்லை. குறிப்பாக இலக்கியங்களில் குறிப்பிடப்படும் சாதிகள் எனப்படுபவைகள் பற்றிப் பார்க்கின்ற போது சில தன்மைகளை உன்னிப்பாக கவனித்துக் கொள்ளவேண்டும்.

முக்குலத்தவர், பரதவ குலத்தவர், வேளாளர், பறையர், பள்ளர் போன்றவர்கள் எவ்வகையான பொருளாதார உற்பத்தி முறையைக் கொண்டு இருந்திருக்க முடியும் என பார்த்தல் அவசியமாகும். அதேவேளை இன்று ஒவ்வொரு சாதிகளும் ஈடுபடுகின்ற தொழில்களில் இருந்து சாதிகளின் ஒவ்வொரு சாதிகளும் எவ்வகையாக தொழில்களில் ஈடுபட்டவை என

நிச்சயம் கூற முடியாது. உதாரணமாக மீன்பிடித்தல் பரதவர்களுக்கு மாத்திரம் உரித்தானது என்றோ அல்லது விவசாயம் வேளாளருக்கு மாத்திரம் உரித்தானது எனக் கொண்டு சாதியைப் பற்றி ஆய்வினை மேற்கொள்ள முடியாது. இன்று வேளாளரும் ஆளம் அற்ற கடலில் மீன்களை குத்திப் பிடிக்கின்றனர். இன்றைய இனக்குழுக்கள் மீன் பிடிக்கின்ற முறையை அவதானிப்பதன் மூலம் பண்டைய காலத்தில் எந்த இனக்குழுவினரும் மீன்பிடித்திருக்க முடியும் என்ற நிலைக்கு வரமுடிகின்றது ''வேட்டியை நீரோடைக்குள் விரித்துப் பின் அதனைக் கொஞ்சம் கொஞ்சமாய் மடித்து, நீருக்கு வெளியே எடுத்து அதில் சிக்கியுள்ள மீன்களைச் சேகரித்து உணவாகக் கொள்வர்.(பக்.84 பதிப்பாசிரியர் வானமாமலை – மக்களும் மரபுகளும்) மீன்பிடித்தலானது எல்லா வேளைகளிலும் எல்லோரும் செய்ய முடியும் ஆனால் ஆழ்கடல் சென்று மீன்பிடிப்பது நவீன காலத்தில் இருப்பது போன்று கப்பலோட்டும் படகோட்டிகள் இல்லாத காலத்தில் பரம்பரை பரம்பரையாகவே கப்பலோட்டும் தொழிலை பயின்று கப்பலோட்டுகின்றனர்.

அதேபோல பரதவ உட்கிளைகளும் விவசாயம், தேன் சேகரித்தல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். இந்தச் சாதிகளின் பொருளாதார உற்பத்தி முறைகளை அறிந்து கொள்ள முற்பட வேண்டுமானால் இனக் குழுக்களாக இருக்கின்ற போது எவ்வகையான உற்பத்திகளை மேற் கொண்டிருந்தனர் என்ற கருதுகோளின் அடிப்படையில் இருந்து தொடங்குவது முறையான ஆரம்பமாகும். இதனை விடுத்து இலக்கணத்தில் குறிப்பிடப்படுகின்ற சாதிகளின் பெயர்களில், தொழிலில் இருந்து ஆய்வை மேற்கொள்ளும் பொழுதும், வர்ணக் கோட்பாட்டில் அமைந்த பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவுகளில் இருந்தும், இலக்கியத்தில் மக்கள் வாழ்ந்த பகுதிகளை பிரித்துக் கூறும் முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை போன்ற திணைகள் போன்ற வரைவிலக்கணங்களில் (Definition) இருந்து ஆய்வு செய்யும் போது ஆய்வானது முழுமை பெறாத நிலை தோன்ற முடியும்.

ஒரு இனக் குழு எவ்வாறு பொருளாதார உற்பத்தியில் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வந்திருக்க முடியும் என்பதை குலங்கள், உபரிமதிப்பு, உற்பத்தி முறைகள், பயன்பாட்டு பெறுமதி என்ற பகுதியில் இருந்து ஒரு பார்வையை பெற்றுக் கொள்ள முடியும். அதே போல இங்கு தேவை கருதி பார்க்கப்படுகின்ற போதும் பெற்றுக் கொள்ள முடியும். மனித வளர்ச்சியில் தொழில் துறைகளில் பெயர்களின் அடிப்படையில் அமைந்து கொண்ட பெயர்கள் என்பது முக்கியமற்றது எனக் கருதவில்லை. ஆனால் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குலங்களைப் பற்றி பார்க்கின்ற போது கரண்டல் பொருளாதார அமைப்பு கொண்டுள்ள ஒடுக்கும் பொருளாதார சிந்தனையை அம்பலப்படுத்த முடியும் என நம்பலாம். தொழிற் பெயர்களின் அமைந்து கொண்ட சாதிகளான அம்பட்டர்கள், வண்ணார் போன்ற பஞ்சமர்கள் எல்லாம் இனக்குழுக்களில் இருந்து நலிந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியும் என்பதை கீழே பார்கின்ற போது முடிவிற்கு

வர முடியும். இந்தச் சாதிகள் எல்லாம் நிச்சயம் ஒரு இனத்தில் இருந்து பிரிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட வர்க்கம் எனக் கொள்ளத் தேவையில்லை. மாறாக ஒவ்வொரு இனக்குழுக்களில் இருந்தும் பிரிந்த வேலைப் பிரிவினைகள் மூலமாக அந்தத் தொழில் செய்து கொண்ட அனைவரும் காலப் போக்கில் ஒரே பெயரில் அழைக்கப்பட்டிருக்க முடியும்.

சமூகத்தில் பாவிக்கப்படுகின்ற சொற்கள் அனைவராலும் ஒரே பொருளுக்குரியதாக பாவிக்கப்படும். வளர்ந்து வருகின்ற பொருளாதார முனைப்புக் காரணமாக சொற்கள் புதிது புதிதாக உருவாக்கப் – படுகின்றது. நவீன காலத்தில் கணணி என கொம்பியூட்ரை தமிழில் அழைக்கின்றோம். ஆனால் இது 100 வருடங்களுக்கு முற்பட்ட மக்கள் அறிந்திருக்க மாட்டார்கள். இந்தச் சொல் தமிழர்களிடம் பரவிக் கொண்டு வருகின்றது. சில வருடங்களுக்கு முன்னர் கொம்பியூட்டருக்கு தமிழ் பெயர் எல்லோருக்கும் தெரிந்திருக்கவில்லை. இன்று பழக்கத்தில் வருகின்றது. அதே போல தான் சாதிகளின் தொழில் வகைப்பட்ட பெயர்களாகும். சாதிகளை அழைக்கப் பாவிக்கப்படும் சொற்கள் எல்லோரும் பாவிக்கப்டுவது தேசிய இன உருவாக்கத்தின் போதே சாத்தியமாகின்றது.

## 1.3.4 பறையர் குலத்தவர்

இன்றைக்குச் சாதிகள் எனப்படுபவைகள் முன்னர் சமூகத்தின் முக்கிய அங்கத்தவர்களாக இருந்தனர். பின்னர் ஒடுக்குமுறையின் காரணமாக சமூகத்தின் தாழ்ந்த நிலைக்குச் சென்றனர் என்ற கருத்து இன்று ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுகின்ற போது தமது எழுச்சியை அடைகின்றனர் தமது அடையாளத்தை மறைக்கப்பட்ட உண்மையை முன்னுக்கு கொண்டு வருகின்றனர். சாதிப்படிகளில் மேல்தட்டில் இருப்பவர்கள் கீழ்த்தட்டில் இருப்பவர்கள் எந்தக் காலத்திலும் ஒரே நிலையில் மாற்றமடையாமல் இருந்ததில்லை எனலாம். பறையர்கள், பாணர்கள் என்போர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெவ்வேறு தொழில்களைப் புரிந்து வந்துள்ளர் எனலாம்.

இன்று தாழ்ந்த சாதியினர் என்று அழைக்கப்படும் இவர்கள் தாழ்ந்த நிலைக்குச் செல்ல பல நூற்றாண்டுகள் செல்லும். பல குலங்கள் தமது நிலையில் இருந்து மாறி புதிய நிலையை வாழ்க்கை முறையை தேர்ந்தெடுத்துள்ளனர். நாடோடிகளாக வந்து சேர்ந்த ஆரியர்களின் பல்வேறு வகையினராக இருக்கின்றனர். இன்னொரு பகுதியினரான கோதர்கள் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர். இவர்கள் இனக்குழுவாக தொடர்ந்தும் வாழ்கின்றனர். இவர்களை ஐரோப்பிய வகைப் பெரிய இனத்தின் தெற்குக் கிளை (பக்.40 மி. நெஸ்தூர்ஹ் மனித இனங்கள்) இவர்களைப் போலவே இன்றைய உழைக்கும் வர்க்கமாக இருக்கின்ற இனக்குழு முன்னர் படையினராக

இருந்திருக்கின்றனர். அலகாபாத் தூணில் காணும் கல்வெட்டின் மெய்க்கீர்த்தியின்படி சமுத்திரகுப்தன் இந்த ஆபீரர்களைத் தோற்கடித்துள்ளான். எனவே அவர்கள் போர்வீரர்கள் என்ற நிலைமாறி இடையர் இனக்குழவினராக மாற ஒரு நூற்றாண்டாவது பிடித்திருக்கும்.''(பக்.287 வெ. கிருஷ்ணமூர்த்தி – ஆய்வு வட்டக் கட்டுரைகள் (பாகம் 1) இவ்வாறே பறையர் குலத்தவர்கள் எனக் கொள்ள முடிகின்றது. பாப்பானுக்கு முந்திய பறையன் கேள்பான் அற்று கீழ்சாதியானான் இந்தப் பழமொழியினை ஆராய்தல் வேண்டும். ''ஐந்திரத்தை (பஞ்சாங்கத்தை) வைத்து நாள் மீன் கோள் மீனைப் பார்த்துப் பருவங்களையும் காற்றையும் மழையையும் கணித்துச் சொல்லி, வேளாண் வாழ்வியலில் தனிச்சிறப்புடன் விளங்கிவந்த வள்ளுவர்களையே முதலில் **பார்ப்பார்** என்றனர். 'பார்ப்பானுக்கு மூத்த பறையன், கேட்பாரின்றிக் கீழ்சாதியானான்' (பக். 21 குணா, தமிழர் வரலாறு 1995) குணா உபயோகப்படுத்துகின்ற பாவாணரின் மேற்கோள்களை பார்ப்போம் 'தமிழ் மறைநூல்களைப் பார்ப்பதும், வழிபாடு, திருமணம் முதலியவற்றை நடத்துவதுமே தொழிலாகக் கொண்டு, பார்ப்பனர் என்னும் பெயருடன் ஒரு குலத்தார் முன்னமேயிருந்து பின்பு ஆரியப் பிராமணர் வந்தபின் தம் தொழிலையிழந்து விட்டனர். ஆரியப் பிராமணர் தமிழ்ப் பார்ப்பாரின் தொழிலை மேற்கொண்ட பின், தாமும் அவர் பெயராலேயே அழைக்கப்பட்டு வருதல் இயல்பானதே. அல்லாவிடின், வடமொழிப் பற்றுள்ள பிராமணருக்குப் பார்ப்பார் என்னும் தனிப் பெயர் வழங்கிவரக் காரணமில்லை'' என்றும்

''தமிழ்நாட்டில் இப்போதும், பார்ப்பனருக்குத் தொழிலால் நெருங்கியுள்ளவர்கள், புலவர், பண்டாரம், குருக்கள், பூசாரிகள், போற்றி, உவச்சன், நம்பி, என்று கூறப்படும் தமிழ்க் குலத்தாராவர். இவருடைய முன்னோரே, ஒருக்கால் தமிழ்ப் பார்ப்பனராயிருந்திருக்கலாமோ என்று இவர் பெயராலும் தொழிலாலும் ஐயுறக் கிடக்கிறது '' (பாவாணர், பக். 22 குணா, தமிழர் வரலாறு 1995) இவற்றில் இருந்து எமது நாட்களில் கொண்டுள்ள கருத்துக்களை கீழ் பரிசிலனை செய்யவேண்டியுள்ளது.

இந்த வள்ளுவர்களை (Shaman)– தேவராளன், தேவராட்டி என கா. சுப்பிரமணியன் பாவிக்கின்றார்.) மந்திரவாதிகள், மருத்துவர்கள், ஆவியுடன் கதைப்பவர்கள் எனக் கொள்ளலாம். பறையர்களின் ஒரு பகுதியினர் சைவப் பாப்பணர் அல்லது ஐயர்களானர் எனலாம் இந்தப் பறையர் குலத்தவர் பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் போராட்டத்தில் சரணரடைந்தவர்கள் பாப்பன குலத்தவரின் ஒருபகுதியாக மாற மற்றவர்கள் தொடர்ந்தும் போராட்டம் நடத்தியிருக்க வேண்டும் பறையர் குலத்தரைப் பற்றி பின்வருமாறு ''பறையா என்பது வீரத்தின், படைகளத்தின், பன்பாட்டின், எழுச்சிக்குரியதாகும் என்பது புலப்படுகின்றது. பறையர்கள் என்பவர்கள் ஆரியர்களின் ஆதிக்க கோட்டையையே தகர்த்தெறிந்தவர்கள் என்பதும், இம்மண்ணின் மைந்தர்களே। பூர்விகக் குடிகளே பறையர்கள் என்பதுமே

இயற்கை பூர்வமான வெளிப்பாடாகின்றது. (பக். ௨௨ எஸ். ஜே. ராஜா பூர்விகக் குடிகளே புரட்சியாளர்கள்) சுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகின்றார். "ஆட்டல் பாடல் இசைக் கருவியை இயக்கும் ஆற்றல் ஆகியவற்றில் அசாதாரணத் திறமையை வளர்த்துக் கொண்டு பாணன். பறையன். துடியன். பொருநன். விறலி போன்ற போன்ற கலைஞர்களும் கூட்டுக் கிளைகளாகத் (Clans) தோன்றினர். (பக் 3௨ கா. சுப்பிரமணியன் – சங்ககாலச் சமுதாயம்) பறையர் குலத்தவர் செய்த தொழிலை வரையறுத்துக் கொள்ள முடியாதுள்ளது. பண்டைய காலங்களில் மக்கள் சில வகையாக வேலைப் பிரிவினை வளர்வதற்கு சந்தர்ப்பம் என்பது இல்லை. இவை காலம் செல்லச் செல்லவே வேலைப் பிரிவினைகளும் விரிவாக்கம் பெறுகின்றது.

பண்டைய காலத்தில் வடிகால் அமைப்பு முறை என்பது எவ்வாறு இருந்தது எனப்பார்ப்போம். சிந்துவெளி நாகரிகத்தில் வடிகால் அமைத்து சாக்கடைகளை அகற்றும் முறை வெகுவாக வளர்ச்சியடைந்திருந்தது எனப்பார்த்தோம் ஆனால் இந்த முறை என்பது தெற்கில் உருவாகவில்லை என்பதை கட்டிட வளர்ச்சியின் மூலமாக அறிந்து கொள்ள முடியும். ஆனால் கட்டிட அமைப்பு முறை அசோக ஆட்சிக்காலத்தின் பின்னரே தெற்கில் ஏற்பட்டது என்றாலும் சாக்கடை அகற்றும் முறை பிற்பட்ட நூற்றாண்டில் கூட ஏற்படவில்லை. "பலருடைய வியர்ப்புக்குரிய இச்சாய்கடை அமைப்பு தமிழ் நாட்டில் எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. அகழ்வாய்வுகளும் காட்டவில்லை. அன்றியும் விரிந்த தமிழ் இலக்கியப் பரப்பு எங்கும் காட்டப்படவில்லை. மாறாகப் பத்துப்பாட்டுள் ஒன்றான பட்டினப்பாலை சாய்க்கடை அமைப்பிற்கு எதிராக ஒருகாட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அரண்மனையில் சோறு சமைத்து வடிக்கப்பட்ட கஞ்சி கரிகாலச் சோழனின் தலைநகரான வெண் பொடியாகி, காற்று பட்டுப் பறந்து சோழன் அரண்மனைக் கோபுரத்தையே வெள்ளை அழித்து அழுக்காக்கிவிட்டது. இச்சான்று சோழ மன்னர் தம் வளப்பத்தைக் காட்டுவதாக இருப்பினும் சாய்க்கடையில் ஊற்றப்படவேண்டிய கஞ்சி நடுச்சாலையில் ஊற்றப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது. (117 – 8 க.ப. அறவாணன். தமிழ்ச் சமுதாய வரலாறு) இதன் மூலமாக மன்னர்கள் மாளிகைகள் அமைத்து வாழ்ந்து தமது மேன்மையை உணர்த்திய காலத்தில் கூட (கான்) வடிகால் அமைத்து கழிவுகளை அகற்றும் முறை ஏற்பட வில்லை எனலாம். "அப்பட்டினத்தில் கள்வடித்துச் சிந்திய நீர் சேறாகியுள்ளது. அதிலும் பல குட்டிகளையுடைய பன்றியுடன் புணரவிடாமல்..( பக்.111 கா. சுப்பிரமணியன் – சங்ககாலச் சமுதாயம்) இந்தக் காட்சி வணிகர்கள் வாழ்ந்த இடத்தை குறித்து நிற்கின்றது. இந்தக் காலத்தில் கூட வடிகால் அமைத்து கொள்வதைக் காணமுடியவில்லை. ஆனால் சிந்து வெளிநிலையை "நகராண்மைக் கழகப் பணியாட்கள் அக்குப்பை கூளங்களை அவ்வப்போது தாழிகளிலிருந்து அப்புறப்படுத்தித் தூய்மை செய்வர்." (பக்.௨1 சிந்துவெளித் தமிழகம் – கருவிக்கரம்பை வேலு) இந்த நிலையானது மிகப்படுத்தலாகவே

கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும் இதில் பறையர்கள் பண்டைய காலம் தொட்டே இழித் தொழிலை செய்தவர்கள் என்றாகாது.

முன்னர் பறையர் குலத்தவர் துப்பரவு தொழில் செய்யும் தொழிலைக் கொண்டவர்கள் எனக் கூறிக் கொள்ள முடியாது. சமூகத்தை வழிநடத்துவது, மந்திர காரியங்கள் நடத்துவது ஆகியவற்றில் இருந்து ஏற்பட்ட போராட்டத்தில் பிராமண வழித்தோன்றல்களை மன்னர்கள் அங்கீகரித்து பூசை செய்யும் ஏகபோகத்தை கொண்ட பொழுது இக்குலத்தவர் சமூக அந்தஸ்தினை இழந்தனர் எனலாம். இவ்வாறாக தாம் சமூகத்தில் வகித்த பொறுப்பை இழந்தவர்கள் அதிக நெருக்கடிக்கு உள்ளாக இருக்க வேண்டும்.

பொருளாதார நிலை, பழைய சமூக அந்தஸ்து குறைவும், பழைய நீதிமுறைகளுக்கும், பழைய பழக்க வழக்கங்களுக்கும் முரணாக நடக்க ஒரு சமூகம் வரும், அந்தச் சமூகத்தவரிடையே உதிரிப் பாட்டாளி வர்க்கக் குணாம்சம் என்பது தோற்றம் பெறுகின்றது. 2000 வருடங்களுக்கு முன்னர் மார்க்சின் மொழியில் பாட்டாளி வர்க்கம் இருந்தது என இங்கு கருதவில்லை. மாறாக அன்றையச் சூழலில் வர்க்க சமுதாயம் தோன்றிய பொழுது வர்க்கங்களுக்கு இடையேயான சமூக உறவுகளிலும் மாற்றம் என்பது நிச்சயமாக இருக்கும். இந்த மாற்றம் வர்க்க முரண்பாடுகளை தோற்றுவித்திருக்கும். ஆனால் இந்த நிலை வர்க்க முரண்பாடுகள் தோன்றிய போது தாழ்த்தப்பட்ட மக்களை அடக்குவதற்காக, **முற்பிறப்பின் பயன் என்ற வர்ணக் கோட்பாடு** நிச்சயம் மிக முக்கிய பங்கை வகித்திருக்கும். இவ்வாறான வர்க்கப் போராட்டம் நடந்ததே பக்தி இயக்கமாகும். (இவை பற்றி சமயங்கள் பகுதியிலும் பார்ப்போம்) பக்தி இயக்கத்தில் உழவர், வணிக வர்க்கத்தினரிடையே இடம் பெற்ற மோதலை எவ்வாறு பார்ப்பது இதில் சாதி எனப் பார்ப்பதா அல்லது மதங்களுக்கு இடையே நடை பெற்றது எனப் பார்ப்பதா இல்லை வர்க்கங்களுக்கு இடையே நடைபெற்ற போராட்டம் எனப் பார்ப்பதா. இந்தப் பகுதியில் சாதியத்தைப் பற்றிய தோற்றப்பாட்டில் இருந்து பார்ப்போம். ''கடற்கரையில் வாழ்ந்த பரதவர், உமணர் போன்ற சாதியாரிடையிருந்து வணிகர் வர்க்கம் தோன்றிற்று வணிகர் பெரும் பொருளீட்டினர், அரசர் குடிக்குச் சமமான செல்வாக்குப் பெற்றனர் (பக். 91 நா. வானமாமலை தமிழர் வரலாறும் பண்பாடும்) வணிக வர்க்கமானது தோற்றம் என்பது தனியே பரதவர்கள் என்ற இனக்குழுவில் இருந்து வந்திருக்க முடியும் தனியே சாதி எனப்பார்த்தோமானால் தனியே ஒரு சாதியினருக்கு வணிகராக வளர்வதற்கு அதற்கேற்ப முலதனத்தின் குவியல் என்பது இருத்திருக்க வேண்டும். மூலதனக் குவியல் என்பது அன்றையச் சமுதாயச் சூழலில் உறவு நிலையில் அமைந்த பொருளாதார உறவு. வீட்டில் இருந்த அடிமைகளின் உழைப்பு. பரிவர்த்தனைக்கு என உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், நிலவைக் கொண்டு நேரத்தை கணிப்பதும், நிலவு காரிப்பதைக் கொண்டு திசையை அறிந்து கொள்வதும், நல்ல காலநிலை, நட்சத்திரத்தை வைத்து திசை அறிந்து பயணம் செய்யும் அறிவு என்பது முக்கியமானதாகும்.

விவசாயத்துடன் மனித நாகரீகம் ஏற்படுகின்றது எனினும், இந்தக் கட்டத்தை அடைய முன்னரே மக்கள் மீன்பிடித்தும் வாழ்க்கையை நடத்தியிருப்பர். ஆனால் மீன்பிடிதான் முக்கிய பொருளாதார முனைப்பாக, தொழிலாக வளர்ச்சியடைந்திருக்க முடியாது. ஆனால் குட்டையில், ஆற்றில் மீன்பிடித்தல் என்றும் விவசாயம், வேட்டை, ஆடு, மாடு மேய்ப்பு எனவும் கொண்ட சமூகம் பிற்பட்ட காலத்தில் கடலில் மீன்பிடிக்கும் கலையை பெற்று அதன் இயற்கைைப் படித்துக் கொள்கின்றனர். கடலின் இயற்கையைப் படித்துக் கொண்டு காற்றின் திசையறிந்து கடலீல் பயணம் செய்ய அறிவு பெற்றனர். ஒரு இனத்தின் வளர்ச்சிக்கு, வர்க்கத்திற்கு தொடர்புசாதனம் உதவுகின்றது. வணிக வர்க்கத்திற்கு எவ்வாறு மாட்டு வண்டில் உதவிய காலகட்டத்தை பார்க்கின்ற போது ஒரு இனத்தின் ''காளை பூட்டிய மாட்டு வண்டி, பண்டமாற்று வணிகம் சிறந்து வளர்ந்த பின்னரே தோன்றியிருக்கக் கூடும்''(பக். 77 குணா சாதியத்தின் தோற்றம்) ஒவ்வொரு வர்க்கத்திற்கும் ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு வகையான உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ் என்பவர் திராவிட இனத்தவர்கள் தோணி செலுத்துவதில் அறிவு பெற்றிருந்தனர் எனக்கருதுகின்றார். கட்டுமரம் என்ற தமிழ் சொல்லு ஆங்கிலத்திலும் பாவிக்கப்படுவதை அவதானித்தல் நன்று. இவ்வாறு தோணிசெலுத்துவதில் அறிவு பெற்ற மக்கள் நாகரீகமடைந்த காலத்திலேயே கடல்கடந்து வர்த்தக் செய்திருக்க முடியும். இது ஒரு சாதிக்குரிய திறமை என அடைப்புப் போட்டுக் கொள்வது முடியாது. ஆனால் இனக்குழுவின் ஒரு பகுதியினர் (நா. வானமாமலை இன் கருத்தெனக் கொள்ளமுடியாது) தோன்றியிருக்க முடியும். பருவபெயர்ச்சிக் காற்று அறிவு என்பது கீரேக்கருக்கு முன்னரே திராவிடர்கள் அறிந்து வைத்திருந்தனர். இந்த திறமைகள் ஒரு இனத்தின் வளர்ச்சிக்கு உதவி புரிந்திருக்கும்.

குடும்ப உறவு என்பது இரத்தவுறவையும், பல பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ஒரே விட்டில் குடியிருந்திருக்கலாம், ஒரு பொருளாதார முயற்சி என்னும் போது தமது உறவினர் என்ற ரீதியில் சிரமதானமாக தமது உழைப்பை வழங்கியிருக்க முடியும். பிரச்சினைகள் சச்சரவுகள் என வரும் போது பங்காளி என்ற உறவு முறை கொண்டு தமது சொந்தங்களுக்காக ஏவம் (பரிந்துபேசி) கேட்டு வருகின்ற போக்கு இருந்திருக்கின்றதினால் பொருளாதார நலனை முதன்மையாகக் கொண்ட சந்தர்ப்பவாத உறவு முறை என்பது அமைந்து இருக்கும், ஏனெனில் உறவை கட்டிக் காக்க வைக்க நினைப்பவர்களின் சிந்தனை என்பது சுரண்டும் பொருளாதார சிந்தனையைக் கொண்டதாக இருக்கின்றதை கவனிக்க வேண்டும்.

சுரண்டும் பொருளாதார உறிவில் அமைந்த சமூக உறவை பொருட்படுத்திக் கொள்ளாமல், உறவு என்பது தான் மேன்மை கொண்டு இருந்திருக்கின்றது. உறவிற்குப் பின்னால் அனைத்தும் இரண்டாம் பட்ச

நிலைதான். பொருளாதாரம் என்பது ஊசலாட்ட நிலையில் இருக்கின்றபோதும் ஏற்படுகின்ற இன்னல்கள் எல்லாம் உறவு வட்டத்தை விட்டு நகர விடுவதில்லை. ஏனெனில் உறவு என்பது முக்கியமானதாகும். பரதவர் குலத்தில் இருந்து வர்த்தக வர்க்கம் தோன்றியதற்கு அதன் உபரி உற்பத்தி உறவு முறை முக்கிய காரணமாகின்றது. பரதவர்கள் வர்த்தகத்தை மாத்திரம் தங்கியிருப்பர் என்பது முடியாததாகும். இந்த பரதர்களின் உட்கிளையினர் வெவ்வேறு பிரதேசங்களில் இருக்கின்ற போது வெவ்வேறு பெயர் உடையவர்களாக இருக்க முடியும். சாதிகள் பலவற்றை நோக்குகின்ற போது பல்வேறு காலங்களில் பற்பல தொழில் புரிபவர்களாகவும் வெவ்வேறு பிரதேசங்களில் குடி இருந்தவர்களாவும் இருக்கின்றனர். இதனை விரிவாக பார்க்கின்றபோது ஒடுக்கப்படும் வர்க்கமாகிய கூலி விவசாயிகளைப் பார்ப்பதின் ஊடாக இன்றும் பல வரலாற்று விடயங்களுக்கு வருவோம்.

## 1.3.5 பள்ளர் குலத்தவர்

வேளிர் என்பது ஒரு குலத்தலைவனை அழைத்துக் கொள்கின்ற பெயராகும். பின்னர் அதே இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் அனைவரையுமே வேளிர் என்ற குலத்தவர்கள் இருந்திருக்கின்றனர். இந்தக் குலத்தவர் பெயராலேயே இன்று வேளாளர் அழைக்கப்படுகின்றனர். இன்று பள்ளர் குலத்தவர் தமிழ் நாட்டில் தேவேந்திர குல வேளாளர் என தம்மை அழைக்கின்றனர். தெய்வத்தின் பெயரை இணைத்துக் கொள்கின்ற கருதுகோளை ஆராய்வது முக்கியமாக தோன்றுகின்றது. தெய்வத்தின் பெயரை இணைத்துக் கொண்ட போக்கு பல குலங்களில் காணக்கிடக்கின்றன. ஆனாலும் தமது நிலையை மேலானதாக காட்டிக் கொள்ள தெய்வத்தின் பெயர் அவசியப்பட்டிருக்குமானால் அந்த குலத்தின் வரலாற்றில் அறிவதில் வெற்றிடம் இருப்பதாக கொள்ள வேண்டியுள்ளது. இது வர்க்கப் போராட்டத்தின் வடுகள் எனலாம். அடக்குமுறைக்கு எதிராக போராடுகின்ற மக்கள் தூய சித்தாந்தத்தை முன்வைத்து கடந்த காலத்தில் போராடிருப்பர் எனக் கொள்ள முடியாது. மாறாக தம்மை மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக கடவுள்களின் பெயர்களை இணைத்துக் கொண்டதில் அவசியமிருந்திருக்கின்றது.

இலங்கையில் இருக்கின்ற குலங்கள் தம்மை உயர்ந்தவர்கள் என ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் தமது மேன்மையை வெளிப்படுத்துகின்றனர். இந்த குலங்கள் ஒரு இனக்குழுவில் அல்லது பல இனக்குழுவில் இருந்து வர்க்கமாக பிரிந்த பொழுது தமிழ் தேசிய இனத்தின் உருவாக்கத்தின் போது ஒரே தன்மையைக் கொண்ட குழுக்களை அழைக்கும் முகமாக பெயர்கள் உருவாகின்றது. இவ்வாறான வளர்ச்சியின் மூலமே கூலி விவசாயம் செய்கின்ற மக்கள் குழுவை அழைத்துக் கொள்ள முடிந்திருக்கும். தமிழ்ச் சமுதாயம் எந்த நூற்றாண்டில் தமிழ்த் தேசிய இனம் உருவெடுத்தது

என்பதில் கருத்து பேதம் இருக்கின்றது. இந்த முடிவிற்கு வரக் காரணம் சாதியத்தின் சிந்தனை வளர்வதற்கு நிலப்பிரபுத்துவ ஆட்சிக் காலத்திலேயே சாதியச் சிந்தனை பரவியிருக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் இருந்தாகும். இந்தியச் சமுதாயம் வளர்ச்சியை முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல் இன்றும் முதிர்ச்சியடையாத நிலையில் "**அந்த சகாப்தத்தின் பிரமையை ஏற்கும்படி நேர்ந்திருக்கின்றது.**" (தடித்த எழுத்து மார்க்சுடையதே, பக்66 மார்க்ஸ் நூல் திரட்டு 1) சாதிகளின் தோற்றம் சிலர் தொல்காப்பியர் காலம் என்பர், பல்லவர், களப்பிரர், குலோத்துங்கன் காலம் என்பர் எவர் காலத்தில் சாதியம் வலுப்பெற்றிருந்தாலும், பரவியிரந்தாலும் நவீன காலத்தீதப் போல் மையப்பட்ட ஆட்சியை எந்த அரசர்களும் கொண்டிருக்கவில்லை.

இனக்குழுவில் இருந்த எச்சத்தினை இங்கே பார்ப்போம். ஒரு குலத்தலைவன் தன்னுடைய குடிகளை அழைத்துக் கொண்டு எங்கும் செல்ல முடியும். அவ்வாறே இங்கு ஒரு அரசன் தன்குடிகளை அழைத்து வந்துள்ளான். வேளார்களையும், பள்ளர்களையும் அழைத்துக் கொண்டு பாண்டிய மன்னன் இலங்கை சென்றான். அப்போது துலாபாரம் நிறுப்பதற்கும், பிற அரச சின்னங்களை சுமப்பதற்கும் வேளான் குடிகளை கூட்டி வந்தான் என வ. குமாரசுவாமி கருதுகின்றார். (௨39 இராசநாயகம்) இது எந்த நூற்றாண்டில் நடைபெற்றது, அல்லது குலச்சமுதாய கட்டத்தை விட்டு வளர்ச்சியடைந்த நிலையிலா என்பது ஒரு புறமிருக்க, இராசநாயகம் கூறுவது போல் முசுலீம் மன்னர்கள் தமிழ்நாட்டில் செய்த கொடுமை காரணமாக வேளாளர் இலங்கையில் குடிபெயர்ந்தும் இருக்கலாம். ஒரு மன்னனால் குடிகள் கொணடு வர முடியும் என்ற கருதுகோள் ஆய்விற்கு உரியதாகும்.

யாழ் வைபவமாலையில் இந்தியாவில் இருந்து குடியேறிய வேளார்களைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இந்த வேளார்கள் 'பள்குடிகள்' என்றழைக்கப்படுகின்ற பள்ளர் குலத்தவர்களை கொண்டு வந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றது. ஆனால் யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிய இராசநாயகம் என்பவர் இதனை மறுத்து வேளார்கள் முன்பே இலங்கையில் இருந்தாகவும், வேளார்களின் முக்கிய பரம்பரையில் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதில் யாழ் வைபவமாலை எழுதியவர் கவனம் செலுத்தியதாகவும் கூறுகின்றார். ஆனால் இந்த இரண்டு கூற்றிலும் உண்மை இருக்கின்றது. குலச் சமுதாயங்களாக இருக்கின்ற போது மக்கள் இடம் பெயர்வது இயல்பானதே. அதே போல் சாதியத்தின் மேன்மையை, பரம்பரை நபர்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் பொருட்டும் வரலாறு அமைந்து விடுவதும் இயல்பானதே. இவ்வாறான கருத்துக்கள் பாணர்கள் விடயத்திலும் வருகின்றது. யாழ் வைபவமாலையே நெய்தல் குலத்தவர் என கூறுகின்றது. இதனை இராசநாயகமும் ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் வட பிரதேங்களுக்கும் யாழ்ப்பாணம் பெயர் கொண்டு அழைத்தது தொடர்பாக முரண்பட்டுக் கொள்கின்றார். "அக்காலத்தில் இழிகுலத்தவர்

ரெண்றெண்ணப்பட்ட பாணர்கள் , விறலியர்க்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் குழுமியுள்ள நன்னாட்டை யரசாளும்படி ஓர் அரசன் செய்வானாகில் அஃ தவற்கோர் ஈனமாய் முடியுமன்றோ? (பக். 237 யாழ்ப்பாணச் சரித்திரம்) இங்கு அரிச்சந்திரா கதையில் இழி தொழில் செய்த அரிச்சந்திரன் மீண்டும் அரசாளத் தயக்கம் காட்டி, சூத்திரன் அரசாளத் தகுதியற்றவன் என முடிக்கும் அரிச்சந்திராக் கதையும் இதே போலதான் அமைகின்றது. இங்கு வரலாறு எழுதும் போது இலக்கணத்தில் இருந்து தொடங்கும் போக்கையும் அதிலே கொண்டு வந்து முடிக்கும் ஆர்வமும் இங்கு காணப்படுகின்றது.

வருணாசிரமச் சிந்தனையின் மையப் போக்கில் இருந்து வெளிப்பட்ட சிந்தனையின் வெளிப்பாடே இந்தக் கேள்வியாகும். இந்சிந்தனை கூட இராசநாயகத்தின் தனிப்பட்ட தவறல்ல. இந்தப் பாணர்கள் நெய்தல் நில மக்கள் என வரையறுத்துக் கொள்ள முடியாதுள்ளது. இங்கு வருண இலக்கணத்துக்குள் வரையறுத்துக் கொள்ளும் கட்டாயத்தில் இருந்து மாத்திரம் செயற்பட முடியாத நிலை ஏற்படுகின்றது இதன் பொருள் வர்ணாசிரமக் கோட்பாட்டின் கீழ் இலங்கைச் சாதியத்தை அடக்கிவிட முடியாத நிலை இங்கு ஏற்படுகின்றது. இந்தப் பாணர்களைப் பற்றி 'பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள்' என்ற ஆய்வு முயற்சியின் முடிவில் பாணர்கள் பல உயர்ந்த பதவியிலும் இருந்திருப்பதை வரலாற்றுத் தரவுகள் கொண்டு நிறுவுகின்றனர்.

பாணர்கள் என்பவர்கள் ''வாணாதிராயர்கள் என்று அழைக்கப்பட்ட பாண அரச பரம்பரையினர் தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்து வந்திருக்கின்றார்கள். மாவலிச் சக்கரவத்தியின் வழியில் வந்தவர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்ட இவர்கள் 'மாவலி வாணாதிராயர்' என்று தம்மை பெயரிட்டு அழைத்துக் கொண்டார்கள். கல்வெட்டுக்களில் இவர்களே வாணர் என்றும், பாணர் என்றும் மாறிமாறி அழைக்கப்பட்டிருக்கின்றனர். பல பேரரசுகட்குக் கீழ்சிற்றரசர்களாகவும் அரசியல் அதிகாரிகளாகவும் விளங்கினார்கள். சரித்திர காலந்தொட்டு பதினேழாம் நூற்றாண்டு வரை ஒரு பெரும் பேரரசுக்குக்கூட இல்லாத தொடர்ச்சியான வரலாறு வாணதிராயர் குலத்திற்கு உண்டு. (பக்.4வெ. வேதாசலம், பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள்) இங்கு இரண்டு விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும் பாண்டிய மன்னன் என்பனே வேளாரை இலங்கைக்கு கொண்டு வந்தவர் என்பதும் அவனே பாணர்களுக்கு யாழ்ப்பாணத்தை பரிசாக கொடுத்ததுமாகும். ஆனால் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் பாணர்கள் பெற்றுக் கொண்ட சமூக அந்தஸ்து மாறுபட்டதை கவனிக்க வேண்டும். இதே போலதான் ஆரியச் சக்கரவத்திகள் எனப்படுவர்கள் ஆரியர்கள் எனவும் இராசநாயகம் கருதிக் கொள்கின்றார். ஆனால் இந்த ''ஆரியச் சக்கரவத்திகள் என்ற பட்டத்துடன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவர்கள் தமிழக மீனவர்களாக இருக்கலாம். தஞ்சை மாவட்டத்தில் பட்டினவர் இன மீனவர்களை, ஆரியநாட்டார் என அழைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. இவ்

வழக்கு 17,18 நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. (313 வெ. கிருஷ்ணமூர்த்தி– ஆய்வு வட்டக் கட்டுரைகள்) என்ற அடிக்குறிப்பைக் கொண்டு இருக்கின்ற வரலாற்றை கேள்வி கேட்க வேண்டும். இவர்கள் மாத்திரம் அல்ல.

பரதவகுலத்தின் உட்பிரிவினரை சிந்து நாட்டார் என அழைக்கப்பட்டனர். ''திருகோணமலைப் பிரிவில் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயிற் பட்டோலை வாசிக்கப்படும் பொழுது 'சிந்துநாட்டார் வருக'' (பக் –49 மு.வே. சீவரத்தினம் வணிகர் வரலாறு) என வாசிக்கப்பட்ட கல்வெட்டை கொண்டு மக்கள் தம்மை பலவாறாக அழைத்துக் கொண்டதை காணலாம். இங்கு மன்னர்கள் ஆரியர் இல்லை எனவாதிக்கவும் இல்லை, அதே வேளை மன்னர்கள் மீனவர்கள் எனக் கொள்ளவும் இல்லை. மாறாக மன்னர்களின் வரலாறு இருக்கின்ற போதும் மக்களின் வரலாறு என்பது இல்லாதது பெரும் குறையேயாகும். வரலாறு எழுதுபவர்களும் கேள்வி எழுப்பாது. சுரண்டும் வர்க்கத்தின் சிந்தனையை அப்படியே நிலைநிறுத்திக் கொள்கின்றனர். இதனால் அடுத்தடுத்து வரலாற்றை எழுதுபவர்கள் சுரண்டும் வர்க்கம் எப்பவும் மேன்மை கொண்டு இருந்தது என்பது பற்றியே ஒப்புவித்துக் கொள்கின்றனர். பாண்டிய மன்னர்களின் வரலாற்றில் இவ்வாறான போக்கு இருந்ததை அவதானிக்க முடிகின்றது. பாண்டிய மன்னனை மீனவன் என்றும், பரதவகுலத்தவரின் குலச் சின்னமாகிய மீனை சின்னமாகிக் கொண்டான் என வரலாற்றாசிரியர்கள் எழுதிக் கொள்கின்றனர். ''பாண்டியனுடைய கொடியில் இரண்டைமீன் இடம்பெற்றது. பாண்டியனுக்கு மீனவன் என்ற பெயரும் பழைய காலத்தில் வழங்கியது (பக். 167 ஆ. வேலுப்பிள்ளை தமிழர் சமய வரலாறு) ஆனால் வரலாறு என்கின்ற போது தமிழ் இனம் எனமாத்திரம் என வரையறுத்துக் கொள்கின்றனர். ஆனால் தமிழ் மொழி பேசிய இனக்குழுவாக இருந்த கூட்டத்தின் குலத்தலைவர்கள் அல்லது அரச வம்சம் எனப்பார்க்கலாம் என்ற கருத்தை நீக்கியே பார்க்கின்றனர் இது குறைபாடுடையதாகவே கருத இடமுண்டு. இங்கு பாண்டிய மன்னனை பரதவர் சாதி எனக் கொள்ள முடியாது என்பதும் கவனிக்கத் தக்கது.

மன்னர்கள் தமது ஆட்சியை பலபடுத்தவும், யுத்தத்தில் எதிரியை தோர்க்கடிக்க உதவியதாக கொண்ட கடவுள்களை தனது கடவுளாக கொள்வது மன்னர் வரலாற்றில் ஒன்றும் வியப்பு அல்ல. (கிருத்தவ மதமானது கொண்ரன்ரையின் தாயாரின் வேண்டுகோள் விடுத்த பின்னர் பரப்பப்பட்டது) நடைபெற்றயுத்தத்தில் கிருத்தவ சமயச் சின்னம் என்பது யுத்தத்தில் வெற்றி கொள்ள உதவியதாக கொள்கின்ற நம்பிக்கை இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் வேறுசாதியை, குலத்தைச் சேர்ந்த மன்னன் வேறு குல கடவுளை வழிபடும் நிலையைக் காணக்கிடைக்கின்றது. இங்கு யுத்தத்தின் பயனாக கடவுளை மாற்றினானா? அல்லது இனக்குழுவின் ஒரு பகுதியினர் கடவுளை தமக்குள்ளே மாற்றிக் கொண்டார்களா என்ற கேள்வி எழுகின்றது. பாண்டிய மன்னரின் தலைநகரம் கடலால் மூழ்கப்பட்டதென

கொள்கின்ற போதும் அந்த இடத்திற்கு அருகாமையில் திருச்செந்தூர் அமைந்துள்ளது. திருச்செந்தூரில் அமைந்திருப்பது முருகனாகும். ஆனால் முருகன் குறிஞ்சி நிலக்கடவுளாகும். ஆனால் பரதவர்களின் கடவுள் என்பது வருணன் ஆகும். ஆனால் இந்த வருணனுக்கும் ஆரியர்களின் கடவுளுக்கும் வித்தியாசம் இருக்கு எனமாத்திரம் ஆய்வாளர்கள் கூறுகின்றனர் அன்றி மேலதிக விபரம் தரவில்லை. இந்த நிலை வெற்றிடமாகவே இருக்கட்டும். தொடர்ந்தும் விடயத்துக்கு வருவோம்.

பரதவரின் கடவுள் இல்லாமல் போயிருக்கலாம் ஆனால் மலையும் மலைசார்ந்த இடத்தின் கடவுளாகிய வேலன் என்ற கடவுள் எவ்வாறு அதிக ஆதிக்கம் செலுத்தி பலபிரதேசங்களில் வணங்கப்படும் கடவுளாக ஆக்கிரமித்தான் என்பது ஆய்வுக்குரியதாகும். இக்கோவில் அமைந்திருக்கும் இடம், ஒரு கோவில் என்பதைக் கொண்டு பொதுமைப்படுத்த முடியாது. ஆனால் முருகனுக்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையே இலக்கியத்தில் தொடர்பு இருப்பதாக வரலாறு சுட்டி நிற்கின்றது. ''முருக வணக்கத்தைச் சிறப்பாக எடுத்துக் கூறும் பழைய தமிழிலக்கியங்கள் பாண்டிய நாட்டோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றது.'' (பக்.166 ஆ. வேலுப்பிள்ளை தமிழர் சமய வரலாறு) சாதிக்கொரு கடவுள், தொழில் என்ற வரையறை வர்ணப்பாகுபாடு என்பது 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் சமுதாயத்தில் அதுவும் தமிழர்களால் உருவாக்கப்பட்டது எனக் கொள்கின்ற போது இந்தக் கேள்வி என்பது இயல்பாகவே எழும்.

இன்று பள்ளர் குலத்தவர் தமிழ் நாட்டில் தேவேந்திர குல வேளாளர் என தம்மை அழைக்கின்றனர். இன்று இருக்கின்ற இந்தக் குலத்தவர் வரலாறு என்பது மற்றைய குலத்தவர் போலவே வெளிச்சத்துக்கு வராமல் இருக்கின்றது. எந்தச் சாதியை எடுத்துக் கொண்டாலும் யார் என்ற அடையாளத்தை தாமே முயற்சி செய்து கண்டு பிடிக்கும் போக்கு முன்னர் வளர்ச்சியடையவில்லை. இந்த நிலை என்பது ஒரு நாட்டின் வரலாற்றை எழுதுகின்ற போது ஏற்படுகின்றது. குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க வரலாற்றை மேற்கு தேசத்தவர் வரலாற்றில் இருந்து தான் ஆரம்பிக்கப்படுகின்றது. இதே நிலைதான் தாழ்த்தப்பட்ட சாதிகளை எடுத்துக் கொள்ளும் போது உயர்படித்த வர்க்கத்தினர் இவர்கள் இன்ன வகுப்பினர் என வரையறை செய்யப்படுகின்றனர். இவர்கள் இந்தச் சாதிகள் என தம்மால் தாம் யார் என அடையாளங்காணப்படாமல் மற்றவர்களால் வரையறுக்கப்பட்ட நிலை இருந்திருக்கின்றது. இதற்கு பொருளாதாரத்துடன் ஆதிக்க பலம் என்பது காரணமாக இருந்திருக்கின்றது. இங்கு ஒரு குலத்தைப் பற்றிய அடையாளத்தை யார் மூலம் வெளிப்படுகிறது என்பதில் அடங்கியிருக்கின்றது.

மனித கூட்டம் இயற்கையாக உணவு கிடைக்கின்ற பிரதேசங்களை அண்டியே வாழந்திருக்கின்றது. எமது தேசங்களை எடுத்துக் கொண்டால்

காலநிலையை கருத்தில் கொள்ளும் இடத்தில் மக்கள் குறிஞ்சி, முல்லை போன்ற இடங்களில் இருந்து பிற்பாடே மருதம், நெய்தல் போன்ற பகுதிகளுக்கு சென்றிருக்கு முடியும் இதன் பின்பாடு போட்டி காரணமாக வலிமையற்ற பகுதி மக்கள் பாலைக்கு குடியேறுகின்றனர் எனலாம். க.ப. அறவாணன், 'தமிழ்ச் சமுதாய வரலாறில்' திராவிடர்கள் கொடைக்கானல் போன்ற மலைபிரதேசங்களில் வாழவில்லை எனக்கருதுகின்றார். எனினும் மலைச்சாரல்கள் மக்கள் வாழக் கூடிய காலநிலையை உடையதாகும். மருதம், நெய்தல் நிலங்களுக்கு நகர்கின்ற மக்கள் உற்பத்தி முயற்சிகள் வளர்ச்சியடைகின்றன. இந்த நிலப்பகுதிகளுக்கு வருகின்றபோது புதிய வர்க்கங்கள் உருவாகின்றது. இவ்வாறான வளர்ச்சி ஊடாக வர்த்தக வர்க்கம் உருவாக்கம் பெறுகின்றது. மனித நாகரீகத்தின் வளர்ச்சிக் கட்டம் விவசாய உற்பத்தி முறையுடன் ஏற்படுகின்றது. இங்கே தான் மற்றவர்களை சுரண்டுகின்ற வர்க்கம் உருவாகின்றது. உற்பத்தி முயற்சியில் ஏற்படும் வளர்ச்சி என்பது உபரி உறபத்தி பொருட்களை உருவாக்குகின்றது. இந்த உற்பத்தி பொருட்களை வேறு மக்களிடத்தில் பரிமாற்றம் செய்யும் முயற்சி ஏற்படுகின்றது.

இந்த வர்க்கத்தின் தோற்றப்பாடானது சுரண்டலை விஸ்தரிக்கின்றது. இதன் ஊடாக சுரண்டும் வர்க்கம் தன்கீழான வர்க்கத்தை அதிமாக சுரண்டிக் கொள்கின்றது. இதற்கு ஏற்றதான சித்தாந்தத்தையும் ஏற்படுத்திக் கொள்கின்றது. இவ்வாறான சுரண்டலின் பின்னர் நிலத்தை இழந்த வர்க்கத்தவரே பள்ளர் போன்ற சாதிகளாகலாம். சாதியத்தை பொருளாதாரமே நிர்ணயம் செய்கின்றது. சுரண்டல் பொருளாதார சமூகத்தை பாதுகாக்க தனது மேற் கட்டுமானத்தின் மூலமாக சுரண்டும் வர்க்கச் சிந்தனையை நிலைநிறுத்திக் கொள்கின்றது. அத்துடன் நியாயப்படுத்திக் கொள்வதுடன், சுரண்டலை தொடரவும் அதிகாரத்தையும், போலியுணர்வையும் வளர்க்கின்றது. முன்னர் பார்த்தது போல் பள்ளர் குலத்தவர் கூலி விவசாயிகளாக இருக்கின்ற நிலையில், இவர்கள் விவசாயத்தையும் பணக்கார விவசாயிகளை அண்டிவாழந்த நிலமிழந்த வர்க்கக் கூட்டம் எனலாம். மனித இனத்தின் வளர்ச்சியைப் போக்கை பார்க்கின்ற போது இந்தப் பார்வை இயற்கையை அண்டியதாக காணமுடியும். இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற வேளீர் குலத்தவர்களின் ஒருபகுதியினர் தம்மை வேளாளர்கள் என அழைத்துக் கொள்ள மற்றைய பகுதியினரை பள்ளர் என அழைத்துக் கொண்டனர் எனலாம்.

வேளாளர்களை சூத்திரர்கள் எனக் வரையறை செய்யப்படுகின்றனர். இதில் நிச்சயமாக எவரும் உடன்பாடு கொள்ளவில்லை. சூத்திரர்கள் என சிலர் கூறுகின்றனர் என்று மாத்திரம் கருத்துக் கூறுகின்றார் இராசநாயகம். சூத்திரர் என்பதை மறுத்து ஆய்வுசெய்து புத்தகமாக வெளியிட்டுள்ளார் மறைமலை அடிகள். இவற்றில் கருத்துப் பேதம் இருக்கின்றன. இங்கு வேளாளரை சூத்திரர்கள் எனக் கூறி விடுவதன் மூலம் காழ்ப்புணர்ச்சியை தீர்த்து விட முடியும். ஆனால் சாதியத்தின் தோற்றத்தை அறிந்து கொள்ள அந்த நிலை

என்பது வழிகொடுத்து விடாது. வேளான்மை செய்தவர்கள் சமூகத்தின் சொத்தை அடைந்திருக்க முடியும் அவர்களில் இருந்து நிலப்பிரபுத்துவ வர்க்கம் தோன்றி இருப்பர். ஆனால் வேளாளர்கள் மாத்திரம் தான் விவசாயம் செய்கின்றனர் எனக் கொள்ள முடியாது அனைத்துப் சாதியினரும் விவசாயம் உட்பட மிருகவளர்ப்பு, தேன் சேகரித்தல், மீன்பிடித்தல் போன்றவற்றை பல்பல சாதியினரும் இன்று மேற்கொள்கின்றனர்.

இன்று பல சாதியினர் கலப்புற்று காணப்பட்டாலும் பள்ளர்கள் என்பவர்கள் மற்றைய சாதிகளாகிய கரையார், திமிலர், முக்குவர், வேளாளர், கோவியர், போன்ற சாதியினரால் தாழ்த்தப்பட்டே வந்துள்ளனர். அதே வேளை பரதவ குழுக்களாகிய முக்குவர், திமிலர், கரையாரை கீழாகத்தான் பார்க்கின்றனர். கடல்தொழில் செய்தவர்கள் இந்தியாவில் அகதிகளாக இருக்கின்றனர். இவர்கள் தாம் கடல்த் தொழிலாளர்கள் என கூறிக் கொள்வதில்லை. சில இடங்களில் கடல்த் தொழில் செய்யவே முனைவதில்லை. எப்படித்தான் இலக்கியத்தில் வணிகர்களை மேன்மையாக காட்டினாலும் தற்பொழுது சேரியில் வாழ்கின்ற மக்கள் கீழானவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். இது பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் வெளிப்பாடே இலங்கையை நோக்கினால் கடல் தொழில் செய்வோர் வேளாளருக்கு கீழாக இருந்ததில்லை எனலாம். ஆனால் பொருளாதாரத்தில் மூலதனத்தின் பற்றாக்குறை காரணமாக மையப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் போது கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். (இந்த கருத்தினை பொருளாதார தரவுகள் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும்) இதுவும் வங்கி என்ற நிறுவனத்துடன் தொழில் ரீதியாக அவர்களின் தொடர்பும் உறவும் முடிந்து விடுகின்றது. ஆனால் இந்த நிலை என்பது பள்ளர் குலத்தவர்களுக்கு இருந்ததில்லை. இவர்கள் சொந்த நிலத்தை சந்தைப் போட்டி காரணமாக இருப்பதையும் இழந்து கொண்டு சீவியகாலமும் வறுமையிலும் சேவை செய்வதிலுமாக காலத்தை செலுத்தி வந்துள்ளனர்.

## 1.3.6 சமஸ்கிருதமயமாதல்

மின்னர்கள், மீனவர்கள் தம்மை ஆரியர்கள் என்றும் சிந்து நாட்டார் என்றும் தம்மை அழைத்துக் கொண்டனர் எனப்பார்த்தோம். இவர்கள் மாத்திரம் அல்ல வன்னியர்களும் தம்மை அரச வம்சத்தின் வழிவந்தவர்கள் எனக் கொள்கின்றனர். ''வன்னியர்கள் சேர, சோழ, பாண்டிய அரசர்களின் வழிவந்தவர்கள் என்றும், அவர்களிடம் படை வீரர்களாக இருந்தவர்கள் என்றும் அறியப்படுவது'' (பக்.14 திருச்சி வே. ஆனைமுத்து பார்ப்பாரும் வேளாளரும் பறித்துக் கொண்ட வன்னியர்களின் மன்னவேடு ஊர்கள்) என வன்னியர்களும், பரதவ உட்கிளையாகிய முக்குவர்கள் தம்மை இராமாயனத்தில் வரும் பாத்திரமாகிய குகனின் வழிவந்தவர்கள் என்று தம்மை கூறுகின்றனர்.

இந்த நிலை என்பது உண்மையாகவும் இருக்கலாம், அல்லது தவறானதாகவும் இருக்கலாம். ஆனால் மக்கள் இனங்கள் தம்மை மற்றவர்கள் கீழாக நினைக்கின்றனர், தாழ்த்துகின்றனர், ஒதுக்குகின்றனர் என்கின்ற போது மற்றவர்களும் தம்மை மதிக்க வேண்டும் எனக்கருதி எவ்வாறு தம்மை அழைத்துக் கொண்டால் அல்லது எவ்வாறு தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் சமூக அந்தஸ்து கிடைக்கும் எனப்பார்த்து அவ்வாறே பார்த்து அதன் படி வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். அல்லது பார்த்துப் பழகிக் கொள்கின்றனர். இதனை மேற்கத்தை மானிடவியலாளர்கள் சமஸ்கிருதமயமாதல் என அழைத்துக் கொள்கின்றனர். இது ஆரியமயமாதல் எனக் கொள்ளலாம் இந்நிலை காலங் காலமாக எமது சமுதாயத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றனது.

மக்களில் ஒடுக்கப்படும் இனத்தைச் சேர்ந்த மக்கள் தம்மை மற்றவர்கள் சமமாக நடத்திக் கொள்ள வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் இவர்கள் கீழ்சாதி என முத்திரை குத்தப்பட்டு காலங்காலமாக வாழ்கின்ற நிலை காரணமாகவும், முற்காலத்தைப் போல சாதியில் இருந்து இன்னொரு சாதிக்கு மாற்றம் பெறுவதோ அல்லது புதிய சாதியின் பெயர் கொண்டு அழைக்க முடியாத காரணத்தால் தற்பொழுது சாதிகளுக்கு நெருக்கடி தோன்றுகின்றது. பொருளாதார நிலை மாறினாலும் சாதியின் பெயர் மாற முடியாதுள்ளது. இதன் காரணமாக மச்சம் உண்பது தவிர்ப்பது, உடைகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்கின்ற வகையில் உடுத்திக் கொள்வதும் நடைபெறுகின்றது. ஆனால் இது சாதியத்தை மாற்றம் கொள்ளவைப்பதில்லை என்பதை புரிந்து கொள்வதில்லை. மற்றைய இனத்தின் கலாச்சாரத்தை பின்பற்றிக் கொள்கின்றபோது முழுமையாக அப்படியே அந்த இனத்தின் கலாச்சாரத்தை தழுவிக் கொள்வதில்லை. மாறாக வெளிக் கலாச்சாரத்தின் கலப்பும் மற்றைய கலாச்சாரத்தில் கலப்பும் தழுவியிருக்கும்.

இவ்வாறான மாற்றுக் கலாச்சாரத்தை ஏற்று நடக்கும் போக்கிற்கு பண்டைய காலத்தில் ஏற்பட்டிருக்க முடியும். ஆனால் சுரண்டும் வர்க்கம் இவ்வாறே மற்றைய இனத்தின் சிந்தனையை பெற்று சூத்திரரான வேளாளர்கள் பிற இனத்தின் சிந்தனையை தழுவி கொண்டு சாதியச் சிந்தனை இலங்கையில் நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். இலங்கையில் வேளாளர்கள் மாத்திரம் அதிகாரத்தையும், ஆட்சியையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் இது பிற்பட்ட காலத்திலேயே நடைபெற்றது எனலாம். உயர்ந்த சாதிகள் என்ற வரையறையை வர்ணாசிரமக் கோட்பாட்டின் கீழ் இருந்து இலங்கையின் சாதியின் நிலையை ஆராய்கின்றபோது வரையறை பிரச்சினை தோன்றுகின்றது. ஆதிக்கத்தில் இருந்த மன்னர் பரம்பரையினரும் தமது குலத்தை மறைத்து ஆரியர் என பெயர் சூட்டி இருக்கலாம்.

வருணக் கோட்பாட்டை தமிழ் சமுதாயமானது பற்றிக் கொண்டு அதனை பிரயோகித்துக் கொண்டது. பற்றிக் கொண்ட சமூகம் அதற்கு **உள்ளூர் வடிவம்** கொடுத்தது எனலாம். உள்ளூர் வடிவம் அமைத்தல் என்பது ஒன்றும் புதிதல்ல மாறாக இவைகள் எல்லாக் காலத்திலும் எல்லாச் சமூகத்திலும் இருக்கின்றன. உதாரணமாக இஸ்லாமிய மதத்தை எடுத்துக் கொண்டால் பற்பல பிரதேசங்களில் மத்திய கிழக்கை விட்டு பரவியிருப்பினும் உள்நாட்டு கலாச்சார விழுமியங்கள் அந்தந்த நாட்டு சமய அனுஸ்டானங்களில் உள்ளமைந்து கொள்கின்றது. இதே போலதான் கிருத்தவ மதப்பிரிவினர் இலங்கையில் சமயத்தைப் பின்பற்றுகின்ற போது உள்ளாட்டு கலாச்சாரங்கள் அனுஸ்டானங்கள் என்பவற்றை பின்பற்றுகின்றனர். உதாரணமாக யேசு பிடிபட்டு கொல்லப்படுகின்ற காலமாகிய பாஸ்காகாலத்தில் மச்சம் உண்ணுவதில்லை.

இதே போலவே தெய்வீக வடிவம் கொடுத்தல் என்பதுமாகும். தெய்வீக வடிவம் கொடுப்பதும் வருண நிலையில் மேன்மையை மையப்படுத்தியே நிலை பெறுகின்றது. இந்த நிலை ஆரியர் காலத்தில் தொடங்கப்பட்டு இன்றும் நிலைபெற்று வருகின்றது. முன்னர் கூறியது போல மக்கள் மச்சம் தவிர்ப்பது, உடுபுடவையில் மாற்றம் என்பதைப் பார்க்கின்ற போது பல அன்னிய பழக்க வழக்கங்கள் திராவிடம் என்பது உள்வாங்கியுள்ளது. பழங்குடிகளுக்கு இருக்கின்ற பழக்க வழக்கங்களை இன்றும் தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர். பெண்கள் பருவம் எய்திய பின்னர் செய்யப்படுகின்ற சடங்கு, குழந்தைக்கு பிறந்த பின்னர் நடத்தப்படுகின்ற சடங்குகள் போன்றவைகள் இன்னமும் பின்பற்றி வருகின்றது. திராவிடர்கள் எல்லாவகையான கறிவகைகளையும் உண்ணும் பழக்கத்தை உடையவர்கள் இன்று அவ்வாறு உண்ணுபவர்களை பார்த்து ஒதுக்கும் பழக்கம் இந்தியாவிலும் பார்க்க இலங்கையில் குறைவாகும். இந்த போக்கு என்பது தமிழர்களிடத்தில் இருந்து தான் சாதியச் சிந்தனை உருவாகியது என்ற கோட்பாட்டிற்கு உறுதி சேர்ப்பதாக இல்லை.

தெய்வத்தின் பெயர் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயர்ந்த அந்தஸ்துக் கொடுத்து உயர்த்த காந்தி நினைத்தார். அதன் காரணமாக ஹரியின் புதல்வர்கள் என சூத்திரர்களுக்குச் சூட்டிக் கொண்டார். கடவுள் பெயரை அழைத்துக் கொள்வதும், நா. வானமாமலை கூறுவது போல் பழமைக்கு இருக்கின்ற நன்மதிப்புக் காரணமாக பழைய தத்துவங்களில் இருந்து தம்மை அழைத்துக் கொண்டதாகவும் எடுத்துக் கொள்ள முடிகின்றது. ஆனால் காந்தியைப் பொறுத்தவரை இந்த நோக்கம் இருக்கவில்லை. பழைமையையும், அறியாமையையும் பயன்படுத்தி உழுத்துப் போன சமூக அமைப்பை நிலை நிறுத்தப் பாவித்துக் கொண்டார்.

உயர்வு தாழ்வு என்ற கருதுகோளின் தன்மையில் இரண்டு விதமான போக்கைக் காணமுடியும். பொருளாதார சுரண்டலைக் கொண்ட நோக்கம்

கருதியநிலை, மற்றையது தாழ்ந்த சாதிகள் தமக்கினடையே உயர்ந்தவர் தாழ்ந்தவர் எனக் கொள்கின்ற கருத்து ரீதியான நிலை இவை இரண்டிற்கும் அடிப்படையில் மாறுபாடு உண்டு. சுரண்டும் வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கமானது தான் சூத்திரர் அல்லது எந்தச் சமூகப் படிமுறையில் இருக்கின்றார்கள் எனத் தெரியாது இது யார் நிர்ணயம் செய்தார்கள் என்ற விளக்கம் இவர்களிடம் இருப்பதற்கு சாத்தியமும். இல்லை, மனுதர்மத்தை படித்தவர்கள் இவர்கள் அல்ல. இவர்கள் படிக்கும் பட்டத்தில் காதில் ஈயத்தை உருக்கி ஊற்ற வேண்டும் என ஆரிய சாத்திரம் கூறுகின்றது. எனவே தாம் தாழ்ந்தவர் என கோட்பாட்டு ரீதியாக தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் இல்லை. மாறாக சமூகத்தின் உயர்நிலையில் உள்ள வர்க்கத்தின் முடிவிற்கு இந்த வர்க்கம் பணிந்து சென்று தனக்கே உரித்தான சுயவிளக்கத்தையும் கொடுத்தது எனலாம். சுயவிளக்கம் கொடுக்கின்ற போது உள்ளூர் வடிவம் பெறுகின்றது.

புலால் உண்ணாமை என்பனவும், சண்டை சச்சரவிற்கு செல்லாமை என்பது போன்றவைகள் எல்லாம் உயர்ந்த குலத்தவர் கலாச்சாரம் என யாரால் வரைவிலக்கணம் மேற்கொள்ளப்பட்டிருக்கும்? அதுவே உயர்ந்த கலாச்சாரம் என கொள்ளக் காரணமாக இருந்த அம்சம் என்பது இந்த இனக்குழுக்கள் போட்டி போட்டுக் கொண்டு தம்மை மேன்மக்கள் எனக் கொள்ள வைக்கவும், மற்றவர்கள் தமது அந்தஸ்தை உயர்வாக கருதிக் கொள்ளவும் வழிவகுக்கப்பட்டிருக்கும். இதன் காரணத்தால் ஒவ்வொருவரும் தம்மை இன்னார் என சுயபிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டிருக்கலாம். அத்துடன் முன்னர் கூறியது போல் புதிய சிந்தாந்தத்தை உள்வாங்கி தமது சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவற்றை தமது புரிதலுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தியிருக்கலாம். இங்கு சர்வதேசத்தில் நடைபெற்ற ஒரு இயக்கத்தை இங்கு உதாரணம் காட்டுவது மிகப்பொருத்தாமாக இருக்கும்.

65 – 70 களில் வியட்னாம் யுத்த எதிர்ப்பு, தத்தமது நாட்டு பழைமைப் போக்கிற்கு எதிர்ப்பு, ஆட்சி முறைக்கு எதிர்ப்பு போன்ற வற்றை மையமாக வைத்து எதிர்ப்பு அலையுடன் புதிய கலாச்சாரம் என்பது அறிமுகப்படுத்தப்பட்டது. போதைவஸ்து (ஆட்சியாளர்களே இதனை வளங்கியிருக்கின்றனர்), பொப் இசை, கலாசாலைகளில் ராங்கிங், கிழிந்த உடைகளை அணிவது, கிருஸ்ணா பக்தி அலை போன்றவற்றுடன் சமாதான இயக்கங்களும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்தப் பொப் இசையோ பாரம்பரியத்திற்கு எதிராக கொள்ளப்பட்டது. இந்தப் போக்கானது எமது நாடுகளும் உள்வாங்கிக் கொண்டன. ஆதனால் எம்மவர்கள் அவற்றை வாங்கிக் கொண்ட பிற்பாடு அவற்றிற்கு கொடுக்கப்பட்ட கருத்துருவம் என்பது மேலைநாட்டவர் கொடுத்த கருத்துருவத்திலும் பார்க்க வித்தியாசமாக இருந்தது எனலாம். பொப் இசையை மக்கள் ரசித்தனர், தலைமுடி வளர்ப்பதை ஒரு (Fashion) நாகரீகமென கொண்டனர். ஒரு

நாட்டுக் கலாச்சாரம், அல்லது சிந்தனைப் போக்கு என்பது என்ன நிலையை உணர்த்தி நிற்கின்றது என்ற சரியான பார்வை என்பது எல்லாக் காலத்திலும் எல்லாச் சமூகத்திலும் விளங்கப்பட்டிருக்கும் எனக் கொள்ள முடியாது..

இந்த நிலையைப் பார்க்கின்ற போது நாகரீக உலகத்தில் வாழ்கின்ற எம்மவரால் இந்த இயக்கப் போக்கை பகுத்தாய்வு செய்து நடக்க முடியவில்லை. ஆனால் எத்தனையோ நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் ஆரியர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட வர்ணாசிரமக் கோட்பாட்டை சரியாக ஆய்வு செய்து அதனைப் புரிந்து பின்பற்றியிருப்பர் என்பதில் சந்தேகமே தோன்றுகின்றது.

## 1.3.7 தீண்டாமை

உழைக்கும் மக்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற ரீதியில் ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றனர். உழைக்கும் வர்க்கம் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்க முடியாது பல துன்பங்களை அனுபவித்து வந்திருக்கின்றனர். எதிர்ப்புகள் காட்டப்பட்டாலும் அவை மிருகத்தனமாக அடக்கப் பட்டன. எதிர்ப்புக் காட்டுவதை தவிர்த்து பணிந்தும் சென்றிருக்கின்றனர். உழைக்கும் மக்களைச் சுரண்டு வதற்குரிய தத்துவத்தையும், அவர்களை அடக்கிக் கொள்ள படை பலத்தைக் கொண்ட அதிகாரத்தையும் கொண்டு வந்திருக்கின்றனர். ஒடுக்குமுறைச் சமுதாயத்தில் இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாம் ஏன் தாழந்தப்பட்டவர்கள் என்பதற்கு முழுமையான விளக்கம் அவர்களுக்கே தெரிவதில்லை. தெரிந்தது எல்லாம் அவர் பெற்றோர் தாழ்தவர்களாக இருந்திருக்கின்றனர், பேரர்மார் அப்படியே இருந்திருக்கின்றனர், முப்பாட்டர்களும் அவ்வாறே இருந்திருக்கின்றனர். பரம்ரை பரம்பரையாக எந்தவிதமான விளக்கமும் இல்லாமல் இருந்திருக்கின்றனர். பெரும்பான்மையான உழைக்கும் வர்க்கத்தினர் திட்டமிட்ட வகையில் உடல்ரீதியாகவும், மனோவியல் ரீதியாகவும் காலங்காலமாக வதைபட்டு வந்துள்ளனர்.

இந்த ஏழைக்குடிகள் நாளாந்த வாழ்வில் இருந்து ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றனர். அரைமுதலாளித்துவ வளர்ச்சிக் காலகட்டத்தில் அமைந்து கொண்ட உணவு விடுதிகளில் உணவு உண்ண, கோவில்களுக்குச் செல்வது தடைசெய்யப்பட்டும் இருக்கின்றது. இதற்கு எதிரான போராட்டங்கள் பன்றித்தலை அம்மன் கோவில் பெண்போராளியான செல்லக்கிளி குண்டு வீச்சு, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் போன்ற போராட்டங்கள் நடை பெற்றிருக்கின்றன. இந்தப் போராட்டங்களை உயர்வர்க்கத்தினர் எதிர்த்திருக்கின்றனர். எதிர்த்தவர்கள் பலர் தலைவர்களாவும் இருந்திருக்கின்றனர். இதில்; அடங்காத் தமிழன் வவுனியா சுந்தரலிங்கம் குறிப்பிடத்தக்கவர்.

தீண்டாமை இந்தியாவில் இறுக்கமாக இருக்கின்றது. ஆனால் இலங்கையில் அவ்வளவு தீவிரமான போக்காக இல்லை. இலங்கையில் பார்ப்பனிய ஆதிக்கம் இல்லை, ஆனால் வேளாளர் ஆதிக்கம் தான் இருக்கின்றது. கடலையே தங்கியிருந்த மக்கள் சுய தேவைகளை பூர்த்தி செய்து வந்திருக்கின்றனர். இத்துடன் மறவர், கள்ளர், தேவர், வன்னியர், அகம்படியார் போன்றவர்கள் பரதவர், வேளாள குலங்களில் கலந்திருக்கின்றனர். தீண்டாமை பற்றி சிங்கள மக்கள் மத்தியில் ஆய்வு செய்தல் அவசியமாகும். சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களிடம் இருப்பது போல் தீவிரமாக சாதியம் இருக்கவில்லை என்ற கருத்தும் இருக்கின்றது. இவ்வாறே பார்க்கின்ற போது வடக்கிற்கும் கிழக்கிற்கும் மாறுதல் இருக்கின்றது எனலாம்.

தீட்டு என்பது பல சமூக அம்சங்களில் பார்க்கப்படுகின்றது. இந்த விடயத்தில் சூத்திரரும், பெண்களும் ஒரே வகையென பகவத் கீதை போதிக்கின்றது. தவிர்த்தல் (Taboo) என்பது எமது சமூகத்தில் இருந்து வந்திருக்கின்றது. தவிர்த்தல் என்பது இயற்கையை ஒட்டிய நிலையில் இருந்த பொழுது அவை இயற்கை விதிகளுக்குள் அடங்கியிருந்தது வரைக்கும் அவை அடக்குமுறைக்கு உரியதாக இருக்கவில்லை. தவிர்த்தலுக்கு பொருளாதார நலன், தெய்வத்தன்மை கொடுக்கின்ற போது ஒடுக்கு முறைக்குரிய ஒன்றான மாற்றம் பெறுகின்றது.

பெண்கள் மாதவிடாய் காலங்களிலும், சூத்திரர் கோயில்களுக்குச் செல்வது தடை செய்யப்பட்டு இருக்கின்றது. சூத்திரர் என்போர் முற்பிறப்பில் செய்த பாவத்திற்காக உயர் சாதியினருக்கு ஊழியம் செய்து முற்பிறப்பின் பாவங்களை போக்க வேண்டும் என்கின்றனர். குறிப்பாக சூத்திரர் சமூக நடவடிக்கைகளில் இருந்து அகற்றப்பட்டனர். சூத்திரர்களை ஒதுக்கி வைப்பதற்கு பல தந்திரங்கள் கையாளப்பட்டன.

1. புராண இதிகாசங்கள், மனுசாத்திரங்கள், கட்டுக் கதைகள் என்பன.

2. பொருளாதார ரீதியான நெருக்கடிகளாக தண்டணைப்பணம் செலுத்தல், தர்மத்திற்கு வேலை செய்தல்.

3. அரசர்கள், நிலப்பிரபுக்களால், பூசாரிகளால் வழங்கப்படும் தண்டனைகள். உடல் ரீதியான தாக்குதல்கள், எரித்தல் (நந்தனார்) மனோவியலைச் சிதைக்கின்ற முறைகளாக நித்தம் இம்சைப்படுத்தல் (Mob) மொட்டையடித்தல் போன்றவைகள் சூத்திரர்கள் எனப்படுபவர்கள் மீது தொடுக்கப்பட்டது.

ஒடுக்குமுறையை மேற்கொள்கின்ற சக்தி மற்றைய ஒடுக்கும் சக்தியை பயமுறுத்தியே காரியங்கள் சாதிக்க வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. ஒடுக்கப்படும் மக்களின் மனோவன்மையை தகர்ப்பதே

முதலாவது செயற் திட்டமாகின்றது, இதுவே ஒடுக்கும் சக்தியின் ஆயுதமாகும். இந்தத் தாக்குதல் காரணமாக போர்க் குணத்தை மழுங்கடிக்க முனைகின்றது. அறியாமையில் மூழ்கியிருந்த மக்களுக்கு ஒடுக்குமுறையில் இருந்து வெளிவரும் பாதை தெரிந்திருக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு தெரிந்தது என்னவோ விண்ணுலகில் இருந்து மண்ணுலகத்தைப் பார்க்கின்ற சிந்தனை வளர்ச்சியே. ஒடுக்குமுறையாளர்கள் போராட்ட உறுதியைக் கலைத்து, சுரண்டும் பொருளாதார நலனையும், சமூக அமைப்பையும் பாதுகாத்து வந்துள்ளனர்.

## 1.3.8 கொலனித்துவ காலம்

கொலனித்துவ காலத்தில் தான் முதன் முறையாக 1872 இல் சாதிகளை கணிப்பிடப்பட்டு வகைப்படுத்தப் பட்டனர். இந்த முயற்சி என்பது பல விசித்திரமான புதிய சாதிகளையும் உருவாக்கி கொண்டது. வாரணாசியில் இருக்கின்ற சைவப் பிரிவினராகிய லிங்காயத்துக்கள் என்ற குண்டலினி (யோனி,) லிங்கத்தை கழுத்தில் அணிக்கின்ற இப்பிரிவினர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த மதப் பிரிவினராகவே எப்பவும் மற்றைய கிளைப் பிரிவினர்களால் கருதப்பட்டு வந்தனர். இவர்கள் ஒரு சாதியல்ல ஆனால் இந்தப் பிரிவினர் உண்மையில் கிளர்ச்சிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இவர்கள் தனிச் சாதிகள் என கொலனி ஆட்சியாளர்களால் வரையறுக்கப்பட்டனர். இதே போல புதிய யமிந்தார்கள் என்ற புதிய பகுதியினரை ஏற்படுத்தினர். சாதிய வரையறை செய்த போது சாதிகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளப்பப்பட்டதையும், தத்தமது அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ள வகுப்புவாத ஆய்வுப் வெளியீடுகள் வெளிவந்தன.

இந்தச் சாதியப் பிரிவினையை அறிந்து கொண்ட கொலனித்துவ ஆட்சியாளர்கள் இந்த மக்களை ஒன்றினைய விடாது பிரிவினையைப் பயன்படுத்தி தமது நலனைப் பாதுகாக்க முனைந்து கொண்டனர். பொருளாதார நிலையில் முதலாளித்துவக் கட்டத்தை அடையாத வேளையிலும், மற்றைய உழைப்பாளிகளின் உழைப்பின் தேவைகருதி சுதந்திரத்தை கொடுத்து உழைப்பை பெற முன்னதாக உள்ளூர் சக்திகளை அரவணைத்து பதவிகளைக் கொடுத்து இருப்பை நிலைநிறுத்தும் போக்கில் நடந்து கொண்டனர். சாதிகளில் மேல் மட்டத்தில் இருந்தோர் சுதந்திரத்திற்கு பாடுபடாமல் தமது சாதிய இருப்பை பேணும் வகையில் நடந்து கொண்டனர். இதுவும் இவர்களின் அனாகரிக நிலையே காரணமெனலாம். ''அரசிறை உத்தியோகங்களும் நீதிபரிபாலன உத்தியோகங்களும் சுதேசிகளுள் உயர்ந்த சாதியினருக்கே கொடுக்கப்பட வேண்டுமென. 1658ம் ஆண்டு ஒக்டோபர் மாசம் 31 ந் தேதி வரைந்து வைத்த அறிக்கையிற் கண்டபடியே. வேளாளருக்கு அதிகமாகவும் மடப்பளியாருக்குக் குறைவாகவுமளிக்கப் பட்டு வந்தது. பட்டங் கட்டியென்னுமுத்தியோகம்

கரையாருக்கும், முக்குவருக்குமெயுரியன. கி.பி 1694ம் ஆண்டில் மற்றைய சாதியாருக்கும் உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டபடியால், இதையிட்டு அவ்வருடத்து ஜூலை மாதத்தில் வேளாளரும் வன்னியருஞ் சேர்ந்து பெருங்கலகம் விளைவித்தனர். (175 யாழ்பாணச் சரித்திரம், மு. செ. இராசநாயகம்.)

வேளாளர் கொலனித்துவ காலத்தில் விசுவாசமாக உழைத்தவர்கள். இவர்களின் பிள்ளைகள் மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்றனர். அதேவேளை பதவி உயர்வு பெற்று ஏனைய ஆங்கிலக் கொலனி நாடுகளுக்குச் சென்றனர். இவர்களின் உழைப்பினை கௌரவிக்கும் முகமாக இவர்களுக்கு முதலியார் பட்டங்களும் வழங்கினர். இவர்களின் வழி வந்தவர்கள் தமது சாதியினருக்கே சலுகைகளைச் செய்து வந்தனர். இன்னொரு விதமாகக் கூறினால் பூர்சுவா வர்க்கமானது சகோதரப் பூர்சுவா வர்க்கத்திற்கு உதவி செய்தது.

இப்படியான நேரத்தில் தமிழ் ஊழியர்கள் சிங்களப் பகுதிகளுக்குச் சென்று உத்தியோகம் பார்த்தனர். தமது சொந்த இனத்தைச் சேர்ந்தவர்களையே மனிதர்களாக நடத்தாதவர்கள் சிங்கள மக்களை மனிதர்களாக நடத்தியிருப்பார்கள் என்பது சந்தேகமே. இங்கு கவனிக்கப்பட வேண்டியது இரண்டு விடயம் ஒன்று கொலனித்துவத்தின் அடக்கு முறை மற்றையது சைவ வேளாளத்தின் ஒடுக்குமுறை.

வசதிபடைத்த வேளாளத்தின் வாரிசுகள் பிற்பட்ட காலத்தில் இலங்கையின் மிகப்பெரிய வக்கீல்களாகவும் அரசியல் கட்சிகளின் தலைவர்களாகவும் உருவாகினர். அதேவேளை நிலப்பிரபுத்துவ நிலையில் இருந்து மாற்றமடைகின்ற பருவ காலகட்டத்தில் கூடுதலான மாற்றங்கள் ஏற்படுகின்றது. முதலாளித்துவத்திற்கு சுதந்திரமான (கட்டுண்டு கிடக்காத) தொழிலாளர்கள் தேவைப்பட்டது. அதாவது வளர்ந்து வரும் முதலாளித்துவத்திற்கு ஏற்றவாறான அரசியல் சட்ட திட்டங்களை வகுக்கவேண்டிய தேவை முக்கியமாக முதலாளித்துவத்திற்கு உண்டு.

இதன் காரணமாக தேசவழமை எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வந்தது. இதனை எதிர்த்து தமிழ் நிலப்பிரபுத்துவ வர்க்கம் எதிர்த்து வாதிட்டது. எனினும் பூர்சுவா வர்க்கமானது அதனை வெற்றி கொள்ள முடியவில்லை. கொலனித்துவ அரசாட்சியானது தனது வர்க்க நலனைப் பாதுகாக்க அச்சட்டத்தை இயற்றிக் கொண்டது. பூர்சுவா வர்க்கத்தினர் இதற்கு எதிராக செயற்பட்டனர் எனினும் இவர்கள் முற்று முழுதாக முதலாளித்துவ வளர்ச்சியைப் பற்றிய முழுமையான அறிவு இவர்களிடம் இருந்திருந்தால் நிச்சயம் எதிர்த்திருக்கமாட்டார்கள். அதனை ஆதரித்து இருப்பார்கள் ஆனால் அரசியல் தலைமைப் பாத்திரம் வகித்தவர்களோ நிலபிரபுத்துவ வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. ஆனால் முதலாளித்துவம் வர்க்கமானது பலவீனமான நிலையில் இருந்ததையே இது காட்டுகின்றது. அப்படி பலம் பொருந்தியவர்களாக இருந்திருப்பின் மாற்றத்தை விரும்புகின்றனர்

என்பதைவிட அந்த மாற்றத்தை அனுபவிக்கக் கூடியவர்களும் இவர்களே ஏனெனில் பூர்சுவா வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்வதனால் இது சாத்தியமாகின்றது.

இந்தியாவில் பிரித்தானியர்கள் வேறு கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டனர். ஜமிந்தார் என்ற புதிய அந்தஸ்தினை உருவாக்கி அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளைப் பராமரிக்கும் முறையைக் கொண்டு வந்தனர். இந்து ஜமிந்தார் குறிப்பிட்ட பகுதிகளை தமது ஆட்களைக் கொண்டு மக்களைத் துன்புறுத்தினர், அடக்கி ஆண்டனர். வரியை அறவிட்டு தாம் ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்துக் கொண்டு ஆங்கிலேயர்களுக்கு மிகுதியைக் கொடுத்தனர். ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமாக இருந்தவர்களுக்கு சேர், ராவ்பகதூர் பட்டங்களைக் கொடுத்து அவர்களை மகிழ்வித்தனர்.

பொன். இராமநாதன், பொன். அருணாசலம் போன்றவர்கள் (இவரிடம் முற்போக்குத் தன்மைகள் இருந்தன) இவ்வழிவந்தவர்களே. அதேவேளை 1920 காலப்பகுதியில் தான் பல பள்ளிக்கூடங்கள் எரிக்கப்பட்டன. பள்ளிக்குச் சென்ற பிள்ளைகளின் புத்தகங்கள் பறிக்கப்பட்டு கிணற்றுக்குள் வீசப்பட்டன என்பதை இங்கு நினைவுகூரத்தக்கது.

இந்தக் கனவான்களே சிங்களப் பணக்காரத் தலைவர்களுக்காக லண்டன் சென்று வழக்காடி வெற்றி பெற்றனர். இதற்கு நன்றியாக சேர் பொன் ராமனாதனை தேரில் ஏற்றி இழுத்து மரியாதை செலுத்தினர் என்பது வரலாறு. அதேவேளை 1905களில் சிங்கள முஸ்லீம் கலவரத்தின் போது தமிழ் பூர்சுவா வர்க்கமானது சிங்களப் பூர்சுவாக்களின் பக்கம் சார்ந்திருந்தனர். ஏனெனில் சந்தை பிடிக்கும் நோக்குடன் சிங்களப் பூர்சுவா வர்க்கத்தினரால் திட்டமிட்டு நடத்தப்பட்டது. இந்நிலையில் எதிரிக்கு எதிரி நண்பன் என்ற நிலையை தமிழ் பூர்சுவாக்கள் கடைப்பிடித்துக் கொண்டனர்.

## 1.3.9 சாதியம் முன்பிருந்த நிலையை விட மாற்றமடையும்

முன்னைய சமுதாயத்தில் பரம்பரை பரம்பரையாக செய்த தொழிலையே அதன் பரம்பரைகள் செய்து வந்தனர். இந்நிலையானது முதலாளித்துவம் தெரிவுச் சுதந்திரத்தைக் கொடுக்கின்றதன் காரணமாக மாற்றம் அடைகின்றது. ஆனாலும் இந்தச் தெரிவுச் சுதந்திரம் முதலாளித்துவ சமுதாயத்தில் எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைப்பதில்லை. சாதிய வட்டத்தினுள் இருக்கின்ற போது குறிப்பிட்ட பொருளாதார உறுதிப்பாடு இருந்தது. இந்த உறுதிப் பாட்டின் மூலமாக குடும்ப உறுப்பினர்களின் வயிறு நிரம்புகின்றதா இல்லையா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க அச்சமூக

தன்மைக்கு ஏற்ப பாதுகாப்பு இருந்தது. குலச்சமுதாயத்தில் அல்லது நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் வாழ்ந்தவர்கள் மற்றும் பயன்மதிப்பை உருவாக்குபவர்களும் முன்பு இருந்த சுதந்திரத்தை இழந்தபின்னரே புதிய நிலையை அடைகின்றனர் பழைய சுதந்திரத்தை இழந்து விடுகின்றனர். ஆனால் புதிய சமுதாயத்தில் கிடைக்கின்ற சுதந்திரத்தின் பருமனைக் கொண்டு பழைய சமுதாயத்தை ஒப்பிடக்கூடாது.

கொலனித்துவகாலத்தில் இவ்வாறான மாற்றங்கள் இடம் பெற்றுத்தான் இருந்தன. இவற்றை தடுக்க உயர்சாதி எனப்பட்டவர்கள் தமது சக்தியைப் பாவித்துள்ளனர். ''தாழ்ந்த சாதியார் ஒல்லாந்தர் காலத்திற்றானே தங்கள் வழக்கங்களுக்கு மாறாகத் தலைமயிர்கள் நீளமாக வளர்க்கவும், பொன் வளையங்களைக் குலக்குறியாகக் காதிலணிவதை நீக்கவும் தொடங்கியதைக் கண்ட வேளாளர் அரசினருக்கு முறையிட, அப்போது (1686ல்) சேனாதிபதியாக இருந்த லோறன்ஸ் பைல் என்பவர் அவ்வாறு அவர்கள் மாறி நடவாது பழையன கொண்டு நடக்கக் கட்டளை செய்தனர். (பக். 227 யாழ்பாணச் சரித்திரம், மு. செ. இராசநாயகம்) இவ்வாறான மாற்றங்கள் என்பது முதலாளித்துவ தொழிற்துறை வளர்ச்சிற்கு முன்னமே ஏற்படுத்தப் பட்டுவிட்டதை இங்கு நோக்குதல் வேண்டும்.

கொலனித்துவத்தின் காரணமாக பிற்போக்கு நிலையில் இருக்கும் சமூகங்கள் மாற்றமடையும் சுதந்திரமான தொழிலாளர்களை அது ஊக்குவிக்கின்றது என முன்பு பார்த்தோம். தேசவழமைச் சட்டத்திற்கு எதிராக பிரித்தானியர்கள் கொண்டுவந்த சட்டதை இங்கு நோக்குதல் பொருந்தும். ''தொழிலாளிகள் தமது உழைப்பை பொருளாக்குவதற்கு வேண்டிய சாதனங்களின் உடமை அனைத்திடமிருந்தும் அவர்களை முழுமையாகப் பிரித்தெடுப்பதை முதலாளித்துவ அமைப்பு முன் தேவையாகக் கொண்டுள்ளது.'' (10 மூலதனத்தின் மூலத்தோற்றம் –மார்க்ஸ்) ஆனால் எமது தேசங்களில் சாதியத்தின் கொடுமையில் இருந்து விடுதலைகிடைத்த போதிலும், சிலர் இன்னும் கேட்கலாம். இது முதலாளித்துவத்திற்கு உதவிபுரிகின்றதேயென ஆனால் சாதியத்தை பாதுகாக்க என்னுபவர்களே அவர்கள். பாட்டாளிகளைப் பொறுத்தவரை பூர்சுவா ஜனநாயகத்தை அடைவது மாத்திரம் எமது இறுதிவடிவம் அல்ல ஆகவே எதிரிடையில் இருந்து வரும் கூப்பாடு வெறும் அர்த்தம் அற்றதாகிறது.

பூர்சுவா வர்க்க சனநாயகமானது முதலாளித்துவ வர்க்க நலன் கருதி தமது சுரண்டலை விரிவுபடுத்தவும், இருப்பை நிலைநிறுத்திக் கொள்ளவும் கொள்ளும் பொருட்டு வழங்குதலேயாகும். முதலாளித்துவ சனநாயகத்தில் மக்களுக்கான பங்கு என்பது மறுதலிக்கப்பட்டிருக்கும். மக்களுக்கு உரிமை வழங்குகின்றோம் என்ற போர்வையில் சிறுபான்மையான பூர்சுவா வர்க்கமானது நாடாளுமன்ற சனநாயகம் என்ற போர்வையில் தமது கைகளில் முழு அதிகாரத்தையும் வைத்துள்ளனர்.

## 1.3.10 சாதிப் பெருமைகள்

கருத்தியல் என்பது ஆளப் பதிந்துள்ள காரணத்தால் போலியுணர்ச்சிக்கு ஆளாகின்றதை கீழே பார்ப்போம். மேட்டுக் குடியினருக்கு பறத்தமிழா என்றால் மாத்திரம் ஆத்திரம் பொத்திக் கொண்டு வந்து விடும். மேட்டுக் குடியில் உருவான அரசியல்வாதிகள் சமபந்தி சமபோசனம் என்ற போராட்டத்தை நடத்தினர் எனினும், இவர்கள் மீது பதிந்துள்ள பிற்போக்குச் சிந்தனை அகலவேயில்லை. பறத்தமிழா எனக் குறிப்பிடும்போது எல்லோருக்கும் ஆத்திரம் வருகின்றது அந்தச் சொல் ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் சொல்லே ஆகும். ஆதிதிராவிட மக்களைக் குறிக்கப் பாவிக்கப்படும் இச்சொல்லானது இழிந்த நிலையெனப் பொருள்படுகின்றது இதுவே வழக்கத்தில் இருக்கின்றவையாகும். அந்தச் சொல்லைக் கேட்கின்ற போது எம்மால் ஏன் அதனை பெரிதுபடுத்தாமல் இருக்க முடியவில்லை. இன்று சிங்கள இனவாதிகள் தமிழர்களை இழிவுபடுத்தப் பாவிக்கும் சொல்லானது தொடர்ந்தும் எம் சமூகத்தில் இருந்து அகலவில்லை என்பதை நாம் அவதானிக்க முடியும். ஏன் எம்மால் அது ஆதி திராவிடர்களைக் குறிக்கும் சொல்லென ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

குலச் சமூதாயத்தின் எச்சங்களும் எமது சமுதாயத்தில் உறைந்துள்ளது. அந்தச் சிந்தனை என்பது சாதிய வட்டதினுள் இன்றும் உயிர் வாழ்கின்றது எனலாம். இவற்றின் எச்சங்கள் எமது விடுதலைப் போராட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது எனலாம். சாதியம் என்பது சில வருடகால போராட்டத்தின் ஊடாக மாற்றமடைய முடியாது. இதற்கு உதாரணமாக கடந்த காலத்தில் ஈபி பள்ளன் ஈஎன் EN நளவன் EP மக்களின் இழிச்சொல்லில் குளிர்காயப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். எமது போராட்டத்தின் மூலமாக சமூக மாற்றம் எவ்வளவு தூரம் மாற்றமடைந்துள்ளது என்பதைக் கேட்க வேண்டியதும் முக்கிய கடமையாகும். இன்று அரசியல் நீரோட்டத்தில் சந்தர்ப்பவாதப் போக்கில் முதலாளித்துவ அரசியல் சக்திகள் செயற்படுகின்றன. இந்தச் நிலை என்பது சர்வதேச ரீதியிலும் நடைபெறுகின்றது. இதன் காரணமாக சந்தர்ப்பவாத நிலை என்பது தேசியம், பிராந்திய, சர்வதேச, அமைப்பு அளவிலும் இடம் பெறுகின்றன. இந்தச் சந்தர்ப்பவாத நிலையில் பரந்துபட்ட மக்களின் போராட்டத்திற்கு இடையூறினை ஏற்படுத்த முடிகின்றது. இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத நடவடிக்கையே சாதியின் பெயரை பாவிக்க அனுமதிக்கப்பட்ட செயற்பாடாகும். இவை மாத்திரம் அல்ல இயக்கங்களிடையே ஆட்சேர்ப்பு முறை நட்பு – ஊர் – சாதி ஆகியவைகள் என்பனவும் முக்கியமானதாகும். கடந்த காலத்தில் நட்பு அடிப்படையில் இயக்கங்களில் ஆள்ச் சேர்க்கப்பட்டது இயல்பானதே. பிற்பட்ட காலத்தில் இந்தப் போக்கு மாறி சாதியத்தில் சரணடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். போலியுணர்விற்கு, போலிப் பொருமைக்குள் இருக்கின்ற எமது சமூகம் பற்றிய பார்வை என்பது அவசியமாகின்றது.

சாதியம் என்பது எமது சமூகத்தில் உள்ள முக்கிய நோயாகும். எனினும் சாதியத்தினை அகற்றுவது என்பது இலகுவான காரியம் அல்ல. இன்றைய (இலங்கை) சாதியம் என்பது உறங்கு நிலைக்குச் சென்றுள்ளது. எனினும் அது மீண்டும் எமது சமூகத்தைப் பிரித்து ஆதிக்கவாதிகளின் நலனை பேணும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. காரணம் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியை, பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையை முன்நிபந்தனையாகக் கொண்டு இடம் பெறவில்லை மாறாக பாட்டாளி வர்க்கமானது தேசிய முதலாளித்துவத்திற்கு கீழ்பட்டு இருப்பதால் இந்நிலையானது தொடர்கின்றது.

## 1.3.11 சாதிய விடுதலைப் போராட்டம்

இந்தியாவில் தற்காலத்தில் இடவொதுக்கீடு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டின் மூலம் பின்னிலையில் இருக்கின்ற சாதிகளை மற்றைய சாதிகளின் தரத்திற்கு உயர்த்த சந்தர்ப்பத்தை சட்டரீதியாக ஏற்படுத்தியுள்ளனர். சட்டத்தின் மூலம் வேலையில்லாமல் இருக்கின்ற எந்தச் சாதியாக இருந்தாலும் உழைக்கும் வர்க்கம் என்ற நிலையில் தமக்கு இடம் கிடைக்கவில்லை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகள் மீது ஆத்திரத்தை உண்டுபண்ணியது. அதேவேளை ஆதிக்க சாதித் திமிரினால் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் நாடு பூராகவும் கலகம் இடம் பெற்றது. தாழ்த்தப்பட்ட பகுதியினரை மற்றைய சமூகத்தின் தரத்திற்கு உயர்த்தும் பொருட்டு இலங்கை, இந்தியா, அமெரிக்காவில் (University of Michigan) மிச்சிகன் கலாசாலை ஆகியவற்றில் இடவெதுக்கீடு முறை நடை முறைப்படுத்தப்படுகிறது. இலங்கையை எடுத்துக் கொண்டால் பின்தங்கிய பிரதேசங்களில் குறைந்த பட்ட புள்ளிகளுடன் மாணவர்கள் கலாசாலைகளுக்கு செல்லும் வழிசமைத்துக் கொடுக்கப்பட்டது. இதே போல மிச்சிகன் கலாசாலை கறுப்பு மாணவர்களுக்கு குறைந்த புள்ளி இருந்தாலும் பள்ளியில் இடம் கொடுக்கப்படுகின்றது.

இலங்கை, இந்திய, மிச்சிகன் போன்ற இடங்களில் இடவொதுக்கீடு செய்யப்படின் பலர் பலன்பெறுவர் என்பது மறுக்க முடியாத உண்மையே. இது ஒரு பரம்பரையின் வளர்ச்சிக்கு உதவும் புரட்சிகரமான நடவடிக்கையே. பலன்பெறுபவர்கள் தாம் மறுவுற்பத்தி செய்கின்ற போது இருக்கின்ற சமூகத்தின் வெளிப்பாட்டையே கொண்டிருப்பர். சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றவர்களின் வர்க்க நிலை மாற்றம் பெறுகின்றது. முன்னர் பாட்டாளி வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருப்பின் இவர்களின் வர்க்கம் குட்டி முதலாளிய சிந்தனை பெறப்படும். இருக்கின்ற சமூக அமைப்பு அதன் நலன்

கொண்ட கல்வி அமைப்பு இவைகள் ஒரு மனிதனை தனது சமூகத்தின் பாதுகாவலனாக உருவாக்கி விடுகின்றது.

இங்கு சீர்திருத்தப் போக்கானது ஒடுக்கப்படும் வர்க்கத்திற்கு முழுமையான விடுதலையை கொடுத்து விடாது. ஆனால் ஒரு இந்தப் பகுதியினர் முதலாளித்துவ சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். இதன் காரணமாக புரட்சிகர சக்திகள் சீர்திருத்தத்தை ஆதரிக்கின்றனர். இந்தப் போக்கானது வர்க்க, போலிச் சிந்தனை அழிக்கப்பட்ட பின்னர் ஏற்படும் சமூக மாற்றத்திற்கு ஈடாக அமைந்து விடவில்லை.

இங்கு இடவொதுக்கீட்டிற்கு எதிராக கருத்துக்கள் இருக்கின்றன. இது இலங்கையைப் பொறுத்த வரை ஈழப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைந்தது, அதேபோல மற்றைய இடங்களிலும் எதிர்ப்புகள் வந்து தான் இருக்கின்றது. இங்கு சட்டத்தின் மூலம் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு உதவ முடியாது. அத்துடன் இதன் மூலம் வர்க்க விடுதலை , சாதிய விடுதலையை அடைந்து விட முடியாது. சாதியத்தை எதிர்ப்பதற்கு அல்லது முடிவிற்கு கொண்டு வருவதற்கு சீர்திருத்த முயற்சி மாத்திரம் போதாது இவற்றால் சாதி அழிந்து விடவில்லை.

ஈழப் போராட்டத்தை பூர்சுவா வர்க்கத்தை அதிகமாகக் கொண்ட யாழ் – தமிழ் சமூகம் போராட்டத்திற்கு தலைமை தாங்கியது. போராட்டம் என்பது உக்கிரமடைய முன்பாகவே சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. ஆனால் இந்த சாதி எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் 60 களில் ஏற்பட்டது.

பற்பல வர்க்கப் பிரிவினரும் இணைந்து கொண்ட இந்தப் போராட்டம் இலங்கை வரலாற்றிலே பொண் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலமது. ஆண்டாண்டு காலமாக சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளானவர்கள் தமது ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடினர். ஏனெனில் இப்போராட்டம் குறிப்பிட்ட வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது எனினும் (முதலாளித்துவ) அரை நிலப்பிரபித்துவ அமைப்பினுள் இடம்பெற்ற இப்போராட்டமானது முழுமையான வெற்றிக்கு இடமளிக்காது போய்விட்டது. அதேவேளை தமிழ் பூசுவாக்கட்சிகள் ஆமை தலையைச் சுருக்கி கொள்வது போல் சுருக்கி கொண்டனர். (சிலர் தனிநபர்களாகப் பங்கு கொண்டனர்) தமிழ் பூர்சுவாக் கட்சிகள் முழுமையான சாதிய எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளாததன் நோக்கம் என்னவெனில் தமது வர்க்க நிலையை பாதுகாத்துக் கொள்வதேயாகும். தமிழ் கட்சிகளில் தலைமை வகித்தவர்களில் அதிகமானவர்கள் சைவவேளாள நிலப்பிரபுத்துவக் குடும்பங்களில் இருந்தவர்களே. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் உயர்கல்வி பெற்றவர்கள் அதிலும் இவர்கள் வக்கில்களே. தமிழ் அரசியல்

வரலாற்றை எடுத்துக் கொண்டால் வக்கீல் அரசியல் நடைபெற்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இந்தத் தலைமுறையில் வந்த கூட்டணியினர் நாடாளுமன்ற அரசியலில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்ட வேளையில் சாதிய சிந்தனையின் அடிப்படையிலே நாடாளுமன்ற தேர்தலில் நியமனம் செய்யும் போது கவனத்தில் கொண்டனர். உதாரணமாக இராசலிங்கம், மன்னார் சூசைதாசன் ஆகியோரைக் கண்துடைப்புக்காக தேர்தலில் நிறுத்தினர். ஆனால் பிற்பட்ட காலங்களில் கரிகாலன் நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் போட்டியில் நீலன் திருச்செல்வத்திடம் தோற்றும் கொண்டார். முன்னர் இருந்த அவசியம் இந்தக் காலத்தில் கரிகாலனை நியமிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இங்கு சேவகம் என்பது முதன்மைப்படுத்தவில்லை. ஆனால் இவர்களுடைய சாதியச் சிந்தனை என்பது உடனடியாக மறைந்துவிடும் என்று எதிர்பார்த்தது மடைத்தனமே. மேற்குறிப்பிட்டது போல் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு சலுகையை வழங்கினர். இதேபோல் சிங்களப் பூர்சுவா வர்க்கமும் கொலனித்துவ காலத்திலும் தமக்கான இடத்தைப் பிடிப்பதற்கு இடைவிடாது போராட்டத்தை நடத்தின.

சாதிய எதிர்ப்புப் போராட்டம் பல வர்க்கங்களை உள்ளடக்கிய சாதிகளைக் கொண்டேசாதிய எதிர்ப்புப் போராட்டம் நடைபெற வேண்டும். சாதிய எதிர்ப்புப் போராட்ட காலத்தில் சாதிய எதிர்ப்புப் போராட்டமே உயர்சாதிகளுக்கு எதிரானதாக காட்டி சாதியச் சக்திகள் போராட்டத்தில் அனைத்து வர்க்கங்களின் ஒற்றுமையை உடைத்தனர். இவ்வகையான பிரிவினை முயற்சிகள் நடை பெறவே தான் செய்யும். ஆதிக்க சாதிகளுக்கு எதிரான போராட்டம் என்பது ஆதிக்க கருத்தியலுக்கும், அது அமைத்துக் கொண்டுள்ள சுரண்டும் பொருளாதாரச் சிந்தாந்தத்திற்கும் எதிரானதாகும். இன்றைக்கு உயர்சாதிகள் எனப்படுபவை எல்லோரும் சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கொள்ள முடியாது. எனவே சுரண்டும் வர்க்கத்தையும், சுரண்டும் வர்க்கத்தின் சந்தர்ப்பவாத சாதியப் பற்றையும் அம்பலப்படுத்தி அனைத்துச் சாதிகளின் ஒடுக்கும் வர்க்கங்களையும் ஒன்று சேர்ந்து சாதிய எதிர்ப்புப் போராட்டங்களை கொண்டு நடத்துதல் வேண்டும்.

சாதியத்தை அகற்ற வேண்டுமானால் சிந்தனைத் தளத்தில் போராட்டம் இடம்பெறவேண்டும். சிந்தனை இரண்டு வகையானது சாதி – மதமாகும் ஒன்றை விட்டு ஒன்றை அகற்றமுடியாது. எனவே போலியுணர்வை கடன் தீர்த்துக் கொள்ளவும், வர்க்க உணர்வை ஊட்டி வர்க்கப் போராட்டத்தை ஒழுங்குபடுத்துமுகமான வேலை அணுகுமுறைகளையும், நடைமுறை வேலைத்திட்டத்தையும் அமைத்துக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

★




# 1.4 போலி உணர்வு பற்றி

போலி உணர்வுகள் என்ற இந்தப் பகுதியில் இலங்கை, இந்திய மக்களின் சிந்தனைக்கு அடித்தளமாக இருக்கும் சிந்தனை போக்குப் பற்றியே இங்கு ஆராயப்படுகின்றது. மக்களின் சிந்தனையின் வேரை அறிந்து கொள்ளாமல், மக்களின் சிந்தனைப் போக்கில் மாற்றத்தை கொண்டு வர முடியாது. பல சித்தாந்தப் போக்குகள், புதிய கோட்பாடுகள் இருக்கின்றன. இவற்றை விலக்கிக் கொள்வதற்கு அகத்திற்கும், புறத்திற்குமான வித்தியாசத்தையும் அறிந்து கொள்ளல் அவசியமாகும். இனவாதத்தை விதைக்க இலகுவாக இருக்கின்ற முக்கிய காரணி போலியுணர்வாகும். அத்துடன் மனிதர் தனது தேவைகளை பூர்த்தி செய்ய முற்படும் போது அகவுணர்விற்குட்பட்டு அல்லது முதன்மை கொடுத்து தனது செயற்பாட்டை செய்கின்றனர். இது சாதாரன நடைமுறை கருத்தியலுக்கு உட்பட்டதேயாகும். ஏனெனில் போலி நிலையில் இருந்து சிந்திக்கின்ற இன்றைய நிலையில் இதுவே நிலையாகின்றது. இந்தப் போலியுணர்வானது ஒரு சமூக வட்டத்தினுள் தொடர்ந்து உலவவும் அந்தச் சமூக அமைப்பை பாதுகாத்துக் கொள்ளவும் துணைபுரிகின்றது. இங்கே குறிப்பாக மதமானது போலியுணர்வை வளர்க்கின்ற காரணியாகின்றது. மதத்தின், கடவுள்களின் தொழிற்பாடுகள், சடங்குகளின் தொழிற்பாடுகள்

வெவ்வேறானவையாகும். இத் தொழிற்பாடுகள் ஒவ்வொரு சமுதாயத்திலும் இருந்து மாறுபடுகின்றன. மதத்தின் தொழிற்பாட்டை விபரிப்பதற்கு பல்வேறு கோட்பாடுகள் இருக்கின்றன. ஆனாலும் மதத்தை முழுமையாக விளக்கம் கொடுக்கின்ற ஒரு கோட்பாடு மார்க்சியமாகும். இந்தச் சமுதாயத்தை பாதுகாத்துக், மயக்கத்தை அளிக்கக் கூடிய நிலையை அபினுக்கு (மார்க்ஸ்) ஈடாக ஒப்பிடப்படுகின்றது.

சமுதாயத்தின் பல்வேறு முனைகளில் இருந்து பெறப்படுகின்ற சிந்தனையானது, தமிழ் மக்கள் மாத்திரம் போலி உணர்வுகளுக்கு உட்படாமல் விதிவிலக்காக இருக்கமுடியாது. அப்படி இருப்பதும் சாத்தியமன்று. தமிழ் மக்களிடையேயும் தேசிய (வர்க்க உணர்வற்ற) மத ரீதியான போலியுணர்வு பதிந்துள்ளது. அவர்களும் தமிழ் தேசியத்தை வைத்துக் கொண்டு ஒடுக்குவதில் சிங்கள தேசியத்திற்கு நிகராக உள்ளவர்கள் தான். ஆனால் ஒடுக்கு முறைக்கு எதிராக போராடுகிறது என்ற தன் காரணமாக, இது எம் பார்வைக்கு மறைக்கப்படுகிறது. ஆனால் அவை ஆபத்தானவை என்பதை மறந்து ஒடுக்கப்படுகிறார்கள் என்பதற்காக அதனைக் கவனிக்காது விடுவது பாட்டாளி வர்க்கத்திற்கு பாதகமானதாகும். இதனால் முதலாளி வர்க்கத்திற்கு உதவி புரிகிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

இதே போல் தான் முழுச் சிங்கள மக்கள் இனவாதிகள் எனக் கருத முடியாது. தற்பொழுது சிங்கள மக்களை பிரதிநிதிப்படுத்துபவர்கள் வர்க்கத்தில் இருந்து தான் அவர்கள் பார்க்கப்படுகின்றனர். ஆனால் இதனை அடிப்படையாகக் கொண்டு முழு மக்களையும் ஒரே அளவுகோல் கொண்டு பார்க்க முடியாது. சிங்கள மக்கள், தமிழர்கள், தமிழ் பேசும் இசுலாமியர்கள் இவர்கள் அனைவரும் போலி உணர்விற்கு ஆட்கொண்டுள்ளது இந்தச் சமூகத்தின் நியதியே. எந்த சிந்தனை மக்களை ஆட்கொண்டுள்ளதோ அந்தச் சிந்தனையே அவர்களை ஆட்கொண்டிருக்கும், அதன்படியே முடிவுகளும் எடுக்கப்படுகின்றன.

கட்டுக் கதைகள் சமுதாயத்தின் அனைத்து விழுமியங்களிலும் காணப்படுகின்றன. இவற்றை போக்கி அறிவார்ந்த வெளிச்சத்தைக் கொடுக்க வேண்டியது மனித நேயத்தை நேசிக்கின்ற அனைவரினதும் முக்கிய கடமையாகும். தமிழ் இலக்கியத்தை, வரலாற்றை படிக்க முற்படுகின்ற போது சமய இலக்கியங்களையும் படிக்க வேண்டியுள்ளது. இவைகள் சமய இலக்கியம் என்பதற்காக அவற்றில் உள்ளடக்கம் போலிக் கருத்தைக் கொண்டு இருப்பதனால் அதனை படிக்காது விடமுடியாது. மாறாக அவற்றை படித்தல் வேண்டும் அவற்றிடையே இருக்கின்ற மாயையை அகற்றி விஞ்ஞான அறிவியலை கண்டடைவது சவாலாகும்.

இலங்கையில் முழுவதும் பல்வேறு கடவுள்களை பல்வேறு மக்கள் வணங்கி வந்திருக்கின்றனர். இது காலத்துக்கு காலம் மாறுபட்டு வந்துள்ளதை அறிவியல் வெளிப்பாட்டின் மூலம் அறிந்து கொள்ள முடியும். ஆனால் இதனை

மதச் சிந்தனை கொண்டு பார்க்கின்ற போது நிச்சயம் முரண்பாடு கொள்ளவே இடமுண்டு. இவ்வாறு எழுதுவது கூட சாத்தானின் வேலையில் ஒன்று எனவும். இவர்களிடம் சாத்தான் குடி கொண்டிருக்கின்றது. கடவுளை விசுவசிக்காதவர் மூளையில் இவ்வாறான சிந்தனை தான் வரும். இவர்கள் உருப்படியாக எதனையும் எழுதமாட்டார்கள் என மதத்தின் மைய நிலையில் இருந்து பார்ப்பவர்கள் இவற்றிற்கு எதிராக கருத்துக் கூறுவர். ஆனாலும் இவர்கள் சுரண்டும் பொருளாதாரச் சிந்தனையை பாதுகாக்கின்றனர். பாதுகாப்பதன் மூலமாக தாம் சுரண்டப்படுவதையும், தமது தாழ்ந்த நிலைக்கு. இந்தச் சமூக அமைப்புக் காரணம் என்பதையும், இன்று வரை ஏற்கத் தயாராக இல்லாத நிலை தான் உண்டு. இதனை சாதாரண மக்களுக்கு விளக்கம் கொடுப்பது உண்மையில் சிரமமான விடயமாகும்.

சாதாரண மக்களிடையே விளக்கம் கொடுக்கின்ற போது அவர்கள் கொள்கின்ற கடவுள் நம்பிக்கை வேறு, மதங்கள் வளர்க்கின்ற சிந்தனை இந்தப் பொருளாதார அமைப்பை பாதுகாக்கின்றது என்பதை புரியப்படுத்துவதே முதலாவது வேலைத் திட்டமாக இருக்க முடியும்.

மதங்கள் என்னும் போது

1. கடவுள், புனித நூல்கள், வழிபாட்டு வழிமுறைகள் அமைந்தாகும். கடவுள் இல்லாத மதப் போதனை கொண்ட புத்தமதம்.
2. சைவ, வைணவத்தில் தனிக் கடவுள் இல்லை.
3. பல மதக்குழுக்கள் (sects)
4. தனியே பில்லி, சூனியம், மந்திரவாதம் ஆகியவை கொண்ட கடவுள் வழிபாட்டு முறைகள் கொண்ட மக்கள் இனங்கள் கொண்டுள்ள நம்பிக்கைப் போக்கு என்பனவற்றில் அமைந்து கொண்டதே முழு மனித இனமாகும்.

இவ்வகையான பிரிவைக் கொண்ட கடவுள் நம்பிக்கை கொண்ட உலகப்பார்வை இருக்கின்ற போதும் இவை ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று அங்கீகரிக்காத போக்கும் காணப்படுகின்றது. இதன் காரணமாக வெவ்வேறான உலகப் பார்வை இருப்பினும் மனித வரலாற்றில் பல்வேறு வளர்ச்சிகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதே சமய தத்துவங்கள்; சிந்தனைகள் என்பதை பிரித்து அறிவியல் வழி காட்டுவது இலகுவான விடயமல்ல. இங்கு தான் கடவுள் வேறு. மத சிந்தனை வேறு எனப் பிரித்துப் பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையை புரிய வைக்க முடியாவிடின் அடுத்த நிலையை அடையமுடியாது. இந்த நிலை காரணமாக மக்களிடத்தில் உரையாடுகின்ற போது யேசுவும் இந்தச் சிந்தனையைத் தான் கூறினார் நாமும் இதனைத் தான்

கூறுகின்றோம் என்ற அணுகுமுறையும் பாவிக்கப்படுகின்றது. இந்த அணுகுமுறை என்பது இலகுவில் பிற்போக்குச் சக்திகளால் உள்வாங்கப்படும். இது ஒரு குழப்பல் நிலையாகும். சோவியத் நாட்டில் இந்தியப் போராட்ட வீரர்கள் என்ற புத்தகத்தில் அன்றைய லெனின் தலைமையிலான புரட்சியாளர்கள் இதே மாதிரியான அணுகுமுறையைக் கொண்டிருந்தனர். இசுலாமிய மதமானது ஏழைகளிடம் பறிப்பதையும் பகிர்ந்து கொடுத்து வாழ்வதையும் வலியுறுத்துவதாகவும் கூறி இசுலாமிய மக்களின் பார்வையை திருப்ப முனைந்தனர். ஆனால் இந்தப் பார்வையை வைத்துக் கொண்டே இசுலாமிய பிற்போக்குச் சக்திகள் மக்களை புரட்சிக்கு எதிராக திருப்ப முனைந்தனர்.

இவ்வாறான அணுகுமுறை என்பது இன்றைய காலத்தில் பாவிக்க முடியாது. இன்றைய காலமானது அன்றைய காலத்தினைப் போல் அல்லாமல் தொழில் நுட்பத்திலும் பல்வேறு சிந்தனை தொழில் நுட்ப வளர்ச்சியின் ஊடாக முட்டி மோதுகின்றன. இதன் மூலம் வெவ்வேறான கருத்துக்கள் பரவுகின்றன. இதன் மூலமாக இயங்கியல் பொருள்முதல் வாதத்தை சரியான முறையில் முன்வைத்தல் அவசியமானதாகும். இதன் காரணமாக எந்த வேலைத் திட்டத்தை முதன்மை கொள்வது என்று முரண்பாடு கொள்ள இடமுண்டு. முழுமையாக மக்களின் கடவுள் நம்பிக்கை, மதச் சிந்தனை இவை இரண்டையும் ஒரே போக்கில் கொண்டு தாக்குதல் நடத்துவது சாத்தியமா என்ற நிலையை ஒருமித்த கருத்துக் கொள்வதில் நிச்சயம் முரண்பாடு கொண்டாலும், இந்தச் சமூகத்தின் சுரண்டும் வர்க்கச் சிந்தனையை அம்பலப்படுத்தும் போது மதம் போதிக்கின்ற சுரண்டும் வர்க்கச் சிந்தனையை அம்பலப்படுத்தித் தான் ஆக வேண்டும் இங்கு எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. சுரண்டும் வர்க்கச் சிந்தனையையும் மதசிந்தனையையும் அம்பலப்படுத்தும் வகையில் அமைந்த வேலைத்திட்டத்தினை முன்வைத்தல் வேண்டும்.

மக்களுக்கு கஸ்டம், துன்பம் வருகின்ற போது முன்னர் சமூகமயப்பட்டிருந்த சிந்தனையும் ஒன்று சேர்ந்து அவர்களை கடவுளிடம் சரணடைய வைக்கின்றது. போராட்டக் காலத்தில் வாழ்கின்ற மக்கள் மீது தொடுக்கப்படும் உளவியல் அழுத்தத்தைப் பயன்படுத்தி பல்வேறு மதப்பிரிவினர் ஊடுருவுகின்றனர். இங்கு கடவுள் பயம் இருப்பதால் மக்கள் அந்தக் கடவுளிடம் சரணடைகின்றனர். இங்கு கோயில்கள் பங்களிப்பு என்பது இரண்டாம் நிலைக்குச் செல்கின்றது. குறிப்பாக பெந்தக்கோஸ்ட் மதக் கிளையினருக்கு அல்லது புதிய (Sect) குழுக்களுக்கு பாரம்பரியமான கோயில்கள் அல்லது கடவுள் உருவங்கள் கிடையா. ஆனால் இவர்கள் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளனர். இன்று எமது தேசத்திலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் தம்மிடையே ஏற்படும் இருப்பின் மாற்றத்தினால் கடவுளிடம் சரணாகதியடைகின்றனர்.

வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு முறைகளை கொண்டு தமது மனதில் அமைதியை ஏறப்படுத்த முனைகின்றது. பாட்டு, செபம், பிரார்த்தனை, விரதங்கள், போன்றவற்றின் மூலம் தமது மனதில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இறைவனுக்கு பயமுள்ளவர்களாக இரங்கி அழும் போக்கு. போன்ற ஒரு வட்டத்தின் உள் இந்த சமய வழிபாட்டு முறை அமைந்து கொள்கின்றது. எதற்கு எடுத்தாலும் நீ விசுவாசம் அற்ற காரணத்தால் தான் இது உனக்கு நடைபெறுகின்றது என்ற மனோநிலையை பாதிக்கின்ற வகையில் அமைந்து விடுகின்றது. கவலையை வளர்ப்பது என்பது பலவேறு பட்ட சமூகங்களைப் பொறுத்த வரை பாதிப்புக்கள் என்பது பலதரப்படும். இந்த கவலையை ஏற்படுத்தும் போக்கின் காரணமாக மனேவியல் என்பது பாதிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய சமூகத்தையும் எமது தேசங்களையும் எடுத்துக் கொண்டால் இரண்டு முரண்பட்ட சமூகமாக இருக்கின்றது. ஆனால் இவை இரண்டுக்கும் இடையே ஒரே ஒருமைப்பாடு காணப்படுகின்றது. எமது தேசங்களை எடுத்துக் கொள்கின்ற போது பகுத்தறிவு வெளிச்சம், மதத்திற்கு வெளியில் இருந்து சிந்திக்க முடியாத போக்கு இருக்கின்ற நிலையும் மதத்திடம் இலகுவாக சரணடைய முடிகின்றது. அந்தச் சமூகத்தில் நடைமுறை வாழ்க்கையின் பிரச்சினைகளை மதத்தின் வட்டத்தில் இருந்து பார்க்கின்ற பார்வைகளும், பிரச்சினைக்கான தீர்வுகளும் பெறுகின்ற நிலை இருந்து கொண்டிருக்கின்றது.

மேற்கு தேசங்களை எடுத்துக் கொண்டால் எம்மவர்களிடையே கலாச்சார மாற்றம் பொருளாதார நிலை காரணமாக பழைய சமூக உறவுகள் உடைகின்றன. முன்பிருந்த தார்மீகக் கடமை என்பது சுமையாக தோன்றுகின்ற நிலைகள், (பிறநாடுகளில் உழைப்பாளிகள் என்ற பகுதியில் இதனை விரிவாக பார்க்கலாம்) தனித்துவப்படுத்தப்பட்ட வாழ்க்கைக்கு (Transfer period) மாறுகின்ற காலத்தில் ஏற்படுகின்ற குழப்ப போக்கு, அவர்கள் வாழ்க்கை வட்டத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை புரிந்து கொள்வதற்கு மதத்திடம் விடைகாணுகின்ற நிலை தோன்றுகின்றது. இரண்டும் வித்தியாசமான சமூகம் ஆனால் இரண்டிலும் சமூக உறுப்பினர்களின் உலக வட்டம் என்பது மூடப்படுகின்றது. எமது தேசங்களில் மதத்திற்கு (secularization) வெளியில் இருந்து சிந்திக்கின்ற சமூகம் வளரவில்லை. ஆனாலும் மேற்கு தேசங்கள் மதவட்டத்தில் இருந்து செயற்படுகின்ற நிலையை விட்டு வெளிவந்துள்ளது, எனினும் முன்னரே மதவட்டத்தில் இருந்து சிந்தித்த மக்கள் மாற்றத்தின் விளைவாக தோன்றுகின்ற குழப்ப நிலையை தீர்த்துக் கொள்ள மதத்திடம் சரணடைகின்றனர்.

மதமானது தனது சிந்தனையில் கேள்விக்கு இடம் கொடுப்பதில்லை. எவற்றையும் முரண்பாட்டுடன் பார்ப்பதில்லை என்ற காரணத்தினால் விவாதத்திற்கு இடம் என்பது இல்லாது போகின்றது. மதம் போதிப்பது

உண்மை என்றாகின்றது. உலகப்பார்வை என்ற நிலை மாறி உண்மை என்ற நிலைக்கு வந்து விடுகின்றது. மதம் போதிப்பது எல்லாம் உண்மை என்றாகின்றது. இது மனிதர்கள் சிறுவர்களாக இருந்து சமூக மயப்படுத்தில் மூலமாக எமது மூளையில் ஏற்றப்படுகின்ற சிந்தனை என்பது மனிதரின் ஆயுள் காலத்திற்கும் தொடர்கின்றது. சிறுவர்களாக இருக்கின்ற போது கேள்விக்கே இடம் இல்லாமல் இருப்பதினால் வளர்ந்தும் மதச் சிந்தனைக்குள் தொடர ஆரம்பிக்கப்படுகிறது.

மேலே கூறியவற்றை சுருக்கமாக கூறுவதுதெனில் ஆன்மீக சிந்தனையின் வளர்ச்சி இதற்கு குறிப்பிட்ட புனித நூல், பூசை செய்யும் வழிமுறை, எல்லாம் நிறுவனமயப்பட்ட ஒழுங்குமுறையைக் கொண்டது. சமயங்கள் போதிப்பது ஆன்மீகவாதம், இது இந்தச் சமூகத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்பதேயாகும். கடவுளின் அல்லது தமக்கு அப்பாற்பட்ட சக்திக்கு பயந்து கொண்ட மக்களின் பில்லி, சூனியம், மந்திரம், பலியிடுதல் போன்றவற்றிற்கு இடையே பெருமிடைவெளி இருக்கின்றன. இதற்கு எழுத்து வடிவம் கிடையாது. இது பரம்பரை பரம்பரையாக கைமாறி வருகின்றது. மந்திர வகைப்பட்ட சக்திக்கு பயந்த போக்கு இருக்கின்ற சமூகத்தில் இருந்து எவ்வாறு தம்மை பாதுகாத்துக் கொள்வதில் இருந்து தொடங்குகின்றது. இதனை மக்கள் அல்லது கிராமிய வழிபாடு எனலாம்.

## 1.4.1 சமயங்கள்

இலங்கையை எடுத்துக் கொண்டால் கிராமிய வழிபாடுகள், கிருஸ்து நாதரை முதன்மையாகக் கொண்டு வணக்குகின்ற, புத்தரை வணங்குகின்ற, சிவனையை மையமாகக் கொண்ட சைவமும், விஸ்ணுவைக் கொண்ட வைணவமும் இசுலாமிப் பிரிவுகளான சுன்னி, சியா பிரிவினரும் இருக்கின்றனர். இவற்றை விட வேடர்களும் இருக்கின்றனர். இந்த வேடர்கள் எந்தச் சமயத்தவரும் அல்ல. இவர்களை எந்த மதப் பிரிவினரும் தமது மதம் என உரிமை கொண்டாடவும் தேவையில்லை. அவர்களை அப்படியே விட்டு விடுவோம் எமது சண்டைக்குள் அவர்களை இணைத்துக் கொள்வதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. அவர்கள் எப்படி வாழ்கின்றார்களோ அப்படியே வாழ்ந்து விட்டுப் போகட்டும். தமிழ் மக்களை எடுத்துக் கொண்டால் பெரும்பான்மையான சமயங்கள் அன்னியர்களிடம் இருந்து பின்பற்றிக் கொண்டதாகும். தமது சொந்த உலகப் பார்வையை (முழுமையாக அல்ல) தவிர்த்து விட்டு அன்னிய உலகப் பார்வையை தமதாக்கிக் கொண்டனர்.

இவர்கள் தமது அடையாளத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தவற விட்டு விட்டனர். ஆனால் இன்று ஒவ்வொருவரும் தாம் கொண்ட சமயமே பெரிதனக் கொள்கின்றனர், சண்டையும் பிடிக்கின்றனர். இந்த அவலத்தை

கணபதிப்பிள்ளை பின்வருமாறு கூறுகின்றார். ''பண்டையத் திராவிட வழிபாட்டு முறை இங்கனமிருக்க வைதிக சமயக் கூட்டத்தார் இக்கோயில்களை எல்லாம் மாற்றி மர வழிபாடிருந்த இடங்களிற் கட்டடங்கள் எழுப்பி அதற்குள்ளே உருவச் சிலைகளைத் திணித்து, இல்லாத பத்தி முறைகளையெல்லாம் கொண்டு வந்து சேர்த்தனர். அதுமட்டுமன்றிப் பார்ப்பனரைக் கொண்டு இல்லாத முறைகளைச் சங்கதத்தில் சுலோகங்களாக ஆற்றி இக் கோயில்களில் பூசைகள், விழாக்கள் நடத்திவருகின்றனர். இவர் செய்கை, பண்டைக்காலத் தமிழர் வழக்குக்கும் அவர் வழிபாட்டு முறைக்கும் மாறானது. (133 க. கணபதிப்பிள்ளை – ஈழத்து வாழ்வும் வளமும்) இந்த நிலை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மாற்றம் பெற்றுவிட்டது. ஆனாலும் சமயம் எது என்பது பற்றி பல கருத்துகள் இருக்கின்றன.

எல்லோரும் சிறிய இனக்குழுக்களின் நம்பிக்கையை மதம் எனக் கொள்வதில்லை. மக்களை முன்னிறுத்திப் பார்க்கும் நிலையானது பின்தள்ளப்பட்டு, இறைவனை முன்னிறுத்தும் போக்கானது வளர்ந்து வந்துள்ளது. மனித குல வளர்ச்சி நோக்கில் பார்க்கும் போது பல விதமான விசித்திர தன்மை கொண்ட தன்மைகளைக் காணமுடியும். சிறு குலங்களாக இருந்த வாழ்ந்த சமூகமானது இயற்கையை ஒட்டிய வாழ்க்கை முறையினைக் கொண்டு வாழ்ந்து வந்தது. அதாவது பிறந்த பிள்ளைக்கு பால்கொடுப்பதா வேண்டாமா? பிள்ளையை தாய் அல்லது அந்தக் குழுவானது தமது குழுவில் அங்கீகரிப்பதா இல்லை என்ற நிலையில் அவற்றை அனாதரவாக விடப்படுமாயின் பிள்ளையின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு அதனை இனம் கண்டு வேறு குழு தனது குழுவில் சேர்த்துக் கொள்ளுதல். மிகையாக குழந்தை இருக்கும் பட்டத்தில் அக்குழந்தையை கொல்வது, பால்கொடுப்பது இயற்கை உரிமையாக இருந்தது. இவைகள் காலம் செல்லச் செல்ல சமூகத்தில் தடுக்கப்பட்ட செயற்பாடாக இருந்திருக்கலாம். அப்படி விடுவது சமூகத்தில் ஒதுக்கப்பட்டு இருக்கலாம். இவைகள் மனிதனுடைய வளர்ச்சியை காட்டுவது எனினும் இவைகளை இன்றைய சமுதாய வளர்ச்சியில் இருந்து அவற்றை எதிர்க்க முடியாது.

இவைகள் எல்லாம் மதப் போதனைகளால் தடுக்கப்பட்டன. இவைகள் மதத்திற்கு எதிரானதாகவும், தண்டனைக்கு உரியதாகவும் கொள்ளப்பட்டது. மதம் என்றால் என்னவென்பது பற்றி ''உலகம் இயற்கைக்கு அதீதமான ஒரு சக்தியினால் கட்டுப்படுத்தப்படுகிறது. அந்தச் சக்தியைப் பலிகளினாலும், பிராத்தினைகளினாலும் வசப்படுத்தலாம் அந்தச் சக்தியை நம்பிக்கையால் உணரலாம் இந்த நம்பிக்கையின் அடிப்படையில் எழுகின்ற உபநம்பிக்கைகளும் செயல்களும் பழக்கங்களும் கொண்ட ஒரிணைப்பே சமயமாகும்.'' (கார்டன் சைல்டு – பக். 17 நா. வானமாமலை – பண்டைய வே. த. வேதம். பௌ.) இந்த இணைப்பு ஏற்பட்டே இன்றைய சமயங்கள் புனிதப் புத்தகங்களைக் கொண்டுள்ளன.

ஆனால் இந்த வரையறுப்பில் மந்திரம், பில்லி (Witchcraft) சூனியம் ஆகியவை உள்ளடக்கப்படவில்லை. ''குலக்குறியை (Totem) வழிபட்டனர். இறந்தவரது ஆன்மாவாகிய ஆவி (Animism), இறந்தவரது அல்லாத இறந்தவரது ஆன்மாவவாகிய ஆவி (Animatism), புனிதப் பொருள் (Fetish-ism) அல்லது ஆற்றல் வாய்ந்த சக்தி வழிபாடு (Mana) ஆகியவை சமயம் (Religion) என்றும் சமயமாக என்றும் இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. (பக். 47 கா. சுப்பிரமணியன் – சங்ககாலச் சமுதாயம்) மற்றைய உலகச் சிந்தனையை பரந்த மனப்பான்மையுடன் அங்கீகரிக்கும் நிலை கூட இங்கு காணப்படவில்லை. இங்கே ஒரு வலிமை மிக்க குழுவானது எது உயர்ந்தது எனத் தீர்மானிக்கின்றது. சமயம் என்பது ஒரு ஆக்கிரமிப்பு வரைவிலக்கணம், அந்த வரைவிலக்கணம் தன்னகத்தே மற்றைய மக்களை அடிமை கொள்ளும் சிந்தனையை கொண்டுள்ளது. ஏனெனில் சமயம் எனக்கொள்ளும் போதே இந்து சமயத்தையும் இங்கு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. இங்கு இந்து சமயம் ஒரு சமயம் இல்லை என்பதில் கருத்துப் பேதம் இல்லை.

கொலனித்துவவாதிகளால் தமது மதத்தையும் இந்திய மதங்களையும் பாகுபடுத்தும் பொருட்டு Heathen =Gentoo எனவும் வரையறுத்துக் கொள்ளும் நோக்கில் (மாற்றுச்சமயத்தினர் – புறயினத்தார்) அச்சொல்லை பாவித்தனர். முன்பு பாரசீகர்களினால் பாவிக்கப்பட்ட சிந்து என்ற சொல்லின் கருவலான ''இந்து'' என அழைத்தனர். கொலனித்துவவாதிகளால் தற்பொழுது இந்து சமயம் எனப்படுகின்ற மதப் பிரிவுகளை குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் அது பல கிளைகளைக் கொண்டது என்பதை குறிப்பாக அடிமை நிலையை நிலைக்க வேண்டும் என விரும்புகின்ற எந்தப் பிரிவினர்களும் ஒவ்வொன்றும் வெவ்வேறாக சுதந்திரமான உலகக் கண்ணோட்டம் என்பதை அங்கீகரிப்பதில்லை என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இந்து சமயத்தை எடுத்துக் கொண்டால் அவர்களிடையே ஒருமையான கருத்துக்களை பெறமுடியாது. ஆனால் அனைத்தையும் உள்வாங்குகின்ற நிலைதான் இந்து சமயத்தில் உண்டு. தமிழர்களுடன் தமிழில் உரையாடுகின்ற போது அவர்கள் எந்த சமயம் எனக் கேட்கும் இடத்தில் சைவம் என்பர். அதனையே ஆங்கிலத்தில் கேட்குமிடத்தில் இந்து என்பர். இந்து எவ்வாறு வந்தது பற்றி கீழத்தேயம் என்ற பகுதியில் பார்த்போம். ஐரோப்பிய அறிவியல் பார்வையின் நோக்கில் கொள்வோமானால் இந்து சமயத்தை ஒரு சமயம் எனக் கொள்வதில்லை. அதனை இனங்களின் (Ethnic Religion) சமயமாகவே கொள்வர் ஏனெனில் பல்வேறு வகையான கடவுள்களும், பல்வேறு வகையான சடங்குகளும், சித்தாந்தங்களும் இருக்கின்றன. சிந்தாந்தங்கள் பல்வேறு காலங்களில் பலரால் எழுதப்பட்டது.

மற்றைய சயமங்கள் போல் தனிநபர் (புத்தர், அல்லா, யேசு) மையமாக இல்லை. சித்தாந்தங்களை வகுப்படுத்தும் போது பல்வேறு இடஞ்சல்களும்

இருக்கின்றன. இதனால் எல்லாச் சித்தாந்தங்களும் ஒன்றைத் தான் போதிக்கின்றது என இலகுவாக கூறமுடிகிறது. இதன் காரணத்தை நா. வானமாமலை பின்வருமாறு கூறுகின்றார்.'' வேதத்தை மறைமுகமாக மறுக்கும் தத்துவங்கள் கூடத் தாங்கள் வேதத்திலிருந்து தோன்றியவை எனப்பெருமையாகக் கூறிக் கொள்கின்றன. இந்தத் தன்மையே இந்தியத் தத்துவ உலகத்தின் ஒரு சிறப்பான தன்மையாகும். புதுமை, பதுமை என்று கூறாமல் பழமையின் அடித்தோன்றியது என்று கூறிக் கொள்வது இந்தியத் தத்துவவாதிகளின் மரபாகும்.(பக்.13 நா. வானமாமலை – பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும்) எல்லாவற்றையும் உள்வாங்குவதும், எல்லாம் ஆரிய வேதத்தில் இருந்து வந்தது என்ற மாயை வளர்ந்திருப்பதும் இதுவும் காரணமாக இருக்கலாம். தமிழ் மக்களின் கடவுள்களைப் பார்க்கு முன்னர் சமயத் உருவாக்கத்தைப் பார்ப்போம்.

## 1.4.2 சிந்தனையின் தோற்றுவாய்

வடதிராவிடம் (பாக்கிஸ்தான்) தென் திராவிட மக்களிடத்தில் தோன்றி வழிபாட்டு முறைகள் என்ன என்பது நிச்சயமாக கொள்ள முடியாதுள்ளது. தமிழ் மக்களிடையே இருக்கின்ற சடங்கு உழைப்பின் பிரிவில் மற்றவர்களின் உழைப்பில் வாழ்கின்ற ஒரு புதிய வர்க்கம் தோன்றுகின்ற வரையில் மந்திரச் சடங்கே முதலாவதாக இருந்திருக்கின்றது. அந்தச் சமுதாயத்தில் கூட்டு உழைப்பின் அவசியமே முதன்மை கொண்டிருக்கும். கூட்டுச் சமூகச் சிந்தனையே சமூக உறுப்பினர்களிடையே அத்தியாவசியாக இருந்திருக்கும். இன்றைய சமுதாயத்தைப் போல் தனிநபர் மாத்திரம் வாழ முடியும் என்ற சிந்தனை ஏற்பட்டிருக்க மாட்டாது. சாதியத்தைப் பற்றிப் பார்த்தபோது கடவுள்களைப் பற்றிப் பார்த்தோம். இங்கே எவ்வகையான நம்பிக்கைகள் இருந்திருக்கின்றது எனப்பார்பபோம்.

இவர்கள் தமது முன்னோர்களின் ஆவியானது (Animism) மரங்களிலும், மலை போன்றவற்றில் உலாவுவதாக என்னிய இவர்கள் இதற்கு உருவமும் கொடுத்தனர். இதனை நடுகல் வணக்கம் என்பர். இதனையே மனித குலமானது வர்க்கங்களாக பிரிவதற்கு முன்னராக இருந்திருக்கலாம் என பல அறிஞ்ஞர்களின் கருத்தாகும். இதற்கு சமயம் என வரைவிலக்கணம் கொடுக்க முடியாது. இது சமயம் வரைவிலக்கணத்திற்குள் இது அடங்கவில்லை. இதற்கு எழுத்து வடிவம் இல்லை, நிறுவனமயப்பட்ட சடங்குமுறை, ஒழுங்குகள் அல்ல. குறிப்பிட்ட நபரினை மையமாகக் கொள்ளவில்லை. ''புராதன காலத்தில் குலக்குறியை (Totem) வழிபட்டனர். குலக்குறி வழிபாடாக, சாவல் மரம், மீன், வில், புலி போன்றவை விளங்கின. இறந்தவரது ஆன்மாவாகிய ஆவி வழிபாடாக (Animism) 'நடுகல்' வணக்கம் அமைந்தது. இறந்தவரது ஆன்மாவல்லாத ஆவிகளான (Animatism) மலை, நதி, ஏரி, சூரியன், சந்திரன் ஆகியவற்றை வணங்கினர். (பக்.45 கா.

சுப்பிரமணியன் – சங்ககாலச் சமுதாயம்) இதுவே மனித நாகரீகம் அடையும் முன்பாக இருந்த கடவுள் வணக்கங்களாகும். ஆனால் இது ஒரு குறிப்பிட்ட கடவுளைக் கொள்ளவும் இல்லை. இதன் காரணமாகவே கடவுள்களின் பெயர்கள் இந்தக் காலத்தில் முக்கியத்துவம் பெறவில்லை எனலாம். இதற்கு அடுத்த கட்டமே மந்திரத்தை மையமாகக் கொண்ட வழிபாட்டு சடங்குமுறை உருவாக்கம் பெற்றது. இந்தச் சடங்கின் போது புனிதப் பொருட்கள் முக்கியத்தும் பெற்றது எனலாம். இங்கு மந்திரம் குலத்தின் மந்திரவாதி முக்கிய இடத்தைப் பொறுகின்றனர். புனிதப் (Fetishism) பொருட்கள் என்பது தம்மிலும் பார்க்க அப்பாற்பட்ட சக்திக்கு பயத்தின் நிமித்தம் கொடுக்கப்படுகின்ற பொருட்களாக இருக்கும். இவை புனிதத் தன்மை கொண்டதாக இருக்கும். முதலில் தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் புனிதத்தன்மை கொண்டதாக இருப்பதாக கருதுவது.

இதற்கு அடுத்த நிலையே மந்திரவாதிளை மையமாகக் கொண்ட சடங்கு முறையைக் கொண்ட வழிபாடாகும். குலத் தலைவர்கள் எனப்படுபவர்கள் மாயவாதிகள், (தேவராளன், தேவராட்டி) மந்திர வாதிகள், ஆவியுடன் கதைப்பவர்கள், மறுவுலகத்திற்கு கடந்து சென்று சக்தியை பெறுபவர்கள் (முன்னோர்களுடன் கதைப்பது ) போன்ற சிந்தனையின் கீழ் அன்றைய குலச்சமுதாயத்தின் கீழ் செயற்பட்டவர்கள். இதனை பண்டைய கால உலகக் கண்ணோட்டத்தை வகைப்படுத்தும் போது (Shaman) இயற்கை சடங்கு வகை என்பர். இதில் இருந்து வளர்ச்சியடைந்தது தான் கிராமிய வழிபாடாகும். இவற்றுடன் ஆடல்பாடல்கள் அமைந்திருக்கின்றன. இவ்வாறான வளர்ச்சியின் ஊடாக உருவாக்கப்பட்டது தான் கோலமாகும். ''கோமாளி, தலைவன், அந்தணன் மற்றும் பறையறிவிப்போன் அணியும் ஒப்பனையைக் 'கோலம்' என்று அவர் அழைத்தார். மலபாரில் அச்சொல்லே இன்றும் வழக்கில் உள்ளது. தெய்வத்தை சாந்தி செய்து பூசிப்பதற்கும், வெளியாடுவதற்கும் பயன்படும் இடத்திற்கு களம் என்று பெயர். (பக்.4 பதிப்பாசிரியர் வானமாமலை மக்களும் மரபுகளும்) இவ்வாறான ஆடல் வகைகள் தான் காவடியாகும். காவடியும் பண்டைய காலத்தில் இடம் பெற்ற சடங்கின் ஒரு வகையாக இருக்கலாம். இவர்கள் இயற்கையை, தம்மிலும் சக்தி வாய்ந்தது எனப்படுகின்ற சக்தியை இதன் மூலம் ஆத்திரத்தை தணித்துக் கொள்ளலாம் என நம்பினர். வழிபாடுகளும், சடங்குகளும் கடவுளுக்கு சமர்பிக்கவும் வீர விளையாட்டுக்கள், போன்றவற்றை செய்தும் கடவுளின் கோபத்தை குறைப்பதாகவும், நன்றிக் கடனாகவும் செலுத்தினர்.

இதற்கு அடுத்த நிலையாக சமுதாயத்தில் வணக்க முறைகள் உலகக் கண்ணோட்டம் எல்லாம் மாற்றம் பெற்றுக் கொண்டன. உழைப்பில் இருந்து ஒரு பகுதியினர் விடுதலை பெறுகின்றனர். இது உபரி உற்பத்தியின் மூலமாக ஏற்பட்ட வர்க்க நிலையின் அடுத்த கட்டமாகும். இங்கு அகத்தை முதன்மைப்படுத்துவதா அல்லது புறத்தை முதன்மைப்படுத்துவதா என்ற நிலை தோற்றம் பெறுவதன் முதல் வளர்ச்சி நிலையாகும். இங்கு மனிதர்களிடம்

எவ்வாறு சிந்தனை தோற்றம் பெறுகின்றது எனப்பார்ப்போம். மனிதனுடைய உலகப்பார்வை எவ்வாறு மனித வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது என்பது முக்கியமான ஆய்வுப்பொருளாகும். மனிதனுடைய முதற்படி அவனுடைய அனுபவவாயிலாகப் பெற்றவையாகும்.

இவைகள் அனைத்தும் அறிவுள்ள அல்லது பகுத்தறிவிற்குட்பட்டதாக இருக்க வேண்டியதில்லை. சமயம், வாழ்வு, நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. "ஒவ்வொரு குறிப்பிட்ட மக்களினத்திலும் பொருளாதாரம் தான் அதனுடைய வாழ்க்கையையும் உலகக் கண்ணோட்டத்தையும் தீர்மானிக்கிறது. அத்தோடு இது தத்துவஞானத்திலும் வெளிப்படுத்தப்படுகிறது. பொருளாதார அடித்தளத்தின் மாற்றத்துடன் சித்தாந்த மேற்கட்டுக் கோப்பும் மாறுகிறது. பொருளாதார வளர்ச்சி சமுதாய வர்க்கங்களாகப் பிரிப்பதற்கும் இட்டுச் செல்லுவதால் குறிப்பிட்ட காலத்திற்கு உரிய வாழ்க்கையும் உலகக் கண்ணோட்டமும் ஒரே சீரான தன்மையைக் கொண்டிருக்கவில்லை வெவ்வேறு வர்க்கங்களில் அது வெவ்வேறாக உள்ளது. அவற்றின் நிலைமை தேவைகள் அவாக்கள் அவற்றின் பரஸ்பர போராட்டத்தின் போக்கு ஆகியவற்றிற்கு தக்கவாறு மாறுபடுகிறது." (ப.101 பிளெஹானவ் மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்) காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த போது மனிதர் இன்றைக்கு இருக்கின்ற முழுமையான அறிவியல் வளர்ச்சி இருக்கவில்லை. அவர்களுடைய அவர்கள் வாழ்ந்த சூழந்நிலைக்கு உட்பட்டதே.

இவர்கள் கொண்டுள்ள உணர்வு அறிவு என்பது குறிப்பிட்ட காலத்தில் உருவானவையும். அது அந்தக் காலத்துடன் காலவாதியாக வேண்டியவையாகும். ஆனால் இவை வாழ்மொழி மூலம் பரம்பரையாக தொடர்ந்தும் சமூகத்தில் நிலைபெற்றுக் கொண்டு வருகின்றன. வாய்மொழி மூலமாக தொடர்ந்து வரும் கதைகளில் அனேக மாயைக் கதைகள் அடங்கியுள்ளன. இவர்கள் கதைகளைச் சொல்கின்ற போது மருவல்கள் ஏற்படுகின்றன. இதனை அனுபவக் கதையூடாக விளக்கலாம் என நினைக்கின்றேன். அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் இளம் சந்ததியினரால் கூத்துப் பாடப்பட்டது இதனை அவதானித்துக் கொண்டிருந்த வயோதிபர் தலையை ஆட்டிக் கொண்டார் அவரிடம் வினாவிய போது பாடிய பாட்டில் தவறு இருக்கின்றது எனக் கூறினார். ஆனால் அந்த வயோதிபர் இல்லாத பட்சத்தில் இளம் சந்ததியினர் பாடிய பாடல் சரியானதாகவும். அவர்கள் பாடிய பாடலே அடுத்த நிகழ்ச்சியிலும் பாடப்படும், அதுவே அடுத்த சந்ததிக்கும் தொடரவும் சந்தர்ப்பம் உண்டு. இவ்வாறாக வாய்மொழி மூலமாக தொடர்ந்து செல்லும் கதைகளில் பலமாற்றங்கள் ஏற்படுகின்றன. இங்கு ஞாபக சக்தி பற்றியும் கவனிக்க வேண்டும் மக்களுக்கு இருக்கின்ற ஞாபகம் குறுகிய காலத்தை. நீண்ட காலத்தில் கொண்டதாக இருக்கும், நிகழும் நிகழ்ச்சிகளும் அவர்கள் கொள்ளும் ஆர்வம் அதன் உள்ளடக்கமும் மாற்றம் பெறும்.

தொடர்ந்தும் கட்டுக் கதைகளை, வரலாற்றுக் கதைகளை படித்துக் கொள்வதில் உள்ள பிரச்சினைகளைப் இங்கு அவதானிப்பபோம். நடந்த சம்பவத்தை அப்படியே ஒப்பித்தல், நடந்ததை இன்றும் மெருகூட்டிக் வர்ணிப்புடன் கூறல், கதையினை குறிப்பிட்ட கருத்து நிலைக்கு ஆதரவாக இருந்து வெளிப்படுத்துதல், கதை சொல்பவர் தன்மை முதன்மைப்படுத்தி அதில் ஒரு பாத்திரமாக காட்டிக் கூறுமிடத்தில் அவரின் அகத்தின் ஆர்வம் என்பது கலக்கப்படுகின்றது. இதனால் கதையில் மிகைப்படுத்தல் காணப்படலாம். அக்கதையைச் சொல்பவரின் சமூக அந்தஸ்து என்ன என்பதும் நிபந்தனையாகின்றது. அவரின் பதவி, பொருளாதார நிலை, ஆணா அல்லது பெண்ணா கதையைக் கூறுவது என்பது கூட கதையின் உள்ளடக்கம் தங்கியிருக்கின்றது. வரலாறு தொடர்பான பெருமையைக் கொண்டதுடன், பெருமைகள் மக்களிடையே ஆளமாக புரையோடியுள்ளது. இந்த நிலையானது கீழ்வரும் பருமன்களைக் கொண்டது.

1. பரம்பரை பரம்பரையாக வாய்மொழிமூலமாக **பாரம்பரியமாக** தொடர்கின்றது. இந்த நிலையானது நாம் விரும்பியோ விரும்பவில்லையோ அவை எம்மீது திணிக்கப்பட்டு வருபவை ஆனால் அவை ஆடல், பாடல், என்பவை மரபுவழியாக பின்பற்றப்பட்டுவருகின்றது.

உ.எல்லாம் **நம்பிக்கைகளும்** உண்மையானவை என பின்பற்றப்பட்டு வருகின்றது.

3. இவைகள் எம்சமுதாயத்தில் காணப்படுகின்ற **புராண இதிகாசங்கள்** ஆகும். இவைகள் எம் முன்னோர்களின் மிகப்பெரிய கதாநாயகர்கள் என வரையறுக்கப்பட்டிருக்கும். மக்கள் தாம் கண்ட அனுவங்கள், சோகங்கள், வீரங்கள் எல்லாம் குல ரகசியங்களாக, மற்றவர்களை விட மேன்மை கொண்டவர்கள் என்ற மனேபாவத்தை உருவாக்கின்றது.

இனி ஆன்மா, கடவுள், மதம் பற்றிய கருத்தானது மனிதரின் அனுபவத்திலிருந்து பிறந்தவைகளே முன்பு பார்த்தது போல் தன்னால் படைக்கப்பட்டதற்கே அந்த மனிதர் அடிமையானார். அதேபோல் அறிவு வளர்ச்சி அடைந்திராத காலத்தில் தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது உருவகம் கொடுக்கப்பட்டவைகளுக்கு அவர்களே அடிமையானார்கள். இவைகள் ஒருமனிதருடைய மனோநிலை சார்ந்ததாகும். மனிதனால் கொடுக்கப்படும் உருவகம் எல்லாம் அவர்களுடைய அனுபவ வாயிலாக பெறப்பட்டதே. அந்த அனுபவங்கள் சித்தாந்தங்கள் சமய நெறிகள் இவைகள் எல்லாம் அந்தந்த காலத்தைப் பொறுத்தே அவைகள் நியாயம் பெறுகின்றன. இங்கு சிந்தனையின் தோற்றுவாய் தத்துவத்தின் வளர்ச்சிக் கட்டமாக சமுதாயத்தில் இடம் பெறுகின்றது. இது பொருளுக்கும், கருத்துக்கும் அதாவது ஆன்மா இடையே உள்ள மாறுபட்ட கருத்துக்களாகும்.

பொருள் தேடுவாரற்றுக் கிடக்கின்ற போது அந்தப் பொருளுக்கு எந்தப் பெறுமானமும், எந்தப் பெயரும் கிடையாது. பொருள் எப்பொழுதும்

தன்னகத்தே ஒரு பொருள் என்ற பெயர் கொண்டிருக்க முடியாது. காட்சிக்கு உள்ளாக்கப் பட்டவை மூளையின் பிரதியீடாக வெளிப்படுகின்றது. இவற்றின் பின்னரே அகமானது மாற்றத்திற்கு தூண்டுகின்றது. பொருள் உணர்விற்கு தாக்குகின்றது, அந்தப் பொருள் எவ்வாறு மனிதரின் பாவனைக்கு அல்லது அனுபவத்தினூடாக அந்தப் பொருளுக்கு பயன் இருக்கின்றது என அறியப்படுகின்றது. அதன் பின்னராக மனிதரின் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகின்ற போது தான் அந்தப் பொருள் பயன்பாட்டிற்கும் மனித தேவைக்கும் உரித்தாகின்றது. இதற்கு வசதியாகவே மனிதர் அப்பொருளுக்கு பெயர் சூட்டுகின்றார்கள். ''இவ்வாறு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பொருள்களின் வடிவங்களுக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று, அறிவு தொடர்பானது. இந்த அறிவு உற்பத்தியின் முந்தைய நடைமுறையில் இருந்து பெறப்பட்டது. உற்பத்தியாளர் தன் நோக்கத்திற்கு ஏற்றாற் போன்று உழைப்பின் போக்கை நடத்திச் செல்வதற்கு இந்த அறிவு பயன்படும். இது அதனுடைய புறநிலை அம்சம் அல்லது அறிதல் (cognitive) அம்சம் ஆகும். இன்னொரு அம்சம் உண்டு. அது உணர்வு தொடர்பானது. இந்த உணர்வு, பொருள்களை நுகர்தல் குறித்த முந்தைய நடைமுறையில் இருந்து பெறப்படுவதாகும். அது உற்பத்தி செய்வதற்கான மன உந்துதலைக்கொடுக்கிறது. இது, அதனுடைய அகநிலை அல்லது உணர்ச்சி தொடர்பான (affective) அம்சம் ஆகும்.'' (ப. 12 ஜோஜ் தோம்சன் – மனித சாரம்) பொருள்பண்ட மாற்று உருவாக்கத்தின் போது பொருளின் விலை நிர்ணயமும் இவ்வாறு இடம் பெறுகின்றது. மனிதர்கள் தாம் பெறும் அனுபவம், உணர்வு அறிதல்கள் எல்லாம் நடைமுறை வாழ்க்கையூடாக கிடைக்கின்றது.

மனிதன் தனது வாழ்க்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவை எனப்படுவதால் தனது அனுபவத்தில் இருந்து நடைமுறைப்படுத்த முனைகின்றான். இதன் காரணமாக தனது அறிவிற்கு கட்டுப்பட முடியாதவற்றை அடைவதற்காக சடங்குகள் செய்கின்றான். அவனுடைய அறிவு மட்டுப்படுத்தப்பட்டதாகும். இவைகள் காலநிலை, மற்றும் சூழலை கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. அம்மனிதனுக்கு வரையறுக்கப்பட்ட நிலையிலேயே இவை இடம் பெறுகின்றது. இவைகள் சமூகத்தினால் கட்டுப்படுத்தப்பட்டவையோயாகும். ''புராதனகாலச் சமுதாயத்தில், அறிவியலும் கிடையாது, கலையும் கிடையாது, மந்திரம் (magic) மட்டுமே இருந்தது.'' (ப. 16 ஜோஜ் தோம்சன் – மனித சாரம்) இந்தச் சடங்குகள் இன்று கூறப்படுகின்ற ஆன்மீகச் சிந்தனைக்குள் அடக்கிவிட முடியாது. இன்று எதாவது சம்பவங்கள் நடைபெறுமாயின் கடவுள், விசுவாசம் அற்ற நிலை ஆன்மாவை சுத்தமாக வைத்திருக்க வில்லை எனக் காரணம் கூறப்படும். அன்றைய ஏன், இன்றைய சமூகத்தில் சம்பந்தப்பட்ட நபர்கள் சூனியம் செய்துவிட்டார்கள் என்ற விளக்கங்களே கொடுக்கப்படுகின்றன.

இவைகள் அறிவிற்கு ஒவ்வாதவையாக இன்றைக்கு தோன்றலாம் ஆனால் அவைகள் அன்றைய காலத்தைச் சேர்ந்த மக்களுக்கோ அல்லது இன்றைக்கு

அவர்கள் கொண்ட சிந்தனையே சரியானதாகும். முன்னர் இருந்த அறிவை வைத்துக் கொண்டு இன்றைய காலத்தில் சரியென வாதிக்க முடியாது. ஏங்கெல்ஸ் பின்வருமாறு கூறுகின்றார். ''உணர்வு அறிவு (cognition) சமுதாய உறவுகள் ஆகியவற்றின் ஒவ்வொரு காலகட்டமும் தத்தம் காலத்தையும் நிலைமைகளையும் வைத்து நியாயம் பெறுகின்றது. ஆனால், அதற்கு மேல் அது போவதில்லை. இந்தக் கண்ணோட்ட முறையினுடைய பழைமைத் தன்மை சார்புடையது.'' (ப. 17 லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் – ஏங்கெல்ஸ்) இன்று வரலாற்றை ஆய்கின்ற போது வர்க்கங்கின் வரலாறாகவே பார்க்கின்ற போதே இன்றையச் பிரச்சினைகளை புரிந்து கொள்ள முடியும் இதுவே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும்.

மனிதர்களின் பொருளாதார உற்பத்தி வளர்ச்சி நாகரீகத்திற்கு கொண்டு செல்கின்றது. இவர்களின் பசி தீர்க்கப்படுகின்றது. பசிதீர்க்கப்பட்ட பகுதியினர் திருப்தி கொள்ள முடியாது போகின்றனர். இந்த திருப்பதி இன்மைக்கு விடையாக ஆன்மீகச் சிந்தனை தோன்றுகின்றது. இதன் ஆரம்ப நிலை என்பது தமக்கு கட்டுப்படக் கூடிவற்றிற்கும் தான் படைத்த பொருளுக்கே மனிதர் அடிமைப்படுவதுமாகும். மனிதர் அகத்தில் தோன்றுகின்ற சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்க முற்படுகின்றன. சிந்தனைக்கு அடிமைப்படுகின்ற நிலையின் தோற்றம் போலியுணர்விற்கு ஆளாக்கின்றது. ''பொருளை முதன்மைப்படுத்தி சிந்தனையை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவதை விடுத்து, கருத்து முதல்வாத சிந்தனையானவன் சிந்தனையை முதன்மைப்படுத்தி பொருளை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிடுகின்றான். ''(ப. 16 ஜோஜ் தோம்சன் –மனித சாரம்) ஏங்கெல்ஸ் இதனை **''பருப்பொருள் என்பது சிந்தனையின் உற்பத்திப் பொருள் அல்ல, சிந்தனை என்பது பருப்பொருளின் உன்னதமான விளைபொருளே தவிரவேறில்லை. இது பச்சையான பொருள் முதல்வாதம் என்பது உண்மையே''** (ப. 36 லுத்விக் ஃபாயர்பாகும் – ஏங்கெல்ஸ்) கருத்துக்கும் பொருளுக்கும் இடையே இருக்கின்ற மாறுபாடுகள் போன்று இந்தியாவிலும் தத்துவங்கள் தோன்றின. தத்துவங்கள் பற்பல குறிப்பாக கருத்துமுதல் வாதம், பொருள் முதல்வாதத்தைக் கொண்ட தத்துவங்கள் ஏற்பட்டது எனினும். இந்தத் தத்துவங்கள் பற்பல சமய பிரிவுகளைக் கொண்டதாக அமைந்து கொண்டது. இன்றைக்கு இருக்கின்ற சைவ சித்தாந்தம், வைணவ பிரிவு, பௌத்த, சமணப் பிரிவுகள் என்று பல மதப் பிரிவுகளை உள்ளடக்கிதாகவும் இருந்திருக்கின்றன. இவற்றுடன் கடவுள் மறுப்புக் கொள்கையும் இருந்திருக்கின்றது. இந்த கொள்கைகள் எல்லாம் மதத்தினால் செமிபாடடையப்பட்டுள்ளது. முன்னர் இருந்த பொருள் முதல்வாதம் தன்னுடைய கருத்தை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது போயிற்று. ஆனால் ''பூதவாதமும் அணுக் கொள்கையும் சுபாவவாதமும் பிற்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சிக்கு துணை செய்து அவ்வளர்ச்சியினால் தத்துவமும் வளர்ச்சி அடையக் காரணமாயின (பக்.48 நா. வானமாமலை பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும்) இவ்வாறான

தத்துவ வளர்ச்சி பெற்றிருந்த போதும் எல்லாம் மதங்களுக்குள்ளேயே அடங்கிவிட்டது. இன்றைக்கு அணுவின் கொள்கை அன்னிய நாட்டில் இருந்து வந்தது என்றுதான் இன்றும் பலர் நினைத்துக் கொண்டிருப்பது கவலைக்கிடமானதாகும். அணுவின் பிறப்பிடம் இந்தியா என்பது தான் நவீன காலத்தின் ஆய்வு முடிவாகும்.

இங்கு கடவுள் கொள்கை, சித்தாந்தப் போக்கிற்கு, மதக் கொள்கை போன்றவற்றின் தோற்றப் பாட்டைப் பார்த்தோம் இவைகள் ஒன்றும் வானத்தில் இருந்து குதித்து விடவில்லை. இவைகள் இறைவனின் தூதுவர்களால் இறைவனின் இரகசியங்களாக மக்களுக்கு அறிவிக்கப்படவும் இல்லை. இதனை மார்க்ஸ் பின்வருமாறு கூறுகின்றார். ''சூழ்நிலைகள், வளர்ப்பு ஆகியவை உற்பத்தி செய்த பொருட்களே மனிதர்கள். ஏற்கனவே வேறு சூழ்நிலைமைகளின் மாறுபட்ட மனிதர்கள் என்னும் பொருள் முதல்வாதப் போதனை, மனிதர்கள் தாம் சூழ்நிலைமைகளை மாற்றுகிறார்கள் என்பதையும் கல்வி கற்பிக்கிறவனுக்கே கல்வி கற்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதையும் மறக்கிறது. எனவே, இப்போதனை தவிர்க்க முடியாததாகச் சமுதாயத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிப்பதில் வந்து சேருகிறது. அதில் ஒன்று சமுதாயத்திற்கு மேலாக உள்ளது ().

சூழ்நிலைகளின் மாற்றமும் மனித நடவடிக்கைகளும் பொருந்திப் போவதை, **நடைமுறையானது புரட்சி கரமானதாக** ஆக்கப்படுகிறது என்று மட்டுமே கருத்தில் கொள்ளமுடியும், பகுத்தறிவு ரீதியான அப்படித்தான் புரிந்து கொள்ளமுடியும்.'' (மார்க்ஸ் ப. 96 லுத்விக் ஃபாயர்பாகும். – ஏங்கெல்ஸ்) சிந்தனைகள், வெளிப்பாடுகள் அனைத்தும் வானத்தில் இருந்து ஒன்றும் வந்து விழுந்து விடவில்லை. மாறாக அனைத்தும் இந்தச் சமூக அமைப்பில் (Structure) இருந்து பெறப்பட்டதாகும். இதற்கு மாறாக வெவ்வேறு கோட்பாடுகள் இருக்கின்றன. இந்தக் கோட்பாடுகள் அனைத்தும் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தினை மறுப்பவையாகவும் இந்தச் சமூகப் போக்கை இயக்கம் அற்ற நிலையில் இருப்பதாகவும் வரையறுத்துக் கொள்கின்றன. அதாவது சமூகம் என்பது வாழ்க்கைச் சங்கிலியை அப்படியே மறுஉற்பத்தி செய்கின்றது என்றும் கூறுகின்றது. இந்த வகையினருக்கு பக்கமாக மதவாத கோட்பாடுகள் இருக்கின்றன. இவர்கள் எல்லாம் கடவுளின் அருள், வெளிப்பாடு என கருதிக் கொள்கின்றன.



## 1.4.3 தமிழ் மக்களின் கடவுள்கள்

திராவிடர்களின் கடவுள்கள், ஆரியர்களின் கடவுள்கள் இருந்திருக்கின்றன. தமிழ் மக்களின் கடவுள்கள் ஆரியக் கடவுளின் நின்று மாறுபட்டு வந்துள்ளது. ஆனால் இவை காலப் போக்கில் வித்தியாசங்கள் மருகிவிட்ட காரணத்தால் ஆரியக் கடவுள்களுக்கும் திராவிட கடவுள்களுக்கும் இடையேயான வித்தியாசம் காண்பது சிரமமாகிவிட்டது. ஆனாலும் மக்கள் கிராமங்களிலும் பற்பல பிரசித்தி பெற்ற கோவில்களிலும் பழைய பண்பாட்டு எச்சங்கள் எஞ்சி இருக்கின்றது. இவற்றின் மூலமாக பகுப்பாய்வை மேற்கொள்ள தொடக்க புள்ளியாக இருந்து ஆய்வை மேற்கொள்ள உதவலாம். இக்கடவுள்களை மையமாக வைத்துக் கொண்டு வளர்க்கப்பட்ட சமயங்கள் பல கடவுள்களை உள்ளடக்கியுள்ளன. கிராமிய வழிபாட்டுக் கடவுள்கள் இதன் பொருள் பெரும் மதங்கள் கடவுள்களை உள்வாங்கினாலும் பழமையானது தொடர்ந்தும் நிலைத்து நிற்பதினால் இதனை இன்று கிராமிய வழிபாட்டுக் கடவுள்கள் எனலாம். சித்தாந்தங்கள் உருவாக்கப்பட்ட பின்னர் இருக்கின்ற கடவுள்கள். இதனை சைவம், வைணவமாக பிரிக்கலாம். இதனை விட சமணம், பௌத்தம் ஆகியன இருந்திருக்கின்றன. ஆனால் இன்றைக்கு இந்துக் கடவுள்கள் எனக் கொள்ளப்படுபவைகள் மத்தியில் இருக்கின்ற பிரிவுகளை மாத்திரம் இங்கு பார்ப்போம்.

ஆரியக் கடவுள்கள் திராவிடக் கடவுள்கள் என்ற பிரிவுகள் இருக்கின்றது போலவே அதன் உட்பிரிவுகளிலும் பற்பல உட்பிரிவுகள் இருக்கின்றன. உட்பிரிவுகள் காலப் போக்கில் புறப் வெளிப்பாடுகள், பண்பாடுகளுடனான ஒன்றினைவின் காரணமாக அவ்வகையான உட்பிரிவுகளும் இல்லாது போகின்றது. திராவிடத்தில் இருக்கப்பட்ட உட்பிரிவுகள் என்பது இயக்கர், நாகரின் கடவுள்கள் வழிபாடுகள் என்பது நாகரீகம் அடைந்த மக்களின் வாழ்க்கையிலும் ஆழுமை செலுத்தியிருக்கின்றன. ''மிகப் பழங்காலத்து நாகர் சாதியார் இந்தியாவின் தென்கோடியில் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. நாகபட்டினம் நாகர் கோயில் போன்ற ஊர்ப் பெயர்கள் இதற்குச் சான்றாகும். அன்றியும் மலையாளத்தில், ஈழத்தில் இருப்பது போல 'நாக'வழிபாடு இன்றும் இருந்து வருகிறது. இங்குள்ள ஒவ்வவொரு நம்பூதிரிப் பார்ப்பனர் இல்லத்திலும் அதன் தெற்குப் பக்கத்தில் 'நாக' வழிபாட்டிற்குரிய இடங்கள் காணப்படுகின்றன. இதனால் நாக வழிபாடு இங்கு பண்டைக் காலந்தொட்டே இருந்து வருகிறதெனத் தெரிகிறது. எனவே, இப்பகுதிக்கும் நாகர் காலத்தில் இங்குள்ள நாகர் கோயிலே அரசன் இருப்பிடமாகயிருந்திருக்கலாம். (45 கணபதிப்பிள்ளை – ஈழத்து வாழ்வும் வளமும்) வேதாகமத்தில் (Bible) பழைய ஏற்பாட்டில் பாம்பை மக்களின் எதிரியாகவே வர்ணிக்கப்படுகின்றது. பாம்பினை வணங்குகின்ற முறையைப்

பார்க்கின்ற போது முற்றிலும் மாறுபட்டதாகவே நாகர் என்ற இனக்குழுவினர் வணங்கி வந்துள்ளனர். இன்றும் பாம்பை கொல்வது பாவம் என்றும், பாம்பிற்கு பால் வைப்பதையும் காணமுடியும். நாகம்மாளுக்கு என்றே நயினாதீவில் கோயில் இருக்கின்றன.

திராவிடர்கள் மற்றைய இனங்களைப் போலவே ஆரம்பத்தில் இயற்கையை வணங்கி வந்துள்ளனர். இவர்களுக்கு தேவராட்டி, அல்லது தேவராளன் இனக்குழுவிற்கு தலைமை தாங்கி வந்திருக்கின்றனர். இவர்களின் வழித் தோன்றல்கள் இன்று பல்வேறு பெயரில் இருக்கின்றனர். முன்னர் பார்த்தது போல் மக்களின் ஆரம்பநிலை இயற்கையை நம்பிய வழிபாடுகளே. **குறிஞ்சி** மலையும் மலைசார்ந்த இடத்தில் வாழ்ந்த மக்கள் சேயோன், வேலனை வணங்கினர். வேலன் ஒரு பூசாரியாகவே கணிக்கப்படுகின்றான். இவன் குலத்தலைவனாக இருந்து அந்தக் குலத்தை வழிநடத்துவதும் அவனுடைய கடமையாகும். ''வேலன் மட்டுமே சங்க இலக்கியத்தில் காணப்படும் பூசாரி என்று கருதலாம்'' (பக்.2 பதிப்பாசிரியர் வானமாமலை மக்களும் மரபுகளும்) இந்த வேலன் பிற்காலத்தில் முருகனுடன் இணைத்துப் பேசப்பட்டது. பழங்காலத்தில் வேலை மாத்திரம் நட்டு வணங்கினர். இந்த மக்கள் தேன் சேகரித்தல் வேட்டையாடல், மிருகங்களை பழக்கி வளர்த்தலில் ஈடுபட்டிருக்கலாம். **முல்லை** காடும் காடு சார்ந்த இடங்களும், திருமால், மந்தை வளர்ப்பில் ஈடுபட்டிருக்கலாம்.

**மருதம்** வயலும் வயல்சார்ந்த நிலத்தில் வேந்தனே கடவுளாகும். கடையர், உழவர் போன்ற இனக் குழுவினர் வயல் செய்து வாழ்ந்தனர். இவர்களின் குலத்தலைவர்கள் வேளீர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் மழை வரவேண்டி சடங்கு செய்தனர். ''மீனினம் பெருக வேண்டும் என்பதற்காக, 'ஒத்த மந்திரமாக' நண்டு, இறவு, வாளை போன்றவற்றை நதியிலிட்டு சடங்கு செய்தனர். (23 கா. சுப்பிரமணியன் – சங்ககாலச் சமுதாயம்) **பாலை** வரண்ட நிலங்கள் கொற்றவை தெய்வமாகும். இந்த நிலத்தில் மறவர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் கொள்ளையிட்டே வாழ்க்கையை நடத்தி வந்தனர். பிற்பட்ட காலங்களில் இனங்களுடன் இணைவின் ஊடாக படை வீரர்களானார்கள். கொற்றவையில் வழியில் வந்தவையே அம்மன் தெய்வங்களாகும். ''சங்க காலம் தொட்டுத் தமிழ் மக்களுக்குள் வீரவழிபாடு இருந்து வந்தது. சங்க நூல்களிற் காணப்படும் நடுகல் வணக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் எழுந்த அண்ணர்மார், நாச்சிமார், மதுரைவீரன், கண்ணகை முதலிய தெய்வ வழிபாடுகள் வீரவழிபாட்டின்கீழ் அடங்கும்.(54 கணபதிப்பிள்ளை – ஈழத்து வாழ்வும் வளமும்) இந்தப் பெண் தெய்வ வழிபாடுகள் என்பது மற்றைய இனப்பிரிவினரிடையேயும் பரவியுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. ''கயவாகுவினால் தொடங்கி வைக்கப்பட்ட கண்ணகி விழாவை கயவாகுவினுக்குப் பின்னர் வந்த எல்லா மன்னவர்களும் தொடர்ந்து எடுத்தார்கள் இவ்விழா இன்று ஈழத்திலே கண்டி பெரகராவாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. (பக் 32 ஈழமும் தமிழரும்

அருள் செல்வநாயகம் 1963) தமிழ் மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியின் ஐந்தாவது திணையாகிய **நெய்தல்** கடலும் கடல்சார்ந்த நிலங்களும் ஆகும். இதற்கு வருணன் என்பவனே கடவுளாகும்.

அரசின் உருவாக்கத்தின் பின்னர் அரசர்கள் தமது இடத்தை கடவுள்களுக்கு கொடுத்து விட்டு, ஆதிக்கத்தில் தமது ஆழுமையை அதிகரித்துக் கொண்ட பாப்பணர்களிடம் சரணடைந்து கொண்டனர் எனலாம். இதன் பிற்பாடே பிராமணர்கள் கோயில்களில் பூசை வைக்க தொடங்கினர். ஆனாலும் இவர்களால் தமது ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொள்ள முடியாத நிலை இருந்திருப்பதை இலங்கையில் காணமுடிகின்றது. " தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் நடக்கும் வழிபாட்டுக்கும், கதிர்காமத்தில் நடக்கும் வழிபாட்டிற்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. திருமுருகாற்றுப் படையிலே முருகனுக்கு வெவ்வேறிடங்களிலே வேதாகம முறைப்படி நடந்த வழிபாடுகளும் பழைய திராவிட முறையிலமைந்த வழிபாடுகளும் கூறப்படுகின்றன. ஈழ நாட்டு முருகன் கோவில்களிலே கதிர்காமத்திலும் செல்வச்சந்நதியிலும் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. இரண்டிடங்களிலும் முருகனுடைய விக்கிரகம் வழிபடப்படுவதில்லை, பூசை செய்பவர்கள் பிராமணரல்லாதார், பூசையில் மந்திரங்கள் இடம் பெறுவதில்லை. இவற்றை நோக்கும் போது கதிர்காமத்தைப் போலச் செல்வச்சந்நதியும் மிகுந்த தொன்மையுடையதாக இருக்கக்கூடும். இலங்கையின் வடகோடியில் செல்வச் சந்நதியிலே பிராமணரல்லாதாராகிய தமிழர் முருகனுக்குப் பூசை செய்ய, தென்கோடியில் கதிர்காமத்திலே சிங்களக் கப்புராளைகள் முருகனுக் குப் பூசை செய்வர். (௨௨௯ ஆ. வேலுப்பிள்ளை – தமிழர் சமய வரலாறு) பிராமணர் அல்லாதார் பூசை செய்யும் முறை பல இடங்களிலும் இருக்கின்றது. "ஆகம முறைப்படி நடப்பதில்லை. கதிர்காமத்தில் நடப்பது போன்று வாய்கட்டிப் பூசை செய்பவர். இவ்வழக்கம் மட்டக்களப்பிலுள்ள சில கோயில்களிலும் உண்டு. (64 க. கணபதிப்பிள்ளை – ஈழத்து வாழ்வும் வளமும்) பிராமணர்களின் ஆதிக்கம் என்பது இந்தப் பிரதேசத்தில் அதிக ஆதிக்கத்தை செலுத்தாதது ஆச்சரியத்தைத் தருகின்றது. சாதியத்தை தமிழர்கள் பரப்பியிருந்தால் ஆதிக்கத்தில் இருக்க வேண்டியது அறிவுப் பிரிவினர்களே என்பது இந்தியாவைப் போல் பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்தியிருப்பர்.

மக்களின் இடம் பெயர்வு, அரசாட்சி காரணமாக வெவ்வேறு இனக் குழுக்களின் கடவுள்கள் மற்றைய இனக்குழுவுக்குள் கலந்து கொள்கின்றன. தமிழ்க் கடவுளாகிய அனுமான் வைணவத்தினுள்ளும், விநாயகர் வழிபாடு தமிழின் உள்ளும் கலந்திருக்கின்றன. "பௌத்த சமணச் சிறு தேவதைகளும் அம்மதங்கள் அழிந்து பின்னர், பாமரர் வணக்கத்திற்குரியனவையாயின. ஆனால் அவை உருமாறி, இந்துமத தெய்வங்களோடு ஒன்றி விட்டன. இவற்றுள் ஒன்று விநாயகர். இப்பெயர் புத்தருடைய பெயர்களுள் ஒன்று. வேசாந்தர ஜாதகத்தில் புத்தர் யானைப் பிறவிபெடுத்தார் என்ற கதை கூறப்பட்டுள்ளது.

எனவே புத்தர் பீடங்களிலிருந்த சிலைகளை அகற்றிவிட்டு பிற்காலத்தார் யானைமுகக் கடவுளை வைத்து விட்டனர். அவை அரசமரத்தடியில் இருப்பதும் இக்கூற்றை மெய்பிக்கும் சான்று (143 நா. வானமாமலை – தமிழர் வரலாறும் பண்பாடும்) ஆனால் வினாயகர் சைவத்தில் வந்து செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆனாலும் இது பண்டைய காலத்தில் தமிழர்கள் அல்லது திராவிடத்தில் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும் எனக் கருத வேண்டியுள்ளது.

யாதவர்களின் கடவுளான கிருஸ்ணன் தமிழில் சைவத்தில் மாத்திரம் அல்ல இன்று ஒருமைக் கடவுள் கொள்கை வாதிகளின் கையில் சிக்கி , e;thjjpy;cyhfpdJ .வெவ்வேறு கடவுள் இஸ்ட தேவதைகள் என்று அங்கிகரிக்கப்படுகின்றன. இதன் மூலம் எல்லாம் ஒரே கடவுள்களின் வெவ்வேறு தோற்றம் என மோசடி செய்யப்படுகின்றது. பழைய கடவுள்கள் எல்லாம் இல்லாமல் சென்று புதிய கடவுள்கள் தோன்றுகின்றனர். ஒரு அரசன் தனது ஆட்சிக்கு இசைவாக ஒரு கடவுள் வழி செய்யவில்லை என்றால் அந்த இடத்திற்கு புதிய கடவுள் பழைய கடவுளின் இடத்தை நிரப்புகின்றன. இந்த முடிவிற்கு அந்த ஆட்சி எல்லையில் இருக்கின்ற மக்கள் எல்லோரும் புதிய கடவுள்களை சுயமாகவும், பலாத்காரத்தின் மூலமும் அரசனின் முடிவை பின்பற்றுகின்றனர்.

இதுவரைக்கும் கடவுளின் வித்தியாசங்களை சாதியம் பற்றிய பகுதியிலும் பார்த்தோம். வழிபாட்டில் ஆரியர் மற்றும் திராவிடர்களிலும் பார்க்க வித்தியாசம் இருக்கின்றது. தமிழ் மக்களின் இயற்கை வழிபாட்டு முறைகளாக பழங்கள், இலை, கொடி, உணவு போன்றவற்றை சமைத்துப் படைப்பதும், மிருகங்களை பலியிடும் முறையும் இருந்திருக்கின்றது. இது வளர்ச்சியடைந்த நிலையாகும். இதனை இன்றைய கிராமிய வழிபாட்டுச் சடங்கு வகையைச் சார்ந்ததாகும். இந்த வழிபாட்டு முறைகளுடன் பூப்பெய்துதல், தைப் பொங்கல், குழந்தைகளுக்கு முடியெடுத்தல், பெயர் சூட்டுதல் இறந்தவர்களுக்கு நினைவுநாட்கள் அனுசரித்தல், இழவு கொண்டாடல் இப்படி பல சடங்குகள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் பூப்பெய்தல் கொண்டாடுதல் இன்று சமூகத்தில் இருக்கின்ற விளக்கம் மாற்றமடைந்துள்ளது. தொன்மையான காலத்தில் இருந்து இந்த சடங்கானது அனுசரிக்கப்பட்டு வருகின்றது. பருவமடைதலைக் கொண்டாடும் சடங்கு பொட்ஸ்வானாவில் இருக்கின்ற பழங்குடிகளான புஸ்மன்களுக்கும் (Bushmen) இவ்வழக்கம் உண்டு.

இந்தச் சடங்கானது ஒரு பருவத்திலிருந்து இன்னொரு பருவத்தை அடைவதைக் குறிப்பதற்கும், இயற்கைக்கும் நன்றி கூறும் சடங்காகும். இவ்வாறு தான் தைப் பொங்கலுமாகும் இவைகள் வளம் பெருக்கத்தை குறிப்பனவாகும். ஆனால் பூப்பெய்தல் சடங்கானது நிலப்பிரபுத்துவத்தில் பரம்பரையை தொடருவதற்கு தகுந்த உற்பத்தி சாதனத்தை

அறிமுகப்படுத்தும் ஒரு சடங்காகவே பின்பற்றப்பட்டன. சடங்கு வகைகள் பல உண்டு காலப் போக்கில் அச்சடங்குகளை செய்வதற்கு வரம்புநெறிகள் உருவாக்கப்பட்டன. இதன் பிற்பாடு எழுந்த நிறுவனப்பட்ட அமைப்பு வடிவம் பல கிளைகளை உருவாக்கிக் கொண்டது. இதுவே சைவ, வைணவ சித்தாந்த வழிமுறைகளாகும்.

ஆகம வழிபாட்டு முறை பலநூற்றாண்டுகள் தொட்டு முறைப்படி கடவுள்களை ஏத்தி வழிபடும் முறையாகும். இதற்கு சைவ சித்தாந்தமானது ஆகம முறைப்படி வணங்கக் கோருகின்றன. ஆகமங்களானது கிரியை, ஞானம், யோகம், சரியை என நான்கு பகுதிகள் இருக்கின்றன. சைவமும் தமிழும் ஒன்று என்ற கருத்தின் அடிப்படையில் இயங்குகின்ற வழிமுறைகள் இருக்கின்றன. ஆனாலும் தமிழர்களிடையே பல்வேறு சிந்தனைகள் வள்ளுவர் காலத்திற்கு முன்னர் இருந்திருக்கின்றன. ஆனாலும் இந்தச் சிந்தனைகள் எல்லாம் அழிக்கப்பட்ட பின்னரே இன்றைய காலத்தில் இருக்கின்ற சித்தாந்தங்கள் எம்மிடையே இருக்கின்றன. சைவத்தை வளர்த்தவர்கள் எனப்படுகின்ற பல நாயன்மார் மற்றைய மதக் கொள்கைகளை மூர்க்கமாக எதிர்த்திருக்கின்றனர். "இவர்கள் கி. பி 640 – இல் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் 8000 சமணத் துறவிகளை உயிருடன் கழுமரத்தில் ஏற்றி சித்திரவதை செய்த சம்பந்திமூர்த்தியின் பெயர் சிறப்பாக தென்னிந்தியர்களால் ஒருபோதும் மறக்கக் கூடியதல்ல. (பக் 190 ஜோசப் இடமருகு – பிராமண மதம்) இவருடன் புத்தமதக் கொலையாளியான குமாரிப்பட்டர், கேரளத்தில் பரசுராமர் போன்ற பலருடன் அரசர்களும் இருந்திருக்கின்றனர். மதத்தைப் பரப்ப பலம் பாவிக்கப்பட்டுள்ளதுடன், வெவ்வேறு மதங்களை சாடியும் மூர்க்கமாக வசை மொழி பொழிதலும் இடம் பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட தத்துவத்தில் அகத்திற்கும் (Subjectiv, Purusa), (Objectiv, Prakrit) புறத்திற்கும், இடையேயான கருத்துப் போராட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. "இந்தச் சூத்திரம் வரலாற்று வளர்ச்சியின் எல்லா 'வடிவங்களுக்கும்' இடம் தரக்கூடிய அளவு போதுமான பரிபூர்ணம் பெற்றுள்ளது, அதேநேரத்தில் பல்வேறு சமூக சக்திகளுக்கு இடையேயுள்ள பரஸ்பர செயற்பாட்டிற்கு அப்பால் செல்லும் திறமையற்ற கதம்பவாதம் இதில் சிறிதுமில்லை. இந்த சக்திகள் பரஸ்பரம் செயல்படுவது அவற்றின் தோற்றத்தைப் பற்றிய பிரச்சினைக்கான எந்தத் தீர்வையும் தரவில்லை என்ற உண்மையைக் கூட இக்கதம்பவாதம் அறிந்து கொள்ளவேயில்லை இந்தச் சூத்திரம் ஓர் ஒருமைவாதச் சூத்திரம். இந்த ஒருமைவாதச் சூத்திரம் பொருள்முதல்வாதத்தில் முற்றிலும் தோய்ந்திருக்கின்றது. ஹெகல் ஆன்மாவின் தத்துவஞானம் என்ற தனது நூலில் ஆன்மா தான் வரலாற்றை இயக்கும் ஒரே கோட்பாடு என்று கூறினார். வாழ்நிலை சிந்தனையால் தீர்மானிக்கப்படுகிறது என்ற கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவரால் வேறுவிதமாகச் சிந்திக்க முடியாது.

மார்க்சின் பொருள் முதல்வாதம் எந்த விதத்தில் சிந்தனையின் வரலாறு வாழ்நிலையின் வரலாற்றால் தீர்மானிக்கப்படுகிறது என்று காட்டுகிறது. ஆனால் கருத்துமுதல்வாதம் 'ஆன்மாவின் வளர்ச்சியால் வரையறுக்கப்பட்ட' காரணமாகிய பொருளாதாரக் காரணிகளை அங்கீகரிப்பதிலிருந்து ஹெகலைத் தடுக்கவில்லை. அதேபோல் பொருள்முதல்வாதம், வரலாற்றில் ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்திலும் இறுதிப் பகுப்பாய்விலும் பொருளாதார வளர்ச்சியின் போக்கால் தீர்மானிக்கப்படும் திசையில் செல்லும் சக்தியாக 'ஆன்மா' வை அங்கீகரிப்பதிலிருந்து மார்க்சைத் தடுக்கவில்லை. எல்லாச் சித்தாந்தங்களும் ஒரேபொதுவான வேரை – குறிப்பிட்ட ஒரு சகாப்தத்தின் உளவியலைக் – கொண்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்வது கடினமல்ல. உண்மைகளை மிகச் சிறிதளவேனும் அறிந்த எவரும் உணர்வர்.'' (தடித்த எழுத்து அவருடையதே பிளெஹனவ் – ப 110 – 111 மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்) அகத்தினை முதன்மைப் படுத்துகின்ற ஆன்மீகவாதம், புறத்தை முதன்மைப் படுத்துகின்ற நாஸ்திகவாதம், லோகாயாத வாதம் போன்ற கருத்துப் போராட்டங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் இவை பிற்காலத்தில் எல்லாம் ஒன்றைத் தான் போதிக்கின்றன. பழமையில் இருந்து தான் இவைகள் உருவாக்கப்பட்டன என்ற திரிபுக் கருத்துக்கள் வெற்றி கொள்ளப்பட்டும் பொருள் முதல்வாதம் என்பது தன்னால் இன்றைய காலத்தைப் போல் கருத்தை நிரூபிக்க முடியாது தோற்றும் போயின.

இவ்வுலக வாழ்க்கையில் நிகழ்த்தப்படுகின்ற உலகியல் வாழ்க்கைச் சிறப்பாகிய களியாட்டங்கள், வாழ்க்கையை அனுபவிக்கும் வாழ்க்கை முறை போன்ற மது, மாமிசம் உண்ணல், காதல், வீரம், செல்வம் போன்றவற்றை தகர்த்து இவ்வுலக வாழ்வில் உள்ள நிலையாமையை வலியுறுத்தினர். நிலையாமை என்கின்ற போது ''இந்த உலகம் நிலையற்றது. எல்லாம் அழிந்துவிடும், ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல, பெண்டாட்டி பிள்ளையும் சதமல்ல '' (பக். 123 குரவிக்கரம்பை வேலு – சிந்துவெளித் தமிழகம்) என்ற நிலையாமை போன்ற கருத்தியலை தமிழ்ச் சமூகம் எங்கும் பரப்புவதில் வெற்றி கொண்டனர். இந்த நிலையாமைச் சிந்தனையானது ஆரியர்களிடம் இருந்து பெற்றும் கொண்டதாகவே கருதப்படுகின்றது. இந்தக் கொள்கை புத்த நெறியில் இருந்து இவர்கள் பின்னாளில் கடன் வாங்கினர். சைவத்தவர்கள் புத்த மதத்திலிருந்தும், வைணவர்களும் புத்த மதத்தில் இருந்து தமது சிந்தனைகளைக் கடன் வாங்கினர் என்பதை பல அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்றைய காலத்தில் ஒன்றினைந்த சமயமாக காட்சி தருகின்றது. ஆனரல் இந்தத் தத்துவங்கள் பழைய காலத்தில் எவ்வாறான கவித்துவத்தைக் கொண்டது என்பதை வானமாமலை குறிக்கின்ற கருத்தையும் இங்கு பார்ப்பது பொருத்தமாகப்படுகின்றது. கோதர்களுடைய ''எருமை வளர்ப்பு வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட தோடர்களது நாட்டுப் பாடல்களை வேதத்தின் துவக்க காலப் பாடல்களேடு ஒப்பிட்டால்

இவ்விரண்டிற்கும் பல கூறுகளில் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். இந்தத் தோடர் மக்களுடைய எண்ணங்கள், கருத்துக்கள், ஆர்வங்கள் எல்லாம் வேதகாலக் கலைஞர்களுடைய உணர்வுகளை ஒத்திருப்பதைக் காணலாம். (பக்.17 நா. வானமாமலை – பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும்) கருத்துக்கள் சிந்தனைகள் உருவாக்கமானது தனியே ஆரியர்களின் சிந்தனை தான் எனக் கொள்ள இடமில்லை. இன்றைய சமுதாயத்தில் இன்றைக்கு தேவ பாஷை என்கின்ற சமஸ்கிருத மொழியும், அவர்களின் தத்துவமும் இன்று பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது. வானமாமலையின் கருத்தினை இங்கு பார்க்கின்ற போது வேதத்தை இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

வைணவம் ஆரியர் வழிவந்த வழிபாட்டு முறைபாகும். இதற்கு வேதம் என்பது இருவகைப்படும் சுருதி (Surti) இவை கேட்கப்பட்டவையாகும் மனிதரால் படைக்கப் படாதது. இது ரிக்வேதம், சாமவேதம், (தைத்திரிய சங்கிதம்) யஜுர் வேதம், அதர்வவேதம் ஆகியவையாகும். நினைவில் இருக்கப்பட்டது (Smrti) ஸ்மிர்தியாகும், இது தர்மசாஸ்திரம், (இது மூன்று பகுதிகள் அகங்கராம், வர்ணாசிரமம், அரச நெறி) புராணம் ( 18 மாபுராணம், 18 உபபுராணம்), இதிகாசம் (மாபாரதம் வ.மு 400 – 400) பகவத்கீதை வ.மு 200) வால்மீகிராமாயணம் வ.மு 200 – 200) ஆகியவையாகும். இவைகள் எல்லாம் காலத்துக்கு காலம் உருவாக்கப்பட்டவையாகும். இவைகளில் பல குலங்களுக்கிடையில் நடைபெற்ற போர்களை அவதானிக்க முடிகின்றது.

வேதத்தில் தாசர்களுக்கும் ஆரிய நாடோடிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதல்களைக் காணலாம். ஆனாலும் தனியே இரண்டு இனக்குழுக்களுக்கு இடையே நடை பெற்ற மோதல்கள் மாத்திரம் இடம் பெற்றிருக்க மாட்டா. வேதத்தில் எவ்வாறு தாசர்களை குறிக்கின்றது எனப் பார்ப்போம். ''தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தாசர்களை – (தமிழர்களை) தாழ்த்தி, ஆரிய இனத்தை உயர்த்தவும் (6.19.129) (பக். 50 குரவிக்கரம்பை வேலு – சிந்துவெளித் தமிழகம்) வேதத்தில் மாத்திரம் அன்று பின்னர் வந்த புராண இதிகாசங்களில் திட்டமிடப்பட்ட வகையில் திராவிடர்களை குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தினரை அடக்கி ஒடுக்கும் வகையில் கோட்பாடுகள் அமைத்து செயற்பட்டனர். ஏகலைவனை எடுத்துக் கொண்டால் என்ன, சம்புகனை எடுத்துக் கொண்டால் என்ன மற்றைய சமூகத்தை சகிக்கின்ற போக்கை இங்கே காணமுடியாது. இங்கே சாதிய நெறி என்பது உன்னிப்பாக வலியுறுத்தப்படுகின்றது.

பற்பல குலங்களின் கடவுள்களையும், சிந்தனையையும் தமக்குள் இணைத்துக் கொண்டனர். இந்தப் போக்கு என்பது எக் காலங்களிலும், எல்லா வேளைகளிலும், எல்லா இடங்களிலும் இது நடைபெற்று வந்துள்ளது. ''சில பிரதேசக் கடவுள்களை ஒரளவு வித்தியாசத்துடன் வைணவர்கள் ஏற்றுக்

கொண்டனர். இந்த உண்மையை டி.டி. கோசாம்பியும் சுட்டிக் காட்டுகின்றார். 'எந்தெந்தக் கோத்திரங்களும் வணிகச் சங்கங்களும் எஞ்சியிருந்தனவோ அவற்றிலெல்லாம் பார்ப்பனர்கள் நுழைந்து ஏறினர்..... மேலும், கோத்திர மதச் சடங்குகளையும், மதங்களையும் அவர்கள் சீர்திருத்தவும் செய்தனர். சில கோத்திரக் கடவுள்களை பார்ப்பன கடவுள்களை அங்கீகரித்தனர். அதற்கு முடியாமல் வந்ததும் அந்தக் கடவுள்களுக்கு மதிப்புக் கொடுப்பதற்காக சந்திர மாதத்தின்படி உள்ள புதிய தேதிகளும் நடைமுறையில் வந்தன. தீர்த்தாடனத்திற்கான புதிய மய்யங்கள் புதிய வடிவில் ஆரம்பிக்கப்பட்டன. பார்ப்பனர்களுடைய குடியேற்றத்திற்கு முன்னர் பழைய மதக் கேந்திரங்கள் மட்டுமே இருந்தன. மகாபாரதம், ராமாயணம், புராணங்கள் ஆகியவை அத்தகைய கதைகளால் பின்னப்பட்டவையே. அவர்களுடைய இந்த இணைவு வித்தை சுவையானது. கிருஷ்ணனை மட்டுமல்ல, புத்தரையும் டோட்டமிக் கடவுள்களான மீன், ஆமை (கூர்மம்), வராகம் (பன்றி), ஆகியவற்றையும் விஷ்ணு – நாராயணனின் அவதாரங்களாக்கினர். குரங்கின் முகமுள்ள அனுமான் விவசாயிகளின் முக்கிய கடவுளாகும். அந்தக் கடவுளை வழிபடுபவர்களுடைய ஒரு தனிமதமே இருந்தது. ஆனால் அதனை விஷ்ணுவின் அவதாரமான ராமனின் நம்பிக்கைக்குரிய தாசனாக்கினர்.'

வைணவ மதத்தை எதிர்த்த கோத்திரங்களைக் கைப்பற்றி அழிக்கவும் அவர்கள் முயன்றனர். யமுனா நதியில் உள்ள காளியன் என்ற நாகத்தை கிருஷ்ணன் வென்றதாக பாகவதத்தில் காணப்படுகின்றது. இது அந்தப் பிரதேசத்திலிருந்த நாக வழிபாட்டுக் காரர்களை வெல்வதற்காக உண்டாக்கப்பட்ட கதையாகும். நாகத்தின் மேல் தான் விஷ்ணு துயில்கின்றார் என்ற கதையும் நாக வழிபாட்டுக் காரர்களின் மீது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக புனையப்பட்ட கதைதான். (தடித்த எழுத்து ஆ–ர்– பக். 174–5 ஜோசப் இடமருகு– பிராமண மதம்) வைணவர்கள். உட்பட சைவத்தவர்களும் பற்பல குலங்களின் கடவுள்களையும் கடன் வாங்கியிருக்கின்றனர். ஆனாலும் இன்று வரலாற்றில் மறைக்கப்பட்ட அத்தியாயங்களாகும்.

பக்தி இயக்கத்தின் மூலம் பல திருவிளையாடல் கதைகள் புனையப்பட்டன. இவற்றின் மூலம் சைவத்திற்கு முழு அமைப்பு வடிவமும் கொடுத்தனர். அனைத்து விதமான இனக்குழுக்களின் கடவுள்கள் எல்லாம் இந்தக் காலத்திலே திருவிளையாடலில் புகுத்தியதன் மூலம் வரலாற்றில் திரிபு நிலையையும் ஏற்படுத்தினர். பக்தி இயக்கத்தின் மூலம் இவ்வுலக வாழ்க்கையை விட்டு மறுவுலகத்தைப் பற்றிச் சிந்திக் வைத்தது. சைவம் தனது சித்தாந்தத்தை வளர்த்துக் கொண்ட போதிலும் இன்று சைவம் தனது இடத்தை விட்டு விட்டது. ஆனால் எங்கும் ஆரியச் சிந்தனை என்பது தடிபுதந்துள்ளது. ஆரியச் சிந்தனையானது பக்தி இயக்கத்திலும் புகுந்து கொண்டது. ''பார்ப்பனர்களுக்கு அரசு உதவிகள் கிடைத்தன. ஆனால், (பக்தி) இயக்கத்திற்கு சாதாரண மக்களே பரவலாக ஆதரவளித்தனர். பின்னருள்ள

நூற்றாண்டுகளில் மத நிறுவனப் பிரிவு அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. பார்ப்பனர்கள் ரகசிய தத்துவங்களையும் சமஸ்கிருத மொழியையும் பரப்பினர். பக்தி இயக்கத்தை உடனே புரிந்து கொள்ளுகின்ற முறைகளைப் பயன்படுத்தினர். சாதாரண மக்களுடைய மொழியான தமிழையே அவர்கள் பயன்படுத்தினர். ஆனால் பார்ப்பனர்கள் சாதி முறையைப் போற்றினர். பார்ப்பனர் அல்லாதாரை மத சம்பந்தமான காரியங்களிலிருந்து நீக்கி நிறுத்தினர். தமிழ் சித்தர்கள் சாதியைப் புறக்கணித்தனர். சாதியின் பெயரில் அவர்கள் எவரையும் நீக்கி நிறுத்தவில்லை. பார்ப்பனர்களுடைய பாதுகாப்பிலுள்ள கூட்டு மதத்திற்கு அரசர்களிடமிருந்தோ செல்வந்தர்களான வியாபாரிகளிடமிருந்தோ பொருளும் பாதுகாப்பும் கிடைத்தன. ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோயில்களே மத வாழக்கையின் மய்யமாக விளங்கின. ஆனால் அங்கே மதம் பார்ப்பனியம், பக்தி என இருவகைகளில் இருந்தது.''(பக். 173 ஜோசப் இடமருகு – பிராமண மதம்) இவ்வாறு இடத்தைப் பிடித்துக் கொண்ட பிராமனர்கள் பூர்வீக பூசாரிகளை அகற்றிவிட்டு தாம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டனர்.

இதற்கு தாம் வகுத்துக் கொண்ட வர்ணாசிரமக் கொள்கையானது உற்ற துணையாக இருந்து கொண்டது. இவர்கள் இழிந்த சூழ்ச்சிகளின் மூலமாக தமது எதிரிகளை அப்புறப்படுத்தினர். இதற்கு நவீன காலத்து உதாரணம் நந்தனார். சிவபக்தனான இவர் கோவிலுக்குள் நுழைவதை தடுக்க வேண்டும் என்பதற்காக நந்தியை அகற்றி நாடகமேற்றினர். இதன் மூலம் அவனை கோயிலுக்கு செல்ல விடாது தடுத்தனர். இறுதியில் அவனையே கொன்றனர். இவர்களுடைய திட்டமிட்ட ஒடுக்குமுறைத் சித்தாந்தாந்தத்தை எவ்வாறு பிரதியிட்டனர் என்பதை சாதி பற்றிய பகுதியில் பார்ப்போம்.

## 1.4.4 கோயில்களின் உருவாக்கம்

கோயில்கள் கட்டித்தான் மக்கள் தமது பக்தியை இறைவனுக்கு காட்டினர் எனக் கொள்ள முடியாது. இந்த மக்கள் கோயில்கட்டி வழிபடும் போக்கு என்பது வேறு அதனை விட மக்கள் இயற்கையை தெரிவு செய்து தமது வழிபாட்டிடமாகக் கொண்டனர். மக்கள் மரங்களுக்கு கீழ் அல்லது இறந்தவர்களின் கல்லறை மீது தமது வழிபாட்டு இடங்களை கொண்டுள்ளனர். இன்றும் இந்த நிலையைக் காணலாம். ''கோயில் கட்டி வழிபடுந் தெய்வங்களைவிட வீடுகளில் வைத்து வழிபடுத் தெய்வங்களும் பல உள்ளன. கோவில்களில் பூசகர் செய்யும் பூசைக்குப் பிரார்த்த பூசையென்றும் மக்கள் தாமாக செய்யும் பூசைக்கு ஆன்மார்த்த பூசை என்றும் சித்தாந்த நூல்கள் செப்பும் சித்தாந்திகள் இலிங்கங்களை எழுந்தருளச் செய்து தாமாகவே பூசை செய்வது போலத் தமிழ்நாட்டுப் பாமர மக்களும் தங்கள் வீடுதோறும் தெய்வங்களை வைத்து வழிபடுவர். இத்தெய்வங்கள் வீட்டுத்

தெய்வங்கள் அல்லது குலதெய்வங்கள் எனப்படும். ஈழத்திலுள்ள தமிழ் மக்கள் வீடுதோறும் ஒவ்வொரு தெய்வத்தைவாலாயம் பண்ணி வணங்கி வருவர். இவ்வணக்கம் பெரும் பாலும் பண்டைத் திராவிட வணக்கத்தைச் சார்ந்தது. (ப. 64 க. கணபதிப்பிள்ளை – ஈழத்து வாழ்வும் வளமும்) கோயில் என்கின்ற போது பரிசுத்த இடமாக கருதப்படுகின்றது. கோயில்கள் நாகரீகத்தின் வளர்ச்சி என்பதிலும் பார்க்க அநாகரிகத்தின் காட்டுமிராண்டித்தனமாகும்.

காட்டுமிராண்டித்தனம் எனக் கூறக் காரணம் என்னவெனில் திட்டமிட்ட வகையான நீதிமுறை இருந்திருக்க முடியாது. கட்டப்படும் கட்டிடங்கள் மற்றவர்களை விட மேன்மை கொள்ள வேண்டும் என்பதற்காக உழைப்பில் இருந்து விடுபட்ட குழுவினர் தமது செருக்கை காட்ட கட்டப்பட்டவையாகும். கோ என்கின்ற போது அரசனாகும். அவன் குடியிருந்த இடத்தை கோயில் என்றழைக்கப்பட்டது. கோயில் பற்றி பற்பல கருத்துக்கள் இருக்கின்றன. ''யூதரின் பெத்தேல் (Bethal) அல்லது கடவுளின் வீடு புனிதமான கல்லாகவிருந்தது. அது கடவுளின் ஆவி உறையும் இடமாக மாத்திரம் கருதப்படவில்லை. அது கடவுளாகவே கருதப்பட்டது.'' (பக். 46 மு. தெய்வநாயகம் – விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம்) இந்த ஆய்வாளர் தொடர்ந்து கோயிலுக்கும் லிங்க வழிபாட்டிற்கும் ஒற்றுமை இருப்பதாக மேலும் கூறுகின்றார். ''ஜி. யு. போப்பும் தில்லையிலுள்ள இலிங்க வழிபாட்டையும், யாக்கோபு நாட்டிய நினைவுத் தூணையும், ஒற்றுமையுடையன எனக் காணுகின்றார்.'' கோயில் எவ்வாறு வந்தது என்ற ஒரு நிலைப்பாடு இருக்க இலிங்க வழிபாட்டிற்கும் யூதருக்கும் உள்ள வழிபாட்டு ஒற்றுமையை சுட்டிக் காட்டி விவிலியத்தில் காணப்படுவது உண்மை என நிருபிக்கும் போக்குத் தான் மேன்லோங்கி இருக்கின்றது. இங்கு இலிங்கத்தை மாத்திரம் எடுத்துப் பார்த்தல் தவிர்க்கப்பட வேண்டும். இங்குள்ள சிறப்பம்சமே இலிங்கமும் (யோணி) குண்டலினியும் சேர்ந்து இருப்பதேயாகும்.

குண்டலினி, இலிங்கம் ஒன்றாக சேர்ந்திருக்கும் வழிபாட்டுத் தடயங்கள் சிந்துவெளி நாகரீகத்தில் கண்டு எடுக்கப்பட்டு உள்ளது. தூண் நிறுத்துவது பல நாடுகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் தூணும், இலிங்கமும் ஒன்றாக முடியாது. இன்றும் இனக்குழுக்களில் சிலவை இறந்தவர்கள் சமாதிமேல் கல்வைக்கின்றனர். இங்கே நடுகல் வணக்கம் என்கின்ற போது மொழியில் மயக்கம் ஏற்படுகின்றன. நடுகல் என்பதை கல்லை நடும் முறையையும், ஆன்மாவாகிய ஆவி வழிபாடாக (Animism) வணங்கும் முறைஐயும் குறித்து நிற்கின்றன.

கடவுளை அரசுக்கு நிகராக்குகின்ற போக்கு என்பது உடனடியாக ஏற்பட்டிருக்க முடியாது. இது வேலைப் பிரிவினையின் வளர்ச்சியிலேயே தங்கி உள்ளது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டுள்ளது. உற்பத்தி

முறைகளிடையே எற்படும் மாற்றத்தின் ஊடாக அரசு உருவாகிறது. மனித மூளையின் வளர்ச்சி விரிவாக்கத்துடன் முன்பிருந்த கருதுகோள் ஈடாட்டம் கொள்ளப்படுகிறது. அதற்கு மாற்றிடாக புதிய கருத்து இடம்பிடித்துக் கொள்ளப்படுகிறது. அரசனுக்கும் கடவுளுக்கும் இடையேயான கருதுகோளில் பிரிவினை ஏற்படுகிறது. ஏற்படுத்தப்பட்டு அரசன் கடவுளை தனக்கு மேலே உள்ளவராகக் காட்டி மக்களைத் தன்னகத்தே உள்ள போக்கிற்கு மதத் தலைவர்களையும் உருவாக்க முற்படுகின்றனர்.

இதனூடாக அரசனுடைய (அரசின்) பாதுகாவலாக பூசாரிகள் (மதத்தலைவர்கள்) கூட்டம் செயற்படுவதுடன் அரசைப் பாதுகாக்கும் நோக்குடன் மதச் சித்தாந்தங்கள் வகுக்கப்படுகின்றன. பழைய வாய்மொழி ரீதியாக வழங்கப்பட்ட ஐதீகங்கள் எழுத்துரிவில் வடிக்கப்படுகின்றது. எழுத்துருவில் உருவாக்கப் பட்டவைகள் புனிதமானவையாகவும் பாரம்பரியத்தைக் காப்பாற்று பவர்களாகவும் மதத் தலைவர்கள் உருவாக்கப்படுகின்றனர். புனிதமாக ஆக்கப் பட்டவைகளை தொடர்ந்தும் சமூகத்தில் நடை முறைப்படுத்த அரசின் பக்க உதவி என்பன தாராளமாகக் கிடைக்கப்படுகின்றன. இதன் காரணமாக வளர்ச்சியுறும் மதநிறுவனங்கள் அரசனை விட பலம் பொருந்தியதாகின்றது. இக்கருத்தியலை வளர்க்க நிதி அளித்தவனே அம் மத நிறுவனங்களுக்கு அடிபணிய வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது.

அரச பரம்பரையும் பூசாரி மதக் கூட்டங்களும் தம்மிடையே சமரசம் செய்து கொண்டு ஒருவொருக்கு ஒருவர் உறுதியாக இருந்த செயற்படுவதுடன் தம்முடைய நலன் கருதி பெற்ற ''காணிக்கைப்'' பணத்தைக் கொண்டு யாகம் என்ற பெயரில் இயற்கையை அழிப்பதற்கும் தெய்வஸ்தானம் என்ற பெயரில் கோவிலைக் கட்டவும் இதனால் பலலட்சக் கணக்கான உழைப்பாளிகள் வேலைக் கொடுமையால் கடுமையான உழைப்பால் இறந்தனர்.

இந்தக் கருத்தியல் மட்டத்தினுள் உழன்ற மக்களால் பல நூற்றாண்டுகளாக அந்தச் சேற்றிலேயே கிடக்க முடிந்தது. முடிகிறது. விழாக்கள் சடங்குகள் என்ற பெயரில் மக்களின் நேரத்தை எல்லாம் வீணடித்தனர். இன்னும் சொல்லப் போனால் மக்களின் உபரி என்பது மட்டுப்படுத்தப் பட்டதாகவும், அப்படி உபரி ஏற்பட்டாலும் அவை தர்ம காரியங்கள் என்ற பெயரில் ஆளும் வர்க்கத்திடம் ஏமாற்றம் அடைந்தனர். இந்தக் கண்ணோட்டத்தைப் பாக்கிற பொழுது பழமையான வரலாற்றைக் கொண்ட இந்திய, இலங்கை மக்கள் பழமையைத் தொடர்ந்தும் காப்பாற்றிக் கொண்டு, பாதுகாத்துக் கொண்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது.

## 1.4.5 எந்த மதம் உண்மையானது

ஒடுக்க முற்படுகின்ற தேசிய இனம் என்பது தன்னுடைய இனத்தையும் வளர்வதைத் தடுக்கின்றது. ஏனெனில் முதலாளித்துவ வர்க்கத்தின் நோக்கம் என்பது அதியுயர் லாபமே. இதன் காரணமாக ஏற்படும் திருப்தியின்மை என்பது சமூகத்தின்

பலமட்டங்களில் வெளிப்படும். இவற்றை திசைதிருப்பும் பொருட்டு பல கவர்ச்சிகரமான திட்டங்களை செயற்படுத்துகின்றனர். இரண்டாம் தரபிரசைகளாக நடத்தும் நடைமுறை என்பது கொலனித்துவ ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப் பட்டதாகும். அதாவது இனவாதம். இந்த நடைமுறை என்பது கொலனித்துவத்தைப் பாதுகாக்க நிறையவே உதவியது. இதற்கு கிறிஸ்தவ மதபீடங்களின் ஆசியும் உதவியது. பிசாசுகள், பேய்கள் என வர்ணிக்கப்பட்டவர்கள் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்கள். இதேபோல் தென்னாபிரிக்காவை எடுத்துக் கொண்டால் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வெள்ளையர்கள் தம்மை யூதருக்கு நிகரானதாக கருதியதுடன் தமக்கு கறுப்பின மக்கள் கீழ்படிந்திருக்க வேண்டும் என கிறிஸ்தவ சபையினர் நியாயப்படுத்தினர்.

மத ரீதியான நம்பிக்கை என்பது எமது மக்களிடையே நன்றாக ஊன்றி வளர்ந்துள்ளது. இந் நிலையானது பலவகையிலும் ஒடுக்கும்வர்க்கத்தை பாதுகாத்து வைத்திருக்கக்கூடிய நிலையில் மதத் தலைமைப்பீடமானது ஒடுக்கும் பூர்சுவா வர்க்கத்திற்கு நன்றாகவே உதவிபுரிகின்றது. இன்றைய உலகத்தை எடுத்துக் கொண்டால் மேற்கு, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் மதத்தின் தலையீடு என்பது குறைவாகவே காணப்படுகிறது. முதலாளித்துவத்திற்கு ஏற்றவாறான சமூக அமைப்பை உறவுகளைத் உருவாக்கின்றபோது அதற்கேற்றால் போல் புதிய யுக்திகளின் தேவை அவசியமானதாகும்.

இன்று இருக்கின்ற மதங்கள் தாமே உண்மையான கடவுளை நம்புவதாகவும், தம்மிடம் வந்து சேர்பவர்களே ஆசீர் – வதிக்கப்பட்டவர்கள், உயர்ந்தவர்கள் என்ற நிலையை தோற்றிவித்து மக்களைப் பிரிக்கின்றனர். இங்கேயே மக்களிடையே பாகுபாடுகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்த மதங்கள் கொள்கின்ற சிந்தனையை ஆராய வேண்டியுள்ளது. உலகில் இருக்கின்ற பெரும் மதங்களான சைவம் வைணவம் (இந்து) கிருத்தவம், இசுலாம், புத்தம் ஆகியவை உலகில் இருக்கின்ற சிறு சிறு உலகக் கண்ணோட்டத்தைக் கொண்ட மக்களிடையே ஆக்கிரமித்து அவர்கள் வாழ்க்கையில் ஆக்கிரமிக்கின்றன. ஆனால் இந்தக் கலாச்சார, பண்பாட்டு ஆக்கிரமிப்பு பற்றி அதிகம் கவனத்தில் கொள்வதில்லை. இன்று வளர்ச்சியடைந்த நிலையைக் கொண்டு இருக்கின்ற இந்த மதங்கள் மற்ற மதத்தை, இனக்குழுக்களை தம்மிடம் இணைத்துக் கொள்வதன் மூலம் அந்த இனத்தின் சுயாதிபத்தியத்திற்கு அச்சுறுத்தல் என்பதை இன்றைய சர்வதேச ஒழுக்குமுறை என்பது ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுகின்றது எனலாம்.

இந்தக் கலாச்சார ஆக்கிரமிப்பு என்பது நிறுத்தப்பட வேண்டும். முன்பு குறிப்பிட்டது போன்று தமது மதமே மேன்மையானது எனக் கொண்டு தமது மேலான்மையை நிலைநிறுத்துகின்றன. இந்த மேலான்மை என்பது பொருளாதார சுரண்டலுக்கு ஊடாகமாகின்றது என்பதையும் கவனிக்க வேண்டும். இன்று இந்து சமயம், பௌத்தம், இசுலாம், கிருத்தவ மதம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டால் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் இவைகள் பல்வேறு சமூகங்களின் உலகக்

கண்ணோட்டங்களை உள்வாங்கிக் கொண்டு அவற்றையும் சேர்த்து தாம் இதனைத் தான் பின்பற்றிக் கொள்கின்றோம் எனக் கூறிக் கொண்டு சமரசப்படுத்துகின்றது எனலாம்.

இங்கே சமரசம் எனக் கொள்வது என்னவெனில் சுதேசிய சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டும் அவற்றை ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி கொடுப்பதுமாகும். இந்த நிலையை இந்து சமயத்தில் காணமுடியும். இந்து மதம் என்ன என்பதைப் பார்த்தோம் அங்கு பலவேறு வகையான பிரிவுகள் இருக்கின்றது என்பதைப் பார்க்கின்ற போது இந்த மதங்கள் நானும், நீயும் ஒன்று எனக் கூறிக் கொள்வதில் சந்தேகம் கொள்ள வேண்டி வருகின்றது. இவர்கள் நானும் நீயும் ஒன்று, நாமே மற்றவர்களை விட மேன்மையானவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். இந்த பிரிவினைப் போக்கு மனிதர் பொருளாதாரத்தில் மேன்மை கொண்ட பிற்பாடே ஆன்மீகத்தில் வளர்ந்திருக்க முடியும் என்பதை மனதில் கொள்வதில்லை எனலாம். தமது சிந்தனையே சரியானது எனக் கொள்ளுகின்ற போது எந்த நாகரீகத்தில் இருந்து மனிதர் வளர்ந்து வந்தார்களோ அந்த நாகரீகத்தை மறுதலித்து அந்த நாகரீகத்திற்கு உரியவர்கள் அல்லர் என வாதிடுகின்றனர். இங்கு குறிப்பிட முனைவது என்றவெனில் மனிதர்கள் காட்டுமிராண்டித் தன்மையில் இருந்தே நாகரீகக் கட்டத்திற்கு வந்தடைந்தனர் என்பதே. தாமே நாகரீகத்தின், வாழ்க்கை முறையை அறிந்தவர்கள் என்ற நிலை இங்கே தோற்றம் பெறுகின்றது. இதனை மையவாதம் என்பது இதனை அமைப்பு நிலையில் பார்க்கின்ற போது குறுங்குழுவாதம் என்பர். மையவாதத்தை தொடர்ந்து கொள்ள பாலமாகவும் மேற்குலகத்தின் தொடர்பை மேற்கொள்ளவும் அவர்களின் பக்கபலமாகவுள்ள கிருத்தவ மதத்தைப் விரிவாகப் பார்ப்போம்.

கிருத்தவ மதத்தைத் தவிர்ந்த மற்றைய மதங்கள் கொண்டுள்ள சட்ட திட்டங்கள் அனுஸ்டானங்கள் (norms and values) அதன் உள்ளடக்கக்கூறுகள் முதலாளித்துவப் பொருளாதாரத்துடன் இணைந்து கொடுப்பதில் பஞ்சிப்படும் நிலையானது முதலாளித்துவத்திற்கு உடன்பாடில்லையாகும். இதற்கு மாறாக மூன்றாம் உலக நாடுகளில் இவ்வாறான நிலமைகளை தோன்றுவதை முடிந்த வரைக்கும் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் பொருட்டு பற்பல தந்திரோபாயங்களை வகுத்து செயற்படுத்துகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே போப்பின் விஜயங்களைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும். புதிய புதிய மதக் கிளைகளை உருவாக்க உதவி புரிவதுடன் அவர்களின் சேவைக்கு முழு ஆசீர்வாதத்தையும் கொடுக்கின்றனர்.

இன்றைய நிலையில் பழைய சரக்குகள் மீது மக்களுக்கு அலுப்புத் தட்டிவிட்டது என்ற காரணத்தினால் புதிய சரக்கை சந்தைக்கு விடுகின்றனர். ஆனால் 'புதிய கள் ஆனால் பழைய பிளா' என்ற கதை தான் இன்றைய நிலைமை. போலி உணர்வை வளர்க்க போராட்டக் காலங்களில் இன்று பல மதக் கிளைகள் மக்களின் சலிப்புத் தன்மையைப் பயன்படுத்தி மக்களை தம் பக்கம் உள்வாங்குகின்றன. இது பற்றி விடுதலைத் தலைமைகள் விழிப்பாக இருத்தல் அவசியமாகின்றது. இந்த நிலைதான்

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் நடை பெறுகின்றன. குறிப்பாக பெந்த கோஸ்ட், ஜெகோவா போன்ற அமைப்புக்கள் செயற்படுகின்றன. இவர்களின் பிரதிநிதிகளாக சாது செல்லப்பா. (தந்தை பெரியாரின் பாசறையில் வளர்ந்தவர் என்றும் கூறித்திரிபவர்) தினகரன். குருஸ் திவாகர் போன்றவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

மதங்கள் பல தொழிற்பாட்டை இன்றைய சமுதாயத்தில் நிகழ்த்துகின்றன. இத்தொழிற்பாடுகள் மக்களை மயக்கத்தில் வைத்துக் கொள்ள உதவுகின்றன. முன்னர் குறிப்பிட்டது போல் திருவிழாக்கள், யாத்திரைப் பயணங்கள் என்பன மக்களிடையே ஒரு மன அமைதியைக் கொடுக்கின்றது. இவைகள் அடுத்த பிறவியில் நல்ல மாந்தரார் பிறக்க வேண்டும், தமது பிணியைத் தீர்க்க வேண்டும், அவை தமது பாவங்களுக்காக மனம் வருத்துவதாகவும் இருக்கின்றன. தம்மிடையே ஏற்படுகின்ற கஸ்டங்களுக்கு தமது பிறப்பின் பலனே காரணம் என மதங்கள் போதித்ததை இந்தச் சமுதாயம் தொடர்ந்தும் தாமும், தமது சந்ததியினருக்கும் மறுஉற்பத்தி செய்கின்றனர். இதனால் சமூகமானது ஒரு அமைதிப் போக்கை கொள்ள முடிகின்றது. இவ்வாறே பல நூற்றாண்டு காலமாக எமது சமுதாயம் இருந்து வருகின்றது. இந்த மத அனுஸ்டானங்கள் மூலமாக மக்களை மயக்கும் சக்தி மதங்களுக்கு உண்டு.

இன்று ஏகாதிபத்தியங்கள் தமது தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமாக மனோவியல் போரை தொடர்கின்றது. இந்த நிலையில் புரட்சியின் வேகம் என்பது திசை திருப்பப்படும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. மதத்தை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி பல மாறான கருத்துக்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் கோவில்களில் நுழைந்து கொள்வதை அதிதீவிர வாதம் என விமர்சிக்கப்படுகின்றது. அப்படியாயின் மாற்றீடு என்னவென்று முன்வைக்காது வெறும் விமர்சனம் செய்து விட்டு விடுவதில் புரட்சியை வெற்றி கொள்ள முடியாது. அதற்கு மாற்றுத் தீர்வை முன்வைக்க வேண்டும். மாற்றுத் தீர்வை முன்வைக்காது விமர்சித்து விடுவது பார்ப்பனியத்தை பாதுகாக்கின்ற போக்கைத்தான் நிலைநிறுத்தும். மதங்கள் மீது எவ்வகையான போக்கைக் கடைப் பிடிப்பது. என்பது பற்றி கறாரான பார்வை இருக்க வேண்டும். இதற்கு மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்கின்ற வேகத்தைப் பொறுத்தும், அணிதிரட்டும் அணுகுமுறை நடைமுறைப் பிரச்சினையாகின்றது. மக்களை அரசியல் மயப்படுத்துகின்ற போது மாற்றுக் கலாச்சாரத்தை முன்வைக்கின்ற போதுதான் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

கிருத்தவ மதமானது ஆட்சியாளர்களுக்கு முட்டுக் கொடுப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது. கடந்த காலத்தில் சோவியத் மனம்மாற வேண்டும் என்பதற்காக கோவில்களில் மன்றாட்டு வாசிக்கப்பட்டது. மன்றாட்டு என்கின்ற போது வழிபாட்டின் இடையே நல்லது நடக்க வேண்டும் என்பதற்காக பக்தர்களால் கேட்கப்படும் வேண்டுதலாகும். சோவியத் மனம் திரும்ப வேண்டும் என இலங்கையின் மூலை முடுக்குகளில் பிரச்சாரம் செய்யப்பட்டிருப்பின் சர்வதேச நிலையில் எவ்வாறு செயற்பட்டிருப்பர் என்பதை சிறிது கற்பனை செய்து பார்த்தால்

புரிந்து கொள்ள முடியும். 1979 – இன் பிற்பாடு தற்போதைய போப் (Pope) அமெரிக்காவுடன் சேர்ந்து செய்த சதிகளை ரைம்ஸ் (Times) பத்திரிகை அம்பலப்படுத்தியிருந்தது.

இதனை உத்தம கிருத்தவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். போப்புடன் லேக் வலேசா, றீகன் போன்றவர்கள் (CIA) அமெரிக்க உளவு நிறுவனத்தின் கீழ் செயற்பட்டுள்ளனர். இன்றைய பக்தி மதத்தலைமை சுரண்டும் பொருளாதார அமைப்பை பாதுகாக்கவும், உலகைச் சுரண்டவும் அமெரிக்காவிற்கு துணை நின்றுள்ளது. தொடர்ந்தும் இவர்கள் செயற்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றார்கள். இதற்குத் தான் இந்திய. இலங்கை மக்களின் உழைப்பில் பெற்ற பணம் காணிக்கை என்ற பெயரில் நிதியாகச் செலுத்தப்படுகின்றது. வேளாங்கண்ணியில் பெறப்படும் பெரும் தொகையான பணம் வத்திக்கானுக்கு செலுத்துகின்றனர். இவை பக்தி என்ற பெயரில் இடம் பெறுகின்றன. பக்தி என்ற நிலையான கடந்த 1500 வருடங்களாகவே (பக்தி இயக்கத்தில் இருந்து பெறப்பட்ட இயக்கத்தின் எச்சமும் சமூகத்தில் இருந்தது கவனிக்கத்தக்கதாகும்.) தமிழ் மக்களை மூடப்பழக்கத்தில் தொடர்ந்தும் உயிர்வாழப் பழக்கிவிட்டுள்ளது.

மூட்டுக் கொடுப்பதற்கு வசதியாக அதன் கட்டமைப்பும், மேற்கை மையமாகக் கொண்ட தலைமையாகக் கொண்ட நிறுவன அமைப்பு என்பது துணை புரிகின்றது. பின்வரும் தளங்களில் செயற்படுகின்றன.

1. ஒற்றைத் தலைமையைக் கொண்டது, அதன் கட்டமைப்புக் காரணமாக மேற்கு நலனை நிறைவு செய்ய ஏதுவாகின்றது. வத்திக்கானுடன், ஏகாதிபத்தியங்கள் கொண்டுள்ள நெருங்கிய உறவு.

2. அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டதினால் (பாவசங்கீர்த்தனம்) மனோவியலை சிதைக்க வல்லது.

3. இன்றைய சமுதாயத்திற்கு ஏற்றவாறாக கிருத்தவ மத கருத்துக்களும் முயற்சியும் நடை பெறுகின்றது. இன்று புதிய மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட விவிலியம் தற்பொழுது வந்துள்ளது. விளக்கம் கொடுக்கும் முறை மிகவும் கவனிக்கப்பட வேண்டும். இது வெகுதுல்லியமாக மானிடவியல் பார்வையில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள பித்தலாட்டத்தை அம்பலப்படுத்துவது இலகுவானதல்ல உடனடியாக சாதிக்கப்படக் கூடியது அல்ல. இன்றைய சமுதாயத்தில் போலியுணர்விற்கு அகப்பட்டிருக்கின்றபோதும், பகுத்தறிவுக்கு உட்படுத்தப்படாமல் இருக்கின்ற போது அந்தப் புதிய விளக்கங்களை அவதானிப்பவர்கள் எல்லாம் சரியானதாகவே இருக்கும் இந்தப் போக்கு ஆபத்தானதாகும். எல்லாம் இயல்பானது என்ற கருத்து மிகவும் ஆபத்தானதாகும். ஏனெனில் இன்றைய ஆபத்தான நிலை தொடர்ந்தும் இன்றைய சமூக அமைப்பை பாதுகாத்து நிற்பதாகும்.

மையவாதத்தினை அடிப்படையில் விதைக்கின்ற ஒரு பெரிய மதத்தைப் பற்றி பார்த்தோம். இன்றைய சமுதாயத்தில் மற்றவர்களை தாழ்த்தி நடத்துகின்ற மனோநிலையானது இவ்வாறான மதச் சக்திகளிடம் இருந்தே நாசிச வாதிகள் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஒரு இனத்தை விடமற்றைய இனமே சிறந்தது எனகூறப்படுவது வெள்ளையர் கொண்ட உலகக் கண்ணோட்டத்திலேயே காணக்கிடக்கின்றது. இது இன்றும் அவர்களுடைய வெளிநாட்டுக் கொள்கையில் இருந்து தெரிந்து கொள்ள முடியும். மையவாதத்தின் வரலாற்றுப் போக்கினை கீழைத்தேசத்தின் கீழ் பார்ப்போம். இன்றைய ஐரோப்பிய மையவாதத்திற்கு ஒரு வரலாறு உண்டு. அந்த மையவாத விவாதத்தில் மார்க்சும் பங்காளியாக்கப்படுகின்றார்.

## 1.4.6 கீழைத்தேசம்

ஐரோப்பிய மையவாதத்தின் அடிப்படை கிருத்தவ மதமேயாகும். மையவாதப் போக்கு கிருத்தவ மதத்தில் கொலனித்துவ காலத்தில் பிரயோகிக்கப்பட்டது. அன்றும் கடவுளின் ஆசீர்வாதம் (Blessed) பெறுவது என்ற போர்வையில் "கோமணத்துடன்" இருக்கின்ற மக்களுக்கு உடுப்பினைக் கொடுத்து, பைபிளையும் கொடுத்து இனக் குழுக்களாக வாழ்ந்த மக்களை, அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை, உலகப் பார்வையை சகித்துக் கொள்ளாது விட்டதினால் முன்னர் கிறிஸ்தவ மதவாதிகளும், கொலனித்துவவாதிகளும் நிர்ப்பந்தம் புரிந்து மதத்தைத் பரப்பினர். இனக்குழுக்களின் வாழ்க்கை ஆக்கிரமிக்கப்பட்டு, இனக்குழுக்களின் உலகப் பார்வையை, அவர்களின் கலாச்சார வகைகளை கீழ்தரமானது என ஒதுக்கிவைத்து, அவர்கள் இருப்பு என்பது இன்று அச்சுறுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இந்த இனக்குழுக்கள் ஒவ்வொன்றும் எந்தக் காலத்திலும் அணுகுவது ஒரு பிரச்சினைக்குரிய அம்சமாகவே இருக்கின்றது.

கீழைத்தேச மக்களை காட்டுமிராண்டிகள் எனவும். கொலனித்துவத்தின் விளைவாக இந்தியாவில் மாற்றம் ஏற்படும் என்ற கருத்துக்களை இங்கு பார்ப்போம். இவைகள் இன்று கலாசாலையில் இருந்து வெளியேறுபவர்களால் இக்கருத்துக்கள் பற்றி பலவிளக்கங்கள் கூறப்படுகின்றன. இந்தக் கூற்றுக்கள் எவ்வகையாக எம்மிடையில் விளக்கம் கொடுக்கப்படுகின்றது என்பதை அறிந்து கொள்வது முக்கியமானதாகும். ஏனெனில் இன்றைய நிலையானது குட்டிப் பூர்சுவா வர்க்க அறிஞர்கள் தமது ஏகபோகம் காரணமாக இயங்கியலுக்கு முரணான கருத்து விளக்கத்தைக் கொடுக்கின்றனர். இந்நிலையை வெற்றி பெற வேண்டுமானால் அனைத்து மட்ட (இது கற்பனையானது என ஒதுக்கப்படலாம் அதுவேதான் திரிபுக்கு இடமில்லாத நிலையை உருவாக்கும்.) மக்கள் அவைருக்கும் மார்க்சியம் போய்ச் சேரவேண்டும்.

மார்க்ஸ் பின்வருமாறு கூறுகின்றார் "சாம்ராஜ்யங்களின் வீழ்ச்சியையும், வர்ணிக்க முடியாத கொடுமைகள் விளைவிக்கப்படுவதையும் பெரிய நகரங்களில் மக்கள்

தொகை படுகொலை செய்யப்படுவதையும் சலனமின்றி அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் காட்டு மிராண்டிகளின் தன் ஆணவத்தை நாம் மறந்து விடக் கூடாது.. **இவற்றை, இயற்கைச் சம்பவங்களின் மீது காட்டும் அக்கறைக்கு மேல் எவ்விதமான பரிவும் இன்றி அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.**'' (கோடு இடப்பட்டது ஆ–ர் (மார்க்ஸ் ப. 201 மார்க்ஸ்–ஏங்கெல்ஸ் நூல் திரட்டு தொகுதி 3)

''**இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி**' '**இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்**'' என்ற பகுதிகளில் ஓர் நேர்மையான வரலாற்று ஆய்வாளரின் செயற்பாடே மிதமிஞ்சிக் கிடக்கின்றது. இந்தப் பகுதிகளில் மார்க்ஸ் நவீனமயமாதல், நகர்ப்புறமயமாதல், தொழிற்சாலையில் உழைப்பை விற்கும் நிலை ஏற்படல், உள்கட்டுமான (infrastructure) வளர்ச்சி, சுதந்திரமான தொழிலாளர்களை எவ்வாறு உருவாக்குகின்றது, இப்படிப் பல விடயங்களை எடுத்துக் கூறுகின்றார். இந்த நோக்கில் வரலாற்றில் எவ்வாறான சமூகத் தன்மை கொண்ட மக்கள் அங்கு இருக்கின்றனர் என்பது பற்றிய நிலையில் இருந்தே காட்டுமிராண்டி எனப் பாவிக்கின்றார். தொடர்ந்தும் மார்க்ஸ் கூறும் வரிகளை (என்னால் கோடு இடப்பட்ட பகுதி) விமர்சனம் செய்பவர்கள் வாசிக்காமல் தமது மக்கள் வர்க்க உணர்வு பெற்று உடனடியாகவே போராட்டத்தில் இறங்கி விட்டார்கள் என்பது போல் தோற்றம் கொடுப்பது நியாயம் அல்ல. ஏனெனில் அச்சமூகம் என்பது அதற்கே உரித்தான உலகப் பார்வையை, சமூக நீதி நெறியைக் கொண்டு இருந்ததே காரணமாகும். இதன் காரணமாக அவர்களுடைய தேசிய உணர்ச்சியென்பது, அந்த உறவு முறைக்கு உள்ளடங்கப்பட்டதேயாகும். இங்கு மார்க்ஸ் என்ன உண்மையில் பேசுகின்றார் என்பதை ஆராய ஒரு புத்தகமே எழுத முடியும். மார்க்ஸ் வரலாற்று ஓட்டத்தை சிறு கட்டுரை வடிவத்தில் எழுதியால் எழுகின்ற புரிதல் பற்றிய பிரச்சினையும் முக்கியமாகும். எழுதியவற்றை புரிந்து கொள்ளுவதில் உள்ள சிரமத்தைப் பார்க்கின்ற போது மார்க்ஸ் என்ன உண்மையில் விளக்குகின்றார் என்பதை விளங்கிக் கொள்வதற்கு நீண்ட தேடலில் அவசியமாகின்றது.

கொலனித்துவத்தின் மாற்றம் என்பது எமது தேசங்களில் சுதந்திரமான வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தியது என ஏங்கெல்ஸ் கூறுகின்றார். (கொலனித்துவத்தின் கீழ் பார்க்க) மார்க்சின் இச்சிந்தனைக்கு முனைப்பாக இருந்த சிந்தனைக்கு வித்தாக பல உதாரணங்களைக் காணமுடியும். மார்க்ஸ் முதலாளித்துவ வளர்ச்சியடைந்த நாடுகளிலேயே புரட்சி ஏற்படும் எனக் கூறினார். ஆனால் லெனின் முதலாளித்துவ புரட்சிக் கட்டத்தை அங்கீகரித்து பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் நிறைவேற்றிக் கொண்டு முதலாளித்துவம் வளர்ச்சியடையாத நாட்டில் புரட்சியை நிறைவேற்றினார். எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படவில்லை என்ற மார்க்சின் சிந்தனையோட்டமே அடிப்படையாக இருந்தது. இவைகளை அறிந்து கொள்ள முடியாமல் எடுத்த எடுப்பிலேயே முடிவுக்கு வரும் அணுகுமுறை எவ்வித பிரயோசனத்தையும் தர மாட்டாது.

மார்க்ஸ் கருத்துக் கூறுவதற்கு முன்னர் 350 வருடங்களுக்கு முன்பாகவே கொலனித்துவத்தின் சுரண்டல் ஆரம்பிக்கப்பட்ட மிருகத்தனமாக கொள்ளைகளில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள். சுரண்டலின் மூலம் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, எமது நாடுகளில் சுதந்திரமான வளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னரே கொலனித்துவ வாதிகளினால் நிர்ப்பந்தமாக மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. மாற்றம் ஏற்படுத்தப்பட்ட பின்னராக மக்களுக்கு விடுதலை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஆராய்ச்சியில் இடையறாது மேற் கொண்டிருந்தார். அந்த ஆராய்ச்சியில் எழுந்தவைகள் தான் இந்தக் கோட்பாடுகள். மாறாக தற்போதைய ஆய்வாளர்கள் போல் சடங்கு, சம்பிரதாயத்திற்காக அதன் வழி இருந்து எழுத்தில் ஈடுபட்டவர்கள் அல்ல. மூலவர்கள்.

பழமையில் இருந்து புதிய கட்டத்தை அடைகின்றபோது அவை வரவேற்கப்படுகின்றன. வரவேற்கப்படுகின்ற போது புதியவை எல்லாம் புரட்சிகரமானதாக என்றே, அதுதான் பாட்டாளி வர்க்கத்திற்கு விமோசனம் தரும் என்றில்லை. ஆனால் பழைய நிலையை உடைத்து புதிய நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் அவை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது பற்றிய பிரச்சினையின் போது கடைப் பிடிக்கப்படும் தந்திரோபாயமாகும். இந்த வகையிலேயே மார்க்சின் பார்வையை அணுகப்பட வேண்டும். முதலாளித்துவப் புரட்சியை வரவேற்றாலும், கொலனித்துவம் புதிய நிலைமையை தோற்றுவிற்கும் என்ற கருத்துக்கள் இதனை சுட்டி நிற்கின்றது.

தம்மைத் தவிர மற்றைய மக்கள் எல்லாம் காட்டுமிராண்டிகள் எனவும், கீழ்நிலையானவர்கள் என்ற எண்ணப்பாட்டிற்கு ஆதாரம் பல இடங்களில் காணலாம். இந்தப் பிரச்சினை கொலனித்துவ வாதிகளால் இந்தக் கருத்து முதலில் அறிமுகமாகியது. (எட்வேட் சயிட் (Edward Said) பாலஸ்தீன அமெரிக்கர் இத்தகைய கீழைத்தேசவாதத்திற்கு எதிராக கருத்தை முன்வைத்தார்.) இந்தியர்களைக் குறிப்பிட ''பனியன்'' (Banians) எனப்பாவித்தனர். அத்துடன் தமது மதத்தையும் இந்திய மதங்களையும் பாகுபடுத்தும் பொருட்டு Heathen = Gentoo எனவும் வரையறுத்துக் கொள்ளும் நோக்கில் (மாற்றுச் சமயத்தினர் – புறயினத்தார்) அச்சொல்லை பாவித்தனர். முன்பு பாரசீகர்களினால் பாவிக்கப்பட்ட சிந்து என்ற சொல்லின் கருவலான ''இந்து'' (hindoo) (Von Stietencron- Hinduism Reconsidered) என அழைத்தனர். பாரசீகர்கள் சிந்து வெளிக்கு அப்பால் வசித்து வந்தவர்களைக் குறிக்கப் பாவிக்கப்பட்ட பதமானது பின்னர் 1000களில் பாரசீகர்களினால் முசுலீம்களை தவிர மற்றவர்களை குறிக்கும் பொருட்டு பாவிக்கப்பட்டது. பின்னர் கொலனித்துவ வாதிகளால் தற்பொழுது இந்து சமயம் எனப்படுகின்ற மதப் பிரிவுகளை குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கிருத்தவ மதத்தினரிடையே ஒரு இறைவன் என்ற சிந்தனையினால் மற்றைய மதங்களை ஏற்றுக் கொள்வில்லை இதனால் மற்றவர்களை பாகுபடுத்தும் பொருட்டு பயன்படுத்தப்பட்டது. தம்மையும் எமது தேசத்தவர்களையும் பிரித்து வரையறுத்துக் கொள்ளும் நோக்கில் பாவிக்கப்பட்ட இந்தப் பதம் இழிநிலை கொண்டு அழைக்கவே பாவிக்கப்பட்ட சொல்லாகும்.

ஆதிக்கவாதிகளை எதிர்த்த மூலவர்கள் தனியுடமைச் சொத்தைப் பாதுகாக்கின்ற எந்த அரச இயந்திரத்தையும் ஆதரிக்கவில்லை. மாறாக புதைந்து கிடந்த உண்மைகளை இடையறாது அம்பலப்படுத்தி ஆதிக்கவாதிகளின் ஆத்திரத்திற்கு ஆளானவர்கள் என்பது முக்கியமானது ஆகும். மார்க்ஸ் சமுதாயத்தில் நிலவுகின்ற சிந்தனையின் ஏற்றத் தாழ்வைத் தான் அங்கு குறிப்பிடுகின்றார் எனக் கொள்ள முடிகின்றது. ஏங்கெல்ஸ் சிந்தனைக்குள்ள மாறுபாட்டை குறிப்பிடுகின்றார். **''சிந்தனைக்கும் வாழ்நிலைக்கும் இடையேயுள்ள உறவு, ஆன்மாவுக்கும், இயற்கைக்கும் இடையேயுள்ள உறவு பற்றிய பிரச்சினை-தத்துவஞானம் முழுவதற்கும் இதுவே தலையான பிரச்சினை -காட்டுமிராண்டி நிலைக்குரிய குறுகிய மனப்பான்மை கொண்ட அறியாமையின் பாற்பட்ட எண்ணப் போக்குகளிலே வேர் கொண்டிருக்கின்றது.''** (ஏங்கெல்ஸ் ப.29 லூத்விக் ஃபாயர்பாக்) இந்தப் பகுதியை எவ்வாறு விளங்கிக் கொள்வது இதில் எவ்வித இடத்தையும் குறிப்பிடாமல் கருத்து முதல்வாதத்தினுள் வாழ்கின்ற மக்களைப் பற்றி குறிப்பிடுகின்றார். சிந்தனைத் தளத்தில் மாறுபாடானது மாறுபட்ட மக்களிடையே காணப்படும் அது அந்தப் (அயர்லாந்துப் பயண அனுபவம் ஒரு உ–ம்) பிரதேசத்தின் புவியியலின் தனித்தன்மைக்கு ஏற்ப வித்தியாசப்பட்டிருக்கும். இன்று வறியநாடுகள் பற்றிய அறிவை வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தும் பொருட்டு அறிவுகள் இன்றியமையாதாக உள்ள காரணத்தால் மானிடவியலாளர்களின் உதவி ஒடுக்கும் வர்க்கத்திற்கு தேவைப்படுகின்றது.

ஐரோப்பிய மானிடவியலாளர்கள் எமது தேசங்களுக்கு வந்து ஆய்வுகளை மேற்கொண்டு பல்கலைக் கழகங்களில் தமது ஆய்வுக்கான கருப் (கலாச்சார மாற்றத்தினை புரிந்து கொள்வதற்காக) பொருளாக தெரிந்தெடுத்து எழுதுகின்றனர். இதன் மூலம் பட்டத்தினை பெறும் இவர்கள் ஏகாதிபத்திய பொருளாதார முனைப்புக்களுக்கு இவைகள் உதவுகின்றன. ஐரோப்பிய தேசங்களின் நிலையானது தொலைத்து விட்ட மானிடர்களின் நிலை தான் இதன் காரணமாக எமது தேசத்தவர்களின் பழக்க வழக்கங்கள் அந்நியப்பட்டவையாக இருப்பதனால் மானிடவியலாளர்களின் தொழிற்பாடோ தொலைத்து விட்ட மானிடத்தைத் தேடி கண்டு பிடிப்பதாகும். இவர்களின் தொழிற்பாட்டிற்கும் மார்க்ஸின் மானிட வர்க்கத்தின் மீது கொண்ட கடமையுணர்ச்சிக்கும் நிறையவே வித்தியாசம் இருக்கின்றது.

அத்துடன் மூலவர்கள் எந்த மொழியில் (சொற்பதம், கலைச்சொற்கள் என்பனவும் மொழி பெயர்ப்பாளர் பாவிக்கும் மொழி நடையும் ஒரு பிரச்சினை பற்றிய பார்வையை ஏற்படுத்த முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு கலைச் சொல்லை புதிதாக தமிழில் மொழி பெயர்க்கின்ற போது அந்தச் சொல்லிற்கு தெய்வீக வடிவம் கொடுத்து விளக்கம் கொடுப்பது. அந்தப் பொருள் என்பது ஆச்சரியத்திற்கு உரியதாக கருத்துருவம் கொடுக்கும் நிலையை மொழி பெயர்ப்பாளர்களிடம் அவதானிக்க முடியும். இந்தப் பகுதியில் மொழி பெயர்ப்பாளர் பாவிக்கும் உதாரணத்தையே எடுத்துப்

பார்ப்போம். ''வேளாளர்'' (71 – உ மார்க்ஸ் மூலதனத்தின் தோற்றம்) என்ற சொல்லைப் பாவிக்கின்றார். ஆனால் இச்சொல் என்பது எமது சமூகத்தைப் பொறுத்தவரை ஒரு சாதியினரைப் குறிப்பிடுகின்றது. ஆனால் மார்க்சால் இச்சாதியைக் குறிப்பிட்டுச் சொல்லி இருக்க முடியாது. மொழி பெயர்ப்பாளர் சாதிச் சிந்தனையுடையவர் என்று கூறவில்லை. ஆனால் இந்த நிலையை எவ்வாறான சொல் பாவித்துக் கொள்வது இது இன்றிருக்கும் பிரச்சினையாகும்..

கருத்து முதல்வாதத்தில் மூழ்கியுள்ள மொழி பெயர்ப்பாளரால். கருத்து முதல் வாதத்துடன் கணக்கு தீர்த்துக் கொள்ள முடியாத சமூகத்தின் பிரதிநிதிகளினால் மொழி பெயர்க்கப்படும் போது இவ்வாறான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். இதேபோல் ஸ்ராலினின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய (போர்த்துக்கேய மொழியில் இருந்து காஸ் cast என்ற சொல் ஆங்கிலத்திலும் பாவிக்கப்படுகின்றது.) பகுதியில் ''சாதி'' என்ற சொல்லும் பாவிக்கப்புடுகின்றது. இப்படியான நிலையில் எவ்வகையான சொற்கள் பாவிக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மொழியுலகில் ஒரு சவாலே. ஏனெனில் சாதிய, மத சிந்தனையில் இருந்து வெளியேறும் பொருட்டு பிற்போக்குச் சிந்தனையை வலியுறுத்தும் சொற்களுக்கு பதிலாக புதிய சொற்கள் உருவாக்கப்பட வேண்டியது மனித குல விடுதலையின் ஒரு பகுதியாகும்.

மார்க்ஸ் ஆசியப் உற்பத்தி முறை என வரையறுக்கின்றார். ஏங்கெல்ஸ் இந்து சமுத்திரத்தில் தான் ஆதியில் மனிதன் தோற்றியிருக்க முடியும் என்கின்றார். இதனை ''மிகவும் உன்னதமான வளர்ச்சி பெற்ற மனிதக் குரங்கு இனம் உஷ்ண மண்டலத்தில் – தற்போது இந்திய மாகடலின் அடியில் ஒருவேளை மூழ்கிப் போன ஒரு பெரும் கண்டமாக இருக்கலாம்.(பக்.3 ஏங்கெல்ஸ் மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடை நிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்) அப்படியாயின் இருவரும் இந்த முடிவிற்கு வந்தடைந்தார்கள் என ஆராய்ச்சி நூல் எழுதும் ஆர்வம் உடையவர்கள் கேள்வியைக் கேட்டு இதற்கு விளக்கம் தரும் போது கருத்துமுதல்வாதச் சிந்தனைக்கு (முதல் மனிதர் ஆதாம், ஏவாள் என்ற கருத்து, சாதியத்தை வலியுறுத்தும் மனுதர்மம்) மரண அடி கொடுக்கும் சேவையைச் செய்து முடிக்க உதவிடும். இவர்கள் இதனைச் செய்யாது வெள்ளையர் தனது பொருளாதார முயற்சியினை மேற்கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்ட பாடத் திட்டத்தினை அப்படியே ஏற்றுக் கொண்டு, அவர்கள் எழுதிய வரலாறை அப்படியே கற்று பட்டம் பெறுவது இந்தச் சமூகத்தில் இயல்பான நியதியே.

## 1.4.7 மதச் சண்டைகள்

மதச் சண்டைகளை எடுத்து நோக்குவோமானால் எல்லாக் காலங்களிலும் சண்டைகள் நடைபெற்றதில்லை. ஆனால் இது சமூக வளர்ச்சியின் நாகரீகத்தின் வெளிப்பாடேயாகும். ஆனால் இங்கு மதச் சண்டை தொடர்பான ஒரு பார்வையை மாத்திரம் இங்கு கொடுக்கலாம் என நினைக்கின்றேன். இன்றைய சர்வதேச அரசியல்

ஓட்டத்தில் பல்வேறு நாடுகளில் மதத்தை முன்வைத்து சண்டை பிடிக்கின்றனர். இந்த மதச் சண்டைகள் பல்வேறு தரத்தைக் கொண்டது. இச்சண்டையின் வகைகளைப் பிரித்துப் பார்ப்போமனால் சூடான், லெபனான் போன்ற நாடுகளில் உள்ளது போன்ற நேரடியாக சமயத்தை பிரதிபலிக்கின்ற யுத்தங்கள், அடுத்து அரசியல் அதிகார நோக்கம் கருதி மதத்தைப் பாவிக்கும் இலங்கை, இந்தியா போன்றவைகளும், ஏகாதிபத்தியத்தின் சுரண்டலையும், சீரழிவுகளையும் எதிர்த்துப் போராடுவதற்காக மதத்தினை பொதுச் சின்னமாக பாவிப்பதும் இதனை அடிப்படைவாதமாக பிரச்சாரம் செய்யப்படுகின்றது.. மத்திய கிழக்கில் எழுந்த இசுலாமியச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கோடு உருவாக்கப்பட்ட ஜிகாத், ஹமாஸ் போன்றவற்றால் ஏற்பட்ட அலைகளினால் உருவாகியிருக்கும் தனிநபர் பயங்கரவாதக் குழுக்கள் போன்றவையும் வகுப்புவாதமும் இருக்கின்றன.

மேற்கு தேசங்களில் இருக்கின்ற இசுலாமிய எதிர்ப்புச் பிரச்சாரம் இதனை மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா ஆகிய இடங்களில் இருக்கின்ற மதஎழுச்சியினுள் உள்ளடக்கி விடுகின்றனர். மேற்கு நாடுகளிலும், மேற்கிலும் இருக்கின்ற மதப் போக்கில் சில ஒற்றுமை தென்பட்டாலும், மதச் சக்திகள் சூழ்நிலையை பயன்படுத்திக் கொள்வதாலும் இரண்டும் வெவ்வேறுபட்ட பொருளாதார அமைப்பைச் சார்ந்ததாகும். மத்தியகிழக்கில் காணப்படுவது அரைநிலப்பிரபுத்துவத்தின் அவலக் குரல், மற்றையது ஏகாதிபத்திய தேசங்களில் ஏற்படுகின்ற (இது பற்றி ஏகாதிபத்தியக் கலாச்சார வேறுபாடு என்பனவற்றின் கீழ் பார்க்க முடியும்) அவலத்தின் வெளிப்பாடு ஆகும்.

மதங்களை எடுத்துக் கொண்டால் பல்வேறு வகையான பிரச்சினைகள் இருக்கின்றன. மதங்களிடையே இருக்கின்ற பிரிவுகள் தமது சிந்தனை தான் தமது பாதைதான் சரியென சண்டையிட்டுக் கொள்கின்றன. கிருத்தவ மதத்தை எடுத்துக் கொண்டால் வரலாற்றில் யூதர்களுக்கும், கிருத்தவர்களுக்கும் இடையே போராட்டம் நடைபெற்று வந்துள்ளது. இதில் யார் உண்மையான பழைய ஏற்பாட்டை கடைப்பிடிப்பவர்கள் என்ற சண்டை தொடங்கப்பட்டது. இன்று இந்த மதப்பிரிவுகள் தாம் வெவ்வேறான மார்க்கம் எனக் கொள்ளலாம் ஆனால் இவைகள் யூத மேலாதிக்க சிந்தனையில் இருந்து புறப்பட்டு வந்த சமயங்கள் தான் கிருத்தவம், யூதம், இசுலாம் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். இந்த மதங்களிடையே நிகழ்ந்த போர்கள் எமது சரித்திரத்தில் தெரிந்து கொள்ள முடியாது. குறிப்பாக சிலுவைப் போரினால் ஏற்பட்ட வடுவானது கிருத்தவ, இசுலாமிய மதப்பிரிவினரிடையே இன்றும் காணக் கிடக்கின்றது.

இசுலாமை எடுத்துக் கொண்டால் வெவ்வேறான புரிதலைக் கொண்டுள்ள சாலமன் ருஷ்டியின் மீதான கொலைத் தண்டனை பற்றிப் பார்க்கின்ற போது இரண்டு புரிதல்கள் உண்டு. அல்லாவின் இல்லம் அல்லது எல்லை என்ற வட்டத்தில் இருக்கின்ற நபர்களைத் தான் குரானின் படி கொலைத் தண்டனை விதிக்க முடியும்.

ஆனால் வேற்று மத எல்லைக்குள் இருக்கின்ற நபரிற்கு மரண தண்டனை வளங்குவது செல்லுபடி அற்றதாகும். இந்த மதப் பிரிவில் பல கிளைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாக விளக்கத்தைக் கொள்கின்றன.

இன்று கிருத்தவ மதப்பிரிவினரை எடுத்துக் கொண்டால் மற்றைய மதத்தவரை தாழ்த்தியே நடத்திக் கொள்கின்றது. மற்றவர்கள் மொக்குகள், மோடுகள் (முட்டாள்கள்). தமக்கு மாத்திரம் தான் எல்லாம் தெரியும். தமக்கு மாத்திரம் தான் சரியானது புரிந்து கொள்ளப்படும் என்ற அடிப்படையில் இருந்து வருவதே மற்றவர்களைத் தாழ்த்தி நடத்தும் சிந்தனையாகும். சனநாயகம் பேசுகின்ற மேற்கு உலகம் முன்னர் இப்படித் தான் கிருத்தவ மதத்தைப் பாதுகாப்பதற்கும், கொலனித்துவகால ஆட்சியைப் பாதுகாப்பதற்கும் மிருகத்தனமாக நடந்து கொண்டது. சுதேசிகளிடையே மோதல்களை உருவாக்கி தமது இருப்பை, ஆட்சியை பாதுகாத்தனர். இன்று கிருத்தவ மதத்தைச் சேர்ந்த போப் புத்த மதத்தைப் பற்றி ஒரு புத்தகத்தை எழுதினார் அதில் புத்த மதம் ஒரு நாத்தீக மதம் என குறிப்பிட்டிருந்தார். இதனால் அசம்பாவிதங்களும், அவருடைய வருகையை பகிஸ்கரிப்பும் நடை பெற்றது. இதனால் பல கோயில்களும், சொத்துக்களும் நாசமாக்கப்பட்டன.

இவ்வாறாக இந்திய மதங்களை எடுத்துக் கொண்டால் பௌத்தம், சைவம், வைணவம், சமணத்திற்கும் இடைப்பட்ட சண்டைகளை எடுத்துக் கொள்ளலாம். இந்த மதச் சண்டைகளில் பல சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர், அவர்களின் கோவில்கள் சைவக் கோயில்களாக மாற்றப்பட்டது. உழவர்களும் வர்த்தகர்களும் தொடுத்துக் கொண்ட வர்க்கப் போர் மதத்தின் கீழே நடைபெற்றது. சைவர்கள் உழவர்களையும், சமணத்தவர் வர்த்தகர்களையும் பிரதிநிதித்துவம் செய்தனர். இந்தப் போராட்டத்தில் சைவமும், உழவர்களும் வெற்றி பெற்றனர். ஆனாலும் வர்க்கம் என்ற முறையில் புதிய பொருளாதார கட்டத்தை அடையவில்லை. மாறாக நிலப்பிரபுத்துவத்தினுள் அப்படியே சமரசமாகி விட்டதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

இச்சண்டை ஒவ்வொரு பிரிவினரும் தமது தத்துவ உருவாக்கம், சித்தாந்தத்தை பரப்புவதில் ஏற்படுகின்ற போட்டியில் இருந்து தொடங்கப்பட்டது. இந்திய மக்களின் வயிற்றுப் பசியைப் பற்றிய கவலையை விட்டு விட்டு ஆன்மீகத்தையும் மறுவுலகத்தைப் பற்றியும் சிந்திக்கின்ற காலத்தில் தொடங்கிய மோதல்கள் இன்றும் பல்வேறு வடிவங்களில் பல்வேறு சின்னத்தை தாங்கிக் கொண்டு ஒவ்வொரு காலத்திலும் மதச் சண்டை தோற்றம் பெறுகின்றது. மதத்தினை சின்னமாக கொண்டு அதனை பொது அடையாளமாகக் கொண்டு மக்களை அணிதிரட்ட முடியும். மதபீடமானது மக்களிடம் இருக்கின்ற செல்வாக்கை பயன்படுத்தி. பாமர மக்களை தமது இஸ்டத்திற்கு பயன்படுத்த முடிகின்றது. பானையில் இருந்தால் தானே அகப்பையில் வருவதற்கு என்பது போல். போலியுணர்வினால் புரையோடிப் போயுள்ள சமூகத்தின் உற்பத்திப்

பண்டம் எப்படி இருக்கும். இதற்கு ஆதாரம் எமது தேசத்திலேயே காணமுடியும். மதம் என்பது ஆளுமை செலுத்தும் வேளையும், நிறுவனமயப்பட்ட சமயமானது முக்கிய பங்காற்றுகிறது. சமயபீடமானது தனிநபர்களிடையே கூடுதலான அதிகாரத்தையும் கொண்டுள்ளது. இதன் காரணமாக மதத்தின் மீது எவ்வித மோதல்களையும் அரசியல்வாதிகள் வைத்துக் கொள்வதில்லை மாறாக அவர்களின் நலனுக்கே இசைந்து கொடுக்கின்றனர். இவ்வாறான தன்மைகள் காணப் படுவதால் இலகுவில் மக்களை ஒடுக்கு முறையாளர்கள் தமது தேவைகளுக்கு பாவிக்க முடிகின்றது.

இந்நிலை அதிகமாகவே இலங்கை அரசியலில் காணமுடியும். பண்டா – செல்வா ஒப்பந்தம் அதற்கெதிரான ஜே.ஆர் தலைமையிலான பாதயாத்திரையும் அதனைத் தொடர்ந்து புத்த பிக்குவால் பண்டா கொல்லப்பட்டதை இங்கு நினைவுபடுத்துகிறது. இலங்கை அரசியலில் இது வரலாறாக தொடர்கின்றது. ஆட்சியைப் பாதுகாக்கும் பொருட்டு மத பீடங்களின் மிரட்டலுக்கு பணிந்து போகும் நிலை தொடர்கின்றது. தற்பொழுது இருக்கின்ற சிங்கள அரசியல் தலைமை பலவீனமாகவே உள்ளது. அரசியல்வாதிகள் வாக்குகளுக்குப் பயந்து தமது அரசியல் திட்டத்தின் படி நடப்பதில்லை. இந்தச் சந்தர்ப்பவாத நிலை என்பது எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் ஏற்பட நிச்சயம் இடமுண்டு. ஏன் மதச் சக்திகளுடன் பகைத்துக் கொள்வான் என்ற நிலை. இது மதப்பிடிப்பு உள்ள எமது தேசங்களில் இருக்கின்ற ஒரு நிலையில் இருந்து அடுத்த கட்டத்திற்கு நகர்வது கூட நடைமுறைச் சிக்கல் நிறைந்தாகும்.

இந்த நிலையைப் போக்க தமிழ், சிங்கள தலைமைகள் புரிந்துணர்வின் அடிப்படையில் மதவாதத்திற்கு எதிராக செயற்படுவதன் மூலமே மதவாத சக்திகளின் சக்தியைக் குறைக்க முடியும். இந்த நிலையானது மத சித்தாந்தத்தை பாதுகாக்க உத்தரவாதம் செய்யாத அரசியல் தலைமையே இதற்கு அத்தியாவசிய நிபந்தனையாகின்றது. தமிழ்த் தலைமைகள் மதத்தைப் பாதுகாக்கின்ற நிலையில் செயற்படுமானால் இனவெறி, மதவெறியை அகற்ற முடியாது. இந்தக் கூட்டு ஒத்துழைப்பு என்பது இலங்கை அரசியலில் மாத்திரம் அல்ல உலகின் எந்த மூலை முடுக்குகளில் போராட்டங்கள் நடை பெற்றாலும் இந்தத் தந்திரோபாயங்கள் அவசியமாகின்றது. இல்லாவிடின் தமிழ் மக்களிடத்தில் இந்துத்துவவாதிகளும், முசுலீம் மக்களிடையே மத வெறிச் சக்திகளும், புத்த மத வெறிச் சக்திகளும் வளர்வதைத் தடுக்க முடியாது.

மதத்தினை உண்மை என்று நம்புகின்ற மக்கள் சிந்தனையில் மாற்றம் வேண்டும். இந்த மதங்கள் குறிப்பிடுவது போன்று எல்லாக் காலத்திலும் மதச் சண்டை இருந்ததும் கிடையாது. மதச் சிந்தனை மனித தோற்றத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்டதும் கிடையா. இன்று ஆதிக்கத்தில் இருக்கின்ற உலகமதங்கள் எனப்படுபவைகள் எல்லாம் ஒருமைக் (நவ இந்துத்துவம்) கடவுளை நோக்கியவையாக இருக்கின்றது. இவைகள் எல்லாம் இன்றிருக்கும் பொருளாதார நலங்களுக்கு ஏற்றவாறாக இசைவாகும் பொருட்டு அவ்வொருமையை வலியுறுத்துகின்றன. ஆனால் மனித வாழ்க்கையின்

ஆரம்பத்தில் ஒவ்வொரு இனத்தவரும் தமக்கே உரித்தான உலகக் கண்ணோட்டத்தையும் குலதெய்வங்களையும் கொண்டிருந்தனர். அதுவே தான் இயல்பாகவும் இருந்திருக்க முடியும். மனிதர் எப்போது தோன்றினர் என்ற கேள்வி ஒருபுறம் இருக்க மனிதர் தோன்றிய பின் பல குழுக்களாகச் சிதறியிருப்பர். மனித கூட்டம் சிதறிய போது அந்த மனித கூட்டத்திற்கு இருந்த அறிவு வளர்ச்சி வீதம் வெகு மட்டமானதாக இருந்திருக்கும். ஆரம்ப நிலையில் நிறுவன மயப்பட்ட உலக கண்ணோட்டம் தேவையற்றது. அதாவது ஒவ்வொரு கடவுளைக் கொண்டதாக இயற்கையை வணங்கியவர்களாகவும் தான் இருந்திருக்க வேண்டும். முற்பட்ட சமுதாயத்தில் கடவுள் பயம் இருந்திருக்க முடியும் ஆனால் மதம் என்ற நிறுவன அமைப்பிற்குட்பட்டு அதனுடைய அனுஸ்டானங்கள் இருந்திருக்க முடியாது.

ஆனால் மனித கூட்டத்திற்கு முக்கிய பிரச்சினையாக இருந்திருக்கக் கூடியது உணவு உறைவிடம் இயற்கைச் சீற்றத்திற்கு எதிராக போராட வேண்டியதே முதன்மையாக இருந்திருக்கும். இயற்கையுடன் போராடிய மனிதர் அறிவுவளர்ச்சி உள்ளவனாகிறார். உருவாகிய மனிதர் இயற்கையை வெல்ல வேறொரு சக்தி தனக்கு உதவுவதாகக் கருதிக் கொள்கிறார்கள். தன்னால் அடக்கப்பட்ட இயற்கையை தன் சக்திக்கு அப்பாற்பட்டதாக கருதிக் கொள்கிறார்கள். கருதுகின்ற மனிதர் அந்த இயற்கையை எதிர் கொள்ள புதிய சக்தியை நாடுகின்றனர். இப்படியான நிலையில் தோற்றம் பெறும் உலகக் கண்ணோட்டம் என்பது மனிதரால் கட்டுப்பாட்டில் இருக்கும் எல்லைக்கே உரியதாகிறது. ஒவ்வொரு மனிதக் குழுவும் தன்னால் தொடர்பு கொள்ளக் கூடிய பிரதேசம் அவர்கள் பழகுகின்ற பிரதேசம் இவைகளே வானத்தின் எல்லைகளாகவும் மற்றவைகள் எல்லாம் வேறு உலகம் எனவும் தோன்றியிருக்கக் கூடும். இதுவே அவர்களுடைய நடைமுறை முடிவாகவும் இருந்திருக்கும். முன்பு பார்த்ததுபோல் நடைமுறை ரீதியாகப் பெற்ற அறிவும், உற்பத்தி சாதனங்களின் ஏற்பட்ட மாற்றமும். மற்றைய இனக்குழுக்களுடன் தொடர்பினை ஏற்படுத்துகின்றன. வேலைப்பிரிவினை வளர்ச்சியுறாத வரைக்கும் இனக்குழுக்களிடையே பரிமாற்றங்கள் ஏற்படமாட்டா, அதாவது இனக்குழுக்கள் பரஸ்பர பரிமாற்றத்தினூடே புதிய இனக்குழுவாக உருவாகும் வரைக்கும் இனக் குழுக்களிடையே உலகக் கண்ணோட்டத்தைப் பற்றிய மோதல்கள் இன்றைய காலத்தைப் போன்று நிறுவன அமைப்புக் கொண்டதாக இருந்திருக்க மாட்டா. பெண்களை அடைவதும், பொருளாதார நலன்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. செய்ய முற்படுகின்ற முயற்சிக்கு இடையாக இருக்கின்றது என கருதுகின்ற சத்துருக்களுக்கு எதிராகவே இவர்களின் வழிபாடுகளும், சடங்குகளும் இருக்கின்றது. இவர்கள் தமது ஆண்மையை நிலை நிறுத்திக் காட்டவும், கடவுளுக்கு சமர்ப்பிக்கவும் வீர விளையாட்டுக்கள் போன்றவற்றை செய்தும் கடவுளின் கோபத்தை குறைப்பதாகவும், நன்றிக் கடனாகவும் செலுத்தினர். இந்த விளையாட்டுகள் இந்தச் சமுதாயத்தில் உடற் பயிற்சி என்ற நிலையில் மாற்றமடைந்து இன்று எமது சமுதாயத்தில் உயர் நிலைபெறுகின்றன.

## 1.4.8 பொருளாதார நலனுக்கு காவடி தூக்குதல்

மதங்கள் ஒடுக்கும் சீரழிவு சமூக அமைப்பை, இல்லாது போக்குவதற்கு எதிர்த்து நிற்கின்றன. இவற்றில் விடுதலை நற்செய்தி என்ற வகையில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருக்கின்றன. ஆனாலும் இவ்வாறான வளர்ச்சி என்பது எமது நாடுகளில் வளர்ச்சி பெறவில்லை. இதற்குச் சமூக பொருளாதாரக் காரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு உலகத்தில் பெரும்பான்மையான மக்கள் பின்பற்றுகின்ற கிருத்தவ மதமானது வித்தியாசமான கருத்தியல் திசை வழிப் போக்கை கொண்டுள்ளது. இன்றைய நவீன காலத்தில் மாத்திரம் அல்ல புத்தருடைய காலத்திலேயே மதப் போதனையானது பொருளாதார முனைப்புடன் ஒன்றித்துச் சென்றுள்ளது. புத்தம், சமணம் ஆகியன முன்னைய காலத்தில் பல சமூக மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளது. இந்த மதங்கள் வசதிபடைத்த வர்க்கத்துடன் கூடி உறவாடியிருந்தது. ஆனால் பல மாற்றங்களை உருவாக்க காரணமாகவும் இருந்திருக்கின்றது. நா. வானமாமலை பின்வரும் மாற்றங்கள் இருமதங்களினால் உருவாக்கப்பட்டதாக கூறுகின்றார்.

1. சிறு குழு உணர்வைத் தகர்த்தன.
2. பேரரசு தோன்றத் துணை செய்தன.
3. வாணிபம் வளரவும், வணிக வர்க்கம் தோன்றவும் துணைசெய்தன.
4. குழுக்களையும் சாதிகளையும் ஓரளவு ஒன்றாக இணைத்தன.
5. மொழி வளர்ச்சிக்கு உதவின.
6. புதிய பாட்டுருவங்களைப் புகுத்தி காவிய காலத்துக்குப் பாதை அமைத்தன.
7. ஒரே தமிழ்நாடு என்ற அமைப்பை மக்களும், மன்னரும் வணிகரும், நோக்கமாக கொள்ள உதவின.
8. இதன் மூலம் கலாச்சார ஒருமையை வளர்த்தன.
9. காவியங்களின் மூலம் இந்தியப் பண்பாட்டோடு, தமிழ் நாட்டின் பண்பாட்டை இணைத்தன.
10. போரைத் தவிர்த்து வாணிப வளர்ச்சிக்கு உதவின.'' (பக். 43 நா. வானமாமலை – தமிழர் வரலாறும் பண்பாடும்)

இவ்வளவு மாற்றமும் நிகழ்ந்த போது வர்க்கங்களும் விரிவடைகின்றன. விரிவடைவதன் காரணத்தால் ஒவ்வொரு வர்க்கமும் முரண்பாடு கொள்கின்றன. இந்த முரண்பாடு வெடித்த போது பத்தி இயக்கமானது இதனை பயன்படுத்திக்

கொண்டது. இந்த முரண்பாடு வணிக வர்க்கத்தினருக்கும், உழவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. வர்த்தக வர்க்கம் உபரி உற்பத்தி ஊடாக பெற்ற பொருட்களை விற்றே இவ்வர்க்கம் உருவாகியது என்பதை மூன்றாவது வேலைப் பிரிவினை பற்றிப் பார்க்கின்ற போது அவதானித்தோம் அதே போல்தான் வணிக வர்க்கத்தின் சுரண்டல் அதிகரிக்கின்ற போது ஏற்படுகின்ற எதிர்ப்புணர்வு இருந்து கொண்டே இருக்கும். இவ்வாறு வர்க்க முரண்பாடுகளை கவனித்து எதிர்க் கொள்வதற்கு இருந்த மாற்றீடு பக்தி இயக்கமேயாகும்.


பக்தி இயக்கத்தின் நோக்கமே புத்த, சமண இயக்கத்தின் மீதான காழ்ப்புணர்ச்சி, ஆனால் இருந்த நிலைப்பாடோ வர்க்க முரண்பாடு. சுரண்டும் வர்க்கத்திற்கு இருக்க வேண்டிய எதிர்ப்புத் தத்துவம் பக்தி இயக்கமாகவே இருந்தது. ஆனால் இன்றைய காலத்தில் இருந்தது போல் பொருள்முதல்வாத அடிப்படையில் அமைந்த பொதுவுடமைத் தத்துவம் என்பது அன்று இருக்கவில்லை. இந்த நிலையை பக்தி இயக்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. இந்த வணிக வர்க்கமானது பரதவர் குலத்தில் இருந்து தோன்றியது எனப்படுகின்றது. இவர்கள் பரதவர்களாக இருந்தால் என்ன வேறு எந்தக் குலமாக இருந்தால் என்ன சொத்துரிமையை தமதாக்கிக் கொண்ட ஒரு வர்க்கத்தினாலேயே இது நடத்திருக்க முடியும். மாறாக ஒரு சாதியினருக்குரியதாக மாட்டாது.

எல்லா மதங்களும் பொருளாதார நலனுக்கு ஆதரவாகவே இருக்கின்றன, ஆனால் பொருளாதாரச் சிந்தனை என்பது பொருளாதார வளர்ச்சி நலனை ஊக்குவிக்கின்ற போக்கை கொண்டதாக அமைவதையே இங்கு குறிப்பிடப்படுகின்றது. பல குலங்களாக இருந்த பின்னர் பலம் பொருந்திய முடியரசுகள் உருவாக்கம் பெற்ற பின்னரான காலத்தில் "குழுக்களிலுள்ள மாற்ற முடியாத பழைமைப் பற்றை ஒழிக்கப் பௌத்தம் பயன்பட்டது. குழுவினுள் அடங்கிச் சிறு தெய்வ வணக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்களை பௌத்தம் தமது ஜாதகக் கதைகளினாலும், எழுத்தறிவினாலும், நீதி போதனையாலும், புத்தனைக் கடவுளாக வழிபடும் வணக்க முறையைப் புகுத்தியதாலும். புதிய அகன்ற உலகத்தை கற்பனையில் காண உதவிற்று. (பக்.41 நா. வானமாமலை – தமிழர் வரலாறும் பண்பாடும்) புத்தமதம் தமது நீதிநெறியூடாக நிலப் பிரபுத்துவத்தை நிலை நிறுத்த உறுதுணையாக இருந்தது. இதன் பின்னர் வந்த பக்தி இயக்கம் நிலப் பிரபுத்துவத்தை அப்படியே வைத்துக் கொண்டு முதலாளித்துவ வளர்ச்சி அடையவிடாமல் சிவனிடம் சரணடையும் படி மக்களை ஆன்மீகத்தில் வெற்றி கொள்ள வைத்தது. அதனுடைய நீதி நெறியும் அப்படிபட்டதாகவே இருந்தது. இந்த உறவு நிலையை வானமாமலை "உறவில்லாத உறவை சிருஷ்டித்தது (Idyllic relations) சிவனை விதியை வெல்ல வழிகாட்டும் மூலத் தலைவனாக்கியது." (பக்.45 நா. வானமாமலை – தமிழர் வரலாறும் பண்பாடும்) பரிணாம வளர்ச்சியின் ஊடாக அல்லாமல் செயற்கையான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. இந்தப் முயற்சிகள் வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு சித்தாந்தப் போக்குக் கொண்டவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இது ஒரு வகையான (இப்போக்கை

முதலாளித்துவ சனநாயகம் பற்றிய பகுதியில் அவதானிக்கவும்) போக்காகும். ஆனால் முன்பு கூறியது போல் பொருளாதார நெறியை கொண்டு பொருளாதாரத்தை வளர்ப்பது இன்னொரு முறையாகும்.

மக்ஸ் வேபர் (Max Weber) என்ற பூர்சுவா வர்க்க அறிஞர் புரட்டஸ்தாந்து மத நீதி நெறி எவ்வாறு தனிமனிதர்களின் மதச் சுதந்திரத்தை தனித்துவப்படுத்தி அதனை உறுதிப்படுத்துதன் ஊடாக முதலாளித்துவத்தை வெற்றிகொண்டதாக கோட்பாட்டை முன்வைத்தார். இது இவரின் கோட்பாடாவே கருதப்பட்டு வருகின்றது. இதற்கு முன்பே ஏங்கெல்ஸ் இதுபற்றிக் கூறியுள்ளார். **''ஆனால் ஒப்பந்தங்களைச் செய்து முடிக்க வேண்டும் என்றால் தம்மையும் தமது செய்கைகளையும் உடமைகளையும் சுதந்திரமாகக் கையாளக் கூடிய நபர்கள் ஒருவருக்கு ஒருவர் சமத்துவ நிலையில் உள்ள நபர்கள் முதலில் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ''சுதந்திரமான'' ''சமத்துவமான'' மனிதர்களைப் படைப்பதே முதலாளித்துவ உற்பத்தியின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். ஆரம்பத்தில் இது அரை உணர்வுள்ள முறையில், மதவேடத்தில் நடைபெற்றாலும் லூதர் மற்றும் கால்வினுடைய மதச் சீர்திருத்த காலத்தில் இருந்து இது கோட்பாடாக உறுதிப்பட்டது.''** (ப 130 கு.அ.த தோற்றம்) இந்த தனித்துவப்படுத்தும் போக்கை இராமனுஜர் முன்வைத்தார் என்பது எமது வரலாற்றில் காணமுடியும். முதலாளித்துவத்துடன் ஏற்றதாக போகக் கூடியதும், முதலாளித்துவத்தைப் பாதுகாக்கக் கூடியதாயும் கிருத்தவ மதம் இருக்கின்றது. சைவ– வைணவ மதங்கள் அவ்வாறு கைகோர்த்துப் போவதில்லை. இதன் பொருள் சுரண்டும் வர்க்கத்திற்கு துணை போவதில்லை என்றாகாது. கடவுளை அடையவும், தமது விசுவாசத்தைப் பாதுகார்த்துக் கொள்ளவும் எந்தவித அந்தஸ்தும் தேவையில்லை. தனி மனிதர்கள் தமது சுதந்திரமான (சாதி பேதம் இல்லாது) தெரிவுகள் மூலமாக தமது விசுவாத்தைப் பாதுகாக்க முடியும் என ராமானுஜர் கருதினார். இந்தக் கருத்து என்பது சங்கரர் போன்றவர்களினால் தோற்கடிக்கப்பட்டது.

அதே போல் மதத்தை தனிமனித நிலைக்கு கொண்டு வருதல், இனிவரும் காலங்களில் கிருத்தவ மதமறுமலர்ச்சி போல் சைவ – வைணவ கிளைகளில் அந்த மதத்திற்கு ஏற்ற வகையான முதலாளித்துவ சிந்தனைப் போக்கு வரலாம். அது தானே முன்நின்று நடத்தலாம். இங்கு எடுத்துரைக்க முற்படுவது என்னவெனில் மத அடிப்படைச் சிந்தாந்தத்தில் கிருத்தவ மத மறுமலர்ச்சியில் இருந்த சிந்தனை ஓட்டம் சைவ – வைணவ மதங்களில் இல்லை என்பதே.



# 1.5. அரசு என்றால் என்ன?

அரசு என்றால் என்ன என்பது பற்றி எல்லாப் பிரிவினரிடையேயும் வித்தியாசமான கருத்து இருக்கின்றன. இந்தப் போக்கு என்பது அடிப்படை அரசியல் முடிவு எடுக்கின்றபோது முக்கிய பங்கு வகிக்கின்றது. அரசு என்னவென ஒரு மார்க்சியப் பார்வையை பெறுகின்ற போதே முரண்பாடு அற்ற ஒரு சர்வதேச நிலையில் ஒரு தீர்க்கமான கருத்தைப் பெறமுடியும். ஏனெனில் இன்று இருக்கின்ற முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு எதிராக இருக்கின்ற மார்க்சிய நிலையில் இருந்து எடுக்கின்ற நிலைப்பாடு என்பது சர்வதேசத்தில் இருக்கின்ற ஒடுக்கப்படுகின்ற மக்கள் அனைவரும் ஒரே மாதிரி முடிவெடுக்க உதவுகின்ற சிந்தாந்தப் போக்காகும். மார்க்சிய சித்தாந்த வழி மாத்திரம் தான் உலக தொழிலாளர்களை இணைத்துக் கொள்கின்ற பாலமாகும்.

வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றவர்கள் நினைக்கலாம் தாம் எல்லாம் கஸ்ட துன்பப்பட்டு அந்த நாடுகளுக்கு போய்ச் சேர்ந்து விட்டோம். எமக்குப் பிடித்த சனியன் துலைந்து விட்டது, நமக்கு அந்த நாடுகளில் எல்லாம் கிடைத்துவிடும். அவ்வரசுகள் எம்முடைய உணர்வுகள் ஆசைகள், கனவுகள் கற்பனைகள் அனைத்தையும் தீர்த்து வைக்கக் கூடியது. ஏனெனில் கீழைத்தேய நாடுகள் எல்லாம் சனநாயகத்தைப் பாதிக்கிறவையாக உள்ளது நாம் கொடிய அரசுகளின் கொடுமைக்கு ஆளாகி வந்தவர்கள் அதற்கு மாறாக புதிய அரசைக் கண்டதும் எல்லாம் கிடைத்து விட்டது என்ற திருப்தி ஏற்படுவது என்பது இயல்பே. எம்முடைய அரசு கொடிய அரசு என்பதினால் மற்றைய அரசுகள் என்பது உண்மையிலேயே கொடியது என்பதை நாம் உணர்வதில்லை.

எமது (சிறிலங்கா – இந்திய) அரசுக்கும் இந்த மேற்கு அரசுகளுக்கும் வெளித் தோற்றத்தில் காணப்படும் வித்தியாசத்தைக் கொண்டு இவ்வரசுகள் ஜனநாயகமுடையது எனத் தோற்றமளிக்கிறது. எனினும் மேற்கு நாடுகளில்

முதலாளித்துவ ஜனநாயகத்தை பெறமுடியும். ஆனால் அரசு எனப்படும் பொது உண்மையில் எவ்வித வேறுபாடுகளும் உள்ளார்த்தமாக இல்லை. அரசு எனப்படும் போதே ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதேயாகும். ''எங்கட பொடியள்'' காணப்போகும் அரசு என்பதும் இவ்வாறானதாகத் தான் இருக்கும். ஏனெனில் அரசு என்பது உயிர்வாழும் என்றால் அங்கே ஒரு வர்க்கத்தைப் பாதுகாப்பதற்காகத் தான் இருக்கும். அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை தொழிலாளர்களிடம் இருந்து பாதுகாப்பதேயாகும். சோசலிச அரசு பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவ வர்க்கத்திடம் இருந்து பாதுகாப்பதேயாகும். சந்திரிக்காவின் புதிய அரசும். இப்புதிய அரசு மாறுபட்ட (ஆரம்பத்தில்) அரசியலை தந்திரோபாயத்தின் அடிப்படையில் கொண்டு இருந்தாலும் அது எவ்வகையிலும் தொழிலாளர்களுக்கு நட்புள்ள அரசாக எந்தக் காலத்திலும் இருக்க முடியாது.

மேற்கத்தைய அரசுகள் எல்லாம் ஜனநாயகம் என கூக்குரல் இடுகின்றன. இவர்கள் கூக்குரல் இடும்போது ஏதோ உண்மையாகவே ஜனநாயகத்தைப் பற்றித் தான் குறிப்பிடுகிறார்கள் என நாம் மதிமயங்குகிறோம். அந்த ஜனநாயகம் என்ற செல்லுக்குள்ள நயவஞ்சகத்தை நாம் புரிந்து கொள்வதில்லை. இந்த அரசுகள் ஜனநாயகம் எனக் கூக்குரல் இடும்போது அந்த சொற்களுக்குப் பின்னால் நலன் ஒன்று மறைந்துள்ளது என்பதை நாம் நாம் கவனிக்கத் தவறுகின்றோம்.

அரசினை ஏங்கெல்ஸ் பின்வருமாறு வரையறுக்கின்றார். ''அரசு என்பது வெளியிலிருந்து சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு சக்தியல்ல என்பது உறுதி, ஹெகல் கூறுவதைப் போல் அது 'தார்மிகக் கருத்தின் எதார்த்தம்'' 'பகுத்தறிவின் பிரதிபிம்பம், எதார்த்தம்' அல்ல. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை எட்டிய சமுதாயத்தின் விளைபொருள் அது. இந்த சமுதாயம் தன்னுடனேயே தீர்வுகாணமுடியாத ஒரு முரண்பாட்டில் சிக்கிக் கொண்டுவிட்டது, சமரசப்படுத்த முடியாத பகைமைகளாகப் பிளவுபட்டுவிட்டது. ஆவற்றைப் போக்குவதற்குத் தனக்குச் சக்தியில்லை என்னும் ஒப்புதலே அது. ஆனால் இந்த பகைமைகள், எதிர்மறையான பொருளாதார நலன்களைக் கொண்டிருக்கும் வர்க்கங்கள் வீண் சண்டையில் தம்மையும் சமுதாயத்தையும் அழித்துவிடக் கூடாது என்பதற்காக சமுதாயத்திற்கு மேலே இருப்பதாக காட்டிக் கொள்கின்ற ஒரு சக்தி அவசியமாக இருந்தது. சண்டையின் கடுமையைத் தணிப்பது, 'ஒழுங்கு' என்னும் வரம்புக்குள் அதைக் கட்டுப்படுத்துவது அதன் நோக்கம். சமுதாயத்திலிருந்து தோன்றிய, சமுதாயத்துக்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக் கொண்டு, சமுதாயத்திலிருந்து மென்மேலும் தன்னை அந்நியப்படுத்திக் கொள்கின்ற இந்தச் சக்தியே அரசு என்பதாகும்.

இந்த அரசு பழைய குல அமைப்பிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. முதலாவதாக, அது தனது குடிமக்களைப் பிரதேச ரீதியில் பிரித்துவைக்கிறது." (277 ஏங்கெல்ஸ் கு.த.அ. தோ) அத்துடன் **சமூக அதிகாரம்**, **வரி** அறவிடல் ஆகியவை தோற்றம் பெற்றதாக ஏங்கெல்ஸ் விளக்குகின்றார். நிர்வாக அலகுகள் எமது தேசத்தைப் பொறுத்தவரை மையப்பட்டிருந்தது எனக் கொள்ள முடியாது உள்ளது. பெரும் மன்னர்கள் இருந்திருப்பினும் நிர்வாக அலகுகள் என்பது பிரிக்கப்பட்டு 'சுயாட்சித்' தன்மை கொண்டதாக இருந்திருப்பதைக் காணமுடிகின்றது.

## 1.5.1 நிர்வாக அலகுகள்

தொன்மையான வரலாற்றைக் கொண்ட இந்திய இலங்கை நாடுகளில் மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சி முறை என்பது இருந்தது எனக் கூறமுடியாது உள்ளது. தொன்மைக் காலத்தில் தாய்வழிச் சமுதாயம் இருந்த போது தாய் தலைமை தாங்கி வந்தாள். ஆனால் இலக்கிய காலங்களுக்கு பிரவேசித்த போது தந்தை வழிச் சமுதாயம் என்பது மாறிக் கொண்டது. வளர்ச்சியடைந்த குலங்கள் அவர்களின் குலத்தலைவனை ஏற்று வழிநடந்தனர். இவர்கள் எவ்வாறான பண்பைக் கொண்டிருந்தனர் என எமது தேசங்களில் இருக்கும் தடயங்களை வைத்துப் பார்ப்போம். "இனக் குழுவின் தலைவன், அக்குழு மக்களைப் போல்ச் சாதாரண நிலையிலேயே வாழ்ந்தான். அவனுக்கு தனிச் சலுகைகள் கிடையா. மக்களோடு சேர்ந்து உழைப்பில் பங்கு கொண்டு, உணவு தேடியும், உணவைப் பங்கு வைத்து உண்டும் வாழ்ந்தான்.

காலைக் கள்ளைக் குடித்து விட்டுத் தூசி நிறைந்த துப்பரவு செய்யப்படாத முற்றத்தில் உறங்குகின்றவன்." ( பக். 48 சங்ககாலச் சமுதாயம் – கா. சுப்பிரமணியன்). இனக்குழுவில் கடமை, உரிமை என்ற பேதம் இல்லாத போது அவன் குலத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றான். இவனை பல பெயர்கள் கொண்டு அழைத்தனர். "இனக்குழுத் தலைவன் 'சீறூர் மன்னன், 'சிறுகுடிக்கிழான், சீறூர்வண்மையோன்.' எனப் பாராட்டப் பெற்றான். இவன் கூட்டுழைப்பிலிருந்து விலகிப் பிறர் உழைப்பில் வாழ்ந்தவன் அல்லன் (49 சங்ககாலச் சமுதாயம் – கா. சுப்பிரமணியன்) குலச் சமுதாயம் உடைந்து சொத்தைக் கொண்ட தலைவன் உருவாகிய போது குலத்தலைவன் உடலுழைப்பில் ஈடுபடவில்லை. இவனிடம் வேலையாட்களும், அடிமைகளும். இருந்து உபரி உழைப்பைக் கொடுத்த போது அவனிடம் சொத்து என்பது பெருகியது. இப்பெருக்கமானது அவனால் ஒரு படையை உருவாக்க முடிந்தது. இதன் மூலம் பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமிக்க முடிந்தது. வெற்றி பெற்ற பகுதிக்கும் மன்னன் எனப்பட்டான்.

இந்தக் குலச் சமுதாயத்திற்கும் அரசனுக்கும் இடைப்பட்ட நிலையில் குறு நிலைமன்னன் இருந்தாலும். சிறு அலகைக் கொண்ட அதிகாரம் படைத்த வர்க்கம் ஒன்று இருந்து வந்துள்ளது. இந்த வர்க்கம் சாயலில் குலச் சமுதாயத்தின் பண்பைக் கொண்டிருந்தாலும் அந்த அதிகாரவர்க்கம் சொந்துடமையைக் கொண்டிருந்தது. இந்த வர்க்கம் வர்ணாசிரமக் கோட்பாட்டை இரவலாக கடன் எடுத்து தமது வர்க்க நிலயைப் பாதுகாக்க முற்பட்டது. சுமார் 1500 வருடங்களுக்கு முன்னர் கரையார் குலத்தவனான மீகாமன், குலத்தவர் அரச சபையில் இருந்திருக்கின்றனர். வள்ளுவர் முன் சுமார் ௨00களில் குலத்தலைவர்கள் அரச சபையில் இருந்ததாக அநுராதபுரத்தில் காணப்பட்ட கல்வெட்டில் கூறப்படுகின்றது. 'கற்பாறையோடு சார்ந்திருந்த அந்த மாளிகையில் அக்காலத்தில் தமிழக நாவாய்த் தலைவன் அமர்ந்திருந்த இடங்களிலும், மற்ற வாணிகத் தலைவர்கள் அமர்ந்திருந்த இடங்களிலும், அவர்களுடைய பெயர்கள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. (Paranavatana, பக் 41, பழங்காலத் தமிழர் வாணிகம், மயிலை சீனி. வேங்கடசாமி)

முக்குவ குலத்தவனான வெடியராசன், சேம்பன் போன்றவர்களும் மட்டக்களப்பில் 'புளியந்தீவு என்னுமொரு பெயர் வழக்கத்திலுண்டு. முன்னாளிற் திமில குலத்தலைவனான புலியன் இருந்து ஆட்சி செலுத்தியதனால் புலியன் தீவு என விளங்கியது. மொழிச் சிதைவினால் புளியந்தீவு என மருவூ மொழியாகிவிட்டது. (74 ஈழமும் தமிழரும் அருள் செல்வநாயகம் 1963) இதே போல் வன்னியர்களில் பல நாச்சிமார்களும் ஆட்சி செய்து வந்துள்ளனர். இந்த நாச்சிமார்களின் மரணம் வீரவழிபாடாகி இன்றும் தெய்வமாக போற்றப்படுகின்றனர். இவை வரலாற்றில் குறிக்கப்படுகின்ற குல மரபைச் சேர்ந்ததாகும். இந்தக் குலங்கள் தொழில் முறையில் அமைந்த சாதியங்கள் அமையும் முன்னர் இருந்த குலங்களின் ஆதிக்கம் என்பது இருந்திருக்கின்றது எனக் காட்டுகின்றது. தொழில் முறையில் அமைந்த சாதிகள் எப்போ உருவாகியது என்பது ஒரு புறமிருக்க இந்தச் குலங்கள் தமது அதிகாரத்தை பெறுவதிலும் தமது உரிமையைப் பெறுவதிலும் கொலனித்துவ காலங்களில் விட்டுக் கொடுக்காமல் இருந்துள்ளனர்.

இங்கே விபரிக்கப்படுகின்ற பஞ்சாயத்து முறையானது பெரும் மன்னர்கள் இருந்தாலும் கொலனித்துவ காலத்தில் முதலியார், உடையார், ஆராச்சி, விதானை போன்ற பெயர்களில் கிராமங்களை நிர்வகித்து வந்துள்ளனர். இவர்கள் தமது உரிமைக்காக கொலனித்துவவாதிகளிடம் வாதிட்டுப் பெற்றுள்ளனர். இவற்றை யாழ்ப்பாணச் சரித்திரத்தில் ''தமிழரசர் காலத்தில், அதிகாரிகள் அரசவேதனம் பெறாது 'அதிகாரிவரி'ப் பணத்தினால் ஊதியம் பெற்றனர். அதிகாரிகளின் சீவனத்திற்கு வேண்டிய பொருள்கள் குடிகளினால் கொடுக்கப்பட்டன. பறங்கிகள், அவ்வாறு கொடுப்பது அதிகமான கொடுமைகளுக்கிட மெனக் கண்டு, பணவரியாக்கினர். வேளாளரும், சாண்டாரும் (சாணார்), தனக்காரருமே அவ் வரியையிறுக்கக் கடமைப்பட்டனர். அச் சாதியாருக்குள்ளே தலைமைக்கார உத்தியோகங்கள்

கொடுக்கப்பட்ட படியாற் போலும், அதிகாரிவரி அவர்கள் மாத்திரம் இறுக்க வேண்டியிருந்தது. பின், தலைமைக்கார உத்தியோகம் பெற்ற மடப்பளி, அகம்படிய முதலிய மேல்சாதியாளர், தமிழரசர் காலத்துக்குப் பின்வந்தோரான படியால், அவ்வரியிறுக்குங் கடமை அவர்களுக்கிருக்க வில்லை. (151 யாழ்பாணச் சரித்திரம்) வரிகள் அறவிட இவர்களுக்கு இச்குலத்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இவர்கள் வரி அறிவிடும் பொருட்டு இந்தியாவில் யமிந்தார் வகுப்பினரை ஏற்படுத்தினர்.

இவ்வாறு இலங்கையில் வெவ்வேறு பட்டங்கள் அழிக்கப்பட்டன இந்தப் பதவிகள் பல்வேறு குழுக்கள் அப்பதவியை அனுபவித்துக் கொண்டனர். ''தமிழரசர் காலத்திற் போலவே 'அதிகாரம்' என் னுந் தலைமைக்காரர் பறங்கியர் காலத்திலும் நியமிக்கப்பட்டிருந்தாலும், வரியறவிடும் முக்கிய தலைமைக்காரர், இறைசுவர் (Recebedor) என்றும், அவர்களுக்குக் கிழ் உள்ளவர்கள் 'தலையாரிகள் 'அல்லது 'மேயோறாஸ் (Mayoral) என்றும் அழைக்கப்பட்டார்கள். உத்தியோகங்களெல்லாம் உயர்ந்த சாதித் தலைவர்களுக்கே கொடுக்கப்பட்டன. தமிழரசர் காலத்தில் கப்பற் படைக்கு அதிபதிகளாயிருந்த கரையாரத் தலைவருக்கும், வேளாளருக்கு உதவியது போல் முதலியார் பட்டங்கள் கண்ணியமான உத்தியோகங்களும் கொடுக்கப்பட்டன. அவர்களுள்ளும், முக்குவர், திமிலர்களுள்ளும், கிராமத் தலைவர் பட்டங்கட்டி – களென்றழைக்கப்பட்டனர். மேல்சாதியாயுள்ளோர் அடிமைகளுக்கும் கீழ்சாதியினர் என்றெண்ணப் பட்டவர்க்கும் செய்து வந்த அக்கிரமங்களோ மிகப்பல.'' (பக், 136 இராசநாயகம் – யாழ்ப்பாணச் சரித்திரம்) இதிலிருந்து ஒரு மையப்பட்ட ஆட்சி முறையை பேரரசர்கள் காலத்திலும் சரி, முதலாளித்துவ காலத்திலும் ஏற்பட்டதில்லை எனலாம்.

மார்க்ஸ் இந்திய சமுதாய நிர்வாக முறையை பின்வருமாறு விபரிக்கின்றார். ''ஒரு புறத்தில் இதர எல்லாக் கீழ்த்திசை மக்களையும் போலவே இந்தியர் தமது விவசாயத்துக்கும் வாணிகத்துக்கும் இன்றியமையாத் தேவையான மாபெரும் பொது மராமத்துப் பணிகளை மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்திருந்தது, மறுபுறத்தில் நாடு முழுவதிலும் பரவலாக இருந்த இந்தியர்கள் விவசாயத்திற்கும், பட்டறைத் தொழில்களுக்கும் இடையே உள்நாட்டில் நிலவிய ஒற்றுமை காரணமாக சிறிய மையங்களில் சேர்ந்து வாழ்திருந்தது எனும் இரண்டு நிகழ்வுகள் ஏற்பட்டன. இந்த இரண்டு நிகழ்வுகள் மிகப் பழைய காலந் தொட்டே பிரத்தியேகத் இயல்புகளைக் கொண்டதான ஒரு சமுதாய அமைப்பு முறையை உருவாக்கியிருந்தன. இதுவே கிராமச் சமுதாய அமைப்பு எனப்படுவது. இது இந்தச் சிறிய இணைப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் சுயேட்சையான ஸ்தாபனத்தையும் தனிச் சிறப்பான வாழ்வையும் அளித்தது. இந்திய விவகாரங்களைப் பற்றி பிரிட்டிஷ் கொமன்ஸ் சபை வெளியிட்ட ஒரு பழைய அதிகார பூர்வமான அறிக்கையில் உள்ள பின்வரும் விளக்க உரையில் இருந்து இந்த அமைப்பு முறையின் அலாதியான தன்மையை முடிவு செய்ய முடியும்.

"நிலவியல் சார்ந்த முறையில் கருதிப் பார்க்கின், ஒரு கிராமம் என்பது சில நூறு அல்லது ஆயிரம் ஏக்கர்கள் விளை நிலமும் தரிசு நிலமும் கொண்ட நாட்டுப் பிரதேசமாகும். அரசியல் முறையில் நோக்கினால் அது ஒரு மாநகராட்சி அல்லது நகராட்சியை ஒத்திருக்கிறது. அதன் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் வழக்கமான அமைவு பின்வரும் விளக்கத்தின் பாற்பட்டதாகும். பட்டேல் அல்லது கிராம நாட்டாண்மைக் காரர், இவர் பொதுவாக கிராம அலுவல்களை மேற்பார்வை செய்கிறார், கிராம வாசிகளிடைடையே எழும் தகறாறுகளை தீர்த்து வைக்கிறார், போலீஸ் பணிகளை கவனிக்கிறார், தனது கிராமத்தின் உள்ளே வரி வசூலிக்கும் கடமையை செய்கின்றார். அவருக்குச் சொந்த செல்வாக்கு இருப்பதாலும் மக்களின் நிலமையையும் கவலைகளையும் பற்றி அவருக்கு நுட்பமான பரிச்சயம் இருப்பதாலும் இந்த வரிவசூல் பொறுப்புக்கு ஆகச் சிறந்த தகுதி படைத்தவராக திகழ்கிறார், கர்ணம் என்பவர் சாகுபடி பற்றிய கணக்குகளை வைத்திருப்பவர், அதன் சம்மந்தப்பட்ட விவரம் எல்லாவற்றையும் பதிவு செய்து வைத்திருப்பவர். தலையாரி என்பவரின் கடமை குற்றங்கள் சட்ட விரோதச் செயல்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல், ஒரு கிராமத்தில் இருந்து இன்னொரு கிராமத்துக்குப் பிரயாணம் செல்லும் ஆட்களுக்குத் துணையாகச் சென்று அவர்களைப் பாதுகாப்பது என்பனவாகும். தோட்டி என்பரின் வேலைகள் நேரடியாயும் கிராமத்துடன் அமைந்து விட்டனவாகும், இவரது இதர கடமைகளில் பயிர்களைப் பாதுகாத்தலும் விளைச்சலை அளப்பதற்கு உதவி செய்வதும் அடங்கும். எல்லைக் காவலர் கிராம எல்லைகளைப் பாதுகாக்கிறார், அவைகுறித்துத் தகராறு எழுந்தால் சாட்சியம் அளிப்பார். குளங்களையும் பாசன வாய்க்கால்களையும் மேற்பார்வை செய்பவர் விவசாயத்துக்காகத் தண்ணீரை வினியோகம் செய்வார். பிராமணர் கிராமத்தில் கோவில் பூசை நடத்துவார். பள்ளியாசிரியர் கிராமத்தில் குழந்தைகளுக்குப் படிக்கவும் மணலில் எழுதவும் கற்பிக்கக் காணலாம். மேலும் பஞ்சாங்கப் பிராமணர் அல்லது சோதிடர் முதலியோரும் உண்டு. இந்த அதிகாரிகளும் ஊழியர்களும் தான் பொதுவாக கிராம நிர்வாகத்தின் உறுப்பிர்களாக அமைந்துள்ளனர். ஆனால் நாட்டின் சில பிரதேசங்களில் இவர்கள் குறைந்த அளவிலேயே உள்ளனர். மேலே குறிப்பிடப்பட்ட சில கடமைகளையும் பணிகளையும் ஒரே நபர் சேர்த்து நிர்வகிப்பார். வேறு சில பிரதேசங்களில் மேலே விவரிக்கப்பட்டதை அதிகமான நபர்கள் நிர்வாக உறுப்பினர்களாக உள்ளனர். இந்த எளிய ஊராட்சி முறையின் கீழ் அந்த நாட்டு மக்கள் தொன்மையான பழங்காலம் முதல் வாழ்ந்து வருகின்றார்கள். கிராமங்களின் எல்லை வரம்புகள் மாற்றப்பட்டதே இல்லை எனலாம். போர், பஞ்சம் அல்லது நோய் சில சமயம் இந்த கிராமங்களுக்கே தீங்கிழைத்துப் பாழாக்கிவிட்ட போதிலும் அதே பெயர், அதே நலன்கள், அதே குடும்பங்கள் கூட கால காலமாகத் தொடர்ந்து நிலவின. அரசுகள் தகர்வதையோ

பிளவுறுவதையோ பற்றி அக்குடிமக்கள் கவலைப்பட்டதே இல்லை, கிராமம் முழுமையாக இருக்கும் போது அது எந்த அரசுக்கு மாற்றப்படுகிறது, எந்த மன்னரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. கிராமத்தின் பொருளாதார அமைப்பு மாறுதலின்றி அப்படியே இருக்கிறது. பட்டேல் இன்னும் கிராமத் தலைவராகவும் சிறு குற்றங்களை விசாரித்து நீதி வழங்குவோராவும் வரிவசூல் அதிகாரியாகவும் விளங்குகிறார்'' (ப199 – 200 மார்க்ஸ், தொகுதி 3) இந்தப் பஞ்சாயத்து முறை என்பது கொலனித்துவவாதிகளின் குறிப்பாக பிரித்தானியர்களின் தலையீட்டினால் பலாத்காரத்தினால் சிதைக்கப்பட்டது என மார்க்ஸ் கூறுகின்றார். இத்துடன் தேசியங்களின் சுதந்திரமான எல்லைகளையுடைய நாட்டு எல்லைகள் உருவாக கொலனித்துவம் தடுத்துவிட்டது. ஆனால் பரவலாக வாதிக்கப்படும் வாதங்களை பார்ப்போமானால் மக்கள் அல்லது பணக்கார வர்க்கம் தலைதூக்கி தனது சந்தையின் பொருட்டு எல்லையை வகுத்துக் கொள்ள வில்லை என்பதை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்கு தேசங்கள் தமது பழைமை வரலாற்றை கொண்ட தேசங்களில் உள்ள நிலப்பிரபுத்துவ, பணக்கார விவசாய வர்க்கம் மூலதனத்தை மையப்படுத்தியும், சந்தையை வரையறுக்கும் பொருட்டு எல்லையை வகுத்துக் கொண்டது. அத்துடன் வளர்ந்து வந்த முதலாளித்துவம் தமது தேசிய இனத்துடன் சேர்ந்து கொண்டு தமது இனத்து தேசிய முதலாளித்துவ வர்க்கத் தலைமையில் எல்லையை வகுத்துக் கொண்ட இரண்டு பழைய தேசங்களின் உருவாக்கத்தைக் காண முடியும். ஒரு இனத்தின் பரம்பரை ஆட்சி செய்திருந்தாலும் முன்னர் இருந்து கொண்ட அரச எல்லைகளைக் கொண்டு முதலாளித்துவ சந்தை கோருகின்ற தேசிய எல்லைகள் இருந்தது எனக் கொள்ள முடியாது. முதலாளித்துவ அரச எல்லைகள் கொலனித்துவ வாதிகளால் உருவாக்கப் பட்டது. எல்லைகள் தமது சுரண்டலுக்கு வசதியாகவே வரையறுத்துக் கொண்டனர். வளர்ந்து வந்த முதலாளித்துவம் தேசியங்களின் வளர்ச்சியை துரிதப் படுத்தியது. இதனால் தேசியங்கள் ஒவ்வொன்றும் தமது எல்லையை வரைந்து கொள்ள முடிவு செய்தனர்.


## 1.5.2 சனநாயகம் பற்றி

ஜனநாயகம் என்ற சொல் எல்லோர் வாய்களில் இருந்தும் உச்சரிக்கப்படுகிறது. இந்தச் சொல்லின் அர்த்தம் எவ்வகையாக விளங்கப்பட்டிருக்கின்றது, என்பது நாம் விளக்கம் பெறுவது அவசியமாகிறது. சனநாயம் என்றால் மக்கள் ஆட்சி எனப்பொருள் பட்டாலும் அது கிரேக்கத்தில் அன்றைய கால கட்டத்தில் பாவிக்கப்பட்ட போது அது சமூகத்தின் மேட்டுக் குடிகளை மட்டுமே குறித்து நின்றது. அதாவது

கல்வியறிவுடையோரும், பொருளாதாரத்தில் மேல்நிலையில் இருந்தோர்களுமாவார்கள். ஆனால் அடிமைகள் இதில் அடங்கவில்லை. இந்த நூற்றாண்டின் இறுதி பின்னர் வரைக்கும் அதாவது வாக்குரிமையானது பால், பொருளாதார தரம் பார்க்காது அனைவருக்கும் வாக்குரிமை, பாராளுமன்ற சனநாயகம் என்ற போர்வையின் கீழ் அந்த சொல் மறுபடியும் ஒழிந்து கொண்டது. இதே சிந்தனையோட்டம் இன்றும் பாராளுமன்ற சனநாயகம் என்ற போர்வையின் கீழ் மறைந்து கொண்டு செயற்படுகின்றது.

இதற்கு இன்றைய நாட்களில் ஏற்பட்ட எமது நேரடி அனுபவத்தின் ஊடாக நாம் விளங்கிக் கொள்ள முடியும். அதாவது கிழக்கு ஐரோப்பிய சரிவின் போதும், பின்னரும் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கும் தகவல் தொடர்பு சாதனங்கள் எல்லாம் கிழக்கு ஐரோப்பியாவில் முதலாளித்துவம் ஆட்சிப்பீடம் ஏறியபோது அந்த நாடுகள் அனைத்தும் சனநாயக் காற்றை சுவாசிக்கத் தொடங்கி விட்டது என அவர்கள் எஜமானர்களாகிய ஏகாதிபத்தியவாதிகளின் உள்ளார்ந்த கருத்தை அப்படியே ஒப்புவித்ததுடன் பிரச்சாரத்திலும் ஈடுபட்டனர்.

சனநாயகம் என்ற சொற்சிலம்பத்திலிருந்து சுரண்டுபவர்கள் முதலாளித்துவ – சந்தைப் பொருளாதாரத்தையே பொருள் படுத்துகிறார்கள் என சுரண்டலாளர்கள் பாவிக்கும் பொருளில் இருந்து புரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த முதலாளித்துவவாதிகளின் சொற்சிலம்பத்திற்கு பலியாகமல் இருக்கும் பொருட்டு, சுரண்டப்படும் வர்க்கத்தவரான உழைப்பாளிகள் சனநாயகத்தின் உண்மையான பொருளை நாம் விளங்கியிருக்கவேண்டியது அவசியமாகும். இங்கே இரண்டு வகையான சனநாயகத்தைப் பார்ப்போம், அதேவேளை இரண்டு வகையான கலாச்சாரம், உரிமைகளையும் மேலோட்டமாகப் பார்ப்போம்.



## 1.5.3 முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு மாற்றம் பெறுதல்

இரண்டு வகையான சமூக பொருளாதார உற்பத்தி மாற்றத்தை கொண்டு வர முயற்சிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட அரசியல் சித்தாந்த வழிமூலமாகக் கொண்ட செயற்பாடுகள். அவைகள் முதலாளித்துவ, சோசலிச சிந்தாந்தங்களைக் கொண்டதாவும் இருக்கமுடியும். அந்த சிந்தாந்தங்கள் ஒவ்வொரு வர்க்கங்களுக்கும் உதவிபுரியும் என்பது பற்றி அதிகம் இங்கு விளக்க வேண்டியது இல்லை. ஆனால் இந்தச் செயற்பாட்டிற்குப் பின்னால் அதன் விழைவுகளுக்கும் பின்னால் ஒரு வர்க்கம் ஒன்றை அனுபவிப்பது கவனிக்கப்படவேண்டியதாகும். (ஒவ்வொரு வர்க்க இருப்பமே காரணமாகின்றது.)

உ. ஒவ்வொரு வர்க்கமும் ஒவ்வொன்றை விழுங்கி ஏப்பம் விடுகின்றது. ஒவ்வொன்றும் விழுங்குவதன் மூலம் தமது வர்க்கத்திற்குரித்தான பொருளாதார உற்பத்தி முறையை நிலைநிறுத்தும். (அதாவது நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறுவது போல்) ஆனால் இது சோசலிச உற்பத்தி முறைக்குச் செல்வது போன்று தமது (முதலாளித்துவ) வர்க்கம் நடத்து கொள்வதில்லை என வரலாற்றை தனதாக்கி கொள்ளும் வரலாற்று ஆசிரியர்களை அதற்கு விசுவாசமாகவே எழுத வைப்பர்.

நிலப்பிரபுத்துவ பொருளாதார, அரசியல் அமைப்பிலிருந்து மாற்றம் பெறும் பொருட்டு அந்தந்தக் கால கட்டங்களில் முதலாளித்துவ சிந்தனை கொண்ட சக்திகளினால் போராட்டம் நடைபெறுகின்றது. இந்த வரலாற்றுப் போக்கில் முதலாளித்துவ பொருளாதார அமைப்பை, அரசியல் அதிகாரத்தை உருவாக்கும் பொருட்டு போராட முற்படுகின்றன. இவர்களை பின்வரும் பகுதிகளாக பிரிக்கலாம்.

1. வரலாற்றில் காணப்படும் பொருளாதார மாற்றம். (நிலப் பிரபுத்துவத்தில் இருந்து முதலாளித்துவத்திற்கு)

உ. முதலாளித்துவ சிந்தனை கொண்ட தேசியவாதிகள் இந்த முயற்சியை மேற்கொள்ளலாம். இலங்கையில் 1984 இல் பிரிவினைக் கெதிரான சட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அரசியல் தந்திரோபாயம்

3. பாட்டாளி வர்க்கத் தலைமை

பாட்டாளி வர்க்கத் தலைமையானது இந்தக் கட்டத்தை முதலாளித்துவ புரட்சி என்பது முதல் கட்டம் எனக் கொள்கின்றனர். இந்தக் கட்டத்தை 1921 புதிய பொருளாதாரக் கொள்கை எனப் பிரகடனப்படுத்தினர். ஆனால் இதன் சிறப்பம்சம் என்னவெனில் சோசலிச வாதிகளின், பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடைபெற்றதாகும். இதற்கு லெனின் தலைமை தாங்கினார். மாவோ சீன நிலமைகளுக்கு ஏற்றவாறாக புதியசனநாயகப் புரட்சியை நடத்தி முடித்தார்.

1983 ஆம் ஆண்டு ஜே. ஆர் இனின் ஆட்சியின் போது பிரிவினைவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்திற்கு எதிராக எவ்வாறான போராட்டத்தை நடத்தவது என்ற பிரச்சினையில் அனைத்து இயக்கங்களும் தத்தளித்தது என்பதை இயக்கங்களின் நடவடிக்கைகளே சாட்சியாகின்றது. இதற்கு எதிராக குட்டி முதலாளிய அமைப்பிற்கும் முக்கிய விடுதலை இயக்கத்திற்கும் இடையில் நடவடிக்கையில் மாறுபாடான அரசியல் தந்திரோபாயங்கள் இருந்தன எனினும் வர்க்க நிலையின் வளர்ச்சியின் பக்குவமின்மை என்பது வெற்றி கொள்ளக் கூடிய தந்திரோபாயம் வகுக்க முடியவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கருத்தாக தமிழர் விடுதலைக் கூட்டணியினரைத் தவிர ஏனையவர்கள் இவ்வொப்பந்தத்தை எதிர்க்காமல் சத்தியப் பிரமானம் செய்யும் படி பிரசுரம் விட்டனர். இதனால் கூட்டணியினர் இந்தியாவில் அஞ்ஞாவாசம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இவ்வாறான வரலாற்று நிகழ்வை ஆராய்ந்து பொதுவான தீர்வை முன் வைத்திருந்திருந்தால் போராட்டத்தை சரியான பாதையில் வழிநடத்தியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு நடை பெறவில்லை. ஆனால் சத்தியப்பிரமாணம் செய்யும் படி கோரியதற்கு முக்கிய வாதம் மாற்றீடாக பொருளாதார வசதி இல்லை என்பதே. இதற்கு எதிராக சத்தியப் பிரமாணம் செய்தால் நிச்சயம் வேலை இழப்பர். ஆனால் இழந்த தொழிலாளர்களுக்கு மாற்றிடாக அந்த இடத்தில் வேலைக்கு அமர்த்த சிறப்புத் தேர்ச்சியுடைய தொழிலாளர்கள், பயிர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இருந்திருக்க வேண்டும், ஆனால் அவ்வளவு தொகையில் தொழிலாளர்களை உடனடியாக பெறவும் முடியாது, வெற்றிடத்தை நிரப்பியும் இருக்க முடியாது. இந்த வெற்றிடத்தால் நட்டமடையும் சிங்கள முதலாளித்துவம் நிச்சயம் தனது தொழிற்சாலை, நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடாமல் கிடப்பில் விடவும் மாட்டாது. இதனால் அதிர்ப்தியுற்ற சிங்கள முதலாளித்துவம் போர்க் கொடி தூக்கியிருக்கும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இன்னும் முன்வைக்கப்பட்ட பல கருத்துக்களைப் பார்ப்போம்.

சத்தியப்பிரமாணம் செய்திருக்கும் பட்சத்தில் தமிழ் முதலாளித்துவம் தன்னிடம் உள்ள மூலதனத்தை தமிழ் பிரதேசங்களில் முதலிடவும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினரிடம் இருக்கின்ற பணம் என்பது லாபம் சம்பாதிக்கும் நோக்கில் முதலீட செய்ய சந்தைக்கு வந்திருக்கும். இந்த முயற்சியானது முதலாளி வர்க்கமே முதலாளி வர்க்கத்தை விழுங்கி ஏப்பம் விட்டிருக்கும், மாறாக இது நடைபெறவேயில்லை. (இந்த வேளையில் தலைநகரில் நடைபெறும் தன்மையையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும். இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து போகும் பணத்தில் பெரும் பகுதி கொழும்பிலேயே தங்கிவிடுகின்றது. வெளிநாட்டில் இருந்து செல்லும் பணத்திலேயே வாழ்க்கை நடத்தும் குடிபெயர்ந்த தமிழ் மக்கள் வீட்டு வாடகை, மற்றும் வியாபாரிகளிடமும் பெரும் பகுதியை இழந்து விடுகின்றனர். இந்தப் பணமானது முதலாளித்துவ உற்பத்தியில் பயன்படாமல் முடங்கிய நிலையே காணப்படுகின்றது. இதற்கு ஏகாதிபத்திய சுரண்டலும் தேசிய முதலாளியத்தை வளர விடாத கொள்கையும் காரணமாகின்றது.)

வேலையிழந்த தொழிலாளர் வர்க்கம் தமது வர்க்க நிலையை உணர்ந்திருக்கும். தமிழ்த் தேசியம் தனது சந்தையை உறுதிசெய்திருக்கும், சிங்கள முதலாளித்துவம் தனது சந்தைக்கு அச்சுறுத்தலாக இருந்த ஜே. ஆர், இனை எதிர்த்துப் போர்க் கொடி தூக்கியிருக்கும். இவ்வாறான இனவாதச் சக்திகள் அம்பலப் பட்டிருக்கும். இதனால் வர்க்கச் சக்தி ஒன்றிணைந்து இலங்கை புரட்சியை முன்னெடுத்திருக்கும். இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது எனினும் இன்று இவைகளை எடுகோள் நிலையில் இருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

போராட்டப் பாதையினை வகுத்ததில் குறைபாடு உண்டு. இதில் கருத்து முரண்பாடு இல்லை, எனினும் சித்தாந்தப் பற்றாக்குறையினை இங்கு காணமுடிகின்றது. சத்தியப் பிரமாணம் செய்வதற்கு எதிராக செயற்பட்ட முன்னாள் விடுதலை இயக்கமானது இந்தச் செயற்பாட்டை அனைத்து தேசியவாதிகளையும், கம்யூனிஸ்ட்டுக்களையும் இணைத்து இந்தப் போராட்ட யுக்தியை செயற்படுத்தாமல் தமது அமைப்பு மாத்திரமே இந்தப் போராட்டத்தை நடத்த வல்லவர்கள் என்ற பெருமை கொள்ளும், மேதாவிலாச (குறுங்குழுவாதமே தலை தூக்கியிருந்தது) நோக்கில் செயற்பட்டனர். எந்தச் சிறந்த கொள்கைகளையும் தாமே உரிமையுடையவர்களாக கருதுவதில் எந்தவொரு பிரயோசனமும் இல்லை. இந்தக் குழுவாத நடவடிக்கையானது தேச விடுதலையை சிதைவிற்கு இட்டுச் செல்லும் நிலைக்கு கொண்டு வந்து விட்டது.

இவை கருதுகோள் எனக் கூறப்பட்டாலும், தேசிய பொருளாதாரத்தை முன்வைக்கக் கூடிய வர்க்க நிலையில் இவர்கள் இருந்திருக்க வேண்டும். முதலாளித்துவ தேசிய எல்லையை வரையறுக்க வேண்டும் எனக் கூறப்பட்டாலும், தேசிய முதலாளித்துவ வர்க்க உணர்வு வளர்ச்சி அடையவில்லை. இந்த முயற்சி போராட்டத்தை தலைமை தாங்கிய சக்திகள் தொடர்பாகவும் கேள்வி எழும்புகின்றது. போராட்ட சக்திகள் தேசிய முதலாளித்துவ சக்திகளாக இருந்திருப்பின் தேசிய முதலாளி புரட்சியை, தேசிய பொருளாதாரத்தை கட்ட முயற்சி எடுத்திருப்பர். இவர்களின் முதலாளித்துவ தேசியப் பண்பு முழுமையடையாமல் நிலப் பிரபுத்துவ சமுதாயத்தை பாதுகாக்கும் அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டனர். இந்த வரலாற்றுத் தவறுகளினால் முற்போக்கு சக்திகளை அழித்து, பிற்போக்கு சக்திகள் தேச விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கவும், இவ்வளவு அவலத்திற்கும் வித்திட்டது. எனவே இன்று **விடப்படும் தவறுகளைப் பற்றி பக்கம் பக்கமாக விமர்சிப்பதில் எவ்வித பிரயோசனம் இல்லை.** ஏனெனில் இன்றைய நிகழ்வுகள் குறுகிய கால விழைவுகளின் வெளிப்பாடுகள் அல்ல.

இந்த வரலாற்று நிலையை ஆராயும் இடத்தில் இயக்கங்கள் எவ்வகையான தத்துவ வறுமையைக் கொண்டிருந்தனர் என்பதையும் இயக்கங்களே போராட்டப் பாதையை சிதைத்தனர் என்பதை இதில் இருந்து அறிய முடியும். ஒருசிலர் கற்ற நுனிப்புல் மேய்வது போல் மார்க்சியத்தைக் கற்று விட்டு, அவர்கள் இயக்கங்களில் உள்ள தத்துவ ஆசிரியர்களாகவும், சிறந்த அறிஞர்களாக மதிக்கப்பட்டனர். இவர்கள் மார்க்சியத்தை கற்றுக் கொண்டு இயக்கங்களில் தமது பதவிக்காக பயன்படுத்தினர். இவர்கள் கொண்ட தத்துவ வறுமையை இன்று இயக்கங்கள் அனைத்தும் சீரழிந்த நிலையைக் கொண்டு, இவர்களின் வர்க்க நிலையானது முக்கிய பாத்திரம் வகித்தது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

தேசிய முதலாளித்துவம் வளர்ச்சியடையவில்லை, முக்கியமாக பாட்டாளி வர்க்கம் அன்று முழுமையாக அமைப்பு வடிவம் எடுத்து அணி திரளவில்லை. வர்க்க வளர்ச்சியின் பாத்திரம் என்பது முக்கியமாகின்றது. வர்க்க வளர்ச்சி நிலை என்பது பிரச்சனைக்கான தேடலையும் முன்நிறுத்துகின்றது. இந்த நிலையில் பலவீனம் இருந்ததையே கடந்த கால வரலாறு சுட்டி நிற்கின்றது. ஏனெனில் தேசிய சக்தியாக இருந்திருப்பின் முதலாளித்துவ புரட்சியை நிறைவேற்றியிருப்பர். தேசியமானது தனது சந்தையை வரையறுத்துக் கொண்டிருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு தனியே ஆயுதப் போராட்டத்தில் மாத்திரம் தங்கிருந்தனர்.

தேசிய முதலாளித்துவத்திடையே ஏற்படுகின்ற அச் சுறுத்தல்கள் மோதல்களாக வெடிக்கின்றன. இதில் ஒன்றை ஒன்று அடிபணியவைக்க முயற்சிக்கும். தமிழ்த் தேசியத்தை முன்வைக்கின்ற இயக்கமானது தனக்கு எதிராக தமிழ் எதிர் வர்க்கத்தை இல்லாது ஒழிக்கின்றது. இன்றைய தேசிய கட்டத்தில் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தையும் தேவை ஏற்படும் பட்சத்தில் வளர விடும் தேவை முடிந்த பிற்பாடு அதனை அழிக்கவும் தயங்காது. சிங்களப் பூர்சுவா அரசானது எதிர் இனத்தைச் சேர்ந்த மக்களையும் தமது வர்க்க நலனைப் பாதுகாக்க கொடூரமாக நடந்து கொள்வது என்பது இயல்பான விடயமே.

இவ்வாறே முஸ்லிம் மக்கள் வெளியேற்றம், சிங்கள மக்கள் மீதான தாக்குதல் என்பது தமிழர்கள் பக்கம். தமிழர்கள் மீதான இனவெறி அரசு தொடுக்கின்ற யுத்தம். இவற்றிற்கு நடுவே ஒரு வர்க்கம் பலமற்று கருத்தியலுக்கு பலியாகியுள்ள இன்றைய நிலையில் ஒடுக்கும் வர்க்கத்திற்கு பின்னால் அணிதிரண்டு உள்ளது. இந்த ஒடுக்கப்படும் வர்க்கத்தினர் மீது இரண்டு இனத்தினதும் ஒடுக்கும் வர்க்கங்கள் சுரண்டிக் கொண்டுதான் இருக்கின்றன. இவை அழிவுப் பாதை வழிமுறையைக் கைக் கொண்டதாகும். இவைகள் தமது வர்க்க நலனின் பால் தொடுக்கின்ற யுத்தம். இந்த யுத்தம் நிச்சயம் காட்டுமிராண்டித்தனமாகத்தான் இருக்கும். இயக்கங்களும் ஒரு இனத்தையும், ஒரு வர்க்கத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதினால் மாற்று அரசாங்கமாக மாறுகின்றது.

இவற்றை சரியாக கணிப்பிடாமல் மையவாதத்திற்கும், புலியெதிர்ப்பு வாதத்திற்கும் பலியாகி உள்ள காட்சியை தமிழ்ப் புத்திஜீவிகளிடையே காணலாம் (இக் கொடூரத்தை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பார்க்காது விட்டுவிடுவதால் பல தவறுகளை இழைக்கின்றோம். இக்கணிப்பீட்டுத் தவறினால் தன்னியல்பு வாதம், சாத்திய வாதத்துள், பலியாகி முன்னோக்கி நகர முடியாமல் தேங்கி நிற்கும் நிலையை அடைவதை இயல்பானதாகக் கருத வேண்டும்.) இயக்கங்கள் கூட இச்சீரழிந்த சமூக அமைப்பின் உற்பத்திப் பண்டமே மாறாக இது ஒன்றும் வெளியில் இருந்து உருவாக்கப்படவில்லை. இன்னும் குறிப்பாகக் கூறப் போனால் நிலவி வருகின்ற பிற்போக்குச் சமூக அமைப்பில் இருந்து பெறப்பட்ட அல்லது அதற்கு உட்பட்ட பிற்போக்குக் கருத்தில் உருவான ஒரு சக்தியே. இருக்கின்ற சமூகப் பொருளாதார உற்பத்தி நிலையை மாற்றும் போக்கிலேயே செயற்பாடுகள் அமைய வேண்டும்.

பொருளாதார வளர்ச்சியினூடே பொருளாதார உற்பத்தி அமைப்பிடையே மாற்றம் ஏற்படுகின்றது. இந்த வளர்ச்சியினூடாக மத்தியப்படுத்தப்பட்ட அரச நிர்வாக முறை என்பது பொருளாதார முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு


அவசியமாகின்ற போது அவை சனநாயம் என்ற கருத்தியலில் நவீன மொழியாடல் கொடுக்கப்படுகின்றது. இதற்கு கொடுக்கப்படுகின்ற மொழியாடல் என்பது கடந்த காலத்தை போலல்லாது அதாவது கைத்தொழிற் புரட்சிக்கு முன்னைய காலத்திற்கு மாறாக புதிய கருத்துருவம் கொடுக்கப்படுகின்றது. இதன் விளைவே நவீன அரசுகள் எனக் கொள்ளப்படுகின்றன. அதற்குள் தேர்தல், நாடாளுமன்றம், மத்தியவங்கி (ஏனெனில் முதலாளித்துவத்தின் கொள்கை வரையறுப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றது. பாரீஸ் கம்யூன் புரட்சிக் காலத்தில் மத்தியவங்கி சுதந்திரமாக இயங்கப்பட்டதை மார்க்ஸ் சுயவிமர்சனம் செய்து கொள்கின்றார். அத்துடன் அப்படி சுயமாக இயங்குவது ஆபத்து என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.) வரையறுக்கப்பட்ட எல்லை, நிறுவனமயப்பட்ட உரிமைகள், ஆட்சிமொழி இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம். முதலாளித்துவம் என்னும் போது அதற்கு மத்தியப் படுத்தப்பட்ட அதிகாரமும், எல்லையும் முக்கியமானதாகும். இந்த அரசுகள் பறைசாற்றும் சனநாயகம் என்னவெனப் பார்ப்போம்.

## 1.5.4 முதலாளித்துவ சனநாயகம்

சட்டங்களை இயற்றி அதன் மூலம் தமது குடிகளுக்கு உரிமை வழங்குவதாக பிரகடனப்படுத்துகின்றது. இந்த உரிமைகள் வரையறுக்கப்பட்டதாகவும், மட்டுப்படுத்தப்பட்டதாவும் இருக்கும். ஏனெனில் அரசு என்பதே வர்க்கம் சார்ந்து இருப்பதனால் ஆளும் வர்க்கத்தினை பாதுகாக்கும் வகையில் அமைப்பட்டதாகவே இருக்கும். ''சமுதாயத்தின் எதிரே அரசு ஒரு சுதந்திரமான சக்தியாக ஆனதும் அது உடனே ஒரு புதிய சித்தாந்தத்தை உண்டு பண்ணுகிறது. முழுநேர அரசியல்வாதிகள், பொதுச்சட்ட தத்துவாசிரியர்கள், தனிநபர் பற்றிய சட்ட வல்லுநர்கள் ஆகியோரிடையே தான் பொருளாதார உண்மைகளோடு உள்ள தொடர்புகள் முற்றாகத் தப்பிவிடுகின்றன. ஒவ்வொரு குறிப்பிட்ட வழக்கிலும், சட்ட அதிகாரம் பெறுவதற்காக, பொருளாதார உண்மைகள் சட்டவியல் நோக்கங்கள் என்னும் வடிவத்தை எடுத்துக் கொள்ள வேண்டி இருப்பதாலும், அப்படிச் செய்கையில் ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள சட்ட அமைப்புமுறை முழுவதையும் கவனிக்கவேண்டி இருப்பதாலும், அதன் பின்விளைவாக, சட்டவியல் வடிவமே எல்லாமாகவும் பொருளாதார உள்ளடக்கம் ஒன்றுமில்லாமலும் ஆக்கப்பட்டுவிடுகின்றது. பொதுச் சட்டம், தனிநபர் பற்றிய சட்டம் இரண்டும், இவற்றிற்குரிய சொந்த சுதந்திரமான வரலாற்று வளர்ச்சி வாய்ந்த, இவற்றிற்குரிய முறை முறைப்படுத்தலுக்கு உட்பட்ட, எல்லா உள் முரண்பாடுகளையும் உறுதியாக ஒழிப்பதன் மூலம் இத்தகைய முறைப்படுத்தல் தேவை என்று கோரும் சுதந்திரமான துறைகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன'' (ப. 83 லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் – ஏங்கெல்ஸ்)

எமது நாடுகளில் சமூகப் பாதுகாப்பானது சட்ட ரீதியாக உறுதி செய்யப்படவில்லை. தனித்துவப்படுத்தும் செயற்பாடானது மேற்கு நாடுகளில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதாவது மேற்கு நாட்டுப் பாட்டாளிகள் எமது நாடுகளில் இருந்து பெறும் உபரியின் ஊடாக அவர்களின் வர்க்க உணர்வு மழுங்கடிக்கப்படுகின்றது எனப்பார்த்தோம். அதேவேளை சமூக நல சட்டங்கள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று சம்பந்தம் இல்லை என்றவாறாக எல்லா நிறுவன அலகுகளையும் தனித்துவமாக இயங்குகின்றது எனக்காட்டுவதுடன் அவற்றை குறிப்பிட்ட நிறுவன அலகிற்கும் தனிநபருக்கும் இடையேயான நலன் கருதிய மோதல் அல்லது முரண்பாடாக அவர்கள் காட்டுகின்றனர். ''பொது மக்களுடையது, தேசத்துக்கானது, பொதுவானது, வர்க்கங்களுக்குப் புறம்பானது என்பதாய்ச் சொல்லப்படும், ஆனால் உண்மையில் முதலாளித்துவ ஜனநாயகமே ஆன இத்தகைய கோசங்கள் சுரண்டலாளர்களின் நலனுக்கே சேவை புரிகிறவை. நிலமும் ஏனைய உற்பத்திச் சாதனங்களும் தனியார் சொத்தாய் இருக்கும் வரை மிகவும் ஜனநாயகமான குடியரசும் தவிர்க்க முடியாதபடி முதலாளித்துவ சர்வாதிகாரமாகவே, விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில முதலாளிகள் மிகப் பெருவாரியோனாரான உழைப்பாளி மக்களை அடக்கியொடுக்குவதற்கான இயந்திரமாகவே இருந்து வருகிறது.'' (ப ௨0 சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன? லெனின்) யேர்மன் அரசரான பிஸ்மார்க் (Bismarck) என்பவர் பாட்டாளி வர்க்க போராட்டத்தை திசை திருப்பும் பொருட்டு தொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்கினார். இவராலேயே தொழிலாளர் காப்புறுதி திட்டம், போன்ற நடைமுறை திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கது.

தனிநபர் உரிமைகளை நிலைநிறுத்துவதாக பெருமை கொண்டாடுகின்ற அதேவேளை தமது வர்க்க நலனைப் பாதுகாக்கும் பொருட்டு அதற்குரித்தான சித்தாந்தத்தையும் பரப்புகின்றனர். இது தாராளவாதச் சிந்தனையாகும். இச்சிந்தாந்தத்தின் தனிநபர்வாதத்தை தாராளமாக இன்றைய மேற்கத்தைய சமுதாயத்தில் காணமுடியும், எமது தேசத்தில் உற்பத்தி சாதனங்களுடன் நேரிடையாக இணைத்துக் கொள்ளப்படாத (தொழிலாளர் வர்க்கத்தை அல்லாமல்) மூளை உழைப்பை வழங்குபவர்களிடையேயும், குட்டிப்பூர்சுவா வர்க்கத்தினர் இடையேயும் இது விதைக்கப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது.



## 1.5.5 நிறுவனமயப்பட்ட உரிமைகள் சட்டம்

முன்பு குலச்சமுதாயத்தில் இன்றைய சமுதாயத்தில் இருப்பது போன்று எழுத்துவடிவில் சட்டங்கள் இருந்ததில்லை. மாறாக எழுதாச் சட்டங்களே இருந்து வந்துள்ளது. அன்றைய சமூகத்தில் அறிவு விளக்கங் கொண்டதாகவும் இருக்கவில்லை. அச்சமூகத்தில் இருந்தது எல்லாம் மாயம் – பில்லி சூனியம் ஆகியவை ஆகும். அதே போல் குலத்தலைவனுக்கு பணிதலுடன் ஒருவருக்கொருவர் தார்மீகக் கடமையுடன் அவ் அமைப்பினுள் வாழ்ந்து வந்தனர்.

மனிதர்கள் செய்யும் தவறுகளுக்கு தண்டனையாக பணத்தையும், தட்சணையினையும் அறவிட்டது. இந்த தட்சணை மூலமாகப் பெற்ற பணமானது மூலதனமாக உருவாகியது. இதுவே வழமையாகவும் இருந்தது. கோவிலை மையமாக அமைத்து வளர்க்கப்பட்ட மதநிறுவனங்கள் இவ் மூலதனத்தை ஆதாரமாகக் கொண்டு தம்மை மென்மேலும் வளர்த்துக் கொண்டன. நிலப்பிரபுத்துவ சமுதாய காலத்தில் சட்டம் தண்டனை போன்றவை நிறுவனமயமாக்கப்பட்டது. நிறுவனமயப்பட்ட மதமானது தனது சட்டதிட்டங்களை வகுத்துக் கொண்டது.

மதநிறுவனங்களே முற்கால பழக்க வழக்கங்களை தெய்வக் குற்றமாக்கியதுடன் அவற்றை அநாகரிகமானதென வரையறுத்தது. இவர்கள் வழிவந்த கொலனித்துவ – வாதிகளும் எம்மை மக்கள் என்றே அங்கீகரிக்கவில்லை. இவர்கள் எம்மை மக்கள் என அங்கீகரிக்க நீண்ட காலங்கள் பிடித்தன. இவை இவ்வாறு இருக்க மதவாதிகளும் சமூகத்தின் மேல்தட்டைச் சேர்ந்தவர்களும் வரலாற்றை தமக்கு இசைவாக எழுதிக் கொண்டனர். ஏனெனில் சமூகத்தில் வர்க்கநிலை தோன்றுகின்ற போது சிறுபகுதியினரே பெரும் மக்களை, அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தனர் என முன்பு பார்த்தோம்.

எமக்கும் பண்டத்தின் உற்பத்திக்கும் மற்றும் மூலதனத்தை உரிமையாகக் கொள்ளக்கூடிய உரிமையை எம்மிடம் இருந்து தட்டிப்பறித்து விடுகின்றது. பறித்த பின்பு எமக்கும் அவற்றிற்கும் இடையேயான உறவு என்பது தொடர்பற்று (எட்டாத பழமாகிறது) போகிறது. அதேவேளை இந்நிலையைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டங்களை இயற்றி அவற்றை பாதுகாக்கின்றது. ''முதலாளித்துவத்தில் ஒடுக்கப்பட்டு வரும் வர்க்கங்களாகிய பாட்டாளி வர்க்கத்துக்கும் அரைப் பாட்டாளி வர்க்கத்துக்குமான அனைவருக்குமாகிய வெகுஜன நிறுவன ஒழுங்கமைப்பைத் தோற்றுவிப்பதும் வளரச் செய்வதும். முதலாளித்துவ – ஜனநாயகக் குடியரசு அதிகம் போனால், சுரண்டப்படும் வெகுஜனங்கள் நிறுவன ஒழுங்கமைப்பு பெறலாமென்று பிரகடனம் செய்வதன்

மூலம் அவர்கள் நிறுவன ஒழுங்கமைப்பு பெற அனுமதிக்கிறது ஆனால் உண்மையில் அது எப்பொழுதும் அவர்களுடைய நிறுவன ஒழுங்கமைப்புக்கு எண்ணற்ற முட்டுக்கட்டைகள் போட்டு வந்துள்ளது. இந்த முட்டுக்கட்டைகள் அகற்றப்பட முடியாதவை ஆகிவிடும்படி உற்பத்திச் சாதனங்களது தனியார் உடமையுடன் இணைக்கப்பட்டவை" (ப.81 லெனின் சோ.ஆட்சி.எ.என்ன?)

முன்பிருந்த கடமை உணர்ச்சிகள், பொறுப்புகள், உதறித் தள்ள வேண்டியது முக்கியமாகின்றது. இந்நிலையில் தனிநபர்கள் தம்மீது செலுத்தப் படுகின்ற சமூகக் கோட்பாடுகளை, சாத்திர சம்பிரதாயங்களை சமூக எச்சங்களை உதறித் தள்ள வேண்டிய நிலையில் அவசியமாகின்றது.. இவைகள் சனநாயகக் கோரிக்கைகள் என்ற நிலையை அடைகின்றது. இதன் காரணமாக தனிமனிதர்களின் சனநாயக கோரிக்கைகளை சட்ட ரீதியாக தான் அங்கீகரிப்பதாக காட்டிக் கொண்டு செயற்படுகின்றது.

## 1.5.6 நிர்வாகிகள் உருவாக்கம்

நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக உற்பத்திச் சாதனங்களை உடையவர்கள் நிர்வாகிகளை உருவாக்கிக் கொள்கின்றனர். இவர்கள் குலச் சமுதாயத்தில் தன்னியல்பிற்கு உட்பட்ட நிலை ஆகையால் குலத்தின் பெண்கள், குலத்தின் தலைவர், மந்திரவாதி ஆகியோர் நிர்வகித்திருப்பர். மனித குலத்தின் அடிநிலையில் இருக்கின்ற போது பெண் நிர்வகித்திருப்பாள். மனித குலத்தின் பொருளாதார உற்பத்தியை நோக்கிய நிலை உருவாகின்ற போது ஆண் தலைமையை பெண் தலைவியிடம் இருந்து பறித்தெடுக்க முடிந்திருக்கும்.

இதற்கு அடுத்த நிலையான நிலப்பிரபுத்துவத்தில் அரசனுக்கு கீழ் இருக்கின்ற மந்திரிகள், உளவாளிகள், கலைத்துறையினர் என பல்வேறு பிரிவினர் உருவாக்கம் பெறுகின்றனர். இவ்வாறான வளர்ச்சியில் இடம் பெற்ற ஒவ்வொரு நிர்வாகிகளும் ஒரு வர்க்கத்தை பாதுகாத்துக் கொண்டே இருக்கின்றனர். நிலப்பிரபுத்துவத்தில் தாழ்ந்த சாதிகளில் உள்ளவர்களுக்கு பதவிகள் கொடுத்து அவர்களைக் கொண்டே தம் இனத்தவரை ஒடுக்கப்பயன்படுத்தலும் நடைபெறுகின்றது.

முதலாளித்துவ சமுதாயத்தில் பல நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றது. நிர்வாகங்களில் பல உத்தியோகத்தர்கள் பதவிகளில் நிறுத்தப்படுகின்றனர். இவர்களே உள்ளூர் நிர்வாகத்தை கவனிக்கின்றனர். இவர்கள் மற்றைய சமூக உறுப்பினர்களில் இருந்து அதிக சம்பளம் உடையவர்களாகவும் பொருளாதாரம் (வேலைகளில் இருந்து நீக்கப்படுதல் இடம் பெறுவதும் உண்டு) நிச்சயமானதாவும் கொள்கின்றனர். இவர்களைக் கொண்டே

கொலனித்துவ காலத்தில் நிர்வாகம் செய்தனர். இந்த வர்க்கத்தினர் மற்றையவர்களை விட மேம்பட்டவர்களாக தம்மை கணித்துக் கொண்டனர். இவர்கள் அதிக சலுகை கிடைக்கும் பொருட்டு கொலனித்துவ காலத்தில் விசுவாசமாக வேலை செய்தனர். இவர்களில் தமிழர், சிங்களர்களும் இருந்தனர். இவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியாகவும் இருந்திருக்கின்றனர். இங்கு வர்க்க விசுவாசம் தான் மேல் ஓங்கி இருந்திருக்கின்றது.

முன்னர் குறிப்பிட்டது போன்று உருவாக்கப்படும் நிறுவனங்களுக்கு பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்கள் பற்பல போக்குக்களைக் கொண்டிருக்கின்றனர். நிர்வாகத்தில் சாதியின் சிந்தனை ஆழுமை செலுத்துவதைப் பார்ப்போமானால் உயர் சாதியைக் கொண்டவராக நிர்வாகத்தில் முக்கிய பதவி வகிப்பாராயின் அவர் மற்றைய சாதிகளுக்கு பாதகமாக செயற்படும் நிலை இருந்திருக்கின்றது. தாழ்ந்த சாதியினர் இவருக்கு முன்னைய சமூகத்தில் கொடுத்த மரியாதை புதிய சமூகத்திலும் கொடுக்க வேண்டும். தாழ்ந்த சாதியினரை பண்டைய சமுதாய அமைப்பில் இருந்த நிலைகொண்டே நாயே பேயே என்ற பேச்சு, தூசன வார்த்தைகளால் பேசுவது போன்றவைகள் இடம் பெறுகின்றது. தனது பெயரை நிலைநாட்டவும், முதலாளியிடம் நல்ல பெயர் வாங்கவும் உழைக்கும வர்க்கத்தை நாயாக வதைக்கும் நிலையும் இன்றும் தொடர்கின்றது.

எமது சமுதாயத்தில் பெரியவர் – சிறியவர் என்ற உறவு முறை இருக்கின்றது. இந்தப் படிமுறைப் போக்கினால் இருக்கின்ற தன்மை போன்ற பழைமையைக் கொண்ட தன்மைகளையும் நவீன காலத்தில் பயன்படுத்துவர். நிர்வாகிகள் என்பவர்கள் நடுநிலையாளர்களாக காட்டப்பட்டாலும் இவர்கள் இருக்கின்ற சமூக அமைப்பை பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர்.

## 1.5.7 சட்டங்களை வகுப்பவர்கள் யார்?

நாம் இன்றைய உலகில் இயற்றப்படுகின்ற சட்டங்கள் அனைத்தும் நாடாளுமன்றங்களின் ஒப்புதல்களுடன் நிறைவேற்றப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது. இந்தச் சட்டங்கள் சனநாயகம் கொண்டதாக காட்சியளிக்கின்ற போது இதன் பின்புலத்தில் என்ன இருக்கின்றது என்று கவனிக்காது விடுகின்றோம். இதற்க பல காரணங்கள் இருப்பினும் அரசு பற்றிய எமது புரிதலும் ஒரு காரணமாக அமைகின்றது. இந்தச் சட்டதிட்டங்ளை வரைந்து கொள்வது அதிகார வர்க்கமே. இவர்கள் முதலாளி வர்க்கத்தினால் சலுகைகள் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டவர்கள். இவர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை விட, அதிகாரத்தில் இருக்கும் இந்த அதிகார வர்க்கத்தினர் அதிக பலத்தைக்

கொண்டிருக்கின்றனர். இந்த அதிகார வர்க்கத்தை அகற்றுவது இலகுவான பணியல்ல. இவர்களை அகற்றுவதாயின் முழுக் கட்டுமானத்தையும் முழுமையாக கவிழ்த்த பின்னர் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் போதே சாத்தியமானதாகும். மாறாக மேற்கட்டுமானத்தில் ஏற்படும் எந்த மாற்றமும் இவர்களை அசைக்க முடியாது.

## 1.5.8 பாட்டாளி வர்க்க சனநாயகம்

இந்தச் சமூக அமைப்பில் பாட்டாளி வர்க்க செயற்காரியங்களை செயற்படுத்துவது முடியாத காரியம். ஆனால் போலி முதலாளித்துவ சுதந்திரம் இருந்த போதிலும் அவை முழு உரிமைகளையும் எமக்கு தருவதானது சாத்தியமும் இல்லை அப்படி இருக்கப் போவதும் இல்லை. இன்றைய முதலாளித்துவ அரசுகள் அதிகாரத்தை மத்தியப்படுத்தி வைத்திருக்கின்றன. ஆனால் பாட்டாளிகளை ஏய்க்கும் நோக்கில் அவை சுதந்திரமாக இயங்குவது போலவும், சனநாயகத்தை வழங்குவது போலவும் காட்சி தருவினும் அது (அரச என்றால் என்ன என்பதின் கீழ் பார்க்க) சாத்தியம் இல்லை.

பாட்டாளி வர்க்க சனநாயகம் மக்களை நேரடியாக அனைத்திலும் ஈடுபட வழி அமைக்கின்றதுடன் ஊக்குவிக்கின்றது. அதை அடைய வேண்டுமென்றால் எதிரிகளை வீழ்த்தி அதில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நிறுத்துவதின் மூலமே சாத்தியம். அதை நிலை நிறுத்துவதற்கு புதிய ரக அரசை கோருகின்றது. மார்க்சிய ஆசான்கள் புதியரக அரசை அமைப்பது மட்டுமல்ல பழைய அரசயந்திரங்கள் அப்படியே இருக்கப்படாது என்கின்றனர். ருஷ்யப் புரட்சியின் பின்னர் அதனை கவனத்தில் கொண்டு "அரசு அறவே மறையும் வரையிலான, இடைக்காலத்துக்குரியதான புதியரக அரசாகிய சோவியத் குடியரசு செய்யவேண்டியது பற்றி" (ப 25 சோ.ஆ.என்ன) கவனம் கொள்கின்றனர். சோவியத் ஆட்சியதிகாரத்தின் மூலமே சனநாயக மத்தியத்தின் கீழ் எமது உரிமைகளைப் பெறமுடியும்.

சமத்துவம் என்ற கோசம் தனிமனித, பால் (ஆண் – பெண்), இனம் என்ற தளத்திலாவது இருக்கட்டும் அந்த சமத்துவத்தை பேணுவது முக்கியமானதாகும். ஆனால் அந்த அனைத்துத்துத் தளங்களிலும் சமத்துவத்தை பாதுகாப்பது சாத்தியமானதா? தளங்கள் அனைத்தையும் பிரித்துப் பார்க்க முடியாதவையாகும் ஏனெனில் பொருளாதார அமைப்பை பாதுகாக்கின்ற வகையில் அமைந்த சிந்தனையே ஆளப்பதிந்துள்ளது. என்பதை ஏற்க மறுக்கப்படுகின்ற நிலையே இன்றுள்ளது.

சமத்துவம் என்ற கருத்தை சிந்தனையை வளர்ப்பதற்கு சட்டம் மாத்திரம் இயற்றினால் போதாது மாறாக சிந்தனையும் சகமனிதனை மதிக்கும் பழக்கமும் பலமுனைகளிலும் பேணப்படாததினால் சமத்துவம் என்பது பேணப்படுவதில்லை. இந்த நிலையானது பொருளாதார வர்க்க நிலை சார்ந்ததாக இருப்பதால் ஒவ்வொருவரையும் பாதிக்கின்றது. சமத்துவம் என்னும் சொல் வெறுமனே இன்றைய நிலையில் பொருளானது பாவிக்கப்பட்ட பின் பொருளானது கழிவு – சக்கை என்று அழைக்கப்படுகின்றதோ அதே போலத்தான் சமத்துவம் என்ற சொல்லிற்கும் பொருள் ஆகின்றது. மனிதனும் சக்கைபோல் ஆக்கப்படுகின்றான் இந்த முதலாளித்துவ சமுதாயத்தில் மனிதர்கள் ஒவ்வொருவரும் பண்டமாக மாறுகின்றனர். அந்தப் பண்டத்தில் சக்தி இருக்கும் வரையில் தான் அதன் பெறுமதி இருக்கின்றது. அதற்கு கொடுக்கின்ற மதிப்பும் அதுவரையில் தான் இருக்கும். இந்தச் சமத்துவம் பேணப்பட வேண்டுமானால் ஒருவரை ஒருவர் பொருளாதார நலனில் தங்கியிராமல் பொருள், பதவிபெறும் நோக்கில் அமைந்த சமூக உறவு என்பது சிதைவடைய வேண்டும். இந்தச் சிதைவின் சமாதியின் மேலே தான் சமத்துவம் என்பது நிலை நாட்ட முடியும். மாறாக வர்க்கங்கள் இருக்கையில் சமத்துவம் என்பதை நிலைநிறுத்த முடியாது.





பகுதி இரண்டு

# 2.1. மேற்கு நாடுகளின் ஆதிக்கம்

அமெரிக்கா, யப்பான், ஐரோப்பிய நாடுகளின் தலைமையின் கீழ் உலகப் பொருளாதாரமானது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இவர்களின் நலனின் கீழ்ப்பட்ட கொள்கையின் கீழ் சர்வதேச நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவை நிதிநிறுவனங்கள் அல்லது தொலைத் தொடர்பு நிறுவனங்களாக இருக்கட்டும் இதுவே தான் நிலை. இந்தக் கொள்கை உருவாக்கங்கள் ஏகாதிபத்திய பொருளாதார நலனைப் பாதுகாத்து நிற்கின்றன. கண்மூடித்தனமான ஏகாதிபத்தியச் சுரண்டலை விஸ்தரிக்கும் நோக்கில் (U.N.) ஐ.நா. சபை போன்ற பொது நிறுவனங்கள் செயற்படுகின்றன. சோமாலியா மீது ஐ.நா.வின் சமாதானப் படை நடவடிக்கைகள் இதற்குட்பட்டதே. பல குலச் சமுதாயமாக பிரிந்து வாழ்கின்ற மக்கள் பிரிவினரை ஏகாதிபத்தியமானது பலாத்காரமாக ஒன்றிணைந்த எல்லையை உருவாக்கியது. ஆனாலும் தோல்வியைத் தழுவிக் கொண்டு நாட்டை விட்டே வெளியேற வேண்டி இருந்தது. ஏகாதிபத்தியத்தின் சுரண்டலின் அகோரம் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் தென்படுகின்றன. இதன் விளைவுகளின் சாட்சியங்கள் தான் எமது நாடுகளில் நிலங்கள் எல்லாம் மனித இரத்தத்தால் நனைக்கப்படுதலாகும். இன்றைய நிலைக்கு அத்திவாரமானது பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டது. அத்துடன் நவீன காலத்தில்

ஏகாதிபத்தியங்கள் தமது அரசியலை மேற்கொள்கின்றது என்பதையும் இயங்கியல் ரீதியாக விளக்க முற்படுகின்றது.

## 2.1.1 கொலனியாதிக்கம்

ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியும், கனிவளப் பொருட்களுக்கான தேவையும் நாடுபிடிக்கும் பயணங்களுக்கு காரணமாக இருந்தது. இந்த நாடுபிடிக்கும் பயணங்கள் பற்பல மாற்றத்தை உண்டு பண்ணக் காரணமாக இருந்தது. நாடுபிடிக்கும் கொள்கைகள் இரண்டு பெரிய உலக யுத்தத்தையும், பல ஆயிரக்கணக்கான சிறு யுத்தத்தையும் உருவாக்கியுள்ளது. இவ்யுத்தங்கள் எத்தனையோ லட்சக்கணக்கான மக்களை பலிவாங்கியுள்ளது.

1500களில் தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்ட மாற்றமானது முதலாளித்துவம் என்ற கட்டத்தை உருவாக்கக் காரணம் ஆக்கியதுடன் செல்வச் செழிப்பில் இருந்த நாடுகளை சுரண்டிக் கொழுத்தனர். அதேவேளை மூன்றாம் உலக நாடுகள்,, பழங்குடிகளின் உலகம் என்பது கொலனியாதிக்கவாதிகளின் பொருளாதார நலனுக்கு ஏற்றதாகவே மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டது. வயல் வெளிகளை, காடுகளையும் இயற்கையாகக் கொண்ட மலைகளை தேயிலை கோப்பி போன்றவற்றிற்கும், பணப் பயிர்களை பயிரிடும் பிரதேசங்களாக மாற்றப்பட்டது. கொலனித்துவத்திற்கு முற்பட்ட ஈழப் பொருளாதாரமானது விவசாயத்தையே மூலாதாரமாகக் கொண்டிருந்ததுடன், மக்கள் இயற்கையுடன் தம்மை இணைத்துக் கொண்டு தமது வாழ்க்கையை நடத்திய மக்கள் தம்மிடம் இருந்த நிலப்பரப்பைக் கொண்டு, தம்மிடம் இருந்த உபகரணங்களைக் கொண்டும் தமது உழைப்பை வழங்கி தமது சீவியத்தைப் போக்கினர். தமது உணவை தாமே விளைவித்து தமக்குப் போதுமானதை எடுத்துவிட்டு மீதியை வேற்று நாட்டிற்கு அனுப்புமளவிற்கு தன்னிறைவு அடைந்திருந்தது.

விவசாயிகள் (சுதந்திரமான விவசாயிகள்) தம்மிடம் இருந்த நிலப்பரப்பைக் கொண்டு பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வந்தனர். நிலமற்ற விவசாயிகள் நிலவுடமையாளனின் கூலியாகவும் வாழ்ந்தனர். அதேபோல் நிலமற்ற விவசாயிகள் குத்தகைக்கு எடுத்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். வெள்ளையர்கள தமது வியாபாரத்துக்கு இலங்கையை பயன்படுத்தினார்கள். வியாபாரத்தின் முக்கியத்துவம் கருதி கோப்பி, தேயிலை, கறுவா, றப்பர் போன்றவற்றின் செய்கை பிரபல்யம் பெற்றது. இதன் காரணமாக காடாய் கிடந்த நிலங்களெல்லாம் தோட்டங்களாக மாறின. புதிய புதிய தோட்டங்கள் திறக்கப்பட்டன. இவைகள் எல்லாம் பணப் பயிரையே மையமாகக் கொண்டதாக விளங்கியது. இதன் காரணமாக மக்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களின் உற்பத்தியில் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை.

அதாவது பணப்பயிரை செய்த சிறு உற்பத்தியாளர்கள் பெரிய உற்பத்தியாளர்களுடன் போட்டி போட முடியாது தோற்றனர். இதன் காரணமாக அவ்மக்கள் வறுமையை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் ஒடுக்கப்படும் வர்க்கத்தின் ஒரு பகுதியாயினர்.

ஆதிக்கவாதிகள் தமது சுரண்டலை விஸ்தரிக்கும் பொருட்டு அடிமைகளாக ஆபிரிக்காவில் இருந்து பல லட்சக் கணக்கானோரை கொண்டு சென்றனர். ''அமெரிக்காவின் பூர்வீக சனங்களை வேரறுத்து அடிமைப்படுத்தி தங்கம், வெள்ளிச் சுரங்கங்களில் சமாதி செய்தது. இந்தியாவை வெற்று சூறையாடியது, அடிமை வியாபாரம், 'கறுப்புத் தோல்களை வாணிப வேட்டையாடுவதற்கான ஒரு முயற்சிக் காடாக ஆபிரிக்காவை மாற்றியது.'' (ப 5 மார்க்ஸ் மூ. தோற்றம்) இவற்றின் மூலம் ஆதி மூலதனத் திரட்சிக்கு வழிவகுத்தது என மார்க்ஸ் கூறுகின்றார்.

இச்செயற்பாடானது வெள்ளையர்களுக்கு ஆரம்பகால மூலதனத் திரட்சியைக் கொடுத்தது மாத்திரம் அல்ல அப்பிரதேசங்களின் சுதந்திரமான வளர்ச்சியையும் தடுத்து நிறுத்தியது. ''மெக்சிக்கர்கள் வான் கோழியையும் இதர பறவைகளையும் பழக்கி வைத்திருந்தார்கள், பெருவியர்கள் லாமா என்ற மிருகத்தைப் பழக்கி வைத்திருந்தார்கள் அதுமட்டுமின்றி அவர்கள் உலோகத்தைப் பயன்படுத்தவும் அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு இரும்பைப் பற்றித் தெரியாது. அவர்கள் கல் ஆயுதங்களையும் கற்கருவிகளையும் இன்றும் கைவிடாதிருந்ததற்கு இது ஒரு காரணமாகும். அங்கே ஸ்பெயின் நாட்டினரின் ஆட்சி ஏற்பட்டு அவர்கள் மேற்கோண்டு சுதந்திரமாக வளர்ச்சியடைவதை நிறுத்திவிட்டது.'' (கு. த, அ. தோ, ஏங்கல்ஸ் ப.42) இவ்வாறு ஒரு சீரான வளர்ச்சி ஏற்படாமல் மேற்கொள்ளப்பட்ட இயற்கையின் மீதான தாக்குதல் பழைய சமூக உறவுகளை முழுமையாகச் சிதைக்கவில்லை மாறாக பின்வரும் முக்கியமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

1. நிலப்பரப்புக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டன.

உ. பணத்தை மையமாகக் கொண்டு பொருளாதாரம் அமைக்கப்பட்டது.

3. முதலாளித்துவத்தின் காரணமாக சுயமாக வளரப்படவேண்டிய சமூக உறவுகள் (குலச் சமுதாய, நிலப்பிரபுத்துவ உறவுகள் சுதந்திரமாக சிதையவில்லை.) பலாத்காரமாகத் திணிக்கப்பட்டது.

4. மேற்கத்தைய பாணியிலான மத்தியமயப்பட்ட அதிகார அலகுகளைக் கொண்ட நிர்வாக ஒழுங்கு முறை கொண்டு வரப்பட்டது.

இன்று முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது உலகத்தைச் சுருக்கியுள்ளது உலகத்தில் மூலை முடுக்குகளில் இடம் பெறும் செயற்பாடுகளானது உலகத்தின் மற்றைய பாகங்களையும் பாதிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

## 2.1.2 ஏகாதிபத்தியக் கட்டம்

கிழட்டு வல்லரசுகள், கிழட்டு ஏகாதிபத்தியங்கள் ஒடிந்து போக புதிய ஏகாதிபத்தியங்கள் தோன்றிக் கொண்டு வருகின்றன. இந்த நிலையில் ஏகாதிபத்தியங்கள் தனித்துச் செல்லாமல் ஏகாதிபத்தியங்களிடையே காணப்படுதம் போட்டி காரணமாக ஒன்று சேரும் முனைப்புக்களிலும் சொந்த எல்லைகளிலேயே சந்தையின் பொருட்டு நிலப்பரப்பை அதிகரித்துக் கொள்கின்றன. எப்பவும் மூலதனம் மாத்திரம் இருந்தால் போதாது சனத்தொகையும் இருத்தல் அவசியமாகும். சந்தையை விஸ்தரிக்கும் பொருட்டு தனது நாட்டு எல்லைக்கு அப்பால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே ஈடுபடும் அரசியலாகும். அதிகாரத்தில் இருப்பவர்களை அகற்றுவதும் பதவியில் அமர்த்துவதும் இவர்களுக்கு கைவந்த கலையாகும். முன்வாசலை வேறு ஒருவருக்கு திறந்து விட்டு பழைய பெருச்சாலிகளை பின் கதவால் அரவணைப்பது ஆகும். இதனை பிலிப்பைன்ஸ்ஸில் வெற்றி கரமாக நிறைவேற்றினர். ஏனெனில் இவர்கள் தமது அரசியல் நலனின் காரணமாக புதியவர்களைக் கொண்டு தமக்கு அனுகூலமான கொள்கை வகுக்கும் முகமாக, அந்தந்த நாட்டு அரசாங்கங்களை உருவாக்கும் பொருட்டாகும்..

தமது ஏக போக நிறுவனங்களின் மூலமாக எமது நாடுகளில் இருந்து பெறப்படும் பொருட்களுக்கு இவர்களே பிரதியுரிமை (Copy Rights) உடையவர்கள் என உரிமை கொண்டாடுகின்றனர். இது பல உற்பத்தி பண்டங்களை உரிமை தொடர்பாக போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக எமது நாடுகளில் இருந்து பெறப்படும் வேப்பம் விதைக்கு அமெரிக்க நிறுவனம் உரிமை கோரியதற்கு எதிராக இந்திய முற்போக்குச் சக்திகள் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

விரல்விட்டு எண்ணக் கூடிய முதலாளிகள் உலகத்தை தற்பொழுது தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதை இன்று கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. இவ்வளர்ச்சி நிலையானது வெறுமனே சில வருடங்களில் நடைபெறவில்லை. மாறாக ஒரு நீண்ட போராட்டத்தின் ஊடாகவே ஏகாதிபத்தியம் வெற்றி கண்டுள்ளது.

ஏகாதிபத்தியத்தை லெனின் பின்வருமாறு வரையறுக்கின்றார். ''ஏகாதிபத்தியத்தைப் பற்றி இயன்ற அளவிற்கு சுருக்கமான இலக்கணம் அளிக்க வேண்டுமாயின், முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டமே ஏகாதிபத்தியம் என்று கூறவேண்டும். இத்தகைய இலக்கணம் யாவற்றிலும் முக்கியமானதை தன்னுள் கொண்டதாக இருக்கும். ஏனெனில் ஒருபுறத்தில் நிதி மூலதனம் என்பது தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டுக்களின் மூலதனத்துடன் ஒன்று கலந்து விட்ட ஒருசில மிகப் பெரிய ஏகபோக வங்கிகளின் வங்கி மூலதனமாகும். மறுபுறத்தில் உலகின் பங்கீடானது எந்த முதலாளித்துவ அரசாலும் கைப்படாத பிரதேசங்களுக்கு தடையின்றிப் பரவிச்

செல்லும். கொலனியாதிக்கக் கொள்கையிலிருந்து முற்றும் பங்கிடப்பட்டுக் கொண்டு விட்ட உலக நிலப்பரப்பை ஏகபோகம் உடனடியாக கொண்டிருப்பதற்குரிய கொலனியாதிக்கக் கொள்கைக்கு மாற்றிச் செல்வதாகும். ஆனால் மிகவும் சுருக்கமான இலக்கணங்கள் முக்கிய அம்சங்களைத் தொகுத்துத் தருவது வசதியாக இருந்தாலுங் கூட அவை பற்றாக் குறையானவையே. ஏனெனில் வரையறை செய்யப்படவேண்டிய நிகழ்வின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை அவற்றிலிருந்து வருவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே எல்லா இலக்கணங்களும் நிபந்தனைக்கு உட்பட்ட சார்பு நிலையிலான மதிப்பை கொண்டவை. நிகழ்வினது முழு வளர்ச்சியிலும் அதன் தொடர்புடமைகள் யாவும் அடங்கியனவாய் ஒரு போதும் இருக்க முடியாது என்பதை மறக்காமல் மனதில் கொண்டு ஏகாதிபத்தியத்தின் பின்வரும் ஐந்து அடிப்படை இயல்புகளும் உள்ளடங்குமாறு அதற்கு இலக்கணம் கூறியாக வேண்டும்.

**1) பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களை தோற்றுவிக்கும் படியான உயர்ந்த கட்டத்திற்கு உற்பத்தியின் மூலதனத்தின் ஒன்று குவிப்பு வளர்ந்து விடுதல்.**

**2) வங்கி மூலதனம் தொழில்துறை மூலதனத்துடன் ஒன்றுகலத்தலும், இந்த 'நிதி மூலதனத்தின்' அடிப்படையில் நிதியாதிக்க கும்பல் உருவாதலும்.**

**3) பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்தபட வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல்.**

**4) சர்வதேச ஏகபோக முதலாளித்துவ கூட்டுக்கள் உருவாகி, உலகையே இவைகள் தமக்கிடையே பங்கு போட்டுக் கொள்ளுதல்**

**5) மிகப்பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப்பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவு பெறுகிறது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் எந்தக் கட்டத்தில் ஏகபோகங்கள் நிதிமூலதனம் ஆகியவற்றின் ஆதிக்கம் நிலை நாட்டப்படுகிறதோ, மூலதன ஏற்றுமதி முனைப்பான முக்கியதத்துவம் பெற்றுவிட்டதோ, சர்வதேச டிரஸ்டுக்களிடையே உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ, உலகின் நிலப்பரப்பு அனைத்தும் மிகப்பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே பங்கிடப்படுவது நிறைவு பெற்று விட்டதோ, அக் கட்டத்திலான முதலாளித்துவமே ஏகாதிபத்தியமாகும்.''**
(ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் பாகம் 141, 142 லெனின்)

தமக்கு தேவையான கனிப்பொருட்களை தமக்கு ஏற்றவாறான விலையை நிர்ணயிக்கும் பொருட்டு WTO மூலம் உடன்பாடுகளை கொண்டு வறிய நாடுகள் மீது தமது ஆதிக்கத்தை திணிக்கின்றது. இதன் காரணமாக வறிய தேங்களுக்கு வரவேண்டிய மொத்த தேசிய வருவாய் என்பது நலிவடைகின்றது. இதன் மூலமாக கடன் அதிகரிக்கின்றது. ஆண்டுக்கான

வரவிலும் துண்டு விழுகின்றது. இதனால் மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதியினை திரட்ட முடியாதுள்ளது. இதனால் மக்கள் தமக்கு வேண்டிய உரிமைகளை பெற முடியாது போகின்றது. அரசாங்க வாக்குறுதிகள் எந்தக் காலத்திலும் நிறைவேற்றுப்படாமல், வெற்று வாக்குறுதிகளினால் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

## 2.1.3 பொருளாதார ஒப்பந்தங்கள்

போட்டிச் சந்தை முதலாளித்துவத்தின் பிரதான கோட்பாடாகும். இதனையே முதலாளித்துவம் தனது பிரதான யுக்தியாக கொண்டுள்ளது. போட்டிச் சந்தை எனும் போது போட்டிச் சந்தையின் ஊடாக பொருளின் விலை நிர்ணயம் பொறுகின்றது. இந்நிலையானது முதலாளித்துவ நாடுகள் ஒன்றிணைகின்ற போது அந்தச் சுதந்திரத்தை எமது நாட்டு முதலாளித்துவம் இழந்து விடுகின்றது. ஆனால் எமது நாடுகளில் உள்நாட்டுச் சந்தையில் மாத்திரம் போட்டிச் சந்தை இருக்க வேண்டும் என அறிவுறுத்துகின்றது. இது சனநாயகக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தின் கீழ் அவர்கள் முன்வைக்கின்றனர். மாறாக அமெரிக்கா, (NAFTA) யப்பான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் (EU) ஆகியன உலக வணிக ஒன்றியத்தின் (WTO) ஊடாக விலையை நிர்ணயம் செய்கின்றனர்.

தமக்கு தேவையான கனிப்பொருட்களை தமக்கு ஏற்றவாறான விலையை நிர்ணயிக்கும் பொருட்டு WTO மூலம் உடன்பாடுகளை கொண்டு வறிய நாடுகள் மீது தமது ஆதிக்கத்தை திணிக்கின்றது. இதன் காரணமாக இவர்களுக்கு வரவேண்டிய மொத்த தேசிய வருவாய் என்பது நலிவடைகின்றது. இதன் மூலமாக கடன் அதிகரிக்கின்றது. WTO கொண்டுள்ள செயல் திட்டமானது "வர்த்தகம்சார் அறிவுச் சொத்துடமை, விவசாயம், சேவைத்துறைகள் வர்த்தகம் சார் முதலீட்டு நடவடிக்கைகள்" போன்ற தளங்களில் செயற்படுகின்றன. இந்தக் தளங்களில் ஒத்துழைக்காத பட்சத்தில் "சூப்பர் மற்றும் சிறப்பு 301 சட்டங்களை காட்ட ஒப்பந்தத்திற்குப் பின்னும் அமெரிக்கா அதன் இச்சைக்குத் தகுந்தபடி ஏவி விட முடியும் (பக். 9 காட் - டாட்சி புதிய ஜனநாயம் வெளியீடு) நாடுகள் மீறும் பட்சத்தில் சனநாயகத்தை பாதுகாப்பது என்ற பெயரில் பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள முடியும்.

WTO (GATT), IMF, World Bank போன்றவற்றின் மூலம் தமது நலன்களை பாதுகாத்துக் கொள்கின்றது. தமது செயற்பாட்டை நிறைவேற்ற அங்கத்தவர்களின் (Lobby) ஆதரவு அங்கத்தவர்களின் – பிரமுகர்களின் ஆதரவு கோரிச் செயல்படும் முறை என்பது அனைத்து தேசங்களிலும் காணப்படுகின்றது. ஆனால் மேற்கத்தைய நாடுகளில் இச்செயற்பாடானது அனைத்து மட்டங்களிலும் தாராளமாக சிறப்பு நிலையில் வளர்ந்துள்ளது.) சட்டமியற்றல் என்பது நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலே தரகுகள் அனுசரணையுடன் வறிய தேசங்களில் நிறைவேற்றப் படுகின்றது. எமது

நாடுகளில் உறவினர், பிள்ளைகளுக்கு முக்கிய பதவி கொடுத்தல், லஞ்சம் கொடுத்தல் ஆகியவற்றின் மூலமும் தமது காரியங்களைச் செய்கின்றனர்.

Europian Union இன் இணைப்பால் ஏற்படும் சில விழைவுகளைப் பார்ப்போம். உதிரியாக –தனித்தனியாக நாடுகள் இருக்கின்ற போது போட்டிச் சந்தையின் காரணமாக தகுந்த விலை என்பது கிடைக்க வழிஇருக்கின்றது. அதாவது மாற்றுச் சந்தை இருக்கின்றது மாறாக இணைவின் காரணமாக போட்டி நிலை என்பது இல்லாது போகின்றது. இதன் மூலம் வருகின்ற லாபத்தை EU தாமே அனுபவிக்கின்றனர். ஆனால் மாற்றுச் சந்தை இல்லாததினால் இவர்களின் தான் தோன்றித்தனத்திற்கு நவகொலனிய நாடுகள் பலியாக வேண்டியுள்ளது. உதாரணமாக 1995 இல் EU கைத்தறி, மற்றும் தேயிலை, கோப்பி போன்றவற்றிற்கான இறக்குமதி வரியைக் அதிகரித்ததினால். எமது நாடு தன் சொந்த உற்பத்தியின் பலனாக கிடைத்த லாபத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது போக, உழைக்காமலே லாபத்தை அனுபவிக்கும் நிலையைத் தோற்றுவித்தது. உழைக்காமல் தமது வருவாயை பெருக்கி கொள்ளும் இந்த பண முதலைகளினால், எமது நாடுகள் கடனைத் தான் பெருக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிலையைத் தவிர்க்க எப்படித் தான் இரந்து கேட்டாலும் எமது நாட்டு முதலாளித்துவத்திற்கு சலுகை வழங்க இவர்கள் தயாராக இல்லை. வருவாயில் துண்டு விழும் நிலையேற்படும்போது எமது நாடுகளில் பல விழைவுகள் ஏற்படுகின்றன. இந்த விழைவுகளை மார்க்ஸ் மூலதனத்தின் தோற்றத்தில் மார்க்ஸ் கையாளும் உதாரணத்தில் பட்டத்து வீரருக்கும், மருத்துவருக்கும் இடையேயான உரையாடலில் பணவிக்கம் ஏற்படும் போது எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றார். ''**பட்டத்து வீரர்** – நீங்கள் என் அண்டை வீட்டுக்காரர், வேளாளர், நீங்கள் திருவாளர் வியாபாரி. நீங்கள் நல்ல செம்புத் தொழிலாளி, மற்ற கைத்திறனாளர்களுடன் உம்மை நீரே நன்கு கச்சிதமாகக் காப்பாற்றிக் கொள்ளலாம். ஏனென்றால் எல்லாப் பொருட்களுமே முன்பிருந்ததை விட அதிகம் கிராக்கியான விலையுடையவையாய் இருக்குமளவுக்கு, நீர் மீண்டும் விற்கின்ற உமது சரக்குகள் மற்றும் உழைப்பின் விலையை உயர்த்துகிறீர். ஆனால் நாங்கள் மீண்டும் வாங்க வேண்டியுள்ள பொருட்களுக்கு ஈடுசெய்ய, விலையுயர்த்தி விற்பதற்கு எங்களிடம் ஒன்றுமில்லை'' இன்னொரு இடத்தில பட்டத்து வீரர் மருத்துவரைக் கேட்கிறார், ''உம்மை வணங்கிக் கேட்கிறேன். நீர் சொல்லும் வகைகள் என்ன, சொல்வீர். முதலில், அதனால் இழப்பிருக்காதென நீங்கள் நினைக்கும் வகைகள் யாவை?'' **மருத்துவர்**, ''வாங்கும் மற்றும் விற்பதால் ஜீவிக்கும் அனைவரையும் நான் சொல்கிறேன் ஏனென்றால் அவர்கள் அதிக விலைக்கு வாங்கினால் அதன் பின் அதிக விலைக்கு விற்கின்றனர். ''**வீரர்**,'' அதனால் வெற்றி பெறுமென நீர் சொல்லும் அடுத்த வகை என்ன?'' **மருத்துவர்** ''பழைய குத்தகைக்குத் தம் சொந்தக் கையுழைப்பில் பண்ணைகளை எடுத்துக் கொள்ளக் கூடிய அனைவரும், ஏனென்றால் அவர்கள் பழைய வீதத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். புதிய வீதத்தைப் பின்பற்றி விற்கின்றனர்

– அதாவது, அவர்கள் தமது நிலத்துக்கு சல்லியமான குத்தகை கொடுத்து, அதில் விளையும் அனைத்தையும் அதிக விலைக்கு விற்கின்றனர்.'' வீரர்.''இதன் மூலம் கிடைக்கும் லாபத்தை விட அதிகமாக நட்டமடைவர் என்று நீங்கள் சொன்ன வகை எது?'' **மருத்துவர்**. ''எல்லா மேன்மக்களும் கனவான்களும், ஒன்று வரைக்குட்பட்ட குத்தகை அல்லது உதவித் தொகை கொண்டு வாழுகின்ற, அல்லது பூமியில் கையுழைக்காத, அல்லது வாங்கும் தொழில் விற்கும் தொழில் ஒன்றுமில்லாத மற்ற எல்லோரும்.'' (ப 71 – உமார்க்ஸ் மூலதனத்தின் தோற்றம்) இவ் உதாரணத்தினை விளங்கிக் கொள்கின்ற போது ஏகாதிபத்தியத்தின் சுரண்டலினால் எவ்வகையான தாக்கத்தை எமது சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்த மாதிரியான தாக்கங்கள் சமூகத்தின் அலகுகளை தாக்குவதை புரிந்து கொள்வதில் கவனக் குறைபாடு இருக்கின்றன. மேற்கு நாடுகள் குறிப்பாக இன்று யுத்தத்தை மேற்கொள்கின்ற ஈராக், யூக்கோ மக்கள் கொல்லப்படவில்லை, என்பதை வைத்தே தமது வெற்றியை நிர்ணயித்துக் கொள்கின்றனர். ஆனால் ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் பொருளாதாரக் சர்வதேச கொள்கையாலும், வெளிவிவகாரக் கொள்கையினாலும் ஏற்படும் விழைவுகளை தனித்துவப்படுத்தி போதிப்பதின் மூலம் நியாயப்படுத்துகின்றனர். பொருளாதாரத் திட்டங்கள் மக்களை பாதிப்பதை முதலாளித்துவ வர்க்கச் சக்திகள் ஏற்றுக் கொள்வதில்லை.

## 2.1.4 ஆயுத ஒப்பந்தங்கள்



உலக முதலாளித்துவ – ஏகாதிபத்திய நாடுகள் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியை அடைந்து கொண்டு சக்தி மிக்க ஆயுதங்களை வைத்துள்ளன. அவற்றை வைத்துக் கொண்டு இன்று உலக நாடுகளை பயமுறுத்துகின்றன. பழைய ஆயுதங்களை அகற்றிவிட்டு புதிய ரக ஆயுதங்களை வைத்துள்ள நாடுகள், சுதந்திர நாடுகள் மீது தாக்குதல் நடத்தி உங்களுக்கும் இதே நிலைதான் என பயமுறுத்துவதுடன், தம்மிடம் உள்ள நவீன ஆயுதங்களை பயன்படுத்தி வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறு இருக்க அணு ஆயுதங்கள் மற்றும் பௌதீக ரக ஆயுதங்களையும், கண்ணி வெடியை தடைசெய்யவும் ஏகாதிபத்திய நாடுகளில் சில முன்வருகின்றன. இவ்வகையான ஒப்பந்தங்கள் எவ்வகையான பெரிய மாற்றத்தை ஒப்பீட்டரீதியாக கொண்டு வரும் என்பது ஐயமே.

உலகின் பல பாகங்களிலும் கண்ணி வெடி வைத்துக் கொண்டு தான் இருக்கின்றது. இலங்கையும் விதிவிலக்காக இருக்க முடியாது. ஏனெனில் பிரச்சினைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நாடுகளில் இது தவிர்க்க முடியாது தொடரவே செய்யும் இங்கு முக்கியமாக எதிர்ப் புரட்சி

அமைப்புக்கள் ஏகாதிபத்தியங்களின் துணையுடன் இயங்குபவைகள் தொடர்ந்தும் உதவி பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. அங்கோலாவில் தொடர்ந்தும் எதிர்ப்பு புரட்சியமைப்பான (UNITA) யுனிட்டா கண்ணி வெடிகளை விதைக்கின்றது.

கண்ணி வெடியின் பாவனை என்பது வறிய நாடுகளே அதிகமாக பாவிக்கின்றன. முதலாளித்துவ நாடுகள் உயர்தர தொழில் நுட்பத்தைக் கொண்ட ஆயுதங்களைக் கொண்டுள்ளன. யூக்கோ மீதான தாக்குதலின் போது புதிய வகைக் குண்டு வீசப்பட்டது. பெரியவகை குண்டினுள் பல சிறிய 150 குண்டுகள் (Cluster bombs) உள்ளுக்குள் இருக்கும். அவை நிலத்தில் விழுந்த பின்னராக சிதறும் வெடிப்பவைகள் போக மற்றவைகள் கண்ணிவெடி போல மற்றவைகள் நிலத்தில் கிடக்கும். இவை கண்ணி வெடியைவிட இந்தவகை குண்டுகள் சக்தி வாய்ந்தாகும். ஆனால் வளர்ச்சியடையாத நாடுகள் இவ்வாறான கண்ணி வெடியைப் பயன்படுத்தப்படுகின்றன. கண்ணி வெடியே வறியவர்களின் ஆயுதமாகும். உயர் தர தொழில் நுட்டம் என்பது இவர்களிடையே இல்லை.

உதாரணமாக எதிரியை தொலைவில் இருந்து கண்காணிக்கப் பயன்படக் கூடிய விண்வெளி தொடர்பு, விண்வெளி படம் பிடிப்பு போன்ற வசதி என்பது இவர்களிடம் இல்லை. அத்துடன் இன்றைய நிலையானது சாதாரண மக்கள் இவ்வாறான வெடிகளின் மூலமாக மக்கள் தொல்லைக்கு உள்ளாவதை அறிந்து கொள்கின்றனர். அறிந்து கொள்கின்ற மக்கள் இந்தத் துன்பத்தை போக்க மனதார விருப்பத்திற்கு உள்ளாகின்றனர். இந்த நிலையை அறிந்து கொண்ட ஆளும் வர்க்கம் இவற்றை இல்லாது போக்க தாமும் பாடுபடுவதாக காட்டிக் கொள்கின்றனர். இதன் மூலம் தாம் எவ்வளவு இரக்க மனப்பான்மை கொண்டுள்ளனர் என பறைசாற்ற உதவுகின்றன. ஏமாற்றுவித்தைக்கு மக்கள் பலியாகப் போவது தற்பொழுது தவிர்க்க முடியாதாக உள்ளது.

அணு ஆயுதத்தை மட்டுப்படுத்தும் ஒப்பந்தங்களையும் செய்ய முயற்சிக்கின்றன. குறிப்பாக இந்தியா, வடகொரியா, சீனா, ஈரான் ஆகிய நாடுகளின் மீதே அழுத்தத்தைச் செலுத்துகின்றன. அவர்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாவிடின் தடைகளை ஏற்படுத்தி பனிய வைக்க முயற்சிக்கின்றன. ஆனால் ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியாகிய அமெரிக்க ஏகாதிபத்தியம் 1961 –1973 இடைப்பட்ட காலத்தில் 23 தடவைகள் அணுக் குண்டுப் பரிசோதனையை செய்துள்ளது. இவை கிரோசிமாவில் போட்ட குண்டிலும் பார்க்க 6 மடங்கு பலமானதாகும். இது 4 .76 அலை வேக பூமியதிர்ச்சிக்கு ஒப்பானதாகும். இது 12 மில்லியன் தொன் மணல் பரப்பை அசைக்கின்றது. இந்த பரிசோதனை பாலங்கள், கடல் கீழ் சுரங்கங்கள், துறைமுகங்கள் அமைக்க சாத்திய முறைகள் பற்றிய பரிசோனையாக கணிக்கப்படுகின்றது.

தொடர்ந்தும் எல்லாவிதமான எதிர்ப்புக்களையும் அசட்டை செய்து விட்டு பிரான்ஸ் பலதடவை நியு கலிடோனியாவில் பரிசோதனை செய்தனர். எந்தவிதமான நடவடிக்கைகளையும் சக ஏகாதிபத்தியங்கள் எடுக்க இல்லை. இதனைப் பார்த்து சீனா பரிசோதனை செய்தனர், இவர்களைத் தொடர்ந்து இந்தியா, பாக்கிஸ்தான் செய்து கொண்டனர். இவர்களிடம் எவ்வகையான வலிமை கொண்டது என்பது இங்கு பார்ப்பது அவசியமல்ல. ஆனால் இவர்கள் பரிசோதனை நடத்திய பின்னர் பொருளாதார தடையை ஏற்படுத்தியது. அமெரிக்கா தடையை சில மாதங்களில் கைவிட்டது. இவ்வகையான தடையை ஏற்படுத்துகின்ற ஏகாதிபத்தியங்கள் பாரபட்சமில்லாது நடந்து கொள்ளவில்லை. வறிய நாடுகள் அணு ஆயுதம் அல்லது அக்கினி போன்ற நடுத்தர ஏவுகணைகள் வைத்துக் கொள்வதை ஏகாதிபத்தியங்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஆனால் வறியநாடுகள் மாத்திரம் வைத்துக் கொள்ளும் போது மாத்திரம் நடவடிக்கை எடுக்கின்றது. அணு ஆயுதங்களை கொண்ட நாடுகளாக இஸ்ரேல், பாக்கிஸ்தான், போன்ற கூட்டாளி நாடுகளும், முன்னர் இனவெறி தென் ஆபிரிக்கா தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது பாரமுகமாக இருந்து கொண்டது. இங்கு 90க்கு முன்னர் ஏகாதிபத்தியங்களின் வெளியுறவுக் கொள்கை என்பது சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின்னர் மாறுபட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

சமர்தானம் பேசுகின்ற ஏகாதிபத்தியங்கள் கடந்த ஐ.நா கூட்டத் தொடரில் இடம் பெற்ற அணுஆயுதத்தை முற்றாக தடை மீதான செய்வது தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பிற்கு வந்த போது சுமார் 100 நாடுகள் ஆதரித்தும் 26 நாடுகள் எதிர்த்தும் 24 நாடுகள் வாக்களிக்காது தவிர்த்துக் கொண்டன. அதனை எதிர்த்து வாக்களித்தது மேற்கு நாடுகளாகும். ஆனால் சீனா இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது குறிப்பிடத் தக்கதாகும். சீனா நல்நோக்கத்திற்காக வாக்களித்ததாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. மேற்கு நாடுகள் ஆதரித்து வாக்களித்திருந்தால் சீனா எதிர்த்து வாக்களித்திருக்கும். உல அமைதி, ஜனநாயகம் என வயிறுகிழியக் கத்தும் ஏகாதிபத்தியங்கள் மிதிவெடிகளை முற்றாக தடை செய்ய முழுமையான ஆதரவு கொடுக்காது தவிர்க்கின்றன. அமெரிக்காவோ தென் கொரியா எல்லையை பாதுகாப்பது தொடர்பாக அக்கறை காட்டிக் கொள்வதாக கூறிக் கொள்கின்றது. தென் கொரியாவின் பாதுகாப்பு தொடர்பான விடயம் அடங்கி இருப்பதினால் அதற்காக தாம் முழுமையாக தடை செய்யும் பிரேரனைக்கு ஆதரவு அளிக்க முடியாது இருப்பதாக நொண்டிச் சாட்டுக் கூறுகின்றது.



# 2.1.5 நவகொலனித்துவம்

விரல்விட்டு எண்ணக் கூடிய முதலாளிகள் ஏகாதிபத்தியத்தின் தரகர்களாக செயற்படுகின்றனர் என்பதை காணக்கூடியதாக உள்ளது. 1920இல் மூன்றாம் அகிலக் கூட்டத்தில் பின்வருமாறு முடிவிற்கு வந்தனர். கொலனித்துவத்திற்கு பிற்பட்ட சூழ்நிலையானது விசேட தன்மையை வந்தடைந்துள்ளது என்றும், நிலபிரபுக்களும் ஏகாதிபத்திய வாதிகளும் ஒருவருக்கொருவர் அணிசேர்ந்து கொள்கின்றனர் எனவும் முடிவிற்கு வரப்பட்டது. சீனப்புரட்சியில் மாவோ பின்வருமாறு வரையறுத்துள்ளார்.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள அரைக் கொலனித்துவ சீனாவில் நிலப்பிரபுக்களும் தரகு முதலாளிகளும் சர்வதேச முதலாளிகளைத் தங்கியிருக்கின்றனர். ஏனெனில் இவர்கள் உயிர் வாழ்வது என்றால் ஏகாதிபத்தியத்தின் உதவி இவர்களுக்கு அவசியமாகிறது. இவர்கள் சர்வதேச மூலதனத்தின் மூலம் தமக்கு பற்றாக்குறையாக உள்ள மூலதனத்தின் தேவையை பூர்த்தி செய்வதுடன் அவ்வுதவியுடன் தமது மூலதனத்தைப் பெருக்குகின்றனர். இவர்களே பிற்போக்காளர்களாகவும், புரட்சிக்கு கேடு விளைவிப்பவர்களாகவும் செயற்படுவார்கள்.

இரண்டாம் உலகயுத்தத்தின் பின்பும் குறிப்பாக 60களிலும் எற்பட்ட சுதந்திர எழுச்சிகளின் பிற்பாடு தமது கொள்கையை மாற்றிக் கொண்டனரெனலாம். இந்தத் தரகு முதலாளிகளினூடாக தமது நலனைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். அதிகமான நாடுகள் பெயருக்குத் தான் சுதந்திரமான நாடுகள் எனக் கொள்ளப்படுகிறது. ஆனால் வறிய நாடுகள் தமது இறைமையைக் காப்பாற்ற அரும்பாடுபட வேண்டியுள்ளது.

நவீன கொலனியாதிக்க தந்திரோபாயம் என்னவென்றால், மோதல் நிலைமைகளில் தமது பொருளாதார மைய்யங்களை அனைத்து தளங்களிலும் அதாவது உலக சமுதாய, பொருளாதார அமைப்புக்களின் பதட்ட நிலையை தனிப்பதும். அதேவேளை மோதலும், தமது தளங்கள் பறிபோகும் நிலைமைகள் வரும்போது, ஏகாதிபத்தியங்கள் வளரும் நாடுகள் மீது மேற்கொள்ளும் அரசியல், ராணுவக் கொள்கையாகும். கடந்த பத்து ஆண்டுகளில் சனநாயகத்தைப் பாதுகாத்துக் கொள்வதாக கூறிக் கொள்கின்ற ஏகாதிபத்தியங்கள் எந்தக் காலத்திலும் உண்மையாக வறிய மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு செயற்படவில்லை. மாறாக பற்பல ஒப்பந்தங்கள் மூலமாகவும், மிரட்டல்கள் பொருளாதாரத் தடைகள் மூலமாகவும் மற்றைய நாடுகளை பணிய வைக்கின்றன. இவை முடியாத பட்சத்தில் ஆக்கிரமிப்பு மூலமாக தமது எண்ணத்தை நிறைவேற்றுகின்றனர். இந்த தொடர் போக்கை கியூபா, வட கொரியா, ஈராக், லிபியா, யூக்கோ ஆகிவற்றின் மீது தொடுக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடுத்துக் கொள்கின்ற ஆக்கிரமிப்பு மூலமாக அவதானித்துக் கொள்ள முடியும்.

கடந்த சில ஆண்டுகளாகவே படைகளைக் குறைப்பது பற்றியும், அணு ஆயுதப் பரிசோதனைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது பற்றியும்

பேசிக் கொண்டிருக்கின்றன. அதே வேளை பனிப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறிக் கொள்கின்ற போதிலும் இவர்கள் நவீன ஆயுதங்கள் இருப்பதினால் பழைய ஆயுதங்களை இல்லாது செய்து விட்டு எம்மை ஏமாற்றுகின்றனர். இன்று இந்த ஏகாதிபத்தியங்கள் சர்வதேச ரீதியில் பின்வரும் தளங்களில் செயற்படுகின்றன. இங்கு எழும் முக்கிய கேள்வி எவ்வாறு மேற்கு நாடுகள் உபரிமதிப்பு பெருக்கிக் கொள்வதை தடுப்பதாகும். இந்த நிலையேற்படாதவாறு தமது நலனை அடிப்படையாக கொண்டு செயற்படுகின்றன.

## 2.1.6 நேட்டோ ஒப்பந்த நாடுகள்

பனிப்போர் முடிவுக்கு வந்திருப்பதாக கூறிக் கொள்கின்ற போதிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் பாதுகாப்புக் (NATO) கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்ள வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. இந்தக் கூட்டமைப்பு என்பது முன்னர் வார்சோ ஒப்பந்த நாடுகளுக்கு இணையாக இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் காரணமாக அமெரிக்கா தனது ஆயுதங்களை வெவ்வேறு நாடுகளிலும் வைத்திருக்கின்றன. ஐரோப்பாவை எடுத்துக் கொண்டால் அமெரிக்காவின் ஆயுதங்கள் படைகள் நிலை கொண்டு இருக்கின்றன. அமெரிக்காவின் சிறு ரக அணு ஆயுதம் பெல்ஜியம் நாட்டில் வைத்திருப்பதாக தற்பொழுது வெளிவந்த செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இச் செய்தி பற்றிய மேலதிக விபரங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கப் படையினர் ஐரோப்பிய நாடுகளில் தளங்கள் அமைத்துக் கொள்வதன் மூலம் தனது ஒப்பந்த நாடுகளை பாதுகாப்பதாக காட்டிக் கொண்டது. அமெரிக்கா தனது நலனை பாதுகாக்கின்றது என்ற காரணத்தால் பிரான்ஸ் நாட்டு அதிபராக இருந்த டிகோல் என்பவர் நேட்டோவிற்கு புறம்பாக தமது நாட்டுப்படையை தனித்துவமான பாதுகாப்பு இயந்திரமாக உருவாக்கிக் கொண்டார். அண்மைக் காலங்களில் பிரான்சும் இணைந்து கொண்டது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முக்கிய நாடுகளான சுவீஸ்லாந்து, சுவீடன் நேட்டோவில் அங்கம் வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று அமெரிக்கா தனது தளத்தை நேட்டோ ஒப்பந்தத்தின் மூலம் ஐரோப்பாவிலும் மற்றைய வறிய நாடுகளான பிலிப்பைன்ஸ், ஆபிரிக்கா தீவுகளிலும், வட ஆபிரிக்காவிலும், தென் கொரியாவிலும், சவுதி அரேபியாவிலும் தனது தளத்தை வைத்துள்ளது. இதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் பாதுகாப்பு வலயத்தை அமைத்துக் கொண்டுள்ளது. முன்னர் சோவியத் ஒன்றியம் இருந்த போது சர்வதேச படை பலம் என்பது சமமாக இருந்தது. அப்பொழுது சர்வதேசத்தில் போராட்டங்களை ஆதரிப்பது, ஆக்கிரமிப்புச் செய்த நாட்டையும், தமது கருத்தையும் ஆதரிப்பதிலும் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டனர். அன்றைய காலத்தில் அரசியலில் நேர்மையான போக்கு இருந்தது இல்லை. ஏட்டிக்குப் போட்டி என்ற நிலைதான் இருந்து கொண்டது.

அப்படி ஏட்டிக்குப் போட்டியான வல்லரசுகளின் நிலை இருந்த போது வறிய, நலிந்த நாடுகளின் பாதுகாப்பிற்கு ஓரளவு பாதுகாப்பு உத்தரவாதம் இருந்தது. இதற்கு அணிசேரா நாடுகள், ஐக்கியநாடுகள் சபை வலிமையாக இருந்து கொண்டது.

அணிசேரா நாடுகளுக்கு யூக்கோஸ்லாவியா, கியூபா, இந்தியா போன்ற நாடுகள் வலிமையாக இருந்து செயற்பட்டது. இந்த நிலை என்பது சோவியத் ஒன்றிய உடைவின் போது முக்கிய திருப்பம் ஏற்பட்டது. இந்தத் திருப்பம் என்பது ஈராக்கானது குவைத்தை ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்டது. ஐ.நாவின் ஒப்புதலின் மூலம் அமெரிக்காவானது தனது தளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நிறைவேற்றிக் கொண்டது. இதன் பிறகு ஏற்பட்ட மாற்றம் அதாவது சர்வதேச அரசியலில் ஏற்பட்ட வல்லரசின் வெற்றிடமும், புதிய நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தன்னிடம் வைத்துக் கொண்ட நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி உலகப் பொலீஸ் என்பதை சர்வதேச சமூகம் அநீதியை பொறுத்துக் கொள்ளாது என்ற பெயரில் நிறைவேற்றிக் கொண்டது.

படை பலத்தைக் காட்ட சர்வதேசத்தில் இருந்த படைபலச் சமன் என்பது இல்லாது போகவே, இதனை வாய்ப்பாக பயன்படுத்திச் செயற்பட்டது. இந்தப் போக்கு என்பது வறிய, பலம் குன்றிய நாடுகளில் இருப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. இன்று பல அமெரிக்க, கனடாவுடன் ஐரோப்பிய நாடுகளும் ஈராக்கின் மீதான ஐ.நாவின் பெயரின் கீழ் செய்து கொண்ட ஆக்கிரமிப்பிற்குப் பிற்பாடு புதிய நிலைப்பாடு எடுத்துக் கொண்டு செயற்படுகின்றன. நேட்டோ அணியானது ஐரோப்பாவில் ஜனநாயகத்தை (முதலாளித்துவத்தை) நிலைநாட்டுவதே முதலாவது வேலைப்பாடாகக் கொண்டது. இந்தப் வேலைதிட்டம் என்பது சோவியத் ரஷ்யாவினதும், கிழக்கைரோப்பாவின் உடைவின் பின்னரும் கையாளத் தொடங்கிவிட்டன. தற்பொழுது உலகில் இருக்கின்ற ஆதிக்க நாடுகள் எல்லாம் சுரண்டும் பொருளாதார நலனைக் கொண்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஏகாதிபத்திய நாடுகளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தத்தமது நாடுகளின் நலனைக் கருத்தில் கொண்டு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தந்திரோபாயம் வகுத்துக் கொண்டு செயற்படுகின்றன.

கடந்த பத்துவருட காலத்தில் அமெரிக்காவும் மற்றைய முதலாளித்துவ பொருளாதார கூட்டாளி நாடுகளும் மற்றைய நாடுகளின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதிப்பதிலும் அச்சுறுத்துவதிலும் இடைவிடாது செயற்பட்டு வருகின்றது. சுரண்டல் பொருளாதார நலன்களைப் பேணக்கூடிய அரசியல் தலைமைகளையும், கிளர்ச்சிகளையும் வரவேற்கின்றன. முடியாத பட்டத்தில் எதிர்ப்புக் கொள்கின்ற நாடுகள் மீது தாக்குதல் நடத்துகின்றன. முன்னர் பார்த்தது போல் சுரண்டும் பொருளாதார நலனை சர்வதேச ஒப்பந்தங்கள் மூலமாக திணிக்கின்றன. நடைமுறையில் அவை சுதந்திரமாக செயற்படுவதாக காட்டிக் கொள்கின்றன. சுருக்கமாகச் சொல்வது என்றால் மனித உரிமைக்கும், பணத்திற்கும் அதாவது உலகவங்கிக்கும், சர்வதேச நாணய நிதியத்திற்கும்

தொடர்பில்லாத நிலையை தோற்றுவித்துள்ளது. (இது மார்க்சியத்திற்கு எதிராக தொடக்கின்ற பிரச்சார அம்சத்துடனும், தனிமைப்படுத்தல் என்ற அம்சத்தினையும் இணைத்துப் பார்க்கவும்) இந்த தொடர்பில்லாத நிலையை நிலைநிறுத்திக் கொள்வதற்கு தமது ஊடகங்கள் அனைத்தையும் பாவிக்கின்றன.

இன்று கருத்திற்கு எதிர் கருத்தை முன்வைத்து பாகுபடுத்திக் காட்டுகின்றனர். இவைகளை பின்வருமாறு காணலாம். சனநாயகத்திற்கு எதிர் சர்வாதிகாரம், காட்டுமிராண்டித்தனம் எதிர் நாகரிகம், நல்லதுக்கு எதிர் கெட்டவை இவை கிருத்தவ மதப் பாரம்பரியத்தில் இருந்து வந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு சுரண்டப்படும் சிந்தாந்தத்தைக் கொண்ட மக்களிடத்தில் இவ்வகையான சொற் தொடர்களைக் கொண்டு நியாயத்தைக் கற்பிக்கின்றனர். எந்தத் தாக்குதல்களை தொடங்குகின்ற போதும் பெரும் ஐயப்பாட்டுடன் தொடங்கப்படுகின்றது. இவை அரசியல் தலைமையாக இருந்தால் என்ன சாதாரண மக்களாக இருந்தால் என்ன இந்த நிலையே ஆரம்பத்தில் தொடங்கப்படுகின்ற நிலை என்பது திசை மாறி பின்னர் மக்கள் தாமாவே ஏகாதிபத்தியங்களுக்கு ஆதரவாக செயற்படுகின்ற ஒரு பிரமையை, ஒரு போக்கை தொலைத் தொடர்பு சாதனங்கள் ஏற்படுத்தி விடுகின்றன. உதாரணமாக யூக்கோஸ்லாவிய அரசியல் தலைமை என்பது கொசோவோ மக்களை வெளியேற்றும் என்று எதிர்பார்க்கவில்லை. திட்டமிட்ட அல்லது தற்செயலாக நடைபெற்ற அகதிகள் வெளியேற்றத்தினை ஒரு கருவியாக பயன்படுத்தி தமது பயங்கரவாதத்தை நியாயப்படுத்துகின்றனர்.

இங்கு நேட்டோ நாடுகளின் எல்லைக்கப்பால் தனது ஆக்கிரமிப்பை விஸ்தரித்துள்ளது. அமெரிக்காவானது ஒப்பந்த நாடுகளையும் சேர்த்துக் கொண்டு ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது இதுவே முதல் தடவையாகும். 50 வருடப் பூர்த்தியைக் கொண்டாடும் நேட்டோவானது புதிய போக்கை கொண்டது எனினும் எல்லா உறுப்புநாடுகளும் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எவரும் தீர்க்கமான எதிர்ப்பைக் காட்டவில்லை. இங்கு மேற்கு ஐரோப்பாவில் நிகழும் முக்கிய அரசியல் போக்கையும் அரசியல் தன்மையையும் கவனிக்க வேண்டும். இன்று 100 வருடங்களுக்கு அல்லது முதலாம் உலக யுத்தத்திற்கு முற்பட்ட காலங்களில் இருந்து கொண்டது போல் பழமைவாத, முதலாளித்துவ கிருத்தவக் கட்சிகள் மாத்திரம் ஆட்சி செய்யவில்லை. மாறாக சமூக சனநாயக கட்சிகளும் (இதுபற்றி தனியே பார்ப்போம்) ஆட்சிப் பீடம் ஏறுகின்றன. இந்தக் கட்சிகள் எந்த விதமான ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலையும் கொண்டு நடத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இன்று அமெரிக்கா, பிரித்தானியா இவை இரண்டு நாடுகளும் மற்றைய நாடுகளை சேவி செயற்படுகின்றன. இதனை எந்த விதத்திலும் தடுக்க முடியவில்லை மாறாக அமெரிக்காவின் பின்னால் செயற்படுகின்றனர். புதிய நேட்டோ எவ்வாறு செயற்படும் என்பது பற்றி பலவாறான கருத்துக்கள் இருக்கின்றன. இத்துடன் ஐரோப்பா ஒன்றியம் தனக்கென பாதுகாப்புப்படையை

அமைக்க திட்டமிடுகின்றது. இது ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுகின்றது. எனினும், இவ்வாறான அமைப்பின் மூலமாக உலகத் தொழிலாளர் வர்க்கத்திற்கு எந்தவித பலனும் ஏற்படப் போவதில்லை. மாறாக ஏகாதிபத்தியங்களின் நாடுபிடிக்கும் ஆவலுக்கு பயன்படுத்தப்படும். படைபலம் என்பதே முதலாளித்துவ வர்க்க எதிரிகளிடம் இருந்து முதலாளித்துவ வர்க்க நலனைப் பாதுகாத்துக் கொள்வதாகும்.

முன்னர் ஐ.நாவின் ஒப்புதலின் பெயரில் ஈராக் மீது தாக்குதல் நடத்தினர். இப்போது சமாதானத்திற்குகான ஐக்கியம் என்ற தீர்மானம் சொல்லாட்சியும், சமாதானத்திற்கான யுத்தம் என்ற கருத்தையும் நியாயப்படுத்தி தற்பொழுது ஐ.நாவினை செயலற்றதாக்கி சுதந்திர நாட்டின் மீது குண்டு பொழிந்துள்ளனர். முன்னர் ஐ.நாவின் ஒத்துழைப்பின் கீழ்தான் எந்தச் செயற்பாடும் இருக்க வேண்டும் என்ற கருத்து இருந்தது. இன்றைய நிலை முன்னைய நிலைப்பாட்டை மீறியிருப்பதன் மூலம் குறிப்பாக பணக்கார நாடுகள் எந்த நாட்டின் மீதும் தமது படைகளை நீதியை நிலை நாட்டுவது என்ற போர்வையில் படைகளை அகற்றமுடியும். ஏகாதிபத்தியங்கள் முன்னர் எப்பொழுதும் சர்வாதிகாரிகள் மட்டில் சுண்டுவிரலைக் கூடகாட்டியது கிடையாது. இன்று ஏற்பட்டுள்ள இந்த புதிய நிலை எல்லா நாடுகளுக்கும் ஆபத்தானதே.

## 2.1.7 தொலைத் தொடர்பு

இன்றைய இலங்கையின் தொலைத் தொடர்புச் சாதனங்கள் அரச கட்டுப்பாட்டிலும், (Censor) தணிக்கைக்கும் உள்ளாகின்றது. அரச கட்டுப்பாட்டில் இருக்கின்ற போது அரசு மக்களிடம் தனது இயலாமையை மூடிமறைப்பதற்கு பாவிக்கின்றது. பொய்யான தகவல்களையும், செய்திகளை திரித்தும் செய்திகளைப் பரப்புகின்றது. பொதுவாக தொலைத் தொடர்பில் இருப்பவர்களை பின்வரும் வரையறைக்குள் வகுத்துக் கொள்ளலாம். புரட்சியாளர்கள், முதலாளித்துவ போக்காளர், நடுநிலை என்ற ரீதியில் முதலாளித்துவ கருத்தை முன்வைப்பவர்கள். ஆனால் இவர்கள் தம்மை நடுநிலையாளர் எனக் கூறிக் கொள்வர். இவர்கள் தமக்குள் ஒரு கருத்தைக் கொண்டிருப்பர். இந்தப் பகுதியினர் நடுநிலையான கருத்தை முன்வைப்பதாகவும் இடைவிடாது நிரூபிக்க முயற்சி எடுப்பர். இந்தப் பகுதியினர் சமூக மயப்படுத்தல் மூலமாக பொதுவுடமைக் கருத்துக்கு எதிராக கருத்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இன்னொரு பகுதியினர் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளும் பொருட்டு பல்வேறு வகைப்பட்ட அணுகு முறைகளை பாவிப்பர். ஆனால் அணுகுமுறையில் முழுமை பெறாத நிலை காரணமாக பிரச்சினைகளுக்கு விளக்கம் கொடுக்கும் போது குறைபாடு இருந்து கொண்டே தான் இருக்கும். இந்த நிலைகள் வரலாற்று ஆசிரியர்கள் நிலையிலும் இப்படித்தான் இருக்கின்றது.

இன்றைய உலகின் தொழில் நுட்ப வளர்ச்சி என்பது வியக்கும் வகையில் வளர்ந்துள்ளது. இந்த தொழில் நுட்ப வளர்ச்சியினை முழுமையாக மேற்கு

நாட்டவர்களே உபயோகிக்க முடிகின்றது. வளர்ச்சியடைந்த சமூகம் என்பது தொலைத் தொடர்புச் சாதனைத்தை தங்கியே இருக்கின்றது. தொலைத் தொடர்புச் சாதனங்கள் எனும் போது பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, மின் அஞ்சல், கணணி (கொம்பியூட்டர்) போன்றவையும், கைத் தொலைபேசி போன்றவை அடங்குகின்றன. குறிப்பாக பத்திரிகை, தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டால் அதில் வருகின்ற விவாதங்கள், ஆய்வுகளே வாழ்க்கைக்கான அளவு கோலாகவும், வழிகாட்டியாகவும் அமைந்து விடுகின்றது. குறிப்பாக தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டால் ஒரு விவாத நிகழ்ச்சியில் நிகழ்ச்சிப் பொறுப்பாளர், ஆய்வாளர் மற்றும் சில பொதுமக்கள் மற்றும் சில அரசியல் கட்சி சார்ந்தவர்கள் இடம் பெறுவர். இவ்வாறு இடம் பெறும்போது சில விடயங்களை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

நிகழ்ச்சிப் பொறுப்பாளர் தனக்கென கருத்துக் கொண்டிருப்பார். அந்தக் கருத்தை நிலைநாட்டக் கூடியவகையில் விவாதத்தை கொண்டு செல்வார். தனியே முதலாளித்துவ அரசியல்வாதிகளை அழைத்து அவர்களின் கருத்தை மாத்திரம் முன்வைத்தல். இங்கு சமூக சனநாயகவாதிகளுக்கு எதிர் வலதுசாரி அமைப்பை முன்நிறுத்தி விவாதங்களை மேற்கொள்ளல். இவ்விவாதத்தின் போது மார்க்சிய லெனினிய சிந்தனையாளர் அல்லது இந்தச் சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பங்குபற்றுமிடத்தில் இவர்களின் கருத்துக்கு சந்தர்ப்பம் கொடுப்பது மட்டுப்படுத்தப் படுவதுடன், உங்களின் கருத்து எமக்குத் தெரியும் என்றவாறாக இவர்களை ஒதுக்கும் போக்கையும் காண முடியும். உலகின் வெவ்வேறாக நிகழ்வுகள் நடப்பினும் பாகுபாடுகள் காட்டப்படுவதை அவதானிக்க முடியும். உதாரணமாக ஈராக்கில் அமெரிக்க, பிரித்தானிய விமானங்கள் தாக்குதல் நடத்திக் கொண்டு இருக்கின்றன. ஆனால் இன்றைய சந்தையில் யூக்கோ மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் என்பது கிராக்கியாக இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு நிறுவனங்கள் தமது கவனத்தை யூக்கோ மீது கவனத்தைச் செலுத்துகின்றன.

இந்த அவலங்களை மக்களுக்கு காட்டுவதற்கு ஒவ்வொரு நாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களும் தமக்கென ஒரு கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளன. சில நிறுவனங்கள் தனிமனித (அகநிலைப்) பார்வையை முதன்மைப் படுத்துகின்றன. சில புறநிலையாகவும் செயற்படுகின்றன. காட்டப்படும் காட்சிகளிலும் மாறுபாடுகள் இருக்கின்றன. சில நிறுவனங்கள் உக்கிரமான அழிவுகளையும், மக்கள் இரத்த வெள்ளத்தில் இருப்பதையும் காட்டுகின்றன. சில நாட்டு நிறுவனங்கள் மக்கள் அதனைப் பார்த்து ஆத்திரம் கொள்ளக் கூடாது என்பதில் கவனம் செலுத்துகின்றனர். இங்கு எந்த நிறுவனங்களும் ஏகாதிபத்தியம் எங்கெங்கு கவனத்தைச் செலுத்துகின்றதோ அந்த இடத்தை நோக்கியே தொடர்பு நிறுவனங்களும் கவனத்தைச் செலுத்துகின்றன. முன்னர் கூறியது போல் காரணத்தில் இருந்து பிரச்சினையை பார்க்காமல் விளைவுகளில் இருந்து பார்க்கும் பார்வைக்கு இந்த நிறுவனங்கள் உதவுகின்றன. இன்று ஈராக்கிற்கு மேற்குலகம் செய்யும் கொடுமையினால் ஏற்பட்ட விளைவுகளை முக்கியத்துவம் கொடுத்துக் காட்டுவதை தவிர்த்துக்

கொள்வதுடன். யூக்கோவானாது கொசவோ மக்களை நாட்டை விட்டு அகற்றுவதை மாத்திரம் நீண்ட நேரத்தைச் செலவிடுகின்றது.

ஒடுக்கப்படும் மக்களாகிய கொசவோ மக்கள் மீது உண்மையான கரிசனை கொள்வது ஒடுக்கப்படும் சக மக்களாகத் தான் இருக்க முடியும். ஆனால் இந்த செய்தி நிறுவனங்கள் அகதிகள் வெளியேற்றத்தைக் காட்டி ஏகாதிபத்தியத்தின் செயற்பாட்டிற்கு ஆதரவு செலுத்துகின்றனர். இவ்வாறு மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் இருக்கின்றன. இந்தப் பத்தாண்டுகளில் குர்டார் இனத்தவர் ஈராக்கில் இருந்து துரத்தப்பட்டனர். தமிழ் பேசும் இசுலாமிய மக்கள் வடபகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். தமது பாரம்பரிய பிரதேசத்தில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப் பட்டனர். இவைகள் ஒன்றும் இந்த சர்வதேச சமூகத்திற்கு தெரியாது. இந்த வேளைகளில் சர்வதேச சமூகம் எங்கு சென்றது. இந்த ஏகாதிபத்திய சூழ்ச்சியைப் புரிந்து கொள்ள முடியாத ஏகாதிபத்தியத்தின் சொந்தக் குடிகள் செய்தி நிறுவனங்களின் பிரச்சாரத்தை நம்பி விடுகின்றனர். இது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடிய ஒன்றல்ல. இந்த ஏகாதிபத்திய நாடுகளின் சொந்தக் குடிகள் தமது வாழ்க்கையில் சரி, பிழைகளை வாழ்க்கையின் நடைமுறையை (experts) தேர்ச்சி பெற்றவர்கள் முன்வந்து சொல்லப்படுபவைகளைக் கொண்டே நடைமுறையை தெரிந்து கொள்கின்ற மேற்கத்தைய உலகத்தில் செய்தி நிறுவனங்கள் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன.

இன்று சர்வதேசத்தின் மிகப் பெரிய செய்தி நிறுவனங்கள் சேர்ந்து கொண்டு புதிய அலை வரிசையில் நிகழ்ச்சியை ஒளி ஒலிபரப்ப இருக்கின்றனர். இதற்கு CNN, DW போன்ற நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஒளி ஒலிபரப்பவுள்ள புதிய அலை பால்கன் மொழிகளில் ஒளி ஒலிபரப்பவுள்ளர். இன்று யூக்கோவின் தொலைக்காட்சி, வானொலி நிலையங்களை தாக்குதல் நடத்தி அழிப்பில் ஈடுபட்டிருக்கும் இவர்கள் மின் அணுநகலின் மூலமாக செய்திகளைப் பெறுகின்றனர். யூக்கோ மின் அணுமூலமாக வைரசை அனுப்பிதன் காரணமாக பல அரச, மற்றும் இராணுவத் துறைகளின் கணணிகளுக்கு வைரஸ் புகுந்துள்ளதினால் யூக்கோவிற்கான தொடர்பை அறுத்துக் கொள்ள வேண்டும் என ஏகாதிபத்தியங்கள் கோரிக்கை விட்டனர். எனினும் பத்திரிகை, தொலைக் காட்சி நிருபர்கள் இல்லாத காரணத்தால் மின் அணுநகல் மூலமாகவே தனிநபர்கள் மூலமாக செய்திகளைப் பெற முடிகின்ற காரணத்தால் தொடர்பு என்பது நிறுத்தப் படவில்லை. எதிர்காலத்தில் எவ்வாறும் மாற்றமடையலாம்.

ஆனால் அத்துடன் செய்திகளை சேகரித்துக் கொள்ளும் முகமாக தொலைத் தொடர்புச் சாதனங்களை வைத்திருக்கின்றனர். அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் அமெரிக்கக் குரல் (VOA) வானொலி போன்றவையாகும். இலங்கையில் அமெரிக்க வானொலி நிலையம் விஸ்தரிப்பிற்கு எதிராக உள்ளூர் மக்கள் போராடினர். இந்தப் போராட்டம் பொலிசாரைக் கொண்டு அடக்கப்பட்டது. இத்துடன் சுதந்திரமான தொடர்புச் சாதனங்கள் என்று சொல்லிக் கொள்ளும் சர்வதேசத் தொலைத் தொடர்பு சாதனங்கள் CNN, BBC, என்பன ஏகாதிபத்திய நலன் கொள்ளக் கூடிய கருத்துக் கணிப்பை ஏற்படுத்தும் முகமான நடவடிக்கைகளிலும் செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றது வெளிப்படையானதாகும்.

## 2.1.8 அமைதிப்படை

இன்று ஐ.நா தலையிடவேண்டும். அமெரிக்க எமது தேசத்தின் கடைக்கண் காட்ட வேண்டும் என கருத்து தெரிவிக்கின்றனர். இது நிச்சயம் ஆபத்தானதாகத் தான் இருக்கும், அமைதிப்படை என்பது தனியே எந்தவித பலாபலனும் இல்லாமல் உருவாக்கப்படுவதில்லை. சாதாரணமாக பணத்தினை சேர்க்க குறியாய் இருப்பவர்கள் பதவிமோகம் உடையவர்கள் சாதாரணமாக எந்த இலகுவான செயலையும் செய்வதில்லை. அதில் எவ்வளவு லாபம் அவர்களுக்கு வருகின்றது எனயோசித்தே நடந்து கொள்கின்றனர். இப்படி இருக்கையில் எத்தனையே மைல்களுக்கு அப்பால் இருக்கின்றவர்கள் ஜனநாயகத்தையும், ஒரு நாடு, மற்றைய நாடுகளை மிரட்டுவதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்தில், பல லட்சக்கணக்கான டொலர்கள் செலவில் செய்யப்பட்ட குண்டுகளையும், விமானங்களையும், ராணுவத்தினருக்கான ஊதியம், எல்லை கடந்து வந்து தமது படையணிகளை பாதுகாக்கும் செலவு, நிர்வாகச் செலவு ஆகியவற்றின் பொறுப்பை தமது முதுகில் ஏற்றுக் கொண்டு ஆபத்தாண்டவராக காட்டுவதில் சூட்சும் இருக்கின்றது. இவற்றை கேள்வி கேட்டு தெரிந்து கொள்வதன் மூலமே தெளிவிற்கு வரமுடியும்.

அமைதிப்படை என்ற பெயரில் 1953 இல் ஐநாவின் பெயரில் கொரியாவில் நுழைந்தது. இதன் பின்னராக சைப்பிரஸ், லெபனான் போன்ற நாடுகளில் மேற்குநாடுகள் தமது கால்களை வைத்தனர். இதன் தொடர்ச்சியாக சோமாலியா, கெயிற்றி, றொவண்டா போன்ற நாடுகளில் நுழைந்து கொண்டனர். இந்தியா பங்களாதேசத்திலும், இலங்கையிலும் நுழைந்து கொண்டது. அமைதிப் படை என்றால் என்னவென எமது மக்களுக்குத் தெரியும் ஆனால் அமைதிப்படை என்றால் என்னவெனத் தெரிந்து கொள்வதற்கு அமைதிப் படையை யுத்தம் நடக்கின்ற நாட்டிற்கு வரவழைத்து அதில் இருந்து தான் அமைதிப் படை இதுதான் என தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. ஆனால் இவற்றை சர்வதேச அனுபவங்களில் இருந்து தெரிந்து கொள்ளமுடியும். இவ்வாறான வரலாற்று அனுபவங்கள் ஊடாக பெறப்படுகின்ற படிப்பினைகளில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

அமெரிக்கா பனாமா நாட்டுத் தலைவராக இருந்த மனுவல் நொரேகாவை அந்நாட்டை ஆக்கிரமித்து கைது செய்தது. இந்த நிலை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்பது அல்ல. ஆனால் புலிகளின் தலைவர் கைது செய்யப்பட வேண்டும் என்றவாதம் இருக்கின்றது. ராஜீவ் கொலை வழக்கில் (4 தமிழீழ அனுதாபிகள் தவிர மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்) குற்றவாளியை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற பிரச்சாரங்கள் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் உத்தியோக பூர்வமாக அரசு அறிவிக்கவில்லை எனினும் இப்படியான சர்வதேச உதாரணங்களை பார்த்து அதே போல் பிராந்திய வல்லரசான இந்தியா செயலில் இறங்கலாம். ஈராக்கில் செய்கின்ற அடாவடித்தனம் போல் எமது நாட்டிலும்

செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்த சக்திகள் முனையலாம். அப்படி இறங்குவதை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது. ஆனால் எந்தச் சக்திகளையும் தண்டிக்கும் உரிமை எந்தக் காலத்திலும் அந்தந்த நாட்டு மக்களுக்கான அடிப்படை உரிமை சார்ந்ததாகும். இதனை விடுத்து குறுக்கு வழியில் தமது எதிரிகளை இல்லாமல் ஆக்க வேண்டும் என்ற நிலையில் செயற்படுவது அரசியலில் பாட்டாளி வர்க்க நிலை சார்ந்ததான அரசியலாக இருக்க முடியாது.

மற்றைய நாட்டின் அரசியல் நிலையில் இருந்து தமது நலன் சார்ந்த நிலையைப் பாதுகாக்கின்ற அரசியல் தந்திரோபாயத்தை வகுக்க உதாரணமாக காட்டிக் கொண்டு செயற்படுகின்றன. சர்வதேச நிலையில் நடைபெற அனுமதிப்பது அந்த நாட்டிற்குத் தான் பாதிப்பு எமக்கு இல்லை என்ற நிலையில் மக்களோ போராட்டத் தலைமைகளோ இருக்க முடியாது. பிராந்திய வல்லரசுகளுக்கும் வறிய தேசத்தவரான எமக்கும் இடையேயான பிரச்சினையில் ஏகாதிபத்தியங்கள், நல்ல பாம்பு வேடம் இட்டு எமது தேசங்களில் நுழைகின்ற சந்தர்ப்பத்தை கொடுக்க விடாது போராட வேண்டும். இதற்கு போராட்டத் தலைமைகள் மக்களை அதற்கு ஏற்றவாறாக தயார்ப்படுத்த வேண்டியது முக்கிய கடமையாகின்றது. ஏனெனில் புரட்சி என்பது மாலைநேர விருந்து அல்ல. அது நீண்ட நெடிய பாதையைக் கொண்டது. இதனை வெற்றி கொள்ள அவசியமான தந்திரோபாயம் வகுக்கும் சக்திகள் தகுந்த நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டியது முக்கிய கடமையாகும்.

சமாதானப் படை என்ற திட்டத்தின் கீழ் ஐ.நா சபையின் பெயரில் படைகளை யுத்தம் நடந்துவரும் நாடுகளுக்கு அனுப்புதல். இந்த தந்திரோபாயம் என்பது மனித குல வரலாற்றிற்கு புதியது அல்ல. குலச் சமுதாயத்தில் மாமன், மச்சான் என அணிவகுத்து தமது எதிரியை வீழ்த்தினர். இன்று தனியே சென்றால் கறை படியாத கரங்களாக இருக்கின்ற நாடுகள் சந்தர்ப்பவாதமாக மாறி தம் மீதே குற்றம் சுமத்தவும், பழிபோடவும் முடியும் என்ற நிலையில் கூட்டிற்கு பங்காளிகளை அழைத்துச் செல்கின்றனர். இந்தப் போக்கே ஈராக் மீதான யுத்தத்தின் போது நடை பெற்றது. தற்பொழுது சதாம் குசைனின் வாசல் ஸ்தலங்களை பரிசோதனை இடவேண்டும் என்ற கோரிக்கை கூட குலச் சமுதாயத்தில் இருந்து பெற்ற எச்சங்கள் தான். இது அன்றைய சமூகத்தின் அடாவடிச் செயற்பாட்டின் எச்சங்கள்.

சமாதானப் படைகள் என்ற போர்வையில் செல்கின்ற இந்தப் படையின் அந்நாட்டு கலாச்சார பண்பாடுப் புரிதல் இன்றி தாம் நினைத்த மாதிரி செயற்படுகின்றனர். படை அனுப்புகின்ற தலைமையானது தமது வர்க்க நிலைகளை உறுதி செய்வதில் கவனமாக இருக்கின்றதே ஒழிய பிரத்தியேகமான நிலைகளை கவனிப்பது இல்லை. இந்த நிலையே சோமாலியாவில் இடம்பெற்றது. நேட்டோ படைகளை கொசவோவில் நிலை கொள்ள வைக்க வேண்டும் எனக் கோருகின்றது. இதில் யூக்கோ அல்லது நேட்டோ வெற்றி

கொள்ள முடியும் ஆனால் காலம் காலமாக மக்கள் தம்மிடையே சண்டை இட்டுத்தான் வந்து இருக்கின்றனர். குலச் சமுதாயமாக இருக்கின்ற போது சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படவில்லை. தமது நிலைமாறிய பின்பாடே புதிய கட்டத்திற்கு மாற்றமடையும்.

சோமாலியா, அல்லது முதலாளித்துவச் சிந்தனை வளர்ச்சியடையாத எந்தச் தேசமாக இருந்தாலும் மேற்கத்தைய நிறுவனமயப்பட்ட சிந்தனைப் போக்கை கொண்டு செயல்பட முடியும். அன்நியப் படைகள் பலாத்காரமாக மாற்றத்தை உண்டு பண்ண முயற்சித்தனர். ஆனால் இது வெற்றியளிக்கவில்லை. இவ்வாறான நாடுகளில் அழையா விருந்தினராக நுழைந்து சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிப்பது ஏகாதிபத்தியத்தின் புதிய மனநிலைப் (spychological) போக்காகும். எப்படியாவது அடித்து அமைதியைப் உருவாக்க வேண்டும் என்ற சிந்தனைப் போக்காகும். இன்று சமாதானப் படைகள் இருக்கின்ற நாடுகளில் ஏகாதிபத்தியங்கள் மிரட்டியே சமாதானத்தைக் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

அமைதிப்படை நடவடிக்கைகள் மூலம் குற்றவாளிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துகின்றது குற்றவாளிகளாக உள்ளவர்களை ஆராய்ந்து நோக்கின் ஏகாதிபத்தியத்திற்கு சேவகத்தினை நேரடியாக செலுத்தாதவர்களாகத் தான் இருக்கின்றனர். இவற்றின் சில பொதுப் போக்குகளைப் பார்ப்போம்.

- முதலாளித்துவ பொருளாதார சமூக உறவிற்கு பழக்கப்படாத குலச்சமூகங்களின் எச்சங்களை கொண்ட தேசத்தின் ஆட்சியாளர்கள், குறிப்பாக ஆபிரிக்க நாடுகளைச் சார்ந்ததாக இருக்கின்றது.

- ஏகாதிபத்தியத்தின், பிராந்தியத்தின் நலனுக்கு முரணாக இருப்பவர்கள் குறிப்பாக பனாமா, ஆட்சியாளர், பழைய யூக்கோஸ்லாவிய நாடுகளின் ஆட்சியாளர்கள்.

- முன்னை நாள் சோசலிச அமைப்புக்களின் தலைவர்கள். போராடிக் கொண்டிருக்கும் அமைப்புகளின் மீதான (புலிகள் மீதான, குர்டர் மீதான தடைகள்) கெடுபிடிகள்.

- இவற்றில் விலக்காக முதலாளித்துவ சர்வாதிகாரிகள் இவ்வகையான கொடுபிடிகளில் இருந்து தப்பியுள்ளனர். ஊதாரணமாக சிலிநாட்டு தலைவர் அகஸ்தினோ பினோச்சே, சுகர்னோ இந்தோநேசியா, தென்ஆபிரிக்க ஆட்சியாளர்கள், பிராங்கோ ஆட்சியில் அமைச்சராக இருந்த அந்தோனியோ சமராங், தற்போதைய இஸ்ரேல் பிரதமர், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஆரியல் சரோன் போன்றவர்களை குறிப்பிடலாம்.

இந்தப் போக்கு ஒரே போக்கைக் கொண்டதாக இருக்க முடியாது ஆனால் காலத்துக்கு காலம் சர்வதேச சந்தர்ப்பத்தைக் கொண்டு மாற்றம் கொண்டிருப்பதால் நெகிழ்வுத் தன்மை கொண்டுள்ளது.

## 2.1.9 தன்னார்வக் குழுக்கள்

சர்வதேசத்தை எடுத்துக் கொண்டால் தன்னார்வக்குழுக்கள் திமிங்கல. மிருகப்பாதுகாப்பு, சுற்றாடல், காடுவளப் பாதுகாப்பு, மனிதஉரிமைகள், இனவாத எதிர்ப்பு, புனர்வாழ்வு, அகதிகள் நல அமைப்புகள், யுத்த அணுவாயுத எதிர்ப்பு போன்ற பல்வேறு வகையான அமைப்புகள் செயற்படுகின்றன. இந்த தன்னார்வ அமைப்புக்கள் ஐரோப்பிய சூழலில் புரட்சிகர அமைப்புகள் பலமாக இல்லாத நிலையில், தன்னியல்பான போக்கைக் கொண்ட அமைப்புகள் இருக்க வேண்டும் என்பதில் முரண்பாடு கொள்ள முடியாது. ஆனாலும் இந்த தன்னார்வக் குழுக்களினால் ஏற்படுகின்ற சாதக, பாதகங்களை கவனித்தல் அவசியாமானதாகும். இந்த அமைப்புக்கள் தமது இலக்கைத் தவிர்ந்த எந்த விதமான போராட்டத்திலும் கவனம் செலுத்துவதில்லை. உதாரணமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் புனர்வாழ்வு தவிர்ந்த யுத்த எதிர்ப்பில் கருத்துச் சொல்லாது. அதே போல் சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமை தவிர்ந்த எந்தச் செயற்பாட்டிலும் கருத்தைச் சொல்ல முன்வராது.

சுரண்டும் வர்க்கச் சிந்தனை கொண்ட உறுப்பினர்களைக் கொண்ட அமைப்புகள் மனித உரிமை, உதவி நிறுவனங்கள் என்ற போர்வையில் செயற்படுகின்றது. தன்னார்வக் குழுக்களின் மூலமாக ஏகாதிபத்தியங்கள் இன்றையக் காலத்தில் பல செயற்பாடுகளைச் செய்து முடிக்கின்றனர். இவர்களின் நடவடிக்கைகள் சனநாயம் என்ற பதத்தின் கீழ் அடக்கப்படுகின்றன. இவர்களின் செயற்பாடுகள் சமூக மாற்றத்திற்கு இருக்கின்றது. தன்னார்வக் குழுக்களின் கலாசாலையில் கல்வியைக் கற்றவர்கள் ஒரு பகுதியினர இவ்வாறான வேலைகளுக்கு அமர்த்தப்படுகின்றனர். இவர்கள் நம் சமூகம் பற்றிய பார்வையை தமது மேல் அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கின்றனர். இவர்களின் (குறிப்பாக மானிடவியலாளர்கள்) ஆய்வின் படி எவ்வகையாக சமூகப் போக்கைக் கொண்டுள்ளனர் என்பது பற்றி அறிந்து, அந்தச் சமூகம் மீது மனோவியல் தாக்குதல் தொடுக்கின்றனர். முன்னையப் போல் நேரடியாக உளவுத்துறையை அனுப்பி அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபதை விட இவ்வாறான நடவடிக்கைகள் தொழில் நுட்பம், தொலைத் தொடர்புச் சாதன வளர்ச்சியின் காரணமான இரத்தம் சிந்தாமல் தமது காரியத்தை முடிக்க முடிகின்றது.

இந்த அமைப்புகள் பரந்து பட்ட மக்களின் சனநாயக உரிமை பற்றிக் பேசுவதை விட தனிநபர்களினதும், இயக்கங்கள் விடுகின்ற நடைமுறைத் தவறுகளையும் முக்கியத்துவப்படுத்தி செயல்படுகின்றன. இவர்களுக்கோ தனிநபர்கள் மீதான மோகம் என்பது அவர்கள் வாழ்கின்ற சமூகப் போக்கின் விளைவாகும். தனிநபர்களை வளர்க்கின்ற போக்கை சமூக மயப்படுத்தலின் ஊடாக வளர்த்து விடுகின்றனர். இந்த சமூகப் போக்கு என்பது ஒரே மாதிரி அமைந்து கொள்ளாவிடினும் தனித்துவவாதம் என்ற சிந்தனைப் போக்கு என்பது ஏகாதிபத்தியத்தின் காலத்திற்குரிய பொருளாதாரத்தின் பாதுகாப்புக் கவசமாகும்.

சுரண்டும் வர்க்கச் சிந்தனை கொண்டவர்கள் எனினும் அனைவரும் இந்த சுரண்டும் பொருளாதார சமூகத்தை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டவர்கள் அல்ல. இருந்தும் ஐ.நாவின் ஊழியர்கள் என ஈராக்கிற்கு சென்ற ஐ. நாவின் அதிகாரிகள் அமெரிக்காவிற்காக உளவு பார்த்தனர் என அமெரிக்க பத்திரிகைகள் அம்பலப் படுத்துகின்றன. ஈராக் பலதடவைகள் ஊழியர்கள் தொடர்பான திருப்பியின்மையை வெளிப்படுத்தியிருந்தனர். தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரராக ஐ.நாவின் பரிசோதகர்கள் ஒரு நாட்டினுடைய முக்கிய இடங்களை பார்வை இடம் மாத்திரமல்ல ஆத்திரப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ''ஸ்கொட்'' (Scott Ritter UNSCOM Inpector- CNN செய்தியின் படி) என்ற **''பாலைவன நரி''** நடவடிக்கைகளுக்கு முன்னராக அமெரிக்க, இஸ்ரேலிய உளவுப் பிரிவுகளிடம் இருந்து எந்தெந்த இடங்களில் ஆயுதங்கள் ஈராக் பதுக்கி வைத்திருக்கின்றனர் என்பது போன்ற செய்திகள் பெறப்பட்டதால் தாம் முனைப்பாக செயற்பட முடிந்தது என தெரிவித்துள்ளார்.

தற்பொழுது யூக்கோவில் குண்டுமழை பொழிவதற்கு முன்பாக ஐரோப்பிய பாதுகாப்பிற்கும், ஒத்துழைப்பிற்குமான அமைப்பு தாம் சேகரித்துக் கொண்ட தகவல்களை நேட்டோவிற்கு ஒப்படைத்ததாக செய்திகள் வெளிவந்துள்ளது. ஏகாதிபத்தியங்களுடன் ஒத்துழைப்பது என்பது ஒன்றும் புதுவிடயம் அல்ல. 1950களில் ஐ. நாவின் செயலாளராக இருந்த திரிக்வ (Trykve) என்பவர் மக்காட்டர் (McCarter) என்பவருடன் சேர்ந்து ஒத்துழைத்து பற்பல அதிகாரிகளை காட்டி கொடுத்தார். பல மனிதாபிமானிகள் McCarter ரின் களையெடுப்புகளுக்கு ஆளாகினர். இவர்களில் பல தற்கொலையும் செய்து கொண்டுள்ளனர். பல தமது வேலையை இழந்துள்ளனர். இதனை விபரித்த அன்றைய உபசெயலாளர்நாயகம் உலகத்திற்கும், சகஊழியர்களுக்கும் விளைவித்த துரோகம் என்றார். இவைகள் எல்லாம் காலம் கடந்துதான் அம்பலத்திற்கு வந்தது என்பது கவனிக்கத்தக்கது.

உளவு என்பது ஐ. நா ஊழியர்கள்
உதவி நிறுவனங்கள்
இ.மெயில் (மின்அஞ்சு நகல்)
செய்மதி மூலமான தகவல் சேகரிப்பு
ராடர் மூலமான கண்காணிப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன.

ஐ.நாவின் பரிசோதகர்களாவும், உதவி நிறுவன ஊழியர்களாகவும் செல்கின்றவர்களின் வர்க்க நிலையை அறிதல் மூலம் ஒரு முடிவிற்கு வரமுடியும். ஊழியர்களாக சென்றவர்கள் சுரண்டும் பொருளாதார சமூக அமைப்பை பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் இருந்து மறுஉற்பத்தி செய்யப்பட்டவர்களே. இன்று உயர் கல்வி கற்றவர்கள் முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு பாதுகாப்பாக உத்தரவாதம் கொடுக்கும் இவர்களுக்கு, இலகுவாக முக்கிய பதவிகள் வகிக்கின்ற சந்தர்ப்பம் நிறையவே இருக்கின்றது. இதில் விதிவிலக்கும் இருக்கும். இங்கு ஒரு குறிப்பிட்ட மேட்டுக்குடிகள் முக்கிய பதவிகள் வகிக்கின்றன.

இவற்றிடையில் அரசியல் கட்சிகளில் அங்கம் வகிப்பவர்கள், தொழிலதிபர்கள், உயர் அதிகாரிகள் எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவிபுரிகின்றனர். தமது நலன்களுக்கு தேவையானவைகளை செயற்படுத்தவும், தமது தேவைகளை பூர்த்தி செய்யவும் ஒவ்வொருவருக்கும் இடையே அதிக புரிந்துணர்வு இருக்கின்றது. தேவையான போது (lobby) தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள தூது விடுகின்றனர். இங்குள்ள அரசியல்வாதிகள் ஒவ்வொரு கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் இடைஞ்சல் கொடுக்காது தமது அரசியல் வாழ்வைத் தொடர்ந்து செல்கின்ற ஒரு சமூக அமைப்பே மேற்குலகத்தில் இருக்கின்றது. தேவையை (lobby) நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு செயற்படும் போக்கினை அவதானிக்கும் போது கட்சிகள் தமது சொந்த கொள்கைகளை விட்டு விட்டு, (முதலாளித்துவ சிந்தனை அடிப்படையானது) கொள்கை நழுவி நடக்கும் போக்கினை கொண்டுள்ளனர். இது சுத்தச் சந்தர்ப்பவாதப் போக்கேயாகும். உலகத்தில் அதிகாரம் என்பது கூட குறிப்பிட்ட குழுக்களுக்குக்கிடையேயே பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக சமூகப் பாடங்கள், கல்விகளை தெரிவு செய்பவர்கள் தமது அறிவை மனித குல வளர்ச்சிக்காக பாவிப்பதில்லை எனலாம். இப்படிப்பட்டவர்களே ஐ.நாவின் ஊழியர்களாவர். ஐ. நா என்பது பக்கம் சாராத அமைப்பு எனக் கூறப்பட்டாலும் அவை வெறும் வெற்று கருதுகோளே. இப்படியாக உயர்பதவி வகிப்பவர்கள் பொதுவுடமைச் சமூகம் பற்றிய காழ்ப்புணர்ச்சி இவர்களிடத்தில் சிறு வயது முதலே ஏற்படுத்தப்படுகின்றது. இவர்கள் வளர்ந்த பின்னர் பதவிகளில் அமர்ந்த பின்னர் பொதுவுடமைத் தத்துவத்திற்கு எதிராகவே செயற்படுவர். இவ்வாறானவர்கள் ஏகாதிபத்தியங்களின் கூலிகளாக செயற்பட்டதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

## 2.1.10 அமெரிக்கக் கனவு

அமெரிக்க வாழ்நிலைக்கான முன்மாதிரியான வடிவத்துடன் அமைந்து விடுகின்றது. இன்று இருக்கின்ற எந்தச் சமூக அமைப்பும் அமெரிக்காவை உதாரணம் காட்டத் தவறுவதில்லை. இந்த உதாரணம் என்பது பல தடவைகளில் நியாயம் பெற்றுக் கொள்கின்றது. வெளிநாடு செல்வது என்றால் அமெரிக்காவிற்குத் தான் செல்ல வேண்டும் என்று கருத்தியல் எமது மக்கள் மத்தியில் இருக்கின்றது. சிந்தனை ஓட்டத்தைக் கவர்ந்தவர்கள் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு ஆவலாகத் துடிக்கின்றனர். இன்று வறுமையில் வாடுகின்ற நாடுகளில் உள்ளவர்கள் மேற்குத் தேசங்களில் நல்லாக வாழலாம் என்ற கருத்துப் போக்கு இருந்திருக்கின்றது. சோசலிசக் கருத்தை மறுப்பவர்கள் அமெரிக்காவை உதாரணம் காட்டிக் கதைப்பதையும் மேற்கு நாடுகள் மூலமான மோகத்தையும் கண்டு கொள்ள முடியும்.

தனிமனித முயற்சியின் ஊடாக எதனையும் செய்துவிட முடியும் என்ற கருத்துருவம் அனைத்து பிரிவினரிடையேயும் புரையோடிப் போயுள்ளது. சமூகத்தை பின்னுக்குத் தள்ளி விட்டு தனிமனிதனை முன்னுக்குத் தள்ளுகின்றது.

உதாரணத்திற்கு தனிமனிதன் வேட்டைக்குச் செல்வது சுதந்திரமானது எனின், அவர்கள் வேட்டைக்குச் செல்ல ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும், வேட்டையாடச் சுதந்திரம் இருப்பதனால் அவர்களுக்கு துப்பாக்கி வைத்திருக்க சுதந்திரம் அனுமதிக்கப்பட வேண்டும். இந்தச் சுதந்திரத்தின் அடிப்படையில் வந்தது தான் அமெரிக்க மக்களிடையே உள்ள ஆயுதப் பழக்கமும் ஆயுதக் கலாச்சாரமாகும். சமூகத்தை தனிமனித நிலையில் இருந்து உலகத்தை நோக்கிப் பார்ப்பதும் அதிலிருந்து மேற்கொள்ளும் சமூக உறவைக் கொண்டதாகும். தனிமனிதரிடையே சுதந்திர போட்டியும் மனிதர்களை மிதித்து அவர்களின் மீது தமது முன்னேற்றத்தை மேற்கொள்வதாகும் இங்கு ஏமாற்று பித்தலாட்டம் சுரண்டல் எல்லாம் தனிமனிதனின் திறமையின் பலமாக காட்டப்படுகின்றது. தனிமனிதனின் திறமையை வேறு சுரண்டலின் மூலம் தமது மேம்பாட்டை கவனித்து செயற்படுவது வேறு. இவற்றை புரிந்து கொள்வது முக்கியமானதாகும். இவ்வாறான தனிமனித செயற்பாடுகளையும், தனிமனிதனால் நல்ல காரியங்களை செய்யமுடியும், போராட்டங்கள், கிளர்ச்சிகள், புரட்சி என்பதெல்லாம் அவசியம் அற்றது என்ற போக்கையும் கொள்ளும் சித்தாந்தத்தையும் வளர்க்கின்றது.

தனிமனித வெளிப்பாடுகளுக்கு உதாரணமாக அன்னை திரேசா, டயானா போன்றவர்களை குறிப்பிடலாம். குறிப்பாக டயானாவை எடுத்துக் கொண்டால் அவர் இறந்த பின்னராக புனிதப்படுத்தப்பட்டதை அவதானிக்கலாம். பற்பல சமூகத்திற்குத் தேவையான கோரிக்கைகளுக்காக போராளிகள் போராடுகின்றனர். தனிமனிதர்களை மாத்திரம் முன்னிறுத்துவதன் காரணம் மக்கள் குழுவாக செயற்படுவதை பின்னுக்குத் தள்ளிவிட்டு தனிமனித செயற்பாடுகளையும், தனிமனிதர்ளை முன்னுக்கு நிறுத்தி மக்கள் போராட்டங்களை மலினப்படுத்துவதாகும்.

அமெரிக்கநாடு சுதந்திரமான சிந்தனைகளை வளர்ப்பதாகவும், கடவுள் தம்மை வழிநடத்துவதாகவும், குடும்ப உறவு, கடும் உழைப்பு இவைகள் எல்லாம் உள்ளடக்கியதே அமெரிக்கக் கனவாகும். இவற்றின் வெளிப்படையான அம்சமாக அமெரிக்க ஜனாதிபதி குடும்பமாக ஞாயிறு பூசைக்கு செல்வதும், குடும்பமாக இருந்து கொண்டு நத்தார் கதையை சிறுவர்களுக்கு வாசித்துக் காட்டுவதுமாகும். இவை அமெரிக்க மேட்டுக் குடிகளிற்கான ஒரு அடையாளச் சின்னமும் கூட. அமெரிக்காவை சந்தர்ப்பத்தைக் கொடுக்கும் நாடாகவும், புதிய சிந்தனைகளை போற்றி வளர்க்கும் நாடாகக் கருதியும் கொள்வர்.


## 2.1.11 சர்வதேச சமூகம்?

1991 இல் என (Operation Desert strom) புனைபெயர் கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையும், பின்னர் ஈராக்மீது அமெரிக்காவும், பிரித்தானியாவும் சேர்ந்து பாலைவன நரித் தாக்குதல் (Operation Desert fox) என்ற பெயரில் தாக்குதலை நடத்தியுள்ளது. நடத்தி முடிந்த பிற்பாடு தாம் நடத்திய

தாக்குதலுக்கு காரணம் கற்பிக்கவும், தமது செயலை நியாயப்படுத்தவும் பங்காளிகளையும் தற்பொழுது சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஆயுத, பண வல்லமை படைத்த மேற்கு நாடுகள் மேற்கொள்கின்றன. தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள முடியாத ஒரு மக்கள் கூட்டத்தின் மீது தாக்குதலை நடத்துவது பயங்கரவாதமே தான் இந்தப் பயங்கரவாத செயல்களை வறுமை நாட்டைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கத் தான் செய்கின்றனர். ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்கள் இத்தாக்குதலை ஆதரிக்கின்றனர். இவைகள் எல்லாம் ஒரு வர்க்க நலனின் பால் அக்கறை கொண்டு நிற்கின்றது. இந்த எதிர்ப்பில் மக்கள் ஒரு புறமாகவும் உள்நாட்டு ஆட்சியாளர் ஒருபுறமாகவும் மேற்கு நாடுகள் ஒரு புறமென மூன்று நிலையான பிரிவுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உலகில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பிரச்சினைகள் ஒவ்வொன்றும் வர்க்க நலனில் இருந்து ஒவ்வொன்றினதும் முக்கியத்துவம் மாறுபடுகின்றது. இந்தப் பிரச்சினைகள் தனிநபர், கிராமம், தேசிய, பிராந்திய, சர்வதேச மட்டங்களில் இருந்து மாறுபடுகின்றது. இந்தப் பிரச்சினைகளை பார்க்கின்ற போது தனிநபர்களின் நலன் என்பது முதன்மை பெற்று அதுவே அழிவிற்கு காரணமாகின்றது. ஈராக்கின் மீதான தாக்குதல் என்பது தனியே தனிநபர் நலன் அடங்கவில்லை. ஆனால் தனிநபரின் நலனுக்குச் சாதகமாக பாவிக்கப்பட்டதை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

இவர்கள் கூறுகின்ற சர்வதேச சமூகம் என்பது எது முன்பு பார்த்தது போல் மேற்கு நாடுகள், எமது நாட்டு ஆட்சியாளர்கள், வறுமையில் வாடுகின்ற மக்கள் என்பவரிடையே நலத்தின் மீதான ஆர்வம் வித்தியாசப்படும். அதேபோல் சர்வதேச சமூகம் என்பது முதலாளித்துவ பொருளாதார உற்பத்தியையும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாக்க வல்ல கூட்டாளிகளையும், இந்த ஆட்சியாளர்களுக்கு உறுதுணையாக நிற்கின்ற பணக்காரர்களின் தொழிற்சாலைகளையும் பாதுகாக்க வல்ல சக கூட்டாளிகளின் எண்ணப்பாட்டையே இவர்கள் பிரதிபலிக்கின்றனர். அதாவது கருத்தொற்றுமை கொண்டவர்களின் அனுசரணையும், ஆதரவும் கொண்டுள்ளவர்களை மாத்திரமே இங்கு குறிப்பிடுகின்றனர். எனவே இவர்கள் குறிப்பிடுகின்ற வட்டத்திற்குள் ஒடுக்கப்படும் மக்கள் இதற்குள் அடங்கப்படவில்லை. இவர்கள் எங்கேயோ இருந்து வந்து எமது தேசங்களின் மீது அக்கறை கொள்வது ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுகின்றதாம் இப்படித் தான் இவர்களின் அக்கறை பற்றி கொள்ளமுடிகின்றது. சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளை இனம்கண்டு கொள்ள கீழ்வரும் தலைப்புகளில் மேற்கொள்ளப்படும் விடயங்கள் உதவி புரியும்.



## 2.1.12 தாக்குதல் நடத்தப்படும் இலக்குகள்

1991 ம் ஆண்டு சர்வதேச சமூகங்கள் அனைத்தும் சேர்ந்து கொண்டு பயங்கரவாதத்தை அனுமதிப்பதில்லை என்ற போர்வையில் ஐ. நா பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதன் மூலம் அமெரிக்காவின் ஆதரவு நாடுகள் அனைத்தும் சேர்ந்து தாக்குதல் தொடுத்தனர். இந்தத் தாக்குதலை கியூபா மட்டுமே எதிர்த்ததுடன், ஈராக் அமெரிக்காவின் சோதனைக்களம் என்று கூறினார்கள். 81 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற தாக்குதல்கள் உள்கட்டுமானத்தில் பாரிய சேதத்தை உண்டு பண்ணின. தாக்குதல் இலக்குகளின் ஒற்றுமையை பார்க்க வேண்டியுள்ளது. தாக்குதல் நடத்துவதின் மூலம் மிலோசவிச்சினையும், சதாமை அகற்றுவது ஏகாதிபத்தியங்களின் முக்கிய நோக்கமில்லை எனினும் அவர்கள் கொண்டுள்ள தாக்குதல் இலக்குகள் அவதானிக்கத்தக்கதாகும்.

தாக்குதலின் போது பல தொழிற்சாலைகள், கட்சி தலைமையகம், சதாமின் மகள் வீடு (அந்தச் சமயம் இவர் வீட்டில் இல்லை) சேமடைந்தது. யூக்கோவில் பாலங்கள், எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள், கார்த் தொழிற்சாலை, வைத்தியசாலைகள், மின்சார நிலையங்கள், தூதரகங்கள் எனவும் பல மக்களுக்கு அவசியமானவைகள் தாக்குதலுக்குள்ளாகியது. குறிப்பாக ஏகாதிபத்தியங்கள் நாட்டுத் தலைவர்களை நோக்கித் தாக்குதல் தொடுக்கப்பட்டது. பலமுறை நடந்துள்ளது. இவைகளை கொலை முயற்சிகள் எனக் கொள்ள வேண்டியுள்ளது. இன்று ஏகாதிபத்திய நாடுகளின் கொடுமையினால் பாதிக்கப்பட்ட நாடுகள் தமது வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகள் அனைத்தையும் இழந்து சதாகால ஏழை நிலைக்கு இந்நாடுகள் அடைந்துள்ளது. இந்த நாடுகள் பிரேசில், இந்தோனேசியா போன்று எவ்வாறு மொத்த தேசிய உற்பத்தியில் லாபம் அடைந்தாலும் பெறப்படுகின்ற லாபத்தை உலகவங்கி, சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்ற கடனுக்காக கட்டிக் கொண்டிருக்க வேண்டியது தான். உட்கட்டுமானத்தை (infrastructure) தகர்த்துக் கொள்வதனால் ஏற்படும், பொருளாதார வளர்ச்சியில் தடங்கல் ஏற்படும் என்பதை அறிந்து வைத்துள்ள ஏகாதிபத்தியங்கள் சிறப்பாகவே செயற்படுகின்றன. இரண்டு நாடுகளின் மீதான தாக்குதல் உட்கட்டுமானம் தாக்குதலுக்கு உள்ளாகியது கவனிக்கத்தக்கதாகும்.

தாக்குதலின் பின்னர் ஐ. நாவின் கிளைப் பிரிவுகள் விட்ட அறிக்கையில் Tikrit என்ற நகரில் தானியக் களஞ்சியம் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் 2600 தொன் அரிசி சிதறடிக்கப்பட்டதாவும், தாக்குதலினால் குடிதண்ணீர் நிலைகள் சிதைக்கப்பட்டது 300 000 மக்களுக்கு தேவையான குடிநீர் வசதி பாதிக்கப்பட்டது தைக்கிறிஸ் சுற்றாடலும் (இந்த யுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றது. சுற்றாடல் மாசுபடுவது பற்றி தனியே பார்ப்போம்.) நதி மாசடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான மோசமான நிலைதான் யூக்கோஸ்லாவியாவில் இடம் பெற்றுள்ளது.

1991இல் இடம் பெற்ற தாக்குதலின் தாக்கம் இன்னும் என்ன இன்னும் பத்து ஆண்டுகள் சென்றாலும் மறைந்து விடாத நிலையில், இன்று இடம் பெற்ற தாக்குதலினால் ஏகாதிபத்தியங்கள் ஈராக்கை சுடுகாடாக்கியுள்ளனர். இன்றுபல கர்ப்பினி பெண்களும், சிறுவர்களும் போசாக்கின்மையால் (சத்துணவு குறைபாடு, பிழையான சத்துணவு பிள்ளைகளுக்கு ஊட்டப்படல்) மடிந்து போகின்றனர். ஆயுள்க்காலம் குறைவாகுதல், வறுமை, குழந்தைகள் வேலைக்கு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றதினால் சிறுவர்களின் கல்வி எதிர்காலம் என்பது பாதிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதலினால் பற்பல சமூக மாற்றங்கள் நிச்சயம் நடைபெறும். மூடப்பட்ட நிலையில் இருக்கின்ற போது மருத்துவ தட்டுப்பாடு போன்றவை ஏற்படுவதால் பாதிக்கப்படுவது வறிய மக்களே. சுற்றாடலும் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றது.

## 2.1.13 தாக்குதலின் நோக்கங்கள்

ஏகாதிபத்தியங்கள் மற்றய தேசங்களில் அமைதியை ஏற்படுத்த சர்வாதிகாரிகள் மீது தாக்குதல் நடத்துவதாக கூறுகின்றனர். தேசங்களின் உரிமையைவிட மக்களின் மனித உரிமை முக்கியம் எனக் கொள்கின்றனர். தேசங்களின் இறைமை என்றால் மக்களின் உரிமையும் தான் புதிய விளக்கம் கொடுப்பதாக காட்டிக் கொள்கின்றனர். மக்கள் உள்ளடக்கியது தான் தேசங்களின் உரிமை என்பதில் முரண்பாடு இல்லை. இன்றைக்கு மக்களின் உரிமை பற்றிப் பேசப்படுகின்றது. ஆனால் இவர்கள் கொடுக்கும் பொருளாதாரச் சுரண்டல் முழு நாட்டையும் மக்களையும் பாதிக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளத் தயாரா? உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கம் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

தமது நாட்டு எல்லைகளை விட்டு எத்தனையோ ஆயிரம் மைல்கள் கடந்து வந்து வேறு நாடு ஒன்றிற்காக மிகவும் அக்கறையாக இருக்கின்றனர். இவைகளை சாதாரண மக்களுக்கு விளக்கம் சொல்வது இலகுவானது அல்ல. இவர்கள் தமது நலனை பேணிப் பாதுகாக்கவும், பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்யவும் தமது தேசம் மாத்திரம் பக்குவமாக இருக்க வேண்டும். மற்றைய நாடுகள் எவ்வாறு சென்றாலும் பரவாயில்லை என்று செயற்படுபவர்கள். இவர்களே எமது தேசங்களுக்கு வந்து சட்டாம்பினை வேலை பார்ப்பவர்கள். இவர்களின் செயற்பாட்டை பின்வரும் வரிகள் மூலம் வெளிப்படுத்தலாம்.

– ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் வைத்தான் வெள்ளரிக்காய்
காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி
காகிதம் போட்டான் வெள்ளைக்காரன். (அமெரிக்கா)

– வெள்ளைக் காரன் பணம்
சின்னப்பணம்
வேடிக்கை காட்டுது வெள்ளப்பணம்
வெள்ளிப்பணத்திற்கு ஆசைப்பட்டு
வேசம் கலைச்சாளாம் வீராயி. (ம.க.இ.க ஒலிப்பேழை)

என்ற பாடல் வரிகள் பல விடயங்களை சுட்டி நிற்கின்றன.

சதாம் ஆட்சியில் இருந்து இறக்கப்பட்டாலும் வருகின்ற ஆட்சியாளர்களும் ஆயுதம் பொருளாதாரத்தில் பலம் உள்ளவர்களாக இருக்கப்படாது என்பதேயாகும். அதாவது பாக்கிஸ்தான், வங்களாதேசம், இலங்கை போன்ற நாடுகளில் மக்களை அடக்குவதற்காக உருவாக்கப்பட்ட இராணுவத்தினிடம் அதிகாரம் நிறையவே உள்ளது. இவர்களிடம் இருக்கின்ற அதிகாரத்தை முதலாளித்துவ அரசியல் தத்துவம் முன்வைக்கின்ற நாடாளுமன்ற ஜனநாயகம் இலகுவில் பறித்துக் கொள்ள முடியாது. இவர்கள் ஏற்கனவே அதிகாரத்தில் சுவை கண்டவர்கள் இவர்களிடம் இருந்து அதிகாரத்தை பறிக்க முற்படுகின்ற போது மீளவும் சர்வாதிகாரிகள் தான் ஆட்சியைப் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது. மக்கள் விரோத சக்திகள் ஆட்சியைப் பிடிப்பதற்கு ஏகாதிபத்தியங்கள் எப்பவும் ஆதரவாகத் தான் இருக்கும் ஆனால் அரபு – யூத முரண்பாடு என்பது பொது வுடமைச் சமுதாயம் தோன்றும் வரைக்கும் இருந்து கொண்டே இருக்கும் இந்த முரண்பாடுகளை தெரிந்து வைத்திருக்கின்ற ஏகாதிபத்தியங்கள் தனது எதிரிகளை மீளவும் தலைசாய்க்க விடாது இந்த நிலைப்பாட்டில் இருந்து பார்க்கின்ற போது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை புரிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருகின்ற எதிர்ப்பையும், இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து வருகின்ற எதிர்ப்புக்களையும் சமாளிப்பதற்கு தளங்கள் தேவையாகின்றது. இந்தத் தளங்களை அடைவதற்காக, அனைத்து முனைகளிலும் கவனம் செலுத்தி, தனது சர்வதேச பாதுகாப்பு அரசியலை வகுத்துக் கொள்கின்றது. அமெரிக்கா, யூக்கோஸ்லாவியாவைப் பொறுத்த வரையில் தனக்கு ஒரு இடத்தை தளமாக கொள்ள வேண்டிய நிலையில் இந்த ஆக்கிரமிப்பு அவசியமாகியது. சோவியத் அழிவின் பின்னர் வலுக்கட்டாயமாக முதலாளித்து ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது அவசியமானதாகும்.

யேர்மனும் முதல் தடவையாக தனது படைகளை கொண்டு தனது எல்லைக்கப்பால் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றது. குரோசியா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளில் ஜேர்மனியின் நலன் பாதுகாக்கப்பட்டதும், போஸ்னியாவின் பிரச்சினையில் பிரான்ஸ் தனது நலனை அடைந்து கொண்டதினால் பால்கன் நாடுகளில் தனது நலனை அடைந்து கொள்ள கொசவோ மக்களை பாவிக்கின்றது. ஐரோப்பாவும் தனிப் பாதுகாப்பு படையை அமைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது. கடந்த 50 வருட காலத்தில் நேட்டோவில் அமெரிக்காவின் தேவையே பூர்த்தி செய்யப்பட்டது என்பது பரவலான கருத்து இந்த நிலையில் லத்தின் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் ஐரோப்பிய ஒன்றிய நலன் பாதுகாக்க வேண்டும் எனில் ஒரு உறுதிவாய்ந்த படை அமைப்பும் அவசியமாகின்றது. ஆபிரிக்காவை எடுத்துக் கொண்டால் அது மிகப்பெரிய சந்தையைக் கொண்டுள்ளது. இந்தச் சந்தையை பாதுகாக்க வேண்டும் என்றால், நிச்சயம் அமெரிக்காவின் தலையீடு இல்லாமல் செயற்படுகின்ற ஒரு இராணுவ அணி அவசியமாகின்றது. இப்போ அமெரிக்க இராணுவத்திற்கு துணையாகவே செயற்படுகின்ற ஐரோப்பிய இராணுவம் சதாகாலமும் துணையாக, எடுபிடியாக

செயற்பட இடம் கொடுக்காது. தென்னாபிரிக்காவின் வளர்ச்சியில் வெகுநிதானமும், வெகுஅவதானிப்பும் ஏகாதிபத்தியங்களால் செலுத்தப்படுகின்றது.

இன்று பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாட்டுப் படையே ஐரோப்பாவில் கூடுதல் பங்கைச் செலுத்துகின்றது. இன்னுமொரு போக்கு என்னவெனில் சமூக சனநாயகக் கட்சிகளின் முதலாளித்துவ விசுவாசப் போக்கு என்பது பழைய அமெரிக்க பாணியை தவிர்த்து மென்மையாக சாகடிக்கின்ற சமூக சனநாயகப் போக்கை கொண்டு வரமுனைகின்றது. இந்தப் புதிய போக்கு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் வந்து கொண்டதாகும்.

இன்று சனநாயம் என்ற போர்வையில் நடந்து கொள்வதாகக் கூறிக் கொண்டாலும் ஐ. நாவின் ஒப்புதல் இன்றிச் செயற்பட்டுக் கொள்கின்றன. முதன் முதலில் ஐ.நாவின் புதிய கொள்கைக்கு பலியாகிப் போன நாடு ஈராக்காகும். ஆனால் இன்று அமெரிக்கா ஐ.நாவின் ஒப்புதல் இன்றியே இரண்டாம் தடவையாக ஈராக் மீதும், யூக்கோஸ்லாவியா மீது தனது பயங்கரவாதத்தை விஸ்தரித்துள்ளது.

இத்தாக்குதலை சீனா, ரஷ்யா ஆகியவை எதிர்த்தன. ரஷ்யா தனது தூதுவரை திரும்பி அழைத்தது. எந்த விதமான விவாதமும் ஐ. நா மட்டத்திலும் சரி, ரஷ்யா மட்டத்திலும் சரி மேற்கொள்ளாமல் தாக்குதலில் இறங்கியது ரஷ்யாவின் கௌரவப் பிரச்சினைக்கு உரியதாகி விட்டது. அமெரிக்காவிடம் நாட்டை அடைவு வைத்தாலும் கௌரவம் குறைந்து விடவில்லை என்பதில் மாத்திரம் கவனம் கொள்வதில், அமெரிக்காவின் எதேச்சதிகாரத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது. அமெரிக்காவிடம் பிச்சை எடுத்துக் கொண்டு ஆக்ரோசமாக நடந்து கொள்ள எவ்வாறு முடியும். பிச்சைப் பாத்திரம் ஏந்தியவன் எந்தக் காலத்திலும் ஆக்ரோசமாக நடந்து கொள்ள முடியாது. வேண்டும் என்றால் அடையாளத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொள்ள முடியும் இது அரசியல் நடைமுறையில் வழக்கத்தில் உள்ளது. இது நவநாகரீக, ஜனநாயக அரசியல் பண்பு. இவைபற்றி அரசியல் ஆய்வாளர்கள் கூர்ந்து ஆராய்ந்து கருத்துக்கள் சொல்ல முடியும் ஆனால் இவ்வாறான எதிர்ப்புக்களில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

சீனாவும், ரஷ்யாவும் எதிர்ப்புக் காட்டுவதாக பாவனை செய்து கொண்டாலும் தத்தமது நாட்டு நலனுக்கு சாதகமாக சந்தர்ப்பம் வருகின்ற போது தமது நலனை முதன்மைப்படுத்திக் கொண்டு எதிர்ப்பைக் கைவிட்டுக் கொள்வர். நேட்டோ நாடுகளுக்கோ அல்லது சீனா, ரஷ்யாவிற்கோ கொசவோ, ஈராக், சோமாலியா அல்லது இலங்கை மக்களின் உரிமையில் அவர்களுக்கு அக்கறை இல்லை. யூக்கோஸ்லாவியாவில் குறிப்பாக பால்கன் நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் அமெரிக்கா தனது நிலையை உறுதி செய்ய வேண்டும் என்பதும் முதலாளித்துவ, மேற்கு சார்பான பொம்மைகளை ஆட்சியாளர்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும், என்கின்ற திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளவே, ஆக்கிரமிப்புத் திட்டத்தை சனநாயம் என்ற போர்வையில் நடந்து கொள்கின்றது. அமெரிக்கா வரலாற்றில் மக்களின் சனநாயக உரிமையை மதிக்க வேண்டும் என்றோ அல்லது நாடுகளின் இறைமையை மதிக்க வேண்டும் என்றோ செயற்பட்டுக் கொள்ளவில்லை.

## 2.1.14 ஏகாதிபத்திய தந்திரத்திற்கு பலியாகல்

ஏகாதிபத்திய நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, யப்பான், நோர்வே, கனடா ஆகியன தமக்கிடையே முரண்பட்டுக் கொள்ளும். அதேவேளை முரண்பாடு இல்லாதவாறு காட்டிக் கொள்கின்றது. இவ்வாறான தந்திரோபாயங்கள் மக்களிடத்தில் பதியப்படுத்திக் கொள்ளும் நோக்கில் செயற்படும் அரசியல் தந்திரோபாயம். பெரிய நிலை ஏகாதிபத்தியங்கள் தமது நலன்களுக்காக செயற்படுகின்ற போது சிறிய நிலை தனிநாடாக விளங்கும் ஏகாதிபத்தியங்களின் நலன்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக சிறிய நிலை ஏகாதிபத்தியங்கள் வறிய நாடுகளுக்கு எதிரியாக தெரிவதில்லை.

இந்த ஏகாதிபத்தியங்களிடம் தமது நலனைப் பாதுகாப்பதற்காக வளர்ந்து வரும் நாடுகள் தமக்கிடையே ஒரு கூட்டுறவைக் கொண்டுள்ளன. இவை தேசியநலன் கருதியல்ல. மாறாக தரகுகள் தமது நிலையை பேரம் பேசி தீர்ப்பதற்கேயாகும். இந்நிலையை **ஆசியான்** என்ற கூட்டமைப்பின் மூலம் (ஆசிய பொருளாதாரப் புலிகள் எனப்படும் நாடுகள்) ஆசியாவில் பொருளாதாரத்தில் பலம் பொருந்திய நாடுகள் பேரம் பேசித் தீர்த்துக் கொள்கின்றன. அத்துடன் இந்த ஏகாதிபத்தியங்களுக்கிடையே சீனாவை பங்கு போடுவதிலும், சீனாவிற்கு போட்டியாக செயற்படுவதிலும் அனைத்துச் சக்திகளும் முயல்கின்றன. இந்தியாவின் சந்தையை ஏகாதிபத்தியங்கள் சமாதானமாக பங்கு போடுகின்றன. இந்தியாவில் தேசிய நலனைப் பாதுகாக்கின்ற அரசை வளர விடாது தடுப்பதில் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. இந்தியாவிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுகள் மதத்திடம் சரணடையும் அபாயமும் இருக்கின்றன. ஏற்கனவே வறுமைக்கு எதிரான போர்க்குணம் மதத்திடம் சரணடைந்திருப்பதனால், மதத் தலைமையினால் ஏழை மக்களின் சக்தி என்பது பதவி வெறி பிடித்த அரசியல்வாதிகளின் அதிகார வெறிக்கான முனைப்பிற்கு பாவிக்கப்பட்டு பலியாகின்றனர்.

இதேபோல் இஸ்லாமிய எதிர்ப்புணர்வைப் பயன்படுத்தி ஏகாதிபத்தியமானது மத்திய கிழக்கில் இருந்து வரும் எதிர்ப்புக்களை திசை திருப்புகின்றது. இஸ்லாமிய மதவுணர்வு என்பது கிருத்தவ மதத்தின் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்தது. இந்தக் காழ்ப்புணர்வு சிலுவைப் போரின் ஊடாக வலுவடைந்தது. அரச வம்சங்களைக் கொண்ட நாடுகளில் பெரும்பான்மையானவைகள் ஏகாதிபத்திய உதவியுடன் ஆட்சி செலுத்த மற்றைய நாடுகளில் அதாவது மத்திய கிழக்கில் இருந்து வெளிவரும் எதிர்ப்புணர்வினை இஸ்லாமிய அடிப்படைவாதம், மத்திய கிழக்குப் பயங்கரவாதம் என்பது மேற்கில் வாழ்கின்ற மக்களுக்கு அச்சுறுத்தல் எனப் பிரச்சாரத்தை தொடுக்கின்றது. இதனை ஏகாதிபத்திய பிரச்சார தந்திரோபாயத்துக்கு பலியாகிப் போயுள்ள மக்கள் இதற்கு இலகுவாக பலியாகின்றனர்.

இந்த எதிர்ப்புணர்வு ஏகாதிபத்தியத்தின் சுரண்டலினால் ஏற்படும் விளைவுகளை எதிர்ப்பனவாக இருப்பினும், இந்த எதிர்ப்புணர்வு இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பெயரில் தாங்கிவருவதால் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலை என்பது சர்வதேச மக்களிடத்தில் வெகுசன ஆதரவை பெறமுடியாது இருக்கின்றது. இந்த நிலை அனைத்து நாடுகளிலும் ஏற்படும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும் இதே நிலைதான். இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கு மதச்சாயம் பூசப்படுவதும், மதத் தலைமைகள் தலைமை தாங்குவதும் ஒரு பின்னடைவேயாகும்.

## 2.1.15 ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள்

சமாதானத்தையும், சுபீட்சத்தையும் எந்த விதமான இரத்தக் களரியும் இல்லாமல் சமாதான முறையில் தமது இலக்கை அடைந்து விடலாம் எனப் பேசும் பல அமைப்புக்கள் இருக்கத் தான் செய்கின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்பு, யுத்த எதிர்ப்பு, சமாதானம், இனவாதம், சுற்றாடல் மாசுபடுதலை தடுக்கின்ற அமைப்புக்கள் போன்றவை செயற்படுகின்றன. இவ்வாறான அமைப்புக்கள் அரசியல் கட்சிகளாகவும், அக்கட்சிகளின் கிளை அமைப்புக்களும் மற்றும் தன்னார்வத்தில் செயல்படுகின்ற அமைப்புகள் இருக்கின்றன. தன்னார்வத்தில் இயங்குகின்ற காரணத்தால் அவைகள் புரட்சிகர கட்சிக்குள் அடங்கியதாக இருப்பதில்லை. இங்கு அராஜகவாதிகள் (anarchist) மற்றும் குட்டி முதலாளித்துவ சக்திகளும் இணைந்து கொள்கின்றனர். இவர்கள் தமது செயற்பாடுகளை ஜனநாயக வரம்பினுள் வைத்துக் கொள்வதாக கூறிக் கொள்கின்றன. இந்த அமைப்புக்கள் தவன் ஆர்வ நிலையில் இருந்து செயற்படுகின்றன. இவர்களின் விருப்புக்கள் என்னவோ தூய்மையானதாக இருந்தாலும், இந்தப் பொருளாதார கட்டமைப்பு இவர்களின் இலட்சியப் போக்கை தொடர்ந்து செயற்பாட்டில் இயங்காத வண்ணம் பார்த்துக் கொள்ளும் அதே வேளை அமைப்புகளும் நாளடைவில் சிதைந்து ஏகாதிபத்திய சார்பாக போகின்ற நிலையைத் தோற்றுவிக்கின்றது.

நிலைப்பாடுகள் எடுக்கின்ற போது எதிரிக்கு எதிரி நண்பர் என்ற போர்வையில் ஏகாதிபத்தியங்களை ஆதரிக்கின்றன. ஏகாதிபத்தியங்களின் உதவியுடன் சர்வாதிகாரியை பதவியில் இருந்து அகற்றிவிட்டு தாம் அந்தப் பதவியில் அமர குறுக்கு வழியை பாவிக்கின்றனர். இவர்களுக்கு தேச நலன், மக்கள் நலன் எல்லாம் இரண்டாம் பட்சமாகின்றது. இவர்கள் பேசுகின்ற ஜனநாயகம் வெறுமனே ஆட்சியை கைப்பற்றும் வரைக்கும் தான். இந்தப் போக்கை இந்திய ராணுவம் இலங்கையில் வந்திருந்த போது சிங்கள இனவாதிகளுடன் தமிழ்த் தேசியவாதிகளும், இந்திய ராணுவத்துடன் பாதை தவறிய அமைப்புக்களும் இந்தச் சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொண்டதை வரலாற்றில் இலகுவாக மறந்து விட முடியாது.

மக்கள் தாமாகவே முன்வந்து ஏகாதிபத்தியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இது தன்னார்வக் குழுக்கள் மூலமாக ஒழுங்கு செய்யப்படுகின்றது. ஆனால் எழுச்சியற்ற காலத்தில் வாழ்கின்ற இவர்களால் பரந்த எதிர்ப்பைக் கொடுக்க முடியவில்லை. நவீன சமூகமானது தொலைத் தொடர்பை தங்கியிருப்பதால் அவர்கள் செய்தியை மாத்திரம் கேட்டு, அவற்றை மவுனத்தால் எதிர்க்கின்ற போக்கும் காணப்படுகின்றது. இந்த மௌனப் பெரும்பான்மை அதிகமாக இருப்பதால் ஒரு எழுச்சி மிக்க வகையில் அமைப்பு ரீதியாக செயற்பாட்டைக் கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றது. ஐரோப்பிய மக்களில் பெரும் பகுதியினர் எதிர்ப்புத் தெரிவிக்காமல் மௌனியாக இருந்தனர். இவர்களின் எதிர்ப்புச் சக்தி என்பது இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பட்ட சமூகத்தில் வலது குறைந்ததாகவே இருக்கின்றது. இந்த (Pasifist) எதிர்க்கும் ஆற்றல் என்பது சமூகத்தில் இருக்கின்ற பொருளாதார நிலையை அடிப்படையாக கொண்டது. பசிக்கின்றவனுக்கே உணவு தேவை என்பது போல் சுரண்டப்படுவனுக்கே சுதந்திரத்தின் அருமை தெரியும். யுத்தத்தின் பின்னரான சமூகம் என்பது சமூகத்தின் ஒவ்வொரு அலகுகளையும் தனித்துவப்படுத்தி வைத்துள்ளதுடன் அரசியல் பொருளாரதார ரீதியாக தனித்துப் போக்கை கொண்ட சிந்தனை ஓட்டமும் சேர்ந்து சமூகத்தின் போராட்ட உணர்வை ஊனம் கொண்டு முடமாக்கிவிட்டது. போராட்ட உணர்வின் வேகமும், ஆத்திரமும் இருக்கின்ற போது அவை மனோவியல் ரீதியாக நோய்க்கான குறியாக கருதப்படுகின்றது. இந்தப் போக்கானது சமூகத்தின் உறுப்பினர் என்ற நிலையில் இருந்து விலகும் போக்கும், முத்திரரை குத்தும் போக்கும் காணப்படுகின்றது. இதனால் சமூகத்தின் சாதாரண உறுப்பினர் என்ற நிலை இழந்து சமூகத்திற்கு வேண்டாதவராக ஆக்கப்படுகின்றனர். சமூக உறுப்பினர்களிடையே தனித்துவ (தாராளவாதம்) வாதம் என்பது ஆளமாகவே புரையோடிப் போயுள்ளது. இது தனிமனிதர் அவர் நலம் என்பது முன்தள்ளப்பட்டு சமூக நிலை என்பது இரண்டாம் பட்சமாகின்றது.

செயற்பாட்டை கருத்து ரீதியாக ஏற்று அதன் பால் செயற்பாட்டை செயற்படுத்துவதை விடுத்து செயற்பாட்டின் பின்னர் பூரிப்பு அடைவது பின்னடைவிற்கு அத்திவாரமாகின்றது. இவ்வாறான உறுப்பினர்களிடையே மானசீக வாதமும் எற்படுகின்றன. அமைப்புக்களில் எந்த நிலையில் ஒரு செயற்பாட்டை இலகுவாக கொண்டு செல்ல முடியுமோ, எந்தச் செயற்பாடு செய்ய வசதியாக உள்ளதோ அதைச் செய்து முடிக்கலாம் என்ற மனப் போக்கும். இந்த அமைப்புக்களில் காணப்படுகின்றன. இந்தப் போக்கு காலப் போக்கில் பாதிப்பைக் கொண்டு வந்து விடுகின்றன. இந்தப் போக்கு அமைப்பில் குழுவாதத்தையும், எதேச்சாதிகாரப் போக்கையும் கொண்டு வந்து விடுகின்றது. இந்த அமைப்பின் உறுப்பினர்கள் தமது ஆர்வத்தின் மூலமாக இந்த வகைச் செயற்பாட்டில் இறங்கிவிடுவதினால் அமைப்புக்களின் கொள்கைத் திட்டங்களை ஏற்க சிரமப்படுகின்ற நிலையானது அமைப்பைச் சிதைவிற்கு கொண்டு வந்து விடுகின்றன.

**இந்த அமைப்புக்களின் ஆயுட்காலம் அந்த உறுப்பினர்களின் உணர்ச்சி கொதித்துக் கொண்டு இருக்கும் வரையில் தான் இருக்கும் உணர்ச்சிக்கு மாத்திரம் முதன்மை கொடுக்கின்ற இந்த உறுப்பினர்கள்,**

தமது இலக்கை நாளடைவில் கைவிட்டு விடுவதுடன் அமைப்புக்களில் இருந்தும் ஒதுங்கிக் கொள்கின்றனர். தாம் இவ்வளவும் உழைத்தும் எதுவும் பயன் அற்றுப் போய்விட்டது தொடர்ந்தும் அமைப்பில் செயற்படுவதில் பிரயோசனம் இல்லை என முடிவெடுத்தும் கொள்கின்றனர். இந்த நிலைப் போக்கை எல்லா வகையான நாடுகளிலும் அமைப்புக்களிலும் இருந்து வெளியேறியவர்களின் வாக்கு மூலமாக அறிந்து கொள்ளமுடியும்.

இவ்வாறான சக்திகள் அமைப்பில் இருக்கின்ற போது தமது வர்க்க நிலை என்ன என்பதையும், தமது பாதை எவ்வளவு கடினம் என்பதையும், தமது வாலிபப் பருவத்தில் அறிந்து கொள்ளாமல் தமது உணர்விற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுகின்றனர். இவர்கள் காலப் போக்கில் அமைப்பில் இருந்து விலகி விடுகின்றனர். இவர்கள் தமது அனுபவங்களை புத்தகங்களாக வெளியிட்டு காசு சம்பாதிக்கும் யுக்தியையும் கைக் கொள்கின்றனர். இவர்கள் குறுகிய காலத்தில் பணத்தைச் சம்பாதிப்பதிலும், பெயர் பெறுவதிலும் தமது அரசியல் அனுபவத்தைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் சோசலிசப் புரட்சியையும், வரலாற்றுத் தலைவர்களையும் தமது கற்பனைக்கு வந்தபடி ஒப்பீடு செய்கின்றனர். இந்த நிலை என்பது வானத்தில் இருந்து குதித்தது அல்ல மாறாக இந்தச் சமூகத்தின் விழை பொருளே. இந் நிலையைப் போக்குவிப்பதற்கு மாற்றீடாக எந்த விதமான வழிமுறையைக் கையாள்வது என்பது பற்றி பரந்த விவாதத்தை தொடங்குதல் வேண்டும். இந்தப் பிரச்சினையானது மக்களை, உறுப்பினர்களை அரசியல் மயப்படுத்தும் நடைமுறைப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டதாகும். அமைப்பின் திட்டம் பற்றிய நோக்கில் இருந்தே ஆய்வுகள் இடம் பெற வேண்டும். இந்த வகையில் கடந்த கால வழிமுறைகளை ஆய்வு செய்தும் அதில் இருந்து பெற்ற படிப்பினைகளை கொண்டு எதிர்காலப் போராட்டத்திற்கு பாதை வகுக்க வேண்டும்.

இலங்கை போன்ற முதலாளித்துவம் வளர்ச்சிடையாத நாடுகளில் எவ்வாறு புரட்சியைக் கொண்டு நடத்துவது. இலங்கை போன்ற நாடுகளில் எவ்வகையான தந்திரோபாயம் வகுப்பது என்பது இன்று முக்கிய வேலையாகவுள்ளது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் ஏகாதிபத்தியம், தரகு முதலாளித்துவம் போன்றவற்றை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. முதலாளித்துவம் முற்று முழுதாக வளர்ச்சி அடையாத நிலையில் பாட்டாளி வர்க்கத்தை மாத்திரம் அணிதிரட்டுவது போதாது விவசாயிகள், தொழிலாளர்கள், அரைப்பாட்டாளிகள் குட்டி முதலாளிகள் மற்றும் தேசிய முதலாளிகளையும் அணிதிரட்டியே போராடி வேண்டிள்ளது.



# 2.2. போராட்ட ஆரம்பம்

தமது அடிமை நிலையை உணர்கின்ற போது ஒடுக்கப்படும் மக்கள் போராட்டக் களத்திற்கு வருகின்றனர். இவற்றில் சரியான எதிரியை இனம் கண்டும் காணாத நிலையும் இருக்கின்றன. அதே வேளை போராட்டக் களத்தில் முன்னுக்கு வருபவர்கள் வெவ்வேறு வர்க்க நலனை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இவர்கள் எல்லோரும் வெவ்வேறு வர்க்கங்களை பிரதிநிதித்துவம் செய்வதினால் போராட்ட வேகத்திலும், போராட்டத்தில் கொண்டுள்ள விசுவாசத்திலும் வேறுபடுகின்றனர். போராட்டங்கள் பல வகையானவை அவற்றில் ஆயுதம் தரித்து சமூகத்தை முழுமையாக மாற்றி அமைக்கக் கூடியதும், புரட்சிகர சமுதாயத்தை படைக்க வல்ல புரட்சி தான் பாட்டாளி வர்க்கத்தின் முக்கிய இலட்சியம். அவற்றில் பாட்டாளி வர்க்கத்தின் இலக்கை திசை திருப்பப்பட்டு இனத்தின் பெயரால் எல்லோரையும் இணைத்துக் கொள்கின்ற போராட்டங்களும் இருக்கின்றன. போராட்டங்கள் பல வர்க்கம் சார்ந்ததாகவே இருக்கின்றன. வர்க்க சார்பற்றதாக போராட்டங்கள் இருக்க முடியாது.

போராட்டங்களின் முக்கிய இலக்கை கொள்ளுமிடத்தில் கொலனித்துவ அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கும் பொருட்டு தொடரப்பட்ட போராட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் இன்று நவகொலனித்துவ பொருளாதார அமைப்பில் இருக்கின்ற எமது தேசங்களில் இன்னொரு விடுதலைப் போராட்டம் அவசியமாகின்றது. ஆனால் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் தொடர வேண்டிய நிலையில் தேசிய இனப் போராட்டம் மட்டும் தொடரப்பட்டது. போராட்டத்தின் தேவை சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தினூடாக ஏற்படுகின்றது. இதனை ஒரு வர்க்கம் தலைமை தாங்கிப் போராட்டத்தை தொடர்கின்றது. ஆனால் பாட்டாளி வர்க்கப் போராட்ட திசை என்பது மாற்றம் பெற்றுள்ளது. குறுகிய இனப்பார்வையின் கீழ் தொடரப்படும் போராட்டம் ஒரு பக்கம் இருக்க தொழிலாளர் வர்க்க நலன் தொழிற்சங்க ரீதியாகவும் தொடர்ந்து, இலங்கை விடுதலையின் பின்னர் தொடர்ந்து வந்துள்ளது. இந்தப் போராட்ட வளர்ச்சியையும் பார்க்க வேண்டிள்ளது.

ஒவ்வொரு வர்க்க சமுதாயத்திலும் போராட்ட வடிவங்கள் மாறுபட்டு வந்திருக்கின்றன. 1800 இறுதியில் வாக்குரிமை கிடைக்கப்பெற்றது. அவற்றைக் கொண்டும் போராட முடியும் என்ற கருத்தும் இருந்தது. அன்றைய காலகட்டதில் எவ்வாறு புரட்சிகரமாக உபயோகிக்க முடியும் என்பதில் ஏங்கெல்ஸ் பிரான்ஸ் வர்க்கப் போராட்டத்திற்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகின்றார். ஆனால் இன்றைய காலத்தில் முழுமையாக புரட்சிகர பாத்திரம் வகிக்கும் எனக் கொள்ள முடியாது. இன்றைக்கு தொழிற்சங்கங்கள் உழைப்பாளிகளின் உரிமைக்காக போராடி வந்துள்ளது. தொழிற்சங்க போராட்டத்தின் மூலமாகவே பல உரிமைகளை பெற்றுக் கொள்ள முடிந்தது. வெள்ளையர் ஆட்சி செய்த காலத்தில்

வெள்ளையருக்கு எதிராகவும், பொருளாதாரப் போராட்டமும் நடைபெற்றது. விடுதலையின் பின்னர் போராட்டம் உள்ளூர் ஆட்சியாளருக்கு எதிராக நடைபெற்றது. இந்தப் போராட்டங்கள் எவ்வாறு இருந்து எவ்வாறு மாற்றம் பெற்றது என்பது பற்றிப் பார்ப்போம்.

## 2.2.1 தொழிற்சங்கம்

தொழிற் சங்கம் அமைத்துப் போராட்டம் நடத்தப்படுவதை ஆதரித்து செயற்பட வேண்டும். தொழிற்சங்கம் மூலமாக மக்களை அணிதிரட்டி பொருளாதார மேம்பாட்டிற்காக போராட முடியும். இது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்னோடியான வேலைப்பாடேயாகும். தொழிற் சங்கத்தின் மூலம் இருக்கின்ற சட்ட வரையறைக்குள் தொழிலாளர் வர்க்கம் பெறக்கூடிய உரிமைகளை பெற்றுக் கொள்வதாகும். பொதுவுடமைப் புரட்சியின் இடைக் காலத்தில் பெறவேண்டிய தற்காலிக வெற்றிகளை இணைத்துக் கொள்வதும், பாட்டாளி வர்க்கத்தை இணைத்துக் கொள்ள சட்ட ரீதியாக இணைத்துக் கொள்வதுமாகும். தொழிற் சங்கப் போராட்டம் என்பதே சீர்திருத்த வகை சார்ந்தாகும். இது பொருளாதார நிலைகளை உயர்த்திக் கொள்வதாகும். இவ்வளவு காலமும் தொழிற்சங்கங்கப் போராட்டத்தின் மூலம் உருவான விளைவே இந்தப் பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட சீர்திருத்த சட்ட திட்டங்களாகும். முதலாளித்துவம் தமது இருப்பை பாதுகாத்துக் கொள்ள சமரசம் செய்து கொள்கின்றது. தொழிற்சங்கப் போராட்டத்துடன் வர்க்கப் போராட்டம் முடிந்து விடுவதில்லை. வர்க்கப் போராட்டம் தொழிற் சங்கம் ஊடாகவும் நடைபெறுகின்றது.

இன்றைக்கு தொழிற்சங்கங்களை எடுத்துக் கொண்டால் முதலாளித்துவ வர்க்கக் கட்சிகளும் தொழிற்சங்கங்ளை வைத்துள்ளது. இந்தியாவில் அ.தி.மு.க, தி.மு.க, காங்கிரஸ் போன்றவற்றில், இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்றவைகள் பின்னால் உழைப்பாளிகள் ஒன்று சேர்ந்துள்ளனர். உழைப்பாளிகள் என்பவர்கள் யார், மேற்கத்தைய நாட்டில் இருந்து அறிமுகப்படுத்தப்படும் எந்த விடயங்களையும் எம்மவர்கள் (Fashion) அலங்கார வகைக்குள் உள்ளடக்குவது போல், மேற்கத்தைய கொலனித்துவவாதிகளிடம் இருந்து பெற்ற நாடாளுமன்ற அரசியல் வகையில் ஊன்றிப் போய்புள்ள இன்றைய முதலாளித்துவ அரசியல் கட்சிகள், தொழிற்சங்க அமைப்பு முறையையும் தம்முடைய அரசியல் பித்தலாட்ட முறைக்குள் உள்ளடக்கி விட்டார்கள் எனத் தோன்றுகின்றது.

இந்த நிலை மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டியுள்ளது. தொழிற் சங்கப் போராட்டம் முதலாளித்துவ அமைப்பினர் கொண்டுள்ள ஆதிக்கம் தொழிலாளர்களை பிரித்து வைத்துள்ளது. இவ்வாறான பிரிவினையில் அமைந்த தொழிலாளர் வர்க்கம் இலகுவாக வகுப்புவாதச் சக்திகளிடமும், முதலாளித்துவ வர்க்க கட்சிகளிலும் பலியாவதற்கு தொடர்ந்தும் சந்தர்ப்பத்தைக் கொடுத்து

வந்துள்ளது. தொழிற்சங்கப் அமைப்புகள் மே தினத்தில் இந்திய சினிமாப் பாடகர்கள், நடிகர்களை அழைத்து அவர்களின் கூத்தைப் பார்த்து ரசிப்புதுடனும், முதலாளித்துவ அமைப்புக்களுக்கு வாக்கு திரட்டும் ஊடாகமாக பயன்படுத்துவது மாத்திரம் தொழிற்பாடு என்ற நிலையிலே இருந்து விடுகின்றனர்.

முதலாளித்துவ கட்சிகளுக்கும் தொழிற் சங்கப் போராட்டங்களுக்கும் எந்தவித நல்ல என்னமும் இருக்க முடியாது. இவர்கள் வாயில் தொழிற்சங்கத்தைப் பற்றிக் கூறிக் கொள்கின்ற போதிலும் இவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தை பாதுகாப்பவர்களே. இனங்களுக்கு தனியேயான தொழிற் சங்கம் அமைத்துக் கொள்ளும் நிலையும் இந்தப் பிரிவினை வகைகள் தோற்றுவிக்கின்றன. இலங்கையில் மலையக மக்களை திரட்டிய தொழிற்சங்கம் மக்களைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிப்பதில் மாத்திரம் குறியாக இருக்கின்றது. 1977 இல் ஈழக் கோரிக்கையை முன்வைத்து வெற்றி பெற்ற பின்னர் ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து ஆட்சியில் அமர்ந்தனர். இவர்களின் தொழிற்சங்கம் வாக்கை நோக்கிய ஒன்றாகவே இருக்கின்றன. இன்றைக்கு இனரீதியாக பிரிந்துள்ள தொழிலாளர் வர்க்கம் ஒற்றுமையாகப் போராடித் தான் இருந்திருக்கின்றது.

## 2.2.2 இனத்துவேசம் அற்ற ஒற்றுமை

மாற்றங்கள் ஏற்படும்போது வேற்றுமைகளும் வளரும், அந்த வேற்றுமைகளைப் பயன்படுத்தி, அவற்றிலே குளிர் காய்கின்ற நிலமைகளை காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் இந்தச் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் எவ்வாறு போராட்டத்தை நடாத்தி இருக்க வேண்டும். இது எமக்கு படிப்பினையாக இருப்பதுடன் அதன் பலாபலன்கள் எவ்வாறு இருக்கும் என்பதைப் பார்ப்போம். அதேவேளை இந்த வரலாற்றில் இருந்து இனத்திற்கெதிரான யுத்தவெறி திடீரென தோன்றியது இல்லை என்பதையும் இங்கு அறியமுடியும்.

"1929ம் ஆண்டில் நடைபெற்ற ட்ராம் வண்டித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறிப்பிடத்தக்கது இத்தொழிலாளர்கள் பெளரஸ்ட் சகோதரர்கள் என்னும் கம்பனியில் வேலை பார்த்து வந்தனர். இவர்களுக்கு ஆதரவாக துறைமுகத் தொழிலாளர் இக்கம்பனியின் பொருட்களை ஏற்றவோ இறக்கவோ மறுத்தனர். மொத்தமாக 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் 950 பேர் படுகாயமடைந்தனர். இதுபற்றி பீலிப் குணவர்த்தனா குறிப்பிடுகையில் சீரழிந்த முதலாளித்துவ சமுதாயத்தில் அதிகாரத்தை வெளியேற்ற முடிந்தது எனக் குறிப்பிட்டார்.

தேசியப் பயிர்களுக்குப் பதிலாக பணப்பயிரைப் பயிரிட்டார்கள். உ–ம் தேயிலை, றப்பர், கோக்கோ என்பன. இவற்றை வெளிநாடுகளில் விற்று அப்பணத்தை தம் நாட்டிற்கு கொண்டு சென்றார்கள். இவற்றில் குறைந்த

வேதனங்களுக்கு வேலை செய்வதற்கென இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை குடியமர்த்தினார்கள். இவர்களின் வாழ்க்கைத் தரம் இன்னமும் இவ்வாறே உள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. இது மாத்திரம் அல்ல கலாச்சார மதரீதியான மாற்றங்களை செய்து எம்மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். ஏர்பிடித்த கைகள் பேனா பிடிக்கத் தொடங்கியது இக்காலத்திலேயே. இரு இனங்களுக்கிடையில் திட்டமிட்ட முறையில் பகைமையை உருவாக்கினார்கள் உதாரணமாக 1875, 1900 கால கட்டத்தில் பிரித்தானிய, வட,தென்னிந்திய முதலீடுகள் இலங்கையின் கொலனித்துவப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தின. உண்மையில் இலங்கைத் தமிழரும் சிங்களவரும் பிரித்தானியருடன் போட்டி போடக் கூடிய வகையில் இருக்கவில்லை. உள்நாட்டு வர்த்தகத்தில் புறக்கோட்டை அரிசி, புடவை வியாபாரத்தின் பெரும்பகுதி 73 நாட்டுக் கோட்டைச் செட்டிக் கம்பனிகளில் தங்கியிருந்தது. பலசரக்கு விற்பனையில் 35 முஸ்லீம் கம்பனிகள் பங்குபற்றின. இவ்வருடத்தில் தமிழ் அல்லது சிங்களக் கம்பனிகள் ஒன்றும் இல்லை. 1880ல் 86 செட்டிக் கம்பனிகளும், 64 முஸ்லீம் கம்பனிகளும் முதன்மை பெற்றன. 1890ல் குஜராத்தைச் சேர்ந்த புதிய முஸ்லீம் வர்த்தகக் கம்பனிகள் போரா, கோவூ, பேமன் போன்றோர் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இடம் பெற்றனர். இவர்கள் புதிய வியாபார முக்கியஸ்தர்களாக மாறி பிரித்தானியர்களின் கூட்டுப் பங்கு தாரர்களாகவும் அமைந்தனர்.

இதன் விளைவே 1915ல் சிங்கள முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. 1929க்கும் 1932க்கும் இடையில் ஏரிக்கரையகம் (லேக்கவுஸ் –1929) கண்டி குயின்ஸ் கோட்டல் (1931) நடைபெற்ற வேலை நிறுத்தங்களில் வேலை நிறுத்தம் செய்வேருக்கு பதிலாக மலையாளிகளை வேலைக்கு அமர்த்தினர். இதனால் இலங்கையில் பிரித்தானியர்களால் குடியமர்த்தப்பட்ட மலையாளிகளுக்கும் சிங்களவருக்குமிடையில் பகை மூண்டது.

1930களில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் பல தேயிலை இறப்பர் தோட்டங்கள் மூடப்பட்டன. இதனால் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டம் இனவெறியாக மாறியது. இந்தியர்கள் குடியேறியமையால் தம் வேலைகள் பறிபோயின என்ற மாயை வளர்க்கப்பட்டது.

1896, 1930ம் ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட வேலைநிறுத்தங்கள் பிரித்தானிய அரசிற்கு ஓர் உதாரணமாக அமைந்தது. சலவைத் தொழிலாளர் (1896), யாழ் சுருட்டுத் தொழிலாளர் (1886), Times of Ceylon அச்சகத் தொழிலாளர்கள் (1898), துறைமுகத் தொழிலாளர்கள் (1901) கொழும்பு மாட்டு வண்டிக்காரர்கள் (1905), ரயில் வேலைநிறுத்தம் (1912), துறைமுகத் தொழிலாளர் (1920), முதலாவது பொது வேலைநிறுத்தம் (1923), இரண்டாவது பொது வேலைநிறுத்தம் (1933) டிராம் வண்டி வேலைநிறுத்தம் (1929), குறிப்பாக 1927ம் ஆண்டு துறைமுக வேலைநிறுத்தம் 3 வாரங்களாக 13,000 தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. மேற்குறிப்பிட்ட வேலைநிறுத்தங்கள் யாவும் தொழிலாளர்களு (தமிழ், சிங்கள, முஸ்லீம்)க்கிடையே ஏற்பட்ட ஒற்றுமையின் விளைவே. இதனை உடைப்பதே பிரித்தானியர்களின் முதல் வேலையாகவும் இருந்தது." (நெப்போலியன் –தேடல் –கனடா) முன்பு குறிப்பிட்டது போல் இனவொடுக்கு

முறையானது எதிரி தனது இருப்பிற்கு எவ்வித உத்தரவாதம் இல்லை என்ற கொலை நடுக்கத்தில் ஒடுக்குமுறையை தீவிரப்படுத்துகின்றான், இப்படியான பல ஐக்கியப்பட்ட போராட்டங்களை குறிப்பிட முடியும். இவ்வாறான ஐக்கியம் என்பது குறுகிய தேசியவாத, வகுப்புவாதச் சிந்தனை கொண்டவர்களினால் திசை திருப்பப்பட்டது.

சுதந்திரத்தின் பின் மக்களிடையே தொடர்ச்சியாக அதிருப்தி நிலவியது. அதுவே குட்டிப்பூர்சுவா வர்க்கத் தலைமையில் உருவான (JVP) ஜே.வி.பியின் வழிநடத்தலின் கீழ் திடீர் ஆயுதப் புரட்சியை நடத்தினர். இவர்களுக்கு இடையே இருந்த இனவாதச் சிந்தனை, மக்களை அணிதிரட்டாமை, (குறிப்பாக மற்றைய தேசிய இனங்களை) அவர்களின் அதிதீவிர இடதுசாரிக் கோஷம் எல்லாவற்றையும் சிதைத்து விட்டது.

தமிழ்த் தலமையானது தமது இனத்திற்கென ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டனர். தமது குட்டிப் பூர்சுவா வர்க்கச் சிந்தனைக் கேற்ப நடந்தனர். ஆனால் ஜே.வி.பி யினர் சுயநிர்ணயத்தை அங்கீகரிக்காது, பேரினவாதத்தின் பூச்சாண்டிக்கு தூபம் காட்டியவர்களாகவே செயற்பட்டனர். இவர்கள் தனிஒரு இனத்திற்கு கூடுதல் சலுகைகளை வழங்கிச் செயற்பட்டனர். தனிஒரு இனத்திற்கு என கட்சி இருப்பதையோ சலுகை கொடுப்பதையோ ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் நடந்தது என்ன பாட்டாளி வர்க்க நலன் பின்னுக்குச் சென்றது. ஆளும் வர்க்கம் தனது இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள வழியமைத்துக் கொடுத்தது தான் மிச்சம்.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி வழியில் போராட்டம் நடைபெற்றிருக்க வேண்டும். கொலனித்துவ காலத்திற்குப் பிந்திய போராட்டங்களில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான முனைப்புகள் எடுக்கப்பட்டன. ஆனால் அவை மழுங்கடிக்கப்பட்டு முதலாளித்துவ சக்திகள் அரசியல் அரங்கில் மேலான்மை பெற்றனர். இடதுசாரிகளின் தவறுகளுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. இவை பற்றி சுருக்கமாக கூறுவது என்றால் தத்துவத்தில் ஏற்பட்ட வறுமை, தத்துவத்தின் புரிதலில் ஏற்பட்ட மாறுபாடு காரணமாக ஏற்பட்ட பிளவு, உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நிலை என்பவை முக்கிய காரணமாகக் கொள்ளலாம். ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாட்டாளி வர்க்கப் புரட்சி இடைக்கால தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்து கொண்ட தொழிற்சங்கப் போராட்டம் ஆகியவற்றிற்கு அப்பால் தேசியத்தின் கோரிக்கையும், கவனிக்கப்படவில்லை. இதனால் தேசிய இனத்தின் முதலாளித்துவ வர்க்கத்தின் கைகள் ஓங்குகின்ற காலகட்டம் தொடர்கின்றது.

## 2.2.3 சிங்கள.தமிழ் பூர்சுவாக்களிடையே போட்டி

பாட்டாளி வர்க்கம் பொருளாதார கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கான தீர்வாக சமதர்மப் புரட்சித் திட்டத்தை முன்வைக்கின்றது. ஆனால் தேசிய முதலாளித்துவம் தனது தேவைகருதி தேசியக் கோரிக்கையை

முன்வைகின்றது. பாட்டாளி வர்க்கப் புரட்சி மழுங்கடிக்கப்பட்டு முதலாளித்துவம் தலைமை தாங்கிக் கொள்கின்ற போராட்ட வளர்ச்சியின் தோற்றத்தைப் பார்ப்போம். பூர்சுவா வர்க்கமானது தனது இருப்பையும், சுரண்டலையும் நிலைநிறுத்திக் கொள்வதற்காக மக்களிடையே காணப்படும், வெறுபாடுகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. சமூகத்தில் காணப்படும் வேறுபாடுகளை இனம், நிறம், மொழி, மதம் ஆகியவற்றைப் பாவிக்கின்றது. வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் தன்னகத்தே கொண்ட இவர்கள் தாமே தனித்து வாழவேண்டும் என்ற சுயநலம் கொண்டுள்ள காரணத்தால் அல்லது தாமே உயிர்பிழைக்க வேண்டும் என்ற காரணத்தால் இச்செயற்பாடுகளில் இறங்குகின்றனர்.

சமூகத்தில் இருக்கின்ற சிந்தனை வெளிப்பாடுகள் அந்தந்த உற்பத்தியின் தன்மையைக் கொண்டே உள்ளது. இவ்வாறான முரண்பாடுகளைப் போக்குவதும் போலி உணர்வுகளைப் போக்குவதுமே புரட்சியாளர்களுக்குள்ள கடமையாகும். மேற்கூறியவையை பின்வருமாறும் வரையறுத்துக் கொள்ளலாம். பிழைப்பிற்கான முயற்சிகளில் இருந்து பொருளாதார மாற்றத்தின் ஊடாக தெருவிற்கு வருகின்றனர். வாழ்க்கைக்காக நித்தம் போராடுகின்றனர். இந்த நிலையில் இருக்கின்ற சமூகமைப்பில் பொருளாதாரத்தில் உறுதின்மையின் காரணமாக இவர்களுக்கு இயல்பாகவே மக்களிடையே இருக்கின்ற மனோபயம் அல்லது அவர்களின் வாழ்க்கைக்கான நம்பிக்கையின்மை என்பது இலகுவாக பூர்சுவா வர்க்கத்தின் பிரச்சாரத்துக்குப் பின்னால் அணிதிரள வழிவகுக்கின்றது. இந்த வலிமையற்ற நிலையையே மதபீடங்கள் மக்களிடத்தே போலி உணர்வை வளர்க்கப் பயன்படுத்துகின்றனர்.

கொலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழ் பூர்சுவாக்கள் அதிக சலுகையை அனுபவித்ததுடன் சிங்கள மக்களை சுரண்டினர். போட்டி போட்டு வளர்ந்த சிங்கள பூர்சுவா வர்க்கம் இலங்கையின் தேர்தலின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இனபேத அடிப்படையில் அரசியல் நடத்துவதை இருபகுதியினரும் ஆழமாக செயற்படுத்தினர்.

பூர்சுவா வர்க்கமானது தனது இனத்தைச் சேர்ந்த பூர்சுவா மற்றும் குட்டிப்பூர்சுவா வர்க்கத்தினருக்கும் (வேலை வாய்ப்பை) அரச தாபனங்களில் இருத்தியது. அதேவேளை விவசாயம், சமூக நலத்திட்டம் போன்றவற்றில் தனது இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கியது. வேலையில்லாத் திண்டாட்டம் வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பொருளாதாரத்தின் வளர்ச்சியின்மையை ஏற்படுத்தக் காரணமாகியது. இதன் காரணமாக மாத்திரம் அல்ல ஒரு தேசத்தின் வேலைப் பிரிவினையானது தொழிற்சாலை மற்றும் வர்த்தகத்தை நகர்ப்புறமும், விவசாயத்தை கிராமப்புறமும் கொண்டுள்ளதினால் இருபகுதியினருக்குமான நலன் பொருட்டு ஏற்பட்ட முரண்பாடானது தோன்றுகின்றது. இந்த முரண்பாடுகள் என்பது ஆட்சியாளர்களை நடுங்கவைக்கும் என்பது இயல்பானதே. அதேவேளை வேலையில்லாத் திண்டாட்டமும் நுகர்வுப் பொருட்களை வளங்கும் சாத்தியமின்மை, பணவீக்கம், போன்ற பிரச்சனைகள் முக்கியமானதாகும்

இலங்கையின் பொருளாதாரமானது தேயிலை, றப்பர் போன்ற பணப்பயிரையும், வர்த்தகத்தையும் பிரதானமாயும் அதற்கு இசைவாக அரசியல் நிர்வாக பொதுச் சேவைகளை கொலனித்துவ ஆட்சியாளர்கள் உருவாக்கிக் கொண்டனர். உள்நாட்டு மக்களைக் கொண்டு அத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற போது ஏற்பட்ட பாகுபாடும் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தின் மூலம் ஏற்படும் விரிசல் என்பது சமூகத்தில் தோன்றியிருந்தது.

இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆட்சியாளர்கள் குறுக்கு வழியைப் பின்பற்றினர் எனலாம். ஆட்சி மாற்றத்தின் பிற்பாடு முக்கிய நிகழ்சியாக மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது. இடதுசாரிகள் நாடாளுமன்றத்தில் நுழையும் விகிதத்தை மட்டுப்படுத்துவதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சிக்கு தமிழ் பூர்சுவா கட்சியான ஜி.ஜியின் த.காங்கிரஸ் தனது ஆதரவை பூர்சுவா வர்க்கத்திற்கு வழங்கியது.

கல்லோயாத் திட்டத்தின் மூலம் நிலமில்லாத விவசாயிகளை அவற்றை அண்டிய பகுதிகளில் குடியேற்றி இருந்தனர். இந்நிகழ்ச்சியானது, இயல்பாகவே இடமளித்திருந்தது. அதேவேளை புத்த மதபீடமும் இனவாத அரசியலுக்கு மேலும் சக்தி கொடுக்கும் காரணியாகியது. அனாகரிகதர்மபாலாவினால் உருவாக்கப்பட்ட சிங்களத் தேசியவாதம் என்பது பலதிசைகளிலும் தாக்கத்தை உண்டாக்கி இருந்ததையும் இங்கு கவனிக்க வேண்டும்.

தமிழ் ஊழியர்களை மட்டுப்படுத்தும் பொருட்டு உத்தியோகஸ்தர்கள் சிங்களம் பயில வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. இதேவேளை சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டும், யூ.என்.பி யுடன் ஏற்பட்ட போட்டியின் காரணமாகவும் சிறிலங்கா சுதந்திர கட்சியினர் சிங்களத்தை ஆட்சி (1956) மொழியாக்கினர்.

இதனைத் தொடர்ந்து 1958 இல் நடைபெற்ற தமிழ் மக்கள் மீதான தாக்குதல் என்பதை தமிழ் பூர்சுவா வர்க்கத்தை அகற்றுவதையே நோக்கமாகக் கொண்டது. இவையே பின்னால் இடம்பெற்ற தாக்குதல்களும் நிரூபித்தன இதன் உச்சக்கட்டமும் 1983 தாக்குதலாகும். இவை மாத்திரம் அல்ல பிற்பாடு நடைபெற்ற தாக்குதல்கள் என்பனவும் தமிழ் பூர்சுவா வர்க்கத்தை அகற்றிவிட்டு சிங்களப் பூர்சுவா வர்க்கம் அந்த இடத்தை நிரப்புவதற்கான வழிமுறைகளேயாகும்.

இதனை முதலாளிகளும் இவர்களுக்கு துணையான அரசியல்வாதிகளும் திட்டமிட்டனர். திட்டத்தை வேலை இல்லாதவர்களும், உதிரிப் பாட்டாளிகள், கிறிமினல்களும் செயற்படுத்தி முடித்தனர். முன்பு குறிப்பிட்டது போன்று தமிழ் வர்த்தகர்கள் கொழும்பு மற்றும் சிங்களப் பகுதிகளில் தமது சந்தையைப் பிடித்து வைத்திருந்தனர். இவர்களின் சுரண்டலின் அகோரம் தாங்காது சிங்கள மக்கள் வெறுப்படைந்திருந்தனர். அதேவேளை பலமிழந்திருந்த சிங்களப் பூர்சுவா வர்க்கத்தினர் அரசுரிமையைக் கைப்பற்றிய பின்னர் புதுத்தெம்பு பெற்றனர். இந்நிலையானது சிங்கள பூர்சுவா வர்க்கத்திற்கு சாதகமாக இருந்தது. அதாவது தம்மை தமது நலனைப்

பாதுகாக்க அரசு இருக்கின்றது. தமிழ் பூர்சுவாக்களை அகற்றிவிட்டு தாம் அந்த இடத்தில் அமர்வதுதான். இவற்றின் தொடர்ச்சியே 1958ம் ஆண்டு நிகழ்ந்த வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்களாகும்.

## 2.2.4 உயர்கல்விக்கான சந்தர்ப்பம்

70வது களில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட தரப்படுத்தலின் மூலமாக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக் கழகத்தினுள் நுழையும் வாய்ப்பை இழந்தனர். இதனால் கொதிப்படைந்த மாணவர்கள் போராட்ட நடவடிக்கையில் இறங்கினர். இது தொடர்பாக பின் பார்ப்போம். இங்கு வர்க்க நிலையை ஆராய்வது முக்கியம். யாழ்ப்பாண விவசாயிகள், வர்த்தகர்களின் பிள்ளைகளே பெரும்பான்மையான மாணவர்களாவர். அதாவது குட்டி பூர்சுவா வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இவர்கள் யாழ் குடாநாட்டில் ஒப்பீட்டு ரீதியில் செல்வத்தால் செழித்திருந்தனர். இவர்கள் தமது பிள்ளைகள் தம்மைப்போல் வாழக்கூடாது அல்லது தாம் செய்த தொழிலைச் செய்யக்கூடாது என எண்ணுபவர்கள். இவர்களின் சமூக அந்தஸ்து என்பது தமது பிள்ளைகளின் கல்வி நிலையை மையமாகக் கொண்டே கணிக்கப்படும் நிலை இருந்து வந்தது. அதாவது தமது பிள்ளைகள் இன்னபாடம் படிக்கின்றார்கள் தனது பிள்ளை கொர்னமேந்து (அரசாங்க) உத்தியோகம் பார்கிறான் என சமூகமானது இவர்களுக்கு அந்தஸ்தை வழங்கியது.

அதேவேளை இவர்களின் பிள்ளைகளுக்கே கல்வி கற்கும் வசதி என்பது இலகுவாகக் கிடைக்கக் கூடும். உதாரணமாக சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவனை எடுத்துக் கொண்டால் அம்மாணவன் தனது கல்வியைத் தொடர வேண்டுமானால், அம்மாணவனுக்கான புத்தகம் மற்றும் இதர செலவுகள் அதேவேளை அம்மாணவனுடைய குடும்ப சூழ்நிலை (மாணவனுக்கு) தடையாகவே இருக்கும். அதாவது மாணவரின் குடும்ப வருமானம் மட்டு மட்டாகவும். ஒரு மனிதனிடம் இருந்து ஒரு வருமானமும் இல்லாமல் இருக்கின்ற வேளையில் அவனுடைய முழுச் செலவையும் தாய், தகப்பன் கவனிக்க வேண்டும் என்றால் இலகுவான காரியம் அல்ல. இதன் காரணமாக பல வறிய மாணவர்கள் தமது கல்வியை இடையிலே விட்டு விட்டு குடும்பப் பொறுப்பைக் கவனிக்கச் சென்றனர். ஆனால் வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு குடும்பப் பாரம் என்பது அதிகம் இருக்க முடியாது. தரப்படுத்தலின் மூலமாக யாழ் மாணவர்கள் குறிப்பாக பாதிக்கப்பட்டனர். ஆனால் மற்றைய தமிழ் மாவட்டங்களான மன்னார், கிளிநொச்சி, வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாணவர்கள் இதன் மூலம் பயன் பெற்றனர். (அதேவேளை வடக்கு மாணவர்கள் பின்தங்கிய மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து கல்வி கற்றதுடன் பல்கலைக் கழகமும் நுழைந்தனர்) இந்நிலையானது (உண்மையானது) இனவாத அரசின் அடக்கு முறையின் கொடுமையினால் மறைக்கப்பட்டது என்பதை மறுக்க முடியாது.

கல்வி கற்க முடியாத நிலையில் உள்ள மாணவர்கள் வறிய குடும்பங்களை சார்ந்தவர்களே இவர்கள் தமது வறுமையின் காரணமாக வாழ்விற்காக போராடுபவர்கள் இவர்களுக்கு வாழ்க்கைக்காக போராடுவதே வாடிக்கையாகின்றது. ஆனால் வசதிபடைத்த மாணவர்களே தமது நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு நகர இருப்பவர்கள். தமக்கு கிடைத்த வசதியை, வளர்ச்சியை மேலும் வளர்த்துக் கொள்ள முயற்சிக்கும் வர்க்கம் ஆகும். அப்படி இருக்கையில் கல்வி கற்க்க முடியாத மாணவர்களின் நலனும் பல்கலைக்கழகம் புகமுடியாதவர்களின் நலனும் ஒன்றாக இருக்க முடியாது.

பல்கலைக் கழகம் புகும் மாணவர்களின் வர்க்க நிலை என்பதை முதலில் வர்க்க ரீதியாக ஆய்வை மேற்கொண்ட பிற்பாடே அவர்களின் இனத்தின் சார்பு நிலை ஆராயப் படவேண்டும் அதனை விடுத்து இன ரீதியாக பார்த்த பின்னர் வர்க்க நிலையை பார்க்க முடியாது. அதாவது வர்க்கத்திற்கு பிற்பாடே ஒடுக்கப்படுகின்ற இனத்தின் பிரதிநிதி என்ற நிலையாகும்.

வடக்கில் பூர்சுவா வர்க்கம் பலம் பொருந்திய நிலையில் இருந்ததினால் மாணவர் போராட்டங்கள் தலைமை தாங்கி முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஆக கல்வி கற்க வசதி படைத்தவர்கள் என்பது வசதி படைத்தவர்களுக்கு மாத்தரமே முடியும். அவர்களின் நலனை முதன்மையாகக் கொண்டே எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன. குறிப்பாக பூர்சுவா வர்க்கம் என்பது தான் இருக்கும் நிலையில் இருந்து அடுத்த கட்டத்தை அடைவதே தனது குறிக்கோளாக கொண்டிருக்கும். இந்நிலையில் பூர்சுவா வர்க்கத்துடன் போட்டி போட்டு வளர கட்டாயம் முயற்சி எடுத்துக் கொண்டே இருக்கும். இந்நிலையில் . பூர்சுவா வர்க்கத்துடன் மோதவேண்டிய நிலையைக் காணக்கூடியதாக உள்ளது.

## 2.2.5 பண்பாட்டுத் தளத்தின் மீது தாக்குதல்

ஒரு வர்க்கமானது இன்னொரு வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுத்து அழிக்க முற்படுகின்றது. இருப்புக்காக தொடுக்கப்படும் அழிப்பானது பலத்காரத்தினாலேயே நடைபெறுகிறது அந்தப் பலாத்காரம் மிகவும் கொடூரமானதாகவும் காட்டு மிராண்டித் தனமானதாகவும் இடம் பெற்றுள்ளது என்பது இயல்பான விடயமே. அழிப்பு நடவடிக்கைகள், ஒடுக்குமுறையின் தாக்குதல் முனைப்பு என்பன காலத்துக்குக் காலம் மாறுபடுகின்றது. இந்த அழிப்பு நடவடிக்கைகளின் முறையை காட்டு மிராண்டிகளாக இருந்த போது கற்றுக் கொண்ட முறைகளை மறக்காது தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும் சரி, பாதுகாக்கும் போதும் சரி எரித்தல், அழித்தல் மிருகத்தனமாகத் தாக்குதல் குலச் சமுதாயங்களாக இருந்த போதும் சரி. சனநாயகத்தை கற்பிற்கும் மேற்கு நாடுகள் கொலனித்துவ காலங்களில், மதங்களை பாதுகாக்கும் முகமாக தொடுக்கப்பட்ட தாக்குதல்களும் சரி மிருகத்தனமாகத் தான் இருந்தது.

கலாச்சாரத்தின் மீது தாக்குதல் தொடுப்பதன்காரணம் ஆதிக்கத்தைக் கொண்டுள்ள வர்க்கமானது தன்து வர்க்க நலனின் பொருட்டு விஸ்தரிப்பை மேற்கோள்வதேயாகும். பொதுவான மொழி இருக்கின்ற பொழுது வர்த்தகப் பரிமாற்றம் என்பது இலகுவானதாகவும் லாப கரமாகதாகவும் விரைவாகவும் மேற்கொள்ள முடியும்.

ஸ்ராலின் பின்வருமாறு கூறுகின்றார். ''இடம் விட்டு இடம் பெயரும் உரிமையைக் கட்டுப்படுத்தல், வாக்குரிமை பறிக்கப்படுதல், மொழியுரிமை அடக்கப்படுதல், பள்ளிகள் மூடல் மற்றும் பல்வேறு விதமான அடக்குமுறைகள் இவையாவும் முதலாளிகளை விட தொழிலாளிகளை அதிகம் பாதித்தன. இந்த நிலையானதுஅடக்கி ஒடுக்கப்படும் தேசங்களின் பாட்டாளி வர்க்கத்தின் அறிவாளிகளின் முழு வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவாகவே இருந்தது. உதாரணமாக தாத்தர் மற்றும் யூத இனத்தொழிலாளர்கள், தங்களின் சொந்த மொழியைக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் பயன்படுத்த அனுமதிக்கப்படாவிட்டாலோ, மற்றும் அவர்கள் பள்ளிகள் மூடப்பட்டாலோ, அவர்களிடையே அறிவாளிகளின் முழுவளர்ச்சி என்பது சாத்தியம் இல்லாததாகும்.

அதே நேரத்தில், தேசிய அடக்குமுறை என்பது பாட்டாளி வர்க்க நலனுக்கு இன்னொரு விதத்திலும் கேடு பயப்பதாகும். அதாவது பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பகுதியினரைச் சமூகப்பிரச்சினைகள், வர்க்கப் போராட்டப் பிரச்சினைகள் ஆகியவற்றிலிருந்து திசைதிருப்பி, தேசியப் பிரச்சினைகள், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ''பொதுவான'' பிரச்சினைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வைக்கிறது. பாட்டாளிகளின் வர்க்க நலன்களைத் திரித்து குறைத்து மதிப்பிடுவதற்கும், தொழிலாளர்களின் அறிவார்ந்த வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கும் உகந்த வகையில் ''பொதுவான நலன்கள் ஒருமைப்பாடு'' என்பது குறித்து பிரச்சாரம் செய்யத் தகுந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டது.'' (29 – 30 மாக்சியமும் தேசிய இனப்பிரச்சனையும் – ஸ்ராலின்) தேசிய இனப்பிரச்சினை என்பது எப்பவும் ஒரே மாதிரியான தன்மை கொண்டிருப்பதில்லை. அதேவேளை இனப்பிரச்சினை சுயநிர்ணயம் தொடர்பான நிலைப்பாடுகள் என்பன். உள்நாட்டு, சர்வதேச அரசியல் நிலைகளின் நிமிர்த்தம் மாறுபடுகின்றது.

## 2.2.6 தேசியக் கோரிக்கை முன்வருதல்

ஒவ்வொரு நாடுகளிலும் அந்தந்த சூழலிற்கு ஏற்ப தேசிய உணர்வின் வெளிப்பாடுகள் காணப்படுகின்றது. அந்தந்த தேசிய இனங்கள் கொண்ட வரலாறு, மொழியின் வளர்ச்சியின் தன்மை, பொருளாதார வளர்ச்சி, உலகப் பார்வை என்பனவற்றின் அடிப்படையில் தேசிய உணர்வு என்பது மாற்றமடைகின்றது. இவற்றை விரிவாக நோக்குவோமானால் சில அம்சங்கள் இலகுவில் அதன் அத்திவாரத்தை புரியவைத்துவிடும்.

குடும்ப உறவைக் கொண்ட சமுதாயத்தில் உறவை மையமாகக் கொண்டு அணிதிரள்கின்றனர். முன்னர் சொந்த தாய் வயிற்றுப் பிள்ளைகள், ஒன்றுவிட்ட சகோதரங்கள், தமது பேரன், பேத்திகளின் சகோதரங்களின் பிள்ளைகள், திருமணம் செய்த வழியில் சேர்ந்த புதிய உறவு என இப்படித் தான் அணிசேரப்பட்டது. ஏனெனில் இவைகள் அசல் இரத்தங்கள் எனப்படுகின்றது. இதன் காரணமாக குடும்ப, இரத்த உறவுகள் என்பன முக்கியமாகின்றது. குடும்பம் என்பது நிலைக்க வேண்டும் ஏனெனில் அதுவே ஆணிவேர். அப்பொழுது தான் அது ஆலை மரம் போல வேர் விட்டு தழைக்கும். அதற்குப் பிற்பாடு கிராமம், சாதி என்ற வரையறையினுள்ளும், அதன் பிற்பாடு தமது முதலாளி (சாதியத்தின் எச்சம்) என்ற விசுவாசத்தினுள்ளும் அணிதிரண்டனர். நான் என்னுடைய சகோதரங்கள், உறவு எனது ஊர் என்று அணிசேர்வது போல் காலப்போக்கில் எமது சமயம் வரையறையின் கீழும் பொருளாதார வளர்ச்சியினூடே ஏற்படுகின்ற தொடர்பினால் பல சிறு சிறு இனங்களைக் கொண்ட மொழியினங்கள் மறைக்கப்பட்டு பலம் பொருந்திய மொழிக் குடும்பத்துடன் கலக்கின்றதினால் எற்படுகின்ற இனத்தின் பிரதிநிதி என்பதால் தாக்குதல் ஏற்படுகின்ற பொழுது முன்பு இருந்ததைப் போலான உணர்வு என்பது புதிய வடிவத்திற்கு எற்றால் போல் இசைந்து கொடுத்து புதிய வடிவம் எடுக்கின்றன.

இதற்கு அடிப்படைக் காரணம் போலியுணர்வே அதாவது எவ்வாறு சமய உணர்வு என்பது ஆண்டாண்டு காலமாக பதிந்துள்ளதோ அதே போலதான் இனவுணர்வும் வெளிப்படுகின்றது. இனவுணர்வு என்பது மத உணர்வில் இருந்து மாற்றம் பெறுகின்றது ஏனெனில் இனவுணர்வு என்பதன் பதம் நவீன காலத்திற்கு உரித்தானதாகும்.

சமத்துவமற்ற சந்தை என்பன போராடத் தூண்டுகின்றது. முதலாளி வர்க்கம் போராட்டத்தின் மூலம் சந்தையை நிலைநிறுத்த முயல்கின்றனர். இதற்கு வசதியாக பரந்து பட்ட ஒற்றுமையைக் கொண்ட மொழி கலாச்சார, வரலாறு ஆகியவற்றைக் கொண்ட மக்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுகிறது.

ஸ்ராலின் பின்வருமாறு வரையறுத்துக் கொள்கின்றார். "**சந்தைப்பிரச்சினை என்பது புதிதாகத் தோன்றிய முதலாளிகளுக்கு மிக முக்கிய பிரச்சினையாக இருந்தது. அவர்களுக்கு தங்கள் பொருள்கள் விற்கவேண்டும் என்பதும், மற்ற தேசிய இனங்களைச் சேர்ந்த முதலாளிகளுடன் நடக்கும் போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்பதும், நோக்கமாயிருந்தது. எனவே அவர்கள் தங்களுக்கென்று ஒரு சொந்த உள்நாட்டு சந்தை வைத்துக் கொள்ள விரும்பினர். சந்தை என்கின்ற இந்த ஆரம்பப் பள்ளியில் தான் முதன் முதலில் முதலாளிகள் தேசிய வாதத்தைக் கற்றறிந்தனர்.**

ஆனால் பிரச்சினை என்பது பொதுவாக சந்தையோடு மட்டும் நிற்கவில்லை. ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்களைச் சொந்த அரைநிலப்பிரபுத்துவ மற்றம் அரைமுதலாளித்துவ அதிகார வர்க்கத்தினர் இதைத் தடுத்து நிறுத்த தம் சொந்த

முறைகளைக் கையாண்டு போராட்டத்தில் தலையிட்டனர். ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளிகள் மிக அதிகமானவர்கள் ஆயினும், குறைவானவர்கள் ஆயினும், மிகவும் வேகமாகவும் தீர்க்கமாகவும் தங்களின் போட்டியாளர்களை எதிர்த்து செயல்பட்டனர். அன்னிய முதலாளிகளுக்கு எதிராக சக்திகள் ஒன்று திரட்டப்பட்டு தொடர்ச்சியான கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை ஒடுக்குமுறை நடவடிக்கைகளாகவே உருமாறின. இவ்வாறு நடந்த போராட்டம் பொருளாதாரத் தளத்தில் இருந்து அரசியல் தளத்திற்கு பரவியது. அதாவது இடம் விட்டு இடம் பெயரும் உரிமை கட்டுப்பாடு, மொழி ஒடுக்குமுறை வாக்குரிமைக் கட்டுப்பாடு, பள்ளிகள் மூடப்படுதல், மதஉணர்வு மீது கட்டுப்பாடு போன்ற இன்னும் பல நடவடிக்கைகள் போட்டியாளரின் தலைக்கு மேலே குவிந்து கொண்டே போயிற்று. இதுபோன்ற நடைவடிக்கைகள், ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனத்தைச் சார்ந்த முதலாளிகளின் நலனுக்கு மட்டும் நடத்தப்படவில்லை. இன்னும் செல்லப்போனால் குறிப்பாக ஆளும் அதிகார வர்க்கத்தின் சாதியக் குறிக்கோளை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் நடத்தப்பட்டன.

ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தைச் சார்ந்த முதலாளிகள் ஒவ்வொரு முறையும் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இதன் காரணமாக இயற்கையாகவே அவர்கள் ஒரு இயக்கமாகக் கிளர்ந்தனர். அவர்கள் தங்கள் சொந்த மக்களுக்கு வேண்டுகோள் விடுக்க ஆரம்பித்தனர். தங்கள் தாய் நாட்டின் நலனுக்கு கூப்பாடு போட்டனர். தம் நலனே தேசத்தின் மொத்த நலன் என்றும் உரிமை கொண்டாடினர். தங்கள் தாய்நாட்டின் நலனுக்காக கிராமப்புற மக்களிடம் இருந்து ஒரு படையைத் திரட்டினர் மக்களும் இந்த வேண்டுகோளுக்கு செவிசாய்காமல் இல்லை இவர்களின் பதாகையின் கீழ் அணிதிரண்டனர். 'அதுவரை அனுபவித்து வந்த அடக்குமுறை காரணமாக மக்கள் தங்களுடைய மனக் குமுறலை வெளிப்படுத்தினர். இவ்வாறாக தேசிய இயக்கம் துவங்கியது. எந்த அளவிற்கு பாட்டாளிகளும் விவசாயிகளும் தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டார்கள் என்பதைப் பொறுத்தே தேசிய இயக்கத்தின் வலிமை தீர்மானமாகியது.'' (24 – 27 மாக்சியமும் தேசிய இனப் பிரச்சனையும் – ஸ்ராலின்) இலங்கையின் தமிழ்ப் பிரதேசத்தில் இருக்கும் கனிவளமான இல்மனைட் இனை சிங்கள முதலாளி வர்க்கம் ஆதிக்கத்தில் கொள்ளும் பொருட்டு எல்லைகளை வகுத்துக் கொண்டது. (அரச கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது இலகுவானதாக இருக்கவில்லை, ஏனெனில் யுத்த காலத்தில் பாதுகாப்புக்கு இடைஞ்சல் ஆகும்.) இதனைப் பாதுகாக்க வேண்டியது தமிழ் முதலாளித்துவத்திற்கு அவசியமானதாகும்.



## 2.2.7 குட்டிப் பூர்சுவா வர்க்க இளைஞரின் எழுச்சி

தமிழ்ப் பூர்சுவாக்களின் நலனுக்காக போராட்டம் நடத்திய தமிழ் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது. பிரிந்தவர்கள் செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சி என அழைத்துக் கொண்டனர். இவர்கள் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதற்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். அதேவேளை தமிழருக்கு அரசியல் தீர்வுக்காக சமஷ்டிக் கோரிக்கையை வைத்தனர். அன்றைய நேரத்தில் சமஷ்டியானது ஒரு தீர்வாக பண்டாரநாயக்காவினால் அதனை அமுல்படுத்த முடியாது போய்விட்டது. அதாவது பண்டாரநாயக்கா சுதந்திரத்திற்கு முன்பாக கரையோர, கண்டிச் சிங்களவர்களை இணைக்கும் நோக்குடன் சமஷ்டியை முன்வைத்தார், எனினும் ஆட்சி மாற்றத்தின் பிற்பாடு அந்த முயற்சி தேவையற்றதாகியது. இலங்கையில் இவர்கள் அனைவரையும் இணைக்க முடிந்ததே காரணமாகும். அதேவேளை வெளியாருக்கு எதிரான எதிர்ப்புணர்வு தோன்றியிருந்த வேளையில் தனது ஆட்சியைப் பாதுகாக்கும் பொருட்டு பௌத்தத்தின் மிரட்டலுக்கு பணிய வேண்டியதாகியது. மிரட்டலின் காரணமாகவே பண்டா செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டது.

தமிழரசுக் கட்சியினால் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்கள் ஆயுதப் படையினரால் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது. எனினும் தமிழரசுக் கட்சியானது நாடாளுமன்றப் பாதையை விட்டுவிலகாமல் அதற்கு உள்ளேயே இருந்து குதிரை ஓடினர். ஒப்பந்தங்கள் செய்து கொண்டு தமது வர்க்கங்களுக்கு நலன் கொடுக்கும் சலுகைகளுக்காகவே இவர்கள் தமது காலத்தைச் செலவழித்தனர். இதன் விளைவாக பிறந்த ஒப்பந்தங்களில் ஒன்று தான் டட்லி – செல்வா ஒப்பந்தம்.

1969 களில் சிவக்குமார், முத்துக்குமாரசாமி போன்றவர்களால் உருவாக்கப்பட்டது **தமிழ் மாணவர் பேரவையாகும்.** இது குட்டி பூர்சுவா வர்க்கத்தைச் சேர்ந்தது எனினும் இவர்கள் மலையக மக்கள் ஒற்றுமை, வடக்கு கிழக்கு ஒற்றுமை என்ற கோஷத்தை வைத்து செயற்பட்டவர்கள். இவர்களிடம் காணப்பட்ட தத்துவ வறுமையானது கவர்சிக் கோஷம் என்பதற்கு அப்பால் செல்ல முடியவில்லை எனலாம். இவர்களின் போராட்டங்கள் தரப்படுத்தலை எதிர்த்து நடத்தப்பட்டன. இவர்கள் அகிம்சை மீது நம்பிக்கை இழந்திருந்தனர். எனெனில் கடந்த காலத்தின் விளைவேயாகும்.

இவர்களின் நடவடிக்கையானது அடையாளத் தாக்குதல், கொலை என்ற வடிவத்தைப் பெற்றது. அன்றைய சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் மீதான தாக்குதல், பொலிஸ் இன்பெக்டர் சந்திரசேகரா மீது தாக்குதல் போன்றவைகள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து 1974 ஆண்டு தமிழாராட்சி மாநாட்டில் பொலிசாரின் அராஜகம் என்பன இளைஞர்களை பழிவாங்கத் தூண்டியது எனலாம்.

பஸ்தியாம்பிள்ளை உட்பட அவரின் பாதுகாவலர்கள் கொலை இதனைத் தொடர்ந்து வங்கிக் கொள்ளைகள் எனத்தொடர்ந்த நடவடிக்கைகள் ராணுவத்தின் மீதான கெடுபிடிகளை அதிகரித்தது.

சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்கு சவாலாக காரியங்களைச் செய்தல். இளைஞர்களின் எழுச்சியினால் தனது இடம் பறிபோகப் போகிறது என்ற காரணத்தால், தாமும் வரலாற்றில் இடம்பெற வேண்டும் எனக்கருதிய தொண்டைமான், எஸ்.யே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ, பொன்னம்பலம், திருச்செல்வம் போன்றவர்கள் இணைந்து **தமிழ் ஈழம் தான் தீர்வு என வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினைக் கொண்டு வந்தனர்.**

ஜே.ஆர் தலைமையிலான யு.என்.பி ஆனது 1977இல் அமோக வெற்றியடைந்தது. இவர்களின் ஆட்சியானது திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இப்பொருளாதாரக் கொள்கையினால் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களிடையே பொருளாதார நெருக்கடிகளை உருவாக்கியது. சிறிமாவின் காலத்தில் நன்மை பெற்ற குறிப்பாக யாழ் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். தாராளப் பொருளாதாரக் கொள்கையினால் அனைத்துப் பகுதி மக்களிடத்தே ஆட்சியாளர்களுக்கு எதிரான கசப்புணர்வு எதிர்பட்ட வேளையில், சிங்கள பூர்சுவா ஆட்சியாளர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தின் மீது அழுத்தத்தைக் கொடுத்து பிரச்சினையை திசை திருப்பினர். இவர்களின் ஆட்சிக் காலத்திலியே 1977ம் ஆண்டு இன அழிப்பும் 1979 – ல் கொண்டு வரப்பட்டது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் ஆகும். இக்காலத்திலேயே கைதுகள், சுற்றி வளைப்பு, இரகசியப் பொலிசாரின் உளவு நடவடிக்கை என்பனவும் 1979இல் இன்பம் செல்வத்தின் படுகொலையும் எதிர்காலத்தின் மீதான அச்சத்தை ஊட்டியது. இப்படியாக தொடர்ந்த ஆயுத நடவடிக்கைகள் புதிய இனக் கொலையைத் தொடர சிங்கள பூர்சுவா வர்க்கத்திற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. 1983 ஆடி மாதம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை புதிய திருப்பமாக அமைந்தது, அகதிகளாகவும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அகதிகளாகவும், நாடோடிகளாகவும் எமது தேசத்தவர்கள். இதன் உக்கிரம் தொடர்கின்றதால் தினமும் மரணங்கள் தொடர்கின்றன.

ஒரு முழுநாட்டின் பொருளாதாரக் கொள்கையானது முழு மக்களையும் சேர்த்து அடக்கும். அதேவேளை தேசிய ரீதியில் பொருளாதாரத்திற்கு தாக்குதல் இடம் பெறுமானால், முழுமக்களையும் தாக்கும். ஆக தமிழ் மக்களில் குறிப்பாக வறிய மக்களைத் தாக்கியது. ஆனால் தமிழ் பூர்சுவாக்களின் வர்க்க நிலையானது, அவற்றைப் பார்க்க இசையவில்லை. மாறாக அவர்களுடைய வர்க்கத்துக்கு எது பலன் கொடுக்கும் என தென்பட்டதோ அதையே செய்யத் தூண்டினார்கள். இவ்வளவும் கடந்த காலத்தில் இடம்பெற்று விட்டது. பாட்டாளி வர்க்க நிலைப்பாடு எந்த வேளைகளிலும் பாட்டாளி வர்க்கத்தை பிளவுபடுத்தவோ அல்லது போராட்டத்தை பிளவுபடுத்தக் கூடாது. இன்று இனவாதத்தினுள் மூழ்கி இருப்பவர்கள் தமது கோரிக்கையை வென்று எடுப்பதற்காக மற்றவர்களைக் குறைகூறிக் கொண்டு செயற்படுகின்றனர்.

## 2.2.8 போராட்டங்களை அங்கீகரிக்கும் போக்கு

போராட்டங்களை அங்கீகரிக்கரிப்பதில் சந்தர்ப்பவாதப் போக்கினைப் பார்க்க முடியும். சர்வதேச நாடுகள், போராட்ட நாடுகள் காலத்துக்கு காலம் வெவ்வேறான போராட்டங்களை ஆதரிப்பது தொடர்பாக நிலைப்பாடுகள் எடுத்துள்ளன. முன்னர் சோவியத் ஒன்றியம் இருந்த போது கொலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்களை ஆதரித்தது. தனித் தேசங்கள் பிரிவது தொடர்பாகவும், தேசிய சுயநிர்ணயத்திற்கான போராட்டங்கள் தொடர்பாகவும் சோவியத் ஒரே போக்கை கொண்டிருக்கவில்லை. இந்த நிலை இடதுசாரி முகாம்களில் இருந்த கருத்து வேறுபாட்டுடன் ஒன்று சேர்ந்ததாகும். இதைவிட வெவ்வேறு தேசங்களில் இருக்கின்ற இடதுசாரி அமைப்புக்களும் வெவ்வேறான கோட்பாட்டு முடிவுகளையும் கொண்டிருக்கின்றன. இனவொடுக்கலுக்கு உள்ளாகிய மக்களுக்காக சர்வதேச மக்கள் மத்தியில் அனுதாப அலைகள் இருந்து கொண்டு வந்திருக்கின்றது. குறிப்பாக அயர்லாந்து, பாலஸ்தீனம், தென் ஆபிரிக்கா போன்ற தேசங்கள் மீதான பற்று என்பது இருந்து கொண்டிருக்கின்றன. இதனை விட ஒரே இனத்தினர் மற்றைய நாட்டில் வாழ்கின்ற போது அவர்களுக்காக குரல் கொடுப்பதும் இருக்கின்றது. இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரை, தமிழக மக்கள் எமது போராடத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

1. தமிழ் நாட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் காலங்களை வகைப்படுத்த முடியும். 1977 கலவரமும் அதன் பின்னர் 1983இல் நடைபெற்ற கலவரங்களின் பின்னர் மக்களிடம் ஏற்பட்ட உடன் பிறப்புக்கள் என்ற இனவுணர்வு.

2. 1986 பின்னர் சகோதரப் படுகொலைகளின் பின்னர் ஏற்பட்ட மாற்றம்.

3. இந்திய சமாதானப் படையுடனான மோதலின் பின்னர்,

4. ராஜீவ் கொலை செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கைத் தமிழர் போராட்டத்தைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டு மக்களிடத்திலும் சரி, முற்போக்கு இடதுசாரி அமைப்புக்களிடத்திலும் சரி மாற்றம் ஏற்பட்டது. அதனைவிட முதலாளித்துவ அரசியல் கட்சிகளில் ஏற்பட்ட மாற்றம் அகதிகளான எமது மக்கள் பல இன்னல்களை நோக்க வேண்டியிருந்தது.

இடதுசாரிகள் போராட்டங்களை ஆதரிப்பதில் பல்வேறு விதமான முடிவுகளை எடுத்துள்ளனர். இவர்களைப் பற்றிய கருத்தை அறிந்து கொள்வதற்கு தேசிய இனப்பிரச்சினை, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆகியவற்றின் குறிக்கோள்களில் இருந்துதான் சர்வதேசம் சம்பந்தப்பட்ட முடிவுகள் எடுக்கப்படுகின்றது. இடதுசாரிகள் விமர்சனம் இருந்தாலும், விமர்சனம் செய்து கொண்டு போராட்டங்களை ஆதரிக்கின்றனர். இவர்களே எந்தக் காலத்திலும் சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்ளாது. நேர்மையாக எந்தவித சுயநலம் கருதி பிரதி உபகாரம் எதிர்பார்க்காது செயற்படுகின்றனர்.

தொடர்ந்தும் ஆதரவு கொடுக்கின்ற இந்திய சக்திகளை எடுத்துக் கொண்டால் மார்க்சிய லெனினிய சக்திகளின் பல்வேறு பிரிவுகள் இவர்கள் நக்சல்பாரிகள் என அழைக்கப்படுகின்றனர். கடந்த காலத்தில் இவர்களுடன் எமது இயக்கங்கள் தொடர்புகளை வைத்துக் கொண்டாலும், இயக்க அலுவலகங்களில் இவர்களின் பத்திரிகைகளை வைத்துக் கொள்வதில்லை. இவர்களின் தொடர்புகள் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஒரு வெகுசன அமைப்பை திரட்டிக் கொள்ளத் தக்கவகையில் அமைந்தாகக் கொள்ளவில்லை. புரட்சியாளர்களை பாவித்து விட்டு தூக்கி எறிந்த போக்கைத் தான் அவதானிக்க முடிகின்றது.

தமிழ் நாட்டில் எமது இயக்கங்கள் பாட்டாளி வர்க்கச் சக்திகளை அண்டியிருக்காமல் சில இயக்கங்கள் முதலாளித்துவ அரசியல் கட்சிகளை நம்பியிருந்தன. அவர்களின் துணையை நம்பி இருந்ததினால் மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. இயக்கங்கள் பல மக்களிடத்தில் ஓடும் புளியம் பழம் போல் இருந்தினால் பிற்பட்ட காலங்களில் ஏற்பட்ட இடையூறுகளுக்கு துணையாக பரந்து பட்ட வெகுசனப் போராட்டங்களை நடத்த முடியவில்லை. தேர்தலில் குறியாக இருந்த அரசியல் கட்சிகளை மாத்திரம் தங்கியிருந்த போது வாக்குகளை இழக்க விரும்பாத அரசியல் கட்சிகள் உடன்பிறப்புக்கள் என்ற நிலையை மறந்து சொந்தக் கொள்கையை விட்டு சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டனர்.

முற்போக்கு, பகுத்தறிவுச் சக்திகள், தமிழ்த் தேசிய இனவுணர்வாளர்கள். இவர்களின் ஒரு பகுதியினர் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றனர். இந்தச் சக்திகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு தனியே இனத்துவ உணர்வு மாத்திரம் இருந்தால் மட்டும் போதாது, போராட்டங்கள் பற்றிய தெளிவான பார்வை அவசியமாகும். ஏனெனில் உள்நாட்டு நிலமைகளில் ஒரு போராட்ட நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நிலைக்கு இவர்கள் இருக்கின்றனர். இவர்கள் புரட்சிகர மார்க்சிய நிலைப்பாட்டை எடுக்காத பட்சத்தில் குறைபாடுகள் தோன்ற இடமிருக்கின்றது. இனத்துவ உணர்வு பாட்டாளி வர்க்க உணர்வுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்தில் பலவீனமுடையதாகும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சியக் கட்சி ஆகியவைகள் தமிழ் மக்களுக்கு ஆதரவு கொடுத்தனர். இவர்கள் இந்திய படையுடனான மோதலின் போது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் எடுத்தனர். இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆதரித்தனர். இவர்களின் நாடாளுமன்ற அரசியல் பாதையைக் கொண்ட முதலாளித்துவ கட்சிகளுடன் ஒப்பிட்டு நிலையில் பார்த்தல் அவசியமாகவுள்ளது.

அடுத்து திராவிட பாரம்பரியத்தில் வந்த கட்சிகள் உடன்பிறப்புகள் எனக் கூறிக் கொண்ட போதிலும் இவர்கள் நேர்மையான நிலைப்பாட்டைக் கொள்ளவில்லை. இவர்கள் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கு இழைத்த தீங்கை விட தமிழ் அகதிகளுக்கு இழைத்த தீங்கே மன்னிக்க முடியாதாகும்.

பணமுதலைகளின் ஏவலர்களால் ராஜீவ் கொல்லப்பட்டார் என்பதை அறியாது, ராஜீவின் கொலையாளிகள் எனச் சந்தேகப்படும் புலிகளின் மேல் தமது ஆத்திரத்தை திருப்பி, தமது அரசியல் குத்துக் கரணம் அடித்தனர். புலிகளைத் தண்டிப்பது என்று கூறி இலங்கை மக்களை தண்டித்தனர். தமிழ் மக்களை அவர்களின் விருப்பத்திற்கு எதிராக அவர்களை இலங்கைக்கு அனுப்பியதும், அகதிகளான வாலிபர், யுவதிகளை தடா சட்டத்தின் கீழ் தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் சிறையில் இட்டனர். அம்பை எய்யத் தூண்டியவன் சர்வதேசத்தில் பணத்தின் மீது மிதக்கின்ற கூட்டம் சட்டத்தில் பிடிபடாமல் தப்பித்தது. ராஜீவ் மக்கள் மத்தியில் இருந்து அம்பலப்பட்டு தூக்கி எறியப்படவில்லை என்ற குறையைத் தவிர, அவர் மிகப் பெரிய ஊழல் மன்னன் என்பதை மக்களுக்கு அம்பலப்படுத்தி தூக்கி எறியப்படுத்துவதற்கு முன்னராக கொல்லப்பட்டார். இன்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இக்கொலைக்கு பின்னால் இருந்த சர்வதேச பணச்சக்திகளை சதிகளை எதிர்த்து எந்த வித நடவடிக்கைகளும் எடுக்காமல் தவிர்க்கின்றனர். இதில் இருந்து இவர்களின் தேச பக்தி பணமானது கையில் கிடைக்கும் வரையில் தான்.

இந்திய நாடாளுமன்ற அரசியல் சதுரங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற, போலி ஜனநாயக அரசியலில் இருந்து கதிரையை மாத்திரம் குறியாகக் கொண்டு இயங்குகின்ற சக்திகள், தமது சுயநலப் போக்கை பாதுகாத்துக் கொள்வதற்காக தனிப்பட்ட காரியத்தை அரசியலாக மாற்றி லாபம் அடைகின்றனர். பதவியை பாதுகார்த்துக் கொள்ளும் நோக்கத்திற்காக எந்த வகையான இழி செயல்களையும் செய்யத் தயாராக பதவி வெறி பிடித்த சக்திகள் செயற்படும். ஆதிக்க சக்திகள் அம்பலப்பட்டுப் போய்விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. இந்திய, இலங்கை அரசியலில் அனுதாபத்தின் மூலமாக பதவிகளைப் பிடிப்பது இலகுவான விடயமே. இந்த நிலையைப் பயன்படுத்தி ஆதிக்க சக்திகள் தமது இருப்பை பாதுகாத்துக் கொள்கின்றன.

இந்தச் சக்திகள் சர்வதேசத்தில் நடக்கின்ற செயற்பாடுகள் தமக்கு எதிராக என்றோ திரும்பும் என்பதையும், ஏகாதிபத்தியத்தின் சுரண்டலை அறிந்து கொள்ள விருப்பமில்லாது இருக்கின்ற அரசியல் சக்திகளின் அடிமட்ட உறுப்பினர்கள், தமது நாடு தமது தலைமைகளால் விலைக்கு விற்கப்படுவதை அறிந்து அதனை எதிர்த்து போராட முடியாது இருக்கின்றனர். இதனால் எதிரியின் வலையில் தொடர்ந்து விழுந்து தமது நாட்டைப் பாதுகாக்க முடியாத கையால் ஆகாத சக்திகளாக மாறிவிடுகின்றனர். இந்த சக்திகளின் உதவியை நாடியே எமது இயக்கங்கள் செயற்பட்டன.

சர்வதேசப் போக்கை புரிந்து கொள்வதற்கும், உள்நாட்டு அயல்நாட்டு நிலவரத்தை புரிந்து கொள்வதற்கும். போராடும் சக்திகளுக்கு உதவி செய்வதற்கு கருத்துத் தெளிவு அவசியமானதாகும். சர்வதேச அரங்கிலும் பாட்டாளி வர்க்க அமைப்புக்களை மையமாக வைத்தே ஆதரவு அமைப்புக்களை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். பாட்டாளி வர்க்க அமைப்புக்களை அணுகுவதும், அமைப்பு உருவாக்கிக் கொள்வதும் அவ்வளவு வெற்றி பெற்றதாக இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரை இல்லை.

சர்வதேசத்தில் இவ்வாறான அமைப்புகளுடன் தொடர்பு கொள்கின்ற போது ஒரு தொடர்ச்சியான வெகுசன அமைப்பை உருவாக்கலும், அந்தந்த நாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சனைக்கான போராட்டங்களில் ஈடுபட்டு ஒத்துழைப்பு கொடுத்தல் மூலமே வெகுசனங்கள் மத்தியில் ஒன்றிணைய முடியும். ஒன்று சேர்ந்து போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்க முடியும். இன்று ஏகாதிபத்தியவாதிகள் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுப்பதாக கூறிக் கொள்கின்றன. போராட்டங்கள் மீதான தார்மீகக் கடமை பற்றியும் உரைக்கின்றனர்.

ஏகாதிபத்தியங்கள் சீனா, பர்மா, கொசவோ, ஈரான், ஈராக், கிழக்கு தீமோர் போன்ற தேசங்களில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுக்கின்றனர். இவைகள் எல்லாம் ஏகாதிபத்தியப் பொருளாதார அரசியலைக் கொண்டதும், பிராந்திய தேவை கருதியதுமான போராட்ட ஆதரவுகள் அடங்கியிருக்கின்றது. கடந்த காலத்தில் போராட்டங்கள் ஆதரிக்கப்படுவது, எதிர்க்கப்படுவது, சர்வதேச அரசியல் சூழ்நிலை நிர்ணயித்துக் கொண்டது. போராட்டச் சக்திகள் பல்வேறு மாறுபட்ட நிலைப்பாடுகள் கொண்டு செயற்பட்டன.

சர்வதேச மட்டத்தில் எடுத்துக் கொண்டால் கொலனித்துவ வரலாற்றில் ஏற்பட்ட ஒடுக்கு முறையினால் ஏற்பட்ட வடுவானது தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கின்றது. ஒடுக்கு முறையினால் ஏற்பட்ட வடுவினால் ஒடுக்கும் தேசங்கள் மக்களுக்கு கொடுக்கின்ற ஆதரவு சர்வதேசத்தில் எழுகின்றது. இந்த சர்வதேசிய வாதம் சோவியத் (1917) புரட்சியின் பின்னர் சர்வதேசத்திற்கும் பொதுவாகியது எனலாம். கறுப்பு இனத்தவருக்காக பாலஸ்தீன மக்களுக்காக பல்வேறு பக்கத்தில் இருந்து ஆதரவு தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. தென்னாபிரிக்காவிற்கு ஆதரவாக விளையாட்டு வீரர்கள், பாட்டுக்காரர், சாதாரணமாக வறியநாட்டில் உள்ளவர்கள் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். குறிப்பாக கறுப்பு இனத்தவர் மற்றைய நாட்டவர் மீதும் கொடுக்கின்ற ஆதரவு இனத்துவ ஒற்றுமையைக் காட்டுவதாகக் கொண்டு இனவாதத்தினுள் ஒன்றுபடுத்த முடியாது. இது சுயஅனுபவத்தினால் பெற்ற ஆதரவு உணர்வாகவே காட்சியளிக்கின்றது.

வியட்னாம் போரின் போது அன்றைய எழுச்சி யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வந்தது. ஆனால் அன்றைய காலத்தைப் போன்ற எழுச்சிக் காலம் இதுவல்ல. ஆனாலும் ஆதரவினை காட்டுகின்ற மக்களின் பங்கு அதிகமாக இல்லை. இன்றைய காலம் மௌனப் பெரும்பான்மை அதிகமாகக் கொண்டதும், நடக்கிறது நடக்கட்டும் என்கின்ற போக்கை கொண்ட மக்களைக் கொண்டதுமாக இருக்கின்ற நிலையில் தொடர்ந்தும் ஒடுக்கப்படும் மக்களுக்கான சுய அமைப்புக்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கின்றன.

## 2.2.9 போராட்ட அமைப்புக்கள்

போராட்ட அமைப்புக்கள் பல உருவாகின அவற்றில் பல அழிந்தன. அழிக்கப்பட்டன. இவற்றின் வரலாற்றை ஆராய்வது நோக்கமல்ல. அழிவிற்கு என்ன காரணம் என்பதை வரலாற்றுப் போக்கினை புரிந்து கொள்ளும் போது காரணத்தை விளங்கிக் கொள்ள முடியும். இயக்கங்கள் நோக்கங்களை கொண்டு உருவாக்கப்பட்டன. ஆனால் அவைகள் பாதை மாற்றப்பட்டன. ஆனாலும் கொண்ட கொள்கை நேர்மையாக இருப்பின் கொண்ட கொள்கைக்காகவாவது தொடர்ந்தும் செயற்பட்டிருப்பர் இந்த நிலையை மாத்திரம் இங்கு பார்ப்பது பொருத்தமாகும்.

கடந்த காலத்தில்

1. முழுஇலங்கைக்குமான புரட்சியை வலியுறுத்தியவர்கள்,

2. ஈழவிடுதலையுடன் கூடிய இலங்கைக்கான வர்க்கப் போராட்டம்,

3. தனித்தமிழீழம் என்ற முக்கிய அடிப்படைப் பிரிவுகளில் இருந்து செயற்பட்டுக் கொண்டனர். இவர்களில் ஐக்கிய இலங்கையை வலியுறுத்திய தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை என்ற அமைப்பு அதிகமாக வளர்ச்சியடையாது போயிற்று.

தனித்தமிழீழ கருத்தைக் கொண்ட இயக்கங்கள் வெகுவாக வளர்ச்சியை அடைந்தன. இவைகள் ஒன்றை ஒன்று மிஞ்சும் அளவிற்கு வளர்ச்சியடைந்தன. இந்த இயக்கங்களுக்கிடையேயான பொதுவான அம்சம் என்னவெனில் சொந்த மக்களையும், சொந்த மண்ணில் தளத்தை அமைத்துக் கொள்ளாது. இந்திய மண்ணில் பின்தளம் அமைந்துக் கொண்டனர். பின்தளத்தை முழுமையாக நம்பியிருந்த போக்கானது. பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட இக்கட்டனான நிலையில் தளத்தை அமைத்துக்கொள்ளமுடியாது போயிற்று. சிறிலங்கா அரசின் உதவியை நாடிச் செல்ல வேண்டியிருந்தது. விடுதலைக்காக போராடுகின்ற அமைப்புக்கள் எதிர் அரசுகளை பாவிக்கின்ற போக்கிற்கு சந்தர்ப்பம் கொடுத்தது எமது இயக்கங்களிடம் இருந்து கொண்டு சொந்த மக்களை நம்பி இயக்கத்தை வளர்க்காதது தவறாகும்.

இன்றும் தமிழீழப் போராட்டம் என்ற கருத்தைக் கொண்டவர்கள் முதலாளித்துவ சக்திகளையும், சொந்த வர்க்கத்தையும், சொந்த இனத்தையும் ராணுவத்துடன் சேர்ந்து ஒடுக்கும் இயந்திரங்களுடன் சேர்ந்து புலிகளை அழிப்பது என்ற பெயரில் மக்களை துன்பத்தில் ஆழ்த்துவது, கொண்ட சொந்தக் கருத்தில் உண்மையாகவே விசுவாசம் அற்ற நிலையையே இங்கு காணமுடிகின்றது. சொந்தக் கொள்கைக்கு இவர்கள் விசுவாசமாக இருக்கின்றார்களா என சுயவிமர்சனம் செய்து பார்த்தல் அவசியமாகின்றது. தொடர்ந்தும் தமது கொள்கைக்காக போராடுவதாக இலங்கை அரசுகளுடன் ஒத்துழைத்துக் கொள்ளும் அமைப்புக்கள் கூறிக் கொள்கின்றன. ஆனால் இவர்கள் எதிரியுடன் கூடச் சேர்ந்து புலிகளை அழிக்க நினைப்பது ஏகாதிபத்திய அரசியல் நிலையை புரிந்து கொள்ளாததைத் தான் காட்டுகின்றது.

இன்று போராட்டங்கள் நடைபெறுகின்ற நாடுகளில் போராட்ட இயக்கங்களை அழிக்கின்ற போக்கைத் தான் காண முடிகின்றது. இதனை போராட்ட இயக்கங்கள் அறியாத ஒன்றல்ல. ஆனாலும் மக்களின் உரிமைக்காக போராட்டமும், எதிரியுடன் ஒத்துழைத்தலும் ஒரே செயலாக முடியாது. எல்லாவிற்கும் புலிகள் காரணம், எல்லாவற்றிற்கும் புலிகள் இடைஞ்சலாக இருக்கின்றார்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. வரலாற்றுக் கசப்புணர்வு இருக்கத் தான் செய்கின்றது. ஆனாலும் புலிகளின் தவறுகள் எமது சமூக அமைப்பின் வெளிப்பாடுகளின் விழைவுகளேயாகும். இன்றைய நிலையில் புலிகளின் அழிவை ஆதரிக்க முடியாது. புலிகளை அழித்துக் கொள்வதினால் எமது மக்களுக்கு முழுவிமோசம் கிடைக்கும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. சர்வதேச நிலையில் இருந்து பார்க்கும் போது ஒரு உறுதிமிக்க போராட்ட அமைப்பை தளத்தைக் கொண்டுள்ள ஒரு இயக்கத்தை அழிக்க நினைப்பது. தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

எமது போராட்டம் அழிக்கப்படுமாக இருந்தால் ஏகாதிபத்தியங்களும், உள்ளூர் ஆட்சியாளர்களும் தாம் நினைத்த தீர்வினை திணித்துக் கொள்ள முடியும். இதன் பொருள் புலிகள் தான் மக்களுக்கு உள்ள ஒரே தலைமை என்ற கருத்தில் இது அடங்காது. உலக அரங்கில் போராட்டங்கள் நடத்துவது தேவையற்றது என்ற நிலையை ஏகாதிபத்தியங்கள் தோற்றுவித்துள்ளது. அப்படிப் போராட்டம் நடத்தப்படுமானால், ஆயுதப் போராட்டங்கள் நடத்துவதைவிட அகிம்சை, ''சனநாயக'' வடிவத்தில் போராட்டங்கள் நடத்தும்படி கூறுகின்றது. எப்படியாவது போராட்டங்களையும், போராட்ட இயக்கங்களையும் அழித்தலும், மக்களிடம் இருந்து புரட்சியின் தேவையை மழுங்கடிக்கும் தந்திரோபாயங்கள் தொடர்கின்றன.

போராட்ட இயக்கங்களை சனநாயகப் பாதைக்கு திரும்பல் என்ற போர்வையில் ஆயுதங்களைப் பறிக்கின்றது. தேர்தலில் நிற்க வைத்து மக்கள் பக்குவம் அடையாத நிலையைப் பயன்படுத்தியும், ஊழல்கள் செய்தும் அவர்களை தேர்தலில் இருந்து தோற்கடிக்கின்றது. சந்தர்ப்பவாதத் தலைமைகள் தேர்தல் பாதையை தெரிவு செய்து அதிலேயே குளிக்கின்றனர். ஏகாதிபத்தியங்கள் தமது கூட்டாளிகளை பின் கதவால் அவர்களை அகற்றிவிட்டு நாடாளுமன்ற சனநாயகத் தேர்தல் மூலமாக ஆட்சியாளர்களை உருவாக்கிக் கொள்கின்றது. இதுவே மார்க்கோஸ், பினோச்சே இன்றும் பல சர்வாதிகாரிகள் மட்டிலும் இவ்வாறு நடைபெற்றது. பாட்டாளி வர்க்கம் தனது அதிகாரத்தைக் கைப்பற்றி தனது ஆட்சியை நிலைநிறுத்தும் வரையிலும் இந்த சந்தர்ப்பவாத நிலை தொடரவே செய்யும். இந்தப் போக்கினை குறிப்பாக தென், லத்தீன் அமெரிக்க தேசங்களில் காணமுடிகின்றது. தற்பொழுது ஆபிரிக்கா, கிழக்குத் தீமோர் ஆகிய இடங்களிலும் இந்த போக்கை நடைமுறைப்படுத்த முனைகின்றது.

சித்தாந்தங்கள் எல்லாம் காலாவதியாகி விட்டது என்ற போக்கினை திட்டமிட்டு பிரச்சாரம் செய்கின்றது. இவை தவறு என்பதை போராட்ட இயக்கங்கள் தொடர்ந்தும் மக்களிடத்தில் வலியுறுத்தி போராட்டத்தை

தொடர்ந்து செல்ல, ஏகாதிபத்திய தொலைத் தொடர்புச் சாதனங்களால் ஏற்படும் சவால்களை சமாளித்து ஆகவேண்டியுள்ளது. புரட்சிவாதிகள் கருத்தைச் சொல்லும் வேகத்தை விட ஏகாதிபத்திய அடிவருடிச் சக்திகள் செய்யும் பிரச்சாரம் மக்களிடத்தில் விரைவாக சென்று விடுகின்றது. மக்களிடத்தில், போராட்டச் சக்திகளிடையே உலகக் கண்ணோட்டத்தை மாற்றியமைத்து போராட்டத்தை தொடர்ந்து செல்ல எப்பவும் சந்தர்ப்பம் இருந்து கொண்டே இருக்க வேண்டும். எழுச்சிக் காலகட்டம் என்பது புரட்சிக்கு அவசியமானதாகும். இதன் பொருட்டுத் தான் போராடும் சக்திகள், மாற்றுத் தலைமை இல்லாத நிலையில் அழிக்கப்படுதல் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தக் கருத்தினை ஒரு பாட்டாளி வர்க்க புரட்சிகர சக்தியிடம் தான் கூறமுடியும். இதனை முதலாளித்துவ, சந்தர்ப்பவாத, குறுங்குழுவாத சக்திகளிடம் கூறமுடியாது.

இயக்கங்கள் தமது போராட்டப் பாதையை மறுபரிசீலனை செய்தல் வேண்டும். கடந்த காலத்தில் கொண்ட அணுகுமுறைகள் மாற்றப்பட வேண்டும். எடுத்தற்கு எல்லாம் ஆயுதங்களால் பிரச்சினை தீர்க்கப்படும் முறை மாற்றப்பட வேண்டும். எதிரியுடன் ஒத்துழைப்பது நிறுத்தப்பட வேண்டும். புலிகளை எதிர்ப்பதற்காக இந்தியப் படையின் செயலை ஆதரித்ததுடன், கொடிய செயல்களை மூடி மறைத்தனர். இவற்றை தொடர்ந்தும் போராட்டச் சக்திகள் தொடரக் கூடாது. இது புலியாக இருக்கலாம் அல்லது மற்றைய இயக்கங்களாக இருக்கலாம் அடுத்த கட்டத்திற்கு செல்லக் கூடிய நிலையிலான அரசியல் கோட்பாட்டை வகுப்பது அவசியமாகின்றது.

வேல்கம்பும் வெட்டரிவாளுடனும் பிரச்சினைகளை தீர்த்துப் பழகிய எம்மவர்களால், தொடர்ந்தும் அதேபாணியில் பிரச்சினை தீர்க்க முனைகின்ற போக்கே தான் தொடர்கின்றன. முன்னர் தமது தோழர்களை கொலை செய்தவர்கள், உறவினரைக் கொன்றவர்களை பழிவாங்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படுவதும், பழிவாங்கப்படுவதன் மூலம் பொது எதிரிக்கு உதவிபுரிகின்ற நிலை உருவாகியுள்ளது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். ஒடுக்கும் வர்க்கத்திற்கு எதிராக எல்லோரும் போராட்டத்தில் அணிதிரள முனையவேண்டும். துரோகம் இழைக்கும் தலைமைகளில் இருந்து உண்மையான சக்திகளை விடுதலை செய்தல் வேண்டும். எல்லாப் போராளிகளின் தியாகங்களும் மதிக்கப்பட வேண்டுமாயின், அனைவரும் உழைக்கும் வர்க்கத்தின் சேவகர்களாக இருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்திற்க்கு சேவகம் செய்பவர்களை அடையாளங் கண்டு அவர்களை பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காக நகர்த்த முனைய வேண்டும்.

அடுத்த கட்டத்திற்கு நகர்த்த எத்தனிக்கின்ற போது பல தடைகள் இருக்கத் தான் செய்கின்றன. ஆனால் அந்த நிலையில் கடந்த காலத்தின் கசப்புணர்வுகள் கணக்கில் எடுக்கத்தான் வேண்டும். ஆனால் அதேதான் முடிவாகவும் வர்க்க சக்திகள் காலத்திற்கு காலம் தமது வர்க்க நிலைகருதி பழைய பிடிகளை தொடர்ந்தும் வைத்திருப்பதில்லை என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் இந்தச் சக்திகள் காலத்திற்கு ஏற்றவாறான நிலையைக்

கணக்கில் கொண்டு செயற்படும் இச்சக்திகளை முற்று முழுதாக நம்ப முடியாது. அதே வேளை இந்தச் சக்திகள் தருணம் பார்த்து செயற்படும் என்பதையும், காலத்தில் சந்தர்ப்பமாக நழுவி விடுவர் என்பதையும் கவனத்தில் கொண்டு, புரட்சிகர சக்திகள் இந்த நிலையை நுணுக்கமாக கவனத்தில் கொண்டு அவர்களை புரட்சிக்கு துணையாக நகர்த்துவதுடன், அவர்களை இவ்வாறான நடவடிக்கைகள் மூலமாகவே மக்கள் மத்தியில் இருந்து அம்பலப்படுத்த முடியும்.

★

# 2.3. இனவாதத்தை விதைத்தல்

இனவாதத்தை விதைப்பதற்கு அடிப்படையாக வெளிப்படுவது பழம்பெருமைகள். இந்தப் பழம் பெருமைகள் தமது பரம்பரையினரைப் பற்றிய வரலாற்றை எழுத்து உருவிலோ அல்லது வாய்மொழி மூலமாவோ சமுதாயத்தில் தொடர்ந்தும் பரம்பரை பரம்பரை வழியாக தொடர்கின்றது. இந்தப் பரம்பரை பற்றிய பெருமைகள் புல்லரிக்க வைப்பதும் அதில் உணர்ச்சி வயப்பட்ட, பரவசப்பட்ட மக்களைக் கொண்டு தாம் நினைத்த காரியத்தை செய்து முடிக்க முயற்சிக்கப்படுகின்றது. இந்நிலையானது யார் முன்னுக்கு (பழம் பெருமையை) கொண்டு வந்தாலும் அது அந்தக் காலத்துக்குரியதாக, அந்த வரலாற்று தேவைக்கு உரியதாக மாத்திரமே கொள்ளப்படவேண்டும். இது மூலவர்களின் தேசிய உணர்வாக இருக்கட்டும், ஸ்ராலின் இரண்டாம் உலக யுத்தத்தின் போது மேற்கொண்டதாக முதலாளித்துவ வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக் காட்டப்படும் தேசிய உணர்ச்சி பற்றிய நிலைப்பாடாக இருக்கட்டும் இந்த வரையறுக்கப்பட்ட கடமையை மாத்திரமே கொண்டுள்ளது. அத்துடன் இந்நிலைக்குட்பட்டே ஒரு நிலைப்பாட்டை அறியவும், முடிவுக்கு வரவும் முடியும்.

இன்று அரசியல் நீரோட்டத்தில் பயன்படுத்தப்படும் பழம் பெருமைகள் இலகுவாக பரந்த மக்களை சென்றடைய இலகுவாக இருப்பதற்குக் காரணம் சமூகமே பூர்சுவா சிந்தனையோட்டத்தில் இருந்து வெளிப்படாமல் பழைய சிந்தனையோட்டத்தில் ஊறியிருப்பதில் வெளிப் படுத்துகின்றது.. அத்துடன் தேசிய வர்க்கம் இந்த தேசிய உணர்வைப் பயன்படுத்தி அதில் குளிர்காய்கின்றது.

ஒரு பிரச்சினையைப் பற்றி ஆராய வேண்டுமானால் சிறு சிறு சம்பவங்களையும் தற்போதைய நிலையை கணக்கில் எடுத்தால் மட்டும் போதாது. மாறாக வரலாற்று வளர்ச்சிப் போக்கினை உன்னிப்பாக கவனித்து ஆய்வு செய்வதன் மூலமே வரலாற்றில் எவ்வாறான செயற்பாடுகள், இன்றைய நிலைக்கு காரணமாக

இருந்திருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும். அதை விடுத்து வரலாற்றின் இன்றைய நிகழ்விற்கு காரணம் முன்பு நடைபெற்ற நிகழ்வுகளே என்பதைக் கவனிக்காமல், பிரச்சினைகளை ஆராய்வதும் பிரச்சினைக்கு தீர்வு கொடுக்க முயல்வதுமாக இருக்கின்றனர். இன்நிலையானது எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. மாறாக வெறும் கதம்ப நிலையையே தோற்றுவிக்கும். இவர்கள் தமிழ்த் தேசிய மையவாதத்திற்கு பலியாகி விடுகின்றனர். இன்னும் சொல்லப்போனால் தம் உணர்ச்சிக்கு பலியாகிய இவர்கள் தம் முன்னோர்களின் சொற்பிரகாரம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்தகுடிக் கர்வமும். அக்காலத்திலேயே நாகரீகத்தின் உச்சத்தில் இருந்தவர்கள் என்ற எண்ணப்பாடு இவர்களை ஆட்கொண்டுள்ளது. சிந்துவெளி நாகரீகத்தின் சொந்தக்காரர்கள் என்ற கர்வம் இவர்களிடம் இருக்கலாம். ஆனால் இவர்களோ எம்முன்னோர்கள் அநாகரீக நிலையில் இருந்து நாகரீக நிலைக்கு வந்தடைந்தனர் என்பதை மறைமுகமாக மறுக்கின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும் மக்களின் வளர்ச்சிப் போக்கிற்கு உட்பட்டதே வரலாறுகள். இந்த வரலாறுகள் திரிபுறுகின்றது. திரிபுறுகின்ற வரலாற்றை புற வயமான நிலையில் இருந்து வரலாற்றை எழுதிக் கொள்வதன் மூலம் ஓர் நேர்மையான நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும்.

## 2.3.1 வரலாறுகள் திரியும் போக்கு

வரலாறு எவ்வகையாக எழுதப்படுகின்றது என்பது பற்றி சாதியம், போலியுணர்வு பற்றிய பகுதிகளில் பார்க்கப்பட்டது. அதில் பார்க்கப்படாத சிலபோக்கை இங்கே பார்க்கப்படுகின்றது. இனத்தின் பெருமையை முன்னிறுத்தி அவற்றில் கூடிக் குறைத்து எழுதிய வரலாற்றால் இலங்கையின் வரலாறு சம்பந்தமான மோதல்கள் இடம் பெற்றுத் கொண்டு இருக்கின்றன. இலங்கை வரலாற்றில் இனங்கள், உயர்சாதிகள், மன்னர்கள், மதங்கள் போன்றவற்றை முன்வைத்து எழுதப்பட்ட போக்கினால் இடையறாத மோதல்கள் இடம் பெற்று வந்துள்ளன. வரலாறு பற்றிய போக்கில் ஒரு புறநிலை சார்ந்த போக்கை ஏற்படுத்துதல் வேண்டும். வரலாறு எழுதுபவர்கள், வரலாறுகள் எழுதிய மட்டில் பல குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றை மெய்யியல் ரீதியில் ஆய்ந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் வரலாறுகள் எழுதப்பட வேண்டும். இங்கு இலங்கையின் முழு வரலாற்றை எழுதுவது நோக்கமல்ல, தேசிய இனப் போராட்டங்கள் இடம் பெறும் நாடுகளில் வரலாற்றுச் சின்னங்கள், வரலாற்று நாயகர்கள், தடயங்கள் முதன்மை பெறுவதினால் புரிதலைக் கொள்ளக் கூடிய அணுகுமுறை அவசியமாகின்றது.

வரலாறுகள் எழுதும் போது; மேற்கத்தைய வளர்ச்சி தான் மைய இடத்தை வகிக்கின்றது. இந்த வரலாறுகள் தவிர்ந்து சொந்த இனத்தின் வரலாற்றை எழுதும் போக்கு இடம் பெறவேண்டும். ஐரோப்பிய மையவாதப் போக்கினில் அமைந்த வரலாறு எழுதும் போக்கு கொலனித்துவத்துடன் ஆரம்பமாகின்றது. "மேற்கு ஐரோப்பிய அறிஞர்கள் எழுதியுள்ள பல ஆராய்ச்சி நூல்களுக்கு இயல்பான தன்மை ஐரோப்பிய மத்தியத்துவம் ஆகும். இந்திய வரலாற்றின் பல்வகை நிகழ்ச்சி

விவரங்களை ஐரோப்பியப் பண்பாட்டின் நிலைகளிலிருந்து, ஐரோப்பாவுக்கு அதிகம் பழக்கமான தொன்மை கிரேக்க – ரோம நாகரீகத்தின் நிலைகளிலிருந்து இவை மதிப்பிடப்படுகின்றது.'' (பக்.6 இந்தியாவின் வரலாறு, அன்தோனவா, போன்காரத் – லேவின்) இந்தப் போக்கை உடைத்துக் கொண்டு தமிழர்களின் வரலாற்றை எழுதும் போக்கு வளர்ந்து தான் இருக்கின்றன. வரலாற்றில் ஆபிரிக்க, ஆசியாவை முன்வைத்து மையமாக கொண்ட வரலாறு எழுதும் போக்கு அதிகமாக வளர வில்லை எனலாம்.

ஆபிரிக்காவை எடுத்துக் கொண்டாலும் ஐரோப்பிய மையவாதம் மேல்லோங்கித் தான் இருக்கின்றன. திராவிடர்கள் கலாச்சார வளர்ச்சி, ஆபிரிக்காவின் வளர்ச்சியை ஒப்பீட்டு எழுதும் போக்கு தமிழ் நாட்டில் வளர்ந்து கொண்டு வருகின்றது. க.ப. அறவாணன் – தமிழ்ச் சமுதாய வரலாறு என்ற புத்தகத்தினை (முழுக் கருத்துடனும் உடன்பாடு கொள்வது என்பதல்ல) உதாரணமாக கொள்ளலாம். மனித ஆரம்பத்தின் கலாச்சாரத்தின் பிற்பீடமே ஆபிரிக்கா, ஆசியா ஆகியவை என்ற இரு கருத்துக்கள் இருக்கின்றன. இருப்பினும் இந்த இரண்டு கண்டங்களின் வரலாறே ஆராய்ச்சி மையமாக அமைதல் வேண்டும். ஒடுக்கப்படும் கறுப்பர்கள் என்ற வகையில் ஐரோப்பிய மையவாதத்தில் இருந்து விடுதலை பெறும் பொருட்டு இந்த முயற்சிகள் முக்கியமானதாகும். மேற்கத்தைய கலாச்சார வளர்ச்சியின் மோகத்தில் இருக்கின்ற மக்களுக்கு, சொந்த இனத்தின் கலாச்சாரத்திலும், அதன் வளர்ச்சியிலும் தன்நம்பிக்கை கொள்ளவைப்பது முக்கியமானதாகும். இவ்வாறான முனைப்புகள் அவசியமாகின்றன.

நவீன கால வரலாற்று ஆசிரியர்கள் பல அணுகுமுறைகளையும் உபயோகிக்கின்றனர். இந்தவித அணுமுறைப் போக்கில் வர்க்க நலன் எல்லா வரலாற்று ஆசிரியர்கள் மட்டிலும் இருப்பது போல் இந்த அணுகுமுறையிலும் வர்க்க நிலை சார்பு இருக்கின்றன. புரட்சியாளர்கள், முதலாளித்துவ போக்காளர், நடுநிலை என்ற ரீதியில் முதலாளித்துவ கருத்தை முன்வைப்பவர்கள். ஆனால் இவர்கள் தம்மை நடுநிலையாளர் எனக் கூறிக் கொள்வர். இவர்கள் தமக்குள் ஒரு கருத்தைக் கொண்டிருப்பர். இந்தப் பகுதியினர் நடுநிலையான கருத்தை முன்வைப்பதாகவும் இடைவிடாது நிருபிக்க முயற்சி எடுப்பர். இந்தப் பகுதியினர் சமூக மயப்படுத்தல் மூலமாக பொதுவுடமைக் கருத்துக்கு எதிராக கருத்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இன்னொரு பகுதியினர் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும் பொருட்டு பல்வேறு வகைப்பட்ட அணுகு முறைகளை பாவிப்பர். ஆனால் அணுகுமுறையில் முழுமை பெறாத நிலைகாரணமாக பிரச்சினைகளை விளக்கம் கொடுக்கும் போது குறை இருந்து கொண்டேதான் இருக்கும்.

வரலாறு பற்றி மார்க்ஸ் பின்வருமாறு கூறுகின்றார். ''வரலாறு தனது சொந்தச் சிறப்பு நோக்கங்களைப் பெறுகின்றது மற்றும் ''இதர நபர்களுடன் நிகரானதாக நிற்கும் ஒரு நபராகிறது.'' (அதாவது, ''சுய உணர்வு'', ''விமர்சனம்'', ''அலாதித்தன்மை'', இத்தியாதி). அதேபோதில் முந்திய வரலாற்றில் ''கதி'', ''குறிக்கோள்'', ''கருமுளை'' அல்லது ''கருத்து'' எனும் சொற்களால் சுட்டி

வழங்கப்படுவது பிந்திய வரலாற்றில் இருந்து. முந்திய வரலாறு பிந்திய வரலாற்றின் மீது செலுத்தும் தீவிர செல்வாக்கில் இருந்து, உருவான ஒரு கருத்தாக்கமே தவிர வேறு எதுவும் அல்ல. (பக்.57 மார்க்ஸ் தேர்வு நூல்கள் I) வரலாற்றினை எவ்வாறு உருவாகின்றது என சரியாக புரிந்து கொள்ளும் இடத்திலேயே வரலாற்றின் போலித் தன்மைகளை உடைத்தெறிந்து கொள்ள முடியும்.

வரலாறுகள் இனத்துவத்தின் பெருமைகளை முன்னிறுத்தி எழுதுகின்ற போக்கை காணமுடிகின்றது. இனத்துவ முக்கியத்துவத்தை முன்வைப்பவர்கள் அனைவரும், மேல் குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டவர்களாகத் தான் இருக்கின்றனர். எமது சமூகத் தன்மையை எடுத்துக் கொண்டால் கொஞ்சம் மற்றவர்களை விட கூடத் தெரிந்த போது மற்றவர்களுக்கு வாத்தியாராய் மாறுகின்ற போக்கை காணமுடிகின்றது. வாத்தியாராய் மாறுகின்ற தன்மை சமூகத்தின் பல இடங்களில் இதனை அவதானித்துக் கொள்ள முடியும். இதற்கு இடதுசாரி முகாம் கூட விதிவிலக்காக அமைந்து விடுவதில்லை. வரலாறு எழுதுபவர்கள் தமது சுயவிருப்பம் மேற்கொண்டும் எழுதிவிடுகின்றனர். வரலாற்றின் உள்ளடகக்தில் கருத்தியலில் அமைந்து கொள்கின்ற நிலையும், புறநிலையை நிராகரிக்கின்ற போக்குகளும் காணக் கிடக்கின்றன, கருத்தியல் பிடிப்பு இதனால் முன்நிலை பெறுகின்றது. அகநிலை புறக்கணிக்கப்பட்டு புறிநிலை முதன்மை பெறவேண்டிய வகையிலேயே வரலாறுகள் எழுதப்பட வேண்டும். மார்க்சியம் புறநிலையை முன்நிறுத்துகின்றது. ''வரலாறு எப்பொழுதும் புறச்சார்பான தரத்துக்கு ஏற்பக் கட்டாயம் எழுதப்பட வேண்டும்.'' (பக் 65 மார்க்ஸ் தேர்வு நூல்கள் I) வரலாறுகள் மண்ணுலகத்தை பின்னிறுத்தி விண்ணுலகத்தை முன்நிறுத்தியே இருக்கின்றன. வரலாறுகள் எழுதும் போது அகத்திற்கும், புறத்திற்குமான மாற்று நிலை ஒரு தீர்க்கமான பிரச்சினையாகின்றது.

மார்க்சியம் பழைய வரலாற்றுத் தன்மையில் இருந்து மாறுதல் அடைகின்றது. ''விண்ணில் இருந்து மண்ணுக்கு இறங்கும் ஜேர்மன் தத்துவஞானத்துக்கு நேர் மாறுபாடான முறையில் இங்கு நாம் மண்ணில் இருந்து விண்ணுக்கு ஏறுகின்றோம்.'' (பக். 30 மார்க்ஸ் தேர்வு நூல்கள் I) மார்க்சியம் மனிதர்களை முன்னிறுத்துகின்றது. அவர்களுடைய வெற்றிகள் தோல்விகள் சாதனைகள் எல்லாவற்றிற்கும் முதன்மை கொடுக்கின்றது. அவர்களிடம் இருந்து தோன்றும் பொய்யான கருத்துகள் கூட மனிதர்களின் பொருளாதார நோக்கில் உருவாக்கப்பட்ட கருத்துப் போக்காகும். இவற்றை அனுபவவாதத்தின் மூலமாக சரிபார்க்க முடியும் என்றும் பொருள் வகை மெய்கோள்களுக்கு கட்டுப்பட்டது என மார்க்ஸ் மேலும் கூறுகின்றார்.

## 2.3.2 கதாநாயகர் பற்றிய மாயை

தமிழ் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய இரு பகுதியும் தம் இனத்தை பிரதிநிதித்துவம் செய்யும் மன்னர் பரம்பரையைக் கொண்டு தமது

பெருமைபாராட்ட பயன்படுத்திக் கொண்டனர். மன்னர்கள் அந்த இனத்தின் சின்னமாக பயன்படுத்தப்படுகின்றது. இன்று பல போராளிகள் தற்கொலைப் படையில் சேர்ந்து தமது உயிரைக் கொடுக்கின்றனர். இறந்த போராளிகளுக்கு என விசேட துயில் கொள்ளும் நிலைகள் உருவாக்கப்படுகின்றன. பழைய குலங்களின் சின்னங்கள் இன்றைய நாட்டுக் கொடியில் சின்னங்களாக பொறிக்கப்படுகின்றன. பழைய குலங்களின் சின்னமாகிய மீன், சிங்கம், புலி போன்றவை, இலங்கையைப் பொறுத்தவரை முக்கிய சின்னங்களாக அமைந்திருக்கின்றது. முதலில் மன்னர்கள் பற்றிப் பார்ப்போம்.

வளர்ச்சிப் போக்கில் வர்க்க பேதங்கள் ஏற்பட்டு ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை மிருகத் தனமாக ஒடுக்கும், ஒடுக்குகின்றது என்பதையும் அதேவேளை மனித இனம் என்பது உயிரியல் ரீதியாக மாறுபடுகின்றது. இனங்கள், மொழி சமூக மயப்படுத்தலின் ஊடாகவே என்பதையும் (socialization) பார்க்க மறுக்கின்றனர். அதாவது முன்பு குறிப்பிட்டது போல் வர்க்கமாக பிரிக்கப்பட்ட மனித சமூகமானது ஒன்றோடு ஒன்று மோதிய வரலாற்றை நம் வரலாற்று எடுகளில் காண முடியும். எல்லாளனும் துட்டகை முனுவும், போரிட்டு மாண்டார்கள். இதனை இனவெறியாக மாற்றிய தமிழ், சிங்கள அரசியல்வாதிகள், புத்த மதபீடத்தினர் போல் இவற்றைப் பார்க்க முடியாது.

ஒரு அரசன் திறை செலுத்தாவிடின் –யுத்தத்தின் போது தனக்கு அல்லது ஒரு அரசன் மற்றைய அரசனுக்கு ஆதரவு அழிக்காத விடத்து (Alliance) பகை மூள்வதும், பெண்களை அடையும் நோக்குடன் யுத்தங்கள் நடைபெற்றிருக் கின்றன. எவ்விதத்திலும் தேசியம் என்ற வட்டத்திற்குள் அடங்கவில்லை இப்போர்களை குலச் சமுதாயத்தின் போது நிலவிய சமூக அமைப்பின் எச்சங்களாக அல்லது பரிமானமாகக் கருத வேண்டும். இன்னும் கூறப்போனால் குலங்களில் இருந்து வந்த பரம்பரை பற்றிய சிந்தனையின்பால் அமைந்த மோதல்களே. ''வெளியாருடன் ஏற்பட்ட சச்சரவுகள் போரின் மூலம் தீர்க்கப்பட்டன போரில் ஒரு இனக்குழு அடியோடு அழிந்து போகுமே தவிர அடிமைப்படாது. குலத்தில் ஆள்பவர், ஆளப்படுபவர் என்பது இல்லாதது தான் குல அமைப்பின் பெருமையும் அதே சமயத்தில் அதன் வரம்புக்கு உட்பட்ட தன்மையும் ஆகும். குல அமைப்பில் உள்விவகாரங்களில் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் இன்னும் வேறுபாடு ஏற்படவில்லை.'' (பக்கம் 257 கு.த.அ. தோ) இவ்வாறான வளர்ச்சியடையாத நிலையில் உள்ள சமூகத்தில் இருந்த மோதல்களே. ஒரு சமூக வளர்ச்சியில் பல்வேறு போக்கை காணமுடியும்.

குடும்ப உறவைக் கொண்ட சமுதாயத்தில் உறவு முக்கியம் என்பதைக் கண்டோம். அதேபோல் குடும்பத் தலைவனின் உத்தரவை (அன்புக்கட்டளை – எமது சமூகம் அன்புத் தொல்லையுள்ள சமூகமாகும்) மீறுவது அச்சமூகத்தில் இயலாததாகும். இந்த நிலையை மார்க்ஸ் பின்வருமாறு கூறுகின்றார். ''இந்தச் சமுதாயம் தனியார் சொத்துத்தான் செயலூக்கமுள்ள நகரவாசிகளை தமது அடிமைகளுக்கு மேலாகவும் எதிராகவும் இந்தத் தன்னியல்பாகப் பெறப்பட்ட அமைப்பு வடிவத்திற்குள் இருக்கும் படி கட்டாயப்படுத்துகிறது. ( பக். 24 மார்க்ஸ் தேர்வு நூல்கள் 1) ஏனெனில் அச்சமூகத் தலைவரின்

சொல்லிற்கு மறுப்புத் தெரிவிக்காமல் இது தான் உரிமை, கடமை என்ற பாகுபாடு இன்றிய (carismatic) தன்மையைக் கொண்டதாக இருப்பதினால் ஆகும். இந்தச் சமூகப் படிமுறை அமைப்பை அறிதலும் அவசியமாகும்.

ஒரு மனிதனின் உரிமைகள் கடமைகள் என்பது ஒவ்வொரு சமூகத்திற்கும் வேறுபட்டுத் தான் இருக்கும். அதேவேளை மக்களிடையே உள்ள பிரிவினை என்பதும் குலச் சமுதாயத்தில் அதிகமாக இருந்திருக்க முடியாது. ஆண் பெண்களிடையே இருந்த பேதத்தினை என்பதைப் பார்த்தோம். அதேபோல் வர்க்க ரீதியாக (தற்போது இருப்பது போல்) பிரீபடவேயில்லை. அவர்களிடையே இடம்பெற்ற மோதல்கள் என்பது இன்றைய காலகட்டத்தில் தோற்றமளிப்பது போல் சிக்கலானதாக இருக்கவில்லை. வெகு இலகுவான வடிவத்தைக் கொண்ட சமூக அமைப்பானது இருக்கின்ற பொழுது மோதல்கள் நிச்சயமாக சிக்கலானதாக இருந்திருக்க மாட்டாது.

வரலாற்று நாயகர்களாக கணிக்கப்படும் இவர்கள் எவ்வாறு உருவானார்கள் என்பதை பின்வருமாறு ஏங்கெல்ஸ் கூறுகின்றார். ''**மக்களினத்தின் இராணுவத் தளபதி -rex, basieus, thiudans- இன்றியமையாத, நிரந்தரமான அதிகாரியாகி விட்டான். மக்கள்சபைகள் இல்லாத இடங்களிலெல்லாம் அவை அமைக்கப்பட்டன. குலச் சமூகம் இப்பொழுது இராணுவ ஜனநாயகமாக வளர்ச்சியடைந்திருந்தது இராணுவத் தளபதி, கவுன்சில், மக்கள் சபை ஆகியவை அதன் உறுப்புக்களாக ஆயின. இராணுவ ஜனநாயகம்- ஏனென்றால் யுத்தமும் யுத்தத்திற்குத் தயாராவதும் இப்பொழுது மக்களது வாழ்க்கையின் வாடிக்கையான செயல்களாகி விட்டன. அண்டை மக்களின் செல்வம் மக்களினங்களின் பேராசையைக் கிளறிவிட்டது.**

செல்வத்தை சேர்ப்பது வாழ்க்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று என்று அவர்கள் கருதத் தொடங்கினார்கள். இந்த மக்கள் அநாகரிகர்கள் உற்பத்தி வகைப்பட்ட வேலை செய்வதை விடக் கொள்ளையடிப்பது சுலபமானதாகவும் அதிக கௌரவமானதாகவும் அவர்களுக்குத் தோன்றியது. முன்பு ஆக்கிரமிப்புக்குப் பழி வாங்குவதற்கு அல்லது பற்றாமல் போய்விட்ட பிரதேசத்தை விரிவாக்குவதற்குப் போர் செய்தார்கள். இப்பொழுது கொள்ளையடிப்பதற்கு மட்டுமே போர் செய்யப்பட்டது, அது ஒரு வாடிக்கையான தொழிலாகி விட்டது. புதிய கோட்டை நகரங்களைச் சுற்றி மாபெரும் அரண்கள் எழுப்பப்பட்டது வெறும் விளையாட்டிற்காக அல்ல அங்கே வாயைப் பிளந்து கொண்டிருந்த அகழிகள் குல அமைப்பின் சமாதிகளாகும். அவற்றின் கொத்தளங்கள் நாகரிக நிலையை எட்டித் தொட்டுக் கொண்டிருந்தன. சமூகத்திற்குள் விவகாரங்களும் இதே மாதிரி மாறுதலடைந்தன. கொள்ளைக்கார யுத்தங்கள் தலைமைத் தளபதியின் அதிகாரத்தையும் துணைத் தளபதிகளின் அதிகாரத்தையும் பெருக்கின. ஓரேயொரு குடும்பத்திலிருந்து பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம், குறிப்பாகத் தந்தையுரிமையைப் புகுத்திய பிறகு, படிப்படியாகப் பரம்பரை வாரிசுரிமையாக மாறிவிட்டது. இது முதலில் சகித்துக்கொள்ளப்பட்டது. பிறகு உரிமையாகக் கோரப்பட்டது, கடைசியில்

அபகரிக்கப்பட்டது. பரம்பரை அரசவம்சம், பரம்பரைப் பிரபுத்துவம் ஆகியவற்றிற்கு அடிப்படை அமைக்கப்பட்டது. இவ்வாறாக, குல அமைப்பின் உறுப்புகள் மக்களிடம், குலத்தில், பிராட்ரியில், இனக்குழுவில் உள்ள தமது வேர்களிலிருந்து படிப்படியாகப் பிரிக்கப்பட்டன. குல அமைப்பு முழுவதும் அதன் எதிரிடையாக மாற்றப்பட்டது. அது சொந்த விவகாரங்களை சுதந்திரமாக நிர்வகிப்பதற்குரிய இனக்குழுக்களின் அமைப்பு முறை என்பது மறைந்து போய், அண்டையிலிருப்பவர்களைக் கொள்ளையடித்து ஒடுக்குவதற்குரிய அமைப்பாக மாறிவிட்டது. ஆகவே, அதன் உறுப்புகள் மக்கள் சித்தத்தை நறைவேற்றும் சாதனங்களாக இருந்த நிலைமாறி, சொந்த மக்களை ஆட்சி செய்வதற்கும் நசுக்குவதற்கும் உரிய சுயேச்சையான உறுப்புகளாகிவிட்டன. செல்வத்தின் மீது ஏற்பட்ட பேராசை குலத்தின் உறுப்பினர்களைப் பணக்காரன், ஏழை என்று பிரிக்காதிருந்தால், இது ஏற்பட்டிருக்க முடியாது. ''குலத்திற்குள் சொத்து வேறுபாடுகள் நலன்களின் ஒற்றுமையை குலத்தின் உறுப்பினர்களுக்கு இடையே உள்ள பகை முரண்பாடாக மாறாமலிருந்திருந்தால்'' (மார்க்ஸ்), இது ஏற்பட்டிருக்க முடியாது அடிமைமுறை வளர்ச்சியடைந்ததால், ஜீவனோபாயத்துக்கு உழைப்பது அடிமைத்தனமான தென்றும் கொள்ளையடிப்பதைக் காட்டிலும் மிகவும் இழிவானதென்றும் ஏற்கெனவே பழிக்கப்படத் தொடங்கியிராவிட்டால், இது ஏற்பட்டிருக்க முடியாது.'' (ப 267. கு.த.அ. தோ – ஏங்கெல்ஸ்) ஆண்ட பரம்பரைகள் எல்லாம் மக்களை அடக்கி ஒடுக்கியவர்கள் தான். இவர்கள் எல்லாம் புதிய சமுதாயத்தின் தோற்றத்தின் போது அரச போகத்தை அனுபவித்தவர்கள். தமது சுகபோகத்திற்காக சாதாரன மக்களை வதைத்தவர்கள், அவர்கள் துன்ப துயரத்தின் மீது சுகபோகத்தை அனுபவிக்க ஏழை எளியவர்களோ இவர்களின் நலனுக்காக சமாதிகளாயினர்.

மன்னர்கள் தம்முடைய குலத்தில் பெண்கள் இல்லாத போது தமக்கு தகுந்த பெண்ணை, ஆணை மற்றைய குலங்களில் இருந்து பெற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்து வந்திருக்கின்றது. ''முற்காலத்தில் இந்திய சிற்றரசர்களின் மகள்மாரை மணப்பதை இலங்கையின் சிங்கள அரசர் பெருமையாகக் கருதினர்.'' (பக். 33 மோகன்ராஜ் – இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்) இவை விஜயன் காலத்தில் நடந்தாக வரலாறு கூறுகின்றது. தமது இனத்தில் அரசன் இல்லாத பட்சத்தில் மற்றைய இனத்தின் அரச பரம்பரையை கொண்டு முடிசூட்டும் பழக்கங்கள் இருந்திருக்கின்றன. இதற்கு நல்ல உதாரணம் கண்டியின் கடைசி மன்னனான கண்ணசாமி என்ற தெலுங்கனான இராசசிங்கனாகும். துட்டகை முனு, எல்லாளன் ஆகிய இருவரும் பதவிக்காகப் போரிட்டது அவர்களின் வர்க்கத்தின் தேவையாக இருந்தது. ஆனால் குடியானவர்களோ எமது மன்னன் என்ற போலியுணர்வுக்குப் பலியாகி தமது பிரிவுகளுக்கு ஆதரவாக அணிசேர்ந்து போரிட்டனர். அரசர்களுக்கிடையே நடைபெறும் மோதல்களை தேசிய இனங்களுக்கிடையே நடைபெற்ற மோதல்களாக மிகைப்படுத்துவதை எவ்வகையிலும் நியாயப்படுத்தி ஆதரிக்க முடியாது. ஏனெனில் அவைகள் தமது ஆட்சி எல்லைகளை நிர்ணயப்படுத்தும் போர்களே.

இந்த மோதல்கள் இன்றைய மோதல்கள் போல் மிகப்பெரிய ஒன்றாக தூக்கிப் பிடிக்க முடியாது. அதேவேளை அவர்களுக்கிடையேயான மோதல்கள் என்பது

பெண்களை அடைவதும் அதாவது பெண்கள் பற்றாக்குறை காரணமாக அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு, மற்றைய குலத்தை தாக்கி தமது தேவையை அடைவதாகும், அடுத்ததாக தமது பொருளாதார நிலைகளை உறுதி செய்வதாகவே இருந்தது எனலாம். ஆனால் அன்றைய காலத்தில் இனமோதல்கள் இருந்திருக்கிறது எனப் பெரும் பூதாகாரப்படுத்தி பேசுவது எவ்விதத்திலும் நேர்மையாக முடியாது. மாறாக வெறும் இனவாதத்தையே விதைக்கும் தன்மையையே மேலோங்கி நிற்கும். இனவாதத்தில் மூழ்கியிருந்தால் தீர்வு கொடுக்கக் கூடிய முடிவிற்கு வரமுடியாது போகும்.

தேசிய இனங்கள் தேசியக் கோரிக்கையை முன் நிறுத்துகின்ற போது பழைய பண்பாட்டுச் சின்னங்களை, கதாநாயகர்களை முன்னிறுத்துவது இயல்பெனக் கண்டோம். வரலாற்றில் கண்ணகியை தேசத்தின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும், என்கின்ற கருத்தமைவிற்கு உதாரணமாகக் கொள்ள தேசிய இயக்கம் மேற்கொள்கின்றது. தேசத்தின் மானம் என்ற கருத்து உருவாக்கப்படுகின்றது. இது தமிழ்த் தேசிய எழுச்சிக்கு உதவிபுரிகின்றது. ஆனால் இதில் இருக்கின்ற கற்பனை பற்றிய அக்கறை தேசிய இயக்கத்திற்கு இல்லை. முன்னர் தமது குடும்பத்திற்கு விசுவாசமாக இருப்பது, குலத்திற்கு விசுவாசமாக இருப்பது என்ற படிவளர்ச்சியில் பின்னர் அடிமைகள் தமது அரசனுக்கு விசுவாசமாக இருக்கின்ற போக்கு வளர்கின்றது.

அரசனுக்கு விசுவாசமாக நடக்கும் போது அரசனின் அடிமைகள் எல்லாவற்றையும் செய்து முடிப்பர். அடிமைகள் போர்க்களத்தில் பகைவரை வெற்றிவாகை சூடிப் பெருமை கொள்வர் போருக்கு சென்ற வீரன் நெஞ்சில் அம்பு பாய்ந்து செத்தானா? முதுகில் அம்பு பாய்ந்து செத்தானா? என்பது பற்றிக் கூட பழைய இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. இவைகள் எல்லாம் தேசிய இனப் போராட்ட காலங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இறந்த போராளிகளுக்கு கோவில்கள் கட்டப்படும் வழக்கம் தமிழர் வரலாற்றில் உண்டு. வன்னிச்சிகளுக்காக கட்டப்பட்ட கோவில்கள் இதற்கு சான்றாகும். எதிரியிடம் சரணடையாது போராடிய வீரர்கள் முன்னோர்கள் வழிபாட்டிற்கு உரியவர்களானார்கள். இந்த வரலாற்றில் வந்த இனத்தின் மக்கள் தமது உயிரை போராட்டத்திற்கு தியாகம் செய்கின்றனர்.

போராளிகள் தலைவன் சொல்லிற்கு பணிந்து எதுவும் செய்யத்தக்க வகையில் உருவாகியிருக்கின்றனர். இவர்கள் உருவாக்கத்திற்கு வரலாற்று நிகழ்ச்சிகள் இவர்களின் தியாகத்திற்கு உரமிட்டிருக்கின்றது. போராட்டத்தில் தற்கொலைப் படையாக யப்பான் வீரர்கள் செயற்பட்டிருக்கின்றனர். பாலஸ்தீன, குர்டிஷ் இனத்தவர் தற்கொலைப் போராளிகளாக சென்றிருக்கின்றனர். இவற்றிற்கு நிச்சயம் அந்த நாடுகளின் கலாச்சார பண்பாட்டு உலகக் கண்ணோட்டம் காரணமாக இருந்திருக்கும்.

தமிழ் மக்களுக்குள் வீரவழிபாடு இருந்து வந்தது. வரலாற்றில் காணப்படும் நடுகல் வணக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. அண்ணாமார், நாச்சிமார், மதுரைவீரன், கண்ணகை முதலிய தெய்வ வழிபாடுகள் வீரவழிபாட்டின்கீழ் அடங்கும். இன்று இறந்த போராளிகளுக்காக பண்டைய முறைப்படி கோவில்கள்

எழுப்பப்படாவிடினும், விசேட கல்லறைகள் அமைக்கப்படுகின்றன. இது காலத்தையும், போராட்டத் தன்மையையும் பொறுத்ததாக அமைகின்றன. இருப்பினும் பழைய பண்பாட்டு தொடர்ச்சியினை இங்கே கவனிக்க முடியும்.

## 2.3.3 ஆரியர் என்ற மாயை!

யார் பூர்வீகக் குடிகள், தாம் ஆரியர் என்ற கூற்றுக்கள் தேசியப் போராட்டக் காலத்தில் பிரசித்தி பெற்றவையாகும். இனங்களின் பிரச்சினையில் இது அறிவு ரீதியாக சிந்திக்கின்ற போது தான் இதற்கு தீர்வு காண முடியும். மனித இனங்களைப் பல்வேறாக பிரிக்கின்றனர். இது நீண்ட வரலாற்றில் பூமியில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள் வெவ்வேறு இனப் பிரிவுகளாக பிரிந்திருப்பதற்கு காரணம். பூமியில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக தோன்றிய எச்சங்கள் இன்றும் இருக்கின்றன. இந்த எச்சங்களின் தொடர்பானது வெவ்வேறு பிரதேசங்களில் காணப்படுகின்றன. இந்த இனங்களின் எச்சங்கள் ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா, அந்தமான் தீவு, இலங்கையில் வேடர்கள் என கணிப்பிடப்படுகின்றது. இவர்கள் தடித்த கறுப்புத்தோலைக் கொண்டவர்கள். இந்தப் பரம்பலே இலங்கையில் வாழ்கின்றனர். ஆனால் மொழி என்பது புதியதாக தோற்றம் பெற முடியும் இவை பற்றி தேசிய இனம் என்றால் என்ன என்பதின்கீழ் பார்க்கலாம்.

பண்டைய சமுதாயத்தில் தாயுரிமைச் சமூக அமைப்பபே இருந்தது என வரலாற்று – இயங்கியல் பொருள் முதல் வாதத்தின் அடிப்படையில் முடிவிற்கு வரும் இவ்வேளை, இந்த முடிவின் கீழ் இன்னுமொரு வரலாற்றுக்குட்பட்ட கேள்வியை இங்கு எழுப்ப வேண்டியுள்ளது. அதாவது விஜயனும் அவனுடைய 500 நண்பர்களின் சந்ததியினரே இன்று இலங்கையில் வாழும் சிங்கள மக்கள். இது எவ்வகையில் சாத்தியமாகக்கூடும். இந்தக் கேள்விக்கான பதிலை வந்தடைகின்ற போது இனவாதிகள் கொள்ளும் பெருமிதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். முதலில் பின்வரும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு இதுபற்றி ஆராய்வோம்.

1.எத்தனை பேர் இயக்கருடன் ஏற்பட்டமோதலின் போது கொல்லப்பட்டனர்.?

2.எத்தனை பேர் சுகவீனத்தால் கொல்லப்பட்டனர்?கட்டுப்படுத்த முடியாத எவ்வகை நோய்கள் அன்றைய காலத்தில் இருந்திருக்குமாயின் அவர்களின் ஆயுட் காலம் எந்தனை வயதாக இருந்திருக்கும்? சிசுமரணவீதம் என்னவாக இருந்திருக்கும்?

3.எத்தனை பேர் திருமணம் செய்து கொள்ளும் நிலையில் இருந்தனர்?

4.எத்தனை பேர் மனைவியரின் சகோதரர்களால் கொல்லப்பட்டனர்?

5.குலத்துக்குள் சேர்க்கப்பட்டோர் எத்தனை பேர்?

6.மனைவியரால் துரத்தப்பட்டோர். –கொல்லப்பட்டோர் எத்தனை பேர்? (பலதாரமணமுறை அன்றைய காலத்தில் இருந்திருக்கச் சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றது. இன்றும் மகாபாரதத்தில் வரும் திரௌபதி மாதிரி ஒரே சகோதரர்களை மணம் முடிக்கும் முறையும் இருக்கின்றது)

7.பாண்டியர் சந்ததியினருடன் கலந்தவர் எத்தனைபேர்?

8.ஆரியர்கள் பெரும் கூட்டமாக சிந்து வெளியில் படையெடுப்பு நடத்தி ஆக்கிரமிக்கவில்லை எனின் எவ்வாறு 500 தோழர்களும் ஆரியர்களாக இருக்கமுடியும்?

இவற்றின் எல்லா வகையான கேள்விகளுக்கும் இருக்கின்ற அறிவைக் கொண்டு பதிலைக் கொடுக்க முடியாது எனினும் இவற்றில் முக்கியமானவற்றிற்கும், எனது அறிவுக்குட்ட நிலைகளில் இருந்து பதில் கொடுக்க முயற்சிக்கப்படுகின்றது.

அன்றைய காலச் சமூக அமைப்பை வைத்துத் தான் அல்லது ஒரு மக்கள் கூட்டத்தினிடையே எவ்வகையான உறவுகள் அல்லது அலகின் (Scale) தன்மை என்பது அறிந்து கொள்ள முடியும். வேலைப் பிரிவினை என்பது வளர்ச்சி அடையாத நிலையில் இருக்கும் போது தொழில் நுட்பமும் வளர்ந்திருக்க மாட்டாது. உற்பத்தி வளர்ச்சி குறைவாக இருக்கும் பட்சத்தில் உறவு என்பது பிரதான பாத்திரம் வகிக்கும். ''பெண்கள் பிரிவே வீட்டில் சகஜமாக ஆட்சி புரிந்தது. சேமிக்கப்பட்ட பொருட்கள் பொதுவில் இருந்தன. தன்பங்கிற்குப் பொருட்களைக் கொண்டு வந்து தருவதற்கு வழியில்லாத துரதிஸ்டம் பிடித்த கணவன் அல்லது காதலன் கஸ்டப்பட வேண்டியதே. அவனுக்கு வீட்டில் எத்தனை குழந்தைகள் இருந்த போதிலும் எந்த வினாடியிலும் அவனை வெளியேற்றும் படி உத்தரவிட முடியும். அப்படி உத்தரவிட்ட பிறகு மீற முயல்வது அவனிற்கே நல்லதல்ல. அந்த வீட்டில் அவன் இனியும் இருக்க முடியாது அவன் தனது குலத்திற்கு திரும்பிவிட வேண்டியது தான் அல்லது வெளியேறிச் சென்று வேறு குலத்தில் புதிய திருமண உறவைத் தொடங்க வேண்டியது தான் – அப்படி அடிக்கடி நடைபெற்றது பொதுவாக, மற்ற இடங்களைப் போலவே குலங்களில் பெண்கள் தான் பெரும் சக்தியாக இருந்தார்கள்.'' (ப.81 ஆஷர்ரைட் –ஏங்கெல்ஸ் கு.அ.த.தோ)

மேற்குறிப்பிட்டது எம்முடைய இன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்கு முற்பட்டதாகும் ஆனால் இதனெச்சங்கள் இன்றைய சமுதாயத்தில் இருப்பது இயல்பானதே. சகோதரியானவள் துன்பப்படும் போது ஆண் சகோதரன் சகோதரிக்கு நடக்கும் துன்பத்தைத் அல்லது கொடுமையைத் தட்டிக் கேட்க முன்வருவதும் சகோதரி வாளாவெட்டியாக இருக்கும் போது அவளைத் திட்டித் திட்டி பராமரிப்பதும் இப்போதும் உள்ளது. அதேவேளை இரத்த உறவுகளை மையமாகக் கொண்ட சமூகத்தில் இருந்த நிலையானது. இன்று இருப்பது போல் அல்லாமல் அந்த சமூக அமைப்பில் பெண்களுக்கு இருந்த பாதுகாப்பு அதிகமானது எனலாம். அதேவேளை முற்பட்ட சமுதாயத்தில் இருந்த மதிப்பை கீழே பார்ப்போம். ''**உழைப்புப் பிரிவினையை நிர்ணயிப்பதற்கு உரிய**

**காரணங்கள் வேறு, சமுதாயத்தில் இருபாலாருடைய அந்தஸ்தை நிர்ணயிப்பதற்கு உரிய காரணங்கள் வெறு நாம் முறையானது என்று கருதுவதற்கு மேல் கடுமையாக உழைக்கின்ற பெண்களைக் கொண்ட மக்களினங்கள் நமது ஐரோப்பியர்கள் பெண்களுக்கு தருகின்ற மதிப்பை விட அதிகமான உழைப்பில் இருந்து விலக்கப்பட்டுள்ள நாகரீகச் சீமாட்டியின் சமூக அந்தஸ்து அனாகரீக நிலையைச் சேர்ந்து கடுமையாக உழைக்கின்ற பெண்களின் அந்தஸ்தை விட சமூக ரீதியில் மிகவுங் கீழானதாகும். அந்தப் பெண் தன் மக்கள் மத்தியில் உண்மையாகவே ஒரு சீமாட்டியாக (lady, frowa, frau - எசமானி) கருதப்பட்டாள். அவள் வகித்த நிலையின் தன்மையினால் அவள் அப்படி இருந்தாள்''** (ப 82 ஏங்கல்ஸ் கு.அ.த.தோ) ஆனால் இன்று சமூகக் கட்டுப்பாட்டிற்கு பணிந்து செல்ல வேண்டியநிலை தோன்றியுள்ளது. இந்நிலையானது பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற நிச்சயமற்ற தன்மையே முதன்மைக் காரணமாகின்றது. பொருளாதார ரீதியாக ஏற்பட்ட வீழ்ச்சியினல் ஏற்படுத்தப்படும் கருத்தியல் மேல் ஓங்கி நிற்கின்றது.

இங்கே முற்காலச் சமூகம் எப்படி இருந்தது எனப்பார்த்தோம். அதேவேளை மூலதனத்தின் உருவாக்கத்தின் ரகசியத்தையும் இங்கே காணமுடிந்தது. அதேபோல் முன்பிருந்த சமூகப் பாத்திரங்கள் சமூகப் புரட்சிகளினால் இழக்கப்பட்டு இன்றைய நிலை தோற்றம் பெற்றுள்ளது. அப்படி இருக்கின்ற போது எதிலும் தூய்மை இருக்கும் என்பதில் உண்மை இருக்க முடியாது. தாய்வழிச் சமூகத்தில் தாய் மாமனுக்கு முதலிடம் கொடுப்பதும், இன்றைய சமூகத்திலும் இதன் எச்சங்களைக் காணமுடியும். விஜயனின் சந்ததியினர் எனப்படுபவர்கள் அதாவது இயக்கர் குலத்திலும் சரி பாண்டியர் வம்சத்தை சேர்ந்தவர்கள் ஆனாலும் சரி எச்சமூகத்தினுள் சமூக மயப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது முக்கிய கேள்வியாக எழுகின்றது. விவாகரத்தின் பிற்பாடு குழந்தை யாருடன் சென்றிருக்கும்? இன்றைய வரைக்கும் தாயுடனேயே இருந்திருக்கும். அன்றைய சமூகத்திலும் அதுவே தான் நடந்திருக்கவும் வேண்டும். இருக்கின்ற எச்சங்களைக் கொண்டு தான் அன்றைய சமுதாயத்தில் எப்படி இருந்திருக்கும் எனக் கணிப்பிட முடியும்.

அன்றைய சமுதாயத்தில் இயக்கர் குலத்திற்கு தலைவியாக இருப்பதற்கு முடிந்திருக்குமாயின் அவளுக்குப் பிறந்த குழந்தைகளும் அவளை அண்டியே சமூகமயப்பட்டிருக்கும். அதுவே அன்றைய நிலையில் சாத்தியமான ஒன்றாக இருந்திருக்கும். அதேவேளை இயக்கர்களை விலக்கி விட்டு பாண்டியப் பெண்களை மணமுடித்ததினால் ஏற்பட்ட போது அன்றைய சமுதாயத்திலே பாண்டியப் பெண்களுக்கும் அரசாளும் உரிமை இருந்ததினால், அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் பெண்களே கூடுதல் உரிமை கொண்டிருப்பர். ஏனெனில் முதலில் குழந்தையானது குடும்ப வட்டத்தினுள்ளே தான் சமூக மயப்படுத்தப்படுகிறது. அதன் பிறகே குடும்பத்திற்கு வெளியே பிள்ளையானது பழகவெளிக்கிடுகின்றது. சமூக உறவு, சமூக அமைப்பு ஆகியவை எவ்வாறு முக்கியமோ அதேபோலதான் மொழி என்பதும் நாம் மேற்கொண்ட கேள்விக்கு விடைகிடைக்க முடியும்.

## 2.3.4 மொழிவரலாறு பற்றி

இன்றைய இந்தியாவின் வரலாற்றை தோண்டிப் பார்ப்போமாயின் அள்ள அள்ளக் குறையாத படி புதுப்புது விடயங்கள் வந்து கொண்டே தான் இருக்கும். மூத்த குடிகள் பற்றிய வரலாற்றை நிருபிக்கும் முயற்சியில் பல அறிஞர்கள், தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்பன ஈடுபட்டிருக்கின்றன. இந்தியாவை நேரிடையாக பலம் பொருந்திய ஆரிய நாடோடிகள் ஆக்கிரமிக்க வில்லை என்பது பெரும்பான்மையான ஆய்வாளர்களின் கருத்தாகும். இந்த முடிவின் படி பல கட்டுக் கதைகள் வீடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த முடிவுகள் இருக்கின்ற சமுதாயத்தின் கல்வி அமைப்பு என்பது அடிநிலையில் உள்ளவர்களுக்கு சென்றடைவதை தடுக்கின்றது. இருக்கின்ற அரசியல் அமைப்பு என்பது ஒடுக்கும் வர்க்கத்தைப் பாதுகாப்பதாலும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தம்மைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொண்டார்களானால் தமக்கு எதிராகவே கிளம்பி விடுவர் என்பதால் சாதிய மற்றும் மூலதனத்தைக் கொண்ட வர்க்கம் முடிந்த வரை தடுத்து வருகின்றது.

இந்த நிலை என்பது இங்கு மாத்திரம் அல்ல சர்வதேச நிலையை எடுத்துக் கொண்டால் அணு பற்றிய சிந்தனை என்பது இந்தியா. (குறிப்பாக இந்திய) சீனாவில் இருந்து தான் அறிவு வந்தது என அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் மேற்கு அரசுகளே அவற்றை நேரிடையாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன. இவ்வாறான ஒடுக்கு முறைகள் பலமாக இருக்கின்ற காரணத்தால் ஒடுக்கப்படுகின்ற மக்கள் தமது சொந்த வரலாறு பற்றிய தெளிவைக் கொண்டில்லாமல் இருக்கின்றனர். மொழி என்பது சமூக மயப்படுத்தல் மூலமாக நிர்ணயிக்கப்படுகின்றது. மொழியின் பரம்பல் என்பது பல நூறு வருடங்களுக்கு முன்னர் இருந்தது போல் அல்லாமல் பல இன மக்கள் தமது சொந்த மொழியை இழந்து அன்னிய மொழியை கற்றுக் கொள்கின்றர், தமது தாய் மொழியாகக் கொள்கின்றனர். இதற்கு ஆட்சியில் இருக்கின்ற வர்க்கமே இதனை நிர்ணயிக்கின்றன. பழைய கொலனி நாடுகள் ஆட்சியாளர்களின் மொழியையே உத்தியோக பூர்வ மொழியாகவும் கொள்கின்றன.

இந்தியாவில் இன்று மூன்று மொழிகளின் கிளைப் பிரிவுகள் இருப்பதாக (மொழி வரலாறு) மு. வரதராசன் கூறுகின்றார்.

1. திராவிட மொழி
2. ஆரிய (இந்தோ – ஐரோப்பிய)
3. திராவிட – ஆரிய கலப்பு மொழி ஆகியவையாகும்

தென் இந்தியப் பிரதேசத்தில் சீன வகை இனத்தவர்கள் இருந்தனர் என சீன வணிகர் தனது குறிப்பில் எழுதியிருந்தார். ஆனால் மு. வரதராஜன் அவர்கள் அக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றைய சமுதாயத்தில் வாழ்ந்த சமூகத்தவர் பேசிய மொழி அறியப்பெறுவது முக்கியமாகும். திராவிடத்திலிருந்தும் இந்தோ – ஐரோப்பியத்திலிருந்தும் வந்ததுதான் பாலி மொழியாகும். "பாலிமொழி என்பது பிராகிருதம் போல், வட

இந்தியாவில் வாழ்ந்த பழங்காலத்து மக்கள் வடமொழியும் திராவிட மொழியும் கலந்து பேசிய பேச்சாகும். வடமொழிச் சொற்கள் பலவற்றைக் கற்றுக் கலந்த போதிலும், அவர்களின் ஒலிமுறை திராவிட மொழி போல் எளிமையாகவே அமைந்தது. வடமொழியில் உள்ள மூன்று சகர (sibiliants) ஒலிகளுக்கு ஈடாக பாலிமொழியில் (தமிழில் இருப்பது போல்) ஒன்றே உண்டு. தமிழில் உள்ளவாறு, மெய்யெழுத்துக்கள் வடமொழி முதலெழுத்துக்கு ஏற்பத் திரியும் திரிபுகள் மிகுதியாக உண்டு. வடமொழி போல் அரிய ஒலிகளுடன் சொற்கள் முடியாமல், தமிழ்போல் எளிய ஒலிகளே சொற்களின் ஈற்றில் அமையும். உயிரொலிகள் அல்லது மூக்கொலியுடன் கூடிய உயிரொலிகளே சொற்களின் முடிவில் அமைவன. வடமொழியில் உள்ள இருமை பாலிமொழியில் இல்லை, திராவிடமொழிகளில் உள்ள ஒருமை பன்மை ஆகிய இரண்டே பாலியிலும் உண்டு. வடமொழியில் இல்லாத எகர ஒகரக் குற்றுயிர்கள் பாலிமொழிக்கு இன்றியமையாதவை. பின்னெண்ண மெய்களாகிய டகர ணகரங்களும் பாலிமொழியில் பயின்றுள்ளன. இவை அனைத்தும் திராவிட மொழிக் கூறுகளே ஆகும். இத்தகைய பாலி மொழியைப் பேசிய வட இந்திய மக்கள் ஆரியர் வருகையின் முன்னமே இந்தநாட்டில் இருந்த இனத்தைச் சார்ந்தவர்களாக கருதவேண்டும்.'' (ப. ௨௬௨ மொழி வரலாறு – மு. வரதராசன்)

மேலும் பாவாணர் ''சமசுக்கிருதத்தில் ஐந்திலிரு பகுதி முழுத் தமிழ்ச்சொல். ஐந்திலிரு பகுதி வேரின்றி திரிந்த திரிசொல். ஐந்திலொரு பகுதி இடுகறிச் சொல்.'' (பாவாணர் – இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்கரிய ஆக்கப் பணிகள், பக்கம் 8, பெருஞ்சித்திரனார்)

இதிலிருந்து இயல்பாகவே விசயன் ஆரியனாக இருக்க முடிந்தாலும், அவனுடைய படையில் இருந்தவர்கள் அனைவரும் ஆரியராக இருக்க முடியுமா என்ற கேள்வியும் எழுகின்றது. குருவிக்கரம்பை வேலு என்பவர் புத்தர் தமிழ் – திராவிட இனத்தவர் எனக் கொள்கின்றார். அதேவேளை பாலி மொழியானது ஆட்சிமொழியாக இருந்திருக்க முடியும். ஏனெனில் அசோகனின் ஆட்சி மொழியைக் கொண்டு இந்த முடிவிற்கு வரமுடியும். எப்பவும் ஆட்சியில் இருப்பவர்களுக்கும், மதத் தலைமைக்கும் ஏற்றவாறாகவே இவைகள் தீர்மானிக்கப்படுகின்றன. மேட்டுக்குடியினரே வரலாற்றை தமக்கு ஏற்றாற் போல் எழுதுகின்றனர். அதன் பொருட்டே உழைக்கும் வர்க்கம் பின் செல்கின்றது. பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றால் மொழி என்பது அவசியமாகும். மொழி என்பது பொருளாதார வளர்ச்சியை அண்டி நிற்கின்றது. இவர்கள் மொழியில் மாற்றம் கொண்டதினால் இவர்கள் அனைவரும் ஆரியர் எனத் தம்மை அழைத்துக் கொள்கின்றனர்.

இங்கு இந்திய தேசத்தை எடுத்துக் கொண்டால் திராவிடமும் ஆரியமும் கலந்த இனமும், மொழியும் இருப்பது போலவே இலங்கையை எடுத்துக் கொண்டால் திராவிட இனக்குழுக்களுக்கிடையில் இருந்த குலங்கள் ஒன்று சேர்ந்து புதிய தேசிய இனத்திற்கு வழிவகுத்ததைக் காணமுடிகின்றது. 'மாத்தறை தொடங்கிப் புத்தளம் வரையுமுள்ள கரைப்பட்டினங்களில் நடியேற்றியிருப்பவரும், இப்போது சிங்களர் என அழைக்கப்படுவருமாகிய

கரையார் குலத்தவர், இம்மியேனுஞ் சிங்கள இரத்தக் கலப்பில்லாத, பின்வந்த நெய்தல் நிலத்துத் தமிழ் மக்களே. (பக். 44 யாழ்பாணச் சரித்திரம் – இராசநாயகம்) தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் தற்பொழுதைய சிங்களப் பகுதியில் குடியேறியுள்ளதாக சரித்திரம் கூறுகின்றது. இதில் உண்மை இருக்கும் என நம்பலாம். ஏனெனில் குலங்களாக இருக்கின்ற போது தமது பிழைப்புத் தேடி வெவ்வேறு பிரதேசங்களுக்கு நாடோடிகளாக நாகரீகமடையாத காலத்தில் குடியேறி இருந்திருக்கும். பிற்பட்ட காலத்தில் வணிகர்களான பரதவர்கள் வர்த்தகத்தின் நிமித்தம் குடியேறி இருந்திருக்க முடியும். முன்னர் பார்த்தது போல பருவகாலத்தில் தொழிற் செய்யச் சென்று நிரந்தரமாக குடியேறியிருக்க முடியும்.

இனக் குழுக்கள் என்னும் போது ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்தவர்களும் வெவ்வேறு இனக் குழுக்களே அவ்வாறே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான கலாச்சார தொடர்புகள் இருந்தாலும் முதலாளித்துவச் சந்தை எல்லை வரையறுப்புக்கு முன்னர் பல இனக் குழுக்களின் பரவல் இடம் பெற்று இருக்கின்றன. நிலப்பிரபுத்துவம் வளர்ச்சியடைந்த நிலை எனினும் ''இந்தியாவிலிருந்து குடியேறிய இடையர், கள்ளர், மறவர் முதலிய பிறர்மேல் சாதியாளர் பரதேசிகளெனத் தோம்பிலே பதியப்பட்டனர். ஒல்லாந்தர் தோம்பிலும் அவ்வாறே பதியப்பட்டிருக்கின்றது. அவர்களுங் காலகதியில் வேளாரிடத்திற் சம்பந்தஞ் செய்து வேளாராக மாறிவிட்டனர். (ப. 152 யாழ்பாண இராச்சியம் – இராசநாயகம்) குலங்கள் ஒன்றினைவது சாதாரணமாக சுயவிருப்பத்துடன் நடப்பதில்லை என்பதையும் கவனித்துக் கொள்ளல் வேண்டும். அங்கும் பொருளாதார நலன், பலமும் ஆதிக்கம் பெற்றிருக்கின்றது.

1542 இல் சங்கிலியன் சிங்களவர்களை யாழப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர் பல சிங்கள மக்கள் யாழ்பாணத்திலேயே தங்கிவிட்டதாக வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார். இவ்வாறு தங்கிவிட்ட மக்கள் தமிழ் மயமாக்கப்பட்டனர். ''அநேக சிங்களக் குடிகள் வன்னிப் பிரேசத்திற்கும் கண்டி நாட்டிற்குஞ் சென்றார்கள். செல்ல முடியாதவர்கள் தமிழ்த் தலைவரானோரிடம் அடிமைகளாகவிருக்கவுடன் பட்டார்கள். இவ்வாறு நின்றோர் கோவியரும் நழுவிகளுமாவர். கோவியர், கொவியர் (Goviyas) எனப்படுஞ் சிங்கள வேளார்களே (கொவ= வேளாண்மை). இதனாற்றான் மற்ற அடிமைகளுக்கும் தலைவர்களுக்கு மிடையேயுள்ள சில உரிமை வழக்கங்களிலும் பார்க்க விசேடித்த ஒரு வழக்கம் இவர்களிடத்துண்டு. கோவியர் மணவினைக் காலங்களில், எசமான் அவர்கள் வீட்டில் உணவுண்டலும், எசமான் வீட்டுப் போசனபந்தியில் அக்கோவியர் தலைவனுக்கிடங் கொடுப்பதும், இன்றும் யாழ்ப்பாணத்தில் நடக்கும் வழக்கம். மற்றைய சிறையாளர்களாகிய அடிமைகள் இழிகுலத்தவர்களான படியால் அவர்களுக்குச் சுதந்திரமில்லை.

நளவருஞ் சிங்கள மரமேறிகளே. சிங்கள மரமேறிகள் காலில் தளைபோடாது மரங்களில் ஏறிப்பின் இறங்கும் போது நழுவிவருகின்றபடியால், நழுவரெனப்பட்டு, அப்பதம் நழவராய் நளவராயிற்று. (ழகர, ளகர ஒலி ஒற்றுமையினால்) தளைபூட்டியேறும் வழக்கும் தமிழர்களுக்குள் மாத்திரமிருந்தது. இனி வடமராட்சியிலுள்ள தனக்காரர் என்போருஞ் சிங்களக் குடிகளே. அரசனுடை

யானை குதிரைகளுக்குப் புல்லளித்தல் அவர்கள் தொழில் (சிங்களத்தில், தன =புல்லு). அதனாற் போலும் அவர்கள் யாழ்பாணத்திலிருந்துந் துரத்தப்பட வில்லை. பெண்கள் தாமுடுக்குஞ் சேலையின் உள்தொங்கலைத் தோளிற்போடுவதுஞ் சிங்கள வழக்கமே. சில வருடங்களுக்கு முன் கோவியருக்குள்ளும் நளவருக்குள்ளும் அப்பழக்கம் இருந்ததும் இன்றுந் தனக்காரருக்குள்ளிருப்பதும் அறியத்தக்கது. தலைமயிரை வளர்த்துக் கொண்டையாகப் பிடரியில் முடிப்பதும், மாடுகளுக்குச் சாதிக் குறிசுடுவதும் சிங்களவரான பழைய நாகரின் வழக்கமே. இவ்வழக்கங்களைப் பிற்காலத் தமிழருமனுசரித்தனர். ஆண்கள் கன்னத்திற் குடும்பி கட்டுவதும் பெண்கள் மார்புக்குக் குறுக்காய்ச் சேலை கட்டுவதும் மலையாளதேய வழக்கங்களாம். (பக். 86 யாழ்பாணச் சரித்திரம் – இராசநாயகம்) சிங்கள மக்கள் என்பவர்கள் எல்லோரும் ஆரியர்களாக இருக்க முடியாது என்பதைப் பார்த்தோம்.

இன்றைக்கு யாழ்பாணப் பகுதியில் இருப்பவர்கள் தாவணி போடாமல் வெறும் சட்டை மட்டும் போடும் பழக்கமும் இருக்கின்றது. இதே போல் மட்டக்களப்பில் இருப்பதாக கருதப்படுகின்றது. மட்டக்களப்பிலும், கேரளத்திலும், நாகர்கோவில் பகுதியிலும் முக்குவர் குலத்தவர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடன் இணைந்த வரலாற்றுத் தரவுகள் இருக்கின்றது. ''மலையாளத்தில் வாழ்ந்த குகர் என்போர் இங்கு வந்தார்கள் என்பதற்கு மட்டக்களப்பில் வழங்குகின்ற தென்சேரி வடசேரி மக்கள் பிரிவுகள், மருமக்கள் தாயமுறை, கன்னக்குடுமி வைக்கும் முறை,''போடி'' என்ற ஆட்பெயர்ப் பிரயோகம், குரவையிடும் வழக்கம், தாய்வழிப் பாரம்பரியம், மந்திரத்தில் கூடிய ஈடுபாடு, சமூகத்திற் பெண்களுக்குக் கொடுக்கப்படும் முதன்மை, திருமணச் சடங்கு முறைகள் மற்றும் இன்னோரன்னவையும் சான்றுபகர்கின்றன.''(பக். 46 இளையதம்பி பாலசுந்தரம் – பாரெல்லாம் பரந்த தமிழர் – உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) தற்பொழுது சிங்கள இனத்தவர்கள் தமிழர்களுடன் சேர்ந்திருப்பது போலவே மலையாளப் பண்பாடுகளும் தமிழர்களிடையே பரவியிருப்பது பற்றி வரலாறுகள் கூறுகின்றது. மலையாளம் தமிழில் இருந்து பிரிந்த மொழிக்கிளை என்று கூறப்படுகின்றது. ஆனாலும் இதில் ஒரே கருத்து இருப்பதாக கொள்ளமுடியாது.

சிங்கள மக்கள் வடக்கில் குடியேறி இருந்ததிற்கான தடயங்களை தற்பொழுது கண்டுபிடித்துள்ளனர். இடப்பெயர்களில் உள்ள பிரச்சினை, இனத்துவ மேம்பாட்டுப் போக்கு என்பன ஒருமித்த கருத்தை வந்தடைய முடியவில்லை. இதற்கு விசயனின் தோழன் மாதோட்டையில் குடியிருந்தவன், அவன் விசயனுக்கு பாண்டிய குலத்தில் பெண் எடுப்பதற்காக பாண்டியர்களுடன் தொடர்பு கொண்டான் எனச் சரித்திரம் கூறுகின்றது. பாண்டியனின் தோழர்கள் வெவ்வேறு இடங்களில் இவனைப் போல் குடியிருந்திருக்கலாம் எனக் கொள்ள முடியுமல்லவா. ஆனால் இதற்கு வேறு சான்றுகள் இருப்பது என்பது பற்றித் தெரியாது. முக்குவர் பிரிவினர் இலங்கையில் பலகாலமாக குடியிருக்கின்றனர். பண்டைய சமூக அமைப்பு பற்றிய வரலாற்று தரவுகளை கவனிக்கும் இடத்தில் தாய்வழிச் சமுதாய அமைப்பின் எச்சம் தொடர்ந்து கொண்டிருப்பதை காணமுடிகின்றது.


சிங்கள மக்கள் வடக்கில் குடியிருந்திருக்கின்றனர் இவர்கள் பழைய நாகரின் கலாச்சாரத்தை தமக்குள் கொண்டும் இருந்திருக்கின்றனர். இதேவேளை மலைநாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்ற பாகுபாடு இருந்து வந்திருக்கின்றது. இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மதித்துக் கொள்வதில்லை. பிரிந்திருந்த மக்கள் "1930 களிலேயே சிங்கள மக்கள் ஒரு தேசிய இனமாக உருவாகும் போக்கு ஒரு இறுதிக் கட்டத்தை அடைந்தது." (பக். 63 மோகன்ராஜ் – இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்) இவை நிலப்பிரபுத்துவத்துடன் தேசிய இனத்துவம் உருவாகுவதேயாகும். ஆனால் இந்த இரண்டு மக்களும் மணவுறவு மூலம் ஒன்றிணைந்தாகக் கூறப்படுகின்றது. இங்கு கவனிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவெனில் இந்த இரண்டு மக்கள் பிரிந்திருக்கின்றனர். பின்னர் இணைந்து கொண்டதன் மூலம் பலம் பொருந்திய இனங்களின் கூட்டுச் சேர்க்கையாக சிங்கள தேசிய இனமாக மாறியது எனலாம். இங்கு இனங்கள் மெல்ல மெல்ல தமது இனத்தின் அடையாளத்தை இழந்து பெரும் இனமாக மாறுகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட வரலாற்றுத் தரவுகளை தேசிய இனம் மற்றைய இனத்தினை தன்னுள் அடக்கிக் கொண்டு பெரும் தேசிய இனமாக இன்று வளர்ந்திருக்கின்றது என்ற நோக்கில் பார்க்கின்ற போதே ஒரு பரந்த பார்வையை பெறமுடியும். மனித வரலாற்றில் எடுத்த எடுப்பிலேயே தேசிய இனங்கள் இருப்பது போல கண்ணோட்டம் கொள்வது பிழையான பார்வையாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் பூர்விக தன்மையைத் தவிர்ந்த மற்றவர்களை, குறைந்த சாதியினரை கீழ்நிலை கொண்டு பார்க்கும் நிலை இருப்பதால், வரலாற்றை எழுதுபவர் அல்லது அதே சமுதாயத்து மக்கள் தாம் தாழ்ந்து விடக்கூடாது என்பதற்காக வரலாற்றுப் பக்கத்தை திரும்பிப் பார்ப்பது தவிர்த்து வருகின்றனர் எனலாம். இந்த நிலையானது இந்தச் சமுதாயத்தின் இருக்கின்ற தன்மைகளில் ஒன்றே. இவை இந்தச் சமுதாயத்தின் பண்பாட்டு, அறிவியல் வெளிப்பாட்டின் தன்மை அது இப்படிப்பட்ட போலித் தன்மைகளைக் கொண்டு தான் இருக்கும். இந்தப் போலி உணர்வின் காரணமாக வகுப்புவாதமும் ஏற்படுகின்றது. யார் மேன் மக்கள் என்ற நிலையில் இருந்து எழுதப்படும் வரலாறுகள் சாதி, வர்க்கம், இனம், வகிக்கின்ற அந்தஸ்து, பால், மதம் ஆகிய நிலைகளில் இருந்து நிர்ணம் செய்யப்படுகின்றது.

இவற்றிலிருந்து ஒரு முடிவிற்கு வரமுடிகின்றது. அதாவது வேடர் (நாகர் – இயக்கர்) பேசியமொழி, **தமிழ், பாலி,** விசயனின் சந்ததியினர் பேசிய மொழி ஆகியவற்றிலிருந்து பிறந்ததே சிங்கள மொழியாகும். அதேபோல் இன்று சிங்களத் தேசிய இனம் எனப்படுபவர்களும் வேடர் (நாகர் – இயக்கர்) தமிழ், விசயனின் தோன்றலில் இருந்து வந்தவர்கள் என எடுத்துக் கொள்ள முடிகிறது. தனி ஆரிய இனம் எனக் கொள்ள முடியாது. அப்படி இனத் தூய்மை கொண்டு இருக்கவும் முடியாது. "அநுராதபுரத்திலே கலிங்கவரசர்குலம்

விஜயனிலிருந்து ஐந்து அவைமுறைகளுக்குள் அற்றுப் போக, கலிங்கரும் நாகரும் கலந்த மிசிரகுலத்தரசர்கள் (யாழ்பாணச் சரித்திரம் – இராசநாயகம்) தலைமுறைகள் அற்றுப் போக நிச்சயம் இடமுண்டு. அதேபோல குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அவர்கள் பரம்பரை அழிக்கப்படுதல் இயல்பானதே. விசயனுடன் வந்தவர்கள் எல்லாம் ஆரியர்கள் அல்ல என்ற கருதுகோளின் படி பார்ப்போமானால் முழுத் தூய்மையான ஆரியச் சந்ததியே சிங்களத் தேசிய இனம் எனக் கொள்ள முடியாது. மாறாக பல இனங்களின் கலவையாக இருப்பதற்கே சாத்தியம் உண்டு. இதனை அறிந்து கொள்ளாத ஜே. ஆர் தன்னுடைய மூக்கும் இந்திராவின் மூக்கும் நீளமாக இருப்பதால் தாம் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர் எனக் கூறினார். அறியாமையாயின் மூலம் கோசம் எழுப்பும் போது அது இனவாத அரசியல்வாதிகளின் பித்தலாட்டத்திற்கு உதவிபுரிகின்றது. இவ்வாறான இனவெறி கோசத்தின் மூலம் மக்களை போலி அரசியலுக்கு மக்களை அணிதிரட்ட முடிகிறது.

ஒருவர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அழிப்பது போல் பற்பல இனங்கள், மொழிகள் அழிக்கப்பட்டு இன்று புதிய மொழிகள், இனங்கள் உருவாகியிருக்கின்றன. எல்லா இனங்களினதும் கரங்களிலும் இரத்தம் தோய்ந்து தான் உள்ளது இன்று எல்லா இனத்தவரும் மறந்து தமது பெருமை பற்றி பேசித் திரிகின்றனர். பேசப்படும் மொழிகள் எல்லாம் வேற்று மொழிகளில் கடன் வாங்கித் தான் இருக்கின்றன. தேசிய இனங்கள் எனப்படுபவைகள் எல்லாம் காலவரலாற்றில் சமூக மயப்படுத்தலின் ஊடாக தமக்கென ஒரு அடையாளத்தை, அந்தஸ்தினை, பாரம்பரியத்தினை ஏற்படுத்திக் கொள்கின்றன. இந்த வகையில் உலகில் எத்தனையோ பழைய இனக்குழுக்கள், தேசிய இனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. புதிய தேசிய இனங்கள் உருவாகியிருக்கின்றன. இவைகளை விஞ்ஞான அறிவு பூர்வமாக சிந்திக்கும் போது இறுதியில் மனிதநேயமே மிஞ்சியிருக்கும்.



# 2.4. தேசியப் போராட்டம் என்றால் என்ன?

போராட்டங்கள் தொடர்கின்றன, இவைகள் சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களால் உருவாகின்ற நிர்க்கதியான நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியை அடிப்படையாக கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் ஏதோ ஒரு அடையாளத்தை, குறிக்கோளை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபடுகின்றன. இவைகள் சரியாக அடையாளம் காணப்படாமல் குழப்பமான நிலையை அடைகின்றன. ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் ஒருவரை ஒருவர் மோதவிடுகின்ற நிலையை மாற்றி சரியான எதிரியை அடையாளப்படுத்த வேண்டும். இதற்கு தேசிய இனங்கள் என்றால் என்ன, தேசியப் போராட்டங்கள் என்றால் என்ன என்பது பற்றியும் புரிதல் அவசியமாகின்றது. மார்க்ஸ், லெனின் காலத்தில் இருந்த இனப்பிரச்சினையின் வகைகளை விட தற்காலத்தின் தேசிய இனப்பிரச்சினை வகைகள் விரிவடைந்துள்ளன. லெனின் (நூல் திரட்டு 1) வளர்ந்த முதலாளித்துவ நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பா மற்றும் பால்கன் நாடுகளின் முதலாளித்துவ கடமையை முடிந்துக் கொண்டு சோசலிசப் புரட்சியை நோக்கி நடைபெறுகின்ற, மற்றும் கொலனித்துவத்தின் அடிமைத் தனத்தில் இருந்து விடுதலை பெறுகின்ற நாடுகள் என மூன்று விதமாக வகுத்துக் கொண்டார். இன்றைய சர்வதேச நிலை வெகுவாக மாற்றமடைந்திருப்பதால் பல்வேறு வகையான தேசியக் கோரிக்கைகள் எழுகின்றன.

## 2.4.1 தேசிய இனப் பிரச்சனையின் வகைகள்

1. ஏகாதிபத்திய நாடுகளில்

- ஐரோப்பிய ஒன்றியத்திற்கெதிரான போராட்டம்.
- தனிநாடுகோரி போராடும் நாடுகள் உதாரணம் கனடாவில் கியூபெக், பாஸ்கலாணட், காத்லாண்ட் (Spain) பிரித்தானியாவில் ஸ்கொட்லாண்ட், அயர்லாந்து முதலியன.
- இத்தாலியில் பிரதேசபிரிவினை கோரியும்,

உ. முதலாளித்துவம் வளர்ந்து வரும் நாடுகள்,

- அ.)கிழக்கு ஐரோப்பிய நாடுகள்,
- ஆ.) மற்றைய ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள்.

3. பழங்குடிகளைக் கொண்ட நாடுகளில்

- (அ) உள்ளூர் சுரண்டலாளருக்கு
- (ஆ) ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிராக.

4. ஏகாதிபத்தித்திற்கு எதிரான தேசியப் போராட்டங்கள். (கியூபா, வடகொரியா) இவ்வகையான தேசியப் போராட்டங்கள் தற்போது காணப்படுகின்றன.

## 2.4.2 தேசிய இனம் என்றால் என்ன?

இன்றைய உலகில் புதிய தேசிய இனங்கள் என தம்மை நிலைநிறுத்த எத்தனிக்கின்றன பல. இவ்வாறான நிலையில் இவை எவ்வாறு சாத்தியமாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் புதிய தேசிய இனங்களின் உருவாக்கமும் அவை ஒரு தேசத்தை உருவாக்கிக் கொள்ள உரிமை உள்ள நிலையில் அவை பற்றிய விளக்கமும் தேவையானது. பல ஆபிரிக்க, ஆசிய நாடுகள் குறிப்பாக இந்தியாவை எடுத்து நோக்கும் போது பற்பல புதிய தேசிய இனங்கள் தமக்கு ஒரு தேசத்தை நோக்கி செல்கின்றது. சிக்கலான சமூக படிமுறையைக் உறவுமுறையாகக் கொண்ட சமூகமானது மிகவும் நெருங்கிய கடமைகளையும், பொறுப்புக்களையும், தார்மீகக் கடமைகளையும் அடங்கிய சமூக உறவைக் கொண்டு இருந்தது. இந்தச் சமூக உறவு முறை என்பது சிதைவடைந்து ஆள்வதற்கு பொதுவான ஆட்சியாளர் தம்மைத் தாமே பிரதம ஆட்சியாளர் என தமது அதிகாரத்தால் நிலை நிறுத்திக் கொண்டார்கள். இவர்கள் தமது இருப்பை பாதுகாக்க மக்களின் விரும்பு வெறுப்பு தெரியாமலே நிர்ப்பந்தமாக ஒன்றினைக்கப்பட்டனர். இந்த ஒன்றினைப்பு பல வடிவங்களில் காலப் போக்கில் தேவைகளுக்கேற்ப ஒன்றை ஒன்று விழுங்கி ஏப்பம் விட்டது. எவ்வாறு இது நடைபெற்றது என்பதைப் பார்ப்போம்.

தேசிய இனம் என்ற வரையறை என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டம் (மொழி) பொருளாதாரம், கலாச்சாரம், பிரதேசம் இவைகளேயாகும். இந்த வரையறை ஒரு தேசத்தை கொள்ள தகுதியுடைய மக்கள் கூட்டத்தையும், அந்தத் தன்மைகள் அனைத்தையும் கொண்ட இனத்தை ஒரு தேசியம் எனவும் கொள்ள இந்த வரையறை பாவிக்கப்படுகின்றது. அதேவேளை தாம் ஒரு தேசியம் எனக் கொள்கின்ற மனோநிலை என்பது வெறுமனே திடீரென ஏற்படுவதில்லை. இந்த மனோநிலை என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் சடங்கு, சம்பிரதாயங்கள், உடுபுடவை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றுடன் அந்த இனத்தின் சின்னம் என்பது பொதுமைப்படுத்தப்படுகின்ற செயற்பாட்டை மையமாகவும் கொண்டு அரசியல் நீரோட்டத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. அந்த இனத்தின் பொது அடையாளமானது முன்னைய சமூதாயத்திலிருந்து அந்த மக்கள் பிரிவினர் பரம்பரையாக காவிக் கொண்டு வருகின்றனர்.

பிரச்சினை என வரும் போது மக்கள் கூட்டத்தை ஒரே இனம் என்ற வரையறையில் அணிதிரட்ட இதுவகை செய்கின்றது. பழைய குலங்களின் உற்பத்தி முறை

உடைக்கப்பட்டு புதிய உற்பத்தி முறை தோற்றம் பெறுவதன் ஊடாக பழைய சமுதாய முறை மாற்றமடைகின்றனது. சமூக மாற்றத்தை ஏங்கெல்ஸ் பின்வருமாறு விபரிக்கின்றார். "இந்த சமூகப் புரட்சியின் விளைவாகக் குல அமைப்பு என்ன ஆயிற்று என்பதை இப்பொழுது பார்ப்போம். அதன் உதவியில்லாமல் வளர்ந்துவிட்ட புதிய சக்திகளுக்கு எதிரே அது பலவீனமாகக் கிடந்தது. ஒரு குலத்தின் அல்லது ஒரு இனக்குழுவின் உறுப்பினர்கள் ஒரே பிரதேசத்தில் ஒன்றாகச் சேர்ந்து வசிக்க முடியும் என்ற நிபந்தனையை அந்தக் குல அமைப்பு ஆதாரமாகக் கொண்டிருந்தது. ஆனால் இது என்றோ மறைந்து விட்டது. குலங்களும் இனக்குழுக்களும் எங்குமே ஒன்றாகக் கலந்து விட்டன. எங்கு பார்த்தாலும், அடிமைகளும் பாதுகாப்பு பெற்று வந்தவர்களும் அந்நியர்களும் சுதந்திரமான குடிமக்களிடையே வாழ்ந்து வந்தார்கள். ஒரே இடத்தில் நிரந்திரமாக வசிக்கின்ற நிலை அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தின் முடிவில் கிடைக்கப் பெற்றதாகும். அதற்கு மக்கள் இடப்பெயர்வினாலும் வீடு மாற்றங்களாலும் அடிக்கடி குறுக்கீடுகள் ஏற்பட்டன. வர்த்தகம், வேலை மாற்றம், நிலமாற்றம் எல்லாம் அவற்றைப் பொறுத்தவையாக இருந்தன.

குலக்குழுக்களின் உறுப்பினர்கள் இனிமேல் தமது பொது விவகாரங்களைக் கவனிப்பதற்கு ஒன்றாகக் கூட முடியவில்லை, மதச் சடங்குகள் போன்ற சில்லறைக் காரியங்கள் தான் கடைப் பிடிக்கப்பட்டன, அவை கூட அலட்சியமாகவே செய்யப்பட்டன. எந்தத் தேவைகளுக்காகவும் நலன்களுக்காகவும் குல உறுப்புக்கள் நியமிக்கப் பெற்றும் கவனிப்பதற்குத் தகுதியாக்கப்பட்டும் இருந்தனவோ, அவற்றுடன் கூடுதலாகப் புதிய தேவைகளும் நலன்களும் தோன்றின. வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுகின்ற நிலைமைகளில் ஏற்பட்ட புரட்சியினாலும் அதனால் சமூகக் கட்டுக் கோப்பில் ஏற்பட்ட மாறுதலினாலும் இவை தோன்றின. இவை பண்டைய குல அமைப்புக்குப் புறம்பானவை மட்டுமல்ல, ஒவ்வொரு வழியிலும் அதில் குறுக்கிட்டுத் தடுத்தன. உழைப்புப் பிரிவினையால் ஏற்பட்ட கைவினைஞர் குழுக்களின் நலன்கள், நாட்டுப் புறத்துக்கு எதிரிடையாகவுள்ள நகரத்தின் விசேஷத் தேவைகள் ஆகியவற்றிற்குப் புதிய உறுப்புகள் அவசியமாக இருந்தன.

ஆனால் இக்கைவினைஞர் குழுக்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு குலங்கள், பிராட்ரிகள், இனக் குழுக்களிலிருந்து வந்த நபர்கள் இருந்தார்கள், அவர்களில் அந்நியர்களும் இருந்தார்கள். எனவே புதிய உறுப்புகள் குல அமைப்புக்கு வெளியே, அதனுடன் இணைகரமாக, அதே சமயத்தில் அதற்கு எதிராகவே உருப்பெறுதல் அவசியமாயிற்று. மேலும், ஒவ்வொரு குலக்குழுவிலும் நலன்களுக்கு இடையில் மோதல் வெளிப்பட்டு வந்தது, பணக் காரர்களையும் ஏழைகளையும் ஒரேகுலமும் ஒரே இனக்குழுவும் பிணைத்து கொண்ட பொழுது இந்த மோதல் உச்ச நிலையை அடைந்தது. () இந்த வர்க்கங்கள் ஒன்றோடொன்று போராடிக் கொண்டிருக்கும் நிலையில் மட்டுமே இச்சமுதாயம் இருக்க முடியும், அல்லது அது ஒரு மூன்றாவது சக்தியின் ஆட்சியின் கீழ் இருக்க முடியும், அந்தச் சக்தி ஒன்றோடொன்று போராடிக் கொண்டு இருக்கின்ற வர்க்கங்களுக்கு அப்பால் நிற்பதாக வெளியில் காட்டிக்கொண்டு, அவற்றின் பகிரங்கமான சண்டையை ஒடுக்கிக் கொண்டு, அதிகமாகப் போனால், பொருளாதாரத் துறையில் மட்டும், சட்டவடிவம் என்று சொல்லிக் கொள்ளப்படுகின்ற ரீதியில் வர்க்கப் போராட்டத்தை அனுமதிக்கும்.

குலஅமைப்பு காலம் கடந்ததாகி விட்டது. உழைப்புப் பிரிவினையும் அதனால் சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்தவிளைவும் அந்தக் குல அமைப்பை உடைத்து விட்டன. அதனிடத்தில் அரசு வந்து." (ஏங்கெல்ஸ் ப. 272 – 4 கு.த.அ.தோ) இந்த வழிவந்த குலங்களின் வளர்ச்சியடைந்த ஒரு இனக்குழுவானது மற்றைய இனக் குழுக்களுடன் பரிமாற்றத்தில் ஈடுபடுகின்றன. ஈடுபட்டு ஒன்றையொன்று தமது பண்பாட்டை பரிமாறிக் கொள்கின்றன. இந்நிலையானது நிலப்பிரபுத்துவத்தின் தோற்றமானது சாத்தியம் ஆக்கியது, அதாவது நிலப்பிரபுத்துவத்துவமானது தேசிய இனங்களை தோற்றுவித்தது.

மக்கள் இனங்கள் இணைகின்றன. இணைவுகள் பல வழிகளில் இடம் பெறுகின்றன. பரிமாற்றம் தொடர்பு போற்றவற்றால் மக்கள் மற்றவர் மொழிகளையும் கற்றுக் கொள்கின்றனர். மக்களை மொழியினை பறித்தெடுத்தல். மொழியினை பறித்தெடுக்கும் நிலை கொலனித்துவ காலத்தில் நிர்ப்பந்தமாகவும் நிகழ்ந்தது. கலாச்சார பண்பாடு ஒன்று கலத்தல், பொருளாதார முனைப்புகள் ஒன்றுபடுதல் போன்றவை நிகழ்கின்றன. "மக்கள் தொகையின் அடர்த்தி அதிகரித்து உள்ளும் வெளியும் இன்னும் நெருக்கமான ஒன்றுபடுதல் அவசியமாயிற்று. இரத்த உறவுமுறை இனக்குழுக்கள் கூட்டாக சேர்வதும் பின்னர் வெகுவிரைவில் அவை ஒன்று கலப்பதும் அதன் பிறகு தனித்தனி இனக்குழுப் பிரதேசங்கள் மக்களினத்தின் ஒரே பிரதேசமாக இணைவதும் எங்குமே அவசியமாயின." (ப 267. கு.அ.த.தோ) முன்னர் கூறியது போல் உற்பத்தி முறைகளின் ஊடாகவே பரிமாற்றங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. இந்தப் பரிமாற்றத்திற் கூடாக மக்கள் கலப்பது விரிவடைகின்றது.

வர்க்கச் சுரண்டல் காரணமாக இந்த மக்கள் தமது சீவனோபாயத்தை விட்டு சுரண்டல்ப் பொருளாதார அமைப்பை தங்கி நிற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். இந்த மக்கள் உழைப்பை விற்கின்ற போது கூட தமது அடையாளத்தையும் சேர்த்தே இழக்கின்றன. "புதிய தலைமுறைக்கு புதிய வளர்ச்சியின் ஒரு தொடக்கப் பள்ளியாக அமைந்தது. மேலும் இந்த 400 ஆண்டுகள் எதையும் படைக்கவில்லை என்று தோன்றினாலுங் கூட அவை ஒரு மாபெரும் பொருளை – நவினகாலத் தேசிய இனங்களை விட்டுச் சென்றது." (253 கு.த.அ.தோ) சிங்கள, தமிழ்த் தேசிய இனமானது நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதாக உள்ளது. அதாவது வரலாற்றுத் தரவுகளில் இருந்து மற்றைய தேசிய இனங்களை விட பழைமையான வரலாற்று தடயங்களைக் கொண்டுள்ளது. ஆனால் சமூக மயப்படுத்தலின் ஊடாக உருப்பெற்ற தேசிய இனங்களையும் இங்கு நோக்குதல் வேண்டும்.

தனியே இனக்கலவை அற்ற இனத்தை இன்று காண்பது அரிது. பல இனக்குழுக்கள் ஒன்று சேர்ந்ததே தேசிய இனங்களாகும். ஸ்ராலின் தனது வரையறையில் பிரான்ஸ் இனத்தவரை பல இனங்களின் கலப்புத் தன்மையை கூறுகின்றார். இவைகள் மொழிகளில் கலப்புக்கள் ஏற்பட்டு புதிய மொழிகளை ஏற்படுத்துகின்றது. இது வேலைப் பிரிவினையின் வளர்ச்சியின் ஊடாகவே இடம் பெறுகின்றது. இந்த இனங்கள் ஒன்றை ஒன்று கலப்புற்று புதிய இனத்தை உருவாக்குகின்றன. இவைகள் ஒப்பீட்டு ரீதியில் மற்றைய இனங்களைப் போல் அல்லாமல் இளம் வயதுடைய தேசிய இனங்களைச் சேர்ந்தவைகளே. ஆனால்

சுயநிர்ணயம் என்ற கோரிக்கை எழுகின்ற போது இளம் தேசிய இனம், பழம் பெரும் தேசிய இனம் எனக் கொள்ள முடியாது. மாறாக அதன் தேவையே முக்கியமாக கணக்கில் கொள்ளல் வேண்டும்.

தேசியம் என்கின்ற போது ''மார்க்ஸியத் தத்துவத்தில் தேசம் (nation) என்பது நிலப்பரப்பு, பொருளாதார உறவுகள், மொழி, கலாச்சாரம், மனப்பாங்கு இவற்றில் காணும் சில தனித்தன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் இடையே வரலாற்று வழியில் உருவாகிய ஒற்றுமையைக் குறிக்கிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்துக்குரிய உறவுகள் உருவாகிய போது தேசிய இனத்தின் (nationality) காட்டிலும் மேலான சமூக – வரலாற்று வழிபட்டதாகிய தேசம் உருவாகி வளர்கிறது.

மனித இனம் (race), குலம் (tribe), மதம், அரசு ஆகியவற்றிலிருந்து தேசத்தை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும். (பக். 301 குறிப்பிலிருந்து, நூல் திரட்டு 1) தேசிய முதலாளித்துவ வர்க்கமானது தனக்கே உரித்தான உலகப் பார்வையை கொண்டுள்ளது. உலகப் பார்வை எனும் போது தன்னுடைய வர்க்க நிலையில் இருந்து தனது நலனைப் பேணிக் கொள்ளும் வகையில் உருவாக்கிக் கொண்ட உலகைப் புரிந்து கொள்ளும் வழிமுறையாகும்.

தேசிய இனக் கோரிக்கையை முதலில் முன்வைப்பவர்கள் உயர்மட்டத்தில் இருப்பவர்களே பாட்டாளிகள் மற்றும் தொழிலாளர் வர்க்கம் நித்தம் வாழ்விற்கான போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பவர்கள், இவர்களுக்கு முதலில் இனத்துவ ஒடுக்குமுறை என்பது முதன்மையானதாக இருப்பதில்லை. உயர் வர்க்கங்கள் இடையே ஏற்படுகின்ற போட்டியானது, தொழிலாளர் வர்க்கத்தையும் பங்காளிகளாக உருவாக்கின்றது. ''இவ்வாறு துவங்கிய போராட்டம் பரவத் தொடங்கியது. உண்மையில் பார்க்கப் போனால் இப்போராட்டம் தேசங்களுக்கிடையில் நிகழவில்லை. மாறாக ஆதிக்கம் செலுத்தக் கூடிய தேசிய இனங்களின் ஆளும் வர்க்கங்களுக்கும் அடக்கப்பட்ட தேசிய இனங்களுக்கும் இடையே நிகழ்ந்தது. பொதுவாக இப்போராட்டம் ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்களை (செக் மற்றும் சேர்மன்) சேர்ந்த பெரு முதலாளிகளை எதிர்த்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த நகர்புறக் குட்டி முதலாளிகளால் நடத்தப்பட்டது. அல்லது ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்களைச் (போலாந்தில் உள்ள உக்கிரேனியர்கள்) சேர்ந்த நிலப்பிரபுக்களை எதிர்த்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த நாட்டுப்புற முதலாளிகளால் நடத்தப்பட்டது. அல்லது ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த எல்லா தேசிய முதலாளிகளும் ஒன்று சேர்ந்து ஆதிக்கம் செலுத்தம் தேசிய இனங்களைச் சேர்ந்த ஆளும் வர்க்கத்திற்கு எதிராகத் (ரஸ்சியாவில் போலாந்து, லிதுவேனியா மற்றும் உக்கிரேயின்) தொடுக்கப்பட்டது. முதலாளிகள் இதில் பிரதான பங்கு வகித்தனர்.'' (24 – மாக்சியமும் தேசிய இனப்பிரச்சினையும் – ஸ்ராலின்) மூலதனத்தை கொண்ட முதலாளித்துவ வர்க்கத்தை தமது நாட்டில் முதலீடு செய்யும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதும், சந்தையை பெற்றுக் கொள்ளக் கூடிய சக்தியை உடையதுமான இனத்தின் பிரதிநிதிகளே தேசிய முதலாளிகளாவர். இந்த தேசிய முதலாளித்துவ வர்க்கம் தனது சந்தையை நிர்ணயித்துக் கொள்ளும் சட்ட உரிமை கொண்ட இனம் தேசிய இனமாக போராடுகின்றது.

## 2.4.3 சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?

ஒடுக்கு முறையின் காரணமாக ஒரு இனத்தின் உரிமையை பெறும் பொருட்டு, இருப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, சட்டரீதியாக அங்கீகாரம் கோருவதாகும். அப்படி சமாதான முறையில் நடைபெறாவிடின் பலாத்காரமாக நிறைவேற்ற முயல்கின்றனர். சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனத்தின் தேவையை அடிப்படையாக தீர்மானிக்கப் படுவது மாறாக அதன் அகத் தேவைகளை பூர்த்தி செய்யும் நிபந்தனையுடனேயே தீர்மானிக்கப் படுகின்றது. "தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் வழியில் சுதந்திரம் பெறும் உரிமையை, ஒடுக்கும் தேசத்திலிருந்து அரசியல் வழியில் சுதந்திரமாகப் பிரிந்து போகும் உரிமை ஒன்றைத் தான் குறிக்கின்றது." (பக் 306 லெனின் – நூல் திரட்டு1) இங்கு குறிப்பாக முதலாளி வர்க்கத்தின் சந்தையை உறுதி செய்வது அடங்கி இருக்கின்றது.

ஒடுக்கும் வர்க்கம் தமது சந்தையை பாதுகாக்கும் பொருட்டு மற்றைய இனத்தின் மீது நிர்ப்பந்தம் புரிகின்றது. நிர்ப்பந்தத்தின் விழைவு ஒரு இனத்தின் பிரதிநிதி என்பதால் பாட்டாளி வர்க்கமே ஒடுக்குதலுக்கு உள்ளாகுவதனால் அவர்களின் இருப்பை உறுதி செய்ய வேண்டியது முக்கியமாகின்றது. ஆனால் இந்த சுயநிர்ணயப் போராட்டத்திற்கு தேசிய முதலாளிகளே முன்னுக்கு நிற்கின்றனர். இந்நிலை துரதிஷ்டமானது மாறாக பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலேயே சுயநிர்ணயப் போராட்டம் நிகழ வேண்டும். சுயநிர்ணயத்தை பின்வருமாறு ஸ்ராலின் வரையறுக்கின்றார். "சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனம் தான் விரும்பக் கூடிய வகையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்பதாகும். தன்னாட்சி அடிப்படையில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அதற்கு உரிமையுண்டு. ஏனைய தேசிய இனங்களுடன் கூட்டரசுக் கோட்பாடு அடிப்படையில் உறவு வைத்துக் கொள்வதற்கும் அதற்கு உரிமையுண்டு. பின் அக்கூட்டரசிலிருந்து முழுமையாக பிரிந்து செல்வதற்கும் அதற்கு உரிமை உண்டு. தேசங்கள், இறைமைத் தன்மை கொண்டவை, தேசங்கள் அனைத்தும் சமமானவை ஆகும்." (32 மா.தே. இ.பி. ஸ்ராலின்) குறிப்பிட்ட பிரச்சினையை எடுத்துக் கொண்டால் எது தேச மக்கள் பிரிந்து போகக் கூடாது என்ற பொருள்படாது. அதேவேளை ஒருநாடு பிரிகிறதா? அல்லது சேர்ந்திருப்பதா என தீர்மானிப்பது உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் சூழ்நிலையே. போராடும் சக்திகளின் பலத்தைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினை பற்றி இயங்கியல் ரீதியாகவே அணுகவேண்டும்.

இன்றைய நிலை தமிழ் இனம் விடுதலை யுத்தத்தை நடத்திக் கொண்டு இருக்கின்றது. போராட்டத்தை கைவிடும் படிகோர முடியாது. ஆயுதங்களையும் எதிரியிடம் ஒப்படைக்கவும் முடியாது. பொதுவுடமைவாதிகளுக்கு இனம், மதம், மொழி, சாதி. இல்லை என்ற நிலைப்பாட்டிற்கு மாறாக அல்லாமல்,

பாட்டாளிகளின் ஒற்றுமையை முதன்மையாகக் கொண்டும், வர்க்கப் புரட்சியை நிபந்தனையாகக் கொண்டே சுயநிர்ணயத்தை ஆதரிக்கப்படுகின்றது. அப்பொழுதே சுயநிர்ணயம் என்பது நியாயம் பெறுகின்றது. பாட்டாளி மக்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்ற நிலமைகளில், எவ்வாறான போராட்ட யுக்தியை பொதுவுடமைக் கட்சி வகுக்க வேண்டும் என்பதில், முதலாளித்துவ தேசிய வாதிகளுக்கும், பொதுவுடமைவாதிகளுக்கும் இடையில் மாறுபாடான யுக்திகள் அடங்கியிருக்கின்றது.

சுயநிர்ணயம் என்பது வேறு, தேசம் பிரிதல் என்பது வேறு ''சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வது, ஒரு கோட்பாடு என்ற முறையில் கூட்டாட்சியை ஏற்றுக் கொள்வதற்குச் சமமல்ல, ஒருவர் அக்கோட்பாட்டை உறுதியாக எதிர்ப்பவராகவும், ஜனநாயக மையப்பாட்டை ஆதரிப்பவராகவும் இருக்கலாம், ஆயினும் முழுமையான ஜனநாயக மையப்பாட்டை அடைவதற்குரிய ஒரே வழி என்ற முறையில் தேசங்களின் ஏற்றத் தாழ்வுகளைவிடக் கூட்டாட்சி நல்லதென்று விரும்பலாம். இதே கண்ணோட்டத்துடன் தான் மையவாதியான மார்க்ஸ், ஆங்கிலேயர்கள் அயர்லாந்தை வன்முறையில் அடிமைப்படுத்தி வைத்திருப்பதை விட அயர்லாந்தும் இங்கிலாந்தும் சேர்ந்த ஒரு கூட்டாட்சி மேலானது என்று கருதினார். (பக்.307 நூல் தொகுப்பு 1 – லெனின்) ஒவ்வொரு நாட்டின் உடைய இணைவு ஆனது சுதந்திரமாக இணைந்து கொள்வதில் நிர்ணயம் பெறுகின்றது. அதாவது உதிர்ந்த நிலையில் இருக்கின்ற போது ஒவ்வொரு தனிநபர்கள், இனங்கள் இணைந்து கொள்ளும் போதே சுயநிர்ணயம் என்பது பொருள் உள்ளதாகவும், விருப்பு வெறுப்பைக் கவனத்தில் கொண்டு முரண்பட்ட சக்திகள் ஒன்றிணைந்ததாக கொள்ள முடியும், அதுவே உண்மையான சுதந்திரம் அடங்கியுள்ளது.

நாடுகள் பிரிந்த பின்னர் அவைகள் இணைந்து கொள்ளவும் முடியும். ''பிரிவினைக்குப் பிறகு ஒரு வேளை கூட்டாட்சி ஏற்படலாம்'' (பக். 313 மார்க்ஸ் நூல் தொகுதி 1 – லெனின்) இவைகள் சுதந்திரமாக நடைபெறவேண்டும். உண்மைச் சுதந்திரம் என்பது இதில் தான் அடங்கி இருக்கின்றது. ஒரு தேசிய இனம் என்றால் கட்டாயம் பிரிந்து போகவேண்டும் என்றில்லை. எல்லா வகையான தேசியப் பிரிவினைகளையும் நிபந்தனையுடனே அல்லது நிபந்தனை இன்றியே ஆதரிக்க வேண்டும் என்பதில்லை. உதாரணமாக தமிழ் மக்களுக்கு என்று உலகில் எந்தவொரு நாடுகளும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் உலகில் நாடு இல்லை என்பதற்காக, ஒரு நாடு உருவாக்கப்படவேண்டும் என்பது அகவுணர்வு சார்ந்தாகும்.

## 2.4.4.1 முசுலீம் மக்கள் என்பர் யார்?

இன்றைய முசுலீம் மக்கள் அராபிய தேசத்தில் இருந்து வந்து குடியேறிய அரபு தேசத்தவர்களாக இருக்க முடியுமா என்பது கேள்விக் குறியாகும். இந்தியாவை எடுத்துக் கொண்டால் யூதர்கள், சிரியர்கள், யாவர்கள் (ரோமர், கிரேக்கத்தவர்)

குடிபெயர்ந்ததற்கான அடையாளங்கள் இருக்கின்றன. இலங்கை வரலாற்றில் பெரும்பான்மையான அரபு தேசத்தவர் குடியேறி இருப்பதற்கு சான்றுகள் இல்லை. அதே போல் இசுலாமிய மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்ததும் இல்லை. ஆனால் (பக் 45 யாழ்ப்பானச் சரித்திரம் – இராசநாயகம்) பத்தாம் நூற்றாண்டில் பாரசீக மன்னர் தன்னை அவமதித்த மன்னனுக்கு எதிராக படை எடுத்தாக இராசநாயகம் குறிப்பிடுகின்றார். இசுலாமிய ஆட்சிக் காலத்திலேயே வேளாளர்கள் பாண்டிய மன்னன் தலைமையில் இலங்கையில் குடியேறியதாக யாழ்வைபவமாலை குறிப்பீடுகின்றது.

ஆனால் வெள்ளையர் வரும் முன்னர் பலகாலமாக அராபியர் வசமே வியாபாரம் முழுவதும் தங்கியிருந்தது என இராசநாயகம் கூறுகின்றார். "கி.பீ 1626ல் இலங்கைத் தேசாதிபதியாயிருந்த கொன்ஸ்தான்தினோ (Constantino de Sa de Noronha) என்பவன் போர்த்துக்கல் தேசத்தரசன் கட்டளைப்படி, தங்கள் வியாபாரத்துக் கிடையூறாயிருந்தார்களென்றெண்ணப்பட்ட முஸ்லீம்கள் எல்லோரையும் துரத்தி விட்டான். அதனால் அவர்கள் கும்பல் கும்பலாய்ப் போய்க் கண்டியரசனைச் சரணடைந்தார்கள். அவனும் அப்படி வந்தவர்களில் 4000 பேர் கொண்ட சனத் தொகையை மட்டக்களப்பிலிருத்தி, எஞ்சினோரைத் தன் தேசத்திற் பல கிராமங்களிலும் வசிக்கச் செய்தான். மத்திய மாகாணத்தில் பல முஸ்லீம் கிராமங்கள் சிதறியிருப்பதற்கு காரணமிதுவே. (பக் 144 யாழ்ப்பானச் சரித்திரம் – இராசநாயகம்) வெள்ளையர்கள் இவர்களை அப்புறப்படுத்தும் போது இந்தக் குடிகள் பூர்வீகக் குடிகளாக இருக்க முடியும் என்ற நிலையை புரிந்து கொள்ள சந்தர்ப்பம் இல்லை. அவர்களுக்கு இருந்தது என்னவோ சிலுவைப் போரில் எற்பட்ட வரலாற்றுத் தடயமும், புறயினத்தார் என்ற கருத்தோட்டமும் வெள்ளையர் மத்தியில் இருந்திருக்கும் என கருத இடமுண்டு.

யாழ் வைபவமாலையில் மதம் மாறிய தமிழ்க் குடிகள் என்றே குறிப்பிடப்படுகின்றது. ஒரு இடது சாரி தோழர் ஒருவருடன் கடந்த கால இடதுசாரி இயக்கம் பற்றி கலந்துரையாடிய போது சில செய்திகளை அவரிடம் இருந்து பெறப்பட்டது. இலக்கிய மாநாடு ஒன்றில் இடம் பெற்ற கருத்துப் பற்றிக் கூறினார். கிழக்கில் கல்முனையில் பரதவ உட் பிரிவினர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள் காலம் காலமாக நடைபெற்று வந்தது. இதில் பாதிக்கப்பட்ட மற்றக் குழுவானது பின்வாங்கியது. இதனைக் கண்ட வியாபாரிகள் பாதிக்கப்பட்ட குழுவிற்கு உதவினர். இவ்வுதவியின் மூலமாக மற்றைய குலத்தினரை விரட்டியடித்தனர். இதற்கு நன்றிக் கடனாக அவ்வியாபாரிகளின் மத ஒழுக்கத்தை பின்பற்றினர். இவ்வாறே தமிழ் மக்கள் ஒருபகுதியினர் இசுலாமிய மதத்தை பின்பற்றினர். இந்தக் கருத்தை தரவுவாயிலாக நிரூபிக்க முடியவில்லை. ஆனால் இக்கருத்தை ஒதுக்கிக் கொள்ளவும் முடியாதுள்ளது. முசுலீம் மக்கள் மற்றைய இனங்களின் வரலாற்றை போலவே பற்பல மக்களினங்களின் ஒருகலவையாகும். இவர்கள் முன்னோர்கள் அரபு தேசங்களில், மற்றைய தேசங்களில் இருந்தும் வந்தவர்களும் மதமாற்றம் செய்யப்பட்டவர்களும் இதில் அடங்குவர். ஆனால் இவர்கள் தம்மை ஒரு தேசத்திலிருந்து வந்தவர்களின் பரம்பரை எனக் கூறுவார்ளேயானால் அதுவெறும் மிகைப்படுத்தல் ஆகத்தான் இருக்க முடியும்.

ஒரு மக்கள் கூட்டம் பிற சமூகத்துடன் சேர்ந்து வாழாமல் தனித்தே தமது அடையாளத்தை பேனமுடியும். அப்படி நிகழ்வது சாத்தியான ஒன்றே யாகும். அது அவர்களின் உலகப் பார்வையுடன் சம்பந்தப்பட்டதாகும். ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் கூட்டம் தன்னைத் தானே பாதுகாத்து வருவதும் நீண்ட காலத்திற்கு அவர்கள் தமது அடையாளத்தை பாதுகாத்து வருவதும் நாம் வரலாற்றிலே காணக் கூடியதாகவுள்ளது. சிந்துவெளியில் திராவிடர்களின் கலாச்சாரம் அழிந்த பிற்பாடும் அவர்களில் ஒருபகுதியினர் இப்பவும் பாக்கிஸ்தான். ஆப்கானிஸ்தானில் தொடர்ந்தும் வாழ்கின்றனர்.

அதே போல் ஒரு பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் மத்தியில் உருவாகிய இசுலாமிய மதம் என்பது இன்னொரு பிரதேசத்தில் வேறு மக்களிடையே புழக்கத்தில் இருக்கும் போது சில குறிப்பிட்ட மதப்பிரிவினரிடையே மிகவும் கண்டிப்பாக கடைப் பிடிக்கப்படுபவர்களாலேயே பரப்பப் பட்டிருக்கின்றன. அன்றைய நாட்களில் தொடர்பு என்பது குறிப்பிட்ட அளவிலேயே இருந்தது எனலாம். பரப்பப்பட்ட இசுலாம் அரபு நாட்டில் இருக்கின்ற அனைத்து விதமான தன்மைகளையும் உள்ளடக்கியாதாக இருக்க முடியாது. மதங்கள் பரப்பப்பட்ட போது உள்ளூர் தன்மைகளையும் உள்வாங்கிக் கொண்டுள்ளது.

மதப் பிரிவு என்பது பொருளாதார நியதிகளை அண்டியே இருந்திருக்கின்றது. பொருளாதார அதிகார பலம் பொருந்தியவர்களின் திசை திருப்பத்திற்கே மத மாற்றங்களும் நிகழ்ந்திருக்கின்றன. இது கிருத்தவ மதமானால் என்ன? மேற்கில் கடைப்பிடிக்கப்படும் கிருஷ்ணா போன்ற பக்தி இயக்கமானால் என்ன, எல்லாம் ஒரே நிலைதான். ஏனெனில் அன்றைய காலங்களில் ஒவ்வொரு இனக்குழுக்களும் தமக்கே உரித்தான உலகப் பார்வையையும், கடவுளையும் கொண்டிருந்தனர் என்பதேயாகும்.

தொழில் (வியாபார) நோக்கம் கருதி பல இடங்களிலும் சிதறி வாழ்கின்றனர். இதன் காரணமாக அனைவரையும் ஒரே பிரதேசத்தில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்க முடியாது. இதன் காரணமாக இவர்களை ஒரு தேசிய இனமாக வரையறுப்பதில் குழப்பநிலை காணப்படுகின்றது. அதேவேளை இவர்களை ஒரு தேசிய இனம் என வரையறுப்பதன் மூலம், கட்டாயம் ஒரு தேசத்திற்கு உரியவர் என்ற நிலையும் ஏற்றுக் கொள்ள முடியாது. முசுலீம் மக்கள் தொடர்பான தேசிய வரையறை என்பது உலகின் பல பாகங்களிலும் இன்று கவனத்துக்கு உரியதாகின்றது. அதேவேளை தேசிய இனம் என்று வரையறுக்கின்ற போது மொழி என்பது மாத்திரம் பொதுவாக இருந்தால் மட்டும் போதாது என்ற நிலையானது மலையக. முசுலிம் மக்களை வரையறை செய்கின்ற போது அடங்காது.



## 2.4.4.2 முசுலீம் மக்கள் ஒரு தேசிய இனமா?

இன்று தேசிய இனப் பிரச்சினையானது முக்கிய வேலைத்திட்டத்தில் ஒன்றாக வைக்கப்பட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில், முசுலிம் மக்களை அணிதிரட்டி பாட்டாளி வர்க்க நலனை சென்றடைய வேண்டுமெனில் இவர்கள் சம்பந்தமான முழுமையான பார்வை என்பது அவசியமாகும். தேசிய இனம் பற்றிய வரையறையில் முசுலீம் மக்கள் பற்றிய பிரச்சினை பிரத்தியேகமானது. ஏனெனில் எந்தத் தேசத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் தமது சமயத்தின் மூலமாக தம்மை அடையாளங் கொள்ளும் படியான நிலை என்பது உலகின் பலபாகங்களிலும் உள்ளது. அல்ஜிரியாவில் வாழ்கின்ற பார்பர் (Barber), முசுலீம் நாடுகளில் பரந்து வாழும் குர்டர், மற்றும் அரபு தேசத்தவர் ஒரே மொழி, ஒரே மதமாக இருப்பினும் தம்மை ஒரே தேசிய இனம் எனக் கொள்வதில்லை. இந்த நிலை ஒரே மொழியை பேசுகின்ற இலங்கையாகினும் சரி, முன்னால் யூகோஸ்லாவியாவாக இருந்தாலும் சரி இதே நிலை தான் மதத்தின் அடிப்படையில் ஒரு தேசிய இனத்தை வரையறுக்கமுடியாது. ஆனால் மதத்தின் கருத்தியலுக்கு அப்பால் அவர்களுடைய அடையாளம் என்பது அதன் மையம் கொண்டு தான் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் போலியுணர்வை அங்கீகரியாது விடும் கொள்கை நிலைப்பாடு புரட்சிகரமானது. ஆனால் ஒரு இனத்தின் பிரத்தியோகமான அடையாளத்தை கவனியாது விடமுடியாது. அதிலே தான் ஒரு இனத்தின் முதலாளித்துவ சனநாயகம் அடங்கியுள்ளது.

மதம் என்பது உலகப் பார்வையுடனுன் சம்பந்தப்பட்டது. அவை மக்களை மேலும் போலியுணர்வுக்குள் ஆழ்த்தி ஒடுக்கும் வர்க்கத்திற்கு சுரண்டுவதற்காக வழிகளை செய்து கொடுக்கின்றது. தேசியம், முதலாளித்துவ ஜனநாயகச் சுதந்திரத்திற்கு வழிவகுக்கின்றது. ஆனால் மதமானது இந்த வகையில் முற்போக்குப் பாத்திரம் வகிக்காமல் போலி உணர்வை வளர்க்கின்றது. தேசியம் பழைய சமூக உறவுகளைத் தகர்ப்பதும் புதியவகை உற்பத்தி முறையினூடே புதிய சமூகத்தை படைப்பதற்கு உதவுகின்றது.

முசுலீம் பிரதேசம் இல்லை இவர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க முடியுமா என்ற கேள்விகள் பரவலாக எழுப்பப்படுகின்றது. முசுலீம் மக்கள் இலங்கை முழுவதும் பரந்து வாழ்கின்றனர் இவர்கள் கிழக்கிலும் மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும், புத்தளம் ஆகிய இடங்களிலும் பரவலாகவும், சிங்கள மக்களிடையே வெவ்வேறு பிரதேசங்களிலும் பரவலாக வாழ்கின்றனர். இவ்வாறு வாழ்பவர்களை ஒரு பரந்த பிரதேசத்தைக் கொண்ட மக்கள் கூட்டத்திற்குத் தான் ஒரு தேசியமாகக் கருதக் கூடிய நிலை இருப்பதாக கருத்துக்கள் இருக்கின்றன. ஒரு இனக் கூட்டமானது தானாக பிரதேசங்களை தெரிந்து எடுப்பதில்லை. மாறாக தொழில் முயற்சிகளே இதனைத் தீர்மானிக்கின்றன. பரந்து வாழ்கின்ற

மக்களுக்கு எல்லை போட்டது நவீன அரசுகளே தமது ஆதிக்க நலன் காரணமாக எல்லைகளை வகுத்துக் கொண்டன. இந்த மாதிரியான வரலாற்றுப் போக்கைக் கொண்ட யூத மக்களைப் பற்றிய பிரச்சினையில் எவ்வாறு ஆசான்கள் நடந்து கொண்டனர் எனப்பார்ப்போம்.

யூதர்கள் பற்றி பின்வருமாறு ஸ்ராலின் கூறுகின்றார், யூதர்களும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தினைக் கொண்டிருக்கவில்லை. ''செக், போலந்து மற்றும் ஏனைய தேசிய இனமக்களுக்கு தேசிய தன்னாட்சி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து பேர் அவர்கள் கூறியதைப் பார்த்தோம். அதே நேரத்தில் யூதர்களுக்கும் இவ்வாறு தன்னாட்சி வழங்குவதை அவர் எதிர்க்கின்றார். யூத மக்களுக்குத் தன்னாட்சி வேண்டும் என்று தொழிலாளர்கள் கோரவேண்டுமா (ba) என்ற வினாவிற்கு பேர் பின்வருமாறு கூறுகின்றார். 'யூதத் தொழிலாளர்களால் தேசிய தன்னாட்சி வேண்டும் என்று கோர முடியாது. ஏனெனில் முதலாளித்துவ சமூகமானது அவர்களை (யூதர்கள் – ஸ்ராலின்) ஒரு தேசமாக இருக்க அனுமதிக்கவில்லை.

சுருக்கமாக, யூததேசம் என்பது ஒரு இறுதி நிலைக்கு வந்து கொண்டிருக கின்றது. எனவே தன்னாட்சி வேண்டும் என்று கேட்பதற்கு யாரும் இல்லை. அங்கங்கே உள்ள யூதர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் வயமாக்கப்படுகின் றார்கள்.

தேசிய இனம் என்ற அடிப்படையில் யூதர்களைப் பற்றிய இந்த நிலை புதிதான ஒன்று அல்ல. 1840 – களின் ஆரம்பத்திலேயே ஜேர்மன் யூதர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது மார்க்ஸ் இவ்வாறு சொல்லியுள்ளார் (bc) இதே கருத்தை 1903 ஆம் ஆண்டு ரஷ்ய யூதர்களைக் சொல்லும் போது காவுட்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.(bd) இதே கருத்தை தான் இப்போது மீண்டும் ஆஸ்திரிய யூதர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது பேர் சொல்ல வேண்டியுள்ளது. ஆனால் ஒரு வேறுபாடு உண்டு. பேர், தற்போதைய யூததேசத்தை மறுக்கவில்லை. எதிர்கால யூததேசத்தை தான் மறுக்கின்றார் என்பது தான் அந்த வேறுபாடாகும்.

யூதர்கள் ஒரு தேசத்தைத் தொடர்ந்து பாதுகாப்பதன் சாத்தியமின்மை பற்றி பேர் விளக்குகிறார். அதாவது யூதர்கள் தம் குடியிருப்புக்கு என்று வரையறுக்கப்பட்ட பகுதியை வைத்திருக்கவில்லை என்பதே அந்த விளக்கமாகும். இந்த விளக்கம் சாரத்தில் சரியானதாக இருந்தாலும், இதுவே முழு உண்மையாகிவிடாது. இதில் உண்மை என்னவென்றால் யூதர்களுக்கு பிரதானமாக நில அடிப்படையில் பெரிய அளவில் நிரந்தரமாக எந்த சமூக நிலைப்பாடும் கிடையாது. ஆனால் அது தான் இயற்கையாக அவர்களை ஒரு தேசமாக அமையக்கூடிய அடிப்படையாகவும், ''தேசிய' சந்தையாகவும் விளங்கும். ஐம்பதிலிருந்து அறுபது லட்சம் வரை எண்ணிக்கையில் உள்ள ர்'ய யூதர்களில் மூன்றிலிருந்து நான்கு சதவீதத்தினரே விவசாயத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். எஞ்சியுள்ள 96 சதவீதத்தினர் வணிகத்திலும், தொழில் துறையிலும், நகர்ப்புற நிறுவனங்களிலும் வேலையாய் இருக்கிறார்கள், பொதுவாக அவர்கள் நகரங்களில் வசிக்கிறார்கள். மேலும்

அவர்கள் ரஷ்யா முழுவதிலும் பரவியுள்ளனர். இதனால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அவர்கள் பெரும்பான்மையாக இனத்தினராக இல்லை.

இவ்வாறு அவர்கள் மற்ற தேசிய இனங்களுக்கிடையே சிறுபான்மை தேசிய இனமாக உள்ளனர். இந்த அடிப்படையில் ஏனைய தேசிய இனங்களுக்கு உழைப்பாளிகளாகவும் மேலும் வணிகர்களாகவும், மற்ற தனிப்பட்ட சொந்தத் தொழில் செய்பவர்களாகவும் உள்ளனர். எனவே இயற்கையாகவே ஏனைய தேசிய இனங்களின் மொழி மற்றவற்றை ஏற்றுக்கொண்டு இருக்க வேண்டியுள்ளது. அதேநேரத்தில் முதலாளித்துவத்தின் ஒரு அம்சமாக பல்வேறு தேசிய இனங்களின் நிலைப்பெயர்ச்சி என்பது தீவிரமடைவதையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இதன் காரணமாக யூதர்கள் அந்தந்தப் பகுதிகள் வயமாகின்றார்கள். யூதர்களின் ஆட்சிப் பகுதி ஒழிக்கப்பட்ட பின் இத்தகைய பகுதிவயமாகும் செய்கை அதிகமாயிற்று எனலாம்.

இதன் காரணமாக ரஷ்ய யூதர்களுக்கான தேசியத் தன்னாட்சிப் பிரச்சினை என்பது விசேட அக்கறையைப் பெறுகின்றது. அதாவது நிகழ்காலம் இன்னும் நிருபிக்கப்பட வேண்டிய நிலையிலும் எதிர்காலம் என்பதே இல்லாத நிலயிலும் உள்ள ஒரு தேசியஇனத்திற்குத் தன்னாட்சி வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.'' (ப 61 – 63 மாக்சியமும் தேசிய இனப்பிரச்சனையும் – ஸ்ராலின்)

நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் பிற்போக்கு இசுலாமிய அடிப்படைவாதத்திற்கும், பிற்போக்குச் சக்திகளிலிருந்தும், தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையீனத்திலிருந்தும், முசுலீம் மக்களை மீட்டு பாட்டாளி வர்க்கப் புரட்சியை நோக்கிச் செல்வதற்கான ஒரே வழியானது தனித்துவத்தை அங்கீரிப்பதாகத் தான் இருக்க முடியும். ஏனெனில் அவர்களின் சுய உணர்ச்சி என்பது தனது இனப் பூர்சுவா வர்க்கங்கள் உசுப்பி விடுவதற்கு பதிலாக புறத்திலிருந்து தாக்குதல் தொடுக்கப்பட்டது ஒரு காரணமாகும். ''காகேசியாவில் உள்ள தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி, **வளர்ச்சியடையாத எல்லா தேசங்களையும், ஒரு பொதுவான உயர்தர கலாச்சார நீரோட்டத்திற்குக் கவர்ந்திழுப்பதேயாகும்.** இதுமட்டுமே ஒரே முற்போக்கான தீர்வாகும். சமூக – ஜனநாயகவாதிகள் ஏற்றுக்கொள்வதும் இதை மட்டுமே ஆகும். வளர்ச்சியடையாத தேசிய இனங்களைப் பொதுவான கலாச்சார வளர்ச்சிக்கு இழுப்பதற்கு காகேசியாவில் வட்டாரத் தன்னாட்சி உதவும் என்பதால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். இது அவர்களுக்கு சிறு தேசம் என்ற தனித் தன்மையே கொண்டிருக்க உதவும் மற்றும் உயர்ந்த தரக் கலாச்சாரத்தின் பலன்களை மதிப்பீடு செய்வதையும், வசதிப்படுத்தும். அப்படியிருந்தாலும் கலாச்சாரத் தேசியத் தன்னாட்சி என்பது எதிர்திசையிலே செயற்படுகின்றது. ஏனெனில் இது தேசிய இனங்களை அதனுடைய பழைய கூட்டிலேயே பூட்டி விடுகின்றது. மேலும் அவர்களின் கலாச்சாரத்தை வளர்ச்சியடையாத கட்டத்திலேயே கட்டாயமாக வைத்திருப்பதன் மூலம் அவர்களின் கலாச்சாரம் உயர்ந்த கட்டத்தை அடைய முடியாமல் தடுக்கப்படுகிறது.

தேசியத் தன்னாட்சி என்பது இந்த முறையில் தான் வட்டாரத் தன்னாட்சியின் பலன்களை நாசமாக்கி ஒன்றுமில்லாத தாக்கி விடுகிறது. இதன் காரணமாகவே தேசியக் கலாச்சாரத் தன்னாட்சியும் வட்டாரத் தன்னாட்சியும் கலந்த கலப்பு வகையிலான தன்னாட்சி என்பது பொருந்தாத ஒன்றாகும். இது போன்ற இயற்கைக்கு மாறான கலப்பு என்பது நிலைமையை இன்னும் மோசமாக்கத் தான் செய்யும். ஏனெனில் இது வளர்ச்சியடையாத தேசிய இனங்களின் வளர்ச்சியைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல் வட்டாரத் தன்னாட்சியை, ஏற்கனவே தேசியக் கூட்டமைப்பாயுள்ள தேசிய இனங்கள் ஒன்றோடொன்று மோதும் களமாக மாற்றிவிடும்.'' (86 – 87 மாக்சியமும் தேசிய இனப் பிரச்சினையும் – ஸ்ராலின்)

முதலாளித்துவத்திற்கு முற்பட்ட சமுதாயத்தில் மக்கள் எந்த இடத்தில் சென்று குடியேறவும், விரும்பிய போது வெளியேறவும் சுதந்திரம் இருந்தது. ஆனால் ஏங்கெல்ஸ் கூறுவதுபோல் அரசு மக்களுக்கான எல்லையை வரையறுத்துக் கொண்டது. ''**ஆனால் ஒரு குறிப்பிட்ட தேசிய இனமாக அமைகின்ற மக்கள் எப்போதும் ஒரு ஓட்டு மொத்தமான மக்கள் திரளாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. பெரும் பாலும் அவர்கள் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் அவர்கள் தங்களுக்குத் தொடர்பில்லாத வேறு தேசிய இனங்களுக்கு மத்தியிலேயும் இருக்கக்கூடும். முதலாளித்துவ அமைப்பில் அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தேடி பல்வேறு பகுதிகளுக்கும், நகரங்களுக்கும் துரத்தப்படுகிறார்கள். அவர்கள் வேறு அந்நிய தேசிய இனங்கள் இருக்கின்ற இடங்களிலே செல்கின்ற பொழுது, அவர்கள் சிறுபான்மை தேசிய இனங்களாக மாறுகின்றனர். அங்கே பெரும்பான்மையாக உள்ள தேசிய இனம் இந்த சிறுபான்மை தேசிய இனத்தைத் துன்படுத்துகிறது. அவர்களின் மொழி மற்றும் பள்ளி போன்றவற்றுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே தேசிய இனங்களிடையே பு' சல்களும் மோதல்களும் உருவாகின்றன. இதன் காரணமாகவே ஹீபிரதேசங்களை ஒட்டிய தன்னாட்சி என்பது பொருந்தாத ஒன்றாகி விடுகிறது.**'' (49 மாக்சியமும் தேசிய இனப் பிரச்சனையும் – ஸ்ராலின்) முதலாளித்துவ வளர்ச்சியின் பின்னர் நிர்வாக வசதிக்காக ஏகாதிபத்தியங்கள் பங்கு போடுதலை மேற்கொண்டுள்ளது. இவர்களின் கெடுபிடிக்கு மிகவும் தொந்தரவிற்கு உள்ளாகியது.

அதில் தனியரசைக் கொள்ளாத தேசிய இனங்களும், இனக் குழுக்களும் ஒரு நாட்டிற்குள் வாழ்கின்றன. ஆனால் அப்படி வாழ்கின்ற நிலையில் பல் தேசிய நிலையை முதலாளித்துவ அரசுகள் அங்கீகரிப்பதில்லை. தேசிய இனம் என்பது பரந்து வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்வது இயல்பான விடயமே. இந்நிலையானது முதலாளித்துவத்துக்கு முற்பட்ட சமுதாயத்தில் தமது வாழ்வியலின் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக இடம் பெயர்கின்றனர். இந்த இடப்பெயர்ச்சி என்பது எல்லை வரையறுப்பது ஊடாக பல்வேறு தேசங்களிலும், புதிய பொருளாதார நிலைமைகளில் பிரதேசங்களிலுமாக அப்படியே மக்கள் நிலை கொண்டு விடுகின்றனர்.

## 2.4.5 மலையக மக்கள்!

இவர்கள் எத்தனையோ துன்பத்தை சுமந்த வண்ணம் இருக்கின்றனர். இன்று இவர்கள் தமது அரசியல் தலைமையாலும், ஆட்சியாளர்களாலும், முதலாளித்துவ சுரண்டலுக்கும் வதைபட்டுக் கொண்டு இருக்கின்றனர். அவர்கள் காலம் காலமாக தமிழ்ப் பூர்சுவா வர்க்கத்தினரால் சுரண்டப்பட்டு வந்தனர். இவர்களை '**வடக்கத்தையான்**' என இழிந்து கூறியதையும் நாம் மறந்து இருக்கவும் முடியாது. அதேவேளை அவர்களும் அந்த வடுவை இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள்.

இவர்கள் கடந்த காலத்தில் குட்டிப் பூர்சுவா வர்க்க ஈழ விடுதலை இயக்கங்களால், ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு வலிந்து இழுக்கப்பட்டனர். அந்த குட்டிப் பூர்சுவா இயக்கத்தினரால் மலையக மக்களை அணிதிரட்டிக் கொள்ள முடியவில்லை. ஐயோ! ஐயோ எமது இனத்தை அழிக்கின்றார்களே எனக் கூக்குரல் இட்டு, அனைவரையும் தமிழர் என்ற கோசத்தின் கீழ் அடக்க முயற்சி எடுத்தார்களே ஒழிய, வேறு ஒரு கட்டத்திற்கும் மலையக மக்களை நகர்த்த முடியவில்லை. மாறாக அவர்களின் பிரச்சினை தனித்துவமானது மட்டுமல்ல அவர்கள் தனித்துவமான தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இந்தக் குட்டிப்பூர்சுவா வர்க்க இயக்கங்களோ அவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்பதற்காக அவர்களையும் வலுக்கட்டாயமாக போராட்டத்தில் இணைத்துக் கொண்டனர். எனினும் இவர்களால் பெரிய தாக்கத்தை மலையகத்தில் ஏற்படுத்த முடியவில்லை. குறுந்தேசிய வாத, குட்டிப் பூர்சுவா வர்க்க இயக்கத்தால் மலையக, முசுலீம் மக்கள் வளர்ந்து வரும் தேசிய இனம் என வரையறுத்திருந்தனர். இவர்களிடையே இருந்த குறுந்தேசிய வாதத்தின் விழைவே மலையக, முசுலீம் மக்களை தனித்து அங்கீகரிக்க முடியவில்லை.

## 2.4.6 பிரதேச வாதம்

அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணத்தை தனியே பிரித்தெடுக்கும் முயற்சியில் கிழக்குத் தமிழ்க் கட்சிகள் உறுப்பினர்கள் பரவலாக வீவாதிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் பலகருத்துக்களை தெரிவித்திருந்தனர். இந்த ஆதரவு, எதிர்ப்பு நிலைகளை இங்கு அலசி ஆராய்வது இங்கு நோக்கமல்ல. ஆனால் இவர்களின் வர்க்கத் தன்மையையே இங்கு பார்க்க முற்படுகின்றது.

நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியினர் பிரதேசமானது மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சி அதிகாரத்தின் கீழ் வர விரும்புவதில்லை. ஏனெனில் மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சியதிகாரம் என்பது நிலப்பிரபுத்துவத்தின் அதிகாரத்தைக் குறைக்கின்றது இந்த மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தின் ஊடாக இவர்களின் எதேச்சாதிகாரம் என்பது மட்டுப்படுத்தப்படுகின்றது. இதன் மூலமாக இவர்களுடைய வர்க்க நலனுக்கு முட்டுக் கட்டையாகவுள்ளதற்கு எதிராக

போராட்டம் நடாத்துகின்றனர். இவர்கள் மாத்திரமல்ல முதலாளி வர்க்கத்தினரும் புதிய நிலைமையைக் மனதில் கொண்டு புதிய சூழலிற்கு ஏற்ப மாற்று வடிவத்தில் போராடுவர்.

இந்தப் பகுதியினரே இழந்த தமது அதிகாரத்தை மீளப்பெறும் பொருட்டு பிரதேச வாதத்தை தூக்கிப் பிடிக்கின்றனர். இவர்களின் சொல்லில் கவர்ச்சி காணப்படும் அதாவது பிரதேசத்திற்கான கூடுதல் அதிகாரத்திற்காக போராடுவதாகவும், அது பரந்த மக்களின் நன்மைக்காக போராடுவதாகவும் கூறிக் கொள்ளும். அது இன்றைய காலத்தில் ஏதோ பரந்த மக்களுக்காக போராடுவதாக காட்சியளிக்கும். ஆனால் அது வெறும் வெற்று வார்த்தையே. இவர்களை மூலவர்களின் வசனத்தில் கூறுவது என்றால் **பிரபுத்துவ சோசலிசம்** பேசுபவர்களாக அழைக்கப்படுகின்றனர். "பிரபு குலத்தோர் தம்மீது அனுதாபம் உண்டாக்கும்படி செய்யும் பொருட்டு, வெளிப் பார்வைக்குத் தமது சொந்த நலன்களை மறந்து, சுரண்டப்படும் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை மட்டுமே கருதுவோராய் முதாளித்துவ வர்க்கதுக்கு எதிராக தமது குற்றச்சாட்டை வகுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இவ்விதம் பிரபுக் குலத்தோர் தமது புதிய எஜமானர்கள் மீது வசை பொழிந்தும், நெருங்கிவரும் பெருங்கேடு குறித்து அச்சம் தரும் ஆருடங்களை அவர்கள் காதுக்குள் முணுமுணுத்தும் வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள்." (ப 80 க.க.அறிக்கை) இவர்களே கிழக்கு மாகாணப் பிரிவினையைக் கோருபவர்கள்.

இவர்களிடத்தே தமது சுயநலத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கமே முதன்மை கொண்டதாகவே இருக்கின்றது. இந்த வர்க்கம் உழைக்கும் மக்களை ஒன்றிணைப்பதோ, சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுப்பதோ அவசியமற்றதாகின்றது. முழுமக்களின் தேவையானது இனஅழிப்பில் இருந்து தற்பாதுகாப்புக் போர் நடத்தும் கட்டத்தில் இருந்து தனியே தமது சந்தையை நிர்வகித்துக் கொள்வதில் கருத்தாக இருக்கின்றனர். பாட்டாளி வர்க்கக் கோசம் என்பது முதலாளிகளுக்கு சந்தை அமைத்துக் கொடுப்பதுடன் முடிந்து விடுவதில்லை. பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரத்தினை அடைவதற்காக இறுதிவரை போராடுவதாகும்.

## 2.5. சர்வதேச அனுபவங்கள்

சர்வதேச நாடுகளில் பலவற்றில் நடைபெற்ற தேசியப் போராட்டங்கள் பற்றி மூலவர்கள் பற்பல வித்தியாசமான கருத்துக்களை காலத்துக்கு காலம் முன்வைத்துள்ளனர். இவற்றை கீழே பார்ப்போம். மூலவர்கள் முடிவுகள் எடுக்கின்ற போது தேசிய இனப்பிரச்சினை என்பது கோட்பாட்டுப் (Theory) பிரச்சினையாகவே பார்க்கின்றனர். இதன் காரணமாக காலத்துக்கு காலம் வித்தியாசமான முடிவுகளை எடுக்கின்றனர். இதன் காரணமாக முன்னுக்குப் பின்னாக இவர்கள் கதைக்கின்றனர் என குழம்பத் தேவையில்லை. இவர்கள் பாட்டாளி வர்க்க ஒற்றுமை, புறச்சூழல் – சர்வதேச நிலமைகள், முதலாளித்துவ புரட்சி ஆகியவற்றை நிபந்தனையாகக் கொண்டு செயற்பட்டனர். இதன் காரணமாக தேசிய இனப்பிரச்சினை என்பது தத்துவப் பிரச்சினை ஆகவில்லை.

## 2.5.1 போலந்துப் பிரச்சினை

இன்று தமிழ்த் தேசியக் கலாச்சாரம் உயர்ந்த நிலையிலா உள்ளது என்று கேட்கின்ற போது இதற்கு பதில் என்பது தன்னுணர்ச்சி வடிவில் பெருமைக்குரியதாக கூறப்படும். அதேவேளை தேசியப் புரட்சியை நடத்திக் கொண்டிருப்பதால் மாத்திரம் உயர்ந்த கலாச்சாரத்தைக் கொண்டதாக முடியாது. ஏனெனில் தமிழ்ச் சமூகமும் தான் கொண்ட பிற்போக்குத் தனம் அனைத்தையும் கொண்டு தான் இருக்கின்றது. தன்னுடைய உரிமையைப் போலவே முசுலீம் மக்கள் உரிமையும் உடையவர்கள் என்பதை ஏற்க மறுத்து அடித்துத் துரத்தியது. கடந்த 15 வருடங்களில் முசுலீம் மக்களின் நிலையும் வெகுவாக மாற்றம் அடைந்துள்ளது என்பதையும் இன்று கவனிக்கப்பட வேண்டும். இந்நிலை போலவே செக் இனமக்கள் மாருஷ்ய தேசிய வெறிக்கு உதவுகின்றனர் என மார்க்ஸ் இனால் அவர்களின் சுயநிர்ணய உரிமை எதிர்க்கப்பட்டது. ''அ. ஐரோப்பாவைச் சேர்ந்த தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளாதது ஏன்? முதலாவதாக பூர்சுவா வர்க்க எழுத்தாளர்களும் கிளர்ச்சியாளர்களும் ஐரோப்பாவில் அயர்லாந்தில் கூட பலதேசிய இனங்களை ஆதரித்த போதிலும் இந்தப் பிரச்சினை பற்றி மௌனம் சாதித்து சதி செய்கிறார்கள். இத்தகைய மௌனத்திற்கு காரணம் என்ன? என்னவென்றால் பிரபுக்கள் மற்றும் முதலாளி வர்க்கத்தினர் இந்தப் பிரச்சினைக்கு பின்னால் இருக்கின்ற முன்னேறி வருகின்ற தொழிலாளர் வர்க்கத் தலைமைக்கு எதிரான கடைசிப் பாதுகாப்பாகக் கருதுகின்றனர். போலாந்தை ஜனநாயக அடிப்படையில் மீட்டுக் கொடுப்பதன் மூலமாக மட்டுமே அந்த வல்லரசை தீவிரமாகக் ஒடுக்க முடியும். ஆ) மத்திய ஐரோப்பாவில் குறிப்பாக ஜேர்மனியில் இன்று நிலவும் மாற்றம் அடைந்துள்ள நிலமையில் ஒரு ஜனநாயகப் போலாந்தை ஏற்படுத்துவது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அவசியமாக இருக்கின்றது. அது இல்லையென்றால் ஜேர்மனி புனிதக் கூட்டணியின் எல்லைக் காவல் நிலையமாகிவிடும். அது இருந்தால் குடியரசு பிரான்சோடு ஒத்துழைக்கும். இந்த மாபெரும் ஐரோப்பியப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படுகின்ற வரை தொழிலாளர் வர்க்க இயக்கம் தொடர்ச்சியாகத் தடைப்படும், தடுக்கப்படும், பின்தள்ளப்படும்.

இ) போலாந்தைக் கூறுபோட்ட நாடுகளில் ஜேர்மனியும் ஒன்று என்பதால் இந்த விஷயத்தில் முன்முயற்சி எடுப்பது ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் விஷேட கடமையாகும்.

புனிதக் கூட்டணி தனிப்பட்ட நாடுகளில் புரட்சி இயக்கத்தை ஒடுக்குவதற்காகவும் நிலப்பிரபுத்துவ முடியாட்சிகளை தக்க வைப்பதற்காகவும் 1815ம் ஆண்டு ஜாரிச ருஷ்யா, ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யவால் தோற்றுவிக்கப்பட்ட ஐரோப்பிய குடியரசுகளின் பிற்போக்குக் கூட்டணியாகும்.'' (ப163 மார்க்ஸ் தொகுதி 5) மேற் பகுதியில் பார்த்ததை விட பல வருடங்களின் பின்னர் ஒரே நாட்டைப் பற்றிய பிரச்சினையில் மார்க்சியர்கள் வேறு நிலைப்பாட்டை எடுக்கின்றனர். ''பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ரஷ்யபோலந்து தனியாகப் பிரிந்து செல்லுதலை மார்க்ஸ் ஆதரித்தார். அந்த நேரத்தில் அது சரியாக இருந்தது.

ஏனெனில், ஒரு கீழ்மட்டக் கலாச்சாரம் ஒன்றில் சிக்கி அழிந்து கொண்டிருப்பதிலிருந்து ஒரு உயர்மட்ட கலாச்சாரம் விடுதலை பெற நினைத்த பிரச்சினையாக இருந்தது அது. இந்தப் பிரச்சினை என்பது அப்போது கோட்பாட்டுப் பிரச்சினையாகவும் அறிவுபூர்வமான பிரச்சினையாகவும் அப்போது நிலவியிருந்த யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையாகவும் இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலோ, ரஷ்யாவிலிருந்து போலந்து பிரிந்து செல்வதற்கு எதிராக போலந்து மார்க்சியவாதிகள் பிரகடனம் செய்தார்கள். ஏனெனில் கடந்து போன ஐம்பது ஆண்டுகளில் நிகழ்ந்த பல்வேறு மாற்றங்கள் ரஷ்யாவையும் போலந்தையும் பொருளாதார ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் நெருக்கமாகக் கொண்டு வந்திருந்தது. மேலும் அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில் பிரிந்து செல்வது என்கின்ற இப்பிரச்சியையானது நடைமுறை பிரச்சினை என்பதிலிருந்து

அறிவு பூர்வமான விவாதமாக மாற்றப்பட்டு, உலகில் மற்ற யாரையும் இப்பிரச்சினை கவரா விட்டாலும் உலகெங்கிலுமுள்ள அறிவு ஜீவிகளை இப்பிரச்சினை கவர்ந்தது.'' (35 – 36 மா.தே. இ.பி. ஸ்ராலின்) ஆனால் மார்க்ஸின் நிலைப்பாட்டை இலங்கையில் பிரதியிட முடியாது. போலந்தின் சுயநிர்ணயத்தை போலந்து சமூக சனநாயகவாதிகள் எதிர்த்தார்கள். அதற்கு லெனின் **''தேசியவாத முழக்கங்களால் மக்களை ஏமாற்றும் போலந்து முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதன் விளைவாக சுயநிர்யணத்தையே தவறாகவே மறுக்கும் போலந்து சமூக ஜனநாயகவாதிகள் கண்ணோட்டத்தை அகிலத்தில் புகுத்துவது தத்துவார்த்த தவறாகும்.''** (பக். 323 லெனின், நூல் திரட்டு 1) இங்கே பலவிடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது முக்கிய கடமையாகின்றது. முன்னர் கூறியது போல் தேசங்கள் பிரிவதும் சமனாகாது.

இது சனநாயக உரிமை என்பதால் சுயநிர்ணய உரிமை அங்கீகரித்தே ஆகவேண்டியுள்ளது. ''ஜனநாயகம் என்பது அரசின் ஒரு வித வடிவம்தான். அரசு மறையும் பொழுது இதுவும் மறைந்து போகத்தான் வேண்டும்.''பக். 303 லெனின், நூல் திரட்டு 1) இங்கே சுயநிர்ணயம் அங்கீகரிப்பதும், முதலாளித்துவ வர்க்கத்தின் பலம் ஒன்று சேராமல் இருக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. முன்னர் பிரிவினை ஆதரிக்கப்படுவதும் பின்னர் அது தேவையற்ற நிலை உருவாகிறது. இது போராட்ட சக்திகளின் பலத்தைப் பொறுத்த விடயமாகின்றது.

செக் தேசிய இனத்தின் சுயநிர்ணயத்தை, பிரிந்து போவதை பற்றிய கோரிக்கையை முன்வைத்தவர்கள் பாட்டாளிகள் அல்ல. மாறாக சிறுபான்மைத் தேசிய இனத்தின் தேசிய பூர்சுவா வர்க்கமே. அவர்களுடைய கோரிக்கைகள் மார்க்சால் நிராகரிக்கப்பட்டது. அது பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கை அல்ல ஆனால் பாட்டாளி வர்க்கத்தன் கோரிக்கைக்கு மார்க்ஸ் செயற்பட்டார் எனப் பொருள்படுத்துவது நேர்மையாகாது. அதேவேளை செக் தேசியம் அன்றைய ரஷ்ய தேசிய வெறிக்கு துணைபுரிந்ததையும் மார்க்ஸ் கவனத்தில் கொண்டார். இது உண்மையில் உயர்ந்த கோரிக்கையாகவும் ஆகாது.

செக் பற்றிய கோட்பாடு ஏகாதிபத்திய சகாப்தத்தின் சுரண்டலுக்கு முற்பட்டதாகும். இந்த நிலைப்பாட்டை இலங்கைக்கு உதாரணமாக

பயன்படுத்துவது காலவாதியாகி விட்ட ஒன்றை திணிப்பதாகவே இருக்கும். ஆனால் முழுமையாக முதலாளித்துவம் வளர்ச்சி பெற்ற நாடுகளில், ஒடுக்கப்படும் தேசிய இனம் இருக்குமானால், ஒடுக்கப்படும் தேசிய இனம் பிரிந்து போவதை ஆதரித்த போக்கை நோர்வே, அயர்லாந்து, போலந்து நிலமைகளில் காணமுடிகின்றது. இன்று ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் அது ஆதிக்கம் செலுத்தும் எல்லைக்குள் இருக்கும் அனைத்துப் பகுதியினரையும் துன்பத்துக்குள்ளாக்கும், அனைவரையும் பாதிக்கக் கூடியதாகும். அந்த எல்லைக்குள் இருக்கின்ற பெரும்பான்மையான மக்களின் நலனை பூர்சுவா ஆட்சியாளர்களால் நிறைவு செய்ய முடியாது இருக்கின்ற போது எவ்வாறு சிறுபான்மையினரின் தேவைகளை தீர்த்து வைக்க முடியும். ஆனால் பிரச்சினைகளை மூடி மறைக்கின்றதுடன் பிரச்சினைகளை திசை திருப்புகின்றது.

## 2.5.2 பிரான்ஸ் உள்நாட்டுப் போர்

பிரான்சில் முதலாளித்துவப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், மார்க்ஸ் நிலைப்பாடு என்பது பிரெஞ்சுத் தேசியத்தை ஆதரித்ததைக் காணமுடியும். இந்நிலைப்பாடு வெறும் எல்லையை மாத்திரம் நோக்கியதாக அல்ல. மாறாக முதலாளித்துவம் தான் வாழ எத்தனிக்க எந்தச் சாதனத்தை தங்கி நிற்கின்றது என்பதை அறிந்து அதற்கு மரண அடி கொடுக்கும் படி கோருகின்றார். **''நாங்கள் யுத்தங்களை எதிர்ப்பவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக மரபுவழி யுத்தங்களை எதிர்ப்பவர்கள்........ நாங்கள் ஆழமான வருத்தத்தோடும் துயரத்தோடும் தவிர்க்க முடியாத தீமை என்ற வகையில் ஒரு தற்காப்பு யுத்தத்தில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கின்றோம். ஆனால் அதே சமயத்தில் சமாதானத்தையும் யுத்தத்தையும் பற்றி முடிவு செய்கின்ற அதிகாரத்தை மக்கள் பெற, தங்களுடைய தலைவிதியை தாங்களே நிர்ணயிக்க வேண்டும். இத்தகைய பெரிய சமூகக் கொடுமைகள் மறுபடியும் ஏற்பட முடியாதபடி செய்யவேண்டும் என்று ஜேர்மன் தொழிலாளர் வர்க்கம் முழுவதற்கும் அறைகூவுகின்றோம்.''** (மார்க்ஸ் – பிரான்ஸ் உள்நாட்டுப் போர் பக்கம் 34)

இரண்டு பக்கத்து தொழிலாளர்கள் அணிகளும் பாட்டாளி வர்க்கத்தை ஆதரிப்பதாகவே வேலைத் திட்டத்தை அமைத்து செயற்படுவதை அவதானிக்க முடியும். அதேவேளை நாம் ஒரு இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் தம்மை தலைமை தாங்கும் பூர்சுவாக்களை ஆதரிக்காமல் புதிய நிலைப்பாடு எடுத்தனர். அதாவது, மாற்றீடாக தலைமை எடுக்கும் செயற்பாட்டை நடைமுறையில் நடத்திக் காட்டுகின்றனர். ''ஜேர்மன் ஜனநாயகத்தின் பெயரால் குறிப்பாக சமூக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களின் பெயரால் இந்தப் போர் முற்றிலும் வம்சாவளி சம்மந்தமானது என்று நாங்கள் அறிவிக்கின்றோம்..... பிரஞ்சுத் தொழிலாளர்கள் எமக்கு நீட்டியுள்ள நேசக்கரத்தைப் பற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்..... உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் குறிக்கோளை மனதில் கொண்டு எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் நம்முடைய நண்பர்கள். எல்லா நாடுகளையும் சேர்ந்த முடியரசுகள் நமது எதிரிகள் என்பதை நாம் ஒருநாளும் மறவோம்.

உங்களுடைய எதிர்ப்புக்கு நாங்கள் இதயபூர்வமான ஆதரவைத் தருகிறோம்.... பேரிகை முழக்கமோ, பீரங்கியின் உறுமலோ, வெற்றியோ, தோல்வியோ எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுகின்ற நமது பொதுக்கடமையிலிருந்து எம்மை திருப்ப முடியாதென்று நாங்கள் உறுதியளிக்கின்றோம்.'' (பி.உள்நாட்டுப்போர் ப.35)

இந்த உதாரணமானது இலங்கையானது ஈழம், சிறீலங்கா என இரண்டாக தேசம் உள்ளது அல்லது இரண்டு தேசங்களாகப் பிரிந்து போயுள்ளது. அதேவேளை பலம் பொருந்திய இனவாத அரசானது தமிழ் ஈழத்தின் மீது தாக்குதல் நடத்துகின்றது என்ற வாதத்தை எடுத்துக் கொண்டால், ஈழத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் கடமையாக என்ன இருக்க முடியும் அல்லது முற்போக்குப் பேசுபவர்களின் செயற்பாடு எவ்வாறாக அமையவேண்டும். இதனைக் கடந்த கால வரலாற்றில் இருந்தும், பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியவாதத்தில் இருந்தும் அனுகுமுறைகளை கற்றுக் கொள்ள வேண்டும்.

ஜேர்மன், பிரான்ஸ் போரின் போது, பிரஸ்யாவின் ஆக்கிரமிப்பிற்கெதிராக மார்க்ஸ் நிலைப்பாடு எடுத்ததுடன், பிரான்ஸ் இறமையை வலியுறுத்தினார். இதன் காரணம் என்னவெனில் சுரண்டலின் மூலமாக (சந்தையை விஸ்தரிப்பதன்) உபரியைப் பெற்று ஆளும் வர்க்கம் பாதுகாக்கும் என்பதேயாகும். பிரான்சில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பிரஷ்யாவானது பிரான்சின் மீது படையெடுத்தது அப்போமுது பிரான்ஸ் தொழிலாளர் வர்க்கத்திற்காக ஜேர்மன் தனது ஆதரவை வழங்கியது. ''பாட்டாளி வர்க்கத்தின் பொதுவான இலட்சியத்திற்காக எல்லா நாடுகளிலுமுள்ள சகோதரத் தொழிலாளர்களோடு நாங்களும் சேர்ந்து நிற்போம் ''(46 பி. உ.நாட்டுப் போர்) எனப் பிரகடனப்படுத்தினர்.

ஒரு நாட்டைச் சேர்ந்த முதலாளித்துவமானது தனது சுரண்டலை அதிகரிக்கும் பொருட்டு (சந்தையை) நாட்டின் எல்லையை விஸ்தரிக்கிறது. விஸ்தரிப்பதன் மூலம் மேலதிக உபரியைப் பெற ஏதுவாக உள்ளது. அதாவது தான் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்தவும் தனக்குத் தேவையான மூலவளங்களைப் பெறவும் உற்பத்தி சக்திகளைப் பெறவும் வழிவகுக்கின்றது. அதாவது ஒரு நாடு இன்னொரு நாட்டினை ஆக்கிரமிக்கும் போது அந்த நாட்டு முதலாளித்துவத்திற்கு மேலதிகமாக மூலதனம் கிடைக்கிறது. இதன் மூலம் கூடுதலான சக்தியைப் பெறுகிறது. அதாவது உபரியின் வளர்ச்சியின் காரணமாக முதலாளித்துவமானது தனது இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள ஏதுவாகவுள்ளது. ''அதேவேளை பிரான்ஸிற்கு எதிரான யுத்தத்தினை முறியடிக்க வேண்டுமானால் எல்லா வரலாற்றுப் படிப்பினையும் இதுவே தனிநபர்களைப் போலவே தான் நாடுகளும். முன்னேறித் தாக்குகின்ற சக்தியை அவற்றிடமிருந்து பறிக்க வேண்டுமென்றால் முதலில் நீங்கள் அவற்றின் தற்காப்புச் சாதனங்களைப் பறிக்க வேண்டும். நீங்கள் அவற்றின் குரல்வளையை நெரித்தால் போதாது கொலை செய்யவேண்டும். ஒரு நாட்டின் பலத்தை அழிப்பதற்கு எந்த வெற்றி வீரராவது பொருளாயத உத்தரவாதங்களைப் பெற்றாரென்றால் அது முதலாம்

நெப்போலியனே'' (ப.42 பி. உ.நாட்டுப் போர்) இந்த நிலை எமது தேசத்தில் மாறுபாடான நிலையில் உள்ளது. ஏகாதிபத்திய சகாப்தத்தில் தரகு முதலாளித்துவம் வளர்ச்சி அடைகின்றது. இந்த வர்க்கம் நிதி மூலதனத்தின் துணையுடன் தனது இருப்பை பாதுகாத்துக் கொள்கின்றது.

ஏகாதிபத்தியங்கள் சனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்கின்றன. இவர்கள் தமது சந்தையை பாதுகாத்துக் கொள்வதற்கு தமது நிதிநிறுவனங்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குகின்றனர். இதன் காரணமான சுதந்திரமான நாடுகள் இறைமை மீது தாக்குதல்கள், தரகு முதலாளித்துவத்திற்கு உதவிகள் செய்து தான் ஆகவேண்டும். இது சந்தையை பாதுகாப்பதற்கு அவசியமாகின்றது. உள்நாட்டில் இருந்து பெறப்படும் வருவாயில் இருந்து பெறும் நிதி பற்றாக்குறையாக இருக்கின்றது. இது வளரும் நாடுகளின் பொது விதியாக இருக்கின்றது. ஆக யுத்தம் புரிவதற்கு நிதியுதவியானது முக்கியமானதாகும். இவற்றிற்கு உதவியானது எவ்வகையாகப் பெறப்படுகின்றது. என்பதையே இங்கு கவனிக்கவேண்டும். மக்களின் வரிப் பணம், சமூகநலத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய நிதியானது யுத்தத்திற்கு பயன்படுத்தப் படுகின்றது. எனினும், மொத்தத்தில் வெளிச் சக்திகளின் உதவியில்லாமல் ஒரு அரசாங்கத்தினை நடத்த முடியாதுள்ளது. எனவே எமது கவனமும் உதவி புரியும் சக்திகளை முறியடிக்கும் வகையில் போராட்டம் அமைதல் வேண்டும்.

## 2.5.3 நோர்வே

நோர்வே 1905 – ம் ஆண்டிற்கு முன்பு சுவீடனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால் நோர்வே தனிஒரு நாடாக இதற்கு முன்னமே பரிணமித்திருந்தது. (புவியியல் அமைப்புக் காரணமாக) ஆனால் சர்வதேச அரசியல் சதுராட்டத்தில் டென்மார்க்கில் இருந்து சுவீடனுக்கு கைமாற்றப்பட்டது. நோர்வேக்கான தேசிய அங்கிகரிப்பு என்பது மற்றைய நாடுகளிடம் இருந்து மாறுபடுகிறது. ஏனெனில் முதலாளித்துவக் கட்டத்தில் இருந்து கொண்டு தமது சந்தையை விஸ்தரிக்கும் கொள்கையுடன் சுவீடன் நாட்டுப் பூர்சுவா வர்க்கம் செயற்பட்டதேயாகும். தேசியப் பொருளாதார உருவாக்கம் 1850களில் ஏற்பட்டதுடன் அன்றைய காலத்தில் உழைக்கும் வர்க்கம் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கிக் கொண்டிருந்தது. இந்தப் போராட்டமானது காலப் போக்கில் நோர்வேப் பூர்சுவா வர்க்கமானது தலைமைப் பாத்திரத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அதேவேளை சுவீடனிலும் பலம் பொருந்திய பாட்டாளி வர்க்கம் இல்லை. ''சுவீடனின் ஒரு பகுதி என்ற முறையில் நோர்வே சுயாட்சியைப் பெற்றிருந்து. 1905ஆம் வருடம் வரையிலும் அது மிகவும் விரிவான சுயாட்சியான அதிகாரமே. ஆனால் அது சுவீடனுக்குச் சமமாக இருக்கவில்லை. அதன் சுதந்திரமான பிரிவினையின் மூலமே அதன் சமத்துவம் **நடைமுறையில்** வெளிப்பட்டது, நிரூபிக்கப்பட்டது (இந்தச் சுதந்திரமான பிரிவினையே, சமமான உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட மேலும்

நெருக்கமான மேலும் சனநாயகமான ஒற்றுமையின் அடிப்படையை உருவாக்கியது என்று நாம் மேலும் கூறுவோம்). நோர்வே சுயாட்சியை மட்டுமே கொண்டிருந்த வரையிலும் சுவீடிஸ் மேல் வர்க்கத்தினருக்கு கூடுதலான ஒரு சலுகை இருந்தது. நோர்வே பிரிந்து சென்றது இந்தச் தனிச் சலுகையை "மட்டுப்படுத்தவில்லை." (ஒரு திமையை அழிக்காமல் அதை **மட்டுப்படுத்துவதில் தான்** சீர்திருத்தத்தின் சாரம்சம் அடங்கியிருக்கிறது.). அதை முற்றிலும் அகற்றி விட்டது (ஒரு வேலைத் திட்டத்தின் புரட்சிகரமான தன்மைக்கு இது தான் முக்கியமான பரிசோதனையாகும்)." (குறிப்பு லெனினுடையது – பா.சர் பக்கம் 224 லெனின்) இது சீர்திருத்தம் என்பதை லெனினே கூறுகின்றார். பாட்டாளி வர்க்கம் பலம் அற்ற நிலையில் இருக்கின்ற போது ஒடுக்கப்படும் இனம் பிரிதலையும். இங்கே பாட்டாளி வர்க்கம் வளர்ச்சியடையாத நிலை மாத்திரம் அல்ல. முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்படும் தேசிய இனக் கோரிக்கைகளை பிரிந்து செல்லும் போக்கை ஆதரித்த நிலையையும் காணக்கிடக்கின்றது.

சிங்களப் பாட்டாளி வர்க்கம் வளர்ச்சியடையாத நிலையில் இருக்கின்ற போது, தமிழ்த் தேசிய இனம் பிரிந்து செல்ல முடியும் என்ற கருத்தும் இருக்கின்றது. இது கோட்பாட்டு ரீதியாக சரியானதாக இருக்கின்றது எனப் புலப்படும். ஆனால் சிறிலங்கா தேசம் முதலாளித்துவ வளர்ச்சி முழுமையாக அடையவில்லை. இது நவகொலனித்துவ நாடேயாகும். இதன் காரணமாக தமிழ், சிங்கள மக்கள் அனைவரும் புறவுலகத்தின் சுரண்டலுக்கு ஆளாகின்றனர். இங்கு தான் சிங்களப் பாட்டாளி வர்க்கம் வளர்ச்சியடையவில்லை என்ற வாதம் மார்க்சியத்தை மாத்திரம் அல்ல. மற்றைய சமூகக் கோட்பாடுகளைக் கூட விளங்கிக் கொள்ளாத நிலை இருந்திருக்கின்றது என்ற கருத்துக்கு வரவேண்டியுள்ளது. தேசம் பிரிந்து போவது முன்னர் கூறியது போல் போராடும் சக்திகளில் தங்கியிருக்கின்றது. இன்று ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் அது ஆதிக்கம் செலுத்தும் எல்லைக்குள் இருக்கும் அனைத்துப் பகுதியினரையும் துன்பத்துக்குள்ளாக்கும், அனைவரையும் பாதிக்கக் கூடியதாகும். இலங்கை கொண்டுள்ள கடன்சுமை, உலகவங்கி, சர்வதேசி நிதியம், (WB) உலக வணிக அமைப்பு (WTO) ஆகியவற்றின் அழுத்தம் எல்லா மக்களுக்கும் உரியதே. இவற்றில் இருந்து தப்பிக்க முடியாது. இந்த நிலையை தன்னுணர்ச்சி புரிந்து கொள்ள தடுக்கின்றது. சுரண்டல், பல மட்டத்தில் நடைபெறுகின்றது. சுரண்டல் நடைபெறுகின்ற மட்டங்களை சரியாக கணித்துக் கொள்வதில் கூட தமிழ்த் தேசியம் தவறுவிடுகின்றது.



## 2.5.4 ஏகாதிபத்திய நாடுகளில் தேசியப் போராட்டம்

இன்று மேற்கு நாடுகளிலும் தேசியப் பிரச்சினைகள் இருக்கின்றது. அங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதா வேண்டாமா? என வெகுசன வாக்கெடுப்புக்கள் நடைபெறுகின்றன என்பதை அறிவோம் இந்நிலையில் எவ்விதமான முடிவுகள் எடுக்கவேண்டும்? எமது நாடுகளையும் மேற்கு நாடுகளையும் ஒரே அளவில் கொண்டு பார்க்கமுடியுமா என்ற நிலை தோன்றுகின்றது. இங்கே ஐரோப்பிய நாடுகளின் இணைப்பின் போது பாட்டாளி வர்க்கம் ஒன்று சேர்கின்றது என பூரிப்பவர்களும் உண்டு. இது தவிர்க்க முடியாத நிலையே. ஏகாதிபத்தியத்தில் சிறிய தேசங்களின் சம உரிமை பாதுகாக்கப்படும் என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

### 2.5.4.1 ஐரோப்பிய ஒன்றியம்

ஐரோப்பிய ஒன்றியத்தினை இணைக்கும் முயற்சிகள் கிழங்கு ஐரோப்பிய நாடுகள் வரையிலும் விஸ்தரிக்கும் வேலை முனைப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த முயற்சியானது பாட்டாளி வர்க்கத்தினை இணைக்கும் முயற்சி என எவராலும் எண்ணும் நிலையில் இவ்வொன்றியம் இல்லை. மாறாக பணம் படைத்த முதலைகளின் ஒன்றிணைப்பேயாகும். இன்றைய நிலையானது பாட்டாளி வர்க்க சக்திகளைப் பொறுத்த வரையிலும் ஏகாதிபத்திய பிரச்சாரத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர். இந்நிலை இல்லாமல் செய்து பாட்டாளி வர்க்கச் சக்திகளிடையே அனைத்து நாடுகளும், எவ்வகையான பின்னடைவை எதிர்நோக்குகின்றனவோ, அதே நிலைதான் மேற்கு நாடுகளிலும் இருக்கின்றன.

இவ்வொன்றியமானது மூலதனம், தொழிலாளர், பொதுச் சேவை, பொருள் ஆகியவை இலகுவாக அசையக் கூடிய சுதந்திரத்தை அனைத்து உறுப்பினர் நாடுகளுக்கும் உறுதி செய்வதாகவே இருக்கின்றது. இந்த ஒப்பந்தங்கள் பொலீஸ், நீதிமன்றம், வங்கி – காசு என்பவற்றுடன். போதுவான எல்லையை உருவாக்கிக் கொள்வதாகும். ஒன்றியத்தினுள் பொதுவான ராணுவம் அமைப்பது தொடர்பாக சிறுகருத்து வேறுபாடுகள் இருப்பினும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். பிரான்சும், ஜேர்மனியும் பொதுவான ராணுவ ஒத்துழைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் நீண்ட கால நோக்கில் ஏகாதிபத்திய எல்லையை பாதுகாக்கக் கூடிய வகையில் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கு ஏகாதிபத்தியங்கள் இடையே உள்ள முரண்பாடுகளும் ஒரு காரணமாகின்றது. வங்கி என்பது ஒருநாட்டின் பொருளாதாரத்தை திட்டமிடுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் காரணமாவே பொதுவான வங்கியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இதே போல் ராணுவம், பொலீஸ், நீதிமன்றம் ஆகியவை முக்கியமானதாகும்.

சிறப்புப் பொலிஸ் (Europol) பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு கட்டற்ற அதிகாரம் வளங்கப்பட்டு இருக்கின்றது. இதில் கண்டபடி எந்த தலையீடுகளும் மெற்கொள்ள முடியாது. அதாவது எந்தவொரு நாட்டு அரசாங்கங்களும் இப் பொலிசாரின் வேலைகளில் தலையிடவோ, கேள்வி கேட்கவோ முடியாது. மாறாக தமது உறுப்புரிமையை மாத்திரம் மாற்றிக் கொள்ள முடியும். பொலீஸ் ஒத்துழைப்பானது ஐரோப்பிய பொலீஸ் மட்டத்திலேயே இருக்கும் தஸ்தாவேஜ்க்கள், ரகசிய ஆவணமாக கருதப்படும். நிதியை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி எவரும் கட்டளையிட முடியாது.

இந்தப் பொலிஸ் போதைப்பொருள், ஆட்கடத்தல் போன்ற குற்றச் செயல்களை தடுப்பதாக கூறிக் கொள்கின்ற போதும், இவை நேரிடையாக சனநாயக சக்திகளைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதும் தொலைபேசி ஒட்டுக் கேட்கவும், குடியிருப்புக்கள் என்பன கண்காணிப்பு செய்கின்றனர். இந்த விபரங்களை ஐரோப்பிய (Europol) பொலிசைத் தவிர வேறு எவரும் உள்ளடக்கத்தைப் பார்க்க முடியாது. இந்த பொலீஸ் அமைப்பானது சுப்பர் பொலீசாக செயற்படுகின்றது.

ஏகாதிபத்திய நாடுகளில் நடைபெறும் தேசியப் போராட்டங்களை எவ்வாறு பார்க்கலாம். இவைகளுக்கு எமது நாடுகளில் நாம் வைக்கும் தீர்வை இங்கு வைக்க முடியாது. ஏனெனில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் வாழுகின்ற நாம் சிறு தேசங்கள் பற்றிய நிலைப்பாடு முன்பிருந்து நிலையை விட மாறுதல் அடைகிறது என்பது உண்மையே. லெனின் ஏகாதிபத்தியங்கள் தமக்குள் ஒன்றிணைகின்ற போது எவ்வாறன நிலைமை என்பதை பின்வருமாறு கூறுகின்றார். ''இந்த ஏகாதிபத்தியநாடுகள் தமக்கிடையே கூட்டணிகளை நிறுவிக் கொள்வதாக வைத்துக் கொள்வோம், இந்தக் கூட்டணிகள் ''அகில – ஏகாதிபத்திய' அல்லது ''அதித ஏகாதிபத்தியக்' கூட்டணியாகளாகவே இருக்கும். ஆசியாவின் இந்தப் பகுதிகளைச் ''சமாதான முறையில்' பங்கிட்டுக் கொள்வதற்காக எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் ஒரு கூட்டணி அமைத்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம், இந்தக் கூட்டணி ''சர்வதேச அளவில் ஒன்றுபட்ட நிதி மூலதனத்தின்' கூட்டணியாகவே இருக்கும்.'' (ப 191 லெனின் ஏகா – மு. உச்சக்கட்டம்)

மேற்கு நாடுகளில் நடைபெறுவது மூலதனத்தின் ஒன்று குவியல் அதாவது பலம்பொருந்திய மூலதனத்தைக் கொண்டவர்களின் கூடல். அங்கு மூலதனத்தை ஒன்று கூடாதவாறு செயற்பட வேண்டும். அது மேற்கு நாட்டு பாட்டாளிகளின் கடமையாகும். எமது நிலையப்படி அல்ல. மாறாக எம்மைச் சுரண்டி மேற்கு நாடுகள் தமது உபரியை நிரப்பிக்கொள்ளும் நிலையே ஆகும்.

இன்று ''சங்கன்'' (Schengen) உடன்படிக்கை என்ற போர்வையில் கொண்டு வரப்பட்ட உடன் படிக்கையானது கறுப்பு இனத்தவரையும், இசுலாமிய மதத்தவரையும் எல்லைகளில் நுழையவிடாமல் பாதுகாத்துக் கொள்ள கொண்டுவரப்பட்ட உடன்படிக்கை என்றே கொள்ள வேண்டும். பகைமையை நிலைநிறுத்தி கொள்வதன் மூலம் கிழத்தேச மக்களை தாக்குதல் நடத்தத் தூண்டவும், இதற்கு எதிராக அபிப்பிராயம் ஏற்படுவதை தடுக்கவும் திட்டமிட்டுத் செயற்படுகின்றது.

யுத்தங்களை ஏற்படுத்தவும், எமது மூலவளத்தை நாமே தீர்மானிக்கும் உரிமையைப் பறித்தும் தொல்லைக்கு காரணமானவர்கள், நிதிநிறுவனங்கள், பல்நாட்டுக் நிறுவனங்களை எமது நாடுகளுக்கு நகர்த்தி அமைதியைக் குலைத்தவர்கள், தமது பொறுப்பில் இருந்து தப்புவதற்காக அகதிகள் வருகையை இன்று திட்டமிட்டு தடுக்கின்றனர். அத்துடன் வெள்ளை நிற கிழக்கைரோப்பிய அகதிகள் பற்றி ஒரு நிலைப்பாடும், கறுப்பு நிற அகதிகள் வேறு நிலைப்பாடும் கொண்டு செயற்படுகின்றனர். இது நெகிழ்வு தன்மை கொண்டதினால் நேரிடையாக அனுமானிப்பது சிரமம். ஒரு அகதி விண்ணப்பமானது ஒரு நாட்டில் நிராகரிக்கப்படுமாயின் எல்லா அங்கத்துவ நாடுகளிலும் (பிரான்ஸ் தற்பொழுது இதிலிருந்து இசுலாமிய தீவிர வாதிகளை அடக்குவது என்ற போர்வையில் விதிவிலக்கப்பட்டுள்ளது) ஜேர்மன், நெதர்லாந்து, லக்சம்பேர்க், பெல்ஜியம், போர்த்துக்கல், ஸ்பானியா, இத்தாலி, கிரேக்கம் ஆகியன இணைந்து கொள்கின்றன. நிராகரிக்கப்படுவதற்கு ஒப்பாகும். ஒரு நாட்டில் அங்கீகாரம் கிடைக்குமானால் அந்த நாட்டில் மாத்திரமே வதியும் உரிமையுடையவர். மற்றைய குடிகள் போல் விரும்பிய தேசத்தில் குடி புகமுடியாது. இத்துடன் அல்லாமல் சில அடிப்படைகளில் வெளிப்படையாக ஒப்பந்தத்தில் இருக்கும் பகுதிகளை தவிர்த்துக் கொண்டு. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்காத நாடுகளையும், இந்த ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்கின்றன. இதன் மூலமாக பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல் ஆகியவைகளை கட்டுப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு அகதிகளையும், தனது சொந்த பிரசைகளையும் கண்காணிக்கும் வகையிலான பாதுகாப்பு திட்டத்தை வகுத்துள்ளனர். இவர்களின் இவ் ஒப்பந்தத்தின் மூலம் வெளிநாட்டவரை தனது எல்லையில் இருந்து பாதுகாக்கின்றது. இதுவும் பேர்லின் மதில் போன்றதேயாகும். என்ன வித்தியாசம் பேர்லின் மதில் கண்ணுக்குப் புலப்பட்டது ஆனால் இது கண்ணுக்கு புலப்படவில்லை.

அடுத்து வெளிநாட்டு அகதிகள் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர், வெளிநாட்டவர் திணைக்களமானது காரணம் கூறும் போது, எவ்வகையான பார்வையைக் கொண்டு செயற்படுகின்றது என்பது கவனிக்கப்படவேண்டும். இவர்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கும் போது பிரச்சினையில்லை திரும்பிப் போகலாம் என்பதற்கு அப்பால் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்தவரின் உறவினர் கொழும்பில் அல்லது இதர பாதுகாப்பானது என வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்வதால் அவர்களுடன் அகதியாக விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர் போய் வாழலாம் என கூறுகின்றது. இது சரி எனப்படலாம், ஆனால் ஐரோப்பிய பிரசைக்கு இப்படிக் கூறமுடியுமா என்பதே கேள்வியாகும். இந்த மாதிரி ஒரு வயது வந்த பிரசைக்கு கூறமுடியாது. ஏனெனில் தனித்துவமாக ஒவ்வொரு பிரசைகளையும் அங்கீகரிப்பதும், அவர்களை கவனிப்பதும் சட்டத்தில் நிர்ணயிக்கப் பட்டிருப்பதனால், இவ்வாறு இங்குள்ள பிரசைகளுக்கு இதுதான் தீர்வு என திணிக்க முடியாது. இவ்வாறு எம்மவர் மீது இவர்கள் தீர்வை முன்வைப்பதற்கு எமது சமூக அமைப்பே காரணமாகும். எமது சமூக அமைப்பானது குடும்பத்தை மையமாகக் கொண்டு அமையப் பெற்றதாகும். அத்துடன் முன்பு பார்த்தது போல் ஒரு சமூகத்தின் உறுப்பினராக இருக்கின்றார். அவர்கள் மீது சொந்த உறவினர்கள் தமது உறவினர் நலன்களில் அக்கறை கொள்ளல் என்பது இன்றும் எமது சமூகத்தில் இருந்து

கொண்டு தான் இருக்கின்றது. (இது முதலாளித்துவ பொருளாதார உற்பத்தியின் அறிமுகத்துடன் இது சிதைவடைய தொடங்குகின்றது) இதன் மூலம் தம்மை விட நாம் வித்தியாசமானவர்கள் என்பதை நிறுவன ரீதியாக உறுதி செய்வதும், அகதியாக விண்ணப்பித்தவரை தமது நாட்டு சட்டத்தின் கீழ் நடத்தாது எமது சமூக அமைப்பை புரிந்து கொண்டு அதன் வழி செயற்படுவது இனவாதமேயாகும். இந்த இனவாதமானது அரச மட்டத்தில் இருப்பதனால் அரச இனவாதமாக வரையறுக்கப்படுகின்றது.

## 2.5.4.2 இத்தாலி பிரிவினை பற்றி

பிரதேசப் பிரிவினை கோரும் நிலையை ஐரோப்பிய நாடான இத்தாலியில் காண முடியும். பணச் செழிப்பான பிரதேசமான வட இத்தாலியைப் பிரித்து, தனி நாடாக ஆக்கும் கோரிக்கைகள் வலது சாரிகளினால் முன்வைக்கப்படுகின்றது. இவர்கள் வறிய பிரதேசமாகிய தென் இத்தாலியில் இருந்து தனித்து செல்ல முற்படுகின்றனர். தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பதற்காக ஒரே நாட்டில் ஒரே மொழியைப் பேசி வாழ்கின்ற மக்களை பிரிக்க, பாசிச, நிதிமூலதனத்தின் பாதுகாவலர்களாகச் செயற்படுபவர்களே முன்வைக்கின்றனர். எல்லா வகையான தேசியக் கோரிக்கைகளையும் ஆதரிக்க வேண்டும் என்ற நிலையில் இதனையும் ஆதரிக்கத் தான் வேண்டுமா? (இது பற்றிய வாத்தை செக் இனங்கள் பற்றி கோரிக்கையை ஆராய்கின்ற போது பார்க்க) இவர்களின் கோரிக்கையை இத்தாலிய தொழிலாளர் வர்க்கம் தான் முன்வைக்கின்றது என கருதிக் கொள்ள முடியுமா? இந்தக் கோரிக்கை உள்நாட்டு மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு இருக்கின்றது.

இலங்கை, இத்தாலி ஆகிய நாடுகளில் பிரதேசவாதத்தை முன்வைக்கும் இரண்டு வகைச் சக்திகளின் பண்பிலும் ஒற்றுமையைக் காண முடியும். நிலப்பிரபுத்துவத்தின் பாதுகாவலர்களும், நிதிமூலதனத்தின் பாதுகாவலர்களும் ஒரே மாதிரியான பிரதேசப் பிரிவினை நிலைப்பாட்டை எடுக்கின்றார். இந்த வர்க்கங்களின் பண்பினை பொதுமைப்படுத்த முடியாதுள்ளது. ஏனெனில் நிதி மூலதனம் தேசங்களின் எல்லையை இன்றைய வரைக்கும் இணைத்துக் கொள்ளவே முயற்சிக்கின்றது.

## 2.5.5 நாசிசமும் - தேசியமும்

நாசிசம் என்பது கிட்லரின் கொலை பாதகச் செயலின் மூலம் பாமரர் மத்தியிலும் அப்பெயர் பதிந்துள்ளது. இந்தச் சித்தாந்தம் கிட்லரின் அழிவுடன் நின்றுவிடவில்லை. அது தொடர்ந்தும் பரவிக் கொண்டு தான் இருக்கின்றது. நாசிசம் என்பது எந்தச் சிந்தாந்தத்தைச் சேர்ந்தது என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. நாசிசம் என்பது நிச்சயம் முதலாளித்துவ வர்க்கச் சிந்தனையாகும். இது தனது இனத்தை (Race) கூட்டுச் சேர்க்கின்றது. இதன் மூலம் தனது இனத்தை ஒன்று திரட்டுவதன் மூலம் ஆரிய தூய்மையை பேன அழைக்கின்றது. இன்று பல மேற்கு ஐரோப்பா, கனடா, தென் ஆபிரிக்கா. மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும். இந்த அமைப்புக்கள் சிறந்த

வகையில் பின்னல் வடிவத் தொடர்பை ஏற்படுத்தி செயற்படுத்துகின்றன. தேசியத்தின் ஒரு வடிவம் தான் நாசிச சிந்தனை. இந்தச் சிந்தனையானது அனைத்து வகையான சித்தாந்தங்கள் மீது பகைமை பாராட்டுகின்றது. இதன் காரணமாக பலமுனைகளில் இருந்தும் எதிர்ப்புக்கள் என்பது தாராளமாக புறப்படுகின்றன. அத்துடன் இது எந்த வர்க்கத்தை நோக்கி நிற்கின்றது என்பது பற்றிய கண்ணோட்டம் என்பது அவசியமாகின்றது.

1932 – 45 இடைப்பட்ட காலங்களில் இந்தச் சிந்தனையானது நேரிடையாகவே முதலாளித்துவ வர்க்கச் தலைமைகளினால் நேரிடையாவே தலைமை தாங்கியது. இன்று தொழிலாளர் வர்க்கத்தினிடையே இது புரையோடிப் போயுள்ளது. இன்னும் கூறப்போனால் தொழிலாளர் வர்க்கத்தினரே இன்று பலியாகிபோயுள்ளனர். வளர்ச்சியடைந்த நாடுகளில் தோன்றியுள்ள சமூகப் பிரச்சினைகளுக்கு வெளிநாட்டவர் காரணம் என கற்பிக்கப்படுகின்றது. இந்தச் சிந்தனையானது நிதிமூலதனத்தை பாதுகாக்கின்ற, சித்தாந்தப் போக்கு என ஜோர்ச் டிமிற்றோவ் வரையறுத்தார். இது முன்னர் கூறியது போல் அன்று நேரிடையாவே பூர்சுவா வர்க்கம் தலைமை தாங்கியது. இன்று ஏகாதிபத்தியங்கள் பாட்டாளி வர்க்கத்தை திசை திருப்ப பலவழி முறைகளைக் கையாள்கின்றது.

இதில் ஏகாதிபத்தியங்களானது வெளிப்படையாக தனக்கும், நாசிசக் கட்சிகளுக்கும், அந்த சிந்தனைக்கும் சம்பந்தம் இல்லை என பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் மறைமுகமாக நாசிசத்திற்கு தனது உதவிகளைச் செய்து கொண்டு தான் இருக்கின்றன. முன்னரும் நாசிசத்தை வளர்த்தது பின்னர் தனக்கு ஆபத்து என வந்த போது இரண்டாம் உலக யுத்தத்தின் போது பாட்டாளி வர்க்கத் தலைமையிலான சோவியத் ஒன்றியத்துடன் ஒன்றிணைந்து நாசிச கிட்லரை வீழ்த்தினர். இந்தச் சித்தாந்தத்தைப் பாதுகாக்க பணம் படைத்த கனவான்கள் காலத்துக்குக் காலம் உதவிக் கொண்டு தான் இருக்கின்றனர். இரண்டாம் உலகப் போருக்கு முற்பட்ட காலத்தில் சோசலிச நாடாகிய சோவியத் ஒன்றியத்தை அழிக்கும் முகமாக மேற்கு நாடுகளால் கிட்லருக்கு ஆயுதங்களை வழங்கினர். ஏனெனில் கிட்லரே சோவியத் ஒன்றியத்தை அழிக்க உதவக் கூடிய நண்பன் என்பதாலேயே. இறுதியில் மேற்கு நாடுகளையே முழுமையாக விழுங்க முயற்சி எடுத்த போது தான் பணம் படைத்த மேற்கு நாடுகள் விளித்துக் கொண்டன.

இன்று வரை நாசிச சக்திகளை முற்று முழுதாக சமூகத்தில் இருந்து அகற்ற முடியவில்லை. அதேவேளை நாசிச சக்திகளுக்கு பணம் படைத்தவர்கள் உதவிக் கொண்டு தான் இருக்கின்றனர். இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் சுவீடன் நாட்டு நாசிச அமைப்பிற்கு உதவி புரிந்தமை சில வருடங்களுக்கு முன்னதாக வெளிவந்தது. IKEA என்ற பன்நாட்டு நிறுவனத்தின் உரிமையாளர் இவ்வமைப்புக்கு நிதியளித்தார். ஐரோப்பிய ஒன்றிய நிதி நிறுவனம் சுவீடன் நாட்டில் விவசாயப் பண்ணையை மேற்கொள்ளும் நாசிச அமைப்பிற்கு நிதியளித்துள்ளதாக செய்தி வெளிவந்துள்ளது. இந்தப் பண்ணையில் ஆயுதப்பயிற்சி எடுக்கின்றனர் என்பதும் தெரிய வந்துள்ளது. EU நிதி நிறுவனம் தாம், நாசிச சக்திகள் என தெரியாமலும், அவர்கள் எந்த விதமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என தெரியாத நிலையிலும் இந்நிலை ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

நாசிச ஜேர்மனியில் இருந்து சுவீடன் மத்திய வங்கியானது 60 தொன் பவுன் கட்டிகளை விலைக்கு வாங்கியதாக சுவீடன் தொலைக் காட்சி அறிவித்துள்ளது. இவற்றில் 4.7 தொன் எடையை நீதியின் பெயரால் இன்று ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றது. கொல்லப்பட்ட யூதர்களிடம் இருந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் இருந்தும் கொள்ளையடிக்கப்பட்டதாக அறியப்படும், பவுன் நகைகளில் இருந்து எடுக்கப்பட்ட நகைகளை சுவீஸ் நாட்டிற்கு இரகசியமாக விற்கப்பட்டதாக தற்பொழுது தகவல்கள் வருகின்றன. நடுநிலை நாடாக கணிக்கப்பட்ட சுவீஸ் நாட்டில் இருந்து ஆயுதங்களும் மற்றும் தேவையான தளபாடங்களும் சுவீஸ் வழியாக ஜேர்மன் கொண்டு செல்லப்பட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றது. உலகின் சர்வாதிகாரிகளினதும், நாட்டைச் சுரண்டும் பணக்காரர்களின் பணங்களை வைப்புச் செய்வதில் பெயர் போன சுவீஸ் வங்கி யூதர்கள் வைப்புச் செய்த பணத்தை வங்கியும், வாடிக்கையாளர்களுக்கு துணையாக இருந்த வக்கீல்களும் திருடி விட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றது. இன்று பணம் படைத்த யூதர்கள் தமக்கு வருமதியாக பணத்தை திருப்பிப் பெறுவதில் அமெரிக்காவில் தளமாக கொண்டு இயங்குகின்ற யூத அமைப்பு தொடர்ந்தும் போராடுகின்றது.

எந்தச் சக்திகளும் தமது வர்க்க நிலையை பாதுகாத்துக் கொள்வதற்காக எந்தவிதமான வாதங்களையும் முன்வைத்து தமது கோரிக்கைகளை சாதிக்க முற்படுகின்றன. பாதிக்கப்பட்ட யூதர்கள் தமக்கு இருக்கின்ற அனுதாபத்தைப் பயன்படுத்தி இன்று பணம் படைத்த யூதர்கள் தமது நலனைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றனர். அனுதாபங்கள் என்பது ஒருபுறமிருக்க வர்க்க நலன்கள் அனுதாபம் என்ற திரைக்குள் மூடி மறைகின்றது. எமக்கு தெரிவது என்னவோ அனுதாபம், இன்று அவர்கள் போராடுவது தமது சொத்துப் பற்றிய பிரச்சனையே முதன்மையாக இருக்கின்றது. இது பூர்சுவா வர்க்க நலனின் பொருட்டான நடவடிக்கைகளுக்காகவே.

இவர்களின் நிறவாத அரசியல் எந்தெந்த வகைகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்றனது எனப் பார்ப்போம். பிற்போக்குச் சக்திகள் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள பல்வேறு தந்திரோபாயங்களை பாவிக்கின்றனர். முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தில் இருந்த போது பெண் உழைப்பாளர்களை அறிமுகம் செய்தனர். இது முதலாளித்துவ நலன் சார்ந்ததாகும். முதலாளித்துவ சக்திகளினால் பெண் உழைப்பாளர்கள் சந்தைக்கு வந்த தன்விழைவால் தான் ஆண் தொழிலாளர்கள் வேலை வாய்பை இழந்தனர் என பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் இதில் எவ்வகையான உண்மை அடங்கியுள்ளது. இந்தப் பிரச்சாரத்தையும் நம்பி ஏமாற்றப்பட்ட எழை மக்கள் இருக்கத் தான் செய்தனர். வர்க்க உணர்வு பெறாத நிலையில் இவ்வகையான பொய்ப் பிரச்சாரத்தினால் பலியாவது அனைத்து தளங்களிலும் நடைபெறுகின்து. இதே போல் தான் பணக்கார வெள்ளையர் தேசங்களிலும் பொய்ப் பிரச்சாரங்கள் நிலைமைகளுக்கு ஏற்றவாறாக நடைபெறுகின்றது.

இந்த நிலைகள் நிலைத்திருப்பதற்கு ஏற்கனவே வர்க்க உணர்வு மழுங்கடிக்கப்பட்டும், தனித்துவ வாதச் சித்தாந்தத்தில் அகப்பட்டுள்ள இவர்கள்

போலியுணர்விற்கு ஆட்கொள்ளப்படுகின்றனர். இதன் காரணமாக பூர்சுவா – நாசிச அரசியல் கட்சிகளானது பரந்த ஆதரவை கவர்ச்சி வார்த்தைகளினூடாக வெற்றி கொள்ள முடிகின்றது. இவர்களின் வாதமானது வெளிநாட்டவரே வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு காரணம் எனவும், சமூக சீர்கேடுகளுக்கு காரணம் எனவும் கற்பிக்கப்படுகின்றனர்.

ஆனால் தொழிற்சாலை உரிமையாளர்கள் கீழ்தரமான வேலைகள் எனப்படுபவைகளை இவர்களைக் கொண்டே செயற்படுத்துகின்றனர். (இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக உடலுழைப்பே வெளிநாட்டவர்களுக்கு இலகுவாக பெறக்கூடியதாகவுள்ளது.) இதன் காரணமாக முதலாளித்துவம் உழைப்புச் சக்தியை பெறுகின்றது. இதற்கு உதாரணமாக வியட்னாம் தொழிலாளர்கள் விவசாய தொழிலில் பரிட்சயம் உடையவர்களாக இருப்பதனால் விரைவாகவும், குள்ளமாக இருப்பதனால் உடல்வாகுவானது விட்டுக் கொடுப்பதனால் குறைந்த நேரத்தில் கூடிய உழைப்பை பெறுகின்றனர். இந்த நிலையே தமிழ் தொழிலாளர்கள் மீதான சுவிஸ்லாந்து முதலாளிகளின் பாசம் என்பது கவனிக்கப்பட வேண்டும். படித்து சான்றிதல் பெற்ற தொழிலாளிக்கு கொடுக்கும் சம்பளத்தை விட தனியே பயிற்சியை கொண்ட தொழிலாளிக்கு சம்பளம் அதிகம் கொடுக்கத் தேவையில்லை. இதன் மூலம் லாபத்தை சம்பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கின்ற சுவிஸ் முதலாளி வர்க்கம் அதனை நன்றாவே பாவிக்கின்றது. இவர்களின் நலனின் அடிப்படையில் இடம் பெறுவதே அகதிகள் தொடர்பான சுவிஸ் நாடாளுமன்ற முடிவுகளாகும்.

நாசிச சக்திகள் ஜேர்மனியில் பல சமூக நிலைகளில் முற்றாக அழிக்கப்படாத நிலையில் இருப்பதன் காரணமாக இன்று சமூக நிலைகளில் வளர்ச்சியடைகின்ற நிலையைக் காணக் கூடியதாகவுள்ளது. தற்பொழுது இது பற்றி பத்திரிகைகளில் வெளிப்படையாக படிக்கும் அளவிற்கு நிலமைகள் இருக்கின்றது எனினும் தற்பொழுது யேர்மன் ராணுவ அணிகளிடையே காணப்படுகின்ற நாசிச ஆதரவுப் போக்கு வளர்ந்து வருகின்றது. இந்த நிலையை மறைப்பதற்கு ராணுவ தலைமைப் பீடம் விரும்புகின்றது. யேர்மன் ராணுவத்தினரிடையே நாசிச கருத்துக்களும், நாசிச ராணுவ மரியாதையும் முன்னைய விட ஐந்து மடங்காக அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன.

சகபடையைச் சேர்ந்தவர் நாசிச சம்பவம் பற்றி தமது மேல் அதிகாரியிடம் தெரிவித்த போது எந்த வித மாற்றமும் ஏற்பட வில்லை எனவும் அதற்கு மாறாக அந்த ஊழியர் மௌனியாக்கப்பட்டதாவும், சில நாட்களின் பின்னர் சுவாஸ்திகா சின்னம், யுத்தக் கொடிச் சின்னம், புத்தகங்கள் என்பனவற்றை விண்ணப்பிக்க catalogue கிடைக்கின்றன. பயிற்சியின் போது வெளிநாட்டர் எதிர்ப்பும், தாழ்மைப் படுத்தும் வார்த்தைகள் பாவிக்கப்பட்டதாகவும், வெளிநாட்டரே வெளியேறு, யூதர்களை விசவாயு அறைக்கு அனுப்ப வேண்டும் என்ன கோசங்கள் பாவிக்கப்படுகின்றன.

இந்த விதமான சிந்தனைப் போக்குகள் ஒரு தேசத்தில் முற்றாக அழிக்கப்படாமை குறித்து பெரிதும் ஆச்சரியப்படத் தேவையில்லை. கிட்லர் அழிக்கப்பட்டாலும் அவர் கட்டமைத்த சமூகத் தளம் என்பது அழிக்கப்படவே

இல்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மேற்கு நாடுகள் தமது பொம்மை அரசுகளை மேற்குத் தேசங்களில் ஆட்சிக்கு வரும்படியான திட்டங்களைச் வகுத்துக் கொண்டு செயற்பட்டன. இதே போல் கிழக்கு நாடுகளில் முற்போக்கு, தேச பக்தர்கள் என்ற முகமுடி அணிந்து கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒழித்துக் கொண்ட முதலாளித்துவ வாதிகள் சோசலிச நாடுகளை முதலாளித்துவத்திற்கு திசை திருப்பி, தற்பொழுது முதலாளித்துவத்தை மீளவும் அந்தத் தேசங்களில் மீட்சியளித்துள்ளனர். இந்த வாறாக நிலமை இருக்கின்ற போது முதலாளித்துவ தேசங்களாக இருப்பவைகளில் நாசிசம் முற்றாக அழிக்கப்படும் என எதிர்பார்ப்பது மடைமைத் தனம். ஆனால் தொடர்ந்தும் பணம் படைத்தவர்கள் இந்தச் சித்தாந்தத்தை அழிய விடாது பாதுகாத்துக் கொண்டு தான் இருப்பார்கள்.

இப்படியே முதலாளித்துவ வர்க்கம் லாபம் சம்பாதிக்கின்ற வேளை நாட்டில் பல்வேறு பிரச்சினைகளும் தோன்றுகின்றது. இந்த வேளையில் ஏற்கனவே இருக்கின்ற போலியுணர்வைப் பயன்படுத்தி திசை திருப்புகின்றனர். இந்தப் பகுதியில் இரண்டு விதமான தன்மைகளை பார்க்க முடிந்தது. இந்தப் பகுதியில் பணம் படைத்தவர்கள் நாசிச சக்திகளை வளர்க்க உதவுவதும், யூதர்கள் தமக்கு இருக்கின்ற அனுதாபத்தைப் பயன்படுத்தி தமது பணக்கார வர்க்க நலனைப் பாதுகாக்க முற்படும் போக்கு இந்த இரண்டு போக்குக்களையும் வெற்றி கொண்டு அன்றாடம் துன்பப்படும் மக்களின் விடுதலைக்கான பாதையை வென்றெடுக்கப் போராடுவதே ஒரே வழியாகும்.

## 2.5.6 உதாரணங்கள் காட்டுவது என்ன?

1. பாட்டாளிகளின் ஒற்றுமையை வலியுறுத்துவதும் அதன் வழியிலான போராட்ட வடிவங்களும்.
2. ஒரு பிற்போக்கு கலாச்சாரத்தில் இருந்து விடுதலைபெற்று புதிய ஒரு உயர்ந்த கலாச்சாரத்தை நோக்கி நகர்தல்
3. சனநாயக புரட்சியின் போது (பிரான்ஸ்) உபரியை ஒடுக்கும் வர்க்கம் பெறக் கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டு கோட்பாட்டை வகுத்தல்.
4. அயர்லாந்து, பிரான்ஸ், நோர்வே விடுதலையானது எதைக் காட்டுவது என்னவெனில் முதலாளித்துவ வளர்ச்சிடையந்த கால கட்டத்தில் மேலும் மூலதனக் குவியலை தடுப்பது.
5. நோர்வே பிரிந்தபோதும் ஒடுக்கும் இனத்தில் பலம் பொருந்திய பாட்டாளி வர்க்கம் இல்லாமையுமாகும்.
6. ஒரு தேசிய இனம் பிற்போக்குத் தனமாகவும், பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயற்படல்.

7. இன்றைய நிலையில் தன்வாழ்விற்காக மற்றைய ஒரு தேசிய இனத்தின் அழிவிலே தான் தன் இனத்தின் வாழ்வு இருக்கின்றது என்பது போல முசுலீம் மக்களின் வாழ்க்கையே சூனியமாக்கிய தமிழ் தேசியத்தை என்னவென்று சொல்வது.?

இந்த உதாரணங்கள் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது பற்றியும், தேசங்கள் பிரிந்து செல்வது பற்றியும், பல்வேறு கால கட்டத்தில் மார்க்சிய மூலவர்களால் பல்வேறு காலத்தில் பலவிதமான கருத்து வைக்கப்பட்டது. ஆனால் இவர்களின் இலக்கு பாட்டாளி வர்க்கப் புரட்சியாகவே இருந்துள்ளது. இவர்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றி கொள்ளும் பொருட்டு தேசியப் போராட்டங்களை ஒரு கருவியாகவே பாவித்துள்ளனர். ஒரு பாட்டாளி வர்க்கம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதில் தான் முக்கிய கவனம் செலுத்தப் படுகின்றது. ஒரு புரட்சிகர கட்சியைப் பற்றி முதலாளித்துவ தேசிய வாதியிடம் வாதம் செய்ய முடியாது. ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி பற்றி உழைக்கும் வர்க்கம், குட்டி முதலாளித்துவ இடது பிரிவினர், பொதுவுடமைவாதிகளிடம் இக்கருத்துப் பற்றிக் விவாதிக்க முடியும். ஒரு கட்சி பல்வேறு வகையான செயற்பாடுகளையும், கடமையைக் கொண்டுள்ளது. இந்தச் செயற்பாடுகள் கடமைகள் பற்றிப் பார்க்கின்ற போது எவ்வகையான பாதையை தொடர வேண்டும் என்பது பற்றி ஒரு முழுமையான கருத்தினை வந்து அடைய முடியும்.

# 2.6.1 இனப்பிரச்சனை தீர்க்க முடியுமா?

முதலாளித்துவ வளர்ச்சியினால் ஏற்பட்டதே தேசிய இனப்பிரச்சினை. இதனை முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் கீழ் தீர்த்து வைக்க முடியும். இதனை மார்க்சியம் ஏற்றுக் கொள்கின்றது. பிரச்சினையை தீர்க்க முடியும் என்பதை காட்டவே மூலவர்கள் சுவிசினை உதாரணம் காட்டுகின்றனர். சுவிஸ் நாட்டில் இத்தாலிய, பிரெஞ்சு, யேர்மன், போன்ற இனங்களுடன் லிச்சர்ஸ்ரெயின் ஆகிய சிறு முடியரசும் கொண்ட நாடாக காட்சியளிக்கின்றது. இங்கே எல்லா இனமக்களும் சுயநிர்ணயம் பெற்றவர்களாக இருக்கின்றனர். முதலாளித்துவ அமைப்பில் தீர்க்க முடியாது என எண்ணுவதை "தத்துவார்த்த வழியில் தவறாக வரையறை செய்வதாகின்றன." (பக்.305 நூல் திரட்டு 1 – லெனின்) ஆனால் தீர்க்கப்பட்டாலும் இறுதி எல்லையாக இருக்க முடியாது. அதேவேளை தொழிலாளர் வர்க்க பிரச்சினை என்பது இப்பொருளாதார அமைப்பில் தீர்த்துக் கொள்ள முடியாது. பாட்டாளி வர்க்கம் தொடர்ச்சியான போராட்டம். தேசிய இனப் பிரச்சினை எனும் போது தமிழ் சிங்கள தேசிய முதலாளிகளுக்கும் இடையேயான பிரச்சினை இது எல்லை பிரிப்பதில் உள்ள பிரச்சினை சுருங்கக் கூறின் முதலாளித்துவம் சுரண்டுவதற்கு சந்தை தேவை அதாவது தனது பொருளை விற்பதன் மூலம் தன்னுடைய மூலதனத்தை பெருக்கவேயாகும்.

தேசியப் போராட்டம் எந்த வரையறைக்கு உட்பட்டது என்பதை ஸ்ராலின் கூற்றில் இருந்து பார்ப்போம். "தேசிய இயக்கம் என்பது சாரம்சத்தில் முதலாளித்துவ இயக்கமாகும் எனவே இது இயல்பாகவே முதலாளித்துவத்தின் தலைவிதியோடு கட்டுண்டதாகும். தேசிய இயக்கம் முடிவாக ஒழிய வேண்டுமானால் முதலாளித்துவத்தின் அழிவிலேதான் அதுசாத்தியமாகும். சோஷலிச ஆட்சியில் மட்டுமே தான், அமைதியை முழுமையாக நிலைநாட்ட முடியும். ஆனாலும் முதலாளித்துவ அமைப்பின் கீழும், இந்த தேசியப் போராட்டத்தை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ, அவ்வளவு தூரம் குறைக்கவும், அதன் வேரைக் கிள்ளி எறியவும், பாட்டாளி வர்க்கத்திற்கு எவ்வளவு தூரம் தீமை பயக்காதிருக்குமோ அவ்வளவு தூரம் தீமை பயக்காதிருக்கும் படியும் செய்ய வேண்டும். இதற்கு அமெரிக்கா, சுவிட்சிலாந்து ஆகிய நாடுகளை உதாரணங்களாகச் சொல்லலாம். இதற்குத் தேவை, அந்த நாடு ஜனநாயப் படுத்தப்பட்டிருக்க வேண்டும், மற்றும் எல்லா தேசிய இனங்களுக்கும் சுய வளர்ச்சிக்கான சந்தர்ப்பம் தரப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும்." (33 மா.தே. இ.பி. ஸ்ராலின்)

அதேவேளை இன ஒடுக்கு முறையின் ஆரம்பமானது ஆட்சியிலிருக்கும் சக்தியானது தனது வர்க்க நலனின் பொருட்டு, மற்றைய இன முதலாளிகளை ஒடுக்குகின்றது. இவ்வொடுக்கு முறையின் காரணமாக தேசிய இனத்தின் பிரதிநிதிகள் என்பதால் சாதாரண மக்களும் ஒடுக்கு முறைக்கு உள்ளாகின்றனர். ஆனால் பெரும்பான்மை இனத்தைக் கொண்ட ஒரு அரசானது ஒரு தேசிய இனத்திற்கு எதிரியாக வேண்டிய தேவை இல்லை. ஆனால் தொழிலாளர் வர்க்கத்திற்கு நண்பனாக ஒருபோதும் இருக்க முடியாது. இச்சமூக அமைப்பானது பொருளாதாரத்தின் மீது கட்டப்பட்டுள்ளது. மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வானது உற்பத்தி சக்தி, உற்பத்தி உறவுகளில் மாற்றம் செய்யும் போதே ஏற்படக் கூடியதாகும். நீண்ட போராட்டத்தின் மூலம் தான் தீர்த்துக் கொள்ள முடியும்.

## 2.6.2 இடைக்காலத் தீர்வு பற்றி

தீர்வினை மேற்கொள்ளும் பொருட்டு பல போராட்டங்களில் ஏகாதிபத்தியங்கள் தலையிட்டுக் கொள்கின்றன. இவைகள் பல்வேறு மட்டங்களில் பல்வேறு உதவி சக்திகளைப் பாவித்துக் கொள்கின்றன. இலங்கையை எடுத்துக் கொண்டால் அவை இந்தியாவின் நட்பைப் பாவித்துக் கொள்கின்றன. இந்தியா பிரச்சினையை தீர்த்து வைப்பதில் தோல்வி கண்டு விட்டது. ஆனால் ஏகாதிபத்திவாதிகளுக்கு பிரச்சினையை புரிந்து கொள்ளத்தக்கவர்களும், பிரச்சினையை கையாளத்தக்க புதிய முறை தேவையாகின்றது. அவசியமான வேளையிலும், தளங்கள் முக்கியத்துவம் அற்ற நிலையில் இருக்கின்ற போதே முன்றாவது நபர்கள் உதவி தேவையாகின்றது. கொசவோ, பொஸ்னியா போன்ற இடங்களில் ஏகாதிபத்திய வாதிகள் பிரச்சினைகளை உருவாக்கி அவர்களே நுழைந்து விடுகின்றனர்.

இது கிழக்கு தீமோர் பிரச்சினையில் அவுஸ்ரேலியா, போத்துக்கல் ஆகிய நாட்டையும் பாவிக்கின்றது. குறிப்பாக நோர்வே என்ற ஸ்கண்டிநேவிய நாட்டை பல பிரச்சினைகளுக்கு மத்தியத்துவம் வகித்துக் கொள்ள பாவிக்கப்படுகின்றது. இது வரைக்கும் கௌத்தமாலா, பலஸ்தினம், வட அயர்லாந்து போன்ற பிரச்சினைகளில் ஏகாதிபத்தியங்கள் பாவித்துள்ளன. இவர்கள் பாவிக்கின்ற நடைமுறையை பிரச்சினை நடைபெறுகின்ற நாடுகள் நன்கு உணர்ந்து கொள்வது அவசியமாகின்றது.

பலஸ்தீனம், வட அயர்லாந்து பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் பேச்சுவாத்தைை நடைபெற்றுக் கொண்ட போது இரகசியமாக வைத்துக் கொள்ளப்பட்டது. இதில் கலந்து கொள்பவர்கள் தொடர்ச்சி பேணப்படுகின்றது. இவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளும் விடயம் தொடர்பாக எல்லோரும் ஒரே மாதிரி புரிந்துணர்வு எற்படுகின்ற வரையில் அவர்கள் விவாதங்களை மேற்கொள்கின்றனர். இவைகள் திரை மறைவில் நடைபெறுவதால் உலகத்திற்கு தெரிவதில்லை. இவர்கள் எம்முடைய இயக்கங்கள் கடந்த காலத்தில் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளிவந்தவர்கள் மத்தியில் 'என்ன தோழர் தெரியும் தானே, என்றால் ஓம் தோழர் அப்படித்தான்' என்ற சங்கேத புரிந்துணர்வை எற்படுத்துகின்றனர்.

ஒரு பிரச்சினையை மென்மையாக கதைக்க கூடிய நிலையை பேச்சுவார்த்தையில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்படுத்துவது முதலாவது நிலை ஆகின்றது. இதனை முன்னைய சோசலிச முகாமில் இருந்த நாடுகள் மீது மேற்கு தேசங்கள் கொள்கின்ற கண்ணோட்டத்தில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. நிறுவனமயப்பட்ட உறவுகள் முற்றிலும் வளர்ச்சியடையவில்லை. நிறுவனங்கள் வளர்ச்சியடைந்த பிற்பாடே ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைத்துக் கொள்ளும் கருத்தோட்டம் இருக்கின்றது. முழுமையாக வளர்ச்சியடையாத மத்திய ஆட்சிமுறை நிர்வகிப்பதற்கு முடியாதாகும். முதலாளித்துவ பொருளாதார அமைப்பிற்கு முக்கியமாக மையப்பட்ட ஆட்சி முக்கியமானதாகும்.

எமது கிராம மக்களுக்கு அரசாங்கத்தை யார் நிர்வகிக்கின்றனர் எனக் கூட தெரியாத நிலையில் இருக்கின்றனர். கிராமங்கள் நகரத்தில் இருந்து தொடர்பற்றதாகவே இருக்கின்றன. இவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் பற்றி நகர்ப்புறத்தை அண்டிய அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளும் நிலையில் கூட இல்லாமல் இருக்கின்றனர். எமது நாட்டவர் பிரச்சினைக்கு தீர்வாக வெட்டிரிவாள், வேல்கம்பு வீசித்தான் பழக்கமானவர்கள். பிரச்சினையின் ஆரம்ப காரணத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ளாது. பிரச்சினையின் விழைவை முன்நிறுத்தியே வாதங்கள் வைக்கப்படுவது இயல்பு இது முதலாளித்துவ வாதிகளின் பொதுவான இயக்கப் போக்காகும். நாம் வாதங்கள் புரியும் போது உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கின்றோம். இதற்கு உதாரணமாக திம்புப் பேச்சு வார்த்தை நடைபெற்ற வேளை இந்திய தரப்பில் கலந்து கொண்ட மத்தியஸ்தர் தகாத வார்த்தையை பாலசிங்கத்தின் மீது பாவித்தார். இந்த அவமரியாதையை எதிர்த்து அனைத்து விடுதலை இயக்கங்களும் வெளிநடப்புச்

செய்தன. இங்கே மத்தியஸ்தம் செய்பவர் உணர்ச்சிக் அடிமையாகிய நிலையைக் காட்டுகின்றது. இதே போல் சம்பந்தப்பட்ட பகுதியினர் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் போது இதை விட உணர்ச்சி வசப்படும் நிலை உருவாகவும் சந்தர்ப்பம் உள்ளது.

இதனை பரந்த அலகில் பார்ப்போமாயின் இனங்கள் பகைமை கொள்கின்ற போது இவர்கள் ஒருவர் ஒருவரை குற்றம் சாட்டுகின்றனர். இந்த நிலை சமூகத்தின் பல அலகுகளிலும் நடை பெறுகின்றன. போட்டி, பொறாமை, பழிவாங்கல் போன்றவைகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த நிலை பிரச்சினைகளை ஆழமாக புரிந்து கொள்ளாத போக்கும், அவர்கள் வாழ்ந்து வந்த உலகக் கண்ணோட்டமும் காரணமாகின்றது. இனங்களுக்கிடையே ஏற்படுகின்ற மனக்கசப்பு உடனடியாக தீர்க்க முடியும் என்று நினைப்பது கற்பனையே. இனக்கசப்பு இருக்கின்ற போது மூன்றாம் நபர் நுழைந்து பிரச்சினையை தீர்க்க முனைவது பிரச்சினையை மூடி மறைக்கின்ற போக்காகும். இதனை ஏகாதிபத்தியங்கள் செய்து கொண்டு இருக்கின்றன.

குறைந்த முக்கியத்துவம் உடைய நாடுகளில் பிரச்சினையை தீர்ப்பதற்கு மென்மையாக பேசக் கூடிய நபர்களை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது. எமது தேசங்கள் மாதிரி முற்றும் முழுவதுமாக நிறுவனமயப்படாத சமூக உறவுகளைக் கொண்ட நாடுகளில் இவர்கள் கொள்கின்ற அணுகுமுறை வெற்றியளிக்கின்றன. குரு சீடன் உறவு இங்கு சரியாகப் பாவிக்கப்படுகின்றது. இந்தச் சமூக அமைப்பு விதி எவ்வாறு இருக்கின்றதோ அவ்வாறே அதன் சமூக அமைப்பின் சமூக உறவுகளின் இயக்கம் இருக்கும் என்பதைப் போதிக்கின்றது. இவர்கள் பிரச்சினைகளை தணிக்கும் முறையை முதலாளிய சிந்தனைக்கு அவ்வளவு சிறப்பாக ஒரு காரியத்தைச் செய்து முடிக்கின்ற திறமை இல்லை. ஆனால் முதலாளித்துவ அமைப்பை பாதுகாக்க சிறப்பாக இன்றைய நிலையில் செயற்படுகின்றார்கள்.

இலங்கையில் மாத்திரம் அல்ல எல்லா நாடுகளிலும் போராளிகள் ஆயுதங்ளை ஒப்படைக்கும் படி கோரப்படுகின்றது. ஆயுதங்கள் ஒப்படைக்கப்படுகின்றன. ஆயுதம் ஒப்படைத்தல் தொடர்பான கருத்துக்களில் மாறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன. போராட்ட இயக்கங்கள் உண்மையான தீர்வு கிடைக்கும் வரை ஆயுதங்களை கீழே போடக்கூடாது. ஆயுதங்கள் போட்ட பின்னர் நாடாளுமன்றப் பாதையில் விசுவாசம் வைத்துச் செயற்பட முடியாது. வர்க்கப் போராட்டத்தை தொடர்ச்சியாக நடத்த வேண்டும். பல நாடுகளில் 1990 – க்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் நாடாளுமன்றப் பாதையில் மாத்திரம் திருப்தி கொள்கின்ற போக்கை காணமுடிகின்றது. இதற்கு சனநாயக வழிக்குத் திரும்புகின்றனர் எனக் கூறப்படுகின்றது. ஆயுதங்கள் ஒப்படைக்கும் படி கோரப்படுகின்றது எனினும் ஏகாதிபத்தியங்கள் சனநாயக வழியில் போராடும் படியும் கோருகின்றனர். ஆயுதம் ஏந்திப் போராடுவது மேற்கத்தைய கலாச்சாரத்தின்படி பார்ப்போமானால் பிசாசுகளின் கைங்கரியம் என்ற நிலைப்பாட்டினைத் தான் கொண்டுள்ளனர்

இங்கே பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையாக ஆயுதங்களை ஒப்படைக்கும் படி இலங்கையில் கோரப்படுகின்றது. ஆயுதங்களை முறையான தீர்வு முன்வைத்து நடைமுறைப்படுத்தும் வரை ஒப்படைக்க விடுதலை இயக்கம் முன்வர மாட்டாது என்று தெரிந்தும், ஆயுதங்களை ஒப்படைத்தால் தான் பேச்சுவார்த்தை என நிபந்தனை விதிப்பது பிரச்சினையை தீர்த்து வைப்பதில் உள்ள ஆர்வம் அல்ல. மாறாக பிசுபிசுத்த தன்மையை தொடர வைப்பதற்கும் மக்களின் அழிவில் அரசியல் நடத்தவும் மாத்திரம் இந்த தந்திரோபாயம் பயன்படும்.

இவ்வாறு தீர்வை முன்வைக்கின்ற போதும் ஏற்படுகின்ற பல பிரச்சினைகள் இருக்கத் தான் செய்கின்றன. குறிப்பாக முதலாளித்துவம் வளர்ச்சியடையாத நாடுகளில் நிறுவனமயப்பட்ட உறவுகள் முற்றிலும் வளர்ச்சி அடையவில்லை. நிறுவனங்கள் என்னும் போது சுகாதார, சமூக நலபாதுகாப்பு, சட்ட, நீதி, கல்வி, போன்ற துறைகளைக் குறிப்பிடலாம். இவைகள் வளர்ச்சி அடைந்த நிலை இல்லாவிடின் உள்நாட்டில் அராஜகம் தலைதூக்கும். இந்த நிலையை சமாளித்துக் கொள்வது எமது தேசங்களின் சவாலாக அமைந்து கொள்கின்றது. இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால் சனநாயகம் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஒப்பந்தங்கள் ஏற்பட்டு போராட்டக் குழுக்களில் உள்ளவர்கள் மறுசீரமைப்பு திட்டத்தில் கீழ் மறுவாழ்வு அளிக்க-ப்பட்டிருக்கின்றனர். இந்தப் பிரச்சினை கம்யூனிச போராளிகள் நிலையில் அவசியமற்றதாகின்றது. ஏனெனில் யுத்த தந்திரம், (Stategy, Tactics) போர்த்தந்திரத்தின் அடிப்படையில் ஆயுத நிலை பற்றி நிர்ணயம் பெறுகின்றது. எனினும் ஏகாதிபத்தியங்கள் கொடுக்கின்ற தீர்வுக்குப் பின்னர் ஏற்படுத்தப்படுகின்ற ஆட்சியாளர்களால் இதனை கவனத்தில் எடுக்கின்றனர். இவற்றை விட மிக முக்கிய பிரச்சினையாக தோன்றுவது, முன்னர் படைகளில் இருந்தவர்கள். தமது ஆயுதங்களைப் போட்டு விட்டு சமூகத்தில் வரும்போது 'பல் பிடுங்கப்பட்ட பாம்பு' போல தான் இருப்பார்கள். இவர்கள் கலகக் காரர்களாகவும், பின்னர் ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர்.

படையில் இருந்தவர்கள் அதிகாரத்தில், சுகபோகத்தில் வாழப்பழகியவர்கள் இவர்கள் ஆயுதம் இல்லாமல் எதையும் சுயமாக சிந்தித்து செயற்பட பழக்கப்படாதவர்கள். இது ஒருவிதமான மனோவியல் பிரச்சினை. ஆனால் இராணுவத்திலே முக்கிய பதவியை வகித்தவர்கள் இன்னும் மோசமானவர்கள் இவர்களே ஆட்சிக் கவிழ்ப்பை மேற் கொள்ளத்தக்கவர்கள். இவர்களைச் சமாளிப்பது பெரும் பிரச்சினை. இந்தப் பிரச்சினை லத்தீன் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் உள்ள நிலையாகும். அதிகாரத்தில் சுவை கண்டவர்கள் பிரச்சினைகளைத் தங்கவைத்துக் கொள்ள இடையறாது முயற்சிக்கும் நிலைதான் இடம் பெற்றிருக்கின்றன. இதற்கு ஏகாதிபத்தியவாதிகள் சனநாயக வழியைப் பின்பற்றும் படிகோருகின்ற போதும், அவர்கள் கொடுக்கின்ற வர்க்க ஆதரவும் சுரண்டும் வர்க்கத்தை பாதுகாத்து விடுகின்றன.

இவர்கள் முன்னைய குலச்சமுதாய உறவு முறைக்குள் பிரச்சினையை தீர்க்கப் பழக்கப்பட்டவர்கள். இவர்கள் பிரச்சினையை தீர்க்க முனைகின்ற போது பலத்தைக் காட்டுகின்ற நிலை ஏற்படுகின்றது. இங்கே வெட்டுக், கொத்து, சூடு எல்லாம் ஏற்பட இடமுண்டு. இவ்வகையான சமூக உறவினுள் பழக்கப்பட்டதே கொசவோ, இலங்கை போன்ற தேசங்கள் இந்த நிலையை புரிந்து கொள்ளாமல் வெளியார் விரும்பிய தீர்வை முன்வைப்பது யதார்த்த நிலையை புரிந்து கொள்ளதாக போக்குத் தான் இதில் தான் ஏகாதிபத்திய மனோநிலை அடங்கியுள்ளது.

ஒடுக்கப்படுவர்கள் கொண்டுள்ள வரலாற்று அனுபவம் முதன்மை கொள்ள வருகின்றது. வரலாற்று அனுபவத்தினை எல்லோரும் உபயோகப்படுத்துகின்றனர். இலங்கையை எடுத்துக் கொண்டால் எத்தனையோ வாக்குறுதிகள், ஒப்பந்தங்கள் மீறப்பட்டுள்ளன. எத்தனையோ உடன்சகாக்களின் இழப்புக்கள் இவைகள் எல்லாம் முதன்மை கொள்கின்றன. இங்கே புறநிலையை கணித்துச் செயற்படும் போக்கு இல்லாமல் போகின்றது. இங்கே உணர்ச்சி வகை முன்னிக்கின்றது. எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை இயல்பானதே. ஆனால் பிரச்சினையை தீர்க்க முனைகின்ற போது இவைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

சொந்த அனுபவத்தை பார்த்துச் செயற்படும் போக்கு இலங்கையில் மாத்திரம் அல்ல சர்வதேச நிலையிலும் நடை பெறுகின்றது. யூக்கோ மீதான தாக்குதல்களுக்கு வெஸ்லி கிளாக், சவியோர் சொலோனா, ஜெமி (Jamie Shea), றொபின் குக், மடலீன் ஒல்பிரரைட் இன்னும் பல நோட்டே தலைவர்களின் மிலோசவிச் மீதான தனிப்பட்ட (வர்க்கத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது) கருத்தும், மிலோசவிச் மீது கொண்ட அவநம்பிக்கையும், தனிப்பட்ட தலைவர்களின் கௌரவமும் யுத்தத்திற்கான முடிவிற்கு காரணமாக இருந்தது. இதனை வெளிப்படையாகவே ஜேர்மன் வெளிநாட்டமைச்சர் அவர் மீது யுத்த எதிர்ப்பாளர்கள் கொடுத்த தாக்குதலின் பின்னர் தன்நிலையை நியாயப்படுத்தி உரைநிகழ்த்திய போது இதனை வெளிப்படையாக அறிய முடிந்தது. இவர் கூறியது (உரையின் முக்கிய உள்ளடக்கம்) என்னவெனில் இனப்படுகொலையாளியான மிலோசவிச் நம்பத்தகுந்தவர் அல்ல, அவருக்கு நோபல் பரிசு கொடுக்க முடியும், தான் மாத்திரம் யுத்த வெறியனா? தன்னை நம்பத் தயார் இல்லாதவர்கள் மிலேசவிச்சை நம்பத்தயாராக உள்ளதாக ஆவேசப்பட்டுக் கூறினார்.

தனிநபர்களின் நம்பகத் தன்மை, தனிநபரின் அனுபவம் இவைகள் எல்லாம், ஒரு செயற்பாட்டை எப்படியாவது செய்து முடித்துவிட வேண்டும் என்ற குட்டி முதலாளித்துவ வரட்டுத் கௌரவம் சார்ந்ததாகும். இது முதலாளித்துவ வர்க்கச் சிந்தனையின் வெளிப்பாடு தான் பாட்டாளி வர்க்கம் எல்லோரையும் நம்புவதில்லை. அவர்களுக்கும் வரலாற்றில் பக்கம் பக்கமாக நம்பத்தகாதவர் பட்டியலைக் காட்டுவர். இந்த வெளிப்பாடு வர்க்க ரீதியாக ஆராயப்பட்டு தன்னுணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காது வரலாற்று இயங்கியல் போக்கில் அமைந்தாகவே இருக்கின்றன. இங்கு தனிப்பட்ட நபர்களின் விருப்பு வெறுப்பு அல்ல மாறாக உழைக்கும் வர்க்கத்தின் நலன் அடங்கியிருக்கின்றது.

இடைக் காலத் தீர்வு, அல்லது முதலாளித்துவ அரசில் சமரசம் காணல் என்ற முயற்சி கூட இரு பகுதியினதும் இதய சுத்தியிலமைந்த பேச்சுவார்த்தை மூலமே

சாத்தியமாகும். ஆனால் இன்று பல நாடுகளில் நடை பெறும் தேசிய இனப் பிரச்சினைகளுக்கு காலத்திற்கு காலம் வெவ்வேறு முடிவு எடுக்கும் ஏகாதிபத்தியங்கள் உள்நாட்டு தேசிய சக்திகள் தமக்கிடையே சமரசம் காண்பதற்கு பதிலாக ஏகாதிபத்தியங்கள் விருப்பு வெறுப்புக்கு அமைய தீர்வுகளை திணிக்கின்றன. தீர்வினை உலகப் பொலீஸ் என்ற நிலையில் இருந்து கொண்டு நிர்ப்பந்தமாக திணிக்கின்றது. தீர்வை ஏற்றுக் கொள் அல்லது பிரச்சினைக்கு 'உள்ளாவாய்' என்ற நிலை கொண்டு ஏகாதிபத்தியம் நடந்து கொள்கின்றது. இதுவே பொஸ்னியா, பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் நடைபெற்றன. அத்துடன் உதவிப் பொதி என்பது கொடுக்கப்படுகின்றன. தீர்வுகள் என்பது கீழ் நிலையில் இருந்து பெறப்பட வேண்டும். அப்படி நடைபெறாததினால் தேசிய முதலாளிகள் மட்டத்தில் கூட சமரசம் கிட்டாது முறுகல் நிலையில் பிரச்சினைகள் தொடர்கின்றன. இந்த நிலை என்பது இலங்கையைப் பொறுத்த வரை பெரிய சந்தையைக் கொண்ட இந்தியாவின் பகமையைக் கொள்ளாது ஏற்படுத்த முயற்சி எடுக்கும்.

சந்திரிக்காவானாலும் சரி, விடுதலை இயக்கங்களானாலும் சரி வெளிநாட்டு நிர்ப்பந்தங்களுக்கு அதாவது சர்வதேச அரசியலுக்கு இசைவாகவே நடக்க வேண்டியுள்ளது. எவரும் இதற்கு மீறி நடக்க முடியாது. அப்படி நடக்கும் போது ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் எமது நாடுகள் மீது, இறைமை மீது கைவைக்கப்படுகின்றன. மேற்கு நாடுகள் சமாதானப்படை என்ற பெயரில் எமது நாடுகள் மீது தலையிடுகின்றன, அல்லது பொருளாதாரத் தடை விதிக்கின்றன. இப்பொருளாதாரத் தடைக்கு ஆளாகியுள்ள கியூபா, வடகொரியா ஆகிய நாடுகள் தமது இறைமையைப் பாதுகாக்க முற்படுவதால் தொல்லைக்கு ஆளாகின்றன.

மேற்கு நாடுகள், அமெரிக்க போன்ற நாடுகளின் பொருளாதார நலனுக்கு முரணாக எமது நாடுகள் கொள்கைகளை வகுக்கும் போது தொல்லைகளுக்கு ஆளாகின்றன. அவற்றை எதிர்த்துப் போராடுவது இலகுவானது அல்ல. அத்துடன் வெற்றி கொள்ளும் பொருட்டு இருக்கின்ற முரண்பாடுகளை குறைக்க வேண்டி தந்திரோபாயத்தை வகுத்தல் வேண்டும். வெளியாரின் தலையீடு என்பது இருக்கின்ற வகுத்துக் கொண்டு கொள்கையான தமிழீழம் கூட அடைந்து விட சாத்தியமில்லாமல் போகலாம். ஏற்படுகின்ற சமரசம் என்பது அடுத்த கட்டத்திற்கான மைல் கல் அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. இந்தக் கூற்று ஒரு பொதுவுடமைச் சித்தாந்தத்தைக் கொண்ட அமைப்பிற்கே இது பொருந்தக் கூடியது. ஏனெனில் இனத்தை முதன்மைப் படுத்துகின்ற போக்கிற்கு அதாவது தமிழ் மையப் போக்கிற்கு பலியாகிப் போன நிலையில் இதனை ஏற்றுக் கொள்ள வைப்பது இலகுவான காரியம் அல்ல.

## 2.6.3 தப்பியோடுதல்

நாம் பிரச்சினைக்கு தீர்வுக்குப் போகுமுன் தமிழருக்கு தேசம் வேண்டும் என அடித்துக் கூறுதன் அடிநாதத்தை அறிதல் வேண்டும். அதேவேளை இது எந்த விதத்திலும் ஆண்ட பரம்பரை மீண்டும் ஆளநினைப்பது தவறா? என்ற கூட்டணியினரின் கோசத்திற்கும் இதற்கும் எவ்விதத்திலும் மாறுபாடு உடையதாகத் தெரியவில்லை. யார் தலைமையில் ஆட்சி இருந்தால் என்ன தனிநாடு கிடைத்தால் போதும் என்ற நிலைப்பாட்டில் கூட்டணியினர் தமது பிரச்சாரத்தினை

மேற்கொண்டனர். பிரச்சார மேடைகளிலே அவர்களின் வீர சாகசங்களை நாம் கேட்டி இருக்கின்றோம். அண்ணன் அமீர், அக்கா மங்கையர்க்கரசி இளம் தலைமுறை கரிகாலன் வரை அரசியல் மேடைகளில் ஆண்ட பரம்பரை ஆள நினைப்பது தவறா என இவர்கள் மேடையில் இருந்து உரக்கக் கேள்வி கேட்கும் போது, எமது உடம்பில் புல்லரிக்கும். ஏன், எதற்கு, எப்படி என கேள்விகளைக் கேட்காமல் வரலாற்றை திரும்பி ஆய்வு ரீதியாகப் பார்க்காமல் மெய்சிலிர்த்தோம். அவர்களின் அந்த உரையைக் கேட்டு குறுகிய வட்டத்திற்குள் இருந்து பார்க்கும் சிந்தனையினால் வளர்க்கப்பட்டோம். (இவர்களின் வாரிசுகள் மார்க்சியப் போர்வையில் மறைந்துள்ளனர்.) யார் அந்த ஆண்ட பரம்பரை சாப்பிட வழியில்லாதவனா? மாற்றியுடுக்க துணியில்லாதவனா? உறங்க வீடில்லாதவனா? தன் பிள்ளைகளை கல்வி கற்பிக்க அனுமதி வாங்கும் அளவிற்கு வசதியுள்ளவனா? பள்ளன் என்றும் பறையன் என்றும் பாகுபாடு காட்டப்பட்டு ஒதுக்கப்பட்டவனா?

இவர்கள் வேறு யாரும் இல்லை ஆண்டாண்டு காலமாக சுரண்டி, சுகபோகத்திலே எல்லாவற்றையும் அனுபவித்த சோம்பேறிக் கூட்டம் தான். இவர்கள் மற்றவர்கள் உழைப்பிலே வாழ்ந்த சுவையை இலகுவில் விட்டுவிட தயாராக இல்லாத கூட்டம். தனது ஆண்ட பரம்பரையின் வாரிசுகளான சங்கிலியன், பண்டார வன்னியன் என இவர்களின் புகழ்களை எமக்குக் கூறினர். இது மாத்திரமல்ல உயிர் தமிழருக்கு உடல் மண்ணுக்கு, அடைந்தால் ஈழம் இல்லையேல் சுடுகாடு, இப்படியான வீரப்போச்சுக்கள். இவற்றின் மூளைச்சலவை செய்யப்பட்ட முன்னேறிய பிரிவினர்களும், மக்களும் தேசிய முதலாளித்துவத்தின் கவர்ச்சிக்கு பலியாகி விட்டனர். மாறாக ஐக்கிய இலங்கை என மாற்றுக் கருத்தை வைக்கும் பகுதியினரை தப்பித்து ஒடும் முயற்சி என குற்றம் சாட்டுவது எவ்வகையிலும் நியாயமானதாகத் தெரியவில்லை. மாறாக தமிழ் ஈழத்தை கருத்தில் கொள்பவர்கள் ஈழ மையவாதக் கருத்துகளுக்கு பலியாகி சிங்கள, முஸ்லீம், மலையக மக்களுக்கான தீர்வுகளில் நாட்டமில்லாது ஒடி ஒழிகின்றனர். இவர்களை புலிக் குகையில் புகாமல் புலிக் குட்டியைப் பிடிப்பது என்பது எவ்வாறு முடியும் என்ற சீனப் பழமோழி இங்கு பொருத்தமாகும். (மாசேதுங் பாவிக்கும் பழமொழி)

தப்பித்துப் போவது யார் என்பதை லெனினுடைய வசனத்திலேயே பார்ப்போம். இங்கு தப்பியோடுவது மாத்திரம் அல்ல. இங்கு தேசிய இனங்களிடையே கசப்புணர்வு தோன்றுவது எவ்வாறு என்பதையும் கானலாம். ''போலந்துப் பிரச்சினை பற்றி எழுதியிருப்பது மற்ற ஒவ்வொரு தேசியப் பிரச்சினைக்கும் முழுமையாகப் பொருந்தக் கூடியதே. வெறுப்புக்குரிய சர்வாதிகார வரலாறு அந்தச் சர்வாதிகாரத்தினால் ஒடுக்கப்பட்ட பல்வேறு தேசிய இனங்களின் உழைக்கும் வர்க்கங்களுக்கு இடையே மாபெரும் மனமுறிவை நமக்கு பாரம்பரியமாக விட்டுச் சென்றிருக்கிறது. இந்த மனமுறிவு ஒரு மாபெரும் திங்கு, சர்வாதிகாரத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் இது ஒரு மிகப்பெரிய தடை. நாம் அப்படிப்பட்ட எவ்விதமான கோட்பாடுகளையும் தனித்தனி கட்சிகளாக அல்லது கட்சிகளின் கூட்டமைப்பாக ஏற்படுத்தி இருந்த திமையைச் சட்ட பூர்வமாக்கக் கூடாது, இந்த அருவருப்பான நிலைமையை புனிதப்படுத்தக் கூடாது. அதே சமயத்தில் அதிகம் சிரமம் இல்லாத ஒரு வழியை பின்பற்றி, அது எனக்குச் சிறிதும் சம்மந்தமில்லாதது என்ற விதியைப் பின்பற்றி

கொண்ட ஒவ்வொருவரும் தன்னுடைய மூலையில் சுகமாக இருப்பது மிகவும் சுலபமானது. வசதிமிக்கது. இதைத்தான் இப்பொழுது புதுக் கட்சியினர் செய்ய விரும்புகின்றனர். ஒற்றுமையின் அவசியத்தை எவ்வளவு அதிகமாக உணர்கிறோமோ, முழுமையாக ஒற்றுமை இல்லாமல் சர்வாதிகாரத்தை எதிர்த்து ஒன்றுபட்ட தாக்குதலை நடத்த முடியாது என்பதை எவ்வளவு அதிகமான உறுதியோடு நாம் புரிந்து கொள்கிறோமோ, அந்த அளவிற்கு நமது அரசியல் ஸ்தாபன முறையின் நிலமைகளில் போராட்டத்தை மையப்படுத்தி அமைத்துக் கொள்வதன் அவசியம் தெளிவாகப் புலப்படும், இந்தப் பிரச்சினைக்கு எளிமையான – ஆனால் பகட்டான, அடிப்படையில் மிகவும் போலியான – தீர்வைக் கண்டு திருப்தி அடைவதும் நம்மிடம் அந்த அளவிற்கு குறையும். இந்த மனமுறிவினால் ஏற்படும் ஆபத்தைப் புரிந்து கொள்ளாமலிருக்கின்ற வரை, பாட்டாளி வர்க்கக் கட்சியின் முகாமில் இருக்கும் இந்த மனமுறிவை எப்பாடு பட்டாகிலும் தீவிரமாக முடிவு கட்ட வேண்டும் என்ற விருப்பம் ஏற்படாத வரை, கூட்டாட்சி என்ற மூடுதிரைக்கு அவசியம் கிடையாது. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சிப்பதில் – அதில் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு தரப்பிற்கு அதை தீர்க்க வேண்டும் என்ற உண்மையான ஆசை எதுவும் இல்லாத பொழுது – ஒரு பயனும் ஏற்படாது. இப்படிப்பட்ட நிலமையில், சர்வாதிகாரத்தால் ஒடுக்கப்பட்ட எல்லாத் தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கமும் அந்த சர்வாதிகாரத்தையும் மென்மேலும் ஒற்றுமைப்பட்டு வருகின்ற சர்வதேசப் பூர்சுவாக்களையும் எதிர்த்து நடத்துகின்ற போராட்டத்தில் வெற்றியடைய மத்தியத்துவம் அவசியமானது என்பதை அனுபவம் மற்றும் நடைமுறை இயக்கத்தின் படிப்பினைகள் நிருபிக்கட்டும் என்று விட்டு விடுவது மிகச்சிறந்ததாகும்.'' (லெனின் பக்கம் 36, 37 பா.சர்) மக்களிடம் தோன்றியுள்ள கசப்புணர்வுகள் மற்றும் இந்தப் பொருளாதார அமைப்பு ஊட்டியுள்ள நச்சுவிதைகளை அகற்றுவது என்பது புதிய கலாச்சார வடிவத்தின் மூலம் தான் முடியும்.

ஒரு தேசம் என்பது ஒரு இனத்திற்கு தேசங்கள் கிடையாது என்ற நிலையில், சர்வதேசத்தில் அந்த இனத்திற்கு பெயர் சொல்ல தேசம் வேண்டும் என்ற கோசமும் முன்வைக்கப்படுகின்றது. இதற்கு ஆதாரமாக மார்க்சிய மூலவர்களையும் பங்கிற்கு அழைக்கப்படுகின்றனர். இன்று அரசியல் நீரோட்டத்தில் பயன்படுத்தப்படும் பழம் பெருமைகள் இலகுவாக பரந்த மக்களை சென்றடை இலகுவாக இருப்பதற்குக் காரணம் சமூகமே பூர்சுவா சிந்தனையோட்டத்தில் இருந்து வெளிப்படாமல் பழைய சிந்தனையோட்டத்தில் ஊறியிருப்பதை வெளிப்படுத்துகின்றது. இன்றைக்கு தேசிய விடுதலையை பிரதான வேலைத் திட்டமாக முன்வைக்கின்ற எந்தப் பிரிவினராக இருக்கலாம். தேசிய விடுதலையின் நோக்கில் உருவாக்கப்பட்ட தேசிய உணர்வு தொடர்ந்தும் நிலைகொள்ளச் செய்கின்ற ஆபத்து இருப்பதை கவனத்தில் கொள்வதில் கவலையீனமாக இருக்கின்றனர். இந்த நிலை ஆபத்தானதாகும். சோவியத் ஒன்றியத்தில் முதலாளித்துவ வர்க்கம் மறுமீட்சி பெற்றுக் கொண்டது. அந்தச் சமூகத்தில் தொடர்ந்தும் முதலாளித்துவ வர்க்கம் தொடர்ந்தும் இருந்திருப்பதற்கான சான்றே. அதேபோல் தேசிய விடுதலை பெற்ற பின்னர் தேசிய உணர்ச்சி இருப்பதற்கு அதிக சாத்தியம் இருக்கின்றது. அத்துடன் தேசிய வர்க்கம் இந்த தேசிய உணர்வைப் பயன்படுத்தி அதில் குளிர்காய்கின்றது.

தேசியத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற மார்க்சிய நிலைப்பாட்டிலும், தாம் அன்னியப்பட்டு போகக் கூடாது என்ற நிலையில் தேசியத்தை அங்கீகரிக்கும் போது, பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை மேற் கொள்கின்ற காலத்தில், ஏற்படப் போகும் ஆபத்துக்களையும் கவனத்தில் கொள்ளாமல் இருந்து விட முடியாது. தேசிய உணர்வை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் எவ்வளவு முற்போக்குத் தன்மை அடங்கி இருக்கின்றதோ, அதை விட அதிகமாக பிற்போக்குத் தன்மையும் அடங்கியிருக்கும் எனப்பதில் பாராபட்சமாக இருந்து கொள்ள முடியாது. தேசியப் போராட்டம் என்பது வர்க்கப் போராட்டத்திற்கு உட்பட்டதே ஆனால் இதில் பிரதானமாக தேசிய முதலாளித்துவத்தில் நலன் அடங்கியிருக்கின்றது. தேசியப் போராட்டம் என்கின்ற போது எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றது என்பதை முழுமையாக புரிந்து கொள்ளாது வேலைத்திட்டத்தினை வைப்பதும், தேசியக் கோரிக்கைகளை முதன்மை கொள்வது தப்பியோடும் செயலே. பெரும்பான்மை வாழ்கின்ற நாட்டில் சிறுபான்மைக்கு பயம் கொள்ளும் ஒரு இனத்திற்கு எவ்வாறு நம்பிக்கையை ஊட்ட முடியும் இதற்கு பதில் தான் என்ன?



## 2.6.4 மூலவர்களின் தேசிய உணர்வு பற்றி

மார்க்சிய மூலவர்களின் கருத்தை அறிவதற்கு அவர்கள் கொண்ட அணுகுமுறையைப் புரிதல் அவசியமாகும். அத்துடன் அவர்கள் கொண்ட அறிவு வளர்ச்சி என்பது ஒரு வரலாற்று ஓட்டத்துடன் ஒட்டியே செல்கின்றது. அதைச் செய்யாதே இதைச் செய்யாதே அது சாத்திர தர்மத்திற்கு மனுவிற்கு முரணானது. என குட்டி (தலையில் குட்டுவது) முன்னேறும் பிரிவினரின் சதியினையும் மீறி, வர்க்க நலனை பாதுகாக்கும் நிலையையும் மீறி, அறிவுறுத்தலை மீறி இன்று தாழ்த்தப்பட்ட சாதியினரும் கல்விபெற்று முன்னுக்கு வந்துள்ளனர். இன்று புதிய கட்டத்திற்கு வந்தடைந்த மாற்றமானது முதலாளித்துவ புரட்சியினூடே சாத்தியமாயிற்று. நாம் இன்று அறிவுகளைப் பலவழிகளில் இருந்து பெற்றுக் கொள்கிறோம். எத்தனையோ பல ஆண்டுகளாக எத்தனையோ கோடிக்கணக்கான மக்களின் நடைமுறை அனுபவங்கள் ஒன்று சேர்ந்து இருக்கின்ற தன் காரணமாக அவ்வறிவு மிகவும் வளர்ச்சி அடைந்ததாகவுள்ளது. இன்றைய அறிவுகள் அனைத்தும் வாய்மொழி மூலமாகவும், எழுத்து வடிவிலும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இவைகள் இன்று கல்வி நிலையங்களில் கற்பிக்கப்படுகின்றன. கற்பிக்கப்படுபவைகள் இந்தச் சமூக அமைப்பை மீள்உற்பத்தி செய்யும் வகையில் அமையப்பெறுகின்றன. படித்துப் பட்டம் பெற்ற பின்னர் அந்த அறிவை விற்று வயிற்றை நிரப்புகின்றோம்.

எம்முடைய அறிவு வளர்ச்சி என்பது 50 வருடங்களுக்கு முன் இருந்தவர்களை விடவும் மாறுபடுகின்றது. இன்றைய அறிவு என்பது குவியல் – திரட்சி (Accumulate) அறிவாக உள்ளது. தொலைத் தொடர்புச் சாதனத்தின் வளர்ச்சியும், முதலாளித்து சுரண்டலின் அடிப்படையில் அமைந்த பூகோளமயப்பட்ட கல்வித்திட்டங்களும் இதற்கு வழியமைக்கின்றது.

இந்த அறிவுவளர்ச்சிக்கு உலகின் பல பாகங்களிலும் ஆங்காங்கே காலத்திற்கு காலம் அறிவு மறுமலர்ச்சி தோன்றிக் கொண்டிருக்கின்றது கிரேக்கம் சீனா, இந்தியா என 2500 ஆண்டுகளுக்கு முன்னர் பல அறிவு வளர்ச்சிக்குரிய பள்ளி தோன்றியதை வரலாற்றில் படிக்கக் கூடியதாக உள்ளது. புத்தருடைய போதனை, அதன் பிற்பாடு மனுதர்மத்தை ஒட்டிய பக்தி இயக்கமும் தோன்றி இருக்கின்றன. கடந்த நூற்றாண்டில் நவ இந்தித்துவ (1850களில்) இயக்கமும் இருந்து வந்திருக்கின்றன. இதே போல் ஜேர்மனியில் காந் (Kant), ஹெகல், லுத்விக்ஃபாயர்பார்க் போன்றவர்கள் தத்துவ வழியில் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றார்கள். இந்தத் தத்துவப் பள்ளியின் வரலாற்று மாணவர்களாக மார்க்சிய மூலவர்கள் உருவாகினர். இந்தப் பாரம்பரியத்தில் வந்த ஹெகல் ஃபாயர்பார்க் போன்றவர்களிடம் இருந்து முற்றிலும் மாறுதலாக இயங்கியல் பொருள்முதல் வாதத்தை நகர்த்தினர்.

இவர்களுடைய இயங்கியல் பொருள்முதல் வாதக் கண்டு பிடிப்பு என்பது நவீன காலத்திற்கு ஏற்றதானதாகும். இந்த அறிவியல் வளர்ச்சியை பின்வருமாறு கூறுகின்றார். "ஹெகலின் இயக்கவியல் புரட்டிப் போடப்பட்டது, அல்லது, மேலும் சரியாகச் சொன்னால், தலைகீழாக நின்றதை கால் மேல் நிற்கும் படி திருப்பி நிறுத்தினோம். பல ஆண்டுகளாக எங்களுடைய தலைசிறந்த வேலைக்குரிய கருவியாகவும் எங்களுடைய மிக்க கூரான ஆயுதமாகவும் இருந்து வந்த இந்த பொருள் முதல் வாத இயக்கவியலை தாங்கள் மட்டும் கண்டு பிடிக்க வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எங்களுடைய துணை இன்றியும் ஹெகலுடைய துணை இன்றியும் கூட இயோசிஃப் டித்ஸ்கென் (மனித மூலைச் செயல்களின் சாரம். உடலுழைப்பாளரால் சொல்லப்படுவது. – இது ஏங்கல்சின் விளக்கம்) என்னும் ஒரு ஜெர்மன் தொழிலாளியும் கண்டு பிடித்திருக்கிறான் (பக்கம் 65 லுத்விக்)

இவர்களிடையே ஜேர்மன் அறிவு வளர்ச்சியின் தாக்குதல் இவர்களையும் விடவில்லை. இவர்களை அன்றைய அறிவு வளர்ச்சி தாக்கியதால் ஹெகலை தலைகீழாக மாற்றவேண்டிய புதிய நிலை தோற்றிவிட்டது. ஆனால் எம்மவர்களிடையே தோன்றி இயக்கங்களானது கருத்தியலை ஆளப்படுத்தியதே ஒழிய, இவர்களால் முற்போக்கு பாத்திரம் வகிக்க முடியவில்லை. இவர்களிடம் இருந்து மாறுதலடையும் மூலவர்கள் வரலாற்று ஓட்டத்தை குறிக்கும் சந்தர்ப்பங்களிலேயே ஜேர்மனியைப் பற்றி புகழ்ந்து கூறுகின்றனர்.

இவர்கள் புகழ்ந்து கூறுகின்ற பகுதிகளைப் பார்ப்போம். "நூற்றாண்டின் பிரான்சில் நடந்ததைப் போலவே 19 நூற்றாண்டில் ஜேர்மனியில் ஒரு தத்துவ ஞானப் புரட்சி, அரசியல் வீழ்ச்சியைத் துவக்கி வைத்தது. ஆனால், அவ்விரண்டும் எவ்வளவு வேறுபட்டதாகத் தென்பட்டன." (பக்கம் 11 லுத்விக் ஃபாயர்பார்க்)

"முற்றிலும் புரட்சிகரமான ஒரு சிந்தனை வழிமுறையானது மிகவும் முனைப் பற்ற ஓர் அரசியல் முடிவை ஏன் படைத்தது என்பதை விளக்குவதற்கு அந்த அமைப்பு முறையின் உள்ளிருக்கும் அவசியக் கூறுகளே போதும். உண்மையாகப் பார்த்தால், இத்தகைய முடிவில், இந்தக் குறிப்பிட்ட வடிவம் தோன்றுவதற்குக் காரணம் ஹெகல் ஜேர்மானியர் என்பதும் வெர் காலத்தில் வாழ்ந்த கோதே போலவே அவரிடமும் போலிப் பண்புவாதத்தின் வால் கொஞ்சம் ஒட்டித் தொங்கிக் கொண்டிருந்தது என்பதுமே ஆகும்" (ப 19 லுத்விக் ஃபாயர்பார்க்) பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை

வைத்தே ஜேர்மனியைப் புகழ்வதைப் பற்றிய கருத்திற்கு வர முடியும். அப்படி அவர்கள் ஜேர்மனியை புகழ்வதை வைத்துக் கொண்டு அவர்கள் கூறுவதால் சரி என்று முடிவுக்கு எவ்வாறு வர முடியும். இவைகளை இயங்கியல் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்திற்குள் அடங்குகிறதா எனச் சரிபார்க்க வேண்டும் அப்படி அடங்காவிடின் அவர்களையும் கேள்விக்குள்ளாக்க வேண்டியது தான். இது தான் அணுகுமுறையும், அளவு கோளுமாகும். அப்படி அவர்கள் பெருமை கொள்வது என்றால் அவர்களும் ஆரியப் பெருமை கொண்டவர்கள் எனக் கூறமுடியுமா? கீழ்வரும் பகுதியை நாசிக்கட்சியினர் தமக்கு உதவிக்காக பாவிக்க முடியுமா?

ஏங்கெல்ஸ் தனது பரிணாம வளர்ச்சிப் போக்கை பின்வருமாறு கூறுகின்றார். ''அக்காலத்தில் ஜெர்மானியர்கள் ஆரியக் குழுவைச் சேர்ந்த திறமைமிக்க பிரிவினர், அவர்கள் வீரியமான வளர்ச்சிப் போக்கில் போய்க் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே. எனினும் ஐரோப்பாவுக்குப் புத்துயிருட்டியது அவர்களுடைய பிரத்தியோகக் குணங்கள் அல்ல, அவர்களுடைய அநாகரிக நிலையும் குல அமைப்புமே ஆகும்.''(253 கு.த.அ.தோ) இங்கே ஒரு இனமானது நாகரிகம் அற்றிருக்கின்ற போது பல உருவாங்கங்களை மேற்கொள்கின்றன. இது ஏனெனில் தாம் மற்றவர்களிலும் பார்க்க மேலானவர்களாக காட்டிக் கொள்ளவேயாகும். இந்த படைப்புக்கள் இன்றைய காலத்தை விட வளர்ச்சியடையாததாக இருப்பினும் அவர்களின் வீசித்திரமான சிந்தனை என்பது பல புதிய முயற்சி வகைகளை உருவாக்குகின்றன.

இங்கே கூறியதை ஆராயும் இடத்தில் இங்கு கூறுவது ஒரு குலத்தில் எவ்வகையான நீதிநெறி இருக்கின்றது என்பது பற்றியே ஆகும். ஒவ்வொருவரும் தமக்கே உரித்தான உலகக் கண்ணோட்டம், உறவுமுறை அதன் பொருட்டு உருவான நீதிநெறி என்பனவாகும். ஏங்கல்ஸ் தனது அயர்லாந்துப் பயணத்தின் போது அங்குள்ள குலச் சமுதாய எச்சத்தில் இருந்து உருவான சமூக அமைப்பில் இருந்த தன்மையை கண்டு பின்வருமாறு கூறுகிறார். ''ஐரிஷ் விவசாயியின் மூளையில் முதலாளி வர்க்கச் சொத்துப் பற்றிய நவீனக் கருத்துக்களை பதிய வைப்பது முற்றிலும் இயலாத காரியம் என்று அரசியல் பொறியியலாளர்களும் சட்ட நிபுணர்களும், ஏன் புகார் செய்கிறார்கள் என்பதை இது விளக்குகிறது. உரிமைகளை மட்டுமே பெற்ற, கடமைகளே இல்லாத சொத்து ஒன்று இருக்க முடியும் என்பது அந்த விவசாயிகளுடைய சிந்தனைக்கு அப்பாற்பட்ட விசயமாகும்.'' (217 கு.த.அ.தோ). இங்கே எமது சமுதாயத்தில் பல நீதி நெறிகள் இருந்து தான் இருக்கின்றன. தந்தை, தாய் பிள்ளைகளுக்கு உடுபுடவை, விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் தருகின்ற போது நன்றி சொல்வதில்லை. இப்படியான பல நீதிமுறைகள் எமது சமூகத்தில் இருக்கின்றன. இவை பற்றி தனியான ஆய்வு வேண்டும். ஏனெனில் இப்படியான நீதி முறை என்பது ஆன்மீகத்தை வலியுறுத்தி இடம் பெற்றதும் உண்டு. அதேபோல் இனக் குழுக்களின் பழக்க வழக்கத்தைச் சேர்ந்த நீதிமுறைகள் அடங்கியிருப்பதுமாகும்.

ஜேர்மனியைச் சேர்ந்த பூர்சுவா அறிஞர் அராபியர், ஜேர்மானியர் ஆகியோர் சுறுசுறுப்பானவர்கள் எனவும் ஆசியர்கள், ஆபிரிக்கர்கள் ஆகியோர் சோம்பேறிகள் எனவும் கூறினார். ''ஓர் இனம் மற்ற இனத்தைவிட அறிவாற்றலில் உயர்ந்தது என்பதை, தனிவகைப்பட்ட உளவியல் இயந்திரச் சோதனைகள் வாயிலாக,

பரீட்சைகள் மூலம் நிருபிக்கப் பிற்போக்கு பூர்சுவா விஞ்ஞானிகள் முயன்று வருகின்றார்கள்'' (பக். 186 மி. நெஸ்தூர்ஹ் –மனித இனங்கள்) அப்படி இருக்கையில் சூழலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மூலவர்கள் அப்படி கூறினார்கள் என்பதற்காக அந்த பூர்சுவா அறிஞரின் கருத்துக்கு ஒத்ததாக கொள்ள முடியுமா? அதேபோல் மூலவர்கள் கூறியவைகள் அனைத்தும் நியாயம் கொள்ள முடியாது.

இயங்கியலை தவறாக புரிந்து கொண்டு மார்க்ஸ், ஏங்கெல்ஸ் போன்றோரின் கருத்துக்களை பிழையாக குட்டிப் பூர்சுவா வர்க்கப் அறிவுஜீவிகள் தமது வர்க்க நலனுக்காக பாவிக்க முனைகின்றனர். அதற்கு எதிராக கருத்து ரீதியாக எதிர்க்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## 2.6.5 தனியான அமைப்பு அவசியமா?

கம்யூனிசக் கட்சி என்பது ஐக்கியத்திற்காகப் போராட வேண்டும் எனவே தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் ஏன் வேலை செய்ய முடியாது. கம்யூனிசக் கட்சியின் கடமை என்ன? ஐக்கியத்திற்காகப் போராடுவது அல்லவா. மேற்படி பொருளாதார கட்டுமானத்தின் மீது கட்டப்பட்ட நிறுவனங்கள் மீது ஏற்பட்ட ஏமாற்றங்கள் வாழ்விற்கு நம்பிக்கை அற்றதாகவுள்ள நிறுவன அமைப்பு என்பனவே தேசிய இனமுரண்பாட்டிற்கு, நம்பிக்கையினத்துக்கு காரணமாகும். இதனைப் போக்கும் வகையிலேயே கட்சியானது இருக்கவேண்டும். இலங்கையைப் போன்ற புவியியல் அமைப்பைக் கொண்ட நாடுகளில் பல கட்சிகள் அவசியமற்றதாகும். (ஏன் பிராந்திய கம்யூனிஸ்ட் கட்சி பற்றியும் சிந்திக்கப்பட வேண்டிய காலமிது.) தனியே தனியினத்திற்கு என கட்சியானது அவசியமல்ல. ஒரு உண்மைக்கட்சி அனைத்து மக்களின் விடுதலையை நாடுவதுடன் ஒற்றுமையை வலியுறுத்தப் பாடுபடும். இதனை கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் பின்வருமாறு காணலாம்.

1. ''வெவ்வேறு நாடுகளிலும் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலனைகளைச் சுட்டிக் காட்டி முன்னிலைக்குக் கொண்டு வருகிறார்கள்

2. முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிரான தொழிலாளர் வர்க்கப் போராட்டம் கடந்து செல்ல வேண்டியிருக்கும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அவர்கள் எப்பொழுதும் எங்கும் இயங்கும் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதிப்படுத்துகிறார்கள்.'' ( ப. 65 க.க.அறிக்கை)

சோசலிசக் கட்சி அக்காலத்தில் பின்வருமாறு பிரகடனப்படுத்தினர். ''ஐரோப்பிய சமநிலை, தேசிய கௌரவம் என்ற சாக்கைச் சொல்லிக் கொண்டு அரசியல் பேராசை மறுபடியும் உலக சமாதானத்துக்கு ஆபத்தேற்பட்டி ருக்கின்றது எனவும், சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினராகிய நாங்கள். தேச எல்லைகள் நமக்குக் கிடையாது, நமக்கு பிரிக்க முடியாத ஒருமைப்பாட்டின் உறுதியினை தெரிவித்துக் கொண்டனர்.

ஒரு தேசத்தில் இருக்கின்ற தொழிலாளர் வர்க்கம் மற்றை நாட்டு தொழிலாளர் வர்க்கத்திற்கு தனது ஆதரவை கொடுப்பது சர்வதேசக் கடமையாகும். இன்றைய காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கம் பிரிக்கப்பட்டு உள்ளது. இவர்களிடையே வர்க்க உணர்வு திசை திருப்பப்பட்டுள்ள காரணத்தினால் பின்வரும் விடயங்கள் ஒரு கட்சியானது கவனிக்க வேண்டும். ''பாட்டாளி வர்க்கத்தின் உணர்வைக் கெடுக்கக் கூடாது அல்லது முதலாளித்துவ – ஜனநாயகச் சொற்றொடர்களை கொண்டு தொழிலாளி வர்க்கத்திற்கு ஆசை காட்டக் கூடாது. அல்லது இன்றைய தினத்தில் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற அரசியல் போராட்டத்தின் ஒற்றுமையை உடைக்கக் கூடாது என்பவற்றை மட்டுமே வேலைத் திட்டம் வலியுறுத்துகிறது. இந்த நிபந்தனை தான் பிரச்சினையின் மையமாகும் ஏனென்றால் நாம் இந்த நிபந்தனையோடு தான் சுயநிர்ணயத்தை அங்கீகரிக்கின்றோம்.'' (ப. 33 பா.சர்)

இனங்கள், ஆண், பெண், ஆகியோருக்கு இருப்பதைப் போலவே பாட்டாளி வர்க்கத்திற்கும் சுயநிர்ணய உரிமை இருப்பதாக கொள்கின்றார். இப்படி இருக்கையில் முதலாளித்துவ சிந்தனையாளர்கள் வேண்டுமென்றே பாட்டாளி வர்க்க சுயநிர்ணய உரிமை பற்றிக் பேசுவதில்லை. மாறாக தனிநபர், தேசியத்தைத் பற்றி கருத்தைத் தான் முன்வைக்கின்றனர். இங்கு பாட்டாளி வர்க்க சுயநிர்ணயம் பற்றிப் பேசப்படுகின்றது. ''ஒவ்வொரு தேசிய இனத்திலும் மக்களின் அல்லது நாடுகளின் சுயநிர்ணயத்தைக் காட்டிலும் பாட்டாளி வர்க்கத்தின் சுயநிர்ணயத்தை வளர்ப்பதே தனது பிரதானமான ஆக்க பூர்வமான கடமை என்று பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்ற முறையில் ச.ஐ.கட்சி கருதுகிறது'' (ப. 24 பா.சர்) தமிழ் மக்களின் உரிமையாக இருக்கட்டும் அல்லது சிங்கள மக்களின் உரிமையாக இருக்கட்டும் புறச்சூழலை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் எமது போராட்டம் என்பது வெற்றி அடைய முடியாது. புறச்சூழலின் அடிப்படையில் இருந்து எடுக்கப்படும் முடிவுகளும் செயற்பாடுகளும் இறுதி வெற்றியை நோக்கி நகர முடியும்.

லெனின் பின்வருமாறு கூறுகின்றார் தேசிய கலாச்சாரம் என்ற கோசத்தின் முக்கியத்துவம் அந்த கோசத்துக்கு அதன் வாயிலாக சர்வதேசியக் கலாச்சாரத்தை உருவாக்குவது என்ற அர்த்தத்தில், விளக்கம் தருவதாகக் குறித்த சிற்றறிவாளி வாக்களிப்பதனாலோ நல்லெண்ணம் கொண்டு இருப்பதனாலோ நிர்ணயிக்கப்படுவதில்லை. இந்த முறையில் அதைப் பார்ப்பது குழந்தைத் தனமானதே. அகநிலைவாதம் (ப 13 பாட்டாளி வர்க்க சர்). அகத்திற்கும் புறத்திற்கும் இடையேயான சிந்தனைப் போக்கில் மாறுபாடுகள் உண்டு. இவ்வளவு காலமும் அகநிலைக்கு முதன்மை கொடுத்து செயற்பாட்டு அணுகுமுறையைக் கொண்டிருந்தனர். புறத்தாக்கம் என்பது நிச்சயம் இருந்திருக்கும் ஆனால் அந்தப் புறத்தாக்கத்தினால் உருவாக்கப்பட்டவை போலியுணர்விற்கு உட்பட்டதே. இன்றைய நிலையில் எவ்வாறு பரந்து பட்ட மக்களை புறவயத்தை கணக்கெடுத்து வழிநடக்க முயற்சிப்பது இதுவே இன்றைய பிரச்சினை பரந்து பட்ட மக்களை புறத் தன்மையை கணிப்பெடுத்து நடக்கும் போது இங்கு கூறுவது பொருள் முதல்வாத அடிப்படையில் நடக்கின்ற போதே பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட முடியும். கருத்து முதல்வாதத்திற்கு அடிமைப்பட்டிருந்த நிலையில் இன்றுள்ள பிரச்சினை புறத்தை முக்கியமாகக்

கருத்தமைவாகக் கொண்ட பொருள்முதல்வாத அடிப்படையில் செயற்படுவது எவ்வாறு என்பதே.

தேசம் பிரிந்து செல்வதில் உள்ள கருத்து முரண்பாடு இருந்தாலும் சர்வதேச, பிராந்திய நிலையின் காரணமான ஒரு தேசம் தனது எழுச்சியை அடையுமாக இருந்தால் அப்படி பிரிந்து போவதை தடுக்க முடியாது. பிரிந்து இணைதலை மார்க்சியம் வரவேற்கின்றது. சுயநிர்ணம் என்பதே இனங்கள் விடுதலை பெற்று சுயமாக தன்விருப்பத்தில் இணைந்து கொள்வதாகும். புரிந்த நிலையில், தனித்தனியே இருக்கின்ற பல விறகுகளை சேர்த்து கட்டாக கட்டுவது போல தான் தேசங்களின் சுயநிர்ணமாகும். சுயநிர்ணயம் கிடைத்தாலும் அடுத்த கட்ட விடுதலைப் போராட்டம் பாட்டாளி வர்க்கப் புரட்சியாகும். அந்தப் புரட்சியை பலாத்காரத்தினால் தான் பெற முடியும். இந்த இடைப்பட்ட காலத்தில் சீர்திருத்தத்தை பெறமுடியும் என்றால் பெற்றுக் கொள்ளல் அனுமதிக்கக் கூடியதே.

முன்பிருந்த கட்சிகள் மீது நம்பிக்கை இல்லாதவிடத்தில் இலங்கை முழுவதற்குமான கட்சியை கட்ட முற்பட்டிருக்க வேண்டும். பிற்பாடு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தீர்வினை முன்வைத்து இருக்க வேண்டும். மாறாக தன்னியல்பிற்கு உட்பட்டு தமது இனத்திற்கு மாத்திரம் நலன் கொடுக்கக்கூடிய தீர்வினை முன்வைத்தனர். இப்படி கூறுகின்றபோது மார்க்சியம் வரட்டுத் தன்மையைக் கொண்டது, சுயநிர்ணயத்தை எதிர்க்கின்றது, இன்னும் பல எதிர்க் கோசங்களைக் பல திசைகளில் இருந்தும் வந்திருக்கின்றது.

இவர்கள் தேசியம் என்பது வர்க்கம் தழுவியது என்பதை மறைத்து தேசியத்தின் பின்னால் சென்றனர். அத்துடன் வர்க்க நலனைப் பாதுகாக்கும் பொருட்டு கருத்தை பரப்பிக் கொண்டனர். லெனின் கூறுகின்றார், ''தேசிய உணர்ச்சி ஒரு சுதந்திரமான காரணி என்பது போலப் பேசுவது பிரச்சினையின் சாரம்சத்தை மறைப்பதற்கு மட்டுமே உதவும்.'' (ப.14 பாட்டாளி சர்) உண்மையான மார்க்சியர்கள் ஆயின் இனம், மதம் போன்ற பாகுபாடு என்பது இருந்திருக்க முடியாது அவர்கள் வைக்கும் கோட்பாடு என்பது அனைத்து மக்களின் விமோசனமே.

தேசியப் போராட்டத்தை எமது இலக்கின் ஒரு படி, மேலும் வெற்றியை நோக்கிச் செல்ல முயற்சிக்க வேண்டும். பாட்டாளி வர்க்கம் இத்துடன் அமைதி கொள்ள முடியாது. கடந்த காலங்களில் மலையக மக்களை தமிழ் தேசிய மையவாதத்தில் இருந்து கொண்டே, அவர்களை தம்மை நோக்கி வரும்படியான பூர்சுவா வர்க்க நிலைப் பாட்டினைக் கொண்டனர். இதன் காரணமாக அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட தீர்வும் அரைகுறையாகவே இருந்தது. அதேபோலவே தமிழ் பேசும் முசுலிம் மக்களுக்கும் நடைபெற்றது. மலையக மக்களே முன்பு எவ்வாறாக அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டார்களோ அதே நிலை தான் இன்னும் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவர்கள் முன்வைத்த தீர்வுகள் என்பது தன்னியல்பிற்கு அப்பால் இடம்பெறவில்லை.

தமிழ்த் தேசிய இனம் சிங்களப் பாட்டாளி வர்க்கத்தின் உதவியில்லாமல் உரிமையைப் பெறமுடியாத நிலை தான் இருக்கின்றது. ஆளும் வர்க்கம் தமது

பதவியைப் பாதுகாக்க சந்தர்ப்பவாதத்தைக் கடைப்பிடிக்கின்றது. ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் காரணமாக மக்கள் தமது இருப்பை இழந்து நிர்க்கதியாக்கப்படுகின்றனர். இந்த நிலையை சிங்கள மக்களுக்கு உணர்த்துவது முக்கிய வரலாற்றுக் கடமையாகின்றது. இன்றைய நிலையான அனைத்து வகை இனவாதத்தை முடியடிப்பது இலகுவானதல்ல. அனைத்து சக்திகளும் இணைந்தே இனவாதத்திற்கு எதிராக வெற்றி பெறமுடியும். இன்று எமக்கு இரண்டு கடமையுள்ளது. தமிழ் தேசியத்தின் உரிமைக்காக போராடுகின்ற போது சிங்கள மக்களின் விடுதலைக்காக போராடுவதே ஆகும்.

இன்றைக்குத் தேவையானது ஐக்கிய இலங்கைக்கான ஒரு பொதுவுடமைக் கட்சியேயாகும். இதனை உருவாக்கும் பொருட்டு அனைத்து இனத்தைச் சேர்ந்த பொதுவுடமையாளர்கள் அனைவரும் கடந்த காலத்தை விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும். இடதுசாரிகள் அனைவரும் தமது உலகக் கண்ணோட்டம் பற்றி பரிசீலனை செய்தல் வேண்டும். தேசிய இனங்களுக்கு இடையிலான நம்பிக்கையை வளர்க்கப்பாடுபட வேண்டும் என்று கூறினால் மாத்திரம் போதாது. ஐக்கியத்தினை ஏற்படுத்தும் பொருட்டு இருக்கின்ற நான்கு தேசிய இனங்களின் சுயநிர்ணயம் உட்பட்ட பிரிந்து போகும் சுதந்திரத்தை அங்கீகரித்தல் வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் தமது தேசியக் கடமைகளை முடித்துக் கொண்டு பாட்டாளி வர்க்க புரட்சிக்கான கட்டத்தை நோக்கி நகர உழைக்க வேண்டும்.

கட்சியானது அனைத்து இனங்களையும் அணிதிரட்டும் பொருட்டு தேசிய இனங்களுக்கான முன்னணியை உருவாக்கிக் கொள்வதன் மூலம் அந்தந்த இனத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் முகமாக அணிதிரட்டுவதே செய்ய வேண்டிய பணியாகவுள்ளது. அனைவரினதும் சுதந்திரங்கள் அங்கீகரிக்க வேண்டும். பொதுவுடையாளர்கள் மையப்பட்ட கட்சியில் இருக்கின்ற போதே அனைத்து இனத்தையும் அணிதிரட்டுவதையும், லெனின் கூறுவது போல எந்த இனத்திற்கும் விசேடமான உரிமைகள் கொடுக்காமல் அனைத்து இனத்தின் ஐக்கியத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், ஏகாதிபத்திய சுரண்டலில் இருந்து பாதுகாக்கவும் முடியும். முழு இலங்கைக்குமான சுரண்டலைத் தடுப்பதும், ஆளும் தரகு முதலாளித்தவ வர்க்கம் இனங்களை ஒடுக்க அன்னிய சக்திகளிடம் உதவிவாங்குவதையும், முழு இனமக்கள் மீது சுமத்தப்படும் கடனை அகற்றவும், அன்னியக் கடன் இல்லாத சுதந்திர பிரசைகளாக இலங்கைக் குடிகள் அனைவரும் வாழ ஐக்கியப்பட்ட போராட்டம் அவசியமாகின்றது.

ஐக்கியம் தேவை என்றால் போராட்டங்கள் ஐக்கியப்பட்டு நடைபெறவேண்டும். ஐக்கியம் என்பது எல்லா மக்களுடைய உரிமைகளையும் அங்கீகரிப்பதில் இருந்தே தொடங்கப்படவேண்டும். கட்சி என்பது ஒரு இனத்திற்கு மாத்திரம் உரித்தானதாக இருப்பதில் மாத்திரம் அல்ல. பாட்டாளி வர்க்கப் புரட்சியை இறுதிக் குறிக்கோளாக கொண்டிருப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. பாட்டாளி வர்க்கத்திற்கு இனபேதம் இல்லை. அதேபோல பாட்டாளி வர்க்க ஊழியர்களுக்கும், கட்சிக்கும் இனபேதம் இருக்கக் கூடாது.

ஐக்கியம் இலங்கை என கருதுகின்ற போது தமிழீழத்திற்கு எதிரானவர்கள் என்ற கருத்து இருக்கின்றது. போராட்ட சூழலில் தமிழ் தேசியம் பிரிந்து போகும் என்றால் அதனை அங்கீகரித்தல் வேண்டும். ஆனால் இங்கு கருதி நிற்பது முயற்சி செய்யப்படாமல் இருக்கின்ற செயற்பாட்டிற்கு எவ்வாறு செயல் வடிவம் கொடுப்பது என்பது தான். இன்று பரந்துபட்ட புரட்சியை கொண்டு செல்லக் கூடிய சக்திகள் பலவீனமாக இருப்பதும், -இருக்கின்ற சக்திகளும் நாடாளுமன்றத்தில் சரணாகதி அடைந்த நிலையும், எதிரியை முறையாக கணிப்பிடாமல் தேர்தல் கூட்டினை மாத்திரம் கவனத்தில் கொண்டு செயற்படுவதும் மாற்றம் பெறவேண்டும்.

இருக்கின்ற கட்சிகளை எடுத்துக் கொண்டால் பல்வேறு வகையான கட்சிகள் இருக்கின்றன.

1. இலங்கை கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி.
2. நவசமாஜக் கட்சி (ரொட்ஸ்கி)
3. ஜே.வி.பி
4. இடது கம்யூனிஸ் கட்சி ( சண்)
5. புதிய சனநாயகக் கட்சி (சண்னில் இருந்து பிரிந்தவர்கள்)

இவ்வாறான கட்சிகளை எடுத்துக் கொண்டால் இவற்றில் பல முதல் மூன்றும் தேர்தலில் நம்பிக்கை கொண்டதாகவும், மற்றைய பகுதியில் ஒன்று தேர்தல் பாதையை புறக்கணிப்பதாகவும் இருக்கின்றன. இதில் சண்னுடன் இருந்து பிரிந்து கொண்ட கட்சியினர் தேவையான போது சனநாயக அவசியம் கருதி தேர்தலில் ஈடுபடுகின்றது.

இவற்றில் எடுத்துக் கொண்டால் எப்பொழுதும் புதிய நிலைப்பாடு எடுக்க முடியாது திணறுகின்ற போக்கைத் தான் காண முடிகின்றது. புரட்சிகர விடுதலைப் பாதையை தேர்ந்தெடுக்க வேண்டும் என மார்க்சிய லெனினிய வாதிகளால் விமர்சனம் தொடுக்கின்ற போதும் விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளாது பழைய பாதையை தொடர்வதும், நாடாளுமன்ற, பொருளாதார நோக்கத்துடனும் திருப்தி கொள்வது மூலமாக தமது இலக்கை குறுக்கிக் கொள்கின்றனர்.

இவ்வகையானபோக்கு மாற்றப்பட வேண்டும். முதலில் மக்களை போராட்டத்திற்கு அணிதிரட்டுவதும், அரசியல் போராட்டம், பொருளாதாரப் போராட்டம் ஆகியவற்றை முதன்மை கொண்டும், தேர்தலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட்டு தம்மை முதலில் சுயவிமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டும். தேர்தல் பாதையில் இருப்பவர்களின் உலகக் கண்ணோட்டம் மாறுபட்டதாகத் தான் இருக்கும். தேர்தலில் பங்கு பற்றுபவர்கள் காலங்காலமாக தொடர்ச்சியாக தேர்தலில் ஈடுபடுவதா இல்லை? தேர்தலை எவ்வகையாக பாவித்தல் வேண்டும் என்பது பற்றியும், தேர்தலை இலக்காகக் கொண்ட முதலாளித்துவ கட்சிகளிலும் தாம் எவ்வகையாக மாறுபட்டவர்கள் என்பதை வரையறுத்துக் கொள்ளல் வேண்டும்.

தேர்தலை எவ்வகையாக பாவிப்பது, நாடாளுமன்றத்தின் மூலமாக சமாதான முறைகளில் சோசலிசத்தை அடையமுடியும் என்ற கருத்து நிலவியிருக்கின்றன. புரட்சியில் பலாத்காரத்தின் பாத்திரத்தினையும், அதிகார வர்க்கத்தின்

வேர்கள், ஏகாதிபத்தியங்களின் சூழ்ச்சி என்பவற்றை வெகுவாக கவனம் கொள்ளாத நிலைதான் இருக்கின்றது. இடதுசாரி வரலாற்றில் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் ஈடுபட்டுக் கொண்டு வந்திருக்கின்றனர். ஆனால் இவர்களால் சில சீர்திருத்தம் செய்ய முடிந்தது. ஆனால் இவர்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எவ்வகையான புரட்சிகரப் பாத்திரம் வகிக்க முடிந்தது பற்றி மீள்ளாய்வு செய்தல் அவசியமாகின்றது.

இதுவரைக்கும் பல விதமான கருத்துப் போக்கை காணமுடிந்தது. தமிழ் பொதுவுடமைக் கட்சி அமைப்பது பற்றியும், இலங்கையில் இருக்கும் பாரம்பரிய இடதுகள் பற்றியும் பார்த்தோம். இவர்களின் வாதங்களில் இருந்து புதிய நிலைக்க வரவேண்டியது முக்கிய கடமையாகின்றது. புதிய நிலை என்பது ஏகாதிபத்தித்தின் சுரண்டலின் வேகம், சுரண்டலினால் வாடும் மக்கள், சனநாயக சக்திகளை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டு சுரண்டும் வர்க்கத்திற்கு உதவி புரியும் தந்திரோபாயம் அறியப்பட வேண்டும் இதில் சுயதேடல் அவசியமாகின்றது. அதே போல தேசிய அகநிலைப் பார்வை சுயவிமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும். இவர்களின் உலகக் கண்ணோட்டத்தைக் மறுபரிசிலனை செய்து கொள்வது அடிப்படை நிபந்தனையாகும்.

ஒவ்வொரு இடது அமைப்புக்களும் தாம் தேர்தலில் நின்று ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கு ஆதரவு கொடுப்பதையும், தமிழ் பொதுவுடமைவாதிகள் தனிக்கட்சி அமைத்துக் கொண்டு சர்வதேசிய கடமையை நிறைவேற்றுவதாக கருதிக் கொள்வதையும், இரண்டு பகுதியினரும் மறுபரிசிலணை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு கருதுகின்ற போது இருபகுதியினரும் முதலாளித்துவ வர்க்க சித்தாந்தத்தினை பலியாகிக் கொண்டவர்கள் என்ற கருத்து நிலவக் கூடும். ஆனால் சர்வதேச எதிரி உள்நாட்டு எதிரி ஆகியோரை கணிப்பீட்டு பாட்டாளி வர்க்கத்திற்கு விசுவாசமாக உழைக்கக் கூடியவர்களையும் ஒன்றினைப்பதும், அவர்களை சுயவிமர்சனம் செய்ய சந்தர்ப்பம் கொடுப்பதா? அல்லது பழைய இடதுகளை அப்படியே ஒதுக்குவதா என்பதில் கூட கருத்துப் பேதம் இருக்கின்றது. இவ்வாறு ஒதுக்கும் போக்கு குறுங்குழுவாதமாகும், தூய்மைவாதம் எவ்வளவுதூரம் பாட்டாளி வர்க்கத்திற்கு உதவும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். இணைத்துக் கொள்கின்ற போது பழைய சிந்தனை கொண்டவர்கள் தமது பழைய இலக்கிற்கு புதியவர்களை இணைத்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் இருக்கின்றது. ஒரு அமைப்பு உருவாக்கம் என்பது இடஞ்சல் இல்லாமல் இருப்பதில்லை. இவ்வாறான முரண்பட்ட கருத்துக்களில் இருந்தும் தேசிய இனத்தின் முண்னனியை கட்டியமைப்பதும், ஐக்கிய பொதுவுடமை அமைப்பைக் கட்டியமைப்பதும் இலங்கையில் உள்ள பொதுவுடமைவாதிகளின் தோள்களில் உள்ள சுமையாகும்.

## 2.7. விசுவாசமாக நடந்து கொள்ளும் வர்க்கம் எது?

இந்தப் பகுதியில் பல நடைமுறைப் பிரச்சினைகளை வரலாற்று அனுபவங்களும் ஆராயப்படவுள்ளது. இதில் வரலாற்றில் ஏற்பட்ட தவறுகளுக்கான காரணத்தை இங்கு பார்ப்பதன் மூலம் கடந்த கால வரலாற்றில்

ஏன் இத்தகைய தவறுகள் ஏற்பட்டனர் என அறிந்து கொள் முடியும் எந்தத் தவறுகளுக்கும் காரணம் இந்தச் சமூகத்தின் விழைவு பொருட்களின் பிழைவுகளே. இந்தப் பகுதியில் சமூக சனநாயகவாதிகள் பற்றியும் பார்ப்போம். இந்தப் வகுப்பினர் முதலாளித்துவ வர்க்கத்திற்கு விசுவாசமாக நடந்து கொள்கின்றனர் எனினும் இவர்கள் சோசலிசக் கோட்பாட்டை முன்னிறுத்துகின்றனர். இந்தப் பகுதியினர் ஆபத்தில்லாதவர்களாக தென்பட்டாலும் இவர்களின் கொள்கைப் போக்கு என்பது சந்தர்ப்பமாகவே அமைந்து விடுகின்றது. ஒரு செயல் திட்டம் வகுக்கும் போது பற்பல திசைவழிப் போக்குகள் இடம் பெற சந்தர்ப்பம் உண்டு. இந்த திசை வழிகள் எவ்வகையான பாதையை கொண்டுள்ளது என்பது பற்றிய அறிவு அவசியமானதாகும். குறிப்பாக இடதுசாரிகள் செயற்திட்டம் வகுக்கும் போது கறாராக இருக்கின்றனர். இவர்கள் ஏன் இவ்வாறு இருக்கின்றனர். இவர்கள் எதனைப் பற்றி கவனமாக இருக்கின்றனர். திசைவிலகல்கள் எவ்வகையான தீங்கை விழைவிக்கும் என்பது பற்றிய புரிதலுக்கு பல்வேறு திசைவழியை அறிந்திருத்தல் அவசியமாகும்.

## 2.7.1 கருத்தமைவிற்குள்ளேயே சமாதியாதல்

பல இடதுசாரிகள் தமது இலட்சியத்திற்காக உழைத்துள்ளனர். அதேவேளை அவர்களுடைய பலமானது குறைவடைந்து செல்கையில் எந்தக் கருத்துக்காக குரல் கொடுத்தார்களோ அவற்றிற்கு எதிரான முகாமில் சரணடையும் போக்கை அனைத்து இடதுசாரி வரலாறுகளிலும் காணமுடிகின்றது. இந்தப் போக்கை தனியே விரிவாக அனைத்து மட்டங்களிலும் பார்க்க வேண்டியது அவசியமானதாகும். ஆனால் இங்கு குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுப் படுத்தப்படுகின்றது. இதற்கு ஆதாரமாக கொல்வின் ஆர்.டி. சில்வா தனிச் சிங்கள சட்டதை எதிர்த்து ஒரு மொழி என்றால் இருநாடு, இரண்டு மொழி என்றால் ஒரு நாடு என வாதிட்டார். இவரே 1970 ல் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக இருந்த போது சிறுபான்மை இனத்திற்கு எதிரான அம்சங்களைக் கொண்ட அரசியல் யாப்பை வரைந்தார்.

சாதியத்திற்கு எதிராக இயங்கிய போராட்டக் குழுக்கள் தங்கள் இயலாமையை மூடிமறைப்பதற்கு புகழிடமாக தமது சாதிகளிடம் சரணடைந்தனர். இவ்வியக்கங்களின் ஆரம்பம் என்பது நட்பை மையமாகக் கொண்டு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். இரகசியங்கள் பரிமாறப்பட்டன. பின்னர் பதவிப் போட்டி, அராஜகத்தின் உச்சநிலை, குறுகிய அரசியல் லாபம், நாடாளுமன்ற அரசியல் என்பன. ஏற்கனவே இருந்த சகதியில் இவர்கள் எல்லோரையும் மூழ்கடித்தது.

இந்நிலையின் வெளிப்படையாக வெட்கப்படவேண்டிய நிலையானது இந்திய இராணுவமானது இலங்கையில் வெறியாட்டத்தை நடத்திக் கொண்டிருந்த வேளை ஏற்பட்டது. இயக்கங்களின் துரோக தனத்தை காட்டும் முகமாக அந்த இயங்கங்களை சாதி பெயர் சொல்லி அழைக்கப்பட்டது. இதனை எதிர்த்து எந்த இயக்கங்களும் நடவடிக்கை எடுக்காத நிலை என்பது அனைவரும் வெட்கப்பட வேண்டியதாகும்.

இதனால் தாழ்ந்தது அந்த துரோக இயக்கங்கள் அல்ல. மாறாக சாதியத்தின் கொடுமை என்பது வேறுவடிவத்தில் புத்துயிர் கொடுக்கப்பட்டதையே இது காட்டுகின்றது.

இந்தப் பிரச்சினையை பல சர்வதேச அனுபவங்களைக் கொண்டு பார்க்க வேண்டியுள்ளது.

1) அ. புரட்சியின் பின்னர் வலது சாரிமுகாமிற்கு திருப்புதல்

ஆ. ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு என்பது மங்கிப் போகுதல்.

இ. சோசலிச பொருளாதார அமைப்பு முறையில் இருந்து பின்வாங்குதல். (கடந்த கால சோசலிச முகாம்கள் முதலாளித்துவத்திற்கு திரும்பிய நிகழ்வுகள்)

2) இடது முகாமில் இருந்து இனவாத அரசியலுக்குத் தாவுதல். இந்த நிகழ்வுகளை தமிழ், சிங்கள பகுதியினரிடையேயும் காணப்பட்டது. குறுந் தேசிய வாதத்தில் மூழ்கியமை.

3. தேசிய – சாதிய எதிர்ப்புப் போராட்டம் என்பன சாதியத்திடம் மண்டியிடப்பட்டது. இப்படியே நிகழ்வுகளை அடிக்கிக் கொண்டே போகலாம் இவைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

வர்க்கங்களின் தடுமாற்றம் என்பது அதன் பொருளாதார நலன் சார்ந்ததாகும். போராடுகின்ற போதும், போராட்டம் முடிவுற்ற பிற்பாடும் பாதிக்கப்பட்ட வர்க்கங்கள் தொடர்ந்தும், தமது வர்க்க நலனுக்காக போராடுகின்றன. இதன் காரணமாக தமது வர்க்கப் பாதுகாப்புக் கருதி நிலைப்பாடும் எடுக்கின்றனர். இதன் காரணமாக முன்பு நட்பு சக்தியாக இருந்தவர்கள் பின்னர் எதிரி முகாமில் சேர்ந்து கைகுலுக்கிக் கொள்வதும், எதிர்முகாமில் இருந்தவர்கள் எதிரிகளினால் தூக்கி எறியப்படும் நிலையில் ஒடுக்கப்பட்டவர்களுடன் ஒன்று சேர்வது நடை பெறுகின்றது. இந்த நிலையே தேசிய சக்தி எனப்படுகின்ற வர்க்கப் பிரிவினர் தமது நிலையை உறுதி செய்யப்பட்ட பிற்பாடு பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக திரும்புகின்றனர் தேசிய முதலாளித்துவம் தரகாக மாற்றம் கொள்ளல் இடம் பெறுகின்றது. அத்துடன் இவர்களின் மூலதனத்தில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்து வர்க்க அணியை மாற்றிக் கொள்கின்றனர். சந்தையை உறுதி செய்யாத வரை மூலதனத்தின் தொகையில் பெருக்கம் ஏற்படாது இதன் பிற்பாடே வர்க்க நிலையும் மாறுதல் அடைகின்றது. ஆனால் தொடர்ந்தும் போராட வக்கில்லாத தனத்தால் தேசியம் சரணடையும். தேசியம் உறுதியுடன் போராடத் துணை நிற்பது பாட்டாளிகளின் பலமேயாகும். பாட்டாளிகளின் பலமும் தேசிய முதலாளித்துவத்தின் போராட்ட உறுதியை நிலை நிறுத்த முக்கிய காரணியாகின்றது. ஜேர்மனியில் சமூக சனநாயக் கட்சியினரும், இங்கிலாந்தில் பேபியன் கழகத்தினரும் முதலாம் உலகயுத்தத்தின் போது சொந்தத் தாய் நாட்டைக் காக்கவென ஆக்கிரமிப்பு வெறியர்களுக்கு ஆதரவு அளித்தனர் என்பதையும் மறந்து விடமுடியாது. தத்துவ நிலையில் வழுவிய நிலையில் இருந்தாலும் கியூபா, வட கொரியா ஆகிய தேசங்களையே தேசிய அரசுகளாக கருதலாம். தூய தேசிய வாதிகளாக ஊசலாட்டம் இல்லாது செயற்படுவதில் கம்யூனிஸ்டுக்களைத் தவிர எவரும் தொடர்ந்தும் நிலைகொள்ள முடியாது. இன்றைய சர்வதேச நிலையில் தூய தேசியத்தை பார்க்க முடியாதுள்ளது. ஏனெனில் ஏகாதிபத்தியங்கள் இவர்களை நிலை கொள்ள விடுவதில்லை.

## 2.7.2 மத்தியதர வர்க்கம்

பூர்சுவா வர்க்க பகுதியினர் தாம் ஒடுக்கப்படுகின்றதாக கூறிதமக்கு அனுதாபம் சேர்க்கும் வழியில் செயற்படுகின்றனர். இவர்கள் தேசியம் என்ற போக்கின் கீழும் மற்றைய சமூக அமைப்பில் தோன்றியுள்ள காணைப்படுபவைகளை தமக்கு சாதகமாக பயன்படுத்துகின்றனர். வர்க்க முரண்பாடுகளையும் பொருளாதார அமைப்பே பல முரண்பாடுகளுக்கும். உரிமை மறுப்புக்கும் காரணமாகின்றது என்பதை மறுப்பவர்களாகவும், பொருளாதார அமைப்பில் தோன்றும் பிரச்சினை என்பதை மறுத்து, தனித்துவப்படுத்தும் போக்கும் காணப்படுகின்றது. இது பெரும் அபாயப் போக்காகும். இது சாத்தியவாதத்தையும், தன்னியல்பையுமே உருவாக்கும். இதன் அர்த்தம் பாட்டாளி வர்க்கம் தேசிய முதலாளித்துவப் போராட்டத்தில் இணைந்து கொள்ளக் கூடாது என்பது அர்த்தமல்ல.

தாம் எந்தப் பகுதியையும் சாராதவர்கள் எனக் கூறிக் கொண்டு உலவிடுவர். ஆனால் அது உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களும் அல்ல எனக் கூறுவது வெறும் பித்தலாட்டமே. இது நடுநிலை என ஒன்று இருப்பது போலவேயாகும். மத்தியதர வர்க்கம் மூலதனத்தை அதிகமாக கொண்டிருக்காது, அதேவேளை தான் இருக்கும் இடத்திலிருந்து அல்லது நிலையிலிருந்து முன்னோக்கிச் செல்ல எத்தனிக்கும், இரண்டு நிலைகளுக்கும் இடையில் இருந்து ஊசலாடிக் கொண்டிருக்கும், அத்துடன் தான் இருக்கும் நிலையில் இருந்து கீழ் இறங்கவும் மாட்டாது. இதன் காரணமாக தன்னுடைய இருப்பிற்கு அடி அத்திவாரமான சந்தைக்கான சந்தர்ப்பத்தை இழந்து விடாமல் இருப்பதற்கு பாடுபடும். அம்முயற்சியில் தன்னுடன் கூட்டுச் சேரக்கூடிய நேச சக்திகளுடன் ஒன்று சேரும்.

அந்த வட்டத்திற்கு அப்பால் நகரவே முடியாது. மாவோ மத்தியதர வர்க்கம் பற்றி சீன நிலையை பின்வருமாறு உரைக்கின்றார். ''நமது நாட்டில் தொழிலாளர் வர்க்கத்துக்கும் தேசிய பூர்சுவா வர்க்கத்திற்கும் இடையில் நிலவும் முரண்பாடு மக்கள் மத்தியிலுள்ள முரண்பாட்டு வகையைச் சேர்ந்தது. இவை இரண்டுக்கும் இடையில் நடைபெறும் வர்க்கப் போராட்டம் பொதுவாக மக்கள் மத்தியில் நடைபெறும் வர்க்கப் போராட்டமே. இதற்குக் காரணம், சீன தேசிய பூர்சுவா வர்க்கம் ஒரு இரட்டைக் குணாம்சம் உடையது. பூர்சுவா சனநாயகப் புரட்சிக் காலகட்டத்தில், அது ஒரு புறம் புரட்சிகர இயல்பு உடையதாகவும் மறுபுறம் சமரச இயல்புடையதாகவும் இருந்தது. சோசலிச புரட்சிக் காலகட்டத்தில். அதற்கு ஒருபுறம். லாபத்துக்காகத் தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டும் இயல்பும். மறுபுறம். அரசியல் சட்டத்தை ஆதரித்து சோசலிச மாற்றத்தை ஏற்கும் இயல்பும் இருக்கின்றன. தேசிய பூர்சுவா வர்க்கமும். ஏகாதிபத்தியம். நிலப்பிரபு வர்க்கம். அதிகார முதலாளித்து வர்க்கம் ஆகியவையும் ஒரே தன்மையானவை அல்ல. தொழிலாளர் வர்க்கத்துக்கும் தேசிய பூர்சுவா வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு சுரண்டுவதற்கும் சுரண்டப்படுவதற்கும் இடையிலுள்ள ஒரு முரண்பாடு. அது இயல்பில் பகை உடையது. ஆனால் சீனாவின் ஸ்தூலமான நிலைமைகளில். இந்தப் பகையுடைய முரண்பாடுகள் சரியான முறையில் கையாளப்பட்டால்.

பகையற்ற முரண்பாடாக மாற்றப்பட்டு, சமாதான முறைகளில் தீர்க்கப்பட முடியும். இருந்தும், இதைச் சரியான முறையில் கையாளாமல், தேசிய பூர்சுவா வர்க்கத்துடன் ஐக்கியப்பட்டு, அதை விமர்சனம் செய்து, அதற்குப் போதனையளிக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்காவிட்டால், அல்லது தேசிய பூர்சுவா வர்க்கம் தமது இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அம்முரண்பாடு எதிரிக்கும் நமக்கும் இடையிலுள்ள முரண்பாடாக மாறிவிடும்.'' (மாவோ ப82 – 4 மாவோ மேற்கோள்கள்) இன்றைய நிலையில் தவிக்க முடியாத இடத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு தேசிய முதலாளித்துவத்தின் இடத்தை எடுத்து விட்டனர்.

இவர்கள் தேசியமா? தரகு தன்மையானதா என்பதில் பல விவாதங்கள் இடம் பெற்றன. ஆனால் அந்த விவாதம் தொடர்கின்றது. புலிகளைப் பற்றிய கணிப்பீட்டின் போது தனிமனிதர்களது விருப்பு வெறுப்பிற்கு இடம் கொடுக்கக் கூடாது. தனிமனித விருப்பு வெறுப்புக்கள், கடந்த கால வரலாறுகள் இவற்றை கொண்டும் முழுமையான முடிவிற்கும் வரமுடியாது. ஆனால் சிறிலங்கா அரசுடன், இந்திய தலையீட்டை முதலில் வரவேற்றுக் கொண்டாலும் பின்னர் தேசியத்தின் தேவையைப் பூர்த்தி செய்தனர். புலிகள் தமது நலனுக்காகவே போராடியதாக விமர்சனங்கள், கருத்துக்கள் இருக்கிறன. எனினும் அவர்களின் நலன் மக்களின் நலனும் ஒன்றேயாகும். இது எந்த அர்த்தத்தில் என்றால் தேசிய முதலாளித்துவத்தின் நலன் பாட்டாளி வர்க்கத்தின் நலனுடன் ஒன்று சேர்ந்துள்ளது. இதுவே புறநிலையான பார்வையாகும்.

அகில இலங்கை என்ற ரீதியில் எடுத்துக் கொண்டால் தேசிய முதலாளித்துவம் என்பது ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு ஆளாகியுள்ளது. இதன் காரணமாக அது எதிர்த்துப் போராட முற்படுகின்றது. அந்தப் போராட்டமானது இனத்துவம் என்ற கோசத்தின் கீழ் மறைக்கப் பட்டதே அதன் அவலநிலையாகும். ஏனெனில் இந்த இரண்டு இன தேசிய முதலாளித்துவத்தின் சந்தைக்கு முட்டுக் கட்டையாக இருப்பது ஏகாதிபத்தியத்தின் நலன் சார்ந்த அரசியல் பொருளாதார அமைப்பு என்பதை ஏற்க மறுத்து இனவாத சகதிக்குள் மூழ்கியுள்ளனர். அதேவேளை சிங்கள தரகு முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடன் இணைந்து கொண்டு சிங்கள மக்களை ஒடுக்குவதுடன் சிங்கள தேசிய முதலாளித்துவத்தின் தலைமையை வளரவிடாமல் இடையறாது நெருக்கடி கொடுத்து வருகின்றது.

தேசிய முதலாளித்துவத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களை வகைப்படுத்துதல் பிரச்சினைக்கு உரியதாகின்றது. இன்றைய காலத்தில் சர்வதேச நிலையில் கூட தேசிய சக்திகளை வகைப்படுத்துவதில் சிக்கலாக அமைந்து விடுகின்றது. தேசியம் மிகவும் சிக்கலான பண்புணர்வாகும். ஏனெனில் ஒரு தேசிய முதலாளித்துவ வர்க்கத்திற்கு உதவுகின்ற ஒரு தலைமையை நாம் காண்பது சிரமமாக இருப்பதேயாகும். இது காலத்தில் (உடனடியாக) மாற்றமடையவும் முடியும். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத்தை தமது பாதையாகக் கொண்ட இடதுசாரி கட்சிகளை தேசிய முதலாளித்துவ பண்பு வட்டத்திற்குள் அடக்க முடியும். சிங்கள தேசிய முதலாளித்துவ கருத்தைப் பிரதிபலிக்கக் கூடியவர்கள் இடதுசாரிகளாகத் தான்

இருக்க முடியும். தேசிய முதலாளித்துவ சிந்தனையை பிரதிநிதித்துவம் செய்வதற்கு கோரிக்கை விடுபவர்கள் மூலதனத்தைக் கொண்டவர்களாக இருக்க வேண்டியது இல்லை.

## 2.7.3 தேசிய முதலாளித்துவம் விசுவாசமாக இருக்குமா?

வரலாற்றில் இவ்வகையான வர்க்கங்களின் தவறுகள் பல்வேறு சம்பவங்களில் நடைபெற்றுத் தான் இருக்கின்றன. ஒவ்வொரு வர்க்கங்களின் நிலை காரணமாக ஒவ்வொரு கட்சிகளும் அரசியல் நிலைப்பாடு வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு முடிவுகள் எடுக்கின்றன. எடுக்கின்ற முடிவுகள் ஒவ்வொரு வர்க்கத்திற்கு சேவகம் செய்கின்ற தன் மூலம் தமது வர்க்க நலனைப் பாதுகாத்துக் கொள்கின்றன. ஒரு வர்க்கம் தனது நிலைப்பாட்டை கொண்ட முடிவுகளை, அனைத்து மக்களின் நலனின் இருந்து எடுக்கப்பட்ட முடிவுகள், கோரிக்கைகள் என பறைசாற்றுகின்றன. இவற்றை வரலாற்று நிகழ்வுகளின் மூலம் பார்ப்போம். இதிலிருந்து எவ்வாறு தமது வர்க்க நலனை மூடிமறைத்துக் கொண்டு எவ்வாறு பாட்டாளிகளின் நலன் என அனைத்துக் கோரிக்கைகளையும் பூசிமெழுகும் நிலையை அவதானிக்கலாம்.

இடதுசாரிகள், வலதுசாரிகள் எனவும் ஊசலாட்டம் கொண்ட கட்சிகள் எனவும் மத்திய தர வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் எனவும் பிரித்துக் கொள்ளலாம். முதலாளித்துவ சக்திகள் தமது நலன் உறுதி செய்யப்படும் வரையில் தமது நட்பு சக்திகளுடன் கூட்டுச் சேர்கின்றனர். பின்னர் தமது நலனுக்கு ஆபத்து ஏற்படுகின்ற போது எதிராக வருகின்ற சக்திகளை அழிக்கின்றன. இதனை மார்க்சின் அனுபவத்திலிருந்து சிலவற்றைப் பார்ப்போம். பல எதிரிகளை தன்னகத்தே கொண்டிருந்த குடியரசானது பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது அப்போதைய குடியரசுக்கு எதிராக செயற்பட்டவர்களை மக்கள் பின்வருமாறு வர்ணிக்கின்றார். ''பாரிஸ் தொழிலாளர்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்காமல் யுத்தத்தின் மூலமாக அவர்களுடைய அணிகளைப் பறிக்காமல் பாரிஸைப் பாதுகாக்க முடியாது. ஆனால் பாரிஸ் ஆயுதம் ஏந்திவிட்டதால் அது புரட்சியே ஆயுதம் ஏந்தியதாகும் பிரஷ்யா ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் பாரிஸின் வெற்றி பிரஞ்சுத் தொழிலாளர்களின் வெற்றியாக இருக்கும். தேசியக் கடமைக்கும் வர்க்க நலன்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் தேசியப் பாதுகாப்பு அரசாங்கம் தேசிய துரோக அரசாங்கமாக தன்னை மாற்றிக் கொள்வதற்கு ஒரு வினாடி கூடத்தயங்கவில்லை.'' ( பி. உ.நாட்டுப் போர் ப.51)

பிரஞ்சு பூர்சுவா வர்க்கமானது தொழிலாளர் வர்க்கத்தின் மீது இருந்த வெறுப்பின் காரணமாக அவர்களை முறியடிக்கும் நோக்குடன் பிரஷ்ய அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து சதி செய்தது. இதனையே மார்க்ஸ் நாட்டுப்பற்று என்பது பின்தள்ளப்பட்ட வர்க்க நலனே முதன்மையாகக் கொண்டு செயற்பட்டவர் களையே மேலே அம்பலப்படுத்தியுள்ளார். ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஜெர்மன் நாசிசத்தை வளர்த்து சோவியத் ஒன்றியத்திற்கு எதிராக திருப்பும் நோக்கில்

ஆயுத உதவிகளை ரகசியமாக கொடுத்து வளர்த்து இறுதியில் வளர்த்த மேற்கு நாடுகளுக்கே எதிரியாகி மேற்கை ஆக்கிரமித்த போது தேச பக்த சக்திகள் எதிர்த்துப் போராட்டம் நடாத்தினர். இதில் கம்யூனிஸ்டுக்கள் முக்கிய பங்கை வகித்தனர்.

இரண்டாம் உலக யுத்தகாலத்தின் போது பிரஞ்சுக் கம்யூனிசக்கட்சி ஒரு பலமிக்க சக்தியாக இருந்தது. அதேவேளை பிரித்தானியப் பிரதமராக இருந்து சேச்சில் நாசிகளை எதிர்த்துப் போராடும் பொருட்டு அனைத்துப் பிரெஞ்சுப் பிரசைகளுக்கும் ஆயுதம் வளங்குமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் இதனை அப்போதைய பிரெஞ்சுப் பிரதமராக இருந்த டி கோல் அடியோடு மறுத்து விட்டார். அப்படி ஆயுதம் வளங்கும் போது கம்யூனிஸ்டுக்களுக்கும் ஆயுதம் சென்று விடும். அப்படி அவர்களுக்கு சென்ற ஆயுதங்கள் திரும்ப சுதந்திரத்தின் பின் ஆட்சியாளரிடம் சென்று விடாது ஆயுதங்களைக் கொண்டு அரசுக்கு எதிராகவும், சிலவேளை நாசிகளின் முடிவிற்குப் பிற்பாடு ஆட்சியே கம்யூனிஸ்டுக்களிடம் போய்விடும் என்ற காரணத்தால் ஆயுதங்கள் வளங்கப்படவில்லை. இவற்றில் இருந்து இவர்களுடைய தேசபக்தி எவ்வளவு ஆழமானது என்பதை கவனிக்க முடிகிறது. இவர்களின் வர்க்க உணர்வு என்பதே மேலோங்கி நிற்கிறது.

இலங்கையில் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்த தமிழரசுக் கட்சியானது பல சந்தர்ப்பங்களில் தமது பல்வேறு கால கட்டங்களில் தமிழ் தேசிய இனத்திற்கு விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை. சந்தர்ப்பவாத நோக்கிலேயே தேசியத்தை பேசினர். ஆரம்பத்தில் முதலாளித்துவம் முழுமையாக வளராத கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேசியக் கோரிக்கை ஆயுத அடக்குமுறை கோரத் தாண்டவமாட தொடங்குவதற்கு முன்னர் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதை சில வரலாற்று தடயங்களில் இருந்து பார்ப்போம். எஸ்.எல்.எவ்.பியை யூ.என்.பியுடன் ஒப்பிட்டால் யூ.என்பீ பிற்போக்குக் கட்சியாகும். அதேவேளை எஸ்.எல்.எவ்.பி என்பது தேசிய முதலாளித்துவத்தை சேர்ந்த சக்தியாக 1976க்கு முற்பட்ட காலத்தில் செயற்பட்டது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால் இந்நேரத்தில் தமிழரசுக்கட்சியானது யூ.என்.பியுடனேயே தனது கூட்டை வைத்திருந்தது. இதற்கு உதாரணமாக திருச்செல்வம் யூ.என்.பியின் அமைச்சரவையில் பணியாற்றினார். அதேவேளை 1964 ஆண்டு சிறிமா – சாஸ்திரியினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் மலையக மக்களை இந்தியாவிற்கு நாடு கடத்த இரண்டு அரசாங்கங்களும் ஒப்புக்கொண்டன. அதேவேளை ஒப்பந்தத்தை எதிர்த்து மாணிக்கம் என்பவரே செனற்சபையில் இருந்து வெளியேறினார். இந்த நேரத்தில் தமிழ்க் கட்சியின் எதிர்ப்பு பதவியை பிடிப்பதில் மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டது. காலத்திற்கு காலம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களின் நலனுக்கு விரோதமாக செயற்பட்டனர்.

கடந்த 10 ஆண்டுகளில் தேசிய விடுதலையை நோக்கிப் போராடி வெற்றியடைந்த ஆபிரிக்க தேசங்கள் உழைக்கும் வர்க்கத்தின் நலன் கொண்ட ஆட்சியை. திட்டத்தை மேற்கொள்ளாமல் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தையும், ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் ஆசியின் படி செயற்படுகின்றன. அத்துடன் கறுப்பர்களின் உயர் வர்க்கத்தினர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

## 2.7.4 சமூக சனநாயகப் போக்குப் பற்றி

இன்று ஐரோப்பாவில் அரச அதிகாரத்தில் இருக்கின்ற பெரும்பான்மையான ஆட்சியாளர்களின் பின்புலம் சமூக சனநாயக சித்தாந்தத்தைக் கொண்டதாகவே இருக்கின்றன. இந்தக் கட்சிகளே ஈராக், யூக்கோவின் மீதான ராணுவ தலையீடுகளை ஆதரித்து வருக்கின்றன. இவர்களின் போக்கு உயர்ந்த வர்க்கத்தவரின் நலனை பாதிக்காத வகையில் மேட்டுக்குடிகளின் நலனை பாதுகாத்து நிற்கின்றது.. இந்தக் கட்சிகள் 1990 பின்னர் மாற்றங்கொண்ட உலக அரசியலில் உலக பொலிசாக நடந்து கொள்ள முயற்சிக்கின்றன. இந்த சித்தாந்தப் போக்கை கொண்டவர்கள் ஐ. நாவின் ஒப்புதல் இன்றி ஈராக், யூக்கோ மீது தாக்குதல் நடத்த முழு ஒப்புதல் கொடுத்தன. குறிப்பாக நவீன ராணுவ மிரட்டல் கொள்கையை தமதாக்கிக் கொண்டது பிரித்தானி தொழிற் கட்சியுமாகும். இன்றைய ஐரோப்பிய நிலையை எடுத்துக் கொண்டால் சமூக சனநாயக கட்சிகள் அல்லது வலதுசாரிக் கட்சிகளே மாறிமாறி ஆட்சி புரிகின்றன.

சோசலிசத்தை தமது இலக்காக கொண்டதாக சமூக சனநாயக கட்சிகள் தமது எல்லைக்கு அப்பால் தமது இராணுவத்தை அனுப்பவேண்டிய அவசியம் என்ன. மூலதனத்தை ஆதரிக்கின்ற கிருத்தவ, வலதுசாரிக் கட்சிகள் ஆதரிப்பதில் நியாயம் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் தொழிலாளர் வர்க்க மீட்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட அமைப்பானது பாதைமாறிய நிலையையே இது காட்டுகின்றது. அரசு தனது எல்லையை விட்டு இராணுவத்தை தமது எல்லைக்கு அனுப்புகின்ற நிலையானது கொலனித்துவ காலத்தின் பின்னர் நிதி மூலதனத்தின் முதலீட்டினை பாதுகாக்கும் பொருட்டு இந்தவகையான பாதுகாப்புப் படை அவசியமாகின்றது.

ஆனால் சமூக சனநாயகக் கட்சிகள் மக்களின் அழிவை தடுக்கும் முயற்சியை மேற்கொள்வதாக கருத்துக் கூறுகின்றன. இது குட்டி முதலாளித்துவத்திற்கு உரித்தான ஒரு மனோநிலையாகும். குட்டி முதலாளித்துவ சக்திகள் இருக்கின்ற பிரச்சினைகளை முழுமையாக சொந்த மக்களிடம் நம்பிக்கை அற்ற நிலையில் இரவல் சக்திகளின் தயவில் பிரச்சினையைப் போக்க முயற்சிப்பது போலவே. இருக்கின்ற பிரச்சினைகளை தாம் தலையிட்டு தீர்த்துக் கொள்வதாக சமூக சனநாயக சக்திகள் சுயவிளக்கம் கொடுக்கின்றன. இவர்கள் முன்னரே தம் சொந்த மக்களின் மீது நம்பிக்கையை இழந்து சட்ட ரீதியான வழிமுறைகளின் மூலம் சோசலிசத்தினை அடைந்து விடலாம் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சமூக சனநாயகக் கட்சி மார்க்சின் காலத்தில் புரட்சிகர கட்சியாக இருந்தது. இவர்களின் பாதையானது திசை திரும்பியதன் காரணமாக புதிய சீர்திருத்த வாதப் போக்கு தோன்றியது. சீர்திருத்தத்தினை மார்க்சியம் ஏற்றுக் கொள்கின்றது. ''அராஜகவாதிகளைப் போல்லல்லாமல் மார்க்சியர்கள் சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை அங்கீகரிக்கின்றனர்..... எனினும், அதே நேரத்தில், சீர்திருத்தங்களைப் பெறுதலை மட்டுமே பாட்டாளி வர்க்கத்தின் நோக்கங்களையும் செயல் முறைகளாகவும் குறுக்கிக் கொண்டுள்ள – நேரடியாக அல்லது மறைமுகமாக இதில் ஈடுபடும் – சீர்திருத்தவாதிகளை எதிர்த்து மிகக் கடும் போராட்டதை மார்க்சியர்கள் மேற்கொள்ள வேண்டும்.'' (ப. 76 திருத்தல்வாதத்தை எதிர்ப்போம் – மார்க்சியத்தை காப்போம்) இந்த நிலைப்

பாட்டையே மார்க்சியம் வலியுறுத்துகின்றது. சீர்திருத்தில் மாத்திரம் திருப்பி கொள்வதில் இவர்கள் திருப்பி கொள்கின்றனர்.

ஏங்கெல்ஸ், மார்க்ஸ் ஆகியோரின் காலத்தின் பின்னர் சீர்திருத்தத்தினை தீவிரமாக மேற்கொண்டனர். இவர்கள் இச்சீர்திருத்த முயற்சிக்கு ஏங்கெல்சினை பக்க துணைக்கு அழைத்தனர். ''எல்லாவிதமான வன்முறை வடிவங்கள், எதிர்காலப் புரட்சியெல்லாம் இனி தேவையற்றவை. ஏனெனில் பெருகிவரும் பாட்டாளி வர்க்கத்தின் பலத்தாலேயே ஜனநாயக ரீதியாக, சட்டப்பூர்வமான வழிகளில் சோஷலிசத்தைக் கொண்டுவர முடியும்'' (பக்.33 ராயன் –ரோசா லுக்சம்பர்க்) இதனை ஆதரவாக கொண்டு சீர்திருத்தவாதிகள் தமது திரிபை மேற்கொண்டனர். இந்த திரிபை காவுட்கியினாலும், குறிப்பாக ரோசா லக்சம்போர்க்கினால் முற்றாக மறுத்து கருத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.

பிரான்ஸ் வர்க்கப் போராட்டத்திற்கு எழுதிய முன்னுரையை வாசிக்கின்ற போது (III– 123 பக், தொகுதி 2மார்க்ஸ் – ஏங்கெல்ஸ்) வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தை கவனத்தில் கொள்ளல் வேண்டும். முன்னைய நிலையில் இருந்து தற்பொழுதைய நிலையை ஆய்வு செய்கின்ற போது தற்பொழுதைய நிலையில், இருக்கின்ற சாதகமான தன்மையை உயர்த்திப் பேசுகின்ற போது ஏற்படுகின்ற சீர்திருத்த நிலையை விளங்கிக் கொள்கின்ற போக்கில் எல்லாக் காலங்களிலும் பிரச்சினைகள் தோன்றத்தான் செய்கின்றன. இவ்வாறான நிலையில் இலகுவாக தமது இருப்பை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய நிலையை தேர்வு செய்வது குட்டி முதலாளித்துவ இருப்பின் தத்துவமாகின்றது.

தமது சொந்த மக்கள் மீது நம்பிக்கையை இழக்கின்றது. தனது சொந்த மக்கள் மீது நம்பிக்கை இழப்பது புரட்சியில் உண்மையான நம்பிக்கையற்ற நிலைக்கு சமானமாகும். இவர்கள் பலாத்காரமாக ஆட்சியைக் கைப்பற்றுதில் இருந்து திசை விலகுகின்றனர். சமாதான முறைகள் மூலம் அதிகார வர்க்கத்தை தூக்கியெறிய நினைப்பது கற்பனை வாதமேயாகும். இன்றைய காலத்தில் அமைதியான முறையில் உரிமையை பெற்றுக் கொள்ள முடியும் என ஏகாதிபத்தியவாதிகளால் உபதேசமும் செய்யப்படுகின்றது. இதே வேளை நாடாளுமன்றப் பாதையை மேற் கொள்பவர்களும் நாடாளுமன்ற பாதையை ஒரு போராட்ட வழிமுறையாக விஸ்தரித்துக் கொள்கின்ற போக்கை வலியுறுத்துகின்றனர். நாடாளுமன்றப் பாதைதான் ஒரு சிறந்த வழிமுறை எனப் போதிப்பதுடன், சனநாயகத்தின் உயர்ந்த வடிவமாகப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இன்றைய நிலையில் ஆளும் வர்க்கக் கட்சிகள், ஏகாதிபத்திய நிலையில் வர்க்க பேதங்கள் முழுமையாக கொண்ட இன்றைய காலத்தில் நாடாளுமன்ற வாதம் பதவியை தங்க வைத்துக் கொள்ளப் பாவிக்கின்ற நிலையையே எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. இது பற்றி பல விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைய காலத்தில் நாடாளுமன்றம் செல்வதைக் குறிக்கோளாகவும், தொழிற்சங்கத்தில் இன்று ஆதிக்கம் செலுத்துகின்ற இச்சக்திகள் இவை மாத்திரமே முக்கியமான வேலைத் திட்டமாகவும் குறுக்கிக் கொண்டன.

இவர்கள் தொழிற் சங்க வேலைகளில் பங்கெடுப்பது தவறெனக் கொள்ளவில்லை. ஆனால் தனியே பொருளாதார மேம்பாட்டில் மாத்திரம் கவனம் செலுத்துவது தவறானதாகும். இவர்கள் பொருளாதாரவாதிகள் என்றும்

அழைக்கப்படுகின்றனர். இவ்வாறான போக்கில் இலங்கையில் பழைய இடதுசாரிக் கட்சிகள் செயற்படுகின்றன. வெறும் தேர்தல் வரும்வரை காத்திருப்பது போல இவர்களின் செயற்பாடு நாடாளுமன்றப் பாதைக்குள் அடங்கி விட்டது.

## 2.7.5 புதிய வழிகாட்டுவதாக பிதற்றல்

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மாத்திரம் போதாது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக போராட வேண்டிய தேவையும் உள்ளது. ஆனால் இந்தப் பிரிவினர் தாம் புதிய தத்துவத்தை முன்வைத்ததாக பிதற்றிக் கொள்கின்றனர். லெனின் பின்வருமாறு கூறுகின்றார். "இவர்கள் பிற்பட்ட தத்துவங்களிலிருந்து சிறு கவளங்களைக் கடன்வாங்கி, பாட்டாளி வர்க்கத்துப் போராட்டத் தத்துவத்தையல்ல, விட்டுக் கொடுத்துச் செல்லும் தத்துவத்தை – பாட்டாளி வர்க்கத்தின் மிகக் கொடும் பகைவர்களுக்கு, சோஷலிஸ்டுகளை வருத்துவதற்காக அயராது புது வழிமுறைகளைத் தேடியலையும் அரசாங்கத்துக்கும் முதலாளித்துவக் கட்சிகளுக்கும் விட்டுக் கொடுத்துச் செல்லும் தத்துவத்தை – பிரச்சாரம் செய்துப் பின்வாங்கியே சென்றிருக்கின்றார்கள்." (பக்.53 லெனின் – நூல் திரட்டு 1) இவ்வாறே இன்று பொஸ்னியா போன்ற நாடுகளில் சமூக சனநாயக கட்சிகளின் வளர்ச்சி பற்றிக் பெருமை கொள்கின்ற நிலையைக் காண முடிகின்றது. இது ஒரு நிகழ்ச்சியல்ல, மாறாக இவர்கள் தேர்தல் பாதையில் நிற்பவர்களை வரவேற்று சிறப்பிக்கும் நிகழ்ச்சி இதற்கு போதுமானதாகும். பிரான்சில் "போனபாட்" தேசியவாதத்தை உருவாக்கி தனது ஆக்கிரமிப்புத் தேவையை பூர்த்தி செய்ய எண்ணியதை தொழிலாளர் வர்க்கம் எதிர்த்துக் கொண்டது.

இவர்கள் தமது படைகளை மற்றைய நாடுகளுக்கு அனுப்பி சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிப்பதாகவும் பெருமை பாராட்டிக் கொள்கின்றன. இவர்கள் படைகளை அனுப்புவது ஒன்றும் மக்களைப் பாதுகாப்பதற்கு அல்ல முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவை செய்வதேயாகும். இவர்கள் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தைக் கடைப்பிடித்துக் கொள்ளாமல் தமது சொந்த முதலாளித்துவவாதிகளால் நாட்டை பங்கு போடும் சூழ்ச்சிக்கு ஆதரவு தெரிவித்தனர். இது முதலாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மனியில் சமூக சனநாயகக் கட்சியினரும், இங்கிலாந்தில் பேபியன் கழகத்தினரும் முதலாம் தாய் நாட்டைக் காக்கவென ஆக்கிரமிப்பு வெறியர்களுக்கு ஆதரவு அளித்தனர்.

அக்காலத்தில் தொழிலாளர் வர்க்கம் பின்வருமாறு பிரகடனப்படுத்தினர். "ஐரோப்பிய சமநிலை, தேசிய கௌரவம் என்ற சாக்கைச் சொல்லிக் கொண்டு அரசியல் பேராசை மறுபடியும் உலக சமாதானத்துக்கு ஆபத்தேற்படுத்தியிருக்கிறது. பிரஞ்சு, ஜேர்மன், ஸ்பானியத் தொழிலாளர்களே! நம்முடைய முழக்கங்கள் யுத்தத்திற்கு எதிராக ஒரே கண்டனமாக ஒன்று சேரட்டும்! ஆதிக்கப் பிரச்சினைக்காக அல்லது வம்சாவளிக்காக நடைபெறும் யுத்தம் குற்றகரமான முட்டாள் தனம் என்பதைத் தவிர வேறேதுவும் இல்லை என்று தொழிலாளர்கள் கருதுகிறார்கள் இரத்தத்தைச் சிந்துவதில் இருந்து தங்களுக்கு விலக்களித்துக் கொண்டவர்கள், பொது மக்களிடைய துன்பங்களை தங்கள் புதிய லாப

வேட்டைக்கு ஊற்றாகக் கருதுபவர்களுடைய யுத்தப் பிரகடனங்களை சமாதானம், உழைப்பு, சுதந்திரம் ஆகியவற்றை நேசிக்கும் நாங்கள் எதிர்க்கிறோம்! ..... ஜேர்மனியச் சகோதரர்களே! நம்முடைய பிரிவினை ஏற்பட்டால் ரைன் நதியின் இரு கரைகளிலும் எதேச்சாதிகாரம் முழுவெற்றி அடையும்... எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களே! நம்முடைய பொது முயற்சிகளுக்கு இன்று எத்தகைய முடிவு ஏற்பட்ட போதிலும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினராகிய நாங்கள் – தேச எல்லைகள் நமக்குக் கிடையாது – நமக்கு பிரிக்க முடியாத ஒருமைப்பாட்டின் உறுதி மொழியாக பிரான்சில் உள்ள தொழிலாளர்களின் நல்வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவிக்கிறோம்.'' (ப 31 பிரான்ஸ் உ. போர் – தேர்வு நூல் 7)

ஒரு தேசத்தில் இருக்கின்ற தொழிலாளர் வர்க்கம் மற்றை நாட்டு தொழிலாளர் வர்க்கத்திற்கு தனது ஆதரவை கொடுப்பது சர்வதேசக் கடமையாகும். போனப்பாட்டின் போலி தேசியவாதத்தை பாட்டாளி வர்க்கம் அம்பலப்படுத்தியது. இன்று பெயரில் புதிதாக எந்தத் தத்துவத்தையும் gilfftpjy.khwhf ,uhZ t (Militarism) ஆதிக்கவாதத்தை மீளவும் பயன்படுத்துகின்றனர். இதன் முக்கிய பிரதிநிதியாக பிரித்தானிய தொழிற்கட்சியும் அதன் தலைவர் (Tony Blair) ரொணி பிளையர். இந்தப் போக்கு சனநாயகத்தை பிழைக்க வைக்கும் நோக்குடன் செய்யப்படவில்லை. மாறாக சுரண்டும் பொருளாதார வர்க்கத்தை பாதுகாப்பதும், தமது தேசத்திற்கு உபரி வருமானத்தை உறுதி செய்யப் பயன்படும் தந்திரமே இதில் அடங்கியுள்ளது.

ஒடும் வர்க்க ஆட்சியாளர்களால் இனங்களிடையே கசப்புணர்வு அதிகரிக்கப்பட்டு விட்டது. அண்மையில் இன அழிப்பை தடுக்கவென பிரச்சினையில் நுழைந்து கொண்ட ஏகாதிபத்தியங்கள் யூக்கோவில் நெடுங்காலத்திற்கு நிலைகொள்ள வைக்கின்ற பிரிவை மக்களிடையே ஏற்படுத்தி விட்டனர். பொஸ்னியாவில் இன ஒற்றுமைக்கு சான்றாக சமூக சனநாயகவாதக் கட்சியின் வளர்ச்சியை பெருமைப்படுத்தி பத்திரிகையில் வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. யூக்கோவில் மாற்றுச் சக்தியாக சமூக சனநாயக சக்திகளை முன்னிறுத்துகின்றனர். நித்திரையில் இருந்து பின்னர், எழும்பி ஏதோ புதுமையான தீர்வை முன்வைத்தது போல பத்திரிகை நிருபர் கட்டுரை வரைகின்றார். ஏதோ எவருக்கும் தெரியாத தீர்வை முன்வைப்பது போல் ஏகாதிபத்தியங்கள் முன்னிறுத்துவதையும் அவதானிக்கலாம். இவை முற்போக்கானவையாக நிருபருக்கு தோன்றினாலும் அதை விட புரட்சிகரமான தத்துவமே மார்க்சியமாகும். ஏனெனில் மார்க்சியம் இனப் பிரச்சினைக்கும் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வைத்துவிட்டது.

## 2.7.6 வன்முறை எதிர்ப்பு

வன்முறை எதிர்ப்பு முதலாளித்துவ சக்திகள், சமூக சனநாயக சக்திகள், மிதவாதிகளிடம் காணப்படுகின்றது. ஆனாலும் வன்முறை எதிர்ப்புக் கோசம் சுரண்டல் அமைப்பை பாதுகாப்புக் கவசமாக பாவிக்கப்படுகின்றது. அகிம்சை வழியைத்தான் மிகப் பெருமையாக பேசிக் கொள்கின்றனர். அகிம்சைக்கு

உதாரணமாக காந்தியை காட்டி பெருமை கொள்கின்றனர். சமணத்திடம் இருந்து கடன் வாங்கிய காந்தி அகிம்சையில் மாத்திரம் நம்பிக்கை கொண்டு இருக்கவில்லை. இவர் தனிமனித பயங்கரவாதத்தை எதிர்க்க அரச பயங்கரவாதத்தை ஆதரித்தது வரலாறாகி விட்டது. இவர் சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத்சிங், சுகதேவ், ராஜகுரு போன்றோரை தூக்கில் போட அனுமதியளித்தார். இது உலக முதலாளித்துவ வர்க்கத்திற்கு காந்தி செய்த நன்றிக்கான உலக முதலாளித்துவ வர்க்கம் கொடுக்கும் நன்றிச் சான்றிதல். வன்முறையை எதிர்க்கும் போராட்டச் சக்திகளுக்கு ஆதரவு வளங்குவதாகவும் காட்டிக் கொள்கின்றன.

மேற்கு நாடுகளில் உள்ள சனநாயகக் கட்சிகள் தாம் வன்முறையில் ஈடுபடுவதில்லை என்பதாக காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றன. இவை மேலை நாட்டு கட்சிகளே ஒரு தூய வன்முறை எதிர்ப்புக் கட்சிகளாக காட்டிக் கொள்ள முடியும். குறிப்பாக சமூக சனநாயக் கட்சியினர் வன்முறை எதிர்ப்பில் அதிக கவனம் செலுத்துகின்றனர். இதில் கம்யூனிஸ்ட் கட்சிகளும் விதிவிலக்கல்ல எனலாம். இது மேற்குல நிலை வன்முறையில் நம்பிக்கை இல்லை என அடித்துச் சத்தியம் செய்தல் வேண்டும். இங்கு வன்முறை எதிர்ப்பு என்பதில் மாத்திரம் கவனம் செலுத்துவோம். வன்முறையில் ஈடுபடுபவர்கள் தம்மவர்கள் இல்லை. இவர்கள் கம்யூனிஸ்டுகள், கிப்பிக்கள், அராஜகவாதிகள் (Anarchist) என முத்திரை குத்தி ஒதுக்கப்படுகின்றனர். இந்த வடுச் சொல்லுக்கு ஆளாவதைத் முடிந்த வரையில் தடுக்கின்றன. வன்முறை, கிளர்ச்சி என்ற நிலையில்லாமல் செய்யக் கூடியதை செய்வோம் என பல மட்டத்தில் கருத்தைக் கொண்டவர்கள் இருக்கின்றனர். இதனை பின்வரும் வகையாக பிரித்துக் கொள்ளலாம்.

1. ஐ.நாவின், தன்னார்வக் குழுக்களின் ஆதரவில் நடைபெறும் மாநாடுகள். ஆய்வு முயற்சிகள் (உதாரணமாக சுற்றாடல் பாதுகாப்பு மாநாடு, கண்ணிவெடி தடைசெய்தல், சனத்தொகை தடுப்பு போன்றவை)
2. அரசியல் கட்சி மட்டம்
3. தனிநபர் மட்டத்தில் தம்மால் முடிந்ததை செய்வோம் என எண்ணுதல்.

ஆனால் இவைகள் எல்லாம் தன்னார்வ நிலை எனக் கொள்வதில் எல்லோரும் உடன்பாடு கொள்ள மாட்டார்கள். வன்முறை கிளர்ச்சி செய்பவர்களை நாகரீகமற்ற மனிதர்களின் செயல்கள் எனக் கொள்ளப்படுகின்றது. உலக அரசியல் ஓட்டத்தில் எவ்வகையான ஒட்டங்கள் நடைபெற்றாலும் பரவாயில்லை. தேவையில்லாமல் வல்லரசுகளுக்கு முட்டுக் கட்டையாக இருப்பதிலும் பார்க்க செய்யக் கூடியவற்றை செய்வோம் என்ற மனேநிலையை காணக் கூடியாக உள்ளது.

தனிக்கட்சிகளைக் எடுத்துக் கொண்டால் சாத்தியமான முயற்சிகளில் மாத்திரம் கவனம் செலுத்துகின்றனர். தற்போதைய சர்வதேச நிலையில் விடுதலைப் போராட்டக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களை களைவது சமாதான ஒப்பந்தங்களின் பின்னர் இடம் பெறும் ஒரு சடங்காகி விட்டது. ஆயுதங்களை ஒப்படைப்பதன் மூலம் ஒரு பாதுகாப்பை புரட்சிகர வர்க்கம் இழக்கின்றது. இவர்கள் சனநாயக வழி எனக் கூறிக் கொண்டாலும் தமது புதிய

நிலைக்கு புதிய விளக்கம் கொடுக்கின்றனர். இதனை வரலாற்று நிலையில் இருந்து பார்ப்போம்.

இலங்கையில் இடதுசாரி அமைப்புக்களில் இருந்து வெளியேறியவர்கள் தாம் அறிவு ஜீவிகள், கம்யூனிஸ்டுக்கள் என மார்க்சியத்தின் பெயரில் இயக்கங்களில் சரணடைந்தனர். முற்போக்கு சாயம்பூசி தத்துவ விளக்கம் கொடுத்தனர். இவர்கள் அன்றைய காலத்தில் தம்மை முன்னுக்கு கொண்டு வரும் முனைப்பில் ஈடுபட்டனர். 1970களில் தமிழ் இளைஞர்கள் எழுச்சி பெற்றுக் கொண்டிருந்த வேளையில், நாடு பிரிதலுக்கு எதிரான கருத்தை முன்வைப்பவர்கள் விரோதிகள் எனக் கணிப்பிடப்பட்டனர். இந்நிலையில் காரணமாக அரசியல் நீரோட்டத்தில் நிலைக்க வேண்டுமானால், அன்றைய காலத்தில் எந்தப் பிரச்சினை முக்கியத்துவம் உடையதாக தென்படுகின்றதோ அதனையே தொடர்ந்து செயற்படுத்துவதும், முதலாளிய தேசிய வாதிகளைவிட மாற்றுச் சிந்தனையுடன் கவர்ந்த ஒரு திட்டத்தை வைக்கின்ற போது அது கவர்ச்சிக்குரியதாகியது. இதன் மூலம் தமது அரசியலை அவர்கள் தமக்கு எது சாத்தியமானது எதுவெனப்பட்டதோ நிறைவேற்றிட முனைந்தனர். இவர்கள் கோட்பாடானது சாத்தியமானது எனப்பட்டதை தெரிவு செய்து அதில் வகைப்பட்டதே.

("பிரஞ்சு சோசலிச இயக்கத்தில் பூருஸ், மலோன் மற்றும் சிலர் தலைமை தாங்கிய சந்தர்ப்பவாதப் போக்கு இவர்கள் பிரஞ்சுத் தொழிற் கட்சியில் 1882இல் பிளவை ஏற்படுத்தினார்கள். இந்தத் தலைவர்கள் ***சாத்தியமானவை*** (Possible) என்று கருதிய வற்றிற்காக மட்டுமே பாடுபட வேண்டும் என்ற சீர்திருத்தவாதக் கோட்பாட்டை பிரகடனம் செய்தார்கள் அதன்படி இப்பெயர் கொடுக்கப்பட்டது. (மா.ஏ. நூல் திரட்டு 5) கவர்ச்சிவாதமானது எமது தேசங்களில் முக்கிய பிரச்சினையாகும். இந்தப் போக்கு காற்று எந்தப் பக்கம் வீசுகின்றதோ அந்தப் பக்கத்திற்கு சார்ந்து நிற்கின்றது. இதனால் பாட்டாளி வர்க்க அரசியல் கொண்டவர்கள் மக்களை (திராவிட கழகத்தின் மூலமாக பெறப்பெற்ற கருத்துத் தாக்கமானது எமது தேசத்திலும் தாக்கியதில் எவ்வித ஆச்சரியத்திற்கும் இடமில்லை. தமிழ் என்ற சொல்லுடன் ஈழத்தினையும் சேர்த்து தமிழீழம் என்ற தேசத்திற்கு பெயர் சூட்டியது திராவிட இயக்கத்தின் தாக்கமேயாகும்.) கவர்வதை விட இவர்கள் கவர்ந்து கொண்டு தமது காரியத்தைச் சாதித்துக் கொள்கின்றன. இது போராட்டப் பாதையில் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. இதனை வெற்றி கொள்ளும் பொருட்டு இடதுசாரித் தன்மை கொண்டவர்களால் முயற்சி எடுக்கப்பட்டாலும், பின்னர் அவர்களே கவர்ச்சிவாதத்திற்குப் பின்னால் சென்று சீரழிகின்றனர். இன்நிலையானது குறுக்கு வழியாக சாதித்து விடலாம் என்ற குட்டிப் முதலாளித்துவ சிந்தனையை திட்டமிட்டு விதைக்கும் போக்கும் போராட்ட முனைப்பிற்கு பாதகமாக இருக்கின்றன.

மார்க்சியம் என்பது தேசிய வாதம் எங்கிருந்து வருகின்றது எவ்வாறு தோற்றம் பெறுகின்றது என்ற புரிதலைக் கொண்டுள்ளது. கோட்பாட்டை முன்வைக்கும் போது தேசியப் போராட்டம் என்பது சோசலிசத்திற்கான முதற்படியாகும். சனநாயகப் புரட்சி ஒருமைல் கல்லை கடந்த பிற்பாடு அடுத்த மைல் கல்லை எவ்வாறு கடப்பது என்பது பற்றிய பிரச்சினையாகும். தன்னியல்பு என்பது

புரட்சிகர தத்துவத்திற்கு அப்பாற்பட்டு இயங்குகின்ற போராட்டப் பாதையாளர்களை குறிப்பிடலாம். இவர்களே அமைப்பு வடிவம் கொண்ட போராட்ட வடிவத்தையும், புரட்சிகர சமூகத்தைப் படைப்பதிலும் நம்பிக்கை அற்றவர்கள். இங்கு சமூகப் பிரச்சினையில் பால் ஒரு முழுமையான பார்வை கொண்டவர்களாக இருப்பதில்லை.

தன்னியல்பிற்குட்பட்டு பின்வரும் தளங்களில் எமது தேசங்களில் செயற்படுகின்றனர். மனித உரிமை அமைப்புக்கள், பெண் விடுதலை அமைப்புக்கள், சாதிய எதிர்ப்புச் சக்திகள், குறிப்பிட்ட கோரிக்கைகளுக்காக மட்டும் தம் சக்தியைப் பயன்படுத்தும் சக்திகள் இருக்கின்றன. இவைகள் தன்னார்வச் செயற்பாட்டிற்கு அப்பால் செல்ல முடிவதில். ஆனால் இவர்களின் சீர்திருத்தப் போராட்டங்களை ஒரு கட்சி எதிர்ப்பதில்லை. ஆனால் குறிப்பிட்ட வரம்பினுள் திருப்தி அடைவதையும், மக்கள் திசை திருப்பப்படுதலையும் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது.

மக்களிடையே தன்னியல்பான செயற்பாடுகள் என்பது தாராளமாகவே காணப்படும், அதனை ஒழுங்குபடுத்தி போராட்டத்தை சரியான வழிக்கு நடத்திச் செல்ல வேண்டிய கடமையானது, ஒரு கட்சியின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையை போக்குவதற்கு கட்சியானது கடுமையான உழைக்க வேண்டியுள்ளது. ஒரு கட்சியினுள் தன்னியல்பினை இடமளிக்கப்படக் கூடாது, அவற்றை கட்சியானது அதனை முடிவிற்கு கொண்டு வரவேண்டும்.

## 2.8. பிரச்சினைக்குத் தீர்வு?

பலவிடயங்களை ஆய்வு செய்து விட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக்காது விடுவது சரியான சிந்தாந்தப் போக்காக அமையாது. ஆனாலும் இங்கு தீர்வினை ஆலோசனை மட்டத்திலேயே வைக்கப்படுகின்றது. ஏனெனில் கட்சிக்கு வெளியாக இருக்கும் ஒரு தனிநபரின் நிலை இதுவே. விமர்சனத்தை வைத்து விட்டுப் போகலாம். ஆனால் அவற்றிற்கு தீர்வு கொடுப்பது இலகுவானதாக இருப்பதில்லை. எந்தக் காலத்திலும் விமர்சனம் இலகுவானதே. இன்றைய காலத்தின் தேடல், பொதுவுடமைக் கட்சியை அமைந்துக் கொள்வதாகும். ஏனெனில் சர்வதேசக் கடமைகளை பூர்த்தி செய்ய வழிகாட்ட கட்சியானது முக்கியமானதாகும். இன்று பொதுவுடமைக் கட்சிகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் தமது கடந்த காலத்தை மீளாய்வு செய்தல் வேண்டும். இதன் மூலமே ஒரு உண்மையான புரட்சிகரப் பாத்திரம் வகிக்க முடியும். இருக்கின்ற தேக்க நிலையை போக்கவும் முடியும்.

### 2.8.1 புதிய சனநாயக புரட்சி பற்றி

இலங்கை முழுவதும் ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு ஆளாகியுள்ளது. இதுவரை காலமும் ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் தமிழ மக்களுக்கு அல்ல என்ற நிலையில் இருப்பது போல காட்சியளிக்கின்றது. இதன் பொருள் இருக்கின்ற

பிரச்சினைகளை ஏகாதிபத்திய நிலைகளுக்குள் சுருக்கி விடுவது என்ற பொருள்படாது. தற்பொழுது முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் ஏகாதிபத்தியங்கள் தமது மூலதனத்தையும், தொழில் நுட்பத்தினையும் வறியநாடுகளுக்கு நகர்த்துகின்றனர். இவ்வேளையில் எமது மக்களில் ஒருபகுதியினர் பயன்பெறுகின்றனர், எனினும் வர்க்க பேதங்கள் அதிகரிப்பது ஒரு பக்கம் இருக்க. வறிய நாடுகள் பொருளாதாரத்தில் மேம்படுகின்றன என ஏகாதிபத்தியங்கள் பிரச்சாரம் செய்கின்றன. இது வெறும் அப்பட்டமான பொய்யேயாகும். ஒப்பீட்டளவில் வளர்ச்சி இருப்பினும் (இந்தக் கணிப்பு முறை சோசலிச பொருளாதார அமைப்பில் பொருத்தமாகும்) இவர்களிடம் இருந்து பெற்ற நாட்டின் மொத்த வருமானத்திலிருந்து பெற்றவற்றை வட்டிகட்டவே போதாது. எமது நாடுகள் எவ்வளவுதான் லாபமாகப் பெற்றாலும் எவ்வித பிரயோசனமும் இல்லை. ''கறையான் புற்றைக்கட்டி பாம்பிடம் பறிகொடுத்த கதைதான் எமது தேசங்களின் நிலை.''

மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து வெல்வது இலகுவானது. ஆனால் லெனின் கூறுவது போல் ''மூலதனத்தின் ஆதிக்கம் சர்வதேச ரீதியானது ஆகவே சர்வதேச மூலதனத்திற்கு எதிராக தொழிலாளர்கள் கூட்டாகப் போராடினால் மட்டுமே எல்லா நாடுகளிலும் தொழிலாளர்கள் தங்களுடைய விடுதலைக்காக நடத்துகின்ற போராட்டம் வெற்றி பெறும்.'' (ப.17 தமிழ் – பாட். சா.)

வளர்ந்து வரும் நாடுகளாகிய நாம் ஏகாதிபத்தியப் பிடியினுள் சிக்கித் தவிக்கின்றோம், அத்துடன் அவர்களின் இஸ்டத்திற்கு நாங்கள் செயற்பட்டுக் கொண்டு வருகின்றோம். இவர்களை வெல்ல வேண்டுமானால் அனைத்து மக்கள் பிரிவினரும் இணைந்து போராடுவதன் மூலமே வெற்றி பெறமுடியும். ஆனால் எமக்கிடையில் இருக்கின்ற பிரிவினைகளை கொண்டு இணையவிடாமல் மென்மேலும் தொந்தரவு செய்து கொண்டே இருப்பார்கள் இதற்கு நாம் என்ன செய்யப் போகின்றோம். இதற்கு மாற்று தந்திரோபாயம் என்ன?

இதன் பொருள் தேசிய இனத்தின் விடிவிற்காக போராடக் கூடாது என்பது அல்ல. அப்படிக் கூறவும் முடியாது ஏனெனில் அதில் பாதிக்கப்படுவது முதலில் பாட்டாளிகளே. இன்றைய நிலையில் இரத்தம் எம்முடைய சிந்தனையோட்டத்தை மறைக்கும் அதற்கு அவ்வளவு சக்தியுண்டு. ஏனெனில் முன்பு பார்த்தது போல், எம்முடைய சமூக அமைப்பு அப்படி இதற்கு ஒரு கட்சியானது அடிபணிந்து போக முடியாது. உயர்ந்த இலட்சியத்தை கொண்ட பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை சிதைக்காமல் பாதுகாக்க வேண்டியது ஒரு கட்சியின் கடமையாகும். ''ஒரு உயர்ந்த கோரிக்கைகளை தாழ்ந்த தரத்திற்கு இறங்கி விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்'' (லெனின்) நாம் பெரிய மலையைக் கடக்க வேண்டியுள்ளோம். இப்படியே குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கப் போகின்றோமா? பாட்டாளி வர்க்கத்திற்கு மிகப் பெரிய எதிரிகள் இருக்கின்றனர். இவர்களை வெல்வது எங்கனம். தொடர்ந்தும் நாகரீகமான தேசியவாதத்தின் மூலம் தொழிலாளர்களைக் (லெனின்) கெடுத்துக் கொண்டா இருக்கப் போகின்றோம்.

பாட்டாளி வர்க்கச் சக்திகளே போராட்டத்திற்கு வழிநடத்த வேண்டும். எனினும் இன்று முதலாளித்துவ சக்திகளே தலைமை தாங்குகின்றது. இந்தப் புரட்சிக்கு விசுவாசமான சக்திகள் எவை என சரியான வரையறை தேவை. அனைத்து நட்புச் சக்திகளை இணைத்துக் கொண்டு போராட்டத்தை வழிநடத்த வேண்டும். இன்றைய நிலையானது மூலதனத்தை எதிர்த்துப் போராட வேண்டுமெனில் உள்நாட்டில் இருக்கின்ற நட்பு சக்திகளான தேசிய முதலாளித்துவ சக்திகள் பாட்டாளிகள், விவசாயிகள் உட்பட அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்தல் வேண்டும் புதிய சனநாயகப் புரட்சி என்பது முதலாளித்துவ புரட்சிக் கட்டத்தை நகர்த்திக் கொண்டு சோசலிசப் புரட்சியை மேற்கொள்வதாகும். ''இந்தப் புதிய சனநாயகப் புரட்சி ஐரோப்பிய, அமெரிக்க வரலாற்றிலுள்ள சனநாயகப் புரட்சிகளிலிருந்தும் பெரிதும் வேறுபட்டதாயுள்ளது. ஏனென்றால் அதன் மூலம் பூர்சுவா வர்க்க சர்வாதிகாரம் அல்லாமல், பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான சகல புரட்சிகர வர்க்கங்களினதும் ஐக்கிய முன்னணியின் சர்வாதிகாரம் ஏற்படும்.'' (ப 51 சீனப் புரட்சியும், சீ.க.கட்சியும்)

இந்தப் புரட்சிக்கு சர்வதேச புரட்சிகர சக்திகளின் ஆக்கபூர்வமான ஆதரவு அவசியமாகின்றது. புரட்சிகர சக்திகளிடம் பெரும் கடமையை எதிர்பார்த்து நிற்கின்றது. இன்று பணக்கார நாடுகளின் இலாபபெருக்கத்திற்காக பலியாவது எமது நாடுகள் எமது நாடுகளின் அழிவிலேயே மேற்கு நாட்டவர்களின் நல்வாழ்வு தங்கியுள்ளது. அந்நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் தனது சொந்த முதலாளி வர்க்கத்திற்கு எதிராக போராடவேண்டும். ஏனெனில் நிதி மூலதனத்திற்கு எதிராக போராடுவது இலகுவானது அல்ல.

ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான போராட்டத்தை மேற்கொள்கின்ற பொழுது தேசிய இனங்களின் சுயநிர்யணத்தைக் அங்கீகரிக்க வேண்டும். ஒரு கட்சியானது தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பதும், அவர்கள், விரும்பும் பட்சத்தில் பிரிந்து செல்வதற்கும் அனுமதிக்க வேண்டும். தேசிய எல்லை உருவாக்கம் என்பது தேசிய இனங்களின் முதலாளித்துவ புரட்சிகர கடமையை நிறைவேற்றிக் கொண்டு பாட்டாளி வர்க்கப் புரட்சியை தொடர்ந்து செல்வதற்கான அரைவழி நிலையே. எனவே தேசியக் கடமைகளை முடித்துக் கொண்டு பாட்டாளி வர்க்க புரட்சிக்கான கட்சியானது அனைத்து இனங்களையும் அணிதிரட்டும் பொருட்டு தேசிய இனங்களுக்கான முன்னணியை உருவாக்கிக் கொள்வதன் மூலம் அந்தந்த இனத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் முகமாக அணிதிரட்டுவதே செய்ய வேண்டிய பணியாகவுள்ளது.

கடந்த காலத்தில் இருந்த இடதுசாரிக் கட்சிகள் நாடாளுமன்றச் சகதிக்குள் தொடர்ந்து கொண்டு இருப்பதால் இவர்களிடம் இருந்து மக்களை விடுதலை செய்வதும் அவசியமாகின்றது. இதன் பொருள் இருக்கின்ற அமைப்புக்களை ஆயுதத்தின் மூலம் அழித்துக் கொள்வதல்ல. ஆனால் தொழிற்சங்கம், மற்றும் தேசிய இனங்களுக்கான முன்னணி ஆகியவை வர்க்க நிலையில் எழுச்சிக் கொள்ளத்தக்க வகையில் செயற்பாடுகள் அமைந்து கொள்ளப்படவேண்டும். தனியே நாடாளுமன்றத்தை மையமாகவும், வாக்குக்களை பெறும் நோக்கத்தில் அமைந்த அமைப்புச் செயற்பாடுகளையும், புரட்சிகர செயற்பாட்டிற்கும்

இடையிலான வித்தியாசத்தை புரிந்துகொள்ளவும், கடந்த காலப் பாதைக்கும் எதிர்காலப் பாதைக்கும் இடையிலான மாறுபாட்டை அம்பலப்படுத்துவதும். புரட்சி என்ற சொல்லுக்கும், செயலுக்கும் இடையே இருக்கின்ற மாறுபாடுகளை புரிந்து கொள்ளத்தக்க செயற்பாட்டை மேற்கொள்வதும் இன்றைய நிலையில் அவசியமானதாகும்.

## 2.8.62 கலாச்சாரப் புரட்சி

முதலாளித்துவ சனநாயகப் புரட்சிக் கடமை என்பது வேறு அதற்காக முதலாளித்துவ சனநாயகப் புரட்சியே முடிவான நிலை என்பதே அல்லது அதற்காக மாத்திரம் தான் போராடவேண்டும் என்பது கிடையாது. தமிழ் பூர்சுவா வர்க்கம் ஆதிக்கம் செலுத்துதற்காக போடும் கூப்பாடுகள். அரசியல் அதிகாரத்தை பெற்ற பிற்பாடு பாட்டாளிகளைச் சுரண்டுவதை தொடர்வர். அரசு என்பது ஒடுக்குவதற்கான ஸ்தாபனம். தேசிய விடுதலையுடன் பிரச்சினைகள் முடிந்து விடுவதில்லை, தொடர்ந்தும் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக தொடர்ந்தும் போராட வேண்டும். சோசலிச சமூகத்திலும் வர்க்கங்கள் இருக்கின்றன, அவை இடைவிடாது தமது இருப்பை உறுதி செய்யப் போராடிக் கொண்டே இருக்கும். சோசலிச சமுதாயத்தில் கலாச்சாரப் புரட்சியை இடையறாது நடத்த வேண்டும். இதனை சீன அனுபவம் சுட்டிக் காட்டுகின்றன. உலகில் முதன் முதலில் வீஷப்பரீட்சையை செய்த பெருமை சீனத் தலைவரையும், மக்களையும் சாரும் இந்த கலாச்சாரப் புரட்சி பற்றி ஆளமான ஆய்வுகள் இடம் பெறவேண்டும். அவர்களின் தவறுகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைவே உள்ளது. கலாச்சாரப் புரட்சி நடைபெற்ற நாட்டிலேயே உலக் கண்ணோட்டத்தை முழுமையாக மாற்ற முடியாமையும், போராட்டத்திற்கு முன்னணி வகித்த போராளிகள் இருக்க பிற்போக்குச் சக்திகள் பதவிக்கு வந்தனர் என்பது இங்கு கவனிக்கப்படவேண்டும்.

கடந்த கால வரலாற்றில் எவ்வாறு முதலாளித்துவ சக்திகள் மீளவும் ஆட்சிப் பீடம் எறினர் என்பதை வரலாறு எமக்கு கற்பித்திருக்கின்றன. இந்த நிலையை தவிர்க்க வேண்டுமானால், எந்தக் காலத்திலும் மாற்றுக் கலாச்சாரத்தை போராட்ட காலத்தில் அளித்திட வேண்டும். இதன் மூலமே கட்சி உறுப்பினர்களை சமூகத்தின் பிற்போக்குத்தனமான தாக்குதலில் இருந்து உறுப்பினர்களை பாதுகாக்க முடியும். ஒருமனிதர் கட்சியுறுப்பினராக இருக்கின்ற போது உழுத்துப் போன சமூகத்தின் ஒரு உறுப்பினர் அந்த உறுப்பினர் தனியே சமூகத்தினுள் இருக்கின்ற போது சமூக அமுத்தம் என்பது அந்த மனிதர்களை நீண்டகாலம் பாட்டாளி உணர்வுடையவராக இருக்க விடுவதில்லை. மனவுழைச்சலுக்கும், சலிப்புக்கும், சமூக நீரோட்டத்திற்கும் அள்ளப்பட்டு சென்றிடுவர். இதற்கு கட்சியானது இடையறாது போராட வேண்டியுள்ளது. இவைகளை கடந்த கால போராட்ட அனுபவங்களினூடாக பெற்றுக் கொள் முடியும். இதில் அக்கறை கொள்ளுகின்ற போதே அமைப்புக்களில் ஏற்படுகின்ற பின்னடைவுகளை போக்கவும். வர்க்கப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்யவும் பிற்போக்குச் சமூகத்தில் மாற்றுச் சமூக கலாச்சாரத்தைக் கொண்ட கட்சியினால் தான்

வெற்றி கொள்ள முடியும். இதன் மூலமே அமைப்புக்களில் தனித்துவவாதம் தலைதூக்குவதை நிறுத்தவும் முடியும்.

1. இனங்களுக்கிடையேயான மனமுறிவு

2. போலியுணர்வு

ஆகியவற்றை அகற்றி புதிய கலாச்சாரப் புரட்சியை எவ்வாறு நிறைவேற்றி முடிப்பது? ஏனெனில் இன்று புரையோடிப் போயுள்ள இந்தப் பிரச்சினைகளை சிந்தனை மாற்றத்தின் ஊடாகவே படைக்க முடியும். இதற்கான செயற்பாட்டை எங்கிருந்து தொடங்குவது?

இனங்களுக்கிடையேயான மனமுறிவு இந்தச் சமூக அமைப்பில் முற்றாக தீர்த்துக் கொள்ள முடியாது. ஆனால் இவை இடம் பெற வேண்டுமேயானால் இரண்டு தளங்களில் நாம் முக்கியான செயற்பாட்டில் இறங்க வேண்டும். 1பொருளாதார கட்டமைப்பை (வர்க்கப் போரட்டம்) மாற்றப் போராட்டம் நடாத்துகின்ற போது அதன் மாற்றத்தை தங்க வைத்துக் கொள்வதற்கு தயார்படுத்தும் அதேவேளை

2. கருத்துப் போராட்டத்தையும் நடாத்தியேயாக வேண்டும், எமது சிந்தனையோட்டத்தை பொருளாதார கட்டமைப்புத் தான் நிர்ணயிக்கின்றது. அதேவேளை நாம் கட்டமைப்பை மாற்றப் போராடுகின்ற போது கருத்தியலை எதிர்க்கவும் பாவிக்கப்பட வேண்டும்.

''முதலாளித்துவ பாதையினரை எதிர்த்துப் போராடுவது முதன்மையான பணி, ஆனால் அதுவே நமது லட்சியம் அல்ல, திரிபுவாதத்தை நீக்கி உலகக் கண்ணோட்டம் பற்றிய பிரச்சினையைத் தீர்த்து வைப்பதே நமது லட்சியம்.'' (ப 65 மாவோ சிந்தனைகள் – Dr. W.C. தேவ்) என மாவோ வரையறுத்தார்.

பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தைப் பற்றி உரையாடும் போது கருத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில், மனித குலத்தின் வளர்ச்சி அனைத்தின் விளைவாகவும் தோற்றுவிக்கப்பட்ட கலாச்சாரத்தைப் பற்றிய துல்லியமான அறிவைக்கொண்டும், இந்த கலாச்சாரத்தை மாற்றி அமைப்பதன் மூலமும் தான், நாம் பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தை தோற்றுவிக்க முடியும் என்பதைத் தெளிவாய் உணர்ந்தால் ஒழிய, இனப்பிச்சினைக்கு நம்மால் தீர்வு கான இயலாது. பாட்டாளி வர்க்க கலாச்சாரம் மாயமாய் காற்றில் இருந்து தருவிக்கக் கூடியதல்ல. அதெல்லாம் சுத்த பம்பாத்துப் பேச்சு. பாட்டாளி வர்க்க கலாச்சாரம், அதிகார வர்க்க சமுதாயம், நிலப் பிரபுக்களின் சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் ஆகியவற்றின் ஆதிக்கத்தில் மனித குலம் சேமித்து வைத்திருக்கும் அறிவுக் கருவுலகத்தின் தர்க்க ரீதியான வளர்ச்சியாகவே இருக்க முடியும்.

பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தின் மூலம் மேற்கூறியபடி தேசிய இனங்களுக்கிடையேயான கசப்புணர்வுகளை மாத்திரம் அல்ல ஆண் பெண் உறவு, சாதிய சமய (கருத்துமுதல்வாத) மூடப்பழக்க வழக்கங்கள் அனைத்தும் பூர்சுவா வர்க்க கலாச்சார வடிவங்கள், சிந்தனைகள் என்பன சமூகத்தில் இல்லாது ஒழிக்க முடியும். இதற்கு ஏற்பவே கட்சியானது தன்னை தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

# 3.முடிவுரை

மார்க்சிய வரையறுப்பில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக கடந்த காலங்களில் ஏற்பட்ட குழப்ப நிலைபோல் இனிவரும் காலங்களிலும் ஏற்படக்கூடாது. இன்று எழுந்துள்ள பிரச்சினை என்பது முன்னையவிட புதிய பருமனையடைந்துள்ளது. இன்றைய நிலையில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பதுடன் நின்றுவிடாமல், அவற்றை எவ்வாறு செயற்படுத்து என்ற புதிய கோட்பாட்டை உருவாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. அதேவேளை கட்சியானது எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்? முன்னணி எவ்வாறு இருக்க வேண்டும்.? என்பதையும் கறாராக வகுக்கப்பட வேண்டும். பிரச்சினைகளை முன்வைக்கின்ற போது பல பிரச்சினைகளுக்கு விளக்கங்கள் அவசியமாகின்றது. அமைப்பின் இடையே சாத்தியவாத, சீர்திருத்தப் போக்குகள் கொண்டிருப்பதினால் தன்னியல்பு கொண்டிருக்கின்றன. இந்தப் போக்குகள் கட்சி மட்டத்தில் இடம் பெறுமானால் சிதைவுகளை தடுக்க முடியாது. இவைகள் கட்சியில் நிலையில் பார்க்கப்பட வேண்டிய விடயங்களாகும். சில மார்க்சிய எதிர்க் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

மார்க்சிய சிந்தனை வழியில் பாதை அமைக்கப்படுதலே முதல் நிபந்தனையாகும். சகல போராட்டங்களையும் ஒன்றிணைக்கும் வகையில் அமைத்தல் வேண்டும். எவ்வகையான போராட்டத்தை முன்வைப்பது என்தில் கூட முரண்பாடு ஏற்படுகின்றன. தேசியம் போராட்டங்களை நிபந்தனை இன்றி ஆதரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஒடுக்கப்படும் இனத்தின் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்படவேண்டும். இவற்றை மீறுவது மார்க்சிய விரோதமாகும். ஆனால் நாடுகள் பிரிந்து செல்லவேண்டுமா? அல்லது பிரிவினையை ஆதரிக்க வேண்டுமா என்பதில் நிச்சயம் ஒரே மாதிரியான கருத்தை அடைய முடியாது.

இன்று தேசிய இனப்பிரச்சினையை கட்டுமானத்தில் நிகழ்கின்ற போலி இனவுணர்வு, மதவுணர்வு ஆகியவற்றால் ஏற்படுகின்ற சமூக உறவுகளை வைத்து பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்தச் சமூக உறவிற்கு அடித்தளமான அடிக்கட்டுமானத்தில் ஏற்படுகின்ற பிரிவினைகளே காரணமாகும். முற்போக்கு தத்துவம் பல விதமான பிரச்சினைகளையும் ஆராய்ந்துள்ளது, தனது கருத்தை முன்வைக்கின்றதன் காரணத்தால் அனைத்துப் பிரச்சினைகளிலும் நிதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளது. இன்று குறிப்பாக யுத்தத்தினாலும், உலக மயமாதலினாலும் வேகப்படுத்தப்படும் புதியவகை பொருளாதார உறவு, பழைய சமூக உறவுகளை சிதைக்கின்றது. இந்தச் சிதைவை மக்களுக்கு வெளிப்படுத்தி, அவர்களை அணிதிரட்டிக் கொள்ள கோட்பாட்டு ரீதியாக போராளிகள் தெளிவான கருத்தைக் கொண்டிருப்பதும் அவசியமாகும்.


தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை பெறுவது, தொழிற்சங்க உரிமை, ஆண், பெண் சுதந்திரம் எல்லாம் இவ்வாறான உரிமை பெறுவது எல்லாம்

சீர்திருத்தாகும். சீர்திருத்தத்துடன் திருப்தி காணமுயல்வதும், பெரும் அரசியலில் சிறு முயற்சியை செய்து விடுவோம் என எண்ணம் கொண்டு செயற்படும் தன்மையையும் காணமுடிகின்றது. சீர்திருத்தவாதத்தினை எந்த மட்டத்தை எடுத்துக் கொண்டாலும் காணக்கிடக்கின்றது. சர்வதேச மட்டத்தில் எடுத்துக் கொண்டால் நடைமுறைவாதத்தினை முன்வைத்து செயற்படும் போக்கையும் காணக் கிடக்கின்றது. இருக்கின்ற சமூகத்தில் எந்தவகையான நலன்களைப் பெறமுடியுமோ, அந்த நலன்களை மாத்திரம் பெற்றுக் கொள்வது, பழைய நிலையில் இருந்து சிறிதளவு மாற்றம் ஏற்பட்டால் கூட நல்லது என்ற சித்தாந்தப் போக்காகும். இவ்வாறான மக்கள் திரள் போராட்டங்களில் திசை திருப்ப பிற்போக்கு சிந்தனை கொண்டவர்கள் மார்க்சிய புரிதலில் இருக்கின்ற குறைபாடு காரணமாக அவற்றை திரித்துக் கூறுகின்றனர்.

கோட்பாட்டை முன்வைக்கும் போது தேசியப் போராட்டம் என்பது சோசலிசத்திற்கான முதற்படியாகும் என தெளிவாக வரையறுத்துக் கொள்ளும் மார்க்சியம், போராட்டத்தை வெற்றி கொள்ளும் நோக்கில் இடைக் காலத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கு சேவை செய்யக் கூடிய அனைத்து வித சாதமான விடயங்களை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் எப்பொழுதும் கிடைக்கும் சலுகையுடன் திருப்தி கொள்வதில்லை. மாறாக பெற்ற ஒவ்வொரு வெற்றியை பாதுகாப்பதுடன் தொடர்ந்தும் போராடுகின்றனர்.

பிரச்சினையின் ஆரம்பத்தை புரிந்து கொள்ளும் நோக்கில் மேலே ஆராய முற்பட்டுள்ளது. இவைகள் மிகவும் கறாராக விமர்சிக்கப்பட வேண்டும். இதன் மூலமே சரியான கருத்தை வந்தடைய முடியும். அதேவேளை கருத்தை மையமாக வைத்து விமர்சிப்பது ஆரோக்கியமானது. இக்கட்டுரையில் கட்டுமானத்தில் ஏற்படும் மாற்றங்களும், மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகளால் ஏற்படும் அனர்த்தங்களும் பற்பல கோணங்களில் சமுதாயத்தில் வெளிப்படுகின்றன. இதன் அனர்த்தங்கள் தெருக்களிலே எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்களின் குருதி நித்தம் சிந்தப்படுகின்றன. எத்தனையோ ஆயிரக் கணக்கானவர்கள் கொலை பாதகர்களினால் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர். சிறைகளிலே நித்தம் கொல்லப்படுகின்றனர். இவைகள் சனநாயகம் என்ற போர்வைக்குள் நடாத்தப்படும் நாடாளுமன்ற கேளிக்கைகளுக்கும், மனிதஉரிமை என்ற பெயரில் கடதாசி அறிக்கைகளுக்கும், மக்களின் உண்மையான கோரிக்கைகள் அனைத்தும் ஆளும் வர்க்கத்தினரால் மூடி மறைக்கப்படுகின்றன அல்லது மலினப்படுத்தப்படுகின்றது.

இந்த அவலநிலையைப் போக்குவதற்கான வழியினை அலசி ஆராய வேண்டும். இதன் மூலம் புதிய தந்திரோபாயம் அமைத்து மக்களின் போராட்டத்தை முன்னுக்கு நகர்த்திட வேண்டும். இந்த அடிப்படையில் அமைந்த அரசியல், அமைப்பு, நடைமுறை வேலைத்திட்டத்தை தயாரித்தல் வேண்டும். அவை புரட்சிகர தத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் உழைக்கும் வர்க்கத்தின் தலைமையின் கீழ் போராட்டப் பாதையை நகர்த்தி விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.



# 4. உசாத்துணை

மார்க்ஸ் – தொகுதி 1
மார்க்ஸ் – தொகுதி 2
மார்க்ஸ் – தொ. 3 இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்
மார்க்ஸ் – தொகுதி 6
மார்க்ஸ் – தொகுதி 7. பிரான்ஸ் உள்நாட்டுப் போர்
மார்க்ஸ் – அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை
மார்க்ஸ் – மூலதனத்தின் தோற்றம்
மார்க்ஸ், ஏங்கெல்ஸ் – கட்சி கட்சி அறிக்கை
ஏங்கெல்ஸ் – மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்
ஏங்கெல்ஸ் – குடும்பம் தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்
ஏங்கெல்ஸ் – லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்
லெனின் – சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?
லெனின் – திருத்தல்வாதத்தை எதிர்ப்போம் – மார்க்சியத்தை காப்போம்
லெனின் – பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்
லெனின் – என்ன செய்யவேண்டும்
லெனின் – நூல் திரட்டு 1
லெனின் – நூல் திரட்டு 2 – ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்
ஸ்ராலின் – மாக்சியமும் தேசிய இனப்பிரச்சினையும்
பிளெஹானவ் – மார்க்சியத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்
மாவோ – மாவோ மேற்கோள்கள்
மாவோ – சீனப்புரட்சியும், சீ.கம்யூனிஸ்ட்.கட்சியும்
Dr. W.C. தேவ் – மாவோ சிந்தனைகள்
க. பஞ்சாங்கம் – சிலப்பதிகாரத் திறனாய்வுகள் – ஒரு பார்வை
மு. இராசநாயகம் – யாழ்ப்பாண இராச்சியம்
மு. வரதராசன் – மொழி வரலாறு
பெருஞ்சித்திரனார் – இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்
வெ. கிருஷ்ணமூர்த்தி – ஆய்வு வட்டக் கட்டுரைகள் (பாகம் 1)
குணா – தமிழர் வரலாறு1996
குணா – சாதியத்தின் தோற்றம்
நா. வானமாமலை – தமிழர் வரலாறும் பண்பாடும்
நா. வானமாமலை – பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும்)
நா. வானமாமலை (பதிப்பாசிரியர்) – மக்களும் மரபுகளும்
ஜோர்ஜ் தோம்சன் – மனித சாரம்
கா. சுப்பிரமணியன் – சங்ககாலச் சமுதாயம்
க. கணபதிப்பிள்ளை – ஈழத்து வாழ்வும் வளமும்

மயிலை சீனி. வேங்கடசாமி – பழங்காலத் தமிழர் வாணிகம்
அருள் செல்வநாயகம் – ஈழமும் தமிழரும் – 1963
வி. பி. சித்தன் – தெலுங்கானாப் போராட்டம்
அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ் – இந்துமாக்கடல் மர்மங்கள்
நெப்போலியன் – தேடல் – கனடா
Von Stietencron- Hinduism Reconsidered
எஸ். ஜே. ராஜா – பூர்வீகக் குடிகளே புரட்சியாளர்கள
க.ப. அறவாணன் – தமிழ்ச் சமுதாய வரலாறு
வெ. வேதாசலம் – பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள்
மு.வே. சிவரத்தினம் – வணிகர் வரலாறு
ஆ. வேலுப்பிள்ளை – தமிழர் சமய வரலாறு
திருச்சி வே. ஆனைமுத்து – பார்ப்பாரும் வேளாளரும் பறித்துக்
கொண்ட வன்னியர்களின் மன்னவேடு ஊர்கள்
மி. நெஸ்தூர்ஹ் – மனித இனங்கள்
மு. தெய்வநாயகம் – விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம்
குருவிக்கரம்பை வேலு – சிந்துவெளித் தமிழகம்
காட் – டாட்சி – புதிய ஜனநாயகம் வெளியீடு
ஒலிப்பேழை – ம.க.இ.க வெளியீடு
ஜோசப் இடமருகு – பிராமண மதம்
கோ.அ.அன்தோனவா, கி.ம. போன்காரத் லேவின் – இந்தியாவின் வரலாறு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் – பாரெல்லாம் பரந்த தமிழர்
கோ. கேசவன் – இலக்கிய விமர்சனம் – ஒரு மார்க்சியப் பார்வை
மோகன்ராஜ் – இருபதாம் நூற்றாண்டின் நவின அடிமைத்தனம்
(மலையக மக்கள் வரலாறு)
சி. சிவசேகரம் – விமர்சனங்கள்
கே. டானியல் – தண்ணீர்
மணிவண்ணன், தமிழர் கண்ணோட்டம் July/Aug. 1996



07.04.00 மக்கள் போராட்டம்– படம் உதயன்

## உலகளவில் இந்நூல் கிடைக்கும் முகவரிகள், மின்னஞ்சல்கள்

**AMEEN. S.**
POST BOKS- 256
NYBORG
5871,BERGEN
***NORWAY***

ameen@sify.com.

**THARMA. K.**
BONIPLEIN-41
1094 SL AMSTERDAM
***NETHERLAND***

dharma4all2000@yahoo.com.

**SIVA. P.**
390 DAWES ROAD,
# 1204 EAST YORK
M4B 2E5, ONTARIO
***CANADA***

shiva77@canada.com.

**ASVINI. R.**
32 RUE TROUILLETDEREL
92600 ASNIERES SURSEIN
***FRANCE***

66 ashwini@usa.net

**KUMARAAN BOOK HOUSE**
# 201 DAM STREET
COLOMBO- 12
***SRILANKA***

kumaranbh@eureka.lk

**NEW VOICE BOOK CENTRE**
"LAXMI ILLAM"
TELLIPPALAI
JAFFNA
***SRILANKA***

anto6@rediffmail.com

**P. BASKARAN**
POST BOX 7657
ABUDHABI
***U.A.E.***

radhika34@hotmail.com

**KUMARAN BOOK HOUSE**
# 3 MEIGAI VINAYAGAR ST
KUMARAN COLONY
CHENNAI-26
***S. INDIA***

kumaranbh@eureka.lk

**PUTHUKKURAL PUBLISHERS**
**JAFFNA**
*SRILANKA*